பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின்

# அமுத விழா

## 80 சிறப்பு மலர்



01
மே
2025

Salle FERNAND CABUY
95470 Vémars
France

25
மே
2025

Salle Jeanne d'Arc
50 Place de Torcy
75018 Paris, France

**உலகத்தமிழ்க்கலையகம் - பிரான்ஸ்**

# பத்திரிகையாளர்
# எஸ். கே. காசிலிங்கம்
# அவர்களின்
# அமுதவிழா

## 25.05.2025

## PARIS - FRANCE

# எஸ்.கே.காசிலிங்கம்
# அமுதவிழா மலர் - 2025


பதிப்புரிமை : உலகத்தமிழ்க்கலையகம்

தொகுப்பாசிரியர்: எஸ்.கே.ராஜென்

வடிவமைப்பு : அ.கெமிலஸ்

வடிவமைப்பு உதவி: ரஜெந்தன்

சிறப்பு நிழல்படங்கள்: போட்டோ பாலா

வெளியீடு: உலகத்தமிழ்க்கலையகம்

அச்சுப்பதிப்பு : ஜே.ஆர்.அச்சகம் - யாழ்ப்பாணம்


ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்
'ஈழநாடு'
எஸ்.கே.காசிலிங்கம்
அவர்களின்
அமுத விழா
தாயகத்திலும்
புலம்பெயர் வாழ்விலும்
பத்திரிகைத்துறையுடன்
வாழ்ந்து ஓய்வுபெற்றுள்ள
'ஈழநாடு'
முன்னாள் உதவி ஆசிரியர்
'பரிஸ் ஈழநாடு'
நிர்வாக இயக்குநர்
'தமிழன்' ஆசிரியர்
எஸ்.கே.காசிலிங்கம்
அவர்களின் அகவை 80ஐக்
கொண்டாடும் 'அமுதவிழா'
25 மே 2025 ஞாயிற்றுக்கிழமை
மாக்ஸ் டோமுவா கலையரங்கம் - SALLE JEANNE D'ARC
50 Place de Torcy, 75018 Paris - Métro: Marx Dormoy (Ligne 12)
உலகத்தமிழ்க்கலையகம் - பிரான்ஸ்

# உள்ளே..

01. எஸ்.கே.ராஜென்
02. மாலி
03. ஈ.கே.ராஜகோபால்
04. இரத்தினம் கந்தசாமி
05. பீ.எச்.அப்துல் ஹமீத்
06. எஸ்.ஸ்ரீ கஜன்
07. எஸ்.ஜெகதீசன்
08. கந்தையா பாஸ்கரன்
09. நிராஜ் டேவிட்
10. வி.ரி.இளங்கோவன்
11. ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
12. லெ.முருகபூபதி
13. ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம்
14. மு.நித்தியானந்தன்
15. எம்.அரியநாயகம்
16. க.வாசுதேவன்
17. ஈழமுரசு - பிரான்ஸ்
18. சி.பாலச்சந்திரன்
19. க.முகுந்தன்
20. இரா.சிறிதரன்
21. தயாநிதி தம்பையா
22. கி.செ.துரை
23. தர்மலிங்கம் பேரரசன்
24. ராஜகோபால் செல்லையா
25. கலா லோகன்
26. வை.க.தவமணிதாசன்
27. ம.திலகராஜா
28. என்.கே.துரைசிங்கம்
29. குணவதி அம்மாள் கணேசநாதன்
30. ஞானசுந்தரம் குகநாதன்
31. ரதி ருத்ரா
32. முல்லை அமுதன்
33. வவுனியூர் இரா.உதயணன்
34. நயினை விஜயன்
35. நவாஜோதி
36. த.நமசிவாயம்
37. மு.நடராசா
38. கௌசலா ஆனந்தராஜா
39. தமிழ்நெஞ்சம் அமீன்
40. செல்லப்பா யோகராஜா
41. விமலா பாலச்சந்திரன்
42. ச.வி.கிருபாகரன்
43. இரா.குணபாலன்
44. மாணிக்கம் யோகேஸ்வரன்
45. இலட்சுமண சர்மா
46. பரா
47. நவஜோதி ஜோகரட்ணம்
48. என்.செல்வராஜா
49. ஐங்கரன் விக்னேஸ்வரா
50. கிருஸ்ணா அம்பலவனார்
51. வ.ந.கிரிதரன்
52. கோவிலூர் செல்வராஜன்
53. செ.திருநாவுக்கரசு
54. மு.சிவதாஸ்
55. கலா சோமசுந்தரம்
56. கோ.இரத்தினசபாபதி
57. வி.பி.பாலசிங்கம்
58. இரவிசங்கர் இராஜரட்ணம்
59. ஸ்ரீ தயாளசிங்கம்
60. த.இரவீந்திரன்
61. கே.பி.லோகதாஸ்
62. வேலணை மத்திய கல்லூரி
63. எம்.என்.எம்.அனஸ்
64. சுந்தரலிங்கம் மஞ்சுளா
65. Kasilingam Arudchelvi (Ampuli)
66. Vaitheehan
67. Frutiraux Vincent Theepan
68. Sivachelvi Sivaniah
69. Senthuri
70. Saheera Kumar
71. Dr.M.Kumar
72. Athihan, Yalène, Ayani Kasilingam
73. Mrs.Ealalie D’Roza
74. Leonor
75. சிதம்பரம்
76. புங்குடுத்தீவு மக்கள் ஒன்றியம்



எஸ். கே. காசிலிங்கம் - துவாரகாதேவி தம்பதி

# வாசித்த முதல் பத்திரிகை 'ஈழநாடு'

பாடசாலையின் பதின்மப்பருவத்தில் பார்த்ததும் படித்ததுமான பத்திரிகை ஈழநாடு. பிரசவம் ஒரே ஆண்டாக இருக்கின்ற பொழுதிலும் அதனைப் படிக்கப் பன்னிரண்டு ஆண்டுகள் எடுத்தன. ஈழத்தில், யாழ்ப்பாணம் முதல் பத்திரிகையை வெளியிட்ட வரலாற்றை மாத்திரமல்ல, தலைநகர் கொழும்புக்கு வெளியேயிருந்து முதல் நாளாந்தப்பத்திரிகையை வெளியிட்ட பெருமையையும் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மக்கள் நாள்தோறும் காலையில் கைகளில் எடுக்கும் பத்திரிகையாக 'ஈழநாடு' இடம்பிடித்தது. யாழ். பேருந்து நிலையத்தில் திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி செல்வதற்காக 764கிற்குக் காத்திருக்கும் வேளையில், கண்பார்வை பெரிதும் பாதிக்கப்பட்ட ஓர் அன்பர் மென்மையான குரலில் "ஈழநாடு, வீரகேசரி, தினபதி, தினகரன்" என்பார். தொடர்ந்து, "சிங்கள அரசு தமிழ் மக்களை ஒடுக்குகிறது. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் முழக்கம் - ஈழநாடு முன்பக்க செய்தி" என்றும் ஓர் அறிவிப்புப்பாணியில் கூறுவார். மாணவனாக இருந்த அந்தக் காலத்தில் அதிகளவில் இவரை ரசித்தேன். இப்படி ஒவ்வொரு பத்திரிகையின் தலைப்புச் செய்திகளையும் அவர் சொல்லும் விதம் அலாதியானது. இப்பொழுதும் அந்த அன்பரின் குரல் என் செவிகளில் ஒலிக்கிறது.

'ஈழநாடு' இப்படித்தான் மனதில் பதிந்தது. தினமும் பத்திரிகையில் கவனம் திரும்பியது. பூபாலசிங்கம் புத்தகசாலை பத்திரிகைப்பகுதியை தாய்மாமனார் யாழூர் துரை அவர்கள் கவனித்து வந்தார். யாழ்.பேருந்து நிலைய பெஸ்ரோன் ஒலிபரப்புச்சேவைப் பணிக்காலத்தில் ஈழநாடு பத்திரிகையைக் காலையிலேயே யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்று வாசித்த நினைவுகள் நிலைபெற்றுள்ளன. அந்நாட்களில் மாலையில் மனோகரா திரையரங்கில் திரைப்படம் பார்த்தால் ஈழநாடு அலுவலகத்துக்குச் சென்று திரும்புவது வழமையாக இருந்து வந்தது. நண்பர் ஐ.நடேசன் (நெல்லை நடேஸ்) அவர்களும் இணைந்து வருவார். அப்பொழுது அநேகமான நாட்களில் மாலை நேரப்பொறுப்பாசிரியராக மகாதேவா அவர்களே கடமையில் இருப்பார். பல்வேறு விடயங்கள் பேசிக்கொள்வோம். யாழ்ப்பாணம் நியூவிக்ரேர்ஸ் நிறுவனத்தின் நான்குமாடி புதிய கலையகத்திறப்பு விழா பற்றிய செய்தி ஈழநாடு பத்திரிகையில் ஒரு கொலச் செய்தியாக வெளியாகியிருந்தமை மகிழ்ச்சியைத் தந்தது. பிரான்ஸ் செல்வது பற்றி மகாதேவாவுடன் பேசிக்கொண்டவேளையில் "ராஜென் நண்பர் காசிலிங்கம் பிரான்ஸில் தான் இருக்கிறார். அவருடன் தொடர்புகொள்ளுங்கள்" எனக்கூறிக்கொண்டார். ஈழநாடு பத்திரிகைச் செய்திகளுக்கு மேலே அந்தச் செய்தியை வெளியிடுபவர் பெயர் இருக்கும். அவ்வாறு ஈழநாடு வாசிக்கும் பொழுது

அறிந்து கொண்ட பெயருக்குரியவரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைப் பற்றி மகாதேவா கூறியமை மகிழ்வாக இருந்தது. 1984 மார்ச் மாதம் பிரான்ஸ் தேசத்துக்கு வந்து சேர்ந்தேன். ஏப்ரில் முதல் ஓகஸ்ட் வரை லிமோஸில் (Limoges) வாழ்க்கை நகர்ந்தது. அங்கே ஏற்கனவே வசித்து வந்த ஈழத்தமிழ் மக்கள் சிலரின் தொடர்பு கிடைத்தது. அதில் ஒருவர் கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம் (கண்ணன்) அவர்கள். அவருடன் உரையாடிக்கொண்டிருக்கையில் "எனது அண்ணர் எஸ்.கே.காசிலிங்கம், அவர் பரிஸில் இருக்கிறார்" என்றார்.மகாதேவா கூறியவரை நெருங்கி விட்டேன் என எண்ணினேன். லிமோஸில் இருந்து பரிஸ் நகருக்கு வாழ்க்கை மாறியது.

பரிஸ் புறநகர் சென் டெனி நகரில் கண்ணன் அவர்கள் வாழ்ந்து வந்தார். அவரது வதிவிடத்துக்கு அருகாமையிலேயே எனது வதிவிடமும் அமைந்தது. 1984 ஒக்ரோபர் மாதம் கண்ணன் அவர்களின் வீட்டில் ஒரு விருந்து. அனலைதீவுக்குடிமக்கள் அங்கு கூடினர். ஆசிரியர் சி.காராளபிள்ளை, 'ஈழநாடு' எஸ்.கே.காசிலிங்கம் ஆகியோரை நேரடியாகச் சந்தித்தேன். முதன் முறையாக 'ஈழநாடு' எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைச் சந்தித்தவேளையில் "பரிஸில் ஈழநாடு பத்திரிகை வெளியிட முடியாதா? முயற்சிக்கக்கூடாதா?" எனக் கேட்டேன்.

அன்று முதல் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுடனான தொடர்பு நீடித்து வருகிறது. இதே மாதத்தில் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் ஈ.கே.ராஜகோபால் அவர்கள் என்னைப்பற்றிய செய்தியை வெளியிட்டிருந்தார். 'பரிஸ் ஈழநாடு' பரிஸில் வெளியான வேளை பரிஸ் புறநகர் பொபினி நகரில் அமைந்திருந்த அலுவலகம் சென்று வாழ்த்துக்கூறி மகிழ்ந்தேன். பின்னர் பரிஸ ில் 'தமிழன்' பத்திரிகைப்பணிக்காக வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கினேன். அந்த நாளில் பல்வேறுபட்ட அனுபவப்பகிர்வுகள் பொக்கிஷங்கள் ஆகின.

பரிஸ் குமார்ஸ் சொப் உரிமையாளர் தவவிநாயகம் சந்திரகுமார் அவர்கள் தமிழன் பத்திரிகை பரிஸில் இருந்து வெளிவர வழி சமைத்தார். அழகான அலுவலகம் ஒன்றை பரிஸ் 18-மார்கடே போசினியேயில் நிறுவினார். அவரது பெரும் முதலீட்டில் தமிழன் பத்திரிகை பரிஸிலிருந்து வெளிவரத்தொடங்கியது. 'தமிழன்' ஆசிரியராக அமர்ந்த எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் வேகமாக எழுதிக்குவிக்கும் செய்திகள், குணவதி அம்மாள் - தமிழன் அக்காவின் கரங்களால் மின்னல் வேகத்தில் தட்டச்சாகும். சிறி கணணி வடிவமைப்பை மேற்கொள்ளப் பத்திரிகைப்பக்கங்களைத் தயார்படுத்திக்கொள்வேன். இந்த நாட்களில் எழுத்தாளர் அகஸ்தியர், கலைப்பெருமகன் ஏ.ரகுநாதன் ஆகியோர் நேரடியாக அலுவலகத்துக்கு வருகை தந்து செல்வார்கள். ஊடகத்தை இயக்குவது என்பது யானையைக்கட்டிவைத்துத் தீனி போடுவது போன்றது எனச் சாதாரணமாகக் கூறுவார்கள். அதுவும் புலம்பெயர் தேசத்தில் பத்திரிகை வெளியிடுவது இலகுவானதாக இருக்கவில்லை. காலப்போக்கில் பத்திரிகைகள் வெளிவருவது நின்று போயின. ஆயினும் பத்திரிகையாளர் காசிலிங்கம் அவர்களுடனான தொடர்பு

நீடித்து வருகிறது. ஐபிசி தமிழ் வானொலி நிகழ்ச்சிகளில் அவர் பங்குபற்றி வந்தார். கலை நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் அவர் அதிதியாகக் கலந்துகொள்ளும் வேளைகளில் சந்திப்புக்கள் நடைபெறும். கலைப்பெருமகன் ஏ.ரகுநாதன் அவர்கள் தமிழன் பத்திரிகையில் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூலுறுப்பெற்ற வேளையில் அதற்கான பணிகளை மேற்கொண்டிருந்தேன். இந்தத் தொடர்புகளின் மத்தியில் அவரது அகவை 80 வருவதை அறிந்ததும் அமுதவிழா கருக்கொண்டது. விடயத்தை அவரிடம் கூறியதும் பூரண சம்மதம் தெரிவித்தார். மலர் ஒன்றைத் தயாரிக்கத் தேவையான தரவுகளையும் அதற்கான ஆதாரபூர்வமான விடயதானங்களையும் தந்துதவினார். அத்துடன் தனது சந்ததி பற்றிய வரலாறு, அவரது பெற்றோரின் கல்வெட்டுக்களில் அவரும் உறவினரும் நண்பர்களும் எழுதியவற்றின் பதிவுகளை மீள் பதிவு செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பமும் மலரில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மலரில் வாழ்த்துச்செய்திகள் பதிவிட விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றி. வாழ்த்துகள் வழங்கியவர்களில் அனேகமானவர்கள் காசிலிங்கம் அவர்களின் உற்சாகத்தையும் தொடர்ச்சியான செயற்பாட்டையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அவரது உணவு முறை, ஓய்வு, உடற்பயிற்சி என்பனவே அதற்குக் காரணம் என்பதை அறிந்து கொண்டேன். இதனை எல்லோரும் பின்பற்றலாம். எல்லாம் உண்பதில்லை! எங்கும் உண்பதில்லை! அளவாக உண்பது! நல்ல உணவுவகைகளைத் தெரிவு செய்வது என்பவை ஆரோக்கியத்தைத் தரும் என்பதற்கும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைப் பின்பற்றலாம். எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா சிறப்புற எல்லாவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.



**எஸ்.கே.ராஜென்**
**உலகத்தமிழ்க்கலையகம்**



பிரான்ஸில் தமிழ் அரசியல்
செயற்பாட்டாளர் மகேந்திரன் குலராஜ்
அவர்களது ஏற்பாட்டில்,
பிரான்ஸ் செனட் சபை
Palais du Luxembourg
பார்வையிட்டபொழுது ..

Gilbert Roger
முன்னாள் செனட் சபை உறுப்பினருடன்
எஸ்.கே. காசிலிங்கம்
20.06.2023









# "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்"

கலைவாழ்வில் தொடர்பயணம் புரியும் எஸ்.கே.ராஜென் 1984 முதல் பரிஸில் என்னுடன் தொடர்பில் இருந்து வருகிறார். அவரது உலகத்தமிழ்க்கலையகத்தின் ஏற்பாட்டில் எனது 'அமுதவிழா' பரிஸில் நடைபெறுகிறது. இந்த விழா என்னை நானே திரும்பிப்பார்க்க வைத்திருக்கிறது. கல்லூரிக்கற்கையை முடித்ததும் நுழைந்தது பத்திரிகைத்துறைக்குள். என்னை கைகொடுத்து வரவேற்றது யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இன்று அந்த 'ஈழநாடு' நிறுவனத்தை நினைத்து மகிழ்வடைகிறேன், பெருமைப்படுகிறேன்.பத்திரிகைத்துறை பணி அல்ல, சேவை என்பதை எனது இளம் வயதில் உணர்ந்து செயற்பட்டிருக்கிறேன். அதற்கு இப்பொழுது ஒவ்வொரு ஆற்றலாளர்களும் எனக்குப் பரிசளித்திருக்கிறார்கள். இவை வெறும் வாழ்த்துகள் அல்ல என்பது எனது தாழ்மையான கருத்து. சிறிய வரிகள் எனினும் அவை உயர்வானவை, சீர்தூக்கிப்பார்க்கத்தக்கவை. 'ஈழநாடு'. பத்திரிகையில் ஒன்றாகப்பணியாற்றிய மாலி மகாலிங்கசிவம், ஈ.கே.ராஜகோபால், இரத்தினம் கந்தசாமி, இவர்களுடன் எனது இந்த அமுதவிழாவுக்குத் தலைமை தாங்கும் சகலகலாவல்லவன் வி.ரி.இளங்கோவன் ஆகியோர் என்னைத் தங்கள் வாழ்த்து மழையினால் திணறடிக்க வைத்துள்ளனர். உங்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றி.

இந்த அமுதவிழா சிறப்பு மலரின் பக்கங்கள் சிலவற்றை சீர்தூக்கிப் பார்க்கிறேன். குறிப்பாக வ.ந.கிரிதரன், கனடா நாட்டிலிருந்து அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தி என்னை ஆச்சரியப்படுத்தியுள்ளது. 'ஈழநாடு' மாணவர் பகுதிக்கு நான் பொறுப்பாக இருந்தபோது இவர் ஆறாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தவேளை இவர் எழுதி அனுப்பிய 'தித்திக்கும் தீபாவளி' என்ற கட்டுரைக்கு நான் பாராட்டுத் தெரிவித்து ஈழநாடுவில் நான் எழுதிய குறிப்புத்தான், தன்னை ஓர் எழுத்தாளனாக்கியது என்று பொருள்பட அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். முகம் அறியாத ஒருவர் அவுஸ்திரேலியாவிலிருந்து திரு.ஐங்கரன் விக்கினேஸ்வரா, நான் எழுதிய 'என்னுள் என்னோடு' என்ற நூலைப்படித்ததாகவும், அதில் நான் எழுதியுள்ள 'ஈழநாடு' பத்திரிகையில் எனது அனுபவங்கள் தன்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்ததாகவும் குறிப்பிட்டு, எனது தகவல்களை அவரது எழுத்துக்களால் பதிவு செய்திருக்கிறார். அவருக்கு எனது நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். நான் ஈழநாடுவை விட்டு வெளிநாடு வந்த பின் 'ஈழநாடு' வில் உதவி ஆசிரியராக கடமையாற்றிய என்.கே.துரைசிங்கம், நான் ஈழநாட்டில் கடமையாற்றிய காலத்தில் எவ்வளவு சுறுசுறுப்பாக, பரபாப்பாக விளங்கினேன் என்பதை 'ஈழநாடு' அலுவலகத்தில் கடமையாற்றிய நண்பர்கள் தம்முடன் பகிர்ந்து கொண்டதைக் குறிப்பிட்டு வாழ்த்தியிருக்கின்றார். அவருக்கும் எனது நன்றி. முல்லை அமுதன் எனதூரான அனலைதீவுக்கு வந்துள்ளது பற்றியும் அனலைதீவு சதாசிய மகாவித்தியாலயத்தில்

நாடகம் ஒன்றை மேடையேற்றியதாகவும் பதிவு செய்துள்ளதுடன், நான் வசித்த நல்லூரை அண்டியுள்ள கல்வியங்காட்டைச்சேர்ந்த இவர், 'ஈழநாடு' பத்திரிகையைத் தேடித்தேடி படிப்பதை நினைவுபடுத்தியிருக்கிறார். அவருக்கும் எனது நன்றி.

நான் ஈழநாடுவில் கடமையாற்றிய காலத்தில் பணியாற்றிய ஒருசிலரை இங்கு நினைவுகூற விரும்புகின்றேன். பாராளுமன்ற நிருபராக கடமையாற்றிய மாலி-மகாலிங்கசிவம், அலுவலக நிருபர்களாகக் கடமையாற்றிய எஸ்.திருச்செல்வம், அமரர் கா.யோகநாதன் மற்றும் பருத்தித்துறை நிருபர் துரைரத்தினம், நெல்லியடி நிருபர் எஸ்.தில்லைநாதன், புங்குடுதீவு வி.ரி.இளங்கோவன், அவரது அண்ணன் சிவானந்தன், புங்குடுதீவு ஊரதீவு நிருபர் எஸ்.கே.மகேந்திரன் ஆகியோர் எழுதும் செய்திகளில் திருத்தம் செய்ய வேண்டியிராது. பத்திரிகையில் பிரசுரிக்கத்தக்க வகையில் அவர்களது செய்தி இருக்கும் ஏனைய நிருபர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் திருத்தம் செய்தே பிரசுரிக்க வேண்டியிருக்கும். செய்தி ஆசிரியர் எஸ்.எம். கோபாலரத்தினம் பெரும்பாலான செய்திகளை என்னிடமே தருவார். இது பற்றி கனடாவில் வசிக்கும் என்னுடன் ஈழநாட்டில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்த நண்பர் எஸ்.ஜெகதீசனும் தமது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கும் எனது நன்றி. மாவிட்டபுரம் நிருபராக கடமையாற்றிய நாதஸ்வர வித்துவான் ஞானசுந்தரம் அவர்களின் மகன் குகநாதன் சுவிட்சர்லாந்திலிருந்து அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் அந்தக்காலத்தில் என்னுடனிருந்த தொடர்புகள் பற்றி விரிவாக பதிவு செய்துள்ளார். அவருக்கும் நன்றிகள் இந்தியா, இலங்கை முதல் அவுஸ்திரிரேலியா, கனடா, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் பல ஊடகர்கள்,பத்திரிகையாளர்கள் என்னை வாழ்த்தி தங்கள் பதிவுகள் அனுப்பியுள்ளனர். அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத், ஐபிசி தமிழ் பாஸ்கரன் கந்தையா, நிராஜ் டேவிட், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், கனடா 'உதயன்' லோகேந்திரலிங்கம், 'ஈழமுரசு' பிரான்ஸ், ETR ரவீந்திரன், லெ.முருகபூபதி, பூபாலசிங்கம் புத்தகசாலை ஸ்ரீதரசிங், மு.நித்தியானந்தன், க.வாசுதேவன், சிவகுரு பாலச்சந்திரன், திருமதி.விமலா பாலச்சந்திரன், க.முகுந்தன், இரா.சிறிதரன், கே.எஸ்.துரை, தர்மலிங்கம் பேரரசன், ராஜகோபால் செல்லையா, கலா லோகன், திரு.திருமதி. தவமணிதாஸன், ம.திலகராஜா, குணவதி அம்மாள் கணேசநாதன், ரதி ருத்திரா, இரா. உதயணன், நயினை விஜயன், நவாஜோதி, த.நமசிவாயம், மு.நடராஜா, கௌசலா ஆனந்தராஜா, தமிழ் நெஞ்சன் அமின், செல்லப்பா யோகராஜா, ச.வி.கிருபாகரன், இரா. குணபாலன், மாணிக்கம் யோகேஸ்வரன், நாகேஸ்வரி, பரா, நவஜோதி யோகரட்ணம், என்.செல்வராஜா, கிருஷ்ணா அம்பலவாணர், கோவிலூர் செல்வராஜன், செ.திருநாவுக்கரசு, கலா.சோமசுந்தரம், வி.பி.பாலசிங்கம், இரவிசங்கர் ராஜரட்ணம், கே.பி.லோகதாஸ், வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ், எம்.என்.எம்.அனஸ், மஞ்சுளா சுந்தரலிங்கம், Mrs.Ealalie D'Roza, Leonor, சிதம்பரம், நயினை அபிவிருத்திக் கழகம் பிரான்ஸ், ஸ்ரீதயாளசிங்கம், அறிவாலயம் சிவதாஸ் ஆகியோருக்கும் எனது நன்றி. நண்பர் நாடகாசிரியர் அரியநாயகம் அவர்களால் பிரான்ஸ் - பரிஸ் நகரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உலகத்தமிழர் நாடக

விழா சம்மந்தமாக கனடா வாழ் ஈழத்தமிழ் கலைஞர்களை சந்திப்பதற்காக நானும் அரியநாயகமும் கனடா சென்றிருந்தபோது எம்மை வரவேற்று பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து தந்ததுடன், அங்கு புகழ்பெற்ற 'தமிழ் வண்' தொலைக்காட்சி ஒருமணி நேரம் எமது நேர்காணலை ஒளிபரப்புச்செய்ய ஒழுங்கு செய்திருந்த எனது மருமகன் நெடுந்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஆனந்தனுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியை கூறிக்கொள்கின்றேன். பரிசில் நாடகவிழா நடைபெற்றபோது என்னை மேடையில் அமர்த்தி, நடிகர் நாசருடன் என்னைக் கௌரவித்த நண்பர் அரியநாயகத்திற்கும் எனது நன்றி. கவிப்பேரரசு வைரமுத்து அவர்களது 'மூன்றாம் உலகப்போர்' நூல் அறிமுகவிழா பாரிசில் நடைபெற்றபோது அவ்விழாவுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை என்னிடம் வழங்கிய ஊடகவியலாளர் எஸ்.கே.ராஜெனுக்கும் எனது நன்றி.



**எஸ்.கே.காசிலிங்கம்**
**25.05.2025**

**மில்க்வைற் உரிமையாளர் க.கனகராஜா அவர்களை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சந்தித்த வேளை..**





**செவாலியே அமுதுப்புலவர், வண்ணைத்தெய்வம் ஆகியோருடன் எஸ்.கே.காசிலிங்கம்.**

# பரிஸில் தமிழன்

# கரம் கொடுத்த தவவிநாயகம் சந்திரகுமார்



பத்திரிகைத்துறையில் எனது பயணம் 'ஈழநாடு' வில் 1967ம் ஆண்டு ஆரம்பித்தது. 1981 வரை தாயகத்தில் அந்தத்துறையில் பணியாற்றினேன். பின்னர் பிரான்ஸ் வந்து சேர்ந்தேன். பிரான்ஸில் ஆரம்பகால வாழ்க்கை பத்திரிகைத் துறையுடன் சம்பந்தப்பட்டதாக அமையவில்லை!அது காலத்தின் கட்டாயமாக இருந்தது. தாயகத்தில் பணியாற்றிவிட்டுப் புலம்பெயர்ந்தவர்கள் அதே பணியில் ஈடுபடுவது சாத்தியமானதில்லை. நான், 1981இல் France வந்ததும் Paris Charles de Gaulle airportல் Élite Air நிறுவனத்தில் பணியாற்றிவந்தேன்.



தமிழன்

இலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்த ஈழத்து இலக்கியவான் எஸ். அகஸ்தியர்

ஈழத்து இலக்கிய வானில் தனக்கென ஒரு தனியிடம் பெற்று தனது எழுத்தாளுமையினால் மக்கள் நெஞ்சங்களில் நிலைபெற்ற 'இலக்கியவான்' எஸ். அகஸ்தியர் அவர்கள் எமை விட்டு விடைபெற்றுவிட்டார். வாழ்ந்த காலம் வரை எழுத்தை நேசித்து தன் இறுதி மூச்சவரை எழுதிக்கொண்டிருந்த அந்த மாபெரும் எழுத்தாள் இன்று நம்மிடையே இல்லை.

'எனது எழுத்து எனக்கு சொந்தமில்லை. அது மக்களுக்கே சொந்தமானது' என அடிக்கடி கூறிவந்தவர் அகஸ்தியர் அவர்கள். அவர் கூறியபடி தனது எழுத்துக்களை எல்லாம் மக்களிடம் வழங்கிவிட்டு அவர் பயணமாகிவிட்டார்.

அகஸ்தியர் என்கின்ற ஒப்பற்ற எழுத்தாளனின் கருத்துக்கள் எழுத்துக்கள் யாவும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இனிவரும் சந்ததியினரும் உள்வாங்க வசதியாக அவரின் படைப்புக்கள் நூல் வடிவங்களாக வீற்றிருக்கின்றன.

வசதி வாய்ப்புக்கள் மனித மனங்களை மழுங்கடித்துவிடுகின்ற இந்த ஐரோப்பிய மண்ணிலே தனது இறுதிக் கால கட்ட வாழ்க்கையை கடந்த பத்து ஆண்டுகளாக அவர் வாழ்ந்த போதிலும் தன் கருத்திலும் கொள்கையிலும் உறுதியாக இருந்ததை மட்டுமல்லாது தனது எழுத்து நடவடிக்கைகளை வேகப்படுத்தியதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

பாரிய நோயினால் பாதிக்கபட்டிருந்தவர். அடிக்கடி வைத்தியசாலை சென்று வருவார். இம்முறையும் அவர் மூன்று நாட்களில் திரும்பி வந்துவிடுவேன் என்றுதான் கூறிச்சென்றாராம். ஆனால் அந்த மூன்று நாட்களில் அவர் மூச்சும் அடங்கிவிடும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

'பிரான்ஸ் டாக்டர்களும் தாதிமார்களும் என்னை போகவிடமாட்டார்கள்' என எமைக் காணும் வேளைகளில் கூறும் எங்கள் எழுத்தாளர் அகஸ்தியர் இம்முறை வைத்தியசாலை சென்று மீண்டும் வீட்டுக்கு வராமல் விடைபெற்றுவிட்டார்.

தாங்காத துயரில் தநும்பி நிற்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும், தலைசிறந்த இலக்கியவாதியை இழந்துவிட்டோம் என்று தாங்கொணா துயர் கொண்டிருக்கும் எழுத்தாளர் ...ருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் தமி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிஸில் 1984முதல் நடைபெற்று வந்த சந்திப்புக்கள் என்னைப்பத்திரிகைத்துறை நோக்கி நகர்த்தியது. 1991ல் சிவகுரு பாலச்சந்திரனுடன் ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு 'பரிஸ் ஈழநாடு' ஆரம்பித்து பத்திரிகைப்பணியில் மீண்டும் ஈடுபட்டேன். குறுகிய காலமே 'பரிஸ் ஈழநாடு' வில் எனது பணி தொடர்ந்தது. பின்னர் லண்டனில் 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியரானேன். 'தமிழன்' பத்திரிகையைப் பரிஸில் இருந்து வெளியிட ஆர்வம் கொண்டேன். அவ்வேளை பரிஸில் பத்திரிகைத்துறைக்குக் கைகொடுக்க முன்வந்தார் பெருந்தகை 'குமார்ஸ் சொப்' தவவிநாயகம் சந்திரகுமார் அவர்கள். தமிழன் பத்திரிகைக்குப் பெரும் அலுவலகம் அமைய ஏற்பாடு செய்தார்கள். பாக்கியராஜா அவர்களை நிர்வாகியாக நியமித்தார்கள். பரிஸிலிருந்து 'தமிழன்' வெளியாகி ஐரோப்பா எங்கும் பரவியது. பத்திரிகைத்துறை பண வருவாயைத் தரக்கூடியதல்ல. பெரும் பணத்தைச் செலவிட்டு சேவை புரிவதும் தொடர முடியாதநிலை. தமது வர்த்தகத்துக்குத் தொடர்பில்லாத துறையில் தமது ஆதரவை வழங்கிய தவவிநாயகம் சந்திரகுமார் அவர்களுக்கு நன்றி கூற என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

**எஸ்.கே.காசிலிங்கம்.**




**காசிலிங்கம்
அவர்களின் பேரன்
வன்சொன் தீபன்
எட்டு மாதத்தில்..**

# அந்தரமான பொழுதுகள் இனிய நாள்கள்!



இலங்கையில், தமிழ் செய்தி பத்திரிகைத்துறை வரலாறு பொதுவாக 1930இல் கொழும்பில் வெளிவர ஆரம்பித்த 'வீரகேசரி' பத்திரிகையுடன் தொடங்குவதாக கொள்ளலாம். எனினும், அதே ஆண்டில் 'வீரகேசரி'க்கு முன்னதாக, யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழகேசரி' தொடங்கப்பட்டிருந்தது. 'இந்து சாதனம்', 'சத்தியவேத பாதுகாவலன்' என்ற, மதம் சார்ந்த பத்திரிகைகள் ஏற்கனவே வெளிவந்துகொண்டிருந்தாலும், கலை, இலக்கியமும் அரசியலுமான பத்திரிகையாக 'ஈழகேசரி' அப்போது தொடங்கப்பட்டது. கொழும்பில் பின்னர், ஏரிக்கரை நிறுவனத்தின் 'தினகரனு'ம் வெளிவந்துகொண்டிருந்தபோது, யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழநாடு' பத்திரிகை, முதலாவது பிராந்திய தமிழ் தேசிய தினசரியாக 1959இல் வெளிவர ஆரம்பித்தது (வாரம் இருமுறை வெளியீடாக தொடங்கி, 1961இல் தினசரியானது). 'வீரகேசரி' ஆரம்பித்து மூன்று தசாப்த காலத்தின் பின்னர் தோற்றிய ஈழநாடு, இலங்கையில் அதுவரையில் அடையாளம் காணப்பட்டிருந்த தமிழ் பத்திரிகை மரபிலும் ஒரு தனி அடையாளத்தை வெளிப்படுத்தியது. வெளியாகும் செய்திகள், செய்திகள் சொல்லப்படும் மொழிநடை, அதன் பாங்கு என்பனவெல்லாம் ஒரு சமூகத்தின் பரந்த உயர்வை எண்ணியதான - கண்ணியமான ஒரு வடிவத்தைப்பெற்றன. அந்த 'ஈழநாடு பத்திரிகைப்பாணி', பரிச்சயமான வாசகர்களால் எப்பொழுதும் எளிதில் இனங்காணப்படுகிறது.



தமிழர் ஆளப்படும் இனமல்ல; சட்டரீதியில் நிரூபித்தார் 'திரு'

ஆர். பாலசுப்பிரமணியம் - சட்டத்தரணி

'பட்ஜட்' விவாதத்தில் வரலாறு படைத்த 'அமிர்'

மாலி

'ஈழநாடு' ஸ்தாபகர்களான பெரியவர் கே.சி. தங்கராசா, அவரது சகோதரர் டாக்டர் கே. சி. சண்முகரத்தினம் ஆகியோரது சிந்தைக்கு அமைவாக, ஸ்தாபக ஆசிரியர்களான இராஜ.அரியரத்தினம், கே.பி. ஹரன் ஆகியோருடன், செய்தி ஆசிரியரான எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) என்போர் இம்மரபுக்கு வரம்பிட்டவர்கள். டி.எம். முருகையா, பி.எஸ்.பெருமாள், சு.சபாரத்தினம் (சசி பாரதி), கா.யோகநாதன் போன்றவர்கள் இவ்வரம்புள் அதன் செழிப்புக்கு அப்போது துணையானவர்கள். பின்னர் 'ஈழநாடு' ஆசிரியராகவிருந்த கல்விமான் என். சபாரத்தினம், இம்மரபுக்கு ஒரு புதிய 'அணி' சேர்த்தார். மாணவ பராயத்தில் கவிதைகள் எழுதும் ஆர்வம், கல்லூரி நாள்களில் 'ஈழநாடு' அலுவலகத்துடனும், அதன் ஆசிரியர் குழாத்துடனும் ஓர் அந்நியோன்யத்தை ஏற்படுத்தியது. அப்போது, எனது தந்தையாரை 'மச்சான்' என்று

வாஞ்சையோடு கொண்டாடும் ஒருவரான எஸ். கே. காசிலிங்கம் அங்கு ஆசிரிய பகுதியில் புதிதாக இணைந்தமை பசுமையான நினைவாயிருக்கிறது. எல்லாவற்றையும் விட, அவரில் தெரிகின்ற ஓர் அலாதியான சுறுசுறுப்பு, அவரை அங்கு தனித்து காண்பிக்கும். அந்தக் காலத்தில் மிக அரிதானதான, 'திறந்த இருதய சத்திர சிகிச்சை' ஒன்றிலும் அவர் தேறி, திரும்பிவந்தார். ஒரு நாள் மாலை, வேலை முடிந்து வீடு திரும்பிய 'காசி', வழியில் எனது வீட்டுக்கு வந்து, "படையெடுத்து வந்து, நெருப்பெடுத்துவிட்டு போறாங்கள்" என்றார். உடனேயே கிளம்பி 'ஈழநாடு' அலுவலகம் சென்று, மேல் மாடியில் ஆசிரிய பீடத்துக்கு சென்றபோது இடையிலே கண்ட இயக்குநர் பா. சிவாநந்தன் - இவர் கே. சி. தங்கராசா அவர்களுடைய மருமகன், "இன்னும் உயிருடன்தான் இருக்கிறீரா..?" என்றார். பத்திரிகையாளர்களின் அநுபவங்கள் எத்தனையோ, என்னென்னவோ.. இலங்கையில் தமிழ் பத்திரிகைகளின் நாடித் துடிப்பாகும் இடம் யாழ்ப்பாணம். இதனால், கொழும்பு பத்திரிகைகளுக்கும் 'ஈழநாடு' க்குமான ஒரு தார்மீக போட்டி இயல்பானது. பொதுவாக, பத்திரிகைகளில் அரசியல் விவகாரம் முக்கியமாகிறபோது, 70,80 காலப்பகுதி இலங்கைத் தமிழ் அரசியலில் முக்கியமானது. இக் காலப்பகுதியில் 'ஈழநாடு' கொழும்பு அலுவலகத்தில் செய்திகளுக்கு நான் பொறுப்பாகவிருந்தேன்.

யாழ். மேயர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா கொலைவழக்கு, குட்டிமணி - தங்கத்துரை ஆகியோர்மீதான வழக்கு, அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், கா.பொ.இரத்தினம் ஆகியோர்மீதான அந்த பிரசித்திபெற்ற 'ட்ரயல்-அற்-பார்' வழக்கு போன்ற இந்த முக்கியமான வழக்கு விசாரணைகள் கொழும்பில் நடைபெற்றன. இவைதவிர, புலிகளும் மற்றும் ஆயுத இயக்கங்களும் தமது தாக்குதல்களைத் தொடங்கியதும், அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானதுமான அக்காலத்து பாராளுமன்ற அமர்வுகள், இக் காலத்தில் கொழும்பில் நிகழ்ந்த அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, பொதுநல நாடுகளின் மாநாடுகள், வெளிநாட்டு அரசுத் தலைவர்கள், ராஜதந்திரிகள் வருகை போன்ற இன்னோரன்ன அனைத்தும் நமது அரசியலுடன் சிறப்பான முக்கியத்துவத்தைப் பெற்றன. உள்நாட்டு, வெளிநாட்டு வானொலிகள், செய்தி நிறுவன செய்திகள் தவிர, எம்முடைய சொந்த செய்திகள் பரிவர்த்தனை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முழுக்கமுழுக்க தொலைபேசி பரிவர்த்தனையிலேயே தங்கியிருந்தது.

கால ஓட்டத்தில் எத்துணை வியத்தகு அசுர மாற்றம்? தகவல் பரிமாற்றத்தின் இந்த வியப்பின் உச்சம், இப்போது யாழ்ப்பாணத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்கியிருக்கிறது. எண்களைச் சுற்றி அழைப்பைப்பெறும் தொலைபேசிகள், அக்காலத்து ஆடம்பர வசதி. உள்ளூர் அழைப்புகளைத் தவிர, வெளியூர் அழைப்புகளை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். அப்படி அந்த அழைப்பைப் பெற, சற்று நேரம் காத்திருக்க வேண்டும். சாதாரணமாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இந்த காத்திருப்பு நேரம் எட்டு மணித்தியாலங்கள். அப்படி காத்திருக்கையில், சில சமயங்களில் அது இன்னும் அதிகமாகலாம் அல்லது குறைவாகவுமிருக்கலாம். அழைப்பை 'புக்' செய்கையில் சொல்லப்படும் தாமதிப்பு நேரத்தை

மனதில்கொண்டு, வெளியில் இன்னோர் அலுவலுக்காக சென்றுவந்தால் அதற்கிடையில் அந்த அழைப்பு சிலசமயங்களில் நமது இலக்கத்துக்கு தர அழைக்கப்பட்டிருக்கும். அப்படி அதனைத் தவறவிட்டுவிட்டால், மீண்டும் புதிதாக 'புக்' செய்யவேண்டும். பல தடவைகளில், 'கொழும்பு - யாழ்ப்பாண பரிவர்த்தனை சேவை தடைபட்டிருக்கிறது' என்ற அறிவிப்பும் கிடைக்கும்.

சரி, இப்படி பெறப்படும் அந்த அழைப்பைப் பெற்றுவிட்டால், பின்னர் என்ன, சரிதானே? அதுதான் இல்லை. இந்த அழைப்பில் பேசுவதற்கு உங்களுக்கான நேரம் மூன்று நிமிடங்கள்! பத்திரிகை நடாத்த முடியுமா? அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சில உயர்மட்ட அரசு உத்தியோகத்தர்களுக்கு இதில் தரப்படுத்தப்பட்ட முன்னுரிமை உண்டு. அந்த முன்னுரிமை இந்த அழைப்புகளை சற்று விரைவாகவும், சற்று கூடுதல் நேரம் பேசுவதற்கும் வாய்ப்பளிக்கும். ஆனால், இந்த முன்னுரிமை பத்திரிகைகளுக்கு இருக்கவில்லை. நல்லூர் எம்.பி., மு.சிவசிதம்பரம் ஒருமுறை பாராளுமன்றத்தில் இதுபற்றி ஒரு கவன ஈர்ப்பைக் கொணர்ந்தார். ஆனாலும், அரசின் கவனம் 'ஹன்சாட்' பதிவேட்டின் பதிவாக மட்டுமே இருந்தது. அப்போ, எப்படி? நாம் ஒரு 'புண்ணியம்' செய்திருந்தோம். சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் செல்லையா குமாரசூரியர் தபால், தந்தி அமைச்சராகவிருந்ததில், இந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களில் தமிழர்கள் பலர் பணியில் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் ஒருசிலரின் 'அநுக்கிரகம்' சிறிதளவிலாவது கிட்டியமை அந்த புண்ணியம். கொழும்பு பரிவர்த்தனை நிலையத்தில் இத் தேவையைத் தெரிந்துகொண்ட இவர்கள் ஒத்தாசையாகவிருந்தார்கள். அதி நீண்ட தாமதமில்லாமலும், சற்று கூடுதல் நேரம் பேசவும் வாய்ப்பு கிட்டும். ஆனாலும் அது தாராளமானதாகிவிடாது மட்டுப்படுத்தப்பட்டதுதான். எந்நேரமும் அழைப்பு துண்டிப்பாகும். ஒரு வசனத்தின் முடிவு என்ன என்பதை மறுமுனையில் ஊகிக்கமுடியாதவிதத்தில்கூட அது துண்டிப்பாகும். ஆனால், 'ஈழநாடு' வாசகர்கள் இது எதனையும் தெரிந்திருக்கவில்லை. முத்தாய்ப்பான செய்திகளில் அவர்கள் நிறைவுபெற்றார்கள். அது ஒரு மந்திர வித்தை! ஆசிரிய பீடத்தில் அங்கு இரவு பணியிலிருப்பவர்கள் அந்த மந்திர வித்தைக்காரர்கள். இப்படிக் கட்டங்களில், விஷயத்தை விரைவாக கிரகித்துக்கொண்டு, சரியான யூகத்துடன் ஜமாய்த்துவிடுவார்கள். எஸ்.கே. காசிலிங்கம் இந்த வித்தையில் அசகாயசூரர். அவரின் கச்சிதமான செய்தித் தலைப்பே செய்தியை நறுக்காக சொல்லிவிடும். கொழும்பில் எனக்கும், யாழ்ப்பாணத்தில் இவர்களுக்குமிடையோன பரஸ்பர புரிதல், இந்த சுகமான வித்தையைப் புரிந்தது. அவை அந்தரமான பொழுதுகள் இனிய நாள்கள். உறவினரெனினும், பத்திரிகை நண்பரான 'காசி'யின் 80ஆவது அகவையில் இவற்றை நினைவுகொள்வது மனதில் ஒரு நிறைவாகிறது. எல்லா சுகங்களோடும் அவர் இன்னமும் இனிது வாழ்க!



**மாலி**
**லண்டன்**

# ஈழநாடு பத்திரிகை காசிலிங்கம் நினைத்துப்பார்க்கிறேன்..



தாயகத்தில் 'ஈழநாடு' நிறுவனத்தில் நண்பர் காசிலிங்கத்துடன் நன்றாக இணைந்து பணியாற்றிய காலத்தை நினைத்துப்பார்க்கிறேன். அந்தக்காலத்தை நெஞ்சம் மறப்பதற்கில்லை. எல்லாமே நேற்றுப்போல் இருக்கிறது. எமது இளமைக்காலத்தில் எங்கள் தெரிவு பத்திரிகைத்துறையாகியது. இந்தத்துறைக்கு எல்லோரும் வந்து விடுவதில்லை. அவ்வாறு வந்தவர்கள் எல்லோருமே நின்று நிலைபெற்றுவிடவில்லை. காரணம் இந்தத்துறையை ஒரு வேலை என்று கருதினால் அதற்கு இடமில்லை. கலைத்துறையில் கலைஞர்கள் அர்ப்பணிப்புச் செய்வது போன்று பத்திரிகைத்துறையைச் சேர்ந்தவர்களும் அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். "நாம் அதனைச் செய்தோம்" என்று துணிந்து கூறுவதற்குச் சான்றுகள் உள்ளன. செய்திகளில், கட்டுரைகளில் திருப்தி ஏற்படும் வரை செப்பனிடுவோம். அவ்வாறு நாம் செயற்பட்டு 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரித்த விடயங்களால் பத்திரிகை புகழீட்டியது. நாமும் பாராட்டுக்களைப்பெற்றோம். கோபு, சபா போன்ற பத்திரிகைத்துறை பெரும் ஆளுமையாளர்களுடன் நாம் பயணித்தோம். நண்பர் காசிலிங்கம் ஒருமுறை வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளானார். அவரது இதயத்தில் துவாரம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் எனக் கூறப்பட்டது. கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குச் சென்றாகிவிட்டது. சத்திரசிகிச்சைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. இவற்றைக் கொழும்பில் மேற்கொள்ள உதவியவர், தற்பொழுது சுவிற்சர்லாந்து நாட்டில் நகரசபை உறுப்பினராகத் திகழும் த.நமசிவாயம். இவர் நமக்கு செய்தது உதவி என்று மட்டும் கூறிவிட முடியாது. நமசிவாயம் ஓர் உயிரைக் காப்பாற்றினார். இலங்கையில் புகழ்பெற்ற கட்டிடக்கலைஞர் வி.எஸ்.துரைராஜா அப்பொழுது 'குத்துவிளக்கு' திரைப்படத்தைத் தயாரித்தார். அந்தத் திரைப்படத்தில் நமசிவாயம் நடித்ததால் பத்திரிகைத்துறை சார்ந்து எம்முடன் நெருக்கம் ஏற்பட்டிருந்தது.

நான் அவருடைய குடும்பத்துடன் கொழும்புக்குச் சென்றேன். நண்பர் காசிலிங்கத்துக்குக் கொழும்பில் பெரியதோர் அறுவைச்சிகிச்சை. அது வெற்றியளித்தது. உயிருடன் போராடிய காசிலிங்கம் மீண்டு வந்தார்.

அவர் மனம் சோர்ந்து, தளர்ந்து போனதை நான் ஒரு போதும் கண்டதில்லை. சுறு சுறுப்புடன் வேலைகளைக் கவனிப்பார். ஓடி ஓடிக்கொண்டே இருப்பார். பத்திரிகை வேலைகளோடு ஊர்ச்சோலிகள் வேறு, அவரே அவற்றைச் சுமப்பார். 'ஈழநாடு' க்குள்ளே அத்தனை நண்பர்கள், வெளியே வாழும் அன்பர்கள் பிரச்சினைகள் என்று எல்லாவற்றையும் தலையில் தூக்கிப் போட்டுக்கொள்வார். எப்படியோ தனது 'செல்வாக்கைப்' பயன்படுத்தித்தீர்த்தும் வைத்துவிடுவார்.




நன்றி தாய் வீடு

'ஈழநாடு' அலுவலகத்தில் பல ஆண்டுகள் இரவு நேரப் பொறுப்பாசிரியராகப் பணியாற்றி வந்தார். முதல் பதிப்பு பகலில் முடிந்த பின்னர் இரவு இறுதியாகக் கிடைக்கும் செய்திகள், முதற்பக்கத் தலைப்புச் செய்தி, கடைசிப்பக்கச் செய்திகள் போன்றவைகளை வெளியிடும் பொறுப்புள்ள பணியைச் செய்ய வேண்டும். இது மிகக் கடினமான பணி. இதில் காசிலிங்கம் பெற்ற அனுபவங்களே பின்னாட்களில்



புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் தனிப்பத்திரிகை ஒன்றை நடத்துவதற்கேற்ற பலத்தை அவருக்கு அளித்திருக்கிறது எனலாம். எது எப்படியோ புலம்பெயர்ந்து எந்த நாட்டில் நாம் வாழ்ந்தாலும், பெற்றெடுத்த தாய் மண்ணுக்கு முடிந்ததைச் செய்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அந்த வகையில் அமுதவிழா காணும் நண்பர் காசிலிங்கம் அவர்களை எனது குடும்பத்துடன் வாழ்த்துகிறேன்.

**ஈ.கே.ராஜகோபால்** - லண்டன்













**காசிலிங்கம் அவர்கள் புதல்விகள் செல்வி சிவா, அம்புலி ஆகியோருடன் பெறாமகள் இந்திராதேவி. 01.05.2025 –** France



# 'யாழ்.ஈழநாடு' பண்ணையில் உதித்த ஊடகவியலாளர் அண்ணன் எஸ்.கே.காசிலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் தமது ஊடகப் பணியை ஆரம்பித்த மூத்த ஊடகவியலாளர் அண்ணன் காசிலிங்கம் அவர்களுடன் யாழ் ஈழநாடு பணியகத்திலும் பின்னர் பிரான்ஸ் 'பாரிஸ் ஈழநாடு' பணியகத்திலும் கடமையாற்றும் அரிய வாய்ப்புக் கிட்டியதில் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்குண்டு. 1966-ம் ஆண்டில் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிட்ட கொழும்பு சுயாதீன பத்திரிகை நிறுவனத்தில் ஆரம்பித்த எனது பத்திரிகைத்துறைப்பணி யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகாலயத்தில் 1973ல் மீளத் தொடங்கியபோது எனது ஊடகத் துறையை மெருகூட்டிய பெருந்தகைகளில் அண்ணன் காசிலிங்கமும் ஒருவர். இந்தத் துறையில் எனது வளர்ச்சிக்கு மீள் பயிற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களான அமரர்கள் எஸ். எம்.கோபாலரத்தினம், சசிபாரதி எஸ். சபாரத்தினம், எஸ்.பெருமாள் மற்றும் பாமா ராஜகோபால், காசிலிங்கம் ஆகியோரே, நான் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் ஊடகத் துறையில் பரிணமிக்கக் காரணமானவர்கள்.



ஈழநாடு பத்திரிகையில் செய்திகளுக்கு நான் போடும் தலைப்புக்கள் தினபதி, சிந்தாமணி பத்திரிகைத் தலைப்புக்களின் சாயலில் இருப்பதாக அன்றைய நாட்களில் அண்ணன் காசிலிங்கம் அடிக்கடி சுட்டிக்காட்டிவிட்டு அதற்கான காரணத்தையும் அவரே தெரிவிப்பார். பத்திரிகைத் துறையை ஆரம்பித்த தினபதி, சிந்தாமணி பத்திரிகைளின் தலைப்புக்களின் சாயல் யாழ். ஈழநாடு பத்திரிகையில் உடனடியாக மாறாதுதானே என்றும் அடிக்கடி கூறுவார் காசிலிங்கம் அண்ணன். யாழ். ஈழநாடு நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள் பணியாற்றியவர்கள் ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் சகல நாடுகளிலும் ஊடகத் துறையில் கோலோச்சி வருவது கண்கூடு. அதேநேரம், ஊடகவியலாளர்களாக மட்டுமல்லாது ஊடக நிறுவனங்களை ஆரம்பித்து அவற்றைத் வெற்றிகரமாக நிர்வகிக்கும் திறமையையும் கொண்டிருப்பது எமது ஈழநாடு நிறுவனத்தின் பாரிய பணிக்கு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு. 'யாழ் ஈழநாடு' பண்ணையில் உதித்து உள்நாட்டிலும் புலம்பெயர் மண்ணிலும் பத்திரிகை நிறுவனங்களை நிர்வாகித்த நிர்வகித்து வரும் ஊடகவியலாளர்களில் அண்ணன் காசிலிங்கத்துக்கும் முக்கிய இடமுண்டு. ஈழத்து ஊடகத்துறையின் வரலாற்று சாதனைக்குரிய யாழ். ஈழநாடு பத்திரிகையை அடியொட்டி 'பாரிஸ்

ஈழநாடு' 'கனடா ஈழநாடு' என சர்வதேச ரீதியில் ஒரு சில பத்திரிகைகளின் ஜனனம் காரணமாகவே எமது தாயக 'ஈழநாடு' பத்திரிகையை 'யாழ். ஈழநாடு' என விளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காலத்தின் கட்டாயமாகி விட்டது. அமுத விழாக் காணும் அண்ணன் காசிலிங்கம் அவர்களுக்கு எனது சார்பிலும் எமது குடும்பத்தின் சார்பிலும் உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் தொடர்ந்தும் ஊடகத்துறையில் மேலும் சாதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.



**இரத்தினம் கந்தசாமி**
மூத்த ஊடகவியலாளர்
பாரிஸ் - பிரான்ஸ்







**காசிலிங்கம் அவர்களின் சகோதரன் காந்தி , அவரது மனைவி மஞ்சுளா ஆகியோருடன் காசிலிங்கம் அவர்கள் புதல்விகள் செல்வி, சிவா , பேரப்பிள்ளைகள் .**
**01.05.2025 –** France

# அமுதவிழாக் காணும் அன்புள்ளம் வாழ்க..



ஒலி, ஒளி ஊடகங்களோடு ஒப்பிடும் போது, அச்சு ஊடகத்தின் ஆயுள் அதிகம். அதில் பதியப்படும் ஒவ்வொரு எழுத்தும் தலை எழுத்துப் போல நிலைத்தவை, வரலாற்றுச் சுவடுகளாய் காலத்தால் அழியாதவை. எனவே அத்துறையில் பணியாற்றும் ஒவ்வொருவரும் ஊடகத்துறைப் பண்புகளோடு விழுமியப் பண்புகளையும் காத்துப் பணியாற்ற வேண்டும். ஆனாலும் இத்துறையில் ஈடுபடும் ஒவ்வொருவரிடமும் இதனை எதிர்பார்க்க முடியுமா? இந்தக் கேள்விக்கு விடையாக நம் மத்தியில் வாழ்ந்து வரும் பத்திரிகைத்துறை ஆளுமைகளுள் ஒருவர்தான் எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள். சுமார் ஆறுதசாப்த காலம் பத்திரிகைத்துறை அனுபவத்தோடு, நன்மாணாக்கர் பலரை இத்துறையில் உருவாக்கி வளர்த்துவிட்ட பெருமைக்கும் உரியவர். 1967ம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்ற காலம் முதல், அப்பத்திரிகை பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தபோதெல்லாம், தூரநோக்குச் சிந்தனையோடு ஒரு குழுவாக இயங்கி அப்பத்திரிகையை வழிநடத்திச் சென்றவர். நமது மண்ணில் போர் மேகங்கள் சூழ ஆரம்பித்த காலத்திலே 1981ம் ஆண்டு யாழ்.பொது நூலகம், யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகியன எரிக்கப்பட்ட வேளையில் யாழ்.ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் எரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, காசிலிங்கம் அவர்களும் புலம் பெயர்ந்து வாழ நேரிட்டது. பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் மண்ணில் வாழ ஆரம்பித்தாலும் பத்திரிகைத்துறை மீதான காதல் இவருள்ளத்தில் கனன்று கொண்டிருந்ததால். திரு. எஸ்.எஸ்.குகநாதன், திரு. சிவகுரு பாலச்சந்திரன் இருவரோடும் இணைந்த கூட்டு முயற்சியால் பாரிஸ் மண்ணிலும் 1991ம் ஆண்டு 'பரிஸ் ஈழநாடு' மலர்ந்தது. பெருந்தொற்றுக் காலம் வரை, சுமார் 28 ஆண்டுகாலங்கள், புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் குரலாய் 'ஈழநாடு' விளங்கியமைக்கு காசிலிங்கம் அவர்களது அர்ப்பண சிந்தையுடனான தொண்டும், ஒரு காரணியாக விளங்கியதை எவரும் மறுக்கவியலாது. ஊடகத்துறை இன்று மலினப்பட்டுவிட்டது. கையில் (Smart) கைத்தொலைபேசி வைத்துள்ள எவருமே









ஊடகவியலாளர்களாக மாறலாம் என்ற நிலையில் 'வெட்டி, ஒட்டும்' வேலை மட்டும் தெரிந்தால் போதும். எனவே பத்திரிகைத்துறையிலும் தமிழ் இலக்கணப்பிழைகள் பெருகிவருகின்றன. இந்தக் காலகட்டத்திலேதான் திரு.காசிலிங்கம் போன்றவர்களது வழிகாட்டல்கள் தேவைப்படுகிறன. வருங்காலத் தலைமுறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய ஆளுமை கொண்ட திரு.எஸ்.கே.காசிலிங்கம் போன்றவர்களது அனுபவங்கள் ஆவணப் பதிவுகளாக வெளியிடப்பட வேண்டும். இன்று அமுத விழாக் கொண்டாடும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் இன்னும் பல அகவைகள் கடந்து வாழ்ந்து, தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் திகழ, நம் எல்லோருக்கும் பொதுவான ஏக இறை அவருக்கு நல்லாரோக்கியத்தையும் உடல்-உள உறுதியையும், நல்லருளாய்த் தர வேண்டுகிறேன்.



அன்புடன்,

**பீ.எச்.அப்துல் ஹமீத்**







**ஐபிசி தமிழ் வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிய வேளை.**

EXPRESS NEWSPAPERS
(CEYLON)(PVT) LIMITED PV3125

CITY OFFICE
Advertising
Tel : 0117322736 / 738 / 739
Fax : 0112327827
Circulation
Tel : 0117322789
Fax : 0117522881
Marketing
Tel : 0117322730
BRANCHES
COLPETTY
No. 282, Galle Road, Colombo 03.
Tel : 011 7682024
011 7682480
WELLAWATTE
No. 73, Manning place, Colombo - 06.
Tel : 0117617110 / 111
KANDY
No. 48/1, Kings Street, Kandy.
Tel : 081 7388500 / 501
Fax : 081 7388502
BATTICALOA
No. 431/1, Trincomalee Road, Batticaloa.
Tel : 065 7388100 / 101
Fax : 065 2622109
JAFFNA
No. 117, Station Road, Jaffna.
Tel : 021 7388100 / 101 / 102
Fax : 021 2222730
VAVUNIYA
No. 32, C, 2nd Cross street, Vavuniya.
Tel : 024 7388100 / 101
Fax : 024 2221146
HATTON
No. 1,1/3, Side Street (2nd Main Street), Hatton.
Tel : 051 7388100 / 101
Fax : 051 7388102
TRINCOMALEE
No. 134, Main street, Trincomalee.
Tel : 026 7388100
KALMUNAI
No. 149, Yaseen Building, Main street, Kalmunai.
Tel : 067 7388100

## வீரகேசரியும் ஈழநாடும்

யாழ்.மண்ணிலிருந்து எழுச்சிபெற்ற ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசியராக ஒன்றரை தசாப்த காலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா வாழ்த்துத்தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வீரகேசரியும் ஈழநாடும். இந்த இரண்டு பத்திரிகைகளுக்கும் ஓர் உறவுண்டு.

வீரகேசரி 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1939ஆம் ஆண்டு முதல் 1959ஆம் ஆண்டு வரை கே.பி.ஹரன் வீரகேசரியின் ஆசிரியராக இருந்தார்.

பின்னர் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியரானார்.

கே.பி.ஹரன் வீரகேசரி பத்திரிகையின் வளர்ச்சிக்கு எவ்வாறு பணியாற்றினாரோ அதேபோன்று ஈழநாடு பத்திரிகையின் வளர்ச்சியிலும் பங்களிப்பு வழங்கியுள்ளமை வரலாறாகப் பதிவாகியிருக்கிறது.

கே.பி.ஹரன் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில் அவருடன் உதவி ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவராக எஸ்.கே.காசிலிங்கம் திகழ்ந்துள்ளார்.

பத்திரிகையாளர்கள், படைப்பாளிகள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வாசகர்கள் என அனைத்துத் தரப்பினருடனும் உறவைப்பேணக்கூடியவர்களையே பத்திரிகை ஆசிரியபீடத்தில் காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வகையான ஆற்றல்களை காசிலிங்கம் கொண்டிருக்கிறார் என்பதை அவர் எழுதி வெளியிட்ட 'என்னுள் என்னோடு' நூலின் ஊடாக அறிந்துகொள்ள முடிந்தது.

இலங்கையைவிட்டுப் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துவருகின்ற பொழுதிலும், அந்த நாட்டிலும் ஈழநாடு பத்திரிகையின் தொடர் செயற்பாட்டை மேற்கொண்டவர்களில் ஒருவராக காசிலிங்கம் இருந்திருக்கிறார். பின்னர் தமிழன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

Head Office & Factory Complex : 267, Raja Mawatha, Ekala, Ja-ela. Tel : 0117522700, Fax : 0117522704
City Office : No. 185, Grandpass Road, Colombo - 14 Tel : 0117322700, Fax : 0117322787
E-mail : info@expressnewspapers.lk Website : www.encl.lk

# EXPRESS NEWSPAPERS

(CEYLON)(PVT) LIMITED PV3125

CITY OFFICE

Advertising
Tel : 0117322736 / 738 / 739
Fax : 0112327827

Circulation
Tel : 0117322789
Fax : 0117522881

Marketing
Tel : 0117322730

BRANCHES

COLPETTY
No. 282, Galle Road,
Colombo 03.
Tel : 011 7682024
011 7682480

WELLAWATTE
No. 73, Manning place,
Colombo - 06.
Tel : 0117617110 / 111

KANDY
No. 48/1, Kings Street, Kandy.
Tel : 081 7388500 / 501
Fax : 081 7388502

BATTICALOA
No. 431/1, Trincomalee Road,
Batticaloa.
Tel : 065 7388100 / 101
Fax : 065 2622109

JAFFNA
No. 117, Station Road, Jaffna.
Tel : 021 7388100 / 101 / 102
Fax : 021 2222730

VAVUNIYA
No. 32, C, 2nd Cross street,
Vavuniya.
Tel : 024 7388100 / 101
Fax : 024 2221146

HATTON
No. 1, 1/3, Side Street
(2nd Main Street), Hatton.
Tel : 051 7388100 / 101
Fax : 051 7388102

TRINCOMALEE
No. 134, Main street,
Trincomalee.
Tel : 026 7388100

KALMUNAI
No. 149, Yaseen Building,
Main street, Kalmunai.
Tel : 067 7388100

இலங்கையிலிருந்து தனிப்பட்ட பயணமாக கடந்த மார்ச் மாதம் லண்டன் சென்றிருந்தேன்.

அங்கே மார்ச் 30ம் திகதி ஒரு சந்திப்பு நடைபெற்றது. லண்டனிலிருந்து வீரகேசரி பத்திரிகையில் இப்பொழுது ஆக்கங்களை எழுதிக் கொண்டிருப்பவர்கள் உட்பட மு.நித்தியானந்தன், மாலி ஆகிய மூத்த பத்திரிகையாளர்களும் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். அதில், இலங்கைப்பத்திரிகைத் துறை பற்றிய பல்வேறுவிடயங்களை மு.நித்தியும், மாலியும் கூறியிருந்தனர். ஈழநாடு பத்திரிகைக்கு, வீரகேசரி பத்திரிகை எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கியது, வீரகேசரி பத்திரிகையாளர்கள் எவ்வாறு உதவினார்கள் என்பதை மாலி விளக்கியிருந்தார். இரவு நேரப் பொறுப்பாசிரியராக எஸ்.கே.காசிலிங்கம் பணியிலிருந்தால் கொழும்பிலிருந்து தொலைபேசியில் செய்தி வழங்கிக் கொண்டிருக்கையில் அழைப்புத் துண்டிக்கப்பட்டு விட்டாலும், செய்தி சரியாகவே பத்திரிகையில் அச்சாகி வெளிவரும். அவ்வாறு செய்திகளைச் சரியாகச் செப்பனிடுவதில் காசிலிங்கம் கைதேர்ந்தவர்

என்பதை மாலி கூறியிருந்ததிலிருந்து காசிலிங்கம் அவர்களின் பத்திரிகைத்துறை ஈடுபாட்டையும் அனுபவத்தையும் அறிந்துகொள்ள முடிந்தது.

பத்திரிகையாளன் என்ற வகையில் இத்துறையில் பணியாற்றிய ஒரு மூத்த பத்திரிகையாளர் அமுதவிழாவைக் கொண்டாடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

நலமுடன் வாழ்ந்திடவும் தங்கள் பணிகள் தொடர்ந்திடவும் நல்வாழ்த்துகள்.

எஸ். ஸ்ரீ கஜன்

பிரதம ஆசிரியர்

வீரகேசரி

**Head Office & Factory Complex** : 267, Raja Mawatha, Ekala, Ja-ela. Tel : 0117522700, Fax : 0117522704
**City Office** : No. 185, Grandpass Road, Colombo - 14 Tel : 0117322700, Fax : 0117322787
E-mail : info@expressnewspapers.lk Website : www.encl.lk

# பத்திரிகைத்துறையில் ஏடு தொடக்கிய ஆசான்!



ஈழநாடு பத்திரிகை ஆசிரிய பீடத்தில் அவரை முதன் முதல் சந்தித்து 54 ஆண்டுகள் விரைந்து ஓடிவிட்டன! இவர் அணுகுவதற்கு எளிமையானவர். இங்கிதமாகப் பழகுவார். திறந்த மனதுடன் உதவுவார். சிந்தித்துச் செயற்படுவார். திட்டமிட்டு காரிய சாதனை புரிவார். மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிக்கும் பரோபகாரி. வரலாற்று அறிவு, தொலைநோக்குப்பார்வை, நுணுக்கமாக ஆராயும் பக்குவம்,கவனம் சிதறாத ஈடுபாடு, உழைப்பு, உற்சாகம். அவரைப்பற்றி எழுத ஆரம்பிக்கும் எண்ணம் உதித்தவுடனே மனதில் வரிசையாக அணிவகுத்தவை இவை! அவர் மீதான மதிப்பும் மரியாதையும் இன்று வரை 'இம்மி' யளவும் குறையாமலிருப்பதற்கு இவை மட்டும் காரணமல்ல, மேலதிகமாக எனது பத்திரிகையாளர் பணிக்கு ஏடு தொடக்கிய பெருந்தகையும் அவர் தான்.

பயிலும் பத்திரிகையாளர் என அவர் முன் நிறுத்தப்பட்ட எனது வாழ்வின் முதல் நாளில் அவரது பாட நெறி மூன்று விதமாக அமைந்தது. முதலாவதில் செயல் வழி விளக்கம் தெரிந்தது. இரண்டாவதில் அறிவுரை இருந்தது. மூன்றாவதில் கதை வடிவில் நெறிமுறை வந்தது. நான்காவதாக கணனி யுகத்தில் அவரது போதனை எவ்விதம் இருந்திருக்கும் என்ற கற்பனை இன்று முகிழ்ந்தது. இனி அவை உங்களுடன். முதல் நாள், முதலாவது நிமிடம், சம்பிரதாய அறிமுகம் நிறைவேறியதும் என்ன நினைத்தரோ தெரியவில்லை. என்னை ஓர் ஆசிரிய பார்வை பார்த்தார்! வஞ்சகமில்லாமல் கை நிறைய - மனம் நிறைய - ஒரு கட்டுக் காகிதங்களை என்னிடம் அள்ளித் தந்தார். வேறு எதுவுமே சொல்லவில்லை. அவர் பேசிப்பேசியே பொழுது போக்குவதை வெறுப்பவர் என ஏற்கனவே நிர்வாக இயக்குனர் தெரிவித்திருந்ததால் தடுமாற்றம் ஏமாற்றம் என எந்த மாற்றமும் என்னைத் தாக்கவில்லை.

ஒட்டியிருந்த மேசை மீது அந்தக் காகிதங்களை குவித்துவிட்டு கண்களால் அவரை அளவெடுப்பதற்கு வசதியாக அருகிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டேன். காதுகளும் அவரைவிட்டு அகல மறுத்து அடம் பிடித்ததாக நினைவு. என்ன செய்வது? அல்லது எப்படி மாற்றி எழுதுவது? அல்லாடியது மனசு! துணியாத வரை வாழ்க்கை அச்சுறுத்தும். துணிந்து பார் அதுவே வழிகாட்டும் என்று அந்தக் காகிதக் கும்பல் சொல்லத் துடிப்பதாக இதயம் துடித்தது! அந் நேரம் பார்த்து அச்சுக் கோப்பவர் ஒருவர் எடிட் செய்த செய்திகளை சேகரிக்க அவரிடம்

வந்தார். ஜெகதீசனிடம் நிரவலுக்கு பயன்படும் செய்திகளை கொடுத்துள்ளேன். இதில் இரண்டு பத்தி செய்திகள் நான்கும், மூன்று பத்தி செய்திகள் மூன்றும் உள்ளன என்றார். இதில் இரண்டு நிரவல் செய்திகளும் உள்ளனவே என்றவாறு அவற்றை எனது மேசை மீது வைத்த அச்சாளரின் கையில் தெரிந்த துண்டுகளில் D/C 18, 3/C 12 என எழுதப் பட்டிருந்தவை என்னைப் பார்த்து கண்ணடித்தன. எனது மேசையில் வைக்கப்பட்ட துண்டுகளில் S/C 12, S/C 14 என்ற எழுத்துகள் தலைப்புகளின் அருகில் முறுவலித்தன.அவற்றை கையில் எடுத்துப் பார்த்தேன். 20 வரிகளில் நெல்லியடி நிருபர் அனுப்பிய செய்தி 5 வரிகளாக சுருக்கப்பட்டிருந்தது. மற்றதில் 4 வரிகளில் கோப்பாய் நிருபரது செய்தி 8 வரிகளாக வளர்ந்திருந்தது. எல்லாம் புரிந்த மாதிரியும் தெரிந்தது. ஒன்றுமே புரியாதது போலவும் இருந்தது. அவர் தந்த காகித கட்டுகளில் விரல்களை உலாவச் செய்து செய்திகளுக்குள் செய்தி தேடினேன். ஒரே செய்தியை ஒரு நிருபர் நான்கு பந்திகளிலும் பிறிதொரு நிருபர் ஒரு பந்தியிலும் எழுதியிருந்தனர். பல செய்திகளை கண்கள் வேகமாக கடந்தன. ஏதோ ஓர் ஆலய திருவிழா ஆரம்பம் என்றிருந்த செய்தியை உருவி எடுத்தேன். கடவுளுடன் தொடங்குவோம் என்ற ஆழ்மன ‘சென்டிமென்ற்’ காரணமாயிருக்கலாம். வெகு பக்தி சிரத்தையுடன் அந்தச் செய்தியை மீண்டும் எழுதினேன். கொஞ்சமாகக் கூட்டினேன். அதைவிடக் கொஞ்சமாகக் குறைத்தேன். யாழ்ப்பாணம் வெள்ளி என்பதை முதல் வரியில் எழுதினேன். ஆலயத்தின் பெயருடன் இன்று கொடியேற்றம் எனத் தலைப்பு வைத்தேன். எனினும் கை சும்மா இருக்கவில்லை. அருகே D/C என்று எழுதினேன். நிருபர் அனுப்பியிருந்த செய்தியையும், நான் மீண்டும் எழுதியிருந்ததையும் சேர்த்து அவரிடம் கொடுத்தேன். ''கொடியேற்றம் அச்சா இனி திருவிழா களைகட்டும்'' என்றார். மீண்டும் "எழுதிய செய்தியில், வாசகர்களை கவரும் சொல்லாட்சியும் செப்பனிட்ட விதமும் பாராட்டப்பட வேண்டியவை. ஆனால் நிருபர்கள் அனுப்பும் செய்திகளை திரும்பவும் எழுதித்தான் ‘எடிட்’ செய்ய வேண்டிய தேவை இல்லை. அதிலேயே கூட்டலாம்.



குறைக்கலாம். முதலாவது செய்தியிலேயே தேறிவிட்டதாக சொல்வதற்கு, முதல் வரியில் உள்ள 'யாழ்ப்பாணம் வெள்ளி' என்பதே போதுமானது. இதில் உள்ள யாழ்ப்பாணம் என்பது உள்ளிருக்கும் செய்தி அனுப்பிய நிருபரை அல்லது அதன் நிகழ்விடத்தை தெரிவிக்கும். தொடரும் வெள்ளி தினத்தை குறிப்பதுடன் உள்ளிருக்கும் செய்தியுடன் நிருபரின் ஊர் கலந்து விடாமலும் தடுக்கும்". என்றுவிட்டு என்னை பார்த்தார். எப்படி 'ரியாக்ட்' செய்வது என்று கூட எனக்குத் தெரியவில்லை! "12,14,18 என்ற இலக்கங்கள் குறிப்பதென்ன?" என அவரிடம் கேட்டேன். அந்த இலக்கங்கள் அச்சுகளின் அளவை குறிக்கும் எண்கள். ஈழநாடு பத்திரிகை 10,12,14,18,24,36,48,72 அளவுகளில் உள்ள அச்சு எழுத்துகளை பயன்படுத்துகின்றது. 10 உம் 12 உம் பொதுவாக செய்திகளுக்கும், ஏனையவை தலைப்புகளுக்கும், அவற்றுள்ளும் 48உம்72உம் முன்பக்கத்தின் பிரதான தலைப்புக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பாவிக்கப்படும். முன் பக்க பிரதான செய்தி 'லீட் நியூஸ்' எனப்படும். செய்திகள் அனைத்தும் அவற்றின் பத்திகளை பிரதிபலிக்கும் வகையில் ஸிங்கிள் கொலம் (S/C), டபுள் கொலம் (D/C), மூன்று கொலம் (3/C), நான்கு கொலம் (4/C), ஐந்து கொலம் (5/C) என அடையாளப்படுத்தப்படும்.

பக்க வடிவமைப்பின் பொழுது இரு செய்திகளுக்கு இடையே சிறிய இடைவெளி ஏற்படுவதை நிரவல் செய்திகள் நிரப்பும். அதற்கு பொதுவாக தேவைப்படும் ஸிங்கிள் கொலம் அல்லது டபுள் கொலம் செய்திகள் நிரவல்கள் அல்லது பில்லர்கள் (fillers) என குறிப்பிடப்படும். ஆசிரிய பகுதியிலிருந்து அச்சுக்கோர்க்கும் பகுதிக்கு தினமும் வழங்கப்படும் பக்க வடிவமைப்பு டம்மி என அழைக்கப்படும். இவ்விதம் செயல் வழி மூலமாக அவரின் போதனா முறை இதழியலின் அடிப்படை அறிவை இலகுவாக என்னுள் புகுத்தியது. "பத்திரிகைத் தொழிலில் வார்த்தைப் பிரயோகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எழுத்தாளர்களை எழுத்தர் என்றால் மயக்கம் தரும். அச்சுக் கோப்பவர்களை அர்ச்சகர் என்றால் குழப்பம் வரும்." என்றார். பார்ப்பதை கேட்பதை பலர் வாசிக்கும் விதத்தில் எழுதுவதே பத்திரிகைத் துறையின் ஆரம்ப பாடம் என்றார். தொடர்ந்து When you are in doubt, leave it out! என்பதும் பாலபாடம்தான் என்றார். ஆஹா! இரண்டாவது பாடமும் ஸிம்பிளாக முடிந்துவிட்டதாக இதயத்துள் மணி அடித்தது! வாத்தியார் நல்லவர்தான் என எண்ணிக் கொண்டேன். நேரம் கிடைத்த பொழுது ஆசிரிய பீடத்திலிருந்த முன்னோடிகளிடம் சென்று என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன். கதை வடிவில் வந்த அவரது அடுத்த போதனையும் நெஞ்சில் நிலைத்தது. சிலர் மிகவும் சோர்வாக ஆசிரிய பகுதிக்கு வருவார்கள். சொற்ப வரிகளில் செய்தி வைத்திருப்பார்கள். ஏதோ குக்கிராமமொன்றில் அவர் பங்கு பற்றிய நிகழ்ச்சி அதிலிருக்கும். அதனை எங்காவது ஒரு மூலையில் தன்னும் போட முடியுமா? என்பார்கள். வாசித்துப் பார்த்த பின் நல்லாத்தானே இருக்கு, போடலாம் என்று சொல்வோம். சுதாகரித்துக் கொள்வார். உள்ளுக்கு எங்கையாவது நன்கு

தெரியும்படி போடலாமா? என்பார். சரி போட்டால் போச்சு என்றால் விடுவாரா? அப்ப முன் பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று பந்திகளில் போடுங்கோ என்பார். நாங்கள் மௌனம் சாதித்தால் தனது பெயரையும் தலைப்பில் போடுங்கோ. மறக்க வேண்டாம் என்பார். அத்துடன் விடுவாரா? எழுந்து செல்வார். சிறிது நேரத்தில் திரும்பி வந்து அதனை லீட் நியூஸ் ஆகப் போடலாம் தானே? என்பார்.

இந்தக் கதை மூலம் எமக்கான போதனை என்ன தெரியுமா? எந்தத் தீர்மானத்தையும் நாமே முடிவு செய்ய வேண்டும். எமக்காக அடுத்தவரைத் தீர்மானிக்க விடக் கூடாது என்பதே! அன்றைய தினம் அவரை சந்திக்க வந்தவர்கள் பலர். ஒருவரை எவ்விதம் எல்லாம் அழைக்கலாம் என்பது நல்ல மன நிலையிலிருந்த என் காதுகளுக்கும் இனித்திருக்கும். சேர், ஐயா, அண்ணா என விழித்தனர் கலைஞர்கள்! துரையர், விதானையார், நீதவான் என்றனர் உறவினர்! துவாரகாவின் அத்தான், கலைச்செல்விக்கு, அருட்செல்விக்கு, அரவிந்தனுக்கு, முகுந்தனுக்கு, சிவச்செல்விக்கு அப்பா, சிவனடியானுக்கு, சிவயோகீஸ்வரனுக்கு, தங்கராசாவுக்கு தம்பி, சண்முகலிங்கத்துக்கு (மணி), தனபாலசிங்கத்துக்கு (கண்ணன்), சுந்தரலிங்கத்துக்கு (காந்தி) அண்ணா, கணபதிப்பிள்ளை வாத்தியாரின் மகன் என்பதே ஊரவர் வாய்மொழியாக இருந்தது. அடுத்த அடுத்த நாட்கள் முடிவடைந்து, அடுத்த அடுத்த வாரங்களும் முடிவடைந்து, அடுத்த அடுத்த மாதங்களும் முடிவடைந்திருந்தன. சுதந்திரமாக செய்தி சேகரிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டேன். எந்தப் பக்கத்தில் எத்தனை பத்திகளில் எத்தனை அளவு அச்சுப்புள்ளிகளில் செய்தி வெளி வர வேண்டும் என்பன அத்துப்படியாகும் வகையில் அவருக்கு ஏகலைவனானேன். இந் நிலையில் அவர் எனக்கு தெரிந்து செய்த ஒரு நன்மையும் தெரியாமற் செய்த ஒரு நன்மையும் சொல்ல வேண்டும் போலுள்ளது.

கட்டுரையின் சாயல் எனது எழுத்துகளில் இருந்ததை அவதானித்த அவர் பிரதம ஆசிரியரிடமும் வார மலராசிரியரிடமும் கதையோடு கதையாக தெரிவித்து இருப்பார் போலும். அதனால் கமலம் சஞ்சிகைக்கும், ஈழநாடு வாரமலருக்கும் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இது அவர் தெரிந்து எனக்கு செய்த நன்மை. ஆனாலுமென்ன. கண்டகண்ட புனை பெயர்களில் எழுதியதால் அவற்றை அடையாளம் காண முடியாதிருப்பது இப்பொழுது ஒரு சோகக்கதை! பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஏதோ காரணத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்படும் வேளை அடையாளம் காண்பதற்கு இலகுவாக அ, ஆ, இ, ஈ என ஓரெழுத்தை செய்தியின் அடியில் குறிக்கும் நடைமுறை நிர்வாகத்தால் அமுல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு எழுத்தும் ஆசிரிய பீடத்தில் உள்ள ஒவ்வொருவரைப் பிரதிநிதித்துவம் செய்தது. அவற்றுள் (ஈ) என்ற எழுத்து அவருக்கென்றானது. எனது ஊரின் கோவில் திருவிழா, கலாசார நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விளையாட்டுப் போட்டிகள் என் மூலம் அவரூடாகப் பத்திரிகையில் வெளிவரின் அதிலும் (ஈ) இடம் பிடித்துவிடும். அதனால் (ஈ) என்றுள்ள ஏராளமான

செய்திகள் அனைத்துமே என்னுடையவை என்று ஊர் நம்பியது. அதுவே அவருக்குத் தெரியாமல் அவர் எனக்கு செய்த நன்மை ஆயிற்று. அரை நுற்றாண்டு கடந்து விட்டது. இன்று அவர் இதழியல் வகுப்பு நடத்தினால் இவ்விதம் சொல்லக் கூடும் என்ற கற்பனை விரிந்தது!
ஏனெனில் அவர் காலத்துடன் நகர்பவர். கணனி அறிவு உள்ளவர். காலம்தான் எவ்வளவு வேகமாக மாறிவிட்டது. ஆனால் நாம்தான் இன்னும் அங்கேயே நிற்கின்றோம். அச்சு, ஒலி, ஒளி ஊடகங்கள் அனைத்தும் 'குடிசைக் கைத்தொழிலாக' மாறி கன காலம் ஆயிற்று. எதனையும் மாற்றலாம். எப்பவும் மாற்றலாம். எங்கேயும் மாற்றலாம். ஒரு கொலத்தை இரு கொலமாக்குவதோ, இன்னும் இன்னும் அதிகரிப்பதோ அல்லது விருப்பம் போல் குறைப்பதோ, படங்களை நடுவிலோ, ஓரமாகவோ மாற்றுவதோ அல்லது தலைப்புகளின் அளவையும், வடிவையும் விதம் விதமாக சித்தரிப்பதோ சொடக்கு போடும் நேரத்தில் செய்யலாம்.

40ம் பக்கத்தில் உள்ள கட்டுரையை 65ம் பக்கத்திற்கு கொண்டு செல்வதும், 65ம் பக்கத்தில் உள்ள கட்டுரையை 77ம் பக்கத்திற்கு கொண்டு செல்வதும், 77ம் பக்கத்தில் உள்ள கட்டுரையை 5ம் பக்கத்திற்கு கொண்டு செல்வதும், 5ம் பக்கத்தில் உள்ள கட்டுரையை 7ம் பக்கத்திற்கு கொண்டு செல்வதும் சில நிமிட வேலை. ஒருவர் தனித்தே, 500 பக்கங்கள் உள்ள புத்தகத்தை அச்சமைக்க, வடிவமைக்க, உருவமைக்க தேவைப்படும் நேரம் இருபது மணித்தியாலங்கள் என்று சொல்லும் இளைய சமுதாயத்துடன் வாழ ஆரம்பித்தும் வருடங்கள் பல உருண்டோடி விட்டன. ஆனால் மூத்த தலைமுறையாகிய நாம்தான் பக்கங்கள் அமைப்பதே பல நாள் வேலை என்று புராண கால புலுடாவில் தேங்கி நிற்கின்றோம். அதனால்தான் மிக விரைவாக அனுப்பவும் மலர் தயாராகிக் கொண்டிருக்கிறது என்ற அடிக்குறிப்பும் அவசியமாகின்றது. நான் இங்கு இவ்விதம் கனடாவில் கற்பனையில் மிதந்து கொண்டிருக்க அவர் அங்கு பிரான்ஸில் செயற்கை நுண்ணறிவை போதிப்பது எப்படி என எண்ணிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியம் இல்லை! அவர் எளிமையானவர் என்று சொன்னால் அவருக்குப் பிடிக்காது! அவர் கடுமையானவர் என்று சொன்னால் எனக்குப் பிடிக்காது! அவரை வாழ்த்தி மகிழ்கின்றேன். மகிழ்ந்து வாழ்த்துகின்றேன். இதயத்தில் நிறைந்த உங்களுக்கு இதயம் நிறைந்த எண்பதாவது பிறந்த நாள் நல் வாழ்த்துகள்!



**எஸ்.ஜெகதீசன்**

(கனடா)

# ஈழத்தின் அன்றைய பத்திரிகையாளன் காலத்தின் பொக்கிஷம்



ஈழத்தில் எழுத்தூடகங்கத்தின் தோற்றம் 1841ம் ஆண்டு அமெரிக்கன் மெஷினரியால் ஆரம்பிக்கப்பட்ட 'உதயதாரகை' பத்திரிகையின் வரவுடன் நிகழ்ந்துள்ளதாக வரலாறு பதிவு செய்துள்ளது. 1930ல் 'வீரகேசரி'யின் வருகையுடன் பத்திரிகைத்துறை ஈழத்தில் வீரியம் பெற்றது. 1932ம் ஆண்டு 'தினகரன' வெளிவரத் தொடங்கியது. 7 ஜனவரி 1841ல் யாழ்ப்பாணம் மானிப்பாயில் அமைந்திருந்த அமெரிக்கன் மிஷனில் பணியாற்றிய ஹென்றி மார்ட்டின் (Henry Martin), செத் பேய்சன் (Seth Payson) ஆகிய கிறிஸ்தவப் போதகர்களால் 'உதயதாரகை' (The Morning Star) செய்தி இதழாக மாதமிருமுறை வெளியிடப்பட்டுள்ளது. மானிப்பாயைச் சேர்ந்த நேத்தன் ஸ்ட்ரோங் என வழங்கப்பட்ட அம்பலவாணர் சிற்றம்பலம் இதன் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இந்தப்பத்திரிகை தெல்லிப்பளையில் அச்சிடப்பட்டதாகப் பதிவாகியிருக்கிறது. 1856ம் ஆண்டிலிருந்து வாரந்தப்பத்திரிகையாக வெளிவந்தது. 'வீரகேசரி' 'தினகரன்' ஆகியன கொழும்பு நகரைத் தளமாகக்கொண்டு வெளிவருகின்றன. 1959ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மற்றொரு பத்திரிகைப்புரட்சி நிகழ்ந்தது. 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியராக ராஜா அரியரட்ணம் திகழ்ந்தார். 'வீரகேசரி' பத்திரிகையில் ஆசிரியராகப்பணியாற்றி வந்த தமிழகத்தைச் சேர்ந்த கே.பி.ஹரன் அவர்கள் பின்னர் 'ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியரானார். இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் பத்திரிகை வெளியிடுதல் என்பது ஒரு குடிசைக்கைத்தொழில் போலாகிவிட்டது. பத்திரிகாதர்மம் கேள்விக்குரியதாக்கப்பட்டுவிட்டது. ஓர் ஆக்கம் எழுதியவுடனேயே





அது பதிவிடப்பட்டு, மக்களின் பார்வைக்குச் சென்றுவிடுகின்றது. அந்த ஆக்கத்தில் உள்ள தவறுகள் திருத்தப்படாமலேயே பரிமாறப்படுகின்றன. ஆனால், அன்றைய காலம் அவ்வாறு அமைந்திருக்கவில்லை. பத்திரிகைக்கான எந்த ஓர் ஆக்கமும் ஆசிரிய பீடத்தின் பார்வைக்கும் திருத்தத்துக்கும் சென்றே பத்திரிகையில் பதிவாகும். பதிவாவதற்கு முன்னர் ஒப்பு நோக்குநர் கூட ஆக்கத்தில் தவறு கண்டுபிடிக்கக்கூடியவராக இருப்பார். அவர் அவ்வகையான தவறைக்கண்டறிந்து



ஆசிரிய பீடத்துக்குக் கொண்டு சென்று திருத்தம் செய்யப்பட்டுப் பத்திரிகையில் பதிவாகும். பத்திரிகைத்துறை அனுபவம் மிக்க ஜாம்பவான்களின் பதிவுகள் இவற்றை எமக்குப் புலப்படுத்துகின்றன.இப்படியான ஒரு பத்திரிகைப்பாரம்பரியத்திலிருந்து வந்தவரான, அன்றைய யாழ்ப்பாண ஈழநாடு உதவி ஆசிரியர், அமுதவிழா கொண்டாடும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள், கே.பி.ஹரன், எஸ்.எம்.கோபாலரட்ணம் (கோபு) ஆகியோருடன் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இப்பெரும் பத்திரிகையாளர்களுடன் சேர்ந்து பணியாற்றிய எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் அந்த ஜாம்பவான்களுடன் சேர்ந்து வழிநடந்து வந்துள்ளார். அவர்களிடமிருந்து அரும் பெரும் விடயங்களைக்கற்றுள்ளார். அவற்றை தனக்குப் பின் வந்தவர்களுக்குக் கற்பித்துள்ளார். அன்றைய பத்திரிகையாளன் காலத்தின் பொக்குஷம். இதனை உணர்ந்து நாம், 2016ம் ஆண்டு பரிஸ் மாநகரில் பலே தே ஸ்போ (Le Dôme de Paris - Palais Des Sports) பிரமாண்டமான மண்டபத்தில் ஐபிசி தமிழ் நடத்திய 'ஐபிசி தமிழா' மாபெரும் கலை நிகழ்ச்சியில் 'வாழ் நாள் சாதனையாளர' விருது வழங்கி மாண்பேற்றியிருந்தோம். பரிஸ் நகரில் அமுதவிழா கொண்டாடும் மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு ஐபிசி தமிழ் ஊடகமும் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



**கந்தையா பாஸ்கரன்**
**தலைவர்**
**ஐபிசி தமிழ்**

**நிராஜ் டேவிட்**
**நிறைவேற்றுப்பணிப்பாளர்**
**ஐபிசி தமிழ்**










# வேகமான எழுத்துக்கும் சிந்தனைக்கும் உரித்தான மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கம்..!



அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பு அறிவுலகத்தில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தது. கருத்துப் பரவலுக்கு நூல்கள் - பத்திரிகைகள் முதன்மைக் கருவிகளாயின. ஈழத்தில் அமெரிக்க மிசனரிமார் முதன்முதலாக 1841ல் (07-01-1841) 'உதயதாரகை' (Morning Star) என்னும் பத்திரிகையை ஆரம்பித்தனர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இது வெளிவந்தது. இதன் ஆசிரியராகக் கரோல் விசுவநாதபிள்ளை விளங்கினார் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். 1930ல் 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின்' பகிஸ்கரிப்புக் கோரிக்கைக்கு வலுவூட்டும் அரசியல் கருத்துகளுடன் 'ஈழகேசரி' வெளிவந்ததாக கூறுவதுண்டு, ஈழத்தின் அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய வளர்ச்சியில் மிகக் கவனம் செலுத்திய ஈழகேசரி இருபத்தெட்டு ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது. ஈழத்தில் நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரோக்கியமான ஆரம்பத்திற்குத் தளமாக ஈழகேசரி அமைந்து. படைப்பாளிகளை இனங்காண வைத்தது என்றால் மிகையல்ல. நாளேடுகளாக 1930ல் வீரகேசரியும் 1932ல் தினகரனும் தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கின.

வேறு சில நாளேடுகளும் வெளிவரத்தொடங்கி சிறிது காலத்திலேயே அவை நிறுத்தப்பட்டுவிட்டன. சகோதரர்கள் இருவரின் (கே. சி.தங்கராஜா, கே.சி.சண்முகரத்தினம்) சிந்தனையில் உருவாகியது 'ஈழநாடு' பத்திரிகை. யாழ்ப்பாணத்திலிருந்து இதன் முதல் இதழ் 09-02-1959ல் வெளிவந்தது. வாரப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கிப் பின்னர் 1961ல் தினசரியாக மலர்ந்தது. தலைநகர் கொழும்புக்கு வெளியே ஓர் பிராந்தியத் தமிழ்ப் பத்திரிகையாக 'ஈழநாடு' தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. தமிழ்பேசும் சகல மக்களின் நலன்கருதி, மக்களின் உணர்வுகளை, வாழ்வுமுறைகளை, சம்பிரதாயங்களைப் பிரதிபலிக்கும் பத்திரிகையாக ஈழநாடு வெளிவரத் தொடங்கியது. 1961ம் ஆண்டு யாழ் கச்சேரி முன்றலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்ட காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் 'ஈழநாடு' செய்தி சொன்னது. பாடசாலை - கல்லூரி ஆசிரியர்கள், படைப்பாளிகள் கைகளில் மிதந்தது. அந்தக் காலத்தில் ஈழநாடு பல பதிப்புகள் (மாலைப் பதிப்பு - பிராந்தியப் பதிப்பு) வெளியாகியதுண்டு, கோகிலாம்பாள் கொலை வழக்கு, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேசப் போராட்டம், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம், 1971 ஏப்ரல் கிளர்ச்சி, தமிழாராய்ச்சி மாநாடு, பயங்கரவாதத் தடைச்சட்ட அமுல், இளைஞர்கள் கொலை போன்ற நிகழ்வுகளின்போதும் ஈழநாடு மக்கள் கவனத்தை மிகவும் ஈர்த்தது. 1984ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஈழநாடு 25 -வது ஆண்டு நிறைவு மலர்' சிறந்த ஆவணப் பதிவாகும்.

ஈழநாடு பத்திரிகை செய்தித் தணிக்கைகள், அச்சுறுத்தல்கள் எனப் பல்வேறு நெருக்கடிகளைக் கண்டது. குண்டுத் தாக்குதலுக்குமுள்ளானது. தீக்குளித்து மீண்ட ஈழநாடு தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தன் இயக்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.



ஈழநாடு ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்களில் கே.பி.ஹரன், இராஜ அரியரத்தினம், என். சபாரத்தினம், எஸ்.எம். கோபாலரத்தினம் மற்றும் சசிபாரதி சபாரத்தினம், பெருமாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆசிரிய பீடத்தில் இளந்தலைமுறையினர் பலர் உதவி ஆசிரியர்களாக இணைந்திருந்தனர். அந்தத் தலைமுறையினர் பலர் இன்று ஈழத்திலும் உலக நாடுகள் பலவற்றிலும் ஊடகத்துறையில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களில் ஒருவரான எஸ்.கே. காசிலிங்கம், 1967ல் ஈழநாடு ஆசிரிய பீடத்திற்குள் இணைந்துகொண்டார். அவரை எழுபதுகளின் தொடக்கத்திலிருந்தே யான் நன்கறிவேன். கொழும்புப் பத்திரிகைகளுக்கும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் செய்தியாளராக யான் கடமையாற்றிய காலமது. யாழ் குடாநாட்டுச் செய்திகளை கொழும்புப் பத்திரிகைகள், வானொலிக்கேற்றவாறு எழுதி அனுப்ப ஈழநாடு பெரிதும் உதவியதுண்டு. அதிகாலை ஈழநாடு கிடைத்ததும் எமக்கேற்றவாறு சில செய்திகளை அதிலிருந்து திரட்டிக்கொள்வதுண்டு. ஈழநாடு ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பலரையும் யான் நன்கறிவேன். எந்த வேளையிலும் ஈழநாடு கட்டிட மேல்மாடியிலுள்ள அலுவலகத்தினுள் நுழைந்து ஆசிரிய பீடத்திலுள்ளவர்களுடன் உரையாடுவேன். நள்ளிரவு - அதிகாலைப் பொழுதுகளிலும் அவ்வாறு சென்றதுண்டு. அரசியல் - இலக்கியச் செய்திகளை வழங்கி அழகாகப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்வேன். மறுநாள் அவ்வாறே அவை பிரசுரமாகிமகிழ்ச்சியளிக்கும். அங்கு பணிபுரிந்த காசி அண்ணர் அழகாக உடையணிந்த நிமிர்ந்த வேக நடைக்காரர். ஓட்டமும் நடையுமாக போவார். வேகமாகவே கதைப்பார். எழுத்தும் அப்படியே..! பரபரப்பான செய்திகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்வதில், அவற்றைச் சூட்டோடு தலைப்பிட்டுப் பிரசுரிப்பதில் வல்லவர். அதனால் சில பிரச்சினைகளையும் சிரமங்களையும் அவர் எதிர்கொண்டதுண்டு. பத்திரிகைத் துறையிலே - ஊடகத்துறையிலே பணியாற்றுபவர்கள் பலர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள் என்பர். நெருடல்கள் - நெருக்கடிகள் - பரபரப்புகள் - பதற்றங்கள் - சிலவேளை பயமுறுத்தல்கள் மத்தியிலும் அவர்கள் பணியாற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு..! உண்மைகளை யதார்த்தப் பார்வையோடு வெளிக்கொணரும்போது அவை வரலாற்றுப் பதிவுகளாகின்றன. அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நடைமுறைப் பிரச்சினைகளைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஊடகங்கள் நம்பிக்கையளிப்பனவாக இருத்தல் வேண்டும். அந்த வகையில் பத்திரிகைத்துறையில்

அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த பலரை யான் அறிவேன். அவர்களில் காசி அண்ணர் குறிப்பிடத்தக்கவர். 1991ல் யான் பிரான்ஸ் வந்ததும் காசி அண்ணரை 'பாரிஸ் ஈழநாடு' அலுவலகத்தில் மீண்டும் சந்தித்துக்கொண்டேன். "வந்துவிட்டாயா..?" எனக் கேட்டு மகிழ்வுடன் கதைத்தார். மூன்று மாத விசாவில் வந்த எனக்கு அகதி அடைக்கலம் கேட்பது குறித்து ஆலோசனைகள் சொன்னார். 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய அவர் பின்னர் 'தமிழன்' பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட்டார். பத்திரிகையில் இலக்கியப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் படைப்பாளிகளை ஊக்குவித்தார். பாரிஸ் மாநகரில் நடைபெறும் நூல் அறிமுக விழாக்கள், சங்கங்களின் ஆண்டு விழாக்கள் பலவற்றுக்கும், காசிலிங்கம் தலைமை வகித்து நடாத்த அழைக்கப்படுவார்.

இலண்டன், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாக்களிலும் அவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதை யான் அறிவேன். மூத்த பத்திரிகையாளர் - ஆளுமை மிக்கவர் என்ற வகையில் அவருக்கு அந்தக் கௌரவம் வழங்கப்படுவதுண்டு. தனது நீண்ட காலப் பத்திரிகைத்துறை அனுபவங்கள், வரலாற்று ரீதியாக அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என்பனவற்றைப் பதிவுசெய்யும் வகையில் 'என்னுள் என்னோடு' என்ற நூலை 2002ம் ஆண்டு வெளியிட்டார். இதன் அறிமுக நிகழ்வுகள் ஐரோப்பாவின் பல நகரங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. எனது நூல்களின் வெளியீட்டு விழாக்கள், அறிமுக நிகழ்வுகள் பலவற்றுக்கும் அவரே தலைமை வகித்துச் சிறப்பித்தார். ஊரில், சமூக முன்னேற்றத்தை கவனத்தில்கொண்டு செயற்பட்டவர். அனலைதீவின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பத்திரிகையில் செய்திகளைப் பிரசுரித்து நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்தை ஈர்த்தவர். அதனால் அனலைதீவுப் பாடசாலைகளின் வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை நீங்க உந்துசக்தியாகச் செயற்பட்டதையும் யான் அறிவேன். 'பிரான்ஸ் - அனலைதீவு மக்கள் ஒன்றியம்' சிறப்பாகச் செயற்பட ஊக்கமளித்தார். பிறந்த ஊரின் சிறப்புகளை வெளிப்படுத்துவதில் மகிழ்பவர். 2014ம் ஆண்டு அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின் சிறப்பு மலரான 'அனலைத் தென்றல்' மலரைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பொறுப்பை எனக்களித்தார். அதன் ஆண்டு விழாவும் 'அனலைத் தென்றல்' வெளியீடும் (22 - 06 - 2014) பாரிஸ் மாநகரில் எஸ். கே. காசிலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.இவ்விழாவில் எனது சில நூல்களின் அறிமுக நிகழ்வும் நடைபெற காசி அண்ணர் ஊக்கமளித்தார். இந்நிகழ்வில் 'கல்விச் சேவையாளர்' சி.காராளபிள்ளை நூல்கள் குறித்துச் சிறப்புரையாற்றினார். காசி அண்ணர் அன்பாகப் பழகக் கூடிய பண்பாளர். பத்திரிகை, அரசியல், இலக்கியம் குறித்து வரலாற்று ரீதியாக அவருடன் உரையாடினால் பல தகவல்கள் பெற்றுக்கொள்ளலாம் என நண்பர்கள் சொல்லிக்கொள்வர். பிரான்ஸ் நாட்டில் அவ்வாறு பண்போடு உரையாடுவதற்கு ஏற்ற மூத்த ஆளுமை மிக்கவர்களில் அவர் குறிப்பிடத்தக்கவர். அமுத விழா காணும் அன்புள்ளம் மேலும் பல்லாண்டுகள் வளமுடன் வாழ வாழ்த்துவோம்..!



**வி.ரி.இளங்கோவன்** (பிரான்ஸ்)

Canada's No.1 Tamil Newspaper

Logan N. Logendralingam
Editor in Chief

## 'ஈழநாடு' எனும் அடையாளத்தை இன்றுவரை சுமக்கும் 'ஆழம்' நிறை பத்திரிகையாளர் 'காசி', நூறையும் தாண்டுவார் நிச்சயம்!

யாழ்பாடிப் பரிசு பெற்ற மண்ணில் உதித்த 'ஈழநாடு' நாளிதழால் அடையாளம் தேடிக் கொண்டவர்கள் அந்த பத்திரிகைத்துறையில் புகுந்து எழுதிக் குவித்த இணையற்ற பல பத்திரிகையாளர்கள் மாத்திரமல்ல. போசுர் சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்ற அந்த பத்திரிகை அலுவலகம் அமைந்திருந்த மானிப்பாய் வீதியும் பேசப்படும் ஒரு தெருவாய்த் திகழ்ந்தது.

இவ்வாறான தமிழ் மண்ணில் தரமான ஈழநாடு பத்திரிகையின் நிழலில் நின்றதனால் மறைந்தாலும் இன்றும் எம் மனங்களில் நிறைந்தவர்கள் பலர் உலகெங்கும் பரந்தும் நிமிர்ந்தும் நிற்கின்றனர். அவர்களில் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய அமுத விழா நாயகன் எஸ். கே. காசிலிங்கம் அவர்களும் ஒருவராவார்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் நான் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்து தொடர்ந்து பங்களித்து வந்த வேளையில் ஈழநாடு பத்திரிகை யாழ்ப்பாணத்துக் கவிஞர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் தவிர்க்க முடியாத படைப்புத் தளமாக விளங்கியது. அப்போது அங்கு பணியாற்றிய பாமா இராஜகோபால், சசிபாரதி சபாரட்ணம், மகாதேவன், பெருமாள் போன்றவர்களோடு நட்புக் கொண்டு பழகும் சந்தர்ப்பங்கள் எளிதாகவே கிட்டின. அன்றைய நாட்களில் எஸ். கே. காசிலிங்கம் அவர்களையும் அந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் காணும் பாக்கியம் பெற்றிருந்தோம். அந்த நாட்களின் தொடர்ச்சியாக யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு பின்னர் ஒருநாள் ஈழநாடு அலுவலகம் எரிக்கப்பட்ட போது நாம் ஆலயம் ஒன்று தீக்கிரையானது போன்று கண்ணீர் சொரிந்தோம்.

நான் 1990ம் ஆண்டு கனடாவில் கால் பதித்த வேளையில் தான் 1991ம் ஆண்டு பாரிஸ் நகரிலிருந்து 'ஈழநாடு' வார இதழ் வெளிவரத்தொடங்கியது. அப்போது அதன் வெளியீட்டாளர்களில் இன்றைய அமுத விழா நாயகன் காசிலிங்கம் மற்றும் குகநாதன் ஆகியோர் இருப்பதை அறிந்து மகிழ்ந்தோம். அவர்களது பத்திரிகை ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் பேசப்படும் ஒன்றாகத் திகழ்ந்து கனடாவிலும் அதன் பயன்பாடுகள் பரவத் தொடங்கின. இவ்வாறான காலப்பகுதியிலேயே 1993 ல் எமது 'உதயன்' பத்திரிகை வெளிவரத் தொடங்கி நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. அந்தப் பயணத்தில் எஸ். கே. காசிலிங்கம் அவர்களின் படைப்புக்களும் அவரது பெயரும் கனடாவிலும் வாசகர்கள் மத்தியில் அறியப்பெற்ற ஒன்றாக விளங்கியது.

அவ்வாறான பத்திரிகைத்துறை ஜாம்பவான்களில் ஒருவரான அவரைப் பாராட்டும் வகையில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் கலை இலக்கிய பத்திரிகைத்துறை சார்ந்த நண்பர்கள் எடுக்கும் அமுத விழா அரங்கு நிறைந்த ஒன்றாக அமைய வேண்டும் என்றும் 'ஈழநாடு' எனும் அடையாளத்தை இன்று வரை சுமந்துவரும் அவரது விழா சிறக்கவும் சிலிர்க்கவும் வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்

ஆர். என். லோகேந்திரலிங்கம்- கனடா உதயன் பிரதம ஆசிரியர்

UTHAYAN PUBLISHERS
4062 Ellesmere Road, Scarborough, ON M1C 1J2 Tel: 416.752.1524 Fax: 416.752.671
uthayannews@yahoo.com www.uthayannews.ca

# அமுதவிழாவைக்காணும் மூத்த பத்திரிகையாளர் எஸ். கே. காசிலிங்கம் நினைவுகள்!



பத்திரிகை உலகில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பாரிஸிலிருந்து பாரிஸ் ஈழநாடு, தமிழன் ஆகிய இரண்டு வாரப்பத்திரிகைகள் வெளியாகிக்கொண்டிருந்தன. இவற்றை நடத்தியவர்கள், முன்னர் இலங்கை வடபுலத்தில் வெளியான ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றியவர்கள் ஈழநாடுவில் தமது எழுத்தூழியத்தை மேற்கொண்டவர்கள் பலர், அவர்களில் சிலர் தற்போது உயிரோடு இல்லை.

எனது பூர்வீகம் மேற்கிலங்கையில் நீர்கொழும்பு. 1972இற்குப் பின்னர், கொழும்பிலிருந்து வெளியாகும் வீரகேசரி பத்திரிகையின் நீர்கொழும்பு பிரதேச நிருபராகவும், அதேசமயம், படைப்பிலக்கியவாதியாகவும் நான் அறிமுகமானேன். அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து டொமினிக்ஜீவா வெளியிட்ட மல்லிகை மாத இதழில் எனது சிறுகதைகள் உள்ளிட்ட படைப்புகள் வெளிவந்தன. மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, ஒவ்வொரு மாதமும் மல்லிகை வெளியானதும், அதன் பிரதிகளுடன் யாழ். ஈழநாடு பணிமனைக்குச்சென்று அங்கிருக்கும் பத்திரிகையாளர்களுக்கு விநியோகிப்பார்.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர், 1970 களில் எனது ஆக்கங்களை மல்லிகையில் படித்துவிட்டு, சக பத்திரிகையாளர்களிடம் என்னைப்பற்றி சிலாகித்துச்சொன்ன ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் மதிப்பிற்குரிய திரு.எஸ். கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா நடைபெறவிருக்கிறது என்ற நற்செய்தியை லண்டனிலிருந்து எனக்குத் தந்தார், நீண்டகால ஊடகவியலாளர் நண்பர் எஸ். கே. ராஜென்.

1995 – 1996 காலப்பகுதியில் பாரிஸ் ஈழநாடுவில், மறைந்துவிட்ட மூத்த படைப்பாளிகள் பற்றிய நினைவுத் தொடரை எழுதிக்கொண்டிருந்தேன். தனது தமிழன் பத்திரிகையிலும் நான் எழுதவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தவர்தான் எஸ்.கே. காசிலிங்கம் என்ற தகவலை பின்னர்தான் நான் அறிந்தேன். திடீரென ஒரு நாள் பாட்டி சொன்ன கதைகள் என்ற உருவகக்கதைத் தொடரை தமிழன் இதழுக்கு அனுப்பினேன். அதனை ஒவ்வொரு வாரமும் தமிழன் இதழில் வெளியிட்ட அதன் ஆசிரியர் காசிலிங்கம், பின்னர் அந்தத் தொடர் நூலுருவானபோது, அதற்கு நீண்டதொரு கருத்துரையும் எழுதியிருந்தார்.

இந்நூல் டொமினிக்ஜீவாவின் மல்லிகைப்பந்தல் வெளியீடாக 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியானது. காசிலிங்கம் அவர்களின் கருத்துரையிலிருந்து பின்வரும் சுவாரசியமான குறிப்புகளைத் தருகின்றேன். “எழுத்தாளர்களா, பத்திரிகையாளர்களா உயர்ந்தவர்கள்?” இது தேவையற்ற சர்ச்சைதான். ஆனாலும், பத்திரிகையாளரும் எழுத்தாளருமான முருகபூபதியைப்பற்றி கருத்துரை எழுதும் போது இந்த சர்ச்சைக்கான விளக்கத்தையும் குறிப்பிடுவதில் தவறில்லை என்று நினைக்கின்றேன். பாரிஸில் வாழ்ந்துகொண்டிருந்தபோது அமரராகிவிட்ட அகஸ்தியர் அவர்களுடன் ஆரம்பமான சர்ச்சை இது. எழுத்தாளர் எல்லோருமே தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பதில்லை. பத்திரிகையாளர்களைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இதனால், இவர்கள்தான் உயர்ந்தவர்கள் இது எமது விவாதம்! பத்திரிகையாளர்களின் உதவியினால்தான் எழுத்தாளன் பிரபல்யமடைகிறான். பத்திரிகையின் ஒத்தாசையின்றி எழுத்தாளன் மக்கள் மத்தியில் அறிமுகமாக முடியாது. இதுவும் எமது விவாதம். இவ்வாறு இந்த சுவாரசியமான விவாதம் நீண்டிருந்தது. பல எழுத்தாளர்களின் படைப்பிலக்கிய ஆக்கங்களுக்கு களம் கொடுக்கும் பத்திரிகை ஆசிரியர்களும், குறிப்பிட்ட பத்திரிகைகளில் பணியாற்றும் பத்திரிகையாளர்களும் இல்லையேல், ஓர் எழுத்தாளன் எவ்வளவுதான் எழுதிக்குவித்தாலும், அவை பத்திரிகைகளில் வெளிவரவில்லையெனில், அவ்வெழுத்துக்கள் குடத்திலிட்ட விளக்காகவே இருந்துவிடும். இந்நிலை காசிலிங்கம் அவர்கள், 1997 களில் எனது பாட்டி சொன்ன கதைகள் நூலுக்கு கருத்துரை எழுதிய காலப்பகுதியில் இருந்தது. ஆனால், இன்று நிலைமை முற்றாக மாறிவிட்டது. எழுத்தாளர்கள், தத்தமக்கென வலைப்பூக்களையும், காணொலிகளையும் நடத்தியவாறு தங்கள் படைப்புகளை வெளியிட்டு வருகிறார்கள். அத்துடன் முகநூலிலும் பகிர்ந்துகொள்கிறார்கள். அன்று கையால் பேனையின் துணையுடன் காகிதத்தில் எழுதி, தபால் உறையில் வைத்து அஞ்சல் தலை ஒட்டி பத்திரிகைகளுக்கு அனுப்பிய காலம் இன்று மாறிவிட்டது. இன்று நாம் கணினி யுகத்தில் வாழ்கின்றோம். இந்த இரண்டு யுகங்களிலும் எழுத்தூழியத்தில் ஈடுபட்டவர்தான் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்.

தனது பத்திரிகை உலக அனுபவங்களையும் தனது தொழில்சார் வாழ்வில் சந்தித்த ஆளுமைகள் பற்றியும் 2002 ஆம் ஆண்டு வெளியிட்ட 'என்னுள் என்னோடு' என்ற நூலில் விரிவாக பதிவுசெய்துள்ளார். இந்நூலை வாசகர்கள் தமிழ் நூலகம் ஆவணகத்தில் பார்க்க முடியும். படிக்க முடியும். காசிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஈழநாடுவில் பணியாற்றிய வேளை, தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து, இனவிடுதலைப்போராட்டம் வெடித்த காலப்பகுதி. அக்காலப்பகுதியில் தான் அங்கு கற்றதையும் பெற்றதையும் சுவாரசியத்துடனும் வலிகளுடனும் இந்த நூலில் எழுதியிருக்கிறார். காசிலிங்கம் யாழ்ப்பாணத்தில் ஈழநாடுவில் பணியாற்றிய காலப்குதியில் அங்கு அரசாங்க அதிபராகவிருந்த விமல் அமரசேகராவுடனும் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்.

அவருடனான தனது ஊடாட்டங்கள் பற்றியும் இந்நூலில் பதிவுசெய்துள்ளார்.

விமல். அமரசேகரா, பின்னாளில் அவுஸ்திரேலியா மெல்பனில் வாழ்ந்து மறைந்தார். இவர் இங்கு 1980 களில் வாராந்தம் தமிழிலும், சிங்களத்திலும் ஒலிபரப்பான 3EA வானொலி உருவாக்கத்திற்கு காரணமானவர்களில் ஒருவர். காசிலிங்கம் அவர்களின் 'என்னுள் என்னோடு' நூலில், விமல் அமரசேகராவைப் பற்றிய குறிப்புகளைப்படித்துவிட்டு, அவரை நேரில் சந்தித்து, அந்த நூலைக்காண்பித்து, குறிப்பிட்ட பக்கங்களை வாசித்து மொழிபெயர்த்துச்சொன்னேன். அவர் காசிலிங்கம் அவர்களுடனான பசுமையான நினைவுகளை என்னுடன் பகிர்ந்துகொண்டார். இந்நூலுக்கு மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சபாரத்தினம் முன்னீடும், தமிழக அரசியல் ஆர்வலர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அணிந்துரையும் எழுதியிருக்கிறார்கள். சமகாலத்தில் இலங்கையில் பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஊடகக் கற்கைநெறி இடம்பெற்றுள்ளது. இந்தத்துறையில் பயிலும் தமிழ் மாணவர்களும் இவர்களின் விரிவுரையாளர்களும், காசிலிங்கம் அவர்களின் 'என்னுள் என்னோடு' நூலினை அவசியம் படிக்கவேண்டும். வடபுலத்தின் அனலைதீவில் பிறந்து, அய்ரோப்பா வரையில் பயணித்து, தான் நேசித்த பத்திரிகை உலகத்தை கைவிடாமல் அயற்சியின்றி இயங்கி வந்திருக்கும் பத்திரிகை உலக மூத்த சகோதரர் எஸ். கே. காசிலிங்கம் அவர்கள் தற்போது எண்பது வயதை பூர்த்தி செய்து அமுதவிழாவை காண்கிறார். உள்ளார்ந்த கலை, இலக்கிய, ஊடக ஆற்றல் மிக்கவர்கள், உலகின் எந்தத் திசைக்குச்சென்றாலும், தாம் ஆழமாக நேசித்த இந்தத் துறையை கைவிடமாட்டார்கள் என்பதற்கு காசிலிங்கம் அவர்களும் மிகச்சிறந்த உதாரணம். எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.



**லெ.முருகபூபதி**
அவுஸ்திரேலியா

**எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது**
**80வது பிறந்தநாள் கொண்டாட்டம்**
**01.05.2025 –** France



# யாழ்ப்பாணத்தின் அடையாளம் ஈழநாடு!



யாழ்ப்பாணம் என்றதுமே அதன் அடையாளங்கள் நினைவுக்கு வந்துவிடும். இற்றைக்கு நான்கு,ஐந்து தசாப்தங்களுக்கு முற்பட்ட காலத்தை நினைவில் கொள்கின்ற பொழுது, யாழ்.பொது நூலகம், யாழ்.மாநகரசபை, 'ஈழநாடு' காரியாலயம் என வரிசைப்படுத்தப்படுத்துகையில் எமது பூபாலசிங்கம் புத்தகசாலையும் அங்கே இடம்பிடித்திருப்பதைப் பல பதிவுகள் காண்பிக்கின்றன. அதற்கான காரணங்களும் உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை என்பது பல்வேறு துறைகள் சார்ந்த ஆளுமையாளர்கள் கூடும் மையமாகவே திகழ்ந்தது-திகழ்கிறது. கல்வியாளர்கள், இலக்கியவாதிகள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், பிரமுகர்கள் எனப்பலர் தினமும் கூடுவார்கள். அவர்கள் என்ன தேவைகளை நாடி வருகின்றார்களோ அவை எமது நிலையத்திலே பூர்த்தி செய்யப்படும். காலை வேளை என்பது பத்திரிகைகளுக்காகக் கூட்டம் சேரும் நேரம். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் அந்தப்பத்திரிகைகளை நாம் மக்கள் கரங்களில் வழங்கிக்கொள்ள வேண்டும். கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைகள், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகை என்பவை பரப்பரபாக மக்களுக்கு வழங்கப்படும். 'ஈழநாடு' பத்திரிகையை மக்கள் ஆவலோடு பெற்றுக்கொள்வார்கள். ஈழநாடு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருவதால் யாழ்ப்பாணம் பற்றிய பல தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இந்த 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றியவர்கள் எமது நிறுவனத்துக்கு அடிக்கடி வருகைதருவது வழக்கம். பத்திரிகைப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த யாழூர் துரை, ரவி ஆகியோருடன் 'ஈழநாடு' சச்சி ஐயாவை எப்பொழுதும் காணக்கூடியதாக இருக்கும். எம்மிடம் ஈழநாடு விற்று முடிந்துவிட்டால் சச்சி ஐயா உடனடியாக 'ஈழநாடு' காரியாலயம் சென்று மேலதிகமாகப் பத்திரிகைகள் எடுத்து வந்து பத்திரிகைப்பகுதியில் ஒப்படைப்பார். இவ்வாறு ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய ஒவ்வொருவரும் அந்தப்பத்திரிகையில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்கள். அந்த வகையில் ஈழநாடு உதவி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய எஸ்.கே.காசிலிங்கம் அவர்களும் ஈழநாடு பத்திரிகையின் வளர்ச்சியில் பங்களிப்புச்செய்துள்ளார். இரவு நேர பொறுப்பாசிரியராகப் பணியாற்றியவர். 'ஈழநாடு' பத்திரிகையின் வரலாற்றில் இவரது பெயரும் பதிவாகியுள்ளது. 1981ல் நிகழ்ந்த அனர்த்தத்தின் பொழுது எமது நிறுவனம் எரியூட்டப்பட்டது போல, ஈழநாடு காரியாலயமும் எரியூட்டப்பட்ட சோகம் நிகழ்ந்தது. அந்தக்காலகட்டத்திலும் எஸ்.கே.காசிலிங்கம் ஈழநாட்டில் பணியாற்றினார். பின்னர் புலம்பெயர்ந்து பிரான்ஸ் சென்றார்.

அங்கும் பத்திரிகை வெளியிடுவதில் ஆர்வம் கொண்டு செயற்பட்டார். ஈழத்துத்திரைப்படம், நாடகம் என்பனவற்றில் முழுமையாகப் பணியாற்றி நிறைவான அனுபவத்தைக்கொண்ட ஏ.ரகுநாதன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவை முன்னிட்டு (2022) எஸ்.கே.காசிலிங்கம் அவர்களால் தொகுக்கப்பட்ட 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூலின் வெளியீடு முதலில் கொழும்பில் எமது நிறுவனத்தில் (பூபாலசிங்கம் புத்தகசாலை) 2022 மார்ச் மாதம் 16ம் திகதி நடைபெற்றது. பிரான்ஸ் நாட்டில் புத்தக வெளியீடுகள் என்பது புத்தக நிலையங்களில் வைத்தே நடைபெறுவதுண்டு. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வரும் பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம், ஏ.ரகுநாதன் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' முதலாவது நூலை கலைஞர் ஏ.ரகுநாதனின் மூத்த புதல்வி வைத்தியக்கலாநிதி நிர்மலா ரகுநாதன் கரங்களில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் வைத்து வழங்கினார். தொடர்ந்து எனது கரங்களிலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், எழுத்தாளர் மல்லியப்புசந்தி திலகர், எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், அரசாங்க அதிபராகவும், இந்துக் கலாச்சாரத் திணைக்களப் பணிப்பாளராகவும், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் பணியாற்றிய கலைஞர் உடுவை தில்லை நடராஜா ஆகியோர் கரங்களிலும் நூல்களை வழங்கியிருந்தார். தொடர்ந்து 2022 ஏப்ரில் 24ம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்கம் வினோதன் அரங்கில் 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூலின் அறிமுகவிழா பூபாலசிங்கம் புத்தகசாலை அனுசரணையுடன் உடுவை தில்லை நடராஜா அவர்களின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் நடைபெற்றது. எழுத்தாளர், பதிப்பாளர் மல்லியப்பூ திலகர், சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசப், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர், தினக்குரல் பிரதம ஆசிரியர் ஆர். பி.ஹரன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா, கலாபூஷணம் கலைச்செல்வன், கலாபூஷணம் தம்பிஜயா தேவதாஸ், கலைஞர் ராஜசேகர் எனப்பலர் இந்த நூல் அறிமுகவிழாவில் கலந்து கொண்டமை கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களுக்கும், பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கும் சிறப்புச்சேர்த்தது. எஸ். கே.காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா இவற்றை இப்பொழுது நினைவுகூர வைக்கிறது. மிக நீண்ட இடைவெளிக்குப்பின்னர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை கொழும்பில் எமது பூபாலசிங்கம் புத்தகசாலையில் 2022ஆம் ஆண்டு சந்தித்தமை பெரும் மகிழ்வை ஏற்படுத்தியது. பரிஸ் நகரத்தில் அமுதவிழா கொண்டாடும் அவருக்கு எமது வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



**ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம்**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
கொழும்பு - யாழ்ப்பாணம்

# பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும் இது அமுதவிழா ஆண்டு!



அமுதவிழா கொண்டாடும் பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் இடம்பிடித்துள்ள பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும் ஓர் ஒற்றுமை உள்ளது.யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை வெளிவந்த காலத்திலிருந்து அதனுடன் பெரும் தொடர்புகளைப்பேணி வந்த நிறுவனம் பூபாலசிங்கம் புத்தகசாலை. 1945ம் ஆண்டில் மிகச் சாதாரண நிலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் யாழ்ப்பாணக் கல்விச் சமூகம், இலக்கியப் படைப்பாளிகள் சமூகம், அரசியல்வாதிகள், கலைஞர்கள் என எல்லாத்தரப்பினரையும் உள்வாங்கிப் பயணித்தது - பயணித்து வருகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும் இது அமுதவிழா ஆண்டாக அமைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் தளம் கொண்டிருந்த பூபாலசிங்கம் புத்தகசாலை மேலும் கிளைகள் பரப்பியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மூன்று நிலையங்கள், கொழும்பில் இரண்டு நிலையங்கள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் அமைந்த பூபாலசிங்கம் புத்தகசாலை மூன்று தடவைகள் தீக்கிரையானது. இது மிகுந்த வலியை ஏற்படுத்தியது. எரிக்க எரிக்க பூபாலசிங்கம் புத்தகசாலை எழுச்சி பெற்றது. யாழ்ப்பாணத்தில் கிளைகள் பரப்பியதோடு மட்டுமன்றி தலைநகர் கொழும்பிலும் கிளைகளை அமைத்து ஏற்றம் பெற்றுள்ளது.



# ஈழநாட்டுப் பத்திரிகை மரபின் முக்கிய கண்ணி: எஸ்.கே.காசிலிங்கம்.



பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் அமுதவிழாவை முன்னிட்டு இந்த வாழ்த்தினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஈழத்தின் தனித்துவமான ஒரு மரபினை 'ஈழநாடு' பத்திரிகை தொடங்கியிருந்தமை இலங்கை வரலாற்றில் பேசப்படவேண்டிய விடயம் ஆகும். இலங்கையின் காலி போன்ற சிங்களப்பகுதிகளில் தனித்துவமான, அந்தப் பிராந்தியத்திற்கே உரிய ஒரு பத்திரிகை வெளிவராத நிலையில், வட புலத்திற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகை உயர்ந்த இலட்சியங்களோடு ஆரம்பிக்கப்பட்டது. கே.சி.தங்கராஜா போன்ற மிகச்சிறந்த பண்பாளர்களுடைய மாண்பிலே உருவான பத்திரிகை தனது உயர்ந்த இலட்சியத்தைத் தொடர்ச்சியாகப் பேணி வந்திருக்கிறது என்பது மிக முக்கியமான விடயமாகும். கொழும்பிலிருந்து வெளிவருகின்ற பிரதான பத்திரிகைகள் ஓர் இலாப நோக்கத்தைக் கொண்டவையாக அமைந்துள்ளன. ஆனால், ஈழநாடு போன்ற ஒரு பிராந்தியப்பத்திரிகை இலட்சியத்தை மாத்திரமே இலக்காகக் கொண்டு வெளிவந்திருக்கிறது. ஈழநாடு ஆசிரிய பீடத்தில் எஸ்.எம்.கோபாலரட்ணம் முதல் இன்று எஸ்.எஸ்.குகநாதன் வரை ஒரு நீண்ட பத்திரிகை மரபினைப் பேணி வருகிறார்கள். யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான ஊடகவியலாளர்களை ஈழநாடு பத்திரிகை அறிமுகம் செய்திருக்கிறது. மிகக் காத்திரமான ஊடகவியலாளர்கள் இந்தப்பத்திரிகை வாயிலாக உருவாகியிருக்கிறார்கள். நீதியான செய்தித் தரவு, நியாயமான முறையிலே இருசாரார்களையும் ஏற்றுக்கொள்ள வைக்கும் வகையிலே பார்த்துப் பேசி அனுபவிக்க வேண்டிய கருத்தாடல் என்ற வகையிலே, செய்தியை உருவாக்குகின்ற ஊடகவியல் தர்மத்தை ஈழநாடு பேணி வந்திருக்கிறது. அந்த வகையில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் அந்த பத்திரிகையாளர் அணியிலே மிக முக்கியமான இடத்தை வகிக்கிறார். அவருடைய பத்திரிகை அனுபவங்கள் குறித்து அவர் எழுதிய 'என்னுள்..என்னோடு..' என்ற நூலினை பல ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனில் விமர்சனம் செய்துள்ளேன்.

அந்த நூல் 1967ல் அவர் பத்திரிகைத் துறையில் பணியாற்றிய காலத்தில் எத்தகைய நிலமைகள் இருந்தன? வரையறுக்கப்பட்ட வளங்களுக்குள்ளே எவ்வாறு செய்திகளைத் தேடித்திரட்டியிருக்கிறார்கள். புதிய செய்திகளை வாசகர்களுக்கு உடனடியாக வழங்குவதிலே எத்தகைய முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள் என்பதை அவரது ஊடகவியல் அனுபவம் புலப்படுத்துகிறது. கொழும்பிலே நேரடியாகத் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி, செய்தி உண்மைதானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் இது போன்ற வசதிகள் எதுவும் அற்ற நிலையில், அப்பொழுது மிகவும் பிற்பட்ட பகுதியாகவே இருந்த காலகட்டத்தில், குறிப்பாகப் பிராந்தியப் பத்திரிகைகளுக்கு எந்த மதிப்பும் வழங்கப்படாத வேளையில், கொழும்பிலிருந்து வந்த பத்திரிகைகளை மாத்திரமே நம்புகின்ற ஒரு கட்டத்தில், ஒரு பத்திரிகையினுடைய செய்திகளின் பலத்தை

வைத்து ஈழநாடு பத்திரிகையை உருவாக்குயிருக்கிறார்கள் என்றால், அதில் எஸ். கே.காசிலிங்கம் போன்ற பத்திரிகையாளர்களின் நேர்மையான செய்தி வழங்கல், அதனை வடிவமைக்கின்ற உயர்ந்த ஆசிரியர் குழாம் என்பன மிகப்பெரிய பங்கினை வகித்திருக்கின்றன.

எஸ்.கே.காசிலிங்கத்தின் என்னுள்..என்னோடு.. என்ற ஊடகவியல் பதிவு ஈழத்து ஊடகவியல் வரலாற்றில் 1960 காலப்பகுதி எத்தகைய ஊடகவியல் நிலமையைக்கொண்டிருந்தது ஈழம் என்பதை அவரது நூல் பதிவு செய்திருக்கிறது. ஊடகப்பரப்பில் நிலவிய பற்றாக்குறைகளுக்கு மத்தியிலே ஈழநாடு பத்திரிகையை எவ்வாறு முன்னெடுத்துச் சென்றிருக்கிறார்கள், அதிலும் மிகக் குறைந்த ஊதியத்திலே பத்திரிகையாளர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனாலும் பத்திரிகைத் தர்மத்தைப் பேரார்வத்துடன் பேணி வந்திருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கைக்கும் இலட்சியத்துக்கும் உகந்த ஒரு தொழிலாக ஏற்று ஓர் இலட்சியத்துடன் நடத்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாக எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் திகழ்கிறார். 'தீபம்' தொலைக்காட்சியில் பணியாற்றிய காலத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைக் கலையகத்துக்கு அழைத்து பத்திரிகைத்துறை சார்ந்த கருத்துப் பகிர்வை மேற்கொண்டிருக்கிறேன். அந்த நினைவுகளுடன், அவருடைய இந்த அமுதவிழா நாளில் சுக பலத்துடன் நீடுழி வாழ்ந்திட இனிதே வாழ்த்துகிறேன்.



**மு. நித்தியானந்தன்**
மேனாள் சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
கலை, இலக்கிய விமர்சகர் - லண்டன்





**காசிலிங்கம் அவர்களின் சகோதரன் காந்தி தம்பதி, காசிலிங்கம் அவர்களின் புதல்விகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் .**

**01.05.2025 –** France

# அமுதவிழா காணும் காசியருக்கு அன்புக்கினிய வாழ்த்துகள்!



ஈழத்துமக்களால் அதிகாலையே ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கும் நாளேடாக வெளிவந்து, இன்றுவரை மனங்களில் மறையாது வாழும் தின இதழ் 'ஈழநாடு'. அதுபோலவே அதன் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய எஸ்.கே.காசிலிங்கம் அவர்களும் இன்றுவரை அனைவராலும் அறியப்படுபவரே. தாயகத்தில் பத்திரிகையியல் சார்ந்த ஓர் அனுபவ அறிவை பெறும் நோக்காக ஈழநாடு நாளிதழின் செய்திநிருபராக (1972 - 1973) சில மாதங்கள் பணியாற்றியிருந்தேன். அப்போது செய்தி ஆசிரியராகப் பணியாற்றியவரும், சக பணியாளர்களால் மிகவும் மதிக்கப் பட்டவரும், பேசப்பட்டவருமான எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை கண்டு பேசியதில் அவர்மீதான மரியாதை மட்டுமே இருந்ததே தவிர நெருக்கமான தோழமை ஏற்படும்படியான சூழமைவு எமக்குள் அப்போது ஏற்பட்டிருக்கவில்லை. நிருபர்கள் சேகரித்துக் கொடுக்கும் செய்திகள் எதுவானாலும் அதனை வாசகர்களை ஈர்க்கும் வகையில் தலைப்பிட்டு சுவைபட வெளியிடுவதில் வல்லவராக திகழ்ந்தவர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். யாழ்.செயலகத்தில் வீட்டு வாரிய முகாமையாளரைச் சந்தித்து குருநகரில் புதிதாக இடம்பெறப்போகும் புதிய வீடமைப்புத் திட்டம் பற்றிய செய்தி ஒன்றினை அலுவலகத்தில் சேர்த்திருந்தேன். அது ஒரு சாதாரண செய்தியாகவே வெளிவரும் என்பதே எனது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், அதற்கு மாறாக என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் விதமாக மறுநாள் இதழின் பின்பக்கதில் சிறப்புச் செய்தியாக (Leading news) கவர்ச்சியான தலைப்போடு புதிய சொற் பிரயோகங்களின் இணைப்போடு அரைப் பக்கத்தில் அந்தச்செய்தி வெளி வந்திருந்தது. ஒரு சாதாரண செய்தி. அதுவும் ஒரு ஐயப்பாடான செய்தி அதற்கு இப்படி ஒரு மெருகூட்டலா? அதற்குக் காரணமானவர் மாலை நேர செய்தி ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களே என்று அறிந்தபோது எனது சம வயதினராய் இருந்தும் அவர்மீது மேலுமாய் மிகுந்த மரியாதையும் மதிப்பும் மனதுள் பதியம் பெற்றது. அதன் காரணமாகவே பாரிஸ் (France) மாநகரிலே மீண்டுமாய் இருவரும் அறிமுகமாகி இறுக்கமான ஒரு தோழமை எம்மிடையே ஏற்பட்டபோதும், அவரை நான் அதே மரியாதையுடன் “காசியர்” என்றும் அதற்குப் பதிலாக அவர் என்னை “அரியத்தார்” என்றும் அழைத்துக் கொள்வோம். ஈழநாடு நாளேடினூடாக மனதளவில் துளிர்விட்டிருந்த எமது தோழமையானது, பாரிஸ் மாநகரில் அவ்வப்போது நடைபெற்ற கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் நாம் சந்தித்து கொண்ட தருணங்களினால் மிகவும் நெருக்கமாகி பல்வேறு விடயங்களையும் மனம் விட்டு பேசி பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு உரிமைக்குரியவர்களானோம். அதனால் நாம் முன்னெடுக்கும் சமூக நலச் செயல்பாடுகளில் நான் அவரிடமும், அவர் என்னிடமும் ஆலோசனைகளைப் பரிமாறுவதிலும் தெரிந்திருக்காத விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாகவே அவை அமையலாயிற்று. காசியரிடம் என்னை மிகவும் கவர்ந்த, அவரிடமிருந்து கற்றுக் கொண்ட விடயம் தனது தனிப்பட்ட தொழில் சார்ந்ததாகவோ, அல்லது பிறர்நலம் சார்ந்ததாகவோ, அல்லது எவரது சமூகநலச் செயல்பாடுகளின் முன்னெடுப்புக்களுக்கு தோள் தந்து துணை நிற்பதாகவோ,





எதுவானாலும் ஒரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டு விட்டாரென்றால் அதை முழு மனதோடு, அக்கறையோடு செய்து முடிப்பதிலும் அதில் வெற்றிகாண்பதிலும் தனது கால நேரமற்ற உழைப்பை ஆற்றலை செலுத்துவதில் தயங்கவே மாட்டார். உழைப்பு, உழைப்பு அதில் வெற்றி வெற்றி இதுவே இன்றுவரை அவர் பலராலும் பேசப்படுபவராகத் திகழ்வதற்குக் காரணமாகும். இதற்குப் பல உதாரணங்களை நான் குறிப்பிட்டுச் சொல்லலாம். பாரிஸ் மாநகரில் இவரும், ஏனையவர்களும் இணைந்து தொடங்கப்பட்ட ஈழநாடு வார இதழ் வெற்றிகரமாக ஐரோப்பிய தமிழர்களுக்கு மிகவும் பயன்பாடுள்ள செய்திகளைத் தாங்கி வெளிவந்த வேளை அதன் நிர்வாகத்தில் ஏற்பட்ட சில கருத்து முரண்பாடுகள் காரணமாய் அதிலிருந்து தன்னை வெளியேற்றிக் கொள்ளவேண்டிய சூழமைவு காசியருக்கு ஏற்படலாயிற்று. ஆயினும் ஓய்ந்துபோகவோ, சோர்ந்து போகவோ விரும்பாதவர், மக்களுக்கு செய்திஇதழின் அவசியத்தை உணர்ந்தவராய் 'தமிழன்' வார ஏட்டினை தனது சொந்த முயற்ச்சியில் தனியொரு ஆளாய் வெளிக் கொணர்ந்தார். ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வாரா வாரம் ஒரு பத்திரிகையைக் கொண்டு வருவதென்பது எத்துணை கடினமானது, இரவு பகல் பாராது உழைக்கக் கூடியவரொருவராலேயே சாத்தியம் என்பதை அதில் களம் கண்டவர்களினாலேயே புரிந்துணர முடியும். தமிழன் இதழைத் தன்னை வருத்தி வெளிக்கொணர்ந்தாலும், ஆயிரக்கணக்கானோர் அதனைத் தேடிப்படித்து பயன்பெற்றார்கள் என்பதிலும், எழுத்தாளர் அகஸ்த்தியர், நாடக - திரைப்பட கலைஞர் ஏ.ரகுநாதன் போன்ற பேராளுமைகள், மற்றும் வளரும் படைப்பாளிகள் போன்றோர்க்கு அது களமாக அமைந்தது என்பதிலும் மகிழ்ச்சி கண்டவர் காசியர். பல நாடுகளுக்கு சிறப்பு விருந்தினர்களாகவும், எமது கலை இலக்கியச் செயற்பாடுகளுக்காகவும், நாம் இருவரும் பல தடவைகள் இணைந்து பயணித்துள்ளோம். அது போல பாரிஸ் மாநகரிலும் அடிக்கடி பயணித்தும், சந்தித்தும் பேசிக்கொள்வோம். அப்போதெல்லாம் அவர் ஈழநாடு பத்திரிகை அனுபவங்களை என்னோடு பகர்ந்து கொள்வார். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழினத்தை வழிநடத்த முன் வந்த தலைவர்களினிதும், தமிழ்க்கட்சிகளின் அரசியலையும், அவர்களின்



செயல்பாடுகளின் ஒளிவு மறைவுகள்,நன்மை தீமைகள், உண்மைகள், தந்திரோபாயங்கள், பிளவுகள், போராட்டங்கள், கருத்து முரண்பாடுகள் போன்றவற்றினையும், அதனால் தமிழினம் இழந்தது, பெற்றது என்பவையான தகவல்களை ஒரு பத்திரிகையாளனாக விபரிக்கும்போது கேட்பதற்கு வியப்பாகவும், விந்தையாகவும் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் மந்திர, தந்திர மாயாஜாலக் கதைகளைக் கேட்பதுபோல் சுவாரஸ்யமாகவும் இருக்கும். வெளியிலே முரண்பட்டு மோதுவதுபோல் முகமூடி போட்டுக் கொள்ளும் அரசியல் தலைவர்கள் உள்ளூர தங்கள் பதவிகளின் இருக்கைகளைத் தக்கவைப்பதற்காக தங்களுக்குள் ஒன்றுபட்டு ஆடும் ஆட்டங்களை சில சம்பவங்களினூடாக காசியர் தனக்கே சொந்தமான நகைச்சுவையோடு விபரிக்கும்போது அரசியல் தலைவர்கள்மீது ஆத்திரம் வருவதற்கு மாறாக அநுதாபமே தோன்றும். காரணம் அவர்களின் செயல்பாடுகளில் உள் நோக்கங்கள் எதுவானாலும் அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் இரவு பகல் பாராத கடின உழைப்பு. ஆதலால் அவை அனைத்தும் தமிழின



வரலாற்றில் பதியம் பெற வேண்டுமென்ற எண்ணமே என்னுள் எழும். மேலும் ஊடகங்கள் தங்கள் விற்பனைச் சந்தையை அதிகரிப்பதற்கு அந்தச் செய்திகளை அலங்கரித்து தங்களுடைய எண்ணங்களையும் மறைமுகமாக மாற்றித் திணித்து வெளியிடும் விதம் பற்றியும், ஈழநாடு நாளேட்டின் செய்தியாசிரியராக, பல தமிழ் அரசியல் தலைவர்களை செவ்வி கண்ட அனுபவங்களையும், பல உத்தியோகபூர்வமான அரசியல் நிகழ்வுகளில் நேரிடையாகக் கண்டு பெற்ற அப்போதய நிலைமைகளையும் காசியர் விபரிக்கும்போது அவருள் இருந்த ஊடக தர்மத்தினையும் அதன்மீதான ஆற்றலின், ஆளுமையின் வெளிப்பாட்டினையும் என்னால் உணரமுடிந்தது. "காசியர் இவையெல்லாம் உங்கள் மனதுக்குள்ளேயே சுமந்து கொண்டிருக்க வேண்டிய சாதாரண விடயங்களல்ல. அவசியம் இவற்றினை நீங்கள் ஒரு பதிவுக்குள் கொண்டு வரவேண்டும்.." என்பதான எனது ஆதங்கத்தை அப்போதெல்லாம் அவரிடம் வலியுறுத்தியதை எனக்கான ஒரு கடமையாகவே உணர்ந்தேன். வேறு சிலரும் இதனை அவருக்கு கூறியிருக்கக் கூடும் என்றே எண்ணுகிறேன். தினமும் ஒருதடவையாவது தொலைபேசியினூடாக நாம் பேசிக்கொள்வது, நலம் விசாரிப்பது எமது வழமையாக இருந்தது. அப்படி ஒருநாள் அவரிடமிருந்து வந்த அழைப்பு எனக்கு அதிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தந்தது. "அரியத்தார் நீங்கள் விரும்பியபடி பத்திரிகையாளனாக எனது அனுபவப் பக்கங்களை, நினைவாக மனதில் உள்ளவற்றை எழுதி முடித்துவிட்டேன். அதை நூல்வடிவமாக்க வேண்டியதுதான் எனது அடுத்த வேலை. அதற்கான தலைப்பையும் நீங்கள்தான் சொல்லவேண்டும். அதற்கான அணிந்துரையும் நீங்கள் எழுதவேண்டும்" என்று வாஞ்சையோடு கேட்டுக் கொண்டார். பூரணத்துவமான மன நிறைவு அவர் குரலில் வெளிப்பட்டது. எடுத்த ஒரு செயற்பாடு எதுவானாலும் சிரத்தையோடு செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர் என்பதற்கு அதனை ஒரு சான்றாகவே என்னால் பார்க்கமுடிந்தது. எதனையும் நாளை நாளை என்று சொல்லி நாட்களைப் பின்நகர்த்தும் பண்பினைக் கொண்ட எனக்கு அவரிடமிருந்து "நன்றே செய் அதை இன்றே செய்" என்ற பெரியோர் வாக்கினை பாடமாக கற்றுக்கொள் என்பது போன்ற உணர்வும் என்னுள்ளே எழுந்தது. தலைப்பைக் கூறுங்கள் என்று காசியர் கேட்ட சில நிமிடங்களிலேயே.. "அதுதான் காசியர், உங்கட மனதோட கொண்டு திரிந்த சுமையை இறக்கி வைச்சிட்டீங்க, அதைக் குறிப்பிடுற மாதிரி, "என்னுள் என்னோடு" என்று தலைப்பிடுங்கள். வாழ்த்துரையும் எழுதித் தருகிறேன்.." என்றேன். நூலுக்கான தலைப்பு அவருக்கும் மிகவும் பிடித்துப்போயிற்று. அடுத்ததாய் அவர்கேள்வி "அரியத்தார் அட்டைப் படத்திற்கு என்ன படம் போடலாம்..?" உங்களுக்கு நினைவிருக்கிறதா நான், நீங்கள், கந்தையா தேவமனோகரன் மூவரும் எனது இயக்கத்திலான யூலியஸ் சீசர் நாடகத்தை சுவிஸ் நாட்டில் ஆற்றுகைப்படுத்தும் நோக்கமாக அங்கு சென்றிருந்தபோது உங்களை ஒரு புகைப்படம் எடுத்தேனே நினைவிருக்கா? அந்த புகைப்படத்தை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள் ஏதாவது நல்ல தேவைக்கு இந்தப் படம் உதவும் என்று நானும் மனோவும் சொன்னோமே நினைவிருக்கிறதா? அந்தப் படம் இருந்தால் அதையே போடுங்கள் மிகவும் பொருத்தமாயிருக்கும்." என்றேன். அப்படியே அழகான பதிப்பில் காசியரின் 'என்னுள் என்னோடு' 2002ஆம் ஆண்டில் வெளிவந்தது. France, UK, Germany போன்ற நாடுகளில் மிகச் சிறப்பான முறையில் அதன் அறிமுக வெளியீடுகளைச் செய்திருந்தார்.





அந்த வெளியீட்டு நிகழ்ச்சிகளில் கூடுதலாக இன்னுமொரு சிறப்புமிருந்தது. “அரியத்தார் என்னுடைய நூல் வெளியீட்டுக்கு நீங்கள் ஒரு நாடகம் செய்தால் சிறப்பாக இருக்கும்..” கட்டாயம் நான் செய்வேன் என்ற முழு நம்பிக்கையோடு அவர் கேட்பதாகவே என்னால் உணரமுடிந்தது. நானும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதை மனதில் கொண்டு “செய்கிறேன் காசியர்” என்று ஒப்புக் கொண்டேன். எனக்குள்ளும் ஒரு கனவு இருந்தது. “நாளைய அறுவடைகள்” எனது எழுத்து இயக்கத்தில் முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் நடித்திருந்தார். அது போல நாடகர் ஏ. ரகுநாதன் அவர்களையும் நடிக்க வைக்க வேண்டுமென்பதே. இதனைக் காசியருக்கு தெரிவித்தபோது என்னை விடப் பன்மடங்கு மகிழ்ச்சி அவருக்கு. ஏ.ரகுநாதன் அவர்களை மனதில் வைத்து அவரின் பன்முக நடிப்பை வெளிக்கொணரும் வண்ணம் அடியேன் எழுதிய நாடகமே 'சிவிகை' (ஓராள் அரங்கு) 40 நிமிடம் தனி நடிப்பு. அவரே ஓர் இயக்குனர், எத்தனையோ அரங்கக்களரிகளைக் கண்டவர். எனது இயக்கத்தில் நான் எழுதிக் கொடுத்த பிரதியில் ஒரு சொல்கூட பிசகோ, மாற்றமோ இல்லாமல் அப்படியே பேசிநடித்தது, அவர் கற்று வந்த நாடக ஆசான்களான கலையரசு சொர்ணலிங்கம், சாணா (லண்டன் கந்தையா சண்முகநாதன்) ஆர். பேரம்பலம் ஆகியோரை எனது நினைவுக்கு கொண்டு வந்தது. அந்தக் கல்லூரியிலேயே நானும் கற்று வந்தவன் என்ற பெருமிதமும் அவரால் என்னுள் வெளிப்பட்டது. மேலே நான் குறிப்பிட்டது போல என்னுள் என்னோடு அறிமுக வெளியீடு செய்த Paris, London நகரங்களிலும், Germany, Swiss போன்ற நாடுகளிலும் நாடகர் ஏ.ரகுநாதன் அவர்களின் ஆளுமை மிக்க நடிப்பில் எனது சிவிகை நாடகமும் அரங்கேறி அனைவரினதும் பாராட்டைப் பெற்றது. அதேவேளை சிலரின் திறனாய்வுக்குட்படுத்தப்பட்ட அந்த நூல், சில நிகழ்வுகளின் பதிவுகளில் ஆண்டு, திகதிகள், மற்றும் சிலருடைய பெயர்கள் சரியாகக் குறிப்பிடப் படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. இருப்பினும் அவர்கள் அதனைக் குறிப்பிட்டு எழுதிய முறையில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை. ஆனால் காசியர் அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டவராய் அதன் அடுத்த பதிப்பில் விட்ட தவறுகளைத் திருத்தி வெளியிட்டார். என்னுள் என்னோடு தமிழில் மட்டுமன்றி ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் மொழிமாற்றம் செய்து வெளியிடப் பட்டது பாராட்டுக் குரியது. அதனை இன்றைய தலை முறையினர் தேடிப்படிப் படிப்பதன் மூலம் இலங்கை சுதந்தரமடைந்த பின்னர் தமிழர்களுக்கான அரசியலையும், அரசியல் தலைவர்களையும், ஊடக நெறிகளையும் அறிந்துகொள்ள முடியும், அறிந்து கொள்வது அவசியம் என்பதனையும் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறாக காசியர் தனக்காக மட்டும் வாழாமல் மனித நலன் சார்ந்த பணிகளையும் இணைத்துக் கொண்டு வாழ்பவர். Paris மாநகரில் மட்டுமன்றி பல ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெறும் கலை, இலக்கிய, சமூக நல நிகழ்வுகளுக்கு தலைமை ஏற்க அவர் அழைக்கப்படுவதே அவர் ஆற்றிவரும் பணிகளுக்கான சான்றுகளாகும். அவருடைய பொதுநலப் பணிகளுக்கு பக்கபலமாக நின்று உதவுபவர், அவரைத் தன்னோடு என்றும் சுமந்து நிற்பவர் காசியரின் துணைவியார். இருவரினதும் இன்புற்ற வாழ்வும் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு பாடமாகும். அமுத விழா காணும் காசியர், இனிய இணையாள், மக்கள் பேரச் செல்வங்களுடன் இறையருள் பெற்று நீடிய வாழ்வு வாழ வாழ்த்துகிறேன். இதயம் நிறைந்த அன்போடு காசியருக்கு எனது அமுத விழா வாழ்த்துகள்.



நாடகநேசர்,

**எம்.அரியநாயகம்** - (பிரான்ஸ்)

# ஈழத்துப்பத்திரிகைத்துறை வரலாற்றில் நிலைபெற்றவர் எஸ்.கே.காசிலிங்கம்



உலகில் பத்திரிகை தான் ஊடகத்துறை என முதலில் மக்களுக்குப் பரீட்சயமானது. நாம் வாழும் பிரான்ஸ் தேசத்தில் அடைகலம் கோரி வந்த 40 ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்திலிருந்து சமூக ஊடகங்கங்களின் ஆக்கிரமிப்பு ஏற்படும் வரை பிரெஞ்சு மக்களின் கைகளில் பத்திரிகைகள் காணப்பட்டதை தினமும் நாம் அவதானித்தோம். ஒவ்வொரு பத்திரிகைகளும் தமது நிலைப்பாட்டுடன் மக்கள் விவகாரங்களில் மிகச்சிறந்த ஆளுமையைச் செலுத்தின. ஆட்சிப்பீடத்தை கேள்விகளால் துளைத்தெடுத்தன. செழுமையான கருத்துக்களைப்பதிவாக்கின. இவை இப்பொழுதும் தொடர்கின்றன. ஆனால், பொதுமக்களைப்பொறுத்த வரையில் பத்திரிகை வாசிப்பு என்பது அருகி விட்டது. சமூக ஊடகங்களின் வருகையும் அவற்றின் ஆக்கிரமிப்பும் எழுத்தூடகங்களில் பெரும் வீழ்ச்சியைத்தோற்றுவித்துள்ளது. ஈழதேசத்தில் 1959ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து 'ஈழநாடு' பத்திரிகை வெளிவந்தது. கே.சி.தங்கராஜா, கே.சி.சண்முகரட்ணம் சகோதரர்கள் முயற்சியில், முதலீட்டில் இந்தப்பத்திரிகை வெளிவந்தது என்பது வரலாற்றுப்பதிவு. இந்த 'ஈழநாடு' பத்திரிகையில் அப்பொழுது பணியாற்றிடப்பலர் சென்றார்கள், இணைந்தார்கள், செயலாற்றினார்கள். 'ஈழநாடு' பத்திரிகை தமிழ் மக்களிடம் பெரும் வரவேற்புப்பெற்றது. ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றை, யாழ்ப்பாணத்தின் வரலாற்றை 'ஈழநாடு' பத்திரிகை தாங்கி நின்றது. பல்வேறு இடர்களைச்சந்தித்தது. 'ஈழநாடு' இப்பொழுதும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகிறது. எஸ்.எஸ் குகநாதன் 'ஈழநாடு' இன்று வெளிவருவதற்குக்காரணகர்த்தாவாக இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அன்று ஈழநாடு வெளிவந்த காலத்தில் சிறுவனாக, இளைஞனாக எனது பருவகாலம் கடந்தது. பிரான்ஸிற்கு வந்ததன் பின்னர் ஈழநாடு பத்திரிகை இங்கும் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' பத்திரிகைக்காரியாலயத்தில் பணியாற்றிவர்களான எஸ்.கே.காசிலிங்கம், எஸ்.எஸ்.குகநாதன், இரத்தினம் கந்தசாமி ஆகியோர் இங்கும் இயங்குவதை அறிய முடிந்தது. 'ஈழநாடு' பத்திரிகை அன்றைய யாழ்ப்பாண நினைவுகளை புலம்பெயர்வாழ்விலும் பிரதிபலித்தது. சிலகாலம் பரிஸில் இருந்து 'தமிழன்' பத்திரிகை வெளிவந்தது. அதன் காரியாலயம் அமைந்திருந்த சூழலில் அப்பொழுது என்னுடைய மொழிபெயர்ப்பு அலுவலகமும் இருந்தது. நாள்தோறும் எனது அலுவலகத்திற்குச் சென்று பணியாற்றுகையில் மிகவும் சுவாரஸ்யமான விடயங்கள் அருகில் தமிழன் பத்திரிகைக்காரியாலயத்தில்

நடைபெறும். தமிழன் பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தவர் ஈழநாடு எஸ். கே.காசிலிங்கம் அவர்கள். ஒரு பத்திரிகைக்காரியாலயத்தில் நிகழும் விடயங்கள் எவ்வளவு சுவாரஸ்யமானவை என்பதை சாதாரண பத்திரிகை வாசிப்பாளர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை.

ஆசிரியர் காசிலிங்கம் அவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார். பரிஸில் தமிழன் வாராந்தப்பத்திரிகையாக வெளிவந்தது. தினமும் விடயங்கள் தேடப்படும். செய்திகள், கட்டுரைகள் தேடிச் சேர்க்கப்படும். பலர் அங்கு வருகை தருவார்கள். அதில் என்னை அந்நாட்களில் கவர்ந்து கொண்டவர் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் எஸ்.அகஸ்தியர் அவர்கள். 'மானிட தரிசனங்கள்' என்ற தொடரை அப்பொழுது தமிழன் பத்திரிகையில் அவர் எழுதி வந்தார். வாரத்தில் இரண்டு தடவைகள் தமிழன் பத்திரிகைக்காரியாலயத்திற்கு அவர் வருகை தருவார். மானிட தரிசனங்கள் தொடரின் அந்த வாரத்துக்குரிய பகுதியை எழுத்துருவில் எடுத்து வருவார். அதனை ஆசிரியரிடம் அவரே நேரடியாகக் கையளிப்பார். ஆசிரியருடன் உரையாடிச்செல்வார். அப்பொழுது என்னையும் "தம்பி வாசு எப்படி என்று கேட்பார்". சிறிது நேரம் என்னுடனும் உரையாடிச் செல்வார். பெரும்பாலும் இலக்கிய விடயங்களே பேசிக்கொள்வோம். ஒரே வாரத்தில் எழுத்தாளர் அகஸ்தியர் அவர்கள், இரண்டாவது தடவையும் வருவார். அவரது எழுத்துப்பிரதி தட்டச்சுச் செய்யப்பட்ட பின்னர் அதில் எழுத்துப்பிழைகள் சரி செய்து கொள்வார். ஒரு படைப்பாளியையும் அவரது படைப்பில் அவர் செலுத்தும் கவனத்தையும் பாடமாக்கிக்கொண்டேன். இது போன்ற பல்வேறு விடயங்கள் அங்கு நிகழ்ந்தேறும். அவற்றையெல்லாம் பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா வேளையில் நினைவில் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. மொழி, இனம், உலகிற்குப் பொதுவானது. இனம் வாழ்வதற்கு மொழி அவசியம். ஆகவே, மொழி பேசப்பட வேண்டும், எழுதப்பட வேண்டும், வாசிக்கப்பட வேண்டும். இவ்வாறு மொழியின் பணிகளை முன்னெடுப்பதில் ஊடகங்கள் பெரும் பணியாற்றுகின்றன. குறிப்பாகத் தமிழ்மக்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் நாடுகளில் தமிழ்ப்பத்திரியாளர்கள் இப்பணியை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அதில் மூத்த பத்திரிகையாளரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது பணி கவனத்துக்குரியதாகின்றது. அவர், புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் நாட்டிலும் பத்திரிகையாளரானார். அவரது பத்திரிகைத்துறைப் பணியை அருகிருந்து அவதானித்தேன். இவ்வகை அர்ப்பணிப்புடன் இணைந்த அரும்பணிகளை எல்லோரும் செயற்படுத்த முடியாது. அவரது உன்னதமான பணியினால் ஈழத்துப்பத்திரிகைத்துறை வரலாற்றில் நிலைபெற்றுள்ளார். அவருக்கு அமுதவிழா நல்வாழ்த்துகள்.



**க.வாசுதேவன்**

பிரான்ஸ்

ஈழமுரசு

## வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்

தமிழ் ஊடகத்துறையில் ஒரு அடையாளமாகத் திகழும் ஐயா எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் 80வது அகவையில் அவரை வாழ்த்துவதில் ஈழமுரசு பெருமகிழ்வடைகின்றது. ஆயுதம் தாங்கிய ஈழவிடுதலைப் போராட்டம் கருக்கொள்வதற்கு ஒரு சில ஆண்டுகள் முன்பாக தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்தவர், நீண்ட நெடிய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் காலம் முழுவதும் ஊடகவியலாளராகப் பயணித்தவர் என்ற பெருமைக்கு உரியவர். தனது ஊடகப் பணியைத் தாயகத்தில் தொடர முடியாமல், புலம்பெயர்ந்து பிரான்சிற்கு வந்தபோதும் அந்தப் பணியினது கனதியை அறிந்து இங்கும் தனது ஊடகப் பணியைத் தொடர்ந்தவர். தனது ஊடக அனுபவங்களை ஊடகத்தில் மட்டும் பதிவு செய்திடாது அதனை எதிர்காலத் தலைமுறைகள் அறிந்து பயன்பெறும் வகையில், அவற்றில் சிறந்த தனது கட்டுரைகளை தேர்ந்தெடுத்து நூல்களாக்கி மக்களிடம் கையளித்திருக்கின்றார்.

தனது இருபது வயதுகளில் எழுத்துப் பணியைத் தொடங்கி சுமார் அரை நூற்றாண்டுகள் அந்தப் பணியில் ஓய்வின்றிச் செயற்பட்டிருக்கின்றார். ஊடக நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், கலை நிகழ்வுகள் என பலவற்றிலும் பங்கேற்று தனது அனுபவங்களை உரைகளாகவும் வெளிக்கொண்டுவந்திருக்கின்றார்.தமிழ் ஊடகத்துறையில் ஒரு ஜாம்பவானாகத் திகழும் ஐயா எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, ஊடகத்துறையில் பயணிப்பவர்களுக்கு மேலும் மேலும் ஒரு மூத்த வழிகாட்டியாக விளங்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

**ஈழமுரசு**
பிரான்ஸ்



**80வது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது உறவுகள், நன்பர்கள்**
**01.05.2025 – France**



# நூற்றாண்டு கடந்தும் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்!

காசிலிங்கம் அண்ணருடனான சந்திப்பு 40 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. முதலில், அவர் எனது மனைவியின் உறவினர் என்ற வகையில்தான் அந்த சந்திப்பு நிகழ்ந்தது... அன்றிலிருந்து இன்றுவரை.. அந்த மனிதருடனான உறவு எந்த வித சலனங்களோ, உரசல்களோ இல்லாமல் சீராகத் தொடர்ந்த வேளையில் உருவான 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகை பெரும் நெருக்கத்தை எமக்குள் உருவாக்கியது. காசிலிங்கம் அண்ணரை பத்திரிகையாளனாக அறிந்த காலத்திலிருந்தே பிரான்சில் ஒரு பத்திரிகையை வெளியிடவேண்டும் என்ற அவா என் மனதில் நடைமுறைக்கு வராத கனவாகவே தொடர்ந்தது. இயலுமை இருந்தாலும், ஒரு பத்திரிகையை வடிவமைக்கும் அனுபவம் என்னிடம் இருந்ததில்லை. அதை நடைமுறைப்படுத்த அப்போது எனக்கு ஒரே திசைகாட்டியாக இருந்தவர் காசிலிங்கம் அண்ணர் மட்டுமே. ஆனாலும், எனது தீவிரமான தமிழீழ அரசியல் நிலைப்பாடு காரணமாக உடன்பாடு எட்டப்படாமலேயே காலங்கள் கடந்து சென்றன. 1991 இல் ஓர் அதிசயம் நிகழ்ந்தது போலவே, ஈழநாடு பத்திரிகை வெளிவரும் தருணம் கிட்டியது. பிரான்சுக்கு ஒரு வருடம் முன்னதாகவே வந்து சேர்ந்திருந்த யாழ்.ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றி, பல வருட அனுபவம் கொண்ட திரு.குகநாதன், திரு.கந்தசாமி ஆகிய இருவரும் என்னை சந்திக்க வந்திருந்தனர். பத்திரிகை அனுபவங்களையும், அந்தத் துறையில் அவர்கள் கொண்டிருந்த அவாவினையும் புரிந்து கொண்ட அமரர் காராளபிள்ளை ஆசிரியர் அவர்கள், இருவரையும் என்னிடம் அனுப்பி வைத்தார். அந்த சந்திப்பினால், 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையாக 1991 சித்திரை முதல் திகதியில் மலர்ந்தது.






பத்திரிகை ஆரம்பிப்பது என்ற முடிவு எட்டப்பட்டதும் என் நினைவுக்கு வந்தவர் திரு. காசிலிங்கம் அவர்களே. அவரையும் எம்முடன் இணைத்துக்கொள்வது என்று முடிவு செய்ததன் பயனாக மீண்டும் ஒரு பத்திரிகையாளனாக திரு. காசிலிங்கம் பாரிசில் வலம்வந்தார். "ஒரு பத்திரிகையாளனாக இருக்கும்போது, எனது இரு பொக்கற்றுக்களுக்குள்ளும்

இரு துப்பாக்கிகள் இருப்பது போல் துணிச்சல் என் நெஞ்சில் இருக்கும்" என அவர் அடிக்கடி சொல்வார். அந்த நிமிர்வை அவர் மீண்டும் பெற்றார். ஒரே இடத்தில் பணியாற்றும்போது சிறு உரசல்களும், முரண்பாடுகளும் ஏற்படுவது சாதாரணமானதே. திரு.குகநாதனுக்கும், திரு. காசிலிங்கத்துக்கும் இடையே உருவான, மனக்கசப்பு அவர்களிடையே விரிசலை உருவாக்கியது. அதன் காரணமாக திரு.காசிலிங்கம் அவர்கள் ஈழநாடு பத்திரிகையிலிருந்து ஒதுங்கிக்கொண்டார். அதன் பின்னர், 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியரானார். கணனிகளின் வருகையும், கை தொலைபேசியின் பாவனையும் பத்திரிகையின் தேவையை வெகுவாகவே பாதித்தது. அதன் காரணமாக பிரான்சிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளும் காலாவதி ஆகிவிட்டன. ஆனாலும், அதையே தம் வாழ்நாள் பணியாக நம்பிய பத்திரிகையாளர்களால் அவர்களது நினைவுகளிலிருந்து விடுபட முடிவதில்லை. திரு. காசிலிங்கம் அவர்களும் அந்த நினைவுகளுடன்தான் இப்போதும் பயணிக்கின்றார். அவருக்கு வயது 80 என்பது ஆச்சரியமானதுதான். அவரை நேரில் பார்க்கும் எவரும் அதை நம்பமாட்டார்கள் என்ற வகையில், தனது இளமையை பேச்சிலும், நடையிலும் நினைவூட்டுகின்றார்.



அவருக்கு வயது 80 என்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சியான தருணம் என்றாலும், அவர் இன்னும் பல வயதுகளைக் கடக்கும் ஆற்றலுடன்தான் இருக்கிறார். அமுத விழா என்பது திரு.காசிலிங்கம் அவர்களுக்கு சாதாரணமே. அவர் நூற்றாண்டு கடந்தும் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**சி. பாலச்சந்திரன்**
ஈழநாடு - தமிழாலயம்
பிரான்ஸ்





**80வது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் தம்பி காந்தியும், மனைவி மஞ்சுளாவும்.**
**01.05.2025** - France





நாடகர் ஏடகர் ஊடகர்
ஏ.சி.தாசீசியஸ் அவர்களுடன் எஸ்.கே.காசிலிங்கம்

# வாழும் போதே வாழ்த்தி மகிழ்தல் அமுத விழா காணும் பன்முக எழுத்தர் எஸ். கே. காசிலிங்கம்

* நான்கு தசாப்த பூர்வீக வாழ்வு
* நான்கு தசாப்த ஐரோப்பியப் புலம்பெயர்வு வாழ்வு
* கண்டங்கள் கடந்த பயணங்கள் என ஓர் அனுபவப் பொக்கிசம்



1959 இல் யாழ் நகரில் வாரம் இரு முறை வெளிவரும் செய்தி இதழாகத் தோற்றம் பெற்று, 1961இலிருந்து செய்தி நாளிதழாகவெளிவந்து ஒரு தனித்துவத் தடம் பதித்த வரலாற்றைக் கொண்டது 'ஈழநாடு' பத்திரிகை. இலங்கையில் கொழும்பு தவிர்ந்து வேறொரு நகரில் வெளிவந்த முதல் தினசரி இதுவென வரலாற்றில் இடம்பெற்றது. 1984 பெப்.11வது நாளில் இதன் 25வது ஆண்டு நிறைவை ஒரு மலராக 56 பக்கங்களுடன் வெளியிட்டு ஓர் ஆவணமாகப் பதிவு செய்திருக்கிறது. ஈழநாடு என்பது ஏதோவொரு பெயர் அல்ல, அது இலங்கையில் வாழும் பூர்வீகத் தமிழர்களின் வாழ்விட அடையாளச் சொல். இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்விளைவாக பெரிய பிரித்தானியா தன் காலனிய ஆட்சிப் பொறிமுறையில் பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தது. இதனால் இலங்கை போன்ற நாடுகளில் செயற்பட்ட சுதேசியக் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன. இது 1948வது ஆண்டில் இலங்கையின் சுதந்திரம் எனவாகியது. இலங்கைத் தீவில் சுமார் 500 ஆண்டுகள் நீடித்த ஐரோப்பிய காலனிய ஆட்சி, அந்த ஆட்சியாளர்களால் தமது நலன்கருதிய 'கொழும்பு' தலைநகர அதிக்காரக் குவிமைய நிர்வாக ஒருங்கிணைப்புள்ளாகி இருந்தது. பல்லின, பல மொழி, பல மத, பன்மைத்துவப் பண்பாட்டு வழக்கம் கொண்டமக்களை ஓர் அலகாக இணைக்கும் அரச நிர்வாக இயந்திரமாக இது மாற்றமடைந்திருந்தது. பிரித்தானியக் காலனிய நலன் கருதி ஏற்பட்ட ஒற்றை அரச நிர்வாக அரசியல் அமைப்பு அதிகாரம் இலங்கைப் பெரும்பான்மை நலன்சார் பாராளுமன்ற சனநாக அரசு எனவாயிற்று.

இதனால் சிறுபான்மை இனமக்கள் படிப்படியாக தொடர் அடக்குமுறைகளுக்கு உள்ளாயினர். முதல் ஆட்சியிலேயே மலையகத்தை பசுமைத் தோட்டமாக்கி இலங்கையின் தேசிய வருமானத்தைப் பெருக்கிய இந்திய வம்சாவளித் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களது வாக்குரிமையை நீக்கி நாடற்றவராக்கியது பௌத்த சிங்கள பெரும்பான்மைநல இலங்கை பாராளுமன்ற சனநாக ஆட்சி. இதனைத் தொடர்ந்து தந்தை செல்வா தலைமையில் தொடங்கிய 'தமிழரசுக் கட்சி' ஒரு சமஷ்டிக் கட்சியாக (Federal Party) தமிழ்பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெறத் தொடங்கியது.

1950களில் நடைமுறையாகிய இலங்கையின் கிழக்கே கல்லோயாவில் தொடங்கப்பட்ட திட்டமிடப்பட்ட பெரும்பான்மை நலக் குடியேற்றத் திட்டங்களும், தனிச் சிங்கள ஆட்சிமொழித் திட்டமும் வடக்குக் கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களைக் கடுமையாகச் சினமடையத் தூண்டின. தொடர்ந்து பெரும்பான்மை நல அரசு அதிகார மேலாதிக்க ஆட்சி 1958 தமிழ் – சிங்கள இனக் கலவரமாக வெடிக்க வைத்தது. இலங்கை வரலாற்றில் இது ஒரு வடுவாகப் பதிவுற்றது. இந்த இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் பல நூற்றாண்டுகளாக வசித்து வருகிறார்கள். பல்வேறு மன்னர்களது ஆட்சிகள் நடைபெற்ற போதிலும் 'இன'க் கலவரங்கள் முன்பு நடைபெற்றிருக்கவில்லை. ஐரோப்பியக் காலனிய ஆட்சியர் நிலைபெற்றதன் பின்னர்தான் இலங்கையின் முதலாவது மதக் கலவரமாக 1915 இல் பௌத்த - இசுலாமியக் கலவரம் நிகழ்ந்த வரலாறை மேலோட்டமாகக் கடந்து போக முடியாது. இந்த இசுலாமியர்கள் தமிழ் பேசுவோராய் இருந்ததை இங்கே வேதனையுடன் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த இலங்கை அரசியல் பின்புலச் சூழலில்தான் ஈழநாடு இதழ் யாழ்ப்பாணத்தின் செய்தி இதழாக உருவாகியதையும் இரு ஆண்டுகளில் செய்தி நாளிதழாகத் தடம் பதித்ததையும் நோக்கலாம்.

ஈழநாடு தொடங்கப்பட்ட காலம் முதல் தமிழ்பேசும் மக்கள் முன்னிறுத்திய சமஷ்டிக் கொள்கை ஈடுபாடுகளுடன் வெளிவந்ததைக் காண முடியும். 50கள் 60களில் செய்திப் பத்திரிகையை அதுவும் தலைநகர் தவிர்த்த ஒரு நகரத்தில் நடாத்துவதென்பது சாதாரண செயல் அல்ல மிகச் சவாலானது. பத்திரிகைகள் நாளாந்தம் காலையில் வெளிவரும். கொழும்புப் பத்திரிகைகளும் அதிகாலை தொடருந்துதினூடு வந்தடைந்துவிடும். இதற்கேற்ப புதிய செய்திச் சேர்ப்பும், அதன் உறுதிப்படுத்தலும், உரிய நிழற்படங்கள் தருவிப்பும், பத்தி அளவுக்கான செய்தித் தொகுப்பும், இதனை உரிய முறையில் அச்சுக் கோர்த்து பக்கமமைத்து, பிரதியெடுத்து, பிழைகள் திருத்தி சரி பார்த்து, உரிய முறையில் செய்தி இதழ் அச்சேறும் ஆணையைப் பெறும். இவை அனைத்தும் பலரது கூட்டுழைப்பிலான சங்கிலித் தொடர் செயற்பாட்டாளர்களால் நாளாந்தம் நடைமுறையாகும்.

அந்தக் காலகட்டம் வால்பு றேடியோக்கள், மிகக் குறைவான கம்பி வழியான தொலைபேசிகள், தகுநல் மொழிபெயர்ப்புகளுடன் விவேகமாகச் செயற்படும் உதவி ஆசிரியர்கள், முழு நேர – பகுதி நேர செய்தியாளர்கள், அச்சுக்கோப்பாளர்கள், படிதிருத்துநர்கள், விளம்பரச் செயலர்கள், நிர்வாகச் செயலர்கள், மிகக் குறைவாக நாடெங்கும் பரவி இருந்த செய்தியாளர்கள் இவர்கள் கொடுக்கும் பத்தி எழுத்துத் தகவல்களை பரிமாறும் பேருந்து நடாத்துநர்கள் என மணிக்கூட்டுப் பல்சக்கர சுழற்சியில் இயங்கும் மனிதர் குழாமாக நாளாந்தம் செயற்படுவார்கள். இரவு பகலாகத் தொடரும் இத்தகைய கூட்டு உழைப்புபணியாளர்களது குடும்ப ஒத்துழைப்புகளுடன் பிணையலாகி

மக்கள் மத்தியில் தனியான மரியாதையைப் பெற்றிருந்தது. யாழ் நகரில் முன்னெப்போதும் இல்லாதிருந்த இந்த சிலந்தி வலை பின்னல் கூட்டுஅசைவு, அக்கால உயர்தர மாணவ - இளைஞர்கள் மத்தியிலும் கல்லூரி ஆசிரியர்கள் மத்தியிலும் அரச நிர்வாகத்தினர் மத்தியிலும் மதிப்புக்குரியதாக இருந்தது. 'நானும் ஒரு பத்திரிகையாளனாக வரவேண்டும் எனக் கனவு கண்ட 60 - 70கள் இளைஞர்களை யாழ் நகரில் கண்டிருக்கிறோம்' ஈழநாடு செய்தி இதழ் தமிழ்பேசும் மக்களது இதயத்துடிப்போடு பயணிக்கும் ஈழ எழுத்துகளாகப் பதிவுற்றன. இதனால் கொழும்பு ஆட்சி அதிகார அலகின் சங்தேகப் பார்வைக்குள்ளாகிய பயணத்தையே தொடர்ந்தது. காலி முகத்திடல் போராட்டம், புதிய அரசியல் சாசனம், மொழிவாரித் தரப்படுத்தல், 1974 தமிழாராய்ச்சி மாநாடு, இனக் கலவரங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டம், கோகிலாம்பாள் வழக்கு, ட்றயல் அற் பார் வழக்கு, ஈழத்து கலை இலக்கிய திரைப்பட வெளியீடுகள், 70களின் கடைசியில் தொடங்கிய படுகொலைகள் எனச் சூடான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்த்த வரலாற்றை ஈழநாடு கொண்டிருக்கிறது. அவ்வப்போது தணிக்கைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாகியது. 1981 மே 31, யூன் 1 நாட்களில் யாழ் நகரைச் சாம்பலாக்கிய யாழ் நூலக எரிப்பு கூடவே பூபாலசிங்கம் புத்தகசாலையையும் ஈழநாடு செயலகத்தையும் யாழ் புதிய சந்தையையும் எரித்து நாசமாக்கியதை யாராலும் இலகுவில் கடந்து விட முடியாது. இதன் பின்னர் 1987 இந்திய அமைதிப்படை வருகையின் போதும் அதன் பின்பு 1988இல் கருவி தாங்கிய இளைஞர்களாலும் தாக்குதலுக்குள்ளானது. ஈழ மக்களின் புலப்பெயர்வோடு 90களில் ஈழநாடு புலம்பெயர்ந்ததையும் பொருத்தப்பாடுடன் நினைவுகூரலாம்.

அக்கால செய்திப் பத்திரிகையாளர்கள் தாம் வாழும் நாட்டின் வரலாறு, அரசியல், புவியியல், சூழலியல் சமூகவியல் அடிப்படை அறிவு கொண்டவர்களாக இருப்பார்கள். இவற்றை உள்வாங்கிவராய் எஸ்.கே. காசிலிங்கம், ஈழநாடுவின் ஆரம்ப கால எதிர்கொள்ளல்களில் முகம்கொண்ட உதவி ஆசிரியப் பணியை ஆற்றியிருக்கிறார். வதந்திகள் பரப்பாது அறமுடைய வாய்மையைத் தகவல்களை தகுந்த முறையில் வெளிப்படுத்தும் 'துணிச்சல்' எனும் சொல் பத்திரிகையாளர்களது செயற்பாடுகளுக்கு முக்கியமானது. நாளிதழ்களில் இவர்களது பணி முகங்கொடுத்து எதிர்கொள்ளப்படுபவை. தீர்க்கமான மனத்திடம் இருப்போரால் மட்டுமே இத்தகைய பணியை வாழ்நாளில் தொடர முடியும். 'காசிலிங்கம்' எனும் பெயர் எதனைச் சுட்டுகிறது? தேடல் நிறைந்ததுதானே மனித வாழ்வு. இதுவொரு கர்ண பரம்பரைக் கதையாகப் பதிவுற்றதை கண்டேன். சீதையை மீட்டுக் கொண்டு இராமரும் லக்சுமணனும் அயோத்திக்கு மீள்கையில் இராமனின் மனம் குற்ற உணர்ச்சிகளால் துவளும் நிலையில் தள்ளாடியது. இதனை சீதை அறிந்து கொண்டார். பொதுவாக மனிதக் குற்றங்கள் மூன்று வகையில் நிகழ்கின்றன.

1. உடம்பால் பிறருக்குத் தீங்கு விளைவித்தல் – இது சாட்சிகளால் நிரூபணமாகித் தண்டனையைப் பெற்றுத் தரும்.
2. வாய்ச் சொற்கள், தகவல் வெளிப்பாடுகள் மூலம் பிறருக்குத் தீங்கு விளைவித்தல் – இதுவும் தகுந்த ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட்டால் தண்டனையைப் பெற வைக்கும்.
3. மனத்தால் பிறருக்கு தீங்கு விளைவித்தல் – இதனை யாராலும் அறிய முடியாது. தன்னெஞ்சே சுட்டெரிக்கும், அமைதியை இழக்கச் செய்யும், மன அழுத்தத்திற்கு உள்ளாக்கும். இதனைத் தீர்க்க வழியேது? தனது மனத்துள் சிக்குண்ட கசடுகளை நீக்க மனிதர்கள் படாதபாடு படுகிறார்கள்.

வெற்றியென இலங்கையில் இருந்து மீண்ட இராமருக்கும் இந்த மன அழுத்த நிலையே இருந்தது. அவதிப்பட்ட கணவனின் நிலையை தன் அகக் கண்களால் சீதை உணர்ந்து கொண்டார். மண்டோதரியையும் அவளது பாதுகாவலர்களையும் கொன்று தீர்த்தது இராமரைப் பதைபதைப்புக்கு உள்ளாக்கி தூக்கத்தை தொலைத்துள்ளதை அவளால் உய்த்துணர முடிந்தது. எனவே இதன் பரிகாரமாக சிவலிங்க பூசை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தாள். அவ்வேளையில் அவர்கள் பயணித்த நகரில் கருங்கற்கள் இல்லை. ஆகவே லிங்கத்தை எப்படி உருவாக்குவதெனத் தவித்தார்கள். இதனைக் கண்ட அனுமான் லிங்கத்தைப் பெயர்த்துவர வட திசையிலுள்ள காசி நோக்கிப் பயணமாகினான். தன் கையே தனக்குதவியென சீதை அவ்விடத்தில் பெற முடிந்த ஆற்று மணல்களைத் திரட்டி 106 லிங்கங்களை உருவாக்கினாள். இதனோடு அங்கிருந்த இராமலிங்கத்தோடு 107 லிங்கங்களை பூசிக்கும் பிராத்தனை தொடங்கியது.

வடக்கே காசியில் இருந்து பெரும்பாடுபட்டு கருங்கல் லிங்கத்தை சுமந்து வந்த அனுமானுக்கு இதனைக் காணுற்றபோது கடும் சினம் ஏற்பட்டது. சீதை உருவாக்கிய பிரதம லிங்கத்தை தனது வாலால் பெயர்த்தெடுக்க முயற்சித்தான். அந்தோ பரிதாபம், அனுமானது வால் அறுந்துபோனது. இதன் எதிர் விளைவாக வட திசை நோக்கிப் போய் வீழ்ந்தான். இதைக் கண்ட இராமர், அனுமானது கோரிக்கையின் நியாயத்தை ஏற்று அவனது லிங்கத்தையும் பூசிக்க நிறுவி களநிலையைச்சாந்தப்படுத்தினார். இதனால் மன நிம்மதி பெறுவோர்க்கான 108 லிங்கங்களைச் சுற்றி வரும் பூசிப்பின் பின் தெற்கு நோக்கிய 'பர்வதவர்த்தினி அம்பாள்' தரிசனம் மேற்கொண்டால் உரிய பரிகாரம் பெறலாம் என்ற நம்பிக்கை தோன்றியதாம்.

இந்த அனுமான் தருவித்த சிறப்பு பரிகார லிங்கம் 'காசிலிங்கம்' எனும் பெயரைப் பெற்றது. இந்தப் பூசித்தல் சிவராத்திரியாக அமையப் பெற்றது. இது நடந்த அவ்வூர் 'பாபவிநாசம்' எனப் பெயரானது என்கிறது இக்கதை.
நம்முன் நடமாடும் எஸ்.கே.காசிலிங்கம் முன்னெழுத்துகளுடன் வாழும் ஒரு மனிதர். துருதுருவென அசையும் இவருக்கு அகவை 80. ஆச்சரியமாக இருக்கிறது.

யாருக்காகவும் காலம் காத்திருப்பதில்லை. புவியின் தொடர் அசைவு நாளாக, வாரமாக, மாதமாக, ஆண்டுகளாக கரையும் நேர அசைவுகளைக் கொண்டதாய் மனிதர்களால் அளவிடப்படுகிறது. இவரது அறிமுகம் நான் வளர்ந்த இன்னொரு இல்லமாகிய எஸ்.எம்.கோபாலரத்தினம் - குயின்சி குடும்பம் வழியில் கிடைத்தது. இது ஈழநாடு ஆசிரியராக விளங்கிய கோபு அவர்களது இல்லம். இளைய துடிப்பான வாலிபனாக காசிலிங்கம் ஈழநாடு இதழில் இணைந்த தொடக்க காலத்தில் விவேகமும் வேகமுமான எழுத்துப் பதிவும் செயலும் ஈழநாடு குழுமத்தினரால் பெரிதும் ஈர்ப்புக்குள்ளானது. அந்தச் சிறு பிராயத்தில் இவரது இதயக் கோளாறு எனும் தகவலால் துவண்டு போனோராய் ஈழநாடு குடும்பத்தினர் அனைவரையும் மிகுந்த சோகத்தில் ஆழ்த்தின. இது ஒரு சம்பவம் அல்ல. இதனை எனக்கு பகிர்ந்தவர் அக்கால சிறுவனாக இருந்த கபிலன் ஆகிய ஈழத்தின் வாழ்நாள் பத்திரிகையாளர் கோபுவின் மகன். இந்த எஸ்.கே.காசிலிங்கம் அதிலிருந்து மீண்டெழுந்து தொடர் பகல் இரவுகள் பாராது ஈழநாடு இதழில் வழங்கிய செயற்பாடுகளை வெறுமனே கடந்துசென்றுவிட முடியாது. இரவு முழுவதும் விழிப்போடு விழித்திருந்து பத்திரிகையை அச்சேற்றிய பின் தூங்கு முஞ்சினனாய் ஊர்காவற்றுறையில் இருந்து அனைலை தீவு நோக்கி லோஞ்சில் பயணிக்கையில் இவரோடு பயணித்த செய்தி இதழும் இதன் வாசகர்களது உரையாடலும்வஒன்றா இரண்டா? இவரால் இறுதி செய்த தலைப்புகளின் வசீகரச் செய்திகள், இதமாகச் செதுக்கி உரிய பத்தியாக வடிவமைத்த தகவல்கள், வாசகர்களின் முதன்மைப் பார்வையைப் பெற்றதை பெருமிதத்தோடு உள்வாங்கி ஏதும் பேசாது பயணித்த ஒரு பிரயாணியாக இவர் இருந்ததை யாரால் கற்பனை செய்ய முடியும்? அவ்வேளையில் இதனை "தனது எழுத்து எனக் கூறி" உரிமைகொள்ள முடியுமா? எழுத்துகள் நிலைத்து நின்று பலராலும் வாசிப்புக்குள்ளாவன, ஆராய்ச்சிகளுக்குள்ளாவன. இது யாருடையது என்பதை பொது வாசகர்கள் நோக்க மாட்டார்கள். கவிதை, கதை, நாவல், கட்டுரை போன்ற இலக்கிய எழுத்துகள் பிசுரமாகும் போது அவர்களது பெயர்கள் சுட்டப்பட்டு வாசகர்களால் அறிய முடியும். ஆனால் பொதுவான பத்திரிகை உதவி ஆசிரிய எழுத்துகளும் செதுப்புற்று சீராகும் பத்திகளும் செய்தி இதழ்களின் தொடர் வருகையில் முக்கிய ஆதாரமாக அமையும் மனித உழைப்பின் அர்ப்பணிப்புக்கு உரியவை. இன்று வரை பெயரிடாது வெளிவரும் செய்தி இதழ் எழுத்தர், அரச நிர்வாக வெளியீட்டு எழுத்தர், வானொலி, தொலைக்காட்சி எழுத்தர், கட்சி -



இயக்க - சங்க இதழ் பிரசுர எழுத்தர் பணிகள் அர்ப்பணிப்புக்குரியன. இத்தகைய பணியாளர்களை பொதுச் சமூகம் கண்டுகொள்வதில்லை. இவர்களது பணிகள் பற்றி பொதுப்புத்தி அறிவு சமூகத்திற்கில்லை. ஆயினும் இன்றைய சமூகத்தொடர்பாடல் வலைகளூடான எழுத்துகளை பொது வாசகர்களால் இனங்காண முடிகிறது. இன்னும் ஏன் மக்களின் தொன்மத் தொடர்ச்சியாய் வரும் நாட்டார் பாடல்கள், பழமொழிகள், செவி வழிக் கதைகள், காவியங்கள் போன்ற இன்னோரன்ன கதையாடல்கள் யாருடையன எனப் பதிவுகளே கிடையாது. இவற்றை உருவ வழிபாட்டாலான பக்தி இலக்கிய காலத்தின் பின் தோற்றமுற்ற பதிவு ஏற்றல்கள் கருத்து முதல்வாத பதிவுகளாக்கிவிட்டன. ஆனால் இவை அனைத்துமே மனிதரால் மனித உழைப்பால் தோன்றியவை. இன்றைய மானுவிடயல் அறிவுத்துறை தொகுத்து பகுத்து ஆராய்கிறது. இதனை தொன்மம் தொடர்ச்சி நீட்சியென வரலாறெங்கும் கடத்திவருவது 'தமிழ்'. வாழும் தமிழாக இயங்க ஊன்றுகோலாக இருக்கும் இந்த தமிழ் எழுத்தர்களை வாழ்த்தி மகிழ்வோம்! பிரான்சு மண்ணில் ஈழத்தமிழரோடு புலம்பெயர்ந்து ஈழநாடு மறு உருப்பெற்றது. பூர்வீக ஈழநாடு இதழ் குழுமத்தில் பங்காற்றிய எஸ்.கே.காசிலிங்கம், எஸ்.எஸ்.குகநாதன், இ.கந்தசாமி பிரான்சில் தரிப்பிடம் பெற்றிருந்தனர். இங்கு தமிழன் இதழ் வெளிவர பெரும்பாடுபட்டிருக்கிறார் எஸ்.கே.காசிலிங்கம். அவரது தொகுப்பு நூலில் இவை பதிப்புற்றிருக்கின்றன. இவர் பூர்வீகத்திலும் புலம்பெயர்விலும் பல்வேறு சமூகப் பணிகளாகத் தொடரும் இவரது வாழ்வு கூடவே எழுத்துப் பணிகளுடன் அமைந்திருக்கிறது.

பிரான்சில் 1980களில் குடியேறிய இலங்கைத் தமிழரது வாழ்வு தனியாகப் பதிவுற வேண்டும். பிரான்சில் குடியேறி பல்வேறு தனித்துவமான முன்கை முனைப்புகளை மேற்கொண்டவர்களை காய்தல் உவத்தலின்றி பதிவாக்க வேண்டும். முன்னனுபவமற்ற பிரெஞ்சு மொழிப்புலக் குடியேற்றம் பலரது வாழ்வை புடமிட்டது. ஒற்றை அறையில் அறிமுகமில்லாத பலர் கூடி உறங்கும் வாழ்வைத் தந்தது. ஆயினும் பிரெஞ்சுக்கு தமிழ் புதிய ஆசிய மொழி அல்ல. அவர்களது காலனிய ஆட்சியில் தமிழர்கள் கூலிகளாக கண்டங்கள் கடந்த பயணிப்பை பெற்றிருக்கிறார்கள். பிரான்சில் நாம் வரும் முன்னரே பாண்டிச்சேரி வழிவந்த பிரான்கோத் தமிழர்கள் இங்கு மூன்று நான்கு தலைமுறையினராக வாழ்கிறார்கள். எஸ். கே. காசிலிங்கம் தனது பெயருக்கேற்ப பலரது மனப்பாரங்களை இறக்கி இலேசாக்கும் பணிகளையும் ஆற்றியிருக்கலாம். அமுத விழா மலர் பலரது ஆக்கங்கள் இடம் பெறும் தொகுப்பாக அமையும். சலங்கை கட்டிய கால்களும் மேடை ஏறிய கலைஞர்களும் எழுத்தாணி பிடித்த கைகளும் ஒருபோதும் ஓயாது. அர்ப்பணிப்பான தமிழ் எழுத்துப் பணியை பூர்வீகத்திலும் புலம்பெயர்விலும் தொடரும் எழுத்தர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் வாழும் போதே வாழ்த்தி மகிழும் நற்செயலை முன்னெடுக்கும் அனைவரோடு நானும் கரம்கோர்த்து பாராட்டி வாழ்த்துகிறேன். தனது வாழ்வுப் பயணத்தின் ஒரு குறுக்குவெட்டு அலகாக என்னுள்..என்னோடு.. எனும் நூலை தமிழிலும் ஆங்கிலத்திலும்

பிரெஞ்சிலும் வெளியிட்டு இருக்கிறார் பன்முக எழுத்தர் எஸ்.கே.காசிலிங்கம். இவரது எண்ணிலடங்கா அனுபவங்கள் திறந்த மனதோடு பகிர வழி காண்போம்!

**வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை**
(குறள் 872 - பகைத்திறந் தெரிதல்)



**க. முகுந்தன்**
பிரான்ஸ்





**காசிலிங்கம் அவர்களின கனடா உறவு தர்ஷினி, லண்டன் உறவுகள் டொக்ரர் ஆதித்தன் தம்பதி, திருமதி . கனகசபை மங்கையற்கரசி ஆகியோர்.**
**01.05.2025 –** France

# அன்றும்.. இன்றும்..


ஈழநாடு

டட்லி புதிய பிரதமர்?

மக்களின் தீர்ப்பு


விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.04.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 109 பக்கங்கள் : 12

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்ததை அறிந்து வெளியிடுவோம்!

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

- கையகப்படுத்திய காணிகளை விடுவிப்போம்
- திஸ்ஸ விகாரை பிரச்னையை தீர்ப்போம்!
- புலம்பெயர்ந்தவர்கள் நாட்டுக்கு திரும்ப வேண்டும்
- வடக்கு கடல் வளத்தை பாதுகாக்க கடற்படைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

"காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களையும் வெளிப் படுத்துவோம். அரசாங்கத்திடம் - பொலிஸாரிடம் - இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்துவோம்.", என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ், முப்படைகளில் தமிழர் இணையவேண்டும்!

ஜனாதிபதி அழைப்பு

மக்களின் கருத்தை அறிந்தே காற்றாலை மின்சார திட்டம்!

மன்னாரில் ஜனாதிபதி உறுதி

யாழில் சர்வதேச மைதானம் அமைப்பதற்கு முயல்கிறோம்

ஜனாதிபதி தெரிவிப்பு

பிள்ளையானின் கைதால் ரணில், கம்மன்பில கலக்கம்

மன்னார் - இராமேஸ்வரம் படகு சேவை விரைவில்!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

சூத்திரதாரிகள், உதவியோர் யாரென வெளிப்படுத்துங்கள்!

யாழில் மணல் கொள்ளை, கொலைகளில் ஈடுபட்டோர்மீதும் நடவடிக்கை எடுப்போம்!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்". 1959ல் "ஈழநாடு" முதல் பிரதியைப் பார்த்ததும் யோகசுவாமிகள் இவ்வாறு கூறி ஆசீர்வதித்தார்.**

ஈழநாடு 1981ல் எரியூட்டப்பட்டது. மீண்டும் வெளிவந்தது. போர்ச்சூழலுக்குள் சிக்குண்டது. மீண்டும் எரியுண்டது. அத்தோடு நின்று போன ஈழநாடு பத்திரிகையின் வரலாறு 12.09.2019ல் இருந்து தொடர்கிறது. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் ஈழநாடு பத்திரிகை உலகெங்கும் மின்னிதழாகவும் கிடைக்கிறது.

இன்றைய ஈழநாடு நிறுவனத்தின் நிர்வாகம்:

திரு.எஸ்.எஸ்.குகநாதன் - நிர்வாக இயக்குநர்,

திரு.ராஜன் சண்முகரத்தினம் - இயக்குநர்,

திரு.எஸ்.மகாலிங்கசிவம் - இயக்குநர்.



# அமுதவிழா காணும் ஈழநாடு எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள்.

'ஈழநாடு காசிலிங்கம்' இந்தத் தலைப்பு உங்களுக்கு ஒரு மயக்கத்தைத் தரலாம். ஆனால், என்னால் இப்படித்தான் பதிவு செய்ய முடிகிறது. காரணம், இவரது பெயரை முதன் முதலில் இப்படித்தான் கேட்டேன். “ஈழநாடு காசிலிங்கம்”

நான் பிறக்கும் முன்னரே யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பிறந்து விட்டது. பாடசாலை மாணவனாக இருக்கும் பொழுது ஈழநாடு பத்திரிகையை வாசிக்கத் தவறியதில்லை. காரணம் நான் கல்விகற்ற யாழ். மத்திய கல்லூரியில் உள்ள நூலகத்திலும் சரி, கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திலும் சரி ஈழநாடு பத்திரிகையை வாசிக்கும் வசதிகள் கிடைத்திருந்தன. அதற்குக் காரணமும் உண்டு. 1981ம் ஆண்டு இரண்டு தடவை எனது நிழல் படம் ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமானது. 1981ம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரியில் ஜனாதிபதி பதக்கம் பெற்ற சாரணர் நிழல் படமும், அதே ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு 4 சாரணர்களுடன் நானும் சென்றபோது எடுத்த நிழல் படமும் பிரசுரமாகியிருந்தன. அந்தப்பத்திரிகை நறுக்கு இன்றும் என்னிடம் பாதுகாப்பாக இருக்கின்றது. அதனால்தான் என்னவோ திரு. காசிலிங்கம் அவர்களுடனான தொடர்பு 1990 களின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தொடர்கிறது. தமிழன் பத்திரிகையில் பணிபுரிந்தது முதல் இப்பொழுது வரை அவருடனான உறவு நீடித்துக் கொண்டிருக்கின்றது. அவரும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிள் மூலம் மட்டக்களப்பு சென்று திரும்பிய யாழ். மாவட்ட திரி சாரணர்கள். இடமிருந்து வலமாக எஸ். கிருபானந்தன், து சிறீமோகன், செ. தேவரஞ்சன், ஆர் சிறீதரன், அ. ராஜு ஆகியோரை இப்படத்தில் காண்க.

1981 யாழ்ப்பாணம் எரிந்தது. யாழ்.நூலகம் எரிந்தது. யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் அவர்களின் வீடு எரிந்தது. யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை எரிந்தது. யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் எரிந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஒரே ஒரு நாளாந்தப்பத்திரிகை என்ற பெருமை பெற்றது ஈழநாடு. யாழ்.இந்துக்கல்லூரி அதிபரான என்.சபாரெட்ணம் அவர்கள் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியிருந்தார். அப்பொழுது அவர் எழுதிய ஆசிரியத் தலையங்கங்கள் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப்பெற்றன. நாட்டின் போர்ச்சூழலால் புலம்



ஸ்ரீதரன்

கிரிஷாந்த்

இந்தியாவிலுள்ள புத்த காயா என்னுமிடத்தில் இன்று ஆரம்பமாகும் 9 ஆவது தேசிய ஜம்போரியில் பங்கு கொள்வதற்காக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த சாரணர் உபதலைவர் செல்வன் இராசையா ஸ்ரீதரன், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியைச்சேர்ந்த செல்வன் கிரிஷாந்த் ஆகியோர் கடந்த வாரம் இந்தியா பயணமானார்கள். செல்வன் ஸ்ரீதரன் சாரணிய சேவையில் ஜனாதிபதி விருது பெற்றவர் என்பதும் செல்வன் கிரிஷாந்த் சாரணருக்கான அதிஉயர் பட்டியான பச்சைப்பட்டியைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(யாழ். அலுவலக நிருபர்)

பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்து வரும் காலகட்டத்தில் அச்சுப்பதிப்புத்துறையிலே ஈடுபாடு கொண்டு அதனையே தொழிலாக்கிக்கொண்டேன். 1991ம் ஆண்டு பிரான்ஸில் 'பரிஸ் ஈழநாடு'வெளிவந்தது. அன்று முதல், யாழ்ப்பாணத்திலிருந்து இன்று வெளிவரும் ஈழநாடு வரை வாசித்து வருகிறேன். 'பரிஸ் ஈழநாடு' இயக்குநராக எஸ்.கே.காசிலிங்கம் அவர்களும், ஆசிரியராக எஸ்.எஸ்.குகநாதன் அவர்களும், பிரதான முகாமையாளராக சிவகுரு. பாலச்சந்திரன் அவர்களும் செயற்பட்டு பரிஸ் ஈழநாடு வெளிவந்துகொண்டிருந்தது. ஒரு நாள், எஸ்.கே.ராஜென் ஒரு சந்திப்புக்கு வருமாறு அழைத்தார். அந்தச்சந்திப்பில் இவர் தான் "ஈழநாடு காசிலிங்கம்" அவர்கள் என அறிமுகப்படுத்தினார். அந்தச் சந்திப்பு 'தமிழன்' பத்திரிகையில் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்தியது. வாரம் முழுவதும் சேகரிக்கும் விடயங்கள் தமிழன் அக்காவால் தட்டச்சு செய்யப்பட்டுவிடும். என்னால் வடிவமைப்பு செய்யப்பட்டு பிரதி எடுத்தபின் எஸ்.கே.ராஜென் அவர்களால் அந்த பிரதிகள் அனைத்தும் பத்திரிகை வடிவமாக்கப்பட்டு பத்திரிகை வெளிவருவதற்கு முதல் நாள் 24 மணி நேரத்தில் அவை பத்திரிகையாக வடிவம் பெறும். (இன்றைய கணணி யுக வடிவமைப்புகள் இல்லாத காலம்) வடிவமைக்கப்பட்ட பத்திரிகை 200 கிலோ மீட்டர் தூ ரம் எடுத்துச் செல்லப்பட்டு அடுத்த 3 மணி நேரத்தில் பத்திரிகையாக வெளிவரும். வாரம் தோறும் இந்த 24 மணி நேரத்தில் ஆசிரியர் காசிலிங்கம் அவர்கள் ஈழநாடு பற்றி ஆயிரமாயிரம் கதைகள் சொல்வார். எந்தவித சோர்வுமின்றி எங்களுடன் உரையாடியபடியே செய்திகளை வழங்கிக் கொண்டிருப்பார். செய்திகள் தரும்பொழுது 2 கொலம், 3 கொலம், 4 கொலம் என வகைப்படுத்தி வழங்குவார். ஏன் இவ்வாறு என்று கேள்வி எழுப்பினால், அதற்கான விடையை மிகத்தெளிவாக விளக்குவார். ஒரு செய்தித்தலைப்பிடுவதில் இவ்வளவு இருக்கிறதா என்ற வியப்பு ஏற்படும் பொழுது யாழ்ப்பாணத்தில்



அந்த ஈழநாடு பத்திரிகையில் எவ்வளவு ஆளுமையானவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை ஊகித்துக்கொள்ள முடிந்தது. ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய பெரும் ஆளுமையாளர்கள் கோபு, சபா ஆகியோரின் பத்திரிகைப்பணிகள் பற்றி கூறிக்கொள்வார். நிருபர்கள், ஒப்பு நோக்குனர்கள், துங்காதிருக்கத் தேனீர் பரிமாறும் செல்லையா அண்ணை பற்றியும் சொல்வார். இரவு ஒரு மணி இரண்டு மணியளவில் எங்களுக்கு தூக்கம் வரத் தொடங்கும். அப்போது நானும் எஸ்.கே. ராஜெனும் “செல்லையாண்ணை எங்கயெண்டு தெரியேல்லை” என்று கதைப்போம். உடனடியாக அவரே நாங்கள் தூங்காதிருக்க தேனீர் தயாரித்துக் கொண்டு வந்து தருவார்.

தமிழன் பத்திரிகையில் பணிபுரிந்த வேளையில் அவருடன் லண்டன், சுவிஸ், ஜேர்மனி ஆகிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றேன். இலங்கையில் அனலைதீவில் திரு. காராளபிள்ளை மாஸ்ரரின் வீட்டிற்கு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் என்னையும் எனது நண்பனையும் அழைத்துச் சென்று திரு. காசிலிங்கம் அவர்கள் வாழ்ந்த வீட்டைக் காட்டினார். அதிலிருந்து அவருக்கு ஒரு நிழல் படத்தையும் எடுத்து அனுப்பியிருந்தேன். அதுவும் மறக்க முடியாத ஒன்று. இன்னும் நிறைய விடயங்கள் அவருடன் பழகியதை எழுதலாம். திரு. காசிலிங்கம் அவர்கள் இன்னும் 20 வருடங்கள் நோய் நொடியின்றி வாழ்ந்து நூற்றாண்டு விழாவினையும் கொண்டாடி மகிழ மனம் திறந்து வாழ்த்துகின்றேன்



**இரா.சிறிதரன்**
ஸ்ரீ பாரதி அச்சகம்
பரிஸ்




**இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் அண்ணனுடன் காசிலிங்கம் தம்பதி.**

# பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை வாழ்த்துவது வரம்.



தாயக மண்ணின் வேரை அறுத்து கடல் கடந்து ஓரத்தில் வாழத் தொடங்கிய போதும் மண்ணையும் மக்களையும் தமது மொழியையும் மறவாது புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்குப் பலம் சேர்த்த பலரில் அண்ணண் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் பெயரும் முன்னிலையில் இருக்கும் என்பது கண்கூடு. தாயகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றியவர். அப்பத்திரிகை பல அடக்குமுறைகளுக்குள் சிக்கிய போதும் நின்று நிலைபெற்றவர். காலவோட்டத்தில் கரை ஒதுங்கிய தேசத்தில் தமிழன் என்ற அடையாளத்தை இழக்காமல் 'பரிஸ் ஈழநாடு' தோற்றம் பெற முன்னணி வகித்தவர். பின்னர், பரிஸில் 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியராகிப் பணியாற்றியிருக்கிறார். 'என்னுள் என்னோடு' நூலின் ஆசிரியர். 'ஓர் ஒப்பனை இல்லாதமுகம்' நூலின் தொகுப்பாசிரியர். பத்திரிகைகளில் வெளியான பல படைப்புக்களின் சொந்தக்காரரர். நூல்வெளியீடுகளுக்குத் தலைமை தாங்குவதோடு வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கின்றார். இவருடைய பேச்சினை இரசித்து கேட்டவர்களில் நானும் ஒருவன். பேச்சில் நகைச்சுவையும் கலந்துவரும். எமது நகைச்சுவை நாடகங்களுக்கு இவர் இரசிகர் என்பதும் எமக்குப் பெருமை தரும் விடயமாகும். இத்தகைய சிறப்பு மிக்க மனிதர்கள் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதில் பேரானந்தமே. சிலருக்கு தமிழால் பெருமை. தமிழுக்கு அண்ணண் எஸ். கே.காசிலிங்கம் அவர்களால் என்றுமே பெருமை. அமுதவிழா நாயகன் அண்ணன் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை இறையாசிகளுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.



பிரியமுடன்,
**தயாநிதி தம்பையா**
பிரான்ஸ்



காசிலிங்கம் அவர்களின் மருமகள் பாப்பா கரன் தம்பதி (லண்டன்), உறவினர் இளங்கோ (கண்ணன்), சாந்தி நடராஜா ஆகியோர் . 01.05.2025 – France



சிவா - முகுந்தன்

# காலம் எழுதிய கவிதை ஈழநாடு



ஈழத்தின் புகழ்பெற்ற ஊடகவியலாளர் எஸ்.கே.காசிலிங்கம் என்ற பெயரைக்கேட்டதும் பிரான்ஸிலிருந்து வெளிவந்த 'பாரிஸ் ஈழநாடு' தான் முதலில் நினைவுக்குள் வரும். சற்று பின்னோக்கிச் சென்றால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு நினைவுக்குள் வரும்.இந்த இரண்டினதும் ஆடுகளங்கள் வேறு வேறாக இருந்தாலும், இந்த இரண்டிலும் சம்பந்தப்பட்ட சிலரில் எஸ்.கே.காசிலிங்கம் முதன்மையுடன் தோன்றுவார். காரணம் அவரது இடையறாத முயற்சி. பொதுவாக 'ஈழநாடு' என்றதும், யாழ்ப்பாணத்தில் அது நெருப்பால் சந்தித்த துயர்மிகு சம்பவங்களே பலருக்கு நினைவுக்கு வரும். ஆனால், எனது நினைவுகளிலும் வாழ்விலும் ஈழநாடு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை வாழ்வோடு இணைத்துப்பார்ப்பதே இந்த மலரின், இந்தப்பக்கங்களுக்கு வலுவூட்டும் என நினைக்கிறேன்.

அக்காலத்தே நமது ஊரான வல்வெட்டித்துறைச் சந்தியில் மூலைக்கடை போல இருந்தது கத்தசாமி பேப்பர் கடை. அங்கே எல்லாப்பத்திரிகைகளும் விற்காமல் கிடக்க, ஈழநாடு மட்டும் வந்தவுடன் ஒரு பிரதி கூட இல்லாமல் விற்பனையாகியது. பணம் கொடுத்துப்பத்திரிகை வாங்கிப் பழக்கமில்லாத என் தாயார் சில்லறையைத் தந்து அதிகாலையே “ஈழநாடு வாங்கி வா” என விரட்டி விடுவார். ஒரு நாள் கூட என்னால் ஈழநாடு வாங்க முடியாமல் போய்விட்டது. யாரோ ஒருவர் வாங்கிய 'ஈழநாடு' ஒவ்வொரு வீட்டிலும் கிணற்றடியால் மாலை வரை பல வீடுகளுக்குச் சூறாவளியாகச் சுற்றும்.

அக்காலத்தே ஆனந்த விகடனில் மணியன் எழுதிய இதயவீணை என்ற தொடர் நாவலும் இப்படிக் கிணற்றடியால் ஆனந்தவிகடனை ஊர்க்கோலம் போக வைத்திருந்தது. ஈழநாடு இப்படி வேகம் பெற என்னகாரணம்? யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கோகிலாம்பாள் கொலை வழக்குச் செய்தி ஈழநாடு பத்திரிகையில் தான் சுடச்சுடவெளியாகிக் கொண்டிருந்தது. அந்த வழக்கில் அனல் பறக்க வாதாடிக்கொண்டிருந்தவர் காலம் சென்ற அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். கள்ளக்காதலனுடன் சேர்ந்து ஐயரான தன்கணவர் காசிலிங்க சர்மாவைக் கொன்றாள் கோகிலாம்பாள் என்று பெண்கள் கூட்டம் கூட்டமாக நின்று பேசியது கேட்டது. இது தான் உண்மையா? இதுதான் அவர்களுக்கு விளங்கியதா? சிறுவனான என்னால் அதைப்புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், அன்றைய

யாழ்ப்பாணச் சமுதாயத்தின் கிடுகு வேலிகளை இந்த கோகிலாம்பாள் வழக்கு தீ மூட்டியது. அன்றைய யாழ்ப்பாணம் கோகிலாம்பாளுக்கு எதிராக நின்ற போதே ஓர் உண்மை தெரிந்தது. கோகிலாம்பாளிடமும் ஏதோ ஒரு நீதி இருந்திருக்க வேண்டும், என்பது தான். பின்னாளில் இலங்கை அரசியல் மேடைகளைப் பார்த்த போது அங்கு தமிழரசுக்கட்சியின் பிரச்சாரப்பீரங்கியாக இருந்தவர் அ.அமிர்தலிங்கம். கோகிலாம்பாள் கொலைவழக்கு அவருக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்திருந்தது. அவரைவிட அறப்படித்த ஜி.ஜி.பொன்னம்பலம், தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் வரை பல திறமைசாலிகளைத் தாண்டி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றினார்.

ஓர் ஊடகத்தால் ஒரு தலைவனை உருவாக்கலாம் என்ற உண்மையை ஈழநாட்டின் எழுத்தும் எடுத்துக்காட்டியுள்ளது. தொடர்ந்து யோசனைகளை வளர்த்தால் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தால் ஏன் அவருடைய இலக்கை அடைய முடியாமல் போனது? இந்த நிகழ்வு கோகிலாம்பாள் என்ற பெண்ணின் தரப்பில் இருந்த நீதி மறைக்கப்பட்டு விட்டதோ? என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. அ.அமிர்தலிங்கத்தின் வாதாட்டத் திறனின் முன்னால் ஒரு பெண் தோற்றுப் போய்விட்டாளா? என்ற எண்ணங்களையும் ஏற்படுத்தியது. இது தான் நம் ஈழநாடு என்று தான் தாங்கி வந்த செய்திகளால் சொல்லிக் கொண்டுமிருந்தது. அவ்வளவு தானா அடுத்த கட்டம், தீயில் மூழ்கிய ஈழநாடு பத்திரிகையைப் பரிஸிற்குக் கொண்டுவந்து விட்டார்கள். இனி தீ மூட்ட முடியாதென்று மனம் திருப்திப்பட்டது. ஆனால், பரிஸிலும் 'பாரிஸ் ஈழநாடு' அலுவலகம் தீயில் எரிந்தது என்பது வரலாறு. வெளியே மூட்டப்படும் தீ கண்ணுக்குத் தெரியும். ஆனால், எரியாத தீ ஆபத்தானது. அது நெருப்பின்றி, புகையின்றி எரியும். அதனைப் பாரிஸில் ஈழநாடு சந்தித்தது. 'ஈழநாடு' இறுதியில் நமக்குச் சொன்ன செய்தி. நாம் வெளிப்புறம் எரியும் நெருப்பை மட்டுமே பேசி, உட்புறம் எரியும் நெருப்பை கோட்டை விட்டுவிட்டோம் என்பது தான். இந்த இரண்டு நெருப்புக்களிலும் நின்று காலத்தின் வெள்ளத்தில் நீந்தியவர் தான் நமது மூத்த ஊடகவியலாளர் எஸ். கே.காசிலிங்கம் அவர்கள். அவருடைய 'என்னுள் என்னோடு' நூலைப்படித்தால் இதனைப் புரிந்து கொள்ளலாம். ஈழநாடு என்பது வெறும் பத்திரிகையல்ல அது வரலாறு. அதில் வந்த செய்திகள், அவற்றைப் புரிந்து கொண்ட விதம், அதனால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றம் என அத்தனையையும் ஒன்றாகக் காண்கிறேன்.

சமீபத்தில் மூளாயில் அ.அமிர்தலிங்கத்திற்குச் சிலை வைக்கப்பட்டது. அங்கே அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் சிலை அருகே அருமை நண்பர் ஈழநாடு எஸ்.எஸ்.குகநாதனும் நின்றார். அவரைப் பார்த்தபொழுது ஈழநாடு என்ற பத்திரிகை கணப்பொழுதில் காலமாம் பெரு வெள்ளத்தோடு சலசலத்து ஓடியது. இலங்கையின் வட புலத்தில் 66 ஆண்டுகளுக்கு முன்னரான வரலாற்றை இன்றும் 'ஈழநாடு' பத்திரிகையாக அவர் நகர்த்திக் கொண்டிருக்கிறார். இப்படிப் பல கோணங்களில் ஈழநாடு பற்றிச் சிந்திப்பேன். அப்பொழுது நினைவில் ஊர்க்கோலம் போகும்

ஈழநாடு பத்திரிகையாளர்களில் நமது அயலூரவரான அண்ணன் ஈ.கே.ராஜகோபால் அவர்களையும், எஸ்.கே.காசிலிங்கம் அவர்களையும் நான் மறப்பதே இல்லை. நண்பர் எஸ்.கே.காசிலிங்கம் சாதாரணமான ஒருவரல்ல. ஈழத்தின் ஊடக வரலாறு, அவரைத் தன் அருமைப் புதல்வனாகப் போற்றுகிறது. இதற்காக அவரின் என்னுள் என்னோடு நூலில் அவர் எழுதிய வரிகளையே தருகிறேன். “பத்திரிகை என்பது குறைகளை மட்டும் அம்பலப்படுத்தும் சாதனமில்லை. சமுதாயத்திற்கு நன்மை தரும் நல்லனவற்றையும் பத்திரிகை வாயிலாகச் செய்யமுடியும் என்பதே என் சிறுவயதுக் கருத்தாக இருந்ததால் பத்திரிகைத்துறையைத் தேர்ந்தெடுத்தேன்.” என்று அவரே தன் வாழ்க்கை வரலாற்றில் எழுதியுள்ளார். பொய் ஊர்க்கோலம் போயுள்ள இன்றைய விலைபோன ஊடக உலகில் உண்மை பாலைவன ரோஜாவாக நிற்கிறது. ஆனால் ரோஜா எங்கு நின்றாலும் ரோஜாதான். வாழ்க ஊடகவியலாளர் எஸ்.கே.காசிலிங்கம்!



**கி.செ.துரை**

ரியூப் தமிழ் - டென்மார்க்




**பாண்டிச்சேரி தாழி அறக்கட்டளை விழாவில் பிரதம விருந்தினராக எஸ்.கே.காசிலிங்கம்.**



**தமிழக அரசியல் தலைவர்களுடன் எஸ்.கே.காசிலிங்கம்.**

# 1962 இல் மிகவும் பரப்பாக பேசப்பட்ட கோகிலாம்பாள் கொலைவழக்கு!

உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் குருக்கள் காசிலிங்க சர்மா கொலை!
மேற்படி காசிலிங்க அய்யரின் மனைவி கோகிலாம்பாள் கொலைக்குற்றவாளியாக இனம் காணப்பட்டு தூக்கு தண்டனை அளிக்கப்பட்டது!.

இந்த வழக்கு 1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது! இந்த வழக்கு அந்த காலத்தில் மக்களின் அன்றாட பேசுபொருளாக இருந்தது. அன்றைய ஈழநாடு நாளிதழ் தினசரி காலை மாலை என இரு பதிப்புக்களை வெளியிட்டது.

ஒரு கோயில் குருக்களையே அவரது மனைவி தீர்த்துக் கட்டியது அதுவரை கேள்விப்படாத ஒரு விடயமாக இருந்தது. கொலையுண்ட திரு காசிலிங்க அய்யரும் சரி அவரது மனைவி கோகிலாம்பாளும் சரி தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடி பெயர்ந்தவர்கள்தான். இவர்களது ஒரு மகன் தற்போது கனடாவில் மிகப்பிரபலமான ஒரு கோயிலில் பெரிய குருக்களாக கோலோச்சி கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது இது பற்றி அவ்வப்போது பொதுவெளிக்கு வந்த செய்திகளின் தொகுப்பு இது!

### கிளிநொச்சி – உருத்திரபுரம் கோகிலாம்பாள் கொலை வழக்கு

-சட்டத்தரணி கே.ஜீ. ஜோன்

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1962 ஆம் ஆண்டுக்கும் 1970 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தமிழ் உலகில் கிளிநொச்சி – உருத்திரபுரம் என்னும் கிராமம் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. காரணம் அங்கு நடந்த ஒரு கொலையாகும். வட மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி என்ற இடத்தில் இருந்து சிறு தொலைவில் உள்ள குக்கிராமமே உருத்திரபுரமாகும். இங்கு அபிவிருத்திக்காக குடியேறியவர்களே அதிகம். யாழ்ப்பாணத்தில் உள்ள காரைநகர் மக்களுக்கும் இங்கு குடியேறியவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது.

இங்கிருந்த பிள்ளையார் கோவிலில் பூசகராக காசிலிங்க சர்மா விளங்கினார். இவரது தகப்பனாரும் ஒரு பூசகராவார். இவர் காரைநகரில் உள்ளவர். காசிலிங்க சர்மா இந்தியாவைச் சேர்ந்த அழகிய பிராமணப் பெண்ணான கோகிலாம்பாளை மணந்தார். காசிலிங்க சர்மாவுக்கும் கோகிலாம்பாளுக்குமிடையில் வயதில் மிகப் பாரிய வித்தியாசம் இருந்தது. இருபது வயது வித்தியாசம் இருந்தது. ஆரம்பத்தில் இது பிரச்சினையாக இருக்கவில்லை. பதினைந்து வருட கால வாழ்க்கையில் கோகிலாம்பாள் இரண்டு ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தாள். தமிழ் குடும்ப மாது ஒருவர் செய்ய வேண்டிய அவ்வளவு கடமைகளையும் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் செய்து வந்தாள். காலம் செல்ல செல்ல காசிலிங்க சர்மாவின் வயோதிபத்தன்மை

கூடியது. ஆனால் கோகிலாம்பாளின் ஜவ்வனம் அவளிடம் அப்படியே இருந்தது. இதனால் அவர்களிடையே பாலியல் தகராறு அரும்பத் தொடங்கியது. இதனை உணர்ந்த காசிலிங்க சர்மா மதுவை அருந்தி மன ஆறுதலைப் பெற்றார். தனது மனைவியை சந்தோஷப்படுத்த முடியாததையிட்டு கவலையடைந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் இவர்களின் தோட்டத்தில் வேலுப்பிள்ளை என்னும் ஒருவன் வேலை செய்தான். இவன் மேலுக்கு துணி அணிவதில்லை. பார்ப்பதற்கு கட்டுமஸ்தான உடம்பு பளிச்சென்று எல்லோருக்கும் தெரியக் கூடியதாயிருப்பான். கறுப்பு நிறமானாலும் இளமை அவனில் தளும்பியது. ஆகவே கோகிலாம்பாளின் பார்வை வேலுப்பிள்ளையின் பால் திரும்பியது. தனது பாலியல் தேவையை அவன் பூர்த்தி செய்வான் என அவள் நம்பி வேலுப்பிள்ளைக்கு தேவையான உணவுகள், இனிப்புப் பண்டங்கள், தேநீர் என்பவற்றை பக்குவமாக அளிக்கத் தொடங்கினாள். வேலுப்பிள்ளையும் இதை உணர்ந்து அவளுடன் நேசம் காட்டத் தொடங்கினான். இறுதியில் இது காதலாக மலர்ந்தது. பூசகர் இல்லாத நேரத்தில் வேலுப்பிள்ளை பூசகரின் வீட்டிற்கு வந்து தனியாக அறைக்குள் கோகிலாம்பாளுடன் உல்லாசமாக இருப்பது வழக்கம்.

அவளது மகளான இராஜலட்சுமிக்கு இது தெரியவந்தது. கோகிலாம்பாள் மிக கண்டிப்பாக தனது மகளுக்கு இச்சம்பவத்தை தனது தகப்பனுக்கோ வேறு யாருக்குமோ தெரிவிக்கக் கூடாது என்று கட்டளை இட்டாள். பல வருடம் இப்படி நடந்தது. உருத்திரபுரம் கிராமப்புறம் என்பதால் கோகிலாம்பாளின் நடத்தை பூசகருக்கும் தெரியவந்தது. எனவே பூசகர் வேலுப்பிள்ளையை தனது சேவையில் இருந்து நீக்கினார். இதனை கோகிலாம்பாள் எதிர்த்தாள். ஆயினும் இறுதியில் வேலுப்பிள்ளை பூசகரின் வீட்டிலிருந்து அனுப்பப்பட்டான். வேலுப்பிள்ளை அனுப்பப்பட்ட நேரத்தில் இருந்து கோகிலாம்பாள் வீட்டில் அடுப்பு பற்றவைப்பதை நிறுத்தினாள். பூசகருக்கோ குழந்தைகளுக்கோ உணவு சமைக்க மறுத்தாள். மூன்று நாட்கள் உண்ண உணவு இல்லாமல் பிள்ளைகள் பசியால் வாடினர். ஆகவே பூசகருக்கு ஒன்றும் செய்ய முடியாமல் போனது. இறுதியில் வேலுப்பிள்ளையை மீண்டும் தனது தோட்டத்திற்கு வரச்செய்து வேலைக்கு அமர்த்தினார். கோகிலாம்பாள் இதில் வெற்றி பெற்றதால் கோகிலாம்பாளுக்கும் வேலுப்பிள்ளைக்கும் வெளியரங்கமாக திரிய வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் மாட்டு வண்டியில் தோட்டத்தில் திரிவதும் கிணற்றடியில் உடுப்பு துவைக்கும்போது சல்லாபமாக கதைப்பதும் நடைபெறத் தொடங்கியது. இந்த விபரம் காசிலிங்க சர்மாவின் தகப்பனார் காரைநகரில் இருப்பவருக்கும் தெரியவந்தது. வேலுப்பிள்ளை சந்தேகத்தை போக்க வேண்டுமென்ற வஞ்சக எண்ணத்தால் பொன்னம்மா என்னும் பெண் ஒருத்தியை மணந்து உருத்திரபுரத்திற்கு கொண்டு வந்தான். பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது போல் ஒரு பெண்ணின் மனம், நடத்தை என்பவற்றை வேறொரு பெண் உடன் அறிவாள். பொன்னம்மா சில நாட்களுக்குள் வேலுப்பிள்ளையினதும் கோகிலாம்பாளினதும் தகாத உறவை அறிந்து கொண்டு வேலுப்பிள்ளையிடம் கேட்டபோது வேலுப்பிள்ளை பொன்னம்மாவை தாக்கி இனிமேல் இது பற்றி கேட்கக் கூடாது என அடித்து உதைத்தான். இதனால் வேதனையடைந்த பொன்னம்மா தனது ஊரான வவுனிக் குளத்திற்கு சென்று

விட்டாள். வேலுப்பிள்ளை கோகிலாம்பாள் பாலியல் உறவு வேகமாக நடந்தது.

வேலுப்பிள்ளை கோகிலாம்பாளிடம் தான் கோகிலாம்பாளை மணம் செய்ய விரும்புவதாக தெரிவித்தான். கோகிலாம்பாள் தனது கணவன் இருக்கும் வரையுமே தனக்குப் பாதுகாப்பு என்றும் இல்லையேல் ஊரார் கதை கட்டுவார்கள் என்றும் கூறி விவாகத்தை மறுத்தாள். அப்படியானால் நாம் காசிலிங்க சர்மாவை கொலை செய்து அவர் இறந்த பின்னர் மணந்து கொள்வோம் என்று ஆலோசனையை வேலுப்பிள்ளை கூறினான். இதற்கு கோகிலாம்பாள் உடன்பட்டாள். ஆகவே காசிலிங்க சர்மாவை கொலை செய்ய திட்டம் போடப்பட்டது. இதற்கிடையில் காசிலிங்க சர்மாவின் தகப்பன் காரைநகரில் இருந்து ஒரு கடிதத்தை அனுப்பி தனது மகனையும் கோகிலாம்பாளையும் குழந்தைகளையும் வருமாறு கேட்டார். இக்கடிதம் கோகிலாம்பாளுக்கு கிடைத்தது. இதன்படி நடந்து கொண்டால் தாங்கள் காரைநகர் சென்று திரும்புவது நிச்சயமில்லை என உணர்ந்த கோகிலாம்பாள் வேலுப்பிள்ளையுடன் கலந்து ஆலோசித்து 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி இரவு காசிலிங்க சர்மாவை கொல்ல திட்டம் தீட்டினர். 14 ஆம் திகதி காசிலிங்க சர்மா வழக்கம்போல் தனது படுக்கை அறையில் படுத்திருந்தார். கோகிலாம்பாளும் படுத்திருந்தாள். வேலுப்பிள்ளை ஏற்கனவே காசிலிங்க சர்மாவுக்கு மதுவை ஊட்டி வெறியாக்கியிருந்தான். வெறியில் சர்மா உறங்கும்போது வேலுப்பிள்ளை சர்மாவின் வீட்டிற்கு வந்து கதவை தட்ட கோகிலாம்பாள் திட்டப்படி கதவை திறந்தாள். வேலுப்பிள்ளை தனது கையில் இருந்த கொடுவாக் கத்தியால் சர்மாவை ஒரே வெட்டாக வெட்டினான். ஐயோ! என்ற சத்தம் மட்டுமே கேட்டது. சர்மாவின் தொண்டைக் குழியிலிருந்து இரத்தம் பீய்ச்சி அடித்து நிலத்தையும் மற்றும் பொருட்களையும் அசுத்தப்படுத்தியது. சர்மா கொலையுண்டார்.

கொலையாளிகள் திட்டமிட்டபடி சர்மாவின் உடலை சாக்குக்குள் போட்டுக் கட்டியதுடன் இரத்தம் தோய்ந்த உடுப்புக்களையும் ஒரு சாக்குக்குள் போட்டு கட்டிக் கொண்டு இன்னுமொரு கூலியாளான பசுபதியின் உதவியுடன் சர்மாவின் தோட்டத்தில் புதைத்தனர். மறுநாள் காலையில் எல்லாம் வழமைபோல் நடந்தது. சர்மாவை காணவில்லை. குழந்தைகளுக்கு தகப்பனார் காரைநகர் சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது. கிரிமினல் குற்றவாளிகள் எப்போதும் தாம் போடும் திட்டத்தை மற்றவர்கள் அறியக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு சில முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பது வழக்கம். மற்றவர்களது அவதானத்தை திசை திருப்ப முயற்சிப்பது வழக்கம். இங்கும் கோகிலாம்பாள் இதனையே செய்தாள். கோகிலாம்பாள் ஒரு கடிதத்தை எழுதி தனது மாமனாருக்கு தபாலில் போட்டாள். தனது கணவன் காரைநகருக்கு போவதாக கூறி இரவு 10 மணி பஸ்ஸில் சென்றதாகவும் அவர் திரும்பும் வரை தானும் குழந்தைகளும் காத்திருப்பதாகவும் எழுதியிருந்தாள். இக்கடிதம் கிடைத்ததும் காசிலிங்க சர்மாவின் தந்தை சந்தேகப்பட்டதுடன் உடனடியாக தனது மருமகனை உருத்திரபுரம் அனுப்பி காசிலிங்க சர்மாவை தேடும்படி கேட்டுக் கொண்டார்.

அவர் தேடியபோதும் சர்மா அகப்படவில்லை. அத்துடன் கோகிலாம்பாளும் காரைநகருக்கு வந்து தனது கணவன் எங்கே என்று விசாரித்தாள்.



ஈழநாடு

EELA NADU

கோயில் ஐயர் கொலை!

எருக்குழிக்குள்ளிருந்த சடலம் ஒருமாதத்தின்பின் எடுக்கப்பட்டது

உருத்திரபுரத்தில் நடைபெற்ற கோரசம்பவம்

இதனால் காசிலிங்க சர்மாவின் தகப்பன் சந்தேகப்பட்டார். அத்துடன் இன்னும் சில தினங்களில் வேலுப்பிள்ளையும் அங்கு வந்து தான் சர்மா ஐயா அவர்களை பார்க்க வந்ததாக கூறினான்.இவற்றில் சந்தேகம் கொண்ட காசிலிங்க சர்மாவின் தகப்பன் பொலிஸாருக்கு அறிவித்து வேலுப்பிள்ளையை கைது செய்யச் செய்தார். கோகிலாம்பாளை உருத்திரபுரம் அனுப்பினர். தனது மகனுக்கு ஏதோ நடந்து விட்டது என உணர்ந்த காசிலிங்க சர்மாவின் தகப்பன் தான் வணங்கும் தெய்வ ஆலயத்தில் பழிகிடந்தார். தனது மகனை காட்டித் தர வேண்டுமென்பதே அவரது கோரிக்கையாக இருந்தது. அப்போது கனவில் ஒருவர் வந்து அவரது கையை பிடித்து உருத்திரபுரம் செல்லுமாறு கேட்டதாகவும் தான் அதனை தொடர்ந்து உருத்திரபுரம் வந்து தனக்கு தெரிந்த ஒருவரின் வீட்டில் தூங்கிக் கொண்டு இருக்கும் போது இன்னுமொரு நாள் கனவில் தனது தோளை ஒருவர் தொட்டு காசிலிங்க சர்மாவின் தோட்டத்தில் ஒரு இடத்தைக் காட்டி அதனை தொட்டதாகவும் தகப்பன் வழக்கில் கூறினார்.

அவர் கண்டது உண்மையோ இல்லையோ நாம் அறிய மாட்டோம். ஆனால் அவரின் வேண்டுகோளின்படி சர்மாவின் தோட்டத்தை தோண்டியபோது அங்கே அவரது மகனின் உடல் புதைக்கப்பட்டு அதற்கு மேல் மண்போடப்பட்டு அதற்கு மேல் மாட்டுச் சாணி கும்பல் இருந்ததை எல்லோரும் கண்டனர். ஆகவே அவரது கனவு நனவாகவே இருந்தது. சர்மா கொலை செய்யப்பட்டு விட்டார். இதற்கு காரணம் கோகிலாம்பாளும் வேலுப்பிள்ளையுமே என்று கண்ட பொலிஸார் தமது புலன் விசாரணையை ஆரம்பித்தனர். வேலுப்பிள்ளை பொலிஸாரின் புலன் விசாரணைக்கு முன்னர் ஈடுகொடுக்க முடியவில்லை. சர்மாவை கொலை செய்த கத்தியை புதைத்து வைத்த இடத்தை காட்டினான். இது சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டது.

கோகிலாம்பாளும் கைது செய்யப்பட்டாள். தனக்கும் கணவனுக்குமிடையில் பகமை இருந்ததாகவும் தான் கொலைக்கு உடந்தையாக இருந்ததை ஒப்புக் கொண்டாள். பசுபதி என்பவனும் இதில் சம்பந்தப்பட்டிருந்ததால் அவனும் கைது செய்யப்பட்டான். பின்னர் மூவருக்கும் எதிராக விசாரணை நடந்தது. வேலுப்பிள்ளைக்கும் கோகிலாம்பாளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பசுபதி விடுதலை செய்யப்பட்டார்.

# ஈழநாடு பத்திரிகையை அப்பா கரங்களில் முதலில் பார்த்தேன்



யாழ்ப்பாணத்தில் நான் பிறப்பதற்கு முன்னரே ஈழநாடு பிறந்து விட்டது. ஈழநாடு பத்திரிகையை எனது அப்பா கரங்களில் வைத்திருக்கும்பொழுது தான் முதன் முதலில் பார்த்தேன். பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றிய எனது தந்தையார் சி.தர்மலிங்கம், ஈழத்தில் புகழ்மிக்க கலைஞராகவும் விளங்கினார். நாடகத்துறையிலும் திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஜெய்சங்கர், நாகேஷ், அசோகன், ராதிகா ஆகியோர் நடித்த இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பான 'இரத்தத்தின் இரத்தமே' திரைப்படத்தில் முக்கிய பாத்திரமேற்று அப்பா நடித்திருந்தார். நாடகம், திரைப்படம் தொடர்பான விமர்சனங்கள், கலைகள் பற்றிய கட்டுரைகள், கலைஞர்களின் தகவல்கள் என யாவும் நிறைந்ததாக அன்றைய நாட்களில் வெளிவந்த ஈழநாடு எங்கள் வீட்டில் தினமும் வாசிக்கப்பட்டது.காலவோட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் பல்வேறு அனர்த்தங்களை ஏற்படுத்தின. 1981ல் யாழ்ப்பாணம் எரிந்தபொழுது யாழ்.நூலகம், ஈழநாடு, பூபாலசிங்கம் புத்தகசாலை என்பனவும் எரிந்தன. எரிந்தும் ஈழநாடு மீண்டும் எழுந்து வந்தது. 1991ல் பரிஸிலும் ஈழநாடு! 'பரிஸ் ஈழநாடு' பின்னர் 'தமிழன்' பத்திரிகையையும் இவர் வெளியிட்டிருந்தார். தமிழன் பத்திரிகைக்காரியாலயம் மார்கடே போசினியேயில் அமைந்திருந்தது.

எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுடன் ஈழத்தின் நாடக, திரைப்பட மூத்த கலைஞர் ஏ.ரகுநாதன், அறிவிப்பாளர் எஸ்.கே.ராஜென், ஸ்ரீ பாரதி - இரா.ஸ்ரீதரன் ஆகியோரை தமிழன் பத்திரிகைக்காரியாலயத்தில் கண்டு உரையாடியிருக்கிறேன். காலப்போக்கில் பிரயாண முகவராக 'கிங்ஸ் ட்ரவல்ஸ்' நிறுவனத்தை இயக்கத்தொடங்கினேன். அப்பொழுது நண்பர் ஸ்ரீ, பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை கிங்ஸ் ட்ரவல்ஸ் நிறுவனத்துக்கு அழைத்து வந்து எமது வாடிக்கையாளராக்கினார். பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் அப்பொழுது முதல் மிக உன்னதமான வாடிக்கையாளராக இப்பொழுதும் எம்முடன் பயணித்துக்கொண்டிருக்கிறார். இந்தியா, இலங்கை எனப்பயணம் புரியும் பொழுதெல்லாம் விமானப்பயணச்சீட்டுக்களை எம்மிடம் தான் பெற்றுக்கொள்வார். ஈழநாடு உதவி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம், 'பரிஸ் ஈழநாடு' பத்திரிகையை இயக்கிய அனுபவம், 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்ந்த அனுபவம் மிக்க எஸ்.கே.காசிலிங்கம் அண்ணர் அவர்களின் அமுதவிழாவில் அவரை வாழ்த்துவதில் 'கிங்ஸ் ட்ரவல்ஸ்' பெருமை கொள்கிறது. எஸ்.கே.காசிலிங்கம் அண்ணர் என்றென்றும் மகிழ்வுடனும், உடல் நலத்துடனும், வாழ்ந்திட வாழ்த்துகிறோம்.



**தர்மலிங்கம் பேரரசன்**
கிங்ஸ் ட்ரவல்ஸ், லா சப்பல் - பரிஸ்

# கல்லூரி நண்பர் காசிக்கு அமுதவிழாவாழ்த்துகள்



பாடசாலை மாணவப் பருவத்தில் நண்பர் காசிலிங்கமும் நானும் 1960களில் யாழ்.மத்திய கல்லூரியில் ஒன்றாக கல்வி பயின்று பின்பு வேறு பாடப்பிரிவுகளினால் பிரிந்தோம். அவர் ஈழநாடு பத்திரிகையிலும், நான் வேறு துறையிலுமாக எமது வாழ்க்கை பயணித்தது. இதற்கு இடையில் நாட்டில் ஏற்பட்ட பெரும் போர் காரணமாக நாம் இருவரும் பிரான்ஸுக்கு வந்து சேர்ந்தோம். ஆனால், இது ஒருவரை ஒருவர் அறியாமல், ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்ளாத நிலையில் நிகழ்ந்தது. பின்பு 1985 ஆம் ஆண்டில் ஒருநாள் பாரிஸ் சாள் து கோல் விமானநிலையத்திற்கு எனது பணியின் காரணமாக இந்தியத்தூதுவருடன் சென்றேன். அப்பொழுது சாள் து கோல் விமானநிலையத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் எனது கல்லூரி நண்பனைச் சந்தித்தேன். மட்டற்ற மகிழ்ச்சியில் இருவரும் ஆழ்ந்தோம்.

உலகம் உருண்டை என்பார்களே அது நிஜமாகியது. கல்லூரி வாழ்க்கையில் இணைந்திருந்த நாம், மிக நீண்ட காலம் தொடர்புகள் அற்ற நிலையில் வாழ்ந்தோம். பாரிஸ் சாள் து கோல் (Paris Aéroport - Charles de Gaulle) விமானநிலையத்தில் அவர் பணியாற்றிய Elite Air நிறுவனத்தில் சந்தித்த நாள் முதல் இப்பொழுது வரை எமது நட்புத் தொடர்கிறது. கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். என் நண்பன் காசி அமுதவிழா கொண்டாடுகிறார். எனக்கும் அவர் வயது தான். யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத்துறையில் ஈடுபட்டு பணியாற்றியதுடன் காசி நின்று விடவில்லை.பிரான்ஸ் நாட்டுக்கு வந்தும் 'பரிஸ் ஈழநாடு' பத்திரிகையை வெளிக்கொணர்ந்தார். வாரம் தோறும் 'பரிஸ் ஈழநாடு' வாசித்து வந்தேன். அந்தப் பத்திரிகையைத் தொடும் போதெல்லாம் காசியின் நினைவில் நிறைந்திருப்பேன். அடுத்து தமிழன் பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றியிருந்தார். தமிழன் பத்திரிகையையும் வாசித்து வந்தேன். பரிஸில் பொது நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி சந்தித்துக்கொள்கிறோம். அமுதவிழா காணும் நண்பர் காசிக்கு இதயப்பூர்வமான வாழ்த்துத் தெரிவித்து, உடல்நலம், உளநலத்துடன் வாழ வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.



**ராஜகோபால் செல்லையா**

(பிரான்ஸ்)

## முகத்தார் எஸ்.ஜேசுரட்ணத்தின்...

## நெஞ்சுக்கு நெருக்கமான எஸ்.கே.காசிலிங்கம்



அமுத விழாக் காணும் விழாவின் நாயகனிற்கு முகத்தார் ஜேசுரட்ணம் குடும்பத்தினர் சார்பில் இனிய மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். என் தந்தையின் நெஞ்சிற்கு மிகவும் நெருக்கமானவர். எனது தந்தையினால் இவரது அறிமுகம் கிடைத்திருந்தாலும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் அமையவில்லை. எனது தந்தையார் 'முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம' வாழ்ந்த காலத்திலும், அவர் மறைந்த பின்னரும் அவரது நினைவாக நடைபெற்ற வைபவங்களுக்குத் தலைமை ஏற்று தனது அன்பையும் அபிமானத்தையும் ஆழ் மனதில் இருந்து வெளிப்படுத்திய பெருந்தகை பத்திரிகை ஆசிரியர் காசிலிங்கம் ஐயா.

எனது பெற்றோரின் திருமண பொன்விழா பிரான்ஸில் நடைபெற்ற பொழுது இவரே தலைமை தாங்கி அந்த நிகழ்ச்சியைச் சிறப்பித்தார். புன்னகை தவழும் அமைதியான முகமும், எந்தவொரு விடயத்தையும் நன்கு ஆராய்ந்து, ஆழமான கருத்துக்களை அழகாக சமர்ப்பிக்கும் சாமர்த்தியம் என்பன, அவர் மீதான கவனம் கொள்ள வைத்த, என்னைக் கவர்ந்த தனித் தன்மைகள். காசிலிங்கம் ஐயாவை வாழ்த்த இது ஒரு சந்தர்ப்பம். நீண்ட ஆயுளோடும் நிறைந்த ஆரோக்கியத்துடனும் நீங்கா புகழோடும் இறைவன் அருளோடும் இவ் வையகத்தில் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.



முகத்தாரின் குடும்ப உறவுகள் சார்பில்,

**மகள் - கலா லோகன்** (பிரான்ஸ்)








# அமுத விழா ஆளுமை எஸ்.கே.கே. வாழிய வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

சப்தஸ்வரங்களைப் போலும் எம் மண்சாரவே சூழ் சப்த தீவுகளுள் இயற்கை அழகில் ஒப்பில்லாத் தீவு அனலை எனும் உணர்வுள உயிர்ப்புள தீவு



அதன் புனிதமே உலகம் போற்றும்
சைவமும் தமிழும் ஆங்கிலமும் தெய்வ சிந்தைமெய்யில் ஊறிய மேன்மக்கள் மிகுதிறனும் வையகம் முழுவதும் வாழ்வாங்கு வாழும்வகை வியப்பில் ஆழ்ந்திடும் அன்னவர் மேன்மை சொலும்
தாய் தந்தை இருவரும் ஆசிரியர் அன்பினில் தாடலைபோல் வாழ்முறையில் தக்கன பிழைக்கும் விந்தை மிகுவிவேகம் உள்நோக்கு சிந்தைனையில் விற்பனராம் பெற்றோரமைந்த காசிலிக்கப் பேராளன்

பேசற்கரிய பெருங்குணத்தர் காசிலிங்கப் பெரியோன்
பெற்ற பிறப்பிற்கும் பேருவகை சேர்த்திடும் வகை
நேசம் நிறை சாதனைகள் நிர்மலமாம் முயற்சிக்குரிய
நாநலம் பேணவல்ல நாயகர் காசிலிங்கம் வாழி!

ஈழநாடெனும் செய்தி ஏடு எம் இணையிலா இடுகுறி
இலங்கைத்தாயின் கிரீடமாய் ஒளிவீசிய ஆதவன்
வாழத்தெரிந்த நாள் முதலாய் உதவி ஆசிரியராய்
வழி நடாத்திய வாண்மை மிகு மானுடராம் வாழி!

அன்னை தந்தை வாழ்ந்த மனையதை மனமுவந்து இன்முகமாக கலைவாணி கல்வி நிலையத்திற்கு அளித்து முன்னேறக் கல்வியிலே முத்தாய்பாய்க் கனிந்த வகை தன்னலம் பேணாத தங்க மனத்தினர் இவர் பெற்றோர் அமுதவிழா நாயகராம் காசிலிங்கம் கங்காணி அகம் நிறைந்தாற்றிய சேவைகள் ஆழ் சமுத்திரமாம் சமூகப்பணிகள் சீரிய முயற்சியின் சாதனையாளர் சார்ந்த மண் பிரான்சிலும் சாற்றிய சத்தான பணியின் எண்பது வயதினில் வாழ்ந்த பெருமைகள் இனும் எண்ணெழுத்தாகவே இமயமாய் சிறந்து செழிப்புற மண்ணில் நல்ல வண்ணம் வாழி! என வாழ்த்தும் எண்ணற்றோர் மனங்களில் நூறு ஆண்டு வாழ்க வாழ்க வாழ்க! என்னண்ணர் பேரின்பதாஸன் கல்வி இலாகா அதிகாரி இவரே காசியின் நவண்பர் அவரால் நாம் உரைத்தோம் இவ்வாழ்த்து!



**வை.க. தவமணிதாசன் பி.ஏ.**

**திருமதி.சிவகாமி தவமணிதாசன் பி.எஸ்.சி**

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்



# மலையகத்தில் லைன் வீட்டைப் பார்த்து அதிசயித்த எஸ்.கே.காசிலிங்கம்.

அழைப்பெடுக்கும் போது 'வணக்கம் அய்யா', என நான் விளிக்கவும் அதற்கு பதிலாக வணக்கத்தோடு ஒரு சிரிப்பையும் உதிர்க்கும் காசி அய்யாவுக்கு எண்பது வயதாகிறது என்பது ஆச்சரியமானதாகவே தெரிகிறது. அவர் ஒரு பத்திரிகையாளர் என்ற எந்தவித முன்னறிதலும் இன்றி ஏதேச்சையாக ஒரு நண்பர் மூலமாக அறிமுகமாகி இற்றைக்கு பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன. ஆக, அவரது அறுபத்தெட்டாவது வயதில் அவரைச் சந்தித்திருக்கிறேன். இவ்வாறு விபரிப்பதற்கு காரணம், அறுபதுகளிலும் எண்பதுகளிலும் இவரது இயக்கம் ஒரே விதமாகவே இருப்பதுவே. தலைநகரில் அறிமுகமான அந்த நாட்களிலேயே அவர் மலையகப் பகுதிக்கு வருகை தந்திருந்தார். அது ஓர் அரசியல் கூட்டம். எனவே மலையகத்தின் பலதரப்பட்ட மக்களை அவருக்குக் காணக்கிடைத்தது. கூட்டம் முடிவடைந்ததும் அவரிடம் சென்று உரையாடிவிட்டு “எனது வீடு இங்கே பக்கத்தில்தான்.. வாருங்களேன் போய் வருவோம்” என்றேன். உடனே எனது அழைப்பை ஏற்றுக் கொண்டவரை எனது வாகனத்திலேயே முன் ஆசனத்தில் அமரச் செய்தேன். நானே எனது காரினை ஓட்ட, பின் ஆசனத்தில் எனது நண்பர்கள் அமர்ந்து கொண்டனர். கூட்டத்தில் இடம்பெற்ற நிறை குறைகளைப் பேசியவாறே பயணித்த என்னிடம் “மலையகத்தில் உள்ள லைன் வீடு ஒன்றைப் பார்க்கலாமா” எனக் கேட்டார். “அதற்கென்ன பார்த்திட்டாப் போச்சு” என புன்னகையோடு பதில் அளித்தேன். அவர் கேட்டுக் கொண்டதைப் போலவே ஒரு லைன் வீட்டு வாசலில் கார் நிற்க, நானும் இறங்கிச் செல்ல அவரும் என் கூடவே




வந்தார். அவர் கேட்டதையே முதலில் நிறைவேற்றுகிறேன் என்ற பெருமை அவரது முகத்தில் தெரிந்தது.

அந்த வீட்டுக்கு உள்ளே சென்றதும் அங்கே போடப்பட்டிருந்த எளிமையான நாற்காலிகளில் அமர்ந்தவாறே சுவர்களில் தொங்கும் படங்களைப் பார்த்தார். பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்களின் படங்கள் வரிசையாக தொங்கின. ஒரு படத்தை உற்று நோக்கியவர் தாடியுடன் இருந்த படத்தைக் காட்டி “இது நீங்களல்லோ.. இந்த வீட்டில மாட்டிக் கிடக்குது என்றார்”. “நானேதான்.. எனது வீட்டில்தானே எனது படம் மாட்டப்பட்டிருக்கும். மற்ற படங்கள் எனது மருமக்கள்” என்றேன். அது

அவருக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது. தனக்கு அறிமுகமான திலகர் மலையகத் தோட்டத்து லைன் அறையில் பிறந்து வளர்ந்தவரா? என்பதுதான் அவரது ஆச்சரியத்துக்குக் காரணம். அத்தோடு, லயத்து வாழ்க்கைக்குள் அகப்பட்டு கிடக்கும் மலையகத் தமிழ் மக்கள் குறித்த அவரது மனப்பதிவுகளில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். திரும்பி வரும் வழியில் அவர் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக பணியாற்றிய காலத்து அனுபவங்கள், பிரான்சில் 'தமிழன்' என்று ஒரு பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றிய கதை, என அவரது எழுத்துலகம் சார்ந்த பல சுவையான தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். எனக்கும் எழுத்துப் பக்கம் ஒன்று இருந்ததால் எங்கள் உறவாடலில் ஓர் இசைவாக்கம் உருவானது. இவருடனான அறிமுகத்தின் அடுத்த சில வருடங்களிலேயே நான் இலங்கை நாடாளுமன்றத்துக்கும் தெரிவாகி இருந்தேன். எனது நாடாளுமன்ற உரைகளைக் கேட்டு வியப்படைந்தவராக தனது பதிற்குறிகளைப் பதிவு செய்வார். நான் பிரான்சு சென்றிருந்த போது அவர்



இலங்கைக்கு வந்து விட்டதால் அங்கே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும் அவரது நண்பர் ஒருவரைச் சந்திக்கக் கிடைத்தது.

நாடாளுமன்ற உறுப்பினராக அல்லாத காலத்திலேயே இவருடனான நட்பு இன்னும் வலுப்பெற்றதாக நான் உணர்வதுண்டு. அவர் அதிகம் நேசித்த கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களின் 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' எனும்

நூலைப் பதிப்பிப்பது தொடர்பிலேயே அந்த உரையாடல் தொடர்ந்தது. எனினும் கொரோனாவுக்குப் பின்னான பதிப்புச் சூழல் இலங்கையில் மாறிப் போனதால் அந்த நூல் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடாக வந்தது. நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு நானே அவரை பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அழைத்துப் போனேன். அங்கே நின்ற ஒரு பெண்மணி எனக்கு அறிமுகமானவர். அவரை பல வருடங்களுக்குப் பின்னர் சந்தித்த ஆச்சரியத்தோடு உரையாடி விட்டு, அருகில் நின்ற காசி அய்யாவை அறிமுகம் செய்து வைத்தேன். அவரது நூல் வெளியீட்டு முயற்சி குறித்து எடுத்துக் கூறி அதற்காகவே இப்போது இங்கு வந்தேன் என நான் கூற, ஆச்சரியப்பட்ட அவரோ, இவரைக் காணவே, தான் காத்து இருந்ததாகவும்




தனக்கு அவரைத் தெரியாது என்றும் கூறிவிட்டு, அந்த நூலின் நாயகன் ரகுநாதனின் மகளே தான் என்றும் கூறினார். அவர் பெயர்.வைத்தியர் நிர்மலா. அவர் ஹட்டனில் உயர்தரம் கற்ற காலத்தில் இருந்தே அவரை அறிவேன். அவர் கலைஞர் ரகுநாதனின் மகள் என இப்போதே அறிந்து கொண்டேன். இந்த சுவாரஸ்யமான அறிமுகங்களைத் தொடர்ந்து அங்கே எளிமையாக நூலை அறிமுகம் செய்து அதன் முதல் பிரதியையும் வைத்தியர் நிர்மலாவுக்கு வழங்கி வைத்தோம். அடுத்தடுத்த நாட்களில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் ஓர் அறிமுக விழாவை நடாத்தி இருந்தோம். கலைஞர் ஏ.ரகுநாதனை, 'நிர்மலா'ரகுநாதன் எனப்பலரும் அழைப்பதற்கு அவர் 'நிர்மலா' எனும் திரைப்படத்தை எடுத்ததால் என்பது தெரிந்திருக்கும். அவரது மகளின் பெயரும் கூட 'நிர்மலா' என்பதாகும். காசிலிங்கம் அய்யாவின் பத்திரிகை உலகப் பயணத்தை அவரது 'என்னுள் என்னோடு' எனும் நூலை வாசித்து தெரிந்து கொண்டாலும் இந்த 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூல் வெளியீட்டு முயற்சிகளின்போதே அதிகம் உணர்ந்து கொண்டேன். பத்திரிகையாளர்களுக்கே இருக்க வேண்டிய சுறுசுறுப்பு, தேடல், உறவு பேணுதல் முதலானவை காசி அய்யாவுக்கு கைவந்த கலை. அத்தகைய கலைகளைக் கைவரப் பெற்றவர் தனது வாழ்வை தகவமைத்துக் கொள்ள அந்த அனுபவங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் என்பது தெளிவு. அதனால்தான் எண்பது வயதிலும் அவரால் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது. இன்றுபோல் என்றும் சுறுசுறுப்பாக இயங்கவும் வாழவும் வாழ்த்துகிறேன்.





அன்புடன்,

**ம.திலகராஜா**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,

இலங்கை

## பத்திரிகை துறையில் ஒரு பீனிக்ஸ் பறவை..



கந்தபுராண கலாசாரம் கொண்ட யாழ்ப்பாண மண்ணில் பிறப்பெடுத்து தமிழர் பண்பாடு மற்றும் கலாசார விழுமியங்களை தன்னகத்தே உள்வாங்கி பத்திரிகை உலகில் காலூன்றிய ஈழநாடு வரலாற்றில் பின்னிப்பிணைந்தவர்களில் அங்கு பணியாற்றிய ஆளுமையுள்ள ஆசிரிய பீட பத்திரிகையாளர்கள் பிரதானமானவர்கள். ஈழநாடு ஓர் ஆலமரம் என்று அடையாளம் இடப்பட்டுள்ளது. ஈழநாடு எனது தாய் வீடும் கூட. எனக்கு மட்டுமல்ல பல பத்திரிகையாளர்களை பிரசவித்த இடம் ஈழநாடு. இந்த பட்டியலில் மூத்த பத்திரிகையாளர் எஸ். கே.காசிலிங்கம் அவர்களும் இடம் பெற்றுள்ளார். அமுத விழா காணும் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஈழநாடு பாசறையில் வளர்ந்தவர்களில் பலரை நாம் இழந்து விட்டாலும் அவர்கள் ஆற்றிய பணிகள் வளர்ந்துவரும் பத்திரிகையாளருக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. 1980 நடுப்பகுதியில் ஈழநாடுவுக்கும் எனக்குமான தொடர்பு ஏற்பட்டது. ஈழநாடு வாரமலரில் மாணவர் எண்ணம் பகுதியில் எனது ஆக்கங்கள் வெளிவந்தன. அதன் பின் ஈழநாடு குடும்பத்தில் ஒருவரானேன். ஆசிரிய பீடத்தில் அமர்ந்ததும் அங்கு ஏற்கனவே கடமையாற்றி சென்றவர்களைப்பற்றிச் சிலர் கூறுவார்கள். அப்படி சொல்லப்பட்டவர்தான் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். 1967 தொடக்கம் 1981 வரை ஈழநாடு ஆசிரிய பீடத்தில், மூத்த பத்திரிகையாளர் கோபு அவர்களுக்கு அருகில் இருந்து கடமையாற்றியவர். 1981ம் ஆண்டு அரச கூலிகளால் ஈழநாடு தீக்கரையாக்கப்பட்டது, அந்த நேரத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் அங்கிருக்கவில்லை அவர் யாழ் நகரில் பிறிதொரு இடத்தில் தங்கியிருந்தார். யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் வீட்டுக்கு சமீபமாக வசித்தமையால் அந்த வீடு எரிக்கப்பட்டதையும் யாழ்ப்பாணம் எரியூட்டப்பட்டதையும் நேரில் கண்டவர். ஈழநாடு எரியுண்டபோது இருவர் அதனுள் சிக்குண்டு கடுமையான தீக்காயங்களுக்குள்ளாகினர்.

இலங்கை படைகள், விடுதலை இயக்கங்கள்,இந்திய அமைதிப்படை போன்றவை மத்தியில் உயிரைப் பணயம் வைத்து பத்திரிகையாளர்கள் கடமையாற்றினார்கள். அரச திணைக்களங்கள், நீதிமன்றம், பொலிஸ் நிலையம், கூட்டுறவுச்சங்கம், அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட பல தொடர்புகளைப் பேணியவர்.பத்திரிகையாளருக்குத் தேவையான அத்தனை தொடர்புகளையும் கொண்டிருந்த காரணத்தால் தான் நாளாந்த

செய்திகளை திரட்டி ஈழநாடு காத்திரமாக வெளிவந்தது. தொலைபேசியிலும், நேரிலும் பெறும் செய்திகளைத்தரம் பிரித்து செப்பனிட்டுத்தரும் பத்திரிகைப்பணியில் இவர் செயற்பட்டார். இவர் இதய நோயாளியாகி சத்திரசிகிச்சைக்கு உள்ளாகி சாவின் விளிம்பில் இருந்தார். எப்பொழுதும் துயர செய்தி வரலாம் என உறவினர்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர். செய்தியாளனே செய்தியாகிவிடுவாரோ? என்ற ஏக்கம் சகபணியாளர்களிடம் நிலவியது. ஆனால், அந்த எதிர்பார்ப்புகளை மீறி பீனிக்ஸ் பறவையாக அவர் எழுந்து வந்தார். அப்போதெல்லாம் சத்திரசிகிச்சை என்றாலே முடிவுகள் சாதமாக அமைவதில்லை. இந்தக்கதைகளை ஈழநாடு மூத்த ஊழியர்கள் நினைவூட்ட என்னையறியாமலே காசிலிங்கம் அவர்கள் மீது ஈர்ப்பு ஏற்பட்டது முகம் அறியாதவர் மீது ஏற்பட்ட அனுதாபம் என்று என்னால் கடந்து விட முடியவில்லை. இந்தக்காலகட்டத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்தார். பிரான்ஸில் வாழ்ந்து வருகிறார் என்பதை அறிந்து கொண்டேன். நானும் பிரான்ஸ் மண்ணுக்கு சூழ்நிலை காரணமாக புகலிடம் கோரி வந்தேன். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எழுதிய 'என்னுள் என்னோடு' என்ற புத்தகம் கண்ணில் பட்டது. அதனை வாங்கி ஆர்வத்துடன் வாசித்து விட்டு அவருடன் தொடர்பு கொண்டேன். தொடர்பு கிடைக்கவில்லை. ஆனால், ஓர் இலக்கிய நிகழ்வில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அருகருகே அமர்ந்து அவருடன் உரையாடினேன். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பாரிசுக்கு வருகை தந்தபொழுது அவரது 'மூன்றாம் உலகப்போர்' நூல் வெளியீட்டுக்கு எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார். அதே போன்று கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள், 'தமிழன்' பத்திரிகையில் தொடராக எழுதிய




'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' எஸ்.கே.காசிலிங்கம் அவர்களால் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வேளை எஸ்.கே.காசிலிங்கம் அவர்களிடமிருந்தே அந்த நூலைப்பெற்றுக்கொண்டேன். அவருடன் இணைந்து நிழல் படமும் எடுத்துக்கொண்டேன். 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூல் வெளியீட்டு விழாவை, ஊடகர், நிகழ்ச்சி தொகுப்பாளர் எஸ்.கே.ராஜென் ஏற்பாடு செய்திருந்தார். இந்த நிகழ்ச்சி முடிந்து திரும்பும் வழியில் எதிர்பாராது நிலைகுலைந்து சரிந்த போது அருகில் வேற்று நாட்டவர் ஒருவர் என்னைத்தாங்கி பிடித்ததார். எனது கைப்பேசியையும் களவாடிச்சென்று விட்டார். வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டபோதுதான் எனது இதயத்தில் அடைப்புகள் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டன. வயிறு பிளக்கப்பட்டது அடைப்புகள் தகர்க்கப்பட்டன. எனது இதய வைத்தியர் 'உன்னுடன் கடவுள் இருக்கிறார்' என்று சொன்னார். அன்று

காசிலிங்கம் அவர்களுக்கு நடந்தது இன்று எனக்கும் நடந்தது. அவர் அந்த சத்திரசிகிச்சைக்குப் பின்னர் மறு அவதாரம் பெற்று பிரான்சில் புகலிடம் பெற்றார். குளிர் தேசத்திலும் ஓயாது உழைத்து காலூன்றியிருக்கிறார். அவரின் மன தைரியத்தை பாராட்ட வேண்டும். ஏற்ற இறக்கங்களைக்கடந்து எண்பது வயதிலும் உற்சாகமாக செயற்படும் அவர், எல்லோருக்கும் முன்னுதாரணமானவர். 'ஈழநாடு' (பாரிசு), 'தமிழன்' ஆகிய பத்திரிகைகளில் பிரதான பாத்திரம் வகித்தவர். தாயகத்தில் சப்ததீவுகளில் ஒன்றான அனலைதீவு அவரது பிறப்பிடம். அங்கு இவரின் வீடு இப்பொழுது கல்விக்கூடமாக விளங்குகிறது. ஆசிரிய தம்பதியின் வாரிசு ஆதலால் கல்விப்பணி தொடர்கிறது. அனலைதீவு ஐயனார் கோயில் பரிபாலன சபை முக்கியஸ்தராக விளங்கியவர், தேர்திருப்பணிச்சபை,அன்னதான சபை போன்றவற்றின் பிரதானியாகவும் இருந்திருக்கிறார். அனலைதீவு ஐயனார் தேரோட்டமலர் ஆசிரியராகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. நாடு கடந்து வாழ்கின்ற வேளையிலும் தாய் மண்ணை நேசிக்கின்ற மண்ணின் மைந்தர். பழகுவதற்கு இனிய பண்பாளர். அமுதவிழா காணும் எஸ்.கே. காசிலிங்கம் அவர்களை வணங்கி வாழ்த்துகிறேன்.



**என்.கே.துரைசிங்கம்**

ஈழநாடு முன்னாள் உதவி ஆசிரியர் (1983)



**காசிலிங்கம் அவர்களின் புதல்விகள் , மருமகள் மம்சன் , மகன் அரவிந்தன் ஆகியோர் .**

**01.05.2025 –** France








இந்த வாழ்த்தின் தலையங்கத்தை அவதானித்திருப்பீர்கள் 'ஆசிரியருக்கு அமுத விழா' இவரைப் பரிஸ் நகரில் கண்ட நாள் முதல் “ஆசிரியர்” என்றே விளித்து வந்தேன். “ஆசிரியர் வந்திட்டாரா? ஆசிரியர் நிற்கிறார், ஆசிரியர். வருவார்” என்பது மட்டுமல்ல அவருடன் பேசும்பொழுது கூட “ஆசிரியர் போயிற்று வருகிறேன்” என்பேன். அவர் என்னிலும் மூத்தவர், என்ன சொல்வார் தெரியுமா? “சரி போயிற்று வாங்கோ அக்கா” என்பார். நாம் மதிப்பளிக்கும் அளவுக்கு மேலாக அவர் எம்மை மதிக்கும் பண்பாளராக ஆசிரியரைப்பார்த்திருக்கிறேன். 1992ம் ஆண்டு, முதன் முதலாகப் பரிஸ் நகரில் ஆசிரியரைச் சந்தித்தேன். அவர் ஆசிரியராகத் திகழ்ந்த 'தமிழன்' வாராந்தப் பத்திரிகையில் பணியாற்றிவந்தேன். ஆசிரியர் காசிலிங்கம் அவர்கள் ஒரு பல்கலைக்கழகம் என்றே சொல்லலாம். அவரது உயரிய பண்பு என்பது எல்லோரிடத்தும் அன்பு செலுத்துவதாகும். எளிமையாகப் பழகும் இயல்பும், வலிந்து உதவிடும் கருணை உள்ளமும் கொண்டவர். சுறு சுறுப்பானவர். அறிவுத் திறண் மிக்கவர். அவரின் எழுத்தாற்றல் வியக்கத்தக்கது. அவரின் கையெழுத்தை எல்லோரும் வாசிக்க மாட்டார்கள். வாசிக்கக் கூடியவர்களில் நானும் ஒருத்தி என்பதைக்குறிப்பிடுகிறேன். ஒரு சிறிய தகவல் கிடைத்த மறு நிமிடம் அதனை முக்கிய செய்தியாக மாற்றி விடும் அபாரத்திறமை அவரிடம் உள்ளதை பத்திரிகைப்பணியகத்தில் கடமையாற்றிய வேளையில் பார்த்தறிந்துகொண்டேன். எந்த விடயத்துக்கும் 'No' இல்லை என்ற சொல் இவரிடம் இருக்கவே இருக்காது. அதேவேளை, அவரது முற்கோபமும் பிரபல்யமானது. கோபம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும் என்பார்கள். வாரம் தோறும் செவ்வாய்க்கிழமை 'தமிழன்' பத்திரிகை வெளிவரும். திங்கட்கிழமை முழுவதும் பணி நடைபெறும். ஆசிரியர் காசிலிங்கம் அவர்கள், எஸ்.கே.ராஜென், இரா.சிறிதரன் ஆகியோருடன் நானும் வேகமாகப் பணி செய்வோம். மொழிபெயர்ப்பாளர் க.வாசுதேவன் அவ்வப்பொழுது சுவையான துணுக்குகள் தருவார். ஆசிரியர் அனைவர் நலனிலும் அக்கறையாக இருப்பார். 'ஈழநாடு' எப்பொழுதும் பத்திரிகைத்துறையோடு சம்பந்தப்பட்ட பல விடயங்களை நகைச்சுவையாக எடுத்துக்கூறி எல்லோரையும் சிரிக்க வைத்து மகிழ்ச்சிப்படுத்துவார். 'தமிழன்' பத்திரிகையில் பணியாற்றிய காலம் மிக மகிழ்ச்சியானது. ஒரு குடும்பமாக நாம் திகழ்ந்தோம். வாரம் தோறும் பத்திரிகை வெளிவரத் தயார்படுத்தும் நாள் மறக்க முடியாத நினைவுகளைத் தாங்கியவை. எங்கள் உறவில் அன்பும் மரியாதையும் மகிழ்வும் கொலுவீற்றிருந்தன. அந்த நாட்களின் மகிழ்ச்சியோடு ஆசிரியருக்கு அமுதவிழா வாழ்த்துக்கள்



**திருமதி.குணவதி அம்மாள் கணேசநாதன்**
யாழ்.மாவட்ட நீதிமன்ற முன்னாள் தட்டச்சாளர்

# அகவை எண்பது அமுதவிழாவில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்



நவயுக உலகில் ஊடகத்துறையில் நவீனம் புகுந்துள்ளது. எல்லோரும் ஊடகத்துறையில் காலடி பதிக்கிறார்கள். சிலர் சாதிக்கிறார்கள். சிலர் தங்கள் உழைப்புக்கு ஊடகத்துறையைப்பயன்படுத்துகிறார்கள். யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' பத்திரிகை வெளிவந்த காலத்தில் பத்திரிகைத்துறைக்கு வருபவர்கள் குறைவாகவே இருந்தனர். பத்திரிகையாளர்களை ஏளனம் செய்யும் காலம் அது. அந்தக்காலத்திலும் துணிந்து பத்திரிகைத்துறையில் காலடி எடுத்துவைத்தவர்தான் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். அவர் இன்று அகவை 80ஐக் கொண்டாடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. சப்ததீவுகளில் ஒன்றான அனலைதீவில் கல்விப்புலத்துடன் வாழ்ந்து வந்த எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் 1967ஆம் ஆண்டில் ஈழநாட்டில் இணைந்தார் அந்தக்காலத்தில் ஊடக ஆளுமைகளாக திகழ்ந்த கே.பி.ஹரன், கோபாலரத்தினம், மகாதேவா, பாமா ராஜகோபால், ராஜா அரியரத்தினம், பெருமாள் போன்றோருடன் இணைந்து பணியாற்றினார். 1981 ஆம் ஆண்டுவரை பணியாற்றிய அவருக்கும் எனக்கும் நல்ல உறவு அமைந்திருந்தது. 'ஈழநாடு' பத்திரிகையின் மாவிட்டபுரம் செய்தியாளராக எனது தந்தையார் அமரர். எஸ்.ஆர்.ஞானசுந்தரம் செயற்பட்டார். அவருக்காக செய்தி சேகரிப்பது, செய்தியாக்குவது உட்பட சகலபணிகளையும் நான் செய்துவந்தேன். அப்போது அடிக்கடி 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்திற்கு சென்று வருவேன். அந்தவகையில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுடன் நல்ல தொடர்பு கிடைத்தது. செய்திகள் தொடர்பாக நல்ல ஆலோசனைகளை வழங்குவார். இனிமையாகப் பழகுவார்.எனது தந்தையாருடனும் நல்ல மதிப்பு வைத்திருந்தார். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எனது தந்தையாரின் நாதசுரக் கச்சேரியை தனது ஊரில் நடத்தவேண்டும் என விரும்பினார். அதன்படி அவர் நடத்திய சமூக அமைப்பு ஒன்றின் ஆண்டுவிழாவிற்கு எனது தந்தையாரை கச்சேரிக்காக அழைத்திருந்தார். நானும் தந்தையாருடன் அங்கு சென்றிருந்தேன். அங்கு சென்ற எம்மை அனலைதீவு இறங்குதுறையில் வரவேற்று எங்களை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று நன்றாக உபசரித்தார். அவர் எம்மை கௌரவித்த விதம் இன்றும் எனது மனதில் நிலைத்து நிற்கிறது. எமக்கும் அவருக்கும் இடையில் உள்ள உறவு 'ஈழநாடு' பத்திரிகையில் இருந்து சென்ற பின்னர் கூடத் தொடர்ந்தது. அடிக்கடி அவரைச் சந்தித்து கலந்துரையாடியிருக்கிறேன். புலம்பெயர்ந்து பிரான்ஸ் வந்த பின்னரும்கூட ஒருதடவை அவருடன் தொலைபேசியில் உரையாடியிருக்கிறேன். எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு எனது அன்பு கனிந்த வாழ்த்துக்கள்.



**ஞானசுந்தரம் குகநாதன்**

முன்னாள் செய்தி ஆசிரியர், உதயன் - யாழ்ப்பாணம்

# பிரதம ஆசியர்களால் பாராட்டப்பட்ட அமுதவிழா காணும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்



இலங்கைத்தீவின் வட புலத்தின் தீவுக்கூட்டங்களில் தலையாய் உள்ள அனலைதீவு, 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பது போல விளங்குகிறது. யாழ்ப்பாணத் தீவுக்கூட்டங்களில் அனலைதீவு ஒன்றுதான் நீர்வளம் பெற்றதாகும். இத்தீவு நாட்டுக்குப் பல கல்வியாளர்களையும் சமூகப்பணியாளர்களையும் ஆன்மீகத்தொண்டர்களையும் தந்ததுடன் சிறந்த பத்திரிகையாளர் ஒருவரையும் தந்துள்ளது என்றால் மிகையல்ல. அந்தப் பத்திரிகையாளராக விளங்குபவரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் இவ்வாண்டு பரிஸ் நகரத்தில் அமுதவிழா கொண்டாடுகிறார். இவர் இளமையிலேயே எழுத்து, வாசிப்பு என்பவற்றுக்கு அடிமையாகி விட்டதால், யாழ்ப்பாணத்தில் உதயமாகி வெளியாகிய 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றினார். இவர் சட்டவாளராக வேண்டும் எனப் பெற்றோர் விரும்பினராம். ஆனால், இவரோ பத்திரிகையாளராகிப் புகழ் பெற்றுள்ளார். இவர் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவே இணைந்திருக்கிறார். இளையவராகப் பத்திரிகைத்துறையில் பணியாற்றி வந்த இவர், காலத்துக்குக் காலம் வந்த பிரதம ஆசியர்களால் மிகவும் விரும்பப்பட்டுள்ளார். இதனால் மிக நீண்ட காலம் இரவு நேரப் பொறுப்பாசிரியராகத் திகழ்ந்துள்ளார். நாட்டின் போர்ச்சூழலால் இவரும் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டை வந்தடைந்தார். பிரான்ஸில் இவரது பத்திரிகைத்துறை வாழ்க்கை ஏறத்தாள ஒரு தசாப்த காலத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பித்தது.

'பரிஸ் ஈழநாடு' வெளிவந்தது. எஸ்.கே காசிலிங்கம் அவர்கள் பின்னர் 'தமிழன்' பத்திரிகையையும் வெளியிட்டு ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். பத்திரிகையாளர்கள் ஓய்ந்திருப்பதில்லை, அதற்கு உதாரணமானவர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் வாழ்ந்த காலத்தில், அவருக்கு தமிழன் பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது வழங்கிய வாக்குறுதியை, அந்தக் கலைஞரின் மறைவுக்குப் பின்னறும் அதனை மறக்காமல் நிறைவேற்றிய பெருந்தகையாக மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைப் பார்க்க முடிந்தது. 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூல் பாரீஸில் வெளியிட்டு வைத்தபொழுது நானும் அதில் பங்குபற்றி உரையாற்றியிருந்தேன். அந்த நூல்வெளியீட்டுவிழா நிகழ்ச்சிக்குப்பின்னர் நானும் பத்திரிகை ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் கவனத்துக்குள்ளாகியிருப்பது மகிழ்ச்சி தருகிறது. எழுதுபவர்களை, பேசுகின்றவர்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் பணியையும் இவர் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறார். எண்பதாவது வயதைத் தொட்டுவிட்ட அவருக்கு அமுதவிழா பரிஸில் நடைபெறுகிறது. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தமிழ்ப்பத்திரிகை உலகில் புகழோடு வாழ்ந்திட இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.



**ரதி ருத்திரா** - பிரான்ஸ்

# நட்பின் நேசனை வாழ்த்துவோம்.



ஈழத்து ஊடகத்துறையில் தம் பங்களிப்பைச் செய்தவர்கள் பலர். அவர்களுள் ஒருவரே நம்மவர் எஸ்.கே.காசிலிங்கம்அவர்கள். இயற்கைச் சூழலும், கடல் வளமும் ஒரு சேரப்பெற்ற அனலைதீவில் பிறந்த எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை அனலைதீவு சதாசிவ வித்தியாசாலையிலும், பின்னர் யாழ்.பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றில் கற்றிருந்தார். இளமைத்துடிப்பும், சத்திய ஆவேசமும் இயல்பாகவே கொண்டிருந்த இவரைச் சுற்றிய சூழல்கள் சமூக சிந்தனையாளனாக, அச் சமூகத்திற்காக சேவை செய்பவனாகவே வளர்த்தெடுத்தது. அதுவே அவரை ஓர் ஊடகவியலாளனாகவும் உருவாக்கியது. இவரது தாய் தந்தையரான திரு திருமதி கணபதிப்பிள்ளை - சியாமளவல்லி ஆகியோர் அனலை தீவு சதாசிவ வித்தியாசாலையில் ஆசிரியர்களாக அமைந்ததும் இவரது கல்வி, சமூக சிந்தனைக்கு உறுதுணையாக விளங்கின எனலாம்.

எனது பாடசாலைக்காலங்களில் (யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) நண்பர்களுடன் இணைந்து அனலைதீவு சதாசிவ வித்தியாலத்தில் 'சீதா கல்யாணம்' எனும் நகைச்சுவை நாடமொன்றை மேடையேற்றியிருந்தோம். அப்போது அங்கு கற்பித்த ஆசிரியர்கள்,மாணவர்களுடன் பழகி, அன்றைய பொழுதின் மகிழ்வை உணர்ந்தோம். அப்போது இவரின் பெற்றோர்கள் அங்குதான் கற்பித்தமை தெரிந்திருக்க வாய்ப்பில்லாமல் போயிருந்தது. ஊடக ஆர்வத்தால் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராய் இணைந்து உயர்ந்தார். இவர் நேசித்தவர்களில் எனது விருப்பத்திற்குரிய சசிபாரதி-கோபு, கவிஞர் இ.நாகராஜன் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள். பலரின் அன்பைப்பெற்று வளர்ந்த இவரது இளமைத்துடிப்பும், சத்திய ஆவேசமும் இவரை நல்ல ஊடகவியலாளராக நமக்கு அறிமுகப்படுத்தியது. பாலைதீவு படகுவிபத்து பற்றிய செய்தி, பொலிஸ் அதிகாரி அமரர். பத்மநாதன் அவர்களின் படுகொலைச் செய்தி என்பன நேரடிப்பார்வையில் எழுத்தில் பதிவு செய்தமை பலரையும் திரும்பிப்பார்க்க வைத்தது. ஒரு நேரடி சாட்சியாளரின் பதிவாகவும் அப்போது அவை இருந்தன. அமரர்.பத்மநாதன் அவர்களின் படுகொலை பற்றி அயலவன் (கல்வியங்காடு) எனும் ரீதியில் அறிந்திருந்தேன். ஈழநாடு வாசகராகயிருந்த எனது தந்தையும் சுடச்சுட செய்திகளை வாசிப்பதில் ஆர்வமுள்ளவராயிருந்ததால்



ஒவ்வொரு செய்தியையும் வாசிப்பதுடன், நமக்கும் சொல்லுவார். அச்செய்தியினை நம்மிடம் சேர்த்த ஈழநாட்டை மட்டும் அறிந்திருந்த நமக்கு அச்செய்திகளை எழுதிய செய்தியாளரை, அவரின் இரவு பகல் பாராத உழைப்பையும், அர்ப்பணிப்பையும் தெரிந்திருக்கவில்லை. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் புலம் பெயர்ந்த பின்பும் ஊடகத்துறையின் மீதான அதீத கரிசனையால் 'பாரிஸ் ஈழநாடு', 'தமிழன்' பத்திரிகைகளில் ஆர்வமுடன் உழைத்தார். அவரது அனுபவங்களை வரலாறாக்கவேண்டும். ஓர் ஊடகவியலாளனாக தான் பெற்ற கள-அரசியல் அனுபவங்களை எழுத்தில் கொண்டுவரும் முயற்சியாகவே அவரின் 'என்னுள் என்னோடு' நூல் அமைந்தது. அதன் தொடர்ச்சியாக மேலும் நூல்கள் வரல் வேண்டும் என்பதும் எமது வேண்டுகோளாகும்.

'என்னுள் என்னோடு' (2002) தமிழ், பிரெஞ், ஆங்கிலம் என மூன்று நூல்கள். கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' (2022) போன்று, 'ஈழநாடு', 'தமிழன்' இதழ்களில் வெளிவந்த ஆக்கங்களின் தொகுப்பு நூல்களாகினால் எதிர்கால தலைமுறையினர்க்கு அவை உதவும். ஈழநாடு பத்திரிகையைக் கைகளில் பத்திரப்படுத்தி தானே முதல் வாசகன் என்பது போல எனது தந்தை வீட்டிற்குள் நுழைகையில் அவரிடம் ஒரு கம்பீரம் இருக்கும். ஈழநாட்டின் வாசகனாகவே அப்பாவைப் பார்த்தேன். கல்வியங்காடு,நல்லூர், முடமாவடி என ஒவ்வொரு வாசிகசாலையாகத் தேடித் தேடி பத்திரிகைகளைவாசிக்கும் எனக்கு பலரைத் தெரிந்திருக்காமலேயே கே.ஜி. மஹாதேவா, கா.சி.குலரத்தினம்,ராஜகோபால், இ.நாகராஜன், பார்வதிநாதசிவம், கோபு எனப் பலரிடம் எழுத்தின் மூலமான நெருக்கம் வந்தது. அதுவே பேசும் நட்பாகும் சூழலை காசிலிங்கம் அவர்களிடம் கொண்டு சென்று சேர்த்துள்ளது. எஸ். திருச்செல்வம், ஐயா சச்சிதானந்தன் ஒன்றிணைவில் 'பொண்ட் இன்ஸ்டிட்யூட்'டில் இலக்கியகருத்தரங்கினை நடத்தியபோது ஈழநாடு சார்ந்த பலரைச் சந்தித்தமையை நினைவுமீட்டிப் பார்க்கிறேன். புலம்பெயர் வாழ்வியற் சூழலில் மின்னுலகம் நட்புகளை இணைக்கவும்,எமது தேடலுகான சாத்தியங்களையும் பெற்றுத்தந்தது என்பது உணமைதான். பலரை வாழ்வில் சந்திக்கமாட்டோமா எனும் ஏக்கத்தை காலம் வாசலில் கொண்டுவந்துவிடும் அதிசயமும் நிகழ்ந்துவிடும் அனுக்கிரகமும் உண்டு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை அவரின் நூல் அறிமுவிழாவின் போதும், பின்னர் நண்பர்களின் (பிரான்ஸில்) நூல் வெளியீட்டுவிழாக்களின் போதும் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. பழகுவதில்அன்பும்,கரிசனையும் இருக்கும். அனுபவங்களை பகிர்வதிலும் முதன்மையான நண்பராக இருக்கிறார். நட்பின் நேசன் வாழ்வாங்கு வாழ வாழ்த்தும் பல நட்பூக்களில் ஒரு பூவாய் நானும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.



வாழ்த்துகள்.

**முல்லை அமுதன்**

(காற்றுவெளி - லண்டன்)

# ஊடகத்துறைக்கு தன்னை அர்ப்பணித்த திரு.எஸ்.கே காசிலிங்கம்



தமிழ் உணர்வு மிக்கவர்களாக மட்டுமன்றி தமிழ் மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாகவும் மாற்றிய 'ஈழநாடு' பத்திரிகையில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இரவுப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிய காசிலிங்கம் அவர்கள் அமுதவிழாக் காணுவதையிட்டு மகிழ்ச்சியும் வாழ்த்துகளும்.

எழுபதுகளின் கடைசியில் நான் எனது கதைகள் கட்டுரைகளை கொடுக்க அப்போது வார இதழ் ஆசிரியராகவிருந்த 'சசிபாரதி' சபாரத்தினம் அண்ணரை சந்திக்கப்போவது வழக்கம். அந்த நாட்களில்தான் ஈ.கே ராஜகோபால் அவர்களும், எஸ்.கே.காசிலிங்கம் அவர்களும் எனக்கு அறிமுகமானார்கள்.

பிரான்சிலிருந்து சகல ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க, ஆஸ்திரேலிய கண்டங்களிலும் வெளிவந்த 'பாரிஸ் ஈழநாடு' வாரப் பத்திரிகையைத் தொடங்கவும் அதன் ஸ்தாபக நிர்வாகியாகவும் கடமையாற்றிய பெருமை காசிலிங்கம் அவர்களையே சாரும். நான் பட்டமேற்படிப்பிற்காக லண்டனுக்கு புலம்பெயர்ந்த சில மாதங்களிலேயே ஈ.கே.ராஜகோபால் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டார்.

இலண்டனிலிருந்து வெளிவந்த 'தமிழன்' பத்திரிகையில் சிறுகதைகள், தொடர்கதைகள் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அப்பொழுது காசிலிங்கம் அவர்களே 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

நான் எழுதிய 'ஒரு வேங்கை இரை தேடுகிறது' என்ற தொடர்தான் தமிழனில் வந்த முதல் தொடர்கதை. பத்திரிகைத் துறையில் நீண்டகாலம் அயராது உழைத்த திரு எஸ்.கே காசிலிங்கம் அவர்கள் அகவை எண்பதை இந்த வருடம் வைகாசி முதலாம் திகதி அடைந்ததையிட்டு எல்லாம் வல்ல இறைவனை இன்னும் பல்லாண்டு நலத்துடன் வாழ வேண்டி, வாழ்த்தி வணங்குகிறேன்.



**வவுனியூர் இரா.உதயணன்**
(லண்டன்)

# அமுதவிழா நாயகனுக்கு இனிய வாழ்த்து!

பாரீஸ் மாநகரில், 1.5.2025 அன்று அமுதவிழாக்காணும் மூத்த பத்திரிகையாளரும், ஊடகவியலாளருமான திருமிகு. எஸ். கே. காசிலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைக்கின்றேன்.



காலத்தின் கண்ணாடிகளாக திகழ்வன ஊடகங்கள். அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழலிலும், முன்னைய கடினமான காலங்களிலும், யாழ்.ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக அரும்பணியாற்றியவர்.

துணிவு, நுண்ணறிவு, கல்விப்புலமை, ஆகிய ஆற்றலோடு பத்திரிகைத்துறையில் முத்திரை பதித்தவர். சவாலான காலங்களிலும் ஊடக தர்மம் பிறழாமல் பணியாற்றியவர். புலம் பெயர்ந்தும், தன் ஆற்றலை 'பரிஸ் ஈழநாடு' 'தமிழன்' பத்திரிகைகள் ஊடாக வெளிப்படுத்தியவர். பரிஸ் நகரத்தைத் தளமாகக் கொண்டு 'பரிஸ் ஈழநாடு' வெளிவந்த பொழுதிலும், லண்டனையும், பின்னர் பரிஸ் நகரத்தைத் தளமாக்கித் 'தமிழன்' வெளிவந்த பொழுதிலும் அவை ஜெர்மனி வாழ் ஈழத்தமிழ் மக்களையும் கவர்ந்து கொண்டது. அதற்குக் காசி அண்ணா போன்ற பத்திரிகையாளர்களின் பணி இன்றியமையாதவை. இந்தப்பத்திரிகைகைகள் தந்த உந்துதலால் ஜெர்மனி நாட்டில் இருந்து 'தமிழருவி' பத்திரிகையை வெளியிட்டோம். 'தமிழருவி' பத்திரிகையைப் பார்த்துப் பாராட்டி மகிழ்வித்தவர் காசி அண்ணா. இவர் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர் என்பதை இந்த அமுதவிழா மலர் புலப்படுத்தி நிற்கும் என்பதில் சந்தேமில்லை. இவ்வேளையில் நல்வாழ்வின் பயனாக அமுதவிழாக்காணும் அன்புக்குரிய காசி அண்ணாவுக்கு இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நீண்ட ஆயுளோடும், நலத்தோடும் வாழ நயினை நாகம்மாளை வேண்டுகிறேன்.

அன்புடன்,

“தமிழருவி” **நயினை விஜயன்**

தமிழருவி பத்திரிகை, தமிழருவி வானொலி - ஜேர்மனி

எசன் நுண் கலைக் கல்லூரி (1985) - இயக்குநர்

# மட்டு நகர் மண்ணிலும் மணம் பரப்பிய "ஈழநாடு"



ஈழத்தின் அனுபவமிக்க மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு இன்று அமுதவிழாவினை கொண்டாடுவது சாலப் பொருத்தமானதாகவே அமைகிறது. கலைஞர்கள், பல்துறைசார்ந்த ஆளுமையாளர்கள் என்போர் வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டியவர்கள். பல்துறை சார்ந்த பல அறிஞர்கள், பத்திரிகையாளர்கள், நாடகக்கலைஞர்கள், பாடகர்கள், ஊடகத்துறையினர் இந்த பிரான்ஸ் மண்ணிற்குப் புலம்பெயர்ந்து வந்த பின்பும் கூட அவரவர்களுக்கு உரிய துறையினை அவர்கள் தெரிவு செய்து தொலைத்த வாழ்வுக்குள் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்த வகையிலே நீண்ட காலம் யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'ஈழநாடு' பத்திரிகையில் அன்று தன்னை அர்ப்பணித்து, அளப்பரிய பத்திரிகைச்சேவை செய்த எஸ்.கே காசிலிங்கம் அண்ணா அவர்கள் புலம்பெயர்ந்த பின்பும் கூட தன்னுடைய ஆத்மார்த்தமான பணியை விட்டு விடவில்லை. ஒரு பத்திரிகையாளருக்கு இருக்கக்கூடிய அத்தனை தகைமைகளையும் அவர் பெற்றிருந்தார். பத்திரிகைத் தர்மம் என்பது நடுநிலைமையானது. செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் உண்மையை உரக்கச் சொல்வது. எந்தப்பக்கச்சார்பற்றதாகவும் அது அமைய வேண்டும். எந்தவிதமான செய்திகளாக இருந்தாலும் ஊகத்தில் சொல்லப்படும் செய்திகளை தவிர்த்து ஆக்க பூர்வமான உண்மை தன்மை நிறைந்த செய்திகளை துணிந்து எழுதி பிரசுரிக்க கூடிய வல்லமை அந்த பத்திரிகைக்கும் அதில் கடமையாற்றும் பத்திரிகையாளருக்கும் இருக்க வேண்டும். அந்த வகையிலே அன்று யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'ஈழநாடு' பத்திரிகையில் இரவு பகல் பாராது அயராது உழைத்தவர் எஸ்.கே. காசிலிங்கம் அண்ணா. யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' பத்திரிகையை மக்கள் விரும்பி வேண்டிப்படித்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அந்த பத்திரிகையில் வருகின்ற செய்திகள் உண்மைத்தன்மை நிறைந்தவை. அந்தச்செய்திகள் உடனுக்குடன் மக்களை கவருகின்ற வகையிலே தலைப்பிடுவது, அவர்களுடைய எழுத்தாளுமை வடிவங்கள் மக்களை சென்றடைய கூடிய வகையில் இருந்தமையினால் அந்த பத்திரிகை அன்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதெனலாம். யாழ்ப்பாணத்திலிருந்து நாளிதழாக வெளிவந்த ஈழநாடு கிழக்குமாகாணம் குறிப்பாக மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மக்களாலும் ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டது. மட்டக்களப்பிலும் 1999ல் இரா.துரைரட்ணம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு முதலாவது நாளிதழ்

'தினக்கதிர்' வெளிவந்தது. 2000மாம் ஆண்டில் இதன் பிரதம ஆசிரியராக 'ஈழநாடு' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் எஸ்.எம்.கோபாலரட்ணம் அவர்கள் திகழ்ந்தார் என்பதும் வரலாறு. 'ஈழநாடு' மக்களால் வரவேற்கப்படுவதற்கு அங்கு பணியாற்றிய பத்திரிகையாளர்களில் சிறப்பிடம் பெற்றவர்களில் ஒருவராக இருந்தவர் காசிலிங்கம் அண்ணா அவர்கள்.

எமது நாட்டுச் சூழல் காரணமாக நாம் புலம்பெயர்ந்து இந்த ஐரோப்பிய மண்ணிலே கால் பதித்த போதும் கூட கலை கலாச்சார விழுமியங்களை எம் முதுகுகளிலே நாம் சுமந்தே வந்தோம்.

எந்தத்துறை சார்ந்து அங்கு பயணித்தோமோ இங்கும் அதே துறையை பின்பற்றுவதற்கான வழியினையும் ஆர்வத்தினையும் பலருக்கு இப்புலம்பெயர் தேசமும் வழி சமைத்துக்கொடுத்தது எனலாம். அந்த வகையிலே காசிலிங்கம் அண்ணா அவர்களும் அன்று கடமையாற்றிய 'ஈழநாடு' பத்திரிகையை இங்கும் 'பாரிஸ் ஈழநாடு' என்ற பெயரில் சிலரோடு இணைந்து மக்களின் தேவை கருதியும் நமது நாட்டில் இடம்பெறும் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் புலம்பெயர்ந்து பிரிவுபட்டு வாழ்ந்த மக்களை பத்திரிகை ஊடாக ஒன்று சேர்க்கவும், கலைஞர்களை எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாகவும் அந்த நேரங்களில் சிறுசிறு நூல்களாக வெளிவந்து வளர்வதும் தேய்வதுமாக இருந்த காலப்பகுதியில் பத்திரிகையின் அவசியம் கருதியும் உருவாக்கம் செய்வதில் பங்கெடுத்து மனநிறைவோடு சேவையாற்றி வந்தார். 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையை அடுத்து 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பைச் சிரமேற் கொண்டு செயற்பட்டு வந்தார்.

அந்த பத்திரிகை ஊடகத்தினூடாக இலைமறை காயாக இருந்த பல கலைஞர்கள் எழுத்தாளர்கள் வெளிச்சத்துக்கு வந்தனர். விளம்பரத்துக்காகவும் சுயலாபத்துக்காகவும் பிழைப்பு நடாத்தி பத்திரிகை நடாத்தும் பலமுகங்களுக்கு மத்தியில் உண்மையாகவும் வெளிப்படையாகவும் சமூகத்தின் அவலங்களை வெளிப்படுத்தி மக்கள் மேல் உண்மையான பற்றுக்கொண்டு பத்திரிகை தர்மத்தை உயிராய் மதித்து செயற்பட்டதனால் இவர் பலரால் ஈர்க்கப்பட்டார்.

பல மேடைகளில் தனது இனிமையான குரலால் இளைஞனைப்போன்றே உரையாற்றுவார். மக்களை கவரும் வகையில் வானொலி தொலைக்காட்சிகளில் பல செவ்விகளையும் வழங்கி இருக்கின்றார். தன் வாழ்க்கை பயணத்திலும், பத்திரிகை துறையிலும், கிடைத்த அனுபவங்களை பதிவாக்கி 'என்னுள் என்னோடு' என்கின்ற நூலினை வெளியீடு செய்து தனது அனுபவங்கள் மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும், எதிர்கால சந்ததியும் அவற்றை வாசித்து உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்குடன் தமிழில் எழுதிய இந்த நூலினை, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் மொழி பெயர்த்தார். பத்திரிகைத்துறைக்கு மொழியே ஆளுமை செலுத்தும். இங்கு கற்கும் எம் எதிர்காலச் சந்ததிகள் பிரெஞ்சு மொழியில் தான், தம் ஆளுமையைச் செலுத்தி

வருகின்றனர். அவர்கள் எம் நாட்டின் நிலமைகளையும் கலை கலாச்சார விழுமியங்களையும் புரிந்து கொள்ள முன்னோடிகளாய் இங்கு வாழ்ந்து கொண்டு இருக்கும் படைப்பாளிகளின் படைப்புகள் அனைத்தும் அத்துறை சார்ந்து அந்த நாட்டு மொழியில் மொழியாக்கம் செய்யப்படல் வேண்டும். அந்த வகையில் இவரின் சேவை அளப்பரியதே. எழுத்துத்துறையிலும் கலைத்துறையிலும் ஆர்வம்மிக்க கலைஞர்களைத்தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் தன்மை கொண்டவராகவும், மனித உரிமைக்காகவும் சுதந்திரமாக அமைதியாக மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகவும், துணிந்து பத்திரிகை துறையில் பயணம் செய்த எஸ்.கே காசிலிங்கம் அவர்களின் சேவையின் பயணம் முதிர்நிலை நோக்கி நகர்ந்தாலும், அன்றிலிருந்து இன்று வரை அவர் ஆற்றிய சேவைக்காக அனைவரும் ஒன்றிணைந்து கௌரவம் செலுத்துவது தமிழுக்கும் தமிழ் சமூகத்திற்கும் கிடைத்த பெரும்பேறு. இத்தருணதில் என் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு அவர் நீடுழி காலம் இவ்வுலகில் வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.



அன்புடன்,

**நவாஜோதி**

ஒலி - ஒளிபரப்பாளர்,

வானொலி, தொலைக்காட்சி

(பிரான்ஸ்)



**எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது 80வது பிறந்தநாள் கொண்டாட்டம்**

**01.05.2025 –** France

# பத்திரிகைப் பணியே என்றும் தன் பணி என வாழும் காசிலிங்கம்



சமூகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகத்துறையில் பிரவேசித்து பல பத்தாண்டுகள் பணியாற்றி, ஓய்வு வயதைக் கடந்த பின்னரும் அந்தத் துறையோடு தன்னை இணைத்தும் பிணைத்தும் கொண்டு இளைய தலைமுறையினருக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும் எனது உற்ற நண்பர் அனலைதீவு கணபதிப்பிள்ளை காசிலிங்கம் அவர்களின் அமுதவிழாவை ஒட்டி வெளிவர உள்ள சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன். 1970இல் எதிர்பாராத ஒரு சூழலில் நிகழ்ந்த எமது அறிமுகம் பின்னாளில் குடும்ப நண்பர்களாகப் பரிணாமம் அடைந்து. புலம்பெயர்ந்த பின்னரும் இன்றுவரை தொடர்கிறது. 1970ஆம் ஆண்டு நான் கொழும்பு பொது மருத்துவமனையில் மருந்தாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது, ஈழத் தமிழ்ப் பத்திரிகைத் துறையின் முன்னோடிகளுள் ஒருவரான வல்வெட்டி இராஜகோபால் அவர்கள் என்னிடம் ஒரு உதவி கேட்டிருந்தார். இருதய சத்திரசிகிச்சை செய்வதற்காக மருத்துவர் ஸ்ரீபன் அவர்களின் மருத்துவ விடுதியில் காசிலிங்கம் அவர்கள் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகவும், அவருக்கு உடனடியாக குருதி தேவைப்படுகிறது அதற்கு என்னை ஏற்பாடு செய்யுமாறும் கேட்டிருந்தார். வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்த நான் குறுகிய நேர விடுமுறையைப் பெற்றுக் கொண்டு மருத்துவ விடுதிக்குச் சென்று காசிலிங்கம் அவர்களை முதன்முதலில் சந்தித்தேன். எனது குருதிக் கொடையைத் தொடர்ந்து அவரது இருதய சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்து அவர் யாழ்ப்பாணம் திரும்பினார்.

அன்று தொடங்கி இன்று வரையான ஐம்பது வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் வாழ்வின் பல கட்டங்களிலும் தொடர்ந்து சந்தித்துக் கொண்டோம். ஈழநாடு பத்திரிகையில் செய்தி ஆசிரியராக காசிலிங்கம் பணியாற்றிய வேளையில் நான் யாழ் போதனா மருத்துவமனையில் மருந்தாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது அடிக்கடி நேரில் சந்தித்துக் கொள்வோம். குறிப்பாக தினசரி காலையில் நல்லூர் முருகனைத் தரிசிக்க நான் செல்லும் வேளையில் வடக்கு வீதியில் வசித்த காசிலிங்கம் குடும்பத்தினரிடமும் சென்று வருவேன். 1976ஆம் ஆண்டு பாரிய நோய் ஒன்றுக்கு நான் இலக்கானேன். ஆங்கில வைத்தியம் கைவரப்படாமல் இருந்தவேளை என் சொந்த ஊரான கதிரிப்பாய் திரும்பி சில காலம் நான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒருநாள் காசிலிங்கம் என்னைப் பார்ப்பதற்காக தனது குடும்பத்தினருடன் செவ்விளனிக் குலையும்

கொண்டு வீடுவந்தார். எனக்கோ உணவு எதுவும் உட்கொள்ள முடியாத நிலை. சுற்றிவர இருந்த எனது குடும்ப உறவுகள் எனக்கு அவர் கொண்டுவந்த இளநீரைப் பருக்கினர். காசிலிங்கத்தின் மனைவியின் தாயார் என்னுடைய கண்களைத் திறந்து பார்த்துவிட்டு மறுநாள் காலையில் இவர் கண்விழிப்பாரோ, இல்லையோ தெரியாது எனச் சந்தேகக் குறியுடன் சொன்னது மட்டுமன்றி விரைந்து ஏதாவது செய்யுங்கள் என்று கூறி அனைவரையும் எச்சரித்தார். சரியான நேரத்தில் விடுக்கப்பட்ட அந்த எச்சரிக்கையே அன்று எனது உயிரைக் காத்தது எனக் கூறினால் அது மிகையில்லை.

அந்த எச்சரிக்கையின் விளைவாக உருவாகியிருந்த சூழலில் எனது எதிர்வீட்டில் வசித்த எனது ஐயாவின் சகோதரி பிள்ளை ஒருவர் இரவு 11 மணியளவில் நான் படுத்திருந்த எனது தமையன் வீட்டுக்கு வந்து பெடியனை இவ்வாறு வைத்திருக்க வேண்டாம் உடனடியாக கம்பர்மலை பரியாரியிடம் கொண்டு செல்வோம் என வற்புறுத்தினார். உடனடியாக பரியாரியாரிடமும் அழைத்துச் சென்றனர். என்னைப் பார்த்த பரியாரியார் நல்ல காலமாக தற்போது கொண்டு வந்தீர்கள். இல்லாவிட்டால் இன்னும் சிலமணி நேரத்தில் இவரின் உயிர் பிரிந்திருக்கும் எனக் கூறியபடி தாய்ப் பால் ஏற்பாடு செய்யுமாறு கேட்டார். அயலில் வசித்த ஒரு இளந்தாயரிடம் இருந்து பெறப்பட்ட தாய்ப்பாலில் இரண்டு மாத்திரைகளைக் கரைத்து எனக்கு அருந்தத் தந்தார். என்னைப் பரியாரியாரிடம் அழைத்துச் சென்ற எனது தாயார், மாமி மற்றும் எதிர்வீட்டுப் பெண் ஆகியோர் எனது காலடியில் அமர்ந்து இருந்தனர். அதிகாலை நான்கு மணியளவில் மீண்டும் ஒரு தடவை தாய்ப்பால் பெறப்பட்டு மாத்திரைகள் கரைக்கப்பட்டுக் குடிக்கக் கொடுக்கப்பட்டது. காலை ஆறுமணியளவில் என்னைப் பரிசோதித்த பரியாரியார் கண்டம் தப்பிவிட்டது எனக் கூறி மாலை ஆறு மணியளவில் எங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். காசிலிங்கத்தின் மாமியார் உரிய நேரத்தில் வழங்கிய எச்சரிக்கையே அன்று எனது உறவினர்கள் என்னை பரியாரியாரிடம் அழைத்துச் செல்லவும், எனது உயிர் காப்பாற்றப்படவும் காரணமாகியது என்பதை தற்போது நினைத்துப் பார்க்கிறேன். இப்படி எத்தனையோ நாட்கள், வருடங்கள் கடந்து போயின. பாரிசில் ஈழநாடு தொடங்கப்பட்டபோது காசிலிங்கம் அவர்கள் அந்தப் பத்திரிகையின் சுவிஸ் பிரதிநிதியாக என்னை நியமித்து அழகு பார்த்தார். பத்திரிகைப் பணியே என்றும் தன் பணி என வாழும் காசிலிங்கம் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நிறைவாக வாழ அந்த நல்லூரான் கருணை செய்வாராக. வாழ்க வளமுடன். வாழ்க பல்லாண்டு.



அன்புடன்,

**த.நமசிவாயம்**

மாநகராட்சி மூத்த உறுப்பினர்,

ஒலிம்பிக் தலைநகரம்,

லொசான் - சுவிற்சர்லாந்து

# அனலைதீவு மக்கள் ஒன்றியம் பிரான்ஸ்



பத்தெட்டு வயது காணும் பண்பாளர் திருவாளர் கணபதிப்பிள்ளை காசிலிங்கண்ணர் அவர்கட்கு வாழ்த்தும் செய்தியொன்று திக்கெட்டும் நாம் சென்ற போதும் பற்றது மறவாமல் பண்போடு அரவணைத்து ஆளும் தன்மை கொண்ட உறவாளன் அவர். திரு. காசிலிங்கமண்ணர் பிரான்சில் வாழும் அனலை மக்களை ஒன்றினைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எங்களை எல்லாம் ஒன்று சேர்த்து இந்த அனவைதீவு மக்கள் ஒன்றியத்தைத் தொடக்கி அதன் தலைவர் பொறுப்பையும் ஏற்று சிறப்பாக நடாத்தியிருந்தார். அவர் காலத்திலே 'அனலைதென்றல்' என்ற மலரையும் சிறப்பு வெளியீடாக 2014ம் ஆண்டு ஏற்றிவைத்தார். அவர் எங்கு சென்றாலும் நாட்டு மக்களுக்கே பணி என்ற திடசங்கற்பம் கொண்டு செயல்படுவார். மற்றவர்களுக்கு ஆபத்தான காலத்தில் முன்நின்று உதவிசெய்ய தயங்கமாட்டார். அனலை மண்ணுக்காக பாடுபட்டவர் இங்கு வந்தும் பலருக்கும் உதவிபுரிந்துள்ளார். அவர் என்றும் நீடுழி, நோயற்று வாழ்ந்திட அனலை ஒன்றியத்தின் சார்பாவும், எங்கள் குடும்பம் சார்பாகவும், வாழ்த்துகின்றேன்.



**மு.நடராசா**
தலைவர்,
அனலைதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்



**காசிலிங்கம் அவர்களின் உறவு தியாகராஜா மகள் சிவா**

**01.05.2025 -** France

# கலையை நேசிக்கும் பத்திரிகையாளர் காசிலிங்கம் அவர்கள்



ஈழத்தில் பத்திரிகைத்துறையில் மிகக் குறைந்தளவானவர்கள் ஈடுபட்டுவந்த அன்றைய 1967களில் இத்துறையில் விருப்பத்துடன் ஈடுபட்டவர் என நாம் அறிந்து கொண்டவர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். யாழ்ப்பாணத்தில் 1959ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு கூறும் 'ஈழநாடு' பத்திரிகையில் 1967ல் உதவி ஆசிரியராக இணைந்து பணியாற்றிய இவர், பத்திரிகைத்துறையில் பலரை வளர்த்தெடுத்துள்ளார். இவரது 'மாணவர் மலர்கள்' பகுதியில் அன்று மாணவர்களாக இருந்து பங்குபற்றித் தமது ஆக்கங்களை 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதியவர்கள் இன்று புகழ்பெற்ற எழுத்தாளர்களாக இலக்கிய உலகில் வலம் வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைச் செய்திகளாக்குவது மாத்திமல்ல, நம்மத்தியிலுள்ள திறமையாளர்களை இனங்கண்டு, வாய்ப்பளித்து வளர்த்துவிடல் என்பது நாட்டுக்கும் மக்களுக்கும் அவர் சார்ந்த பத்திரிகைத்துறைக்கும் ஆற்றிடும் பெரும் பணியாகும். பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எல்லாத்துறைகளிலும் ஈடுபாடு கொண்டவராக அவதானிக்கப்படுகிறார். அரசியல் விடயங்களில் உள்ளதை உள்ளபடி எழுதி வந்திருக்கிறார். மக்களின் துன்ப துயரங்களுக்குத் தீர்வு காண உரிய இடங்களில் இவரின் எழுத்துகள் துணை நின்றுள்ளன. இவர் சைவத்தமிழ் மக்களின் ஆலயத்திருப்பணிகளிலும் ஈடுபாடுடையவர்.

அனலைதீவு ஐயனாரைக் குலதெய்வமாகக்கொண்டவர். 'ஈழநாடு' பத்திரிகையில் அனலைதீவு ஐயனார் பற்றி அரிய பல கட்டுரைகள் எழுதியுள்ளார். நாம் பிரான்ஸ் நாட்டுக்கு வருவதற்கு முன்னதாக 1981ல் அவர் பிரான்ஸிற்கு வந்துவிட்டார். பரிஸில் எமது 'கலாலயம்கலைக்கல்லூரி' கலைநிகழ்ச்சிகள், அரங்கேற்றங்கள் என்பவற்றுக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர். கலைத்துறையில் உள்ள கலைஞர்களுடன் மிகவும் நெருக்கமாக இருப்பவர். பிரான்ஸில் 'பரிஸ் ஈழநாடு' பத்திரிகை உருவாக்கத்தில் அங்கம் பெற்று உழைத்தவர். எமது 'கலாலயம் கலைக்கல்லூரி' பற்றிய செய்திகள் 'பரிஸ் ஈழநாடு' பத்திரிகையிலும், இவர் ஆசிரியராகவிருந்த 'தமிழன்' பத்திரிகையிலும் வெளிவரக்காரணமானவர். பொது நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் என்பனவற்றில் சந்திக்கும் வேளைகளில் கலைத்துறை தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். நீண்டகால பத்திரிகைத்துறை அனுபவத்தையுடைய மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் 80வது அகவையைப் பூர்த்தி செய்து அமுதவிழா கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. அவர் என்றென்றும் உடல் நலத்தோடும் உற்சாகத்தோடும் வாழ்ந்திட நிறைவாக வாழ்த்துகிறோம்.



'பரதசூடாமணி'

**கௌசலா ஆனந்தராஜா**

இயக்குநர் கலாலயம் கலைக்கல்லூரி - பிரான்ஸ்

# ஈழநாடு தோட்டத்து நறுமலர் காசி



தென்னை பனை உச்சியிலே திங்களுரசும்
திசைதோறும் இசை எழுப்பும் கடலலைகள்
அன்னை மண்ணாம் அனலையம் பதியிலே
அவதரித்த ஆசிரியர் மகன் காசி..

மொழியினை நன்றாய்ப் படிக்க ரசிக்க
வழியென்ன வென வாடிய தமிழர்க்கு
வாய்த்த பத்திரிகை 'ஈழநாடு' என்பர்
அந்தத் தோட்டத்து நறுமலரே காசி..

பூவிலும் மெல்லிய தாய்ப் புன்சிரிப்பு
புகுந்து உள் நோக்கிடும் விழிகள்
நாவினில் நறுங் கனிச் சொற்கள்
நாளும் மறக்க வொண்ணா மனிதன்..

செந்தமிழ் மணக்கச் செகமெலாம் வியக்க
நற்றமிழ் ஏடாய்த் 'தமிழன்' தந்தோன்
'என்னுள்.. என்னோடு..' எனநூல் படைத்தோன்
அமுதவிழாக் காண்கையில் வாழ்த்துவோம்
வாரீர்..!

**வி. ரி. இளங்கோவன்**

..............................



**காசிலிங்கம் அவர்களின் மகன் முகுந்தனின் குழந்தைகள் ஆதிகன், யாழன், அஜனி .**















தமிழகத்திரைப்படப்பின்னணிப்பாடகர்கள்,
இசையமைப்பாளர், கவிப்பேரரசு,
நாடகக்கலைஞர்கள் ஆகியோருடன்..

# தமிழன் வாழ்க! தனித்தமிழாய் வாழ்க!!

.



மண்ணிலே நீரை ஊற்றி
மலர்களே வளரக் கண்டோம்
எண்ணறு மரங்கள் அந்தோ
ஏரியில் இருக்கக் கண்டோம்
தண்டமிழ் வளர்ப்பதற்குத்
தனிமரம் இங்கே ஒன்றிவ்
வண்டமே வியக்கும் வண்ணம்
அமைத்ததே இதழ்கள் இங்கே.
அம்மரம் பூவைப் போல
அடடா பாவிளைக்கும்
அம்மரம் கொடியைப் போல
அணிகளைத் தான்விளைக்கும்
இம்மையில் தமிழ்வளர்க்க
எடுத்தடி வைத்தயிந்த
செம்மொழி காக்க வந்தார்
சிறப்புடை காசிலிங்கம்
.
எங்கிலும் இல்லா ஆர்வம்
இவரிடம் இருப்ப தென்ன
தங்கியே இவர் மனத்தில்
தமிழ்மொழி வாழ்வ தென்ன
அங்கமே சிலிர்க்கும் வண்ணம்
அவர்பணி இருப்ப தென்ன
தெங்கிளம் போலே தாகம்
தீர்த்தநற் சிறப்பும் என்ன

ஆண்டுகள் எண்ப தாகி
அகவையோ உயர்ந்த போதும்
தாண்டிடும் வாழ்நாள் தன்னில்
தளர்வுடல் இருக்கும் போதும்
ஊன்றுகோல் நீயாம் அந்த
உயர்தமிழ் மொழிக்கே என்று
சான்றுடன் தமிழன் என்றும்
சத்திய இதழ்கள் உண்டாம்

கட்டுரை வாழ்த்து சொல்லும்
கவிதைகள் வாழ்த்து சொல்லும்
கொட்டிய செய்தி உன்னைக்
கூப்பிட்டுப் புகழ்ந்து சொல்லும்
எட்டிய வரையு னக்காய்
என்றமிழ்ப் புகழ்ந்து வாழ்த்த
சிட்டிகை அளவே இந்தச்
சின்னவன் வாழ்த்து கின்றேன்

உம்பெரும் பணிகள் வாழ்க
உளத்தினால் உயர்ந்து வாழ்க
செம்மொழி வாழ்வதற்குச்
சீருடன் நீயும் வாழ்க
இம்மையில் நிலைத்து வாழ்க
இதழினை வளர்த்து நாளும்
செம்மையாய் வாழ்க வென்று
சிலிர்த்துநான் வாழ்த்துகின்றேன்
.
தமிழதன் நெஞ்சறிந்துத்
தக்கநல் பணியை செய்யும்
அமிழ்தெனும் உன்றன் நட்பை
அடிமனத் தாலே என்றும்
சிமிழெனும் அஃ.தால் நெற்றிச்
சிறப்புடை திலகம் இட்டு
அமின்மனம் குளிர வாழ்த்தி
அகத்தினால் மகிழ்கின்றேனே.



**தமிழ்நெஞ்சம் அமின்**
**செர்ஜி பிரான்சு**

# பத்திரிகைத்துறையில் பலகாலம் பணியாற்றிய எஸ்.கே.காசிலிங்கம்.



யாழ்.தீவகற்பகம் அனலைதீவு மைந்தன் எனது உறவினரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்கட்கு 80ம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்து அனுப்பி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இவர் பிறப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் இவரது தந்தை எனக்கு ஏடு தொடக்கி வைத்தார். தெற்கு முருகன் கோவில் என அழைக்கப்படும் சக்காதி கலட்டி முருகன் கோவிலில் இது நிகழ்ந்தது. அந்தப் பெருமகனை என்றென்றும் நினைவில் கொள்கிறேன். காசிலிங்கம் எனது மைத்துனர். இவர் இளம் வயதிலேயே 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றச் சென்றுவிட்டார். 'ஈழநாடு' ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராகத் தாயகத்தைவிட்டுப் புலம்பெயரும் வரை பணியாற்றினார். இவர் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றியமை என்பது எமக்கும் அனலை தீவுக்கும் பெருமை சேர்த்தது. நாள் தோறும் நாம் 'ஈழநாடு' பத்திரிகையைப் பார்க்கிறபொழுது காசிலிங்கம் தான் எமக்குத்தெரிவார். அரசியல், சமூக விடயங்கள், கலை, இலக்கியம், ஆன்மீகம் என யாவற்றிலும் காசியின் ஈடுபாட்டைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன், அவற்றைச் சுவைத்தேன் அந்த நினைவுகளை இங்கே பகிர்ந்து மகிழ்கிறேன். காசி புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழ்கிறார். நான் புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்கிறேன். அவர் லண்டன் வருவதும், நான் பரிஸ் செல்வதும் எனப்பயணங்கள் நிகழும். சந்திப்புக்கள் நடைபெறும். பழைய கதைகள் பேசுவோம். காலம் சென்ற ஆசிரியப்பெருந்தகைகள், எனதும் காசியினதும் இரத்த உறவுகள் தர்மலிங்கம், காராளபிள்ளை போன்றவர்களும் சந்திப்பில் இணைவார்கள் உரையாடல் சுவாரஸ்யம் பெறும்.






இப்படிப் பல்வேறு விடயங்கள் காசிக்கு அமுதவிழா வாழ்த்துத்தெரிவிக்கப் பேனாவை எடுத்த பொழுது எண்ணவூற்றுக்களாய் பேனாவழி வந்து எழுத்தாக மலர்ந்தன. காசி என்றதும் கடந்த காலங்கள் நிழலாடுகின்றன. முதுமையடைந்து விட்டோம். ஆனால், வாழ்க்கையில் பலவேறு விடயங்களைச் சாதித்துள்ளோம். காசி பிரான்ஸ்




நாட்டுக்கு வந்து வாழ்ந்து வந்த வேளையில் 1991ல் பரிஸில் இருந்து 'ஈழநாடு' பத்திரிகையை வாரம் தோறும் வெளியிட இருப்பதாகக் கூறிய பொழுது நான் மகிழ்வோடு வாழ்த்தியிருந்தேன். தொடர்ந்து வாரம் தோறும் லண்டனில் இருந்து 'ஈழநாடு' வாசித்து வந்தேன். இதேநேரத்தில் காசி லண்டனிலிருந்து வெளிவந்த 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியரானார். லண்டனில் எனது கந்தோர் 'தமிழன்' பத்திரிகைக்கந்தோராகவும் சில காலம் திகழ்ந்தது. அப்பொழுது காசியின் சுறு சுறுப்பான பத்திரிகைப்பணியை நேரடியாகப் பார்த்தேன். ஒவ்வொரு விடயத்திலும் அவர் மிக ஆழமாகக்கவனம் செலுத்தி அவற்றைப்பத்திரிகையில் பதிவிட்டு வந்தார். இதற்கு ஓர் உதாரணமாக நினைவில் வந்ததைப்பதிவிடுகிறேன். திரு.முருக கிருபானந்தவாரியார் சிவபதம் அடைந்தார் என்ற செய்தியில், திருமுருக கிருபானந்தவாரியார் இரவில் விமானத்தில் பயணிக்கும் பொழுது சிவபதம் அடைந்தார். இறைவன் அவருக்கு எந்தக்கஷ்டத்தையும் கொடுக்காமல் தானே இறங்கிவந்து அழைத்துக்கொண்டார். எப்பொழுதும் இறைவனைப்போற்றும் அவருக்காக இறைவனே இறங்கி வந்ததாகச் செய்தி எழுதியிருந்தார். இவ்வாறு பல்வேறு விடயங்களை காசியின் பத்திரிகைப்பணியில் நான் பார்த்துப் பூரிப்படைந்தேன். அனலைதீவிற்குப் பெருமை தேடித்தந்த பத்திரிகையாளர் என்ற வரலாற்றுக்குரியவராக எஸ்.கே.காசிலிங்கம் உள்ளார். அமுதவிழாக்காணும் அனலைதீவு மைந்தன், எனது மைத்துனன் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு நல்வாழ்த்துகளை என் சார்பிலும், எனது குடும்பத்தினர் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.



**செல்லப்பா யோகராஜா**
முன்னாள் சட்டவாளர் - லண்டன்



**திருவண்ணாமலையில் திருமதி காசிலிங்கம் துவாரகாதேவி**

# அனலைதீவு மண்ணின் அடையாளம் எஸ்.கே.காசிலிங்கம்.



புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் உறவு முறைகள் பேணுவது அருகிப் போன காலத்தில், அனலைதீவு மண்ணின் அடையாளங்களோடும், உறவுசார் நினைவுகளோடும் இப்போதும் எமது மத்தியில் வாழும் ஒரு சிலரில் திரு. காசிலிங்கம் அவர்களும் ஒருவர். காலங்கள் பல பணிகளை எமக்குள் திணித்தபோதும், நடைபெறும் பொது நிகழ்ச்சிகளிலும், குடும்ப நிகழ்ச்சிகளிலும் அவ்வப்போது அவரையும், அவரது குடும்பத்தினரையும் கண்டு மகிழ்வோடு உறவாடுவது வழக்கம். அப்படியான காலத்தில் பிரான்சில் வாழும் எமது மண்ணுக்குரியவர்கள் அனைவரும் இணைந்து 'அனலைதீவு மக்கள் ஒன்றியம்' என்ற பெயரில் ஒன்றிணைந்தோம். அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின் தலைவராக திரு. காசிலிங்கம் அவர்கள் பொறுப்பேற்க, அதன் செயலாளராக அதில் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. 2011 காலப் பகுதியில் உருவான இந்த ஒன்றியம், மூன்று வருடங்களில் தனது முதலாவது விழாவான 'அனலை தென்றல்' அரங்கேறியது. அந்த விழாவில் லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றிய விஞ்ஞானி முனைவர் சிவசம்பு ஆதித்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த விழாவில் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளிலிருந்தும் பலர் வருகைதந்து கலந்து சிறப்பித்திருந்தார்கள். அமுத விழா நாயகனாக திரு. காசிலிங்கம் அவர்களும், அவருக்கு வாழ்த்துக்கூறும் வரிசையில் என் பெயரும் இடம்பெற்றாலும், அன்றைய ஒன்றியத்தின் பங்குதாரர்களாகவும், பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டவர்களாகவும் அனலை மக்கள் அனைவரையும் குறிப்பிட்டுக் கூறலாம். திரு. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எமது ஊரவராக.. இந்த மண்ணில் பல தடங்களை பதிவு செய்துள்ளார். 'அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின' தற்போதைய தலைவராக முன்னாள் பொருளாளர் திரு. மு. நடராசா உள்ளார். 'அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின்' உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், பணிக்குமாக முன்னின்று செயற்பட்ட பலர் தற்போது நம்மிடையே இல்லை. அனலைதீவு சதாசிவ ஆங்கிலப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமார் சி. காராளபிள்ளை, அமரர்களான திரு, திருமதி மகேஸ்வரன் - சுசிலாதேவி (தேவி) ஆகியோரது செயற்பாடுகள் மறக்க முடியாதவை. விழா நாயகன் திரு. காசிலிங்கம் அவர்கள் எமது மண்ணிற்கும், மக்களுக்கும் மறக்க முடியாதவராக மேலும் பல பணிகள் செய்ய இன்னமும் பல்லாண்டு வாழ வேண்டும் என்று அனலை ஐயனாரை வேண்டுகின்றேன்.





**திருமதி. விமலா பாலச்சந்திரன்**
முன்னாள் செயலாளர்
அனலைதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்



# பத்திரிகைத்துறையில் அனுபவம் நிறைந்த எஸ்.கே.காசிலிங்கம்

மதிப்பிற்குரிய மூத்த பத்திரிகையாளர் திரு. எஸ்.கே.காசிலிங்கம்அவர்களது 80வது பிறந்த நாளுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். திரு. காசிலிங்கம் அவர்களை யான் பிரான்ஸில் அகதி அந்தஸ்துக்கோரிய நாட்களிலிருந்து நன்கு அறிந்துள்ளேன். முன்பு யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் கடமை புரிந்த, பாரிஸில் வாழும் சிலரில், திரு. காசிலிங்கம் அவர்களும் ஒருவர். இவர்களில் சிலர் ஒன்றுகூடி 'பாரிஸ் ஈழநாடு' ஆரம்பமாகியது. ஈழநாடு எனும் பொழுது, இது தமிழீழ சரித்திரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. 1981ம் ஆண்டு சிங்கள பௌத்த அரசின் திட்டமிடலில், யாழ் வளைகுடாவில், சிறிலங்காவின் பாதுகாப்புப்படைகளினால் தீக்கிரையாக்கப்பட்ட ஓர் ஊடகம் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அந்த பத்திரிகையில் மிக இள வயதிலேயே உதவி ஆசிரியராகி, ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர் என்பதை அறிந்திருக்கிறேன். பத்திரிகைத்துறையில் அன்று பணியாற்றுவது என்பது இலகுவானது அல்ல. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துப் பணியாற்றவேண்டிய துறையாகப் பத்திரிகைத்துறை விளங்கியது. அவற்றிற்கெல்லாம் ஈடுகொடுத்து பத்திரிகையில் பணியாற்றிய பெருமைக்குரியவராக காசிலிங்கம் அவர்கள் திகழ்ந்துள்ளார். இவரைப் பாரிஸில் பல சந்தர்ப்பங்களில் கண்டிருந்தாலும், பின்னாளில் இவர் ஆசிரியராக இருந்த 'தமிழன்' பத்திரிகைக் காரியாலயத்தில், காலம் சென்ற கல்லூரி அதிபர் சி. காராளபிள்ளை மாஸ்ரருடன் சந்தித்து பேசியமை, இன்றும் நல்ல நினைவிருக்கிறது. எம்மிடையேயான உரையாடலின் பின்னர், காராளபிள்ளை மாஸ்ரர், காசிலிங்கம் அவர்களைப் பார்த்து, "இவரை முன்புகண்ட ஞாபகம் உண்டா" என வினவினார். அப்பொழுது, காசிலிங்கம் அவர்கள், “இவரைப் பல இடங்களில் கண்டிருக்கிறேன், யார் என்பது..” எனப் பதில்கூறியதும், காராளபிள்ளை மாஸ்ரர், எனது தகப்பானரின் பெயரைகுறிப்பிட்டு, “ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கல்விதிணைக்களத்தின் முக்கிய அதிகாரிகளில் இவரின் தகப்பானரான விஸ்வநாதன் அவர்களும் ஒருவர்” என அறிமுகம் செய்தார். காசிலிங்கம் அவர்கள், முன்பு எனது தகப்பானாரை அறிந்திருந்த காரணத்தினால், எமது சம்பாசனை தொடர்ந்தது. இங்கு யான் குறிப்பிட விரும்பும் ஓர் முக்கிய விடயம் என்னவெனில், காசிலிங்கம் அவர்கள் வெளியிட்ட எத்தனையோ செய்திகள் மனதில் உள்ளன. பத்திகையாளர்கள் யாழ் ஈழநாட்டில் கடமை புரிந்த காலத்தில், வாரவாரம், காவல்துறையினருடனான காலந்துரையாடல்களில் கலந்துகொள்வது வழக்கம். அவ்வேளையில் வடமாகாண காவல்துறை தலைமை கண்காணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.சுந்தரலிங்கத்தினால் கூறப்பட்ட ஒரு செய்தி என்னவெனில், 'யாழ் குடாநாட்டில், அவ்வேளையில் சைக்கிள்களவைத் தவிர்ந்த எந்த அசம்பாவிதங்களும் நடப்பதில்லையாம்' இதனை, இன்றைய யாழ்ப்பாணத்துடன் எண்ணி பார்க்கும்பொழுது, யாழ். வளைகுடா இன்றைய காலகட்டத்தில், எப்படியாக மாற்றம் பெற்றுள்ளது என்பதை மூத்த ஊடகவியலாளர்

எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா வாழ்த்தினைப் பதிவு செய்யும் பொழுது எண்ணத் தோன்றுகிறது.

எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் தொகுப்பில் வெளியான 'நிர்மலா'ஏ. ரகுநாதன் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூல் அறிமுகவிழா பரிஸில் நடைபெற்ற பொழுது அதில் கலந்து கொண்டு உரையாற்றியமை பசுமையான நினைவாக உள்ளது. தாயகம் முதல் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் தேசங்கள் வரை பத்திரிகைத்துறையில் மிக நீண்ட அனுபவத்தைக்கொண்டிருக்கும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா வாழ்த்துகள். அவர் நீடூழி வாழ்ந்து, எமது தமிழினத்திற்குத் தொடர்ந்து ஊடக சேவை செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.



**ச.வி.கிருபாகரன்**

பொதுச் செயலாளர் - தமிழர் மனித உரிமைகள் மையம்

TCHR, பிரான்ஸ்



மூதறிஞர் கி.அ.பெ.விஸ்வநாதம் அவர்களுடன் எஸ்.கே. காசிலிங்கம், குமார்ஸ் சொப் தவவிநாயகம் சந்திரகுமார் ஆகியோர்



# பேச்சுடன் நிற்பவரல்ல செயலில் காண்பிப்பவர் பத்திரிகை ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம்

நமது வாழ்க்கைப்பயணத்தில் பேசிக்கொண்டிருப்பவர்களைப் பார்த்திருக்கிறோம். செயற்பட்டுக்கொண்டிருப்பவர்களைப் பார்த்திருக்கிறோம். பேச்சுடன் செயற்பாட்டை மேற்கொள்பவர்களையும் காண்கிறோம். அந்த வகையில் பேச்சையும் செயலையும் ஒன்றாகக் கொண்டிருக்கும் ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே. காசிலிங்கம் அவர்களைக் கண்ட நாள் முதல் இந்த நாள் வரை அவரது உடலில் செயலில் எந்தவித மாற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை. முடிமட்டும்தான் நரை விழுந்திருக்கிறது. அவர் எடுத்த காரியங்களில் சுறுசுறுப்பு! பேச்சிலும் செயலிலும் ஆரம்பத்தில் செயல்பட்டது போலவே இப்பொழுதும் செயல்படுகிறார். இவ்வாறு ஒரு சிலரே உள்ளனர். அந்த ஒரு சிலரில் இவர் மேன்மைமிக்கவர். ஈழத்தில் இளவயதிலேயே பத்திரிகைத்துறையில் கால் பதித்தவர். புலம் பெயர்ந்த பின்பும் அத்துறையோடு பயணித்தவர்-பயணிப்பவர். பத்திரிகைத்துறை சார்ந்தவர்களோடு மட்டுமன்றி கலைஞர்களோடும் அளவு கடந்த நட்பைப் பேணிவருபவர். குறிப்பாக மூத்தகலைஞர்கள் அமரர்களான ஏ.ரகுநாதன், முகத்தார் யேசுறட்ணம், கிறகெறி தங்கராசா, வண்ணைதெய்வம் ஆகியோருடன் நெருங்கிப்பழகியவர். அவர்கள் வாழ்ந்த காலத்திலும், இப்பொழுது அவர்கள் மறைந்து விட்ட பொழுதிலும் அந்தக்கலைஞர்களைப்பற்றி அடிக்கடி பேசிக்கொள்பவர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். "மறைந்த எமது கலைஞர்களை நினைவு கூரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நான் செய்கின்றேன்" என முன்வந்தவர், அதனைச் செயற்படுத்தியும் வருபவர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள். இவர் ஆசிரியராகத் திகழ்ந்த 'தமிழன்'பத்திரிகையில், எங்கள் மூத்த கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' தொடரை அவர் மறைந்து இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நூலாக வெளியிட்டு கலைஞரைப் பெருமைப்படுத்தினார். இவ்வாறு நல் எண்ணங்களோடும் செயற்பாடுகளோடும் வாழ்ந்துகொண்டிருக்கும் பத்திரிகை ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் அமுதவிழா போல் நூற்றாண்டுவிழாவும் சிறப்பாக நடைபெறவேண்டும்.




இனிய பிறந்த நாள் நல் வாழ்த்துகள், வாழ்க வளமுடன்.

அன்புடன்,



**இரா.குணபாலன்**
பிரான்ஸ்



# எஸ்.கே. காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா வாழ்த்து

தமிழ்ப்பத்திரிகை உலகில் எனது பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய எழுத்தாளர், சமூகவியளாளர், இசை ஆர்வலர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் 80வது அகவை நிறைவு விழாவிற்காக இந்த வாழ்த்துரையை எழுதுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். யான் இலண்டனில் வாழ்ந்த காலங்களில் மதிப்பிற்குரிய சட்ட வல்லுனரும், சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாறியவருமாகிய செல்லப்பா யோகராசா ஐயா அவர்களின் மூலம் அன்னாரின் மைத்துனரான பத்திரிகையாளர் எஸ்.கே. காசிலிங்கம் அவர்களின் அறிமுகம் கிடைக்கப்பெற்றேன். அன்று தொட்டு இன்று வரை அண்ணா அவர்கள் எனது இசையின் பால் மிக்க ஆர்வம் உடையவராகவும் எனது இசை பற்றி பலரும் அறிய வேண்டும் எனும் பேரெண்ணம் கொண்டவராகவும் மட்டுமல்லாது, அன்று அவர்கள் எழுதி, நிர்வகித்து, வெளியிட்டு வந்த 'தமிழன்' இதழில் எனது இசைக் கச்சேரிகளைப் பற்றி நல்ல பல விமர்சனங்களை எழுதி, எனது இசை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த பெரியார் என்றால் அது மிகையாகாது.இலண்டனில் 90களில் யானும், திரு யோகராசா ஐயா மற்றும் மறைந்த திரு சுப்பிரமணியக்குருக்கள் ஆகியோரின் ஆதரவில் மாதம் தோறும் இசை நிகழ்சிகளை ஏற்பாடு செய்து, இலண்டனில் அப்போதிருந்த இசை ஆசிரியர்கள் பலருக்கும் மாணவர்களுக்கும் தமது இசையை மெருகேற்றி வாழ வழிவகை செய்திருந்தோம். சுப்பிரமணியம் ஐயாவின் மிக நெருங்கிய நண்பராகிய அண்ணா அவர்கள், எமது செயற்பாடுகளில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். யான் பரீஸ் நகரத்தில் சென் டெனிஸ் இசைவிழா போன்ற பல மேலைதேச இசை அரங்குகளில் பாட வரும்போதும், இசைக்கச்சேரிகள் நிகழ்த்த வரும் போதும் எனது நிகழ்ச்சிகட்குத் தவறாது தனது வாழ்துக்களையும், தனது சமூகத்தினையும் தரும் அவர்கள், தான் சமூகம் அளிக்க முடியாவிட்டால், தொலைபேசியில் அழைத்து நிகழ்ச்சி எப்படி நடைபெற்றது என வினவுவதும் என் இசையின் பால் அவருடைய அசைக்க முடியாத ஈர்ப்பும், அவர் என்மேல் வைத்துள்ள பாசத்தையும் எடுத்துக் காட்டுகிறது. பத்திரிகைத் துறையில் சமநிலை கொண்ட ஆய்வாளர் திரு காசிலிங்கம் அவர்கள். சமுதாய நலன் கருதி ஈழாநாடு பத்திரிகையை மிகச்சிறப்புடன் நடாத்தி வெற்றி கண்டவர். நல்ல இசை ஆர்வம் கொண்டவர், சைவ சமய நெறிமுறைகளைப் பற்றி நீண்டகாலம் திரு. சுப்பிரமணியம் ஐயா எழுதிய கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரித்து சைவ மக்களிற்கு எமது சைவக்கிரிகைகளின் ஆழ்ந்த கருத்தையும், நெறிமுறைகளின் அவசியத்தையும் அறியும் வண்ணம் செய்தவர். இப்படிப் பல மேலான சமூகத்தொண்டுகள் ஆற்றிய ஐயா காசிலிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழிற்கும் எமது சமுதாயத்திற்கும் நீண்ட சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல ஆடல் வல்லானைப் பிரார்த்திக்கிறேன். அவருக்கு அமுதவிழா வாழ்த்துகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாணிக்கம் யோகேஸ்வரன்**
Artistic Director
Global Music Academy, Germany

# அமுத விழா– அகவை 80



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.கே காசிலிங்கம் அவர்கள் எமது நல்ல நண்பர். நட்பின் வயது 50 ஆண்டுகளுக்கு மேல். தேசத்தின் வங்கியான இலங்கை வங்கியின் புத்தூர் கமநலசேவைக்கிளையில் நான் காசாளராக கடமையாற்றிய பொழுது திரு. காசிலிங்கத்தின் நட்பு கிடைத்தது. கதிரிப்பாய் அச்சுவேலியை சேர்ந்த அன்பு நண்பர் தம்பிப்பிள்ளை நமசிவாயம் அவர்கள் இந்த நட்புக்குப் பிள்ளையார் சுழி போட்டார். வங்கி முகாமையாளர் திரு. கந்தையா சின்னையா அவர்கள் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகஸ்தர் திரு. சம்பந்தபிள்ளை விவசாயப்போதனாசிரியர், மற்றும் கமநலசேவை உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இந்த நட்பின் வளர்ச்சியின் பங்காளர்கள். எனது மனைவி நாகேஸ்வரி (ராசாத்தி அம்மா) திரு. காசிலிங்கத்தின் சகோதரர் காந்தி அவர்களுடன் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் வகுப்புத் தோழர் என்பதை நினைவு கூருகிறார். 1977 எமது திருமணம் நடந்த போது திரு. காசிலிங்கத்தினதும் திரு. நமசிவாயத்தினதும் பங்களிப்பு உபசரிப்பிலும் புகைப்படப்பிடிப்பிலும் பிரதிபலித்தது. அனலைதீவு ஐயனார் கோயில் அரங்கம் அமைத்த பெருமையும் உரிமையும் திரு காசிலிங்கத்தையே சேரும் தூரம் ஒருபோதும் நட்பை பிரிப்பதில்லை. புரிந்துணர்வு ஒன்றே அதனை வளர்க்கும். இந்த அடிப்படையில் அமுத விழாக் காணும் அன்பு நன்பர் எஸ்.கே காசிலிங்கம் மனைவி துவாரகாதேவி இருவரும் பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வு வாழ அனலைதீவு ஐயனார், மற்றும் புளியந்தீவு நாகேஸ்வரன் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கிறோம். இந்த நல்ல நேரத்தில் எமது நட்பின் இணைப்பாளராக இருக்கும் சங்குவேலியைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸில் வாழ்பவரும் திரு.காசிலிங்கத்தின் மருமகனுமாகிய, எனது மற்றொரு நண்பர் திரு வஷீகரனின் சேவை மிகவும் பெறுமதி வாய்ந்தது. “இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க”

அன்புடனும் நன்றியுடனும்,

**கந்தசாமி ஐயர் இலட்சுமண சர்மா**

**மனைவி: நாகேஸ்வரி (ராசாத்தி)**

**கொக்குவில்**

**இளமைக்காலம்**



# பேருளர் காசிலிங்கம் அண்ணர்!



அன்பிற்கும் மரியாதைக்குமுரிய திரு. காசிலிங்கம் அண்ணர் அவர்கள் பற்றியும், இந்நொடி வரையான நீண்ட தேனமுத வேளை வரை, பத்திரிகை, நூலாக்கம், ஊடகம், பலரக இலக்கிய அரங்குகள் என அனைத்துத் துறைகளிலும், தமிழ் பேசும் நல்லுலகம் செழிப்புறவென ஆற்றிவரும் பணிகள் பற்றியும் அவ்வுலகே நன்கறியும். “கற்றோரை கற்றோர் காமுறுவர்” என்பர். அவ்வகையில், அண்ணர், தனது மக்களை மட்டுமல்ல, அம்மக்களுக்காக, எவ்வகையிலேனும் பணிகள் புரியும் அனைத்து உள்ளங்களையும் அங்கீகரிப்பவராக, அன்பு செய்பவராக வாழ்ந்து, சிறந்ததோர் முன்னுதாரணமாகத் திகழ்கிறார். மூத்த கலைஞர் அமரர் ரகுநாதன் ஐயாவுக்கும், காசிலிங்கம் அண்ணருக்கும் இடையே பகிரப்பட்ட அன்பும் மரியாதையும் வார்த்தைகளில் அடங்காதவை. அமரர். ரகுநாதன் ஐயாவின் மறைவின் பின்னான காலங்களில், அவர் முன்பு எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்கிற நூலினை, காசிலிங்கம் அண்ணன் மிகுந்த அக்கறையுடன், தனது சொந்தப் பொருட்செலவில், அந்த எழுபத்தாறு ஆண்டு வயதிலும், இந்தியா, இலங்கை எனப் பல பயணங்கள் செய்து, வெளியிட்டமையும், அதன் முறைமையும், “மகன் தந்தைக்கு ஆற்றிடும் உதவி” என்பதற்கு ஈடானது. ரகுநாதன் அண்ணன் இறுதியாக எழுதிய நூல் பற்றிப்பேசியபோது, மிகுந்த




ஆர்வத்துடன், அதன் வேலைகள் முடிந்ததும் தன்னோடு தொடர்பு கொள்ளும்படி கூறினார் காசிலிங்கம் அண்ணன். மனம் நிறைந்த அந்த வார்த்தைகளே போதும், எமக்கு! அவை தொடர்ந்து நடைபோடும் சக்தியை வழங்கும், காசிலிங்கம் அண்ணன் வாழ்நாள் எல்லாம் தொடரும் அவரது நல்லுறவுப் போக்கின் சிறப்பும், அதன் சமூகப் பயன்களும் யாம் கற்றுணரவேண்டிய பாடங்கள்! இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னென நினைக்கிறேன், யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சிலரின் உன்னத ஏற்பாட்டில், அதே கல்லூரியின் பழைய மாணவரான திரு. நடராசா சிறீரஞ்சன் அவர்களின், 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி' என்கிற ஒரு நூல் வெளியிடப்பட இருந்தது. இது, யாழ்ப்பாணத்து மக்களின் வழக்கிலுள்ள, வழக்கொழிந்த, ஒழிந்து கொண்டிருக்கிற, அனைத்துச் சொற்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த அகராதித் தொகுப்பாகும். இதன் வெளியீட்டு நிகழ்வினை, தலைமை தாங்கி நடத்தித் தருமாறு காசிலிங்கம் அண்ணனை விழாக் குழுவினர் அணுகியபோது, அவ்வயதிலும் சற்றேனும் பின்வாங்காது, அவர் முழு மனதோடு வந்து, அவ்விழாவினைச் சிறப்புற

நடாத்தி வைத்தார். இப்படிப்பட்ட பேருள்ளங்களின் வாழ்த்தினாலும் அவர்கள் வழங்கும் நல்லாற்றினாலுந் தான் போலும், திரு. நடராசா சிறீரஞ்சன் அவர்கள்,



குறித்த அகராதியின் இரண்டாவது பாகத்தோடு, பாரிசுக்கு மீண்டும் வருகை தந்து வெளியீடு நடத்தினார். இவ்வாறான பேருளர் எங்கள் காசிலிங்கம் அண்ணர் இன்னும் இன்னும் பல்லாண்டுகள் நோய் நொடிகள், ஏதுமின்றி, தனது உற்றார் உறவுகளோடு பெரு வாழ்வு வாழவேண்டும் என எமது எளிமை நிறைந்த உள்ளத்தால் மனதார வாழ்த்துகிறோம்!

அன்பன் - **பரா**



**எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றி வந்த 1972ல் இருதய சத்திரசிகிச்சை கொழும்பில் நடைபெற்றது. அப்பொழுது காசிலிங்கம் குடும்பத்தினரை மாதக்கணக்கில் தங்களது வீட்டில் தங்க வைத்து உதவிய, காசிலிங்கம் அவர்களின் தாயாரின் ஒன்றுவிட்ட சகோதரி 'கொழும்புக் குஞ்சியம்மா' என்று இவர்கள் அழைக்கும் கமலம்மாவின் புதல்விகள் பேபி, ஜெயா, அவர்களது குழந்தைகள் ஆகியோரை 01.02.2025 அன்று லண்டனில் சந்தித்த வேளையில் எடுக்கப்பட்ட நிழல் படம்**



**'கொழும்பு குஞ்சியம்மா' அவர்களின் வாரிசுகள் வாசன், கரன், கண்ணன், ராஜன் ஆகியோருடன் லண்டனில் 01.02.2025 அன்று பிடிக்கப்பட்ட நிழல்படம்.**



# மனிதப்பண்பை விந்தையாக்கிப்பார்த்த பத்திரிகையாளன்

யாழ்ப்பாணத்தின் தலைப்பகுதியில் பல கல்விமான்களைத் தன்னகத்தே கொண்ட பசுமையான ஊரான அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் திரு. எஸ்.கே.காசிலிங்கம். யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் அவர் சேர்ந்து பணியாற்றிய காலகட்டத்தில் திரு.எஸ்.எம்.கோபாலரத்தினம், திரு.எஸ் திருச்செல்வம், திரு.ஈ.கே.ராஜகோபால், திரு.கே.ஜி.மகாதேவா போன்ற பத்திரிகையாசிரியர்கள் பணியாற்றியிருந்தனர் என்பதை எனது தந்தை அகஸ்தியர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசுவதை அவதானித்திருக்கிறேன். இலங்கையில் எமது இல்லத்திற்குப் பல பத்திரிகையாசிரியர்கள் வருகை தந்து தந்தையாருடன் கலந்துரையாடியிருந்ததையும் பார்த்திருக்கிறேன். நான் வாழ்ந்து வரும் லண்டனிலும் பல பத்திரிகையாசிரியர்கள் எழுத்தாளர்களர்களுடன் அகஸ்தியரின் பரீட்சயத்தால் உரையாடி வருவது என்பது எனக்கு மகிழ்ச்சி தருகின்ற விடயம். அந்தவகையில் பத்திரிகையாசிரியர் எஸ். கே.காசிலிங்கம் அவர்களையும் பாரிசில் நான் வாழ்ந்த காலத்தில் எனது தந்தை அகஸ்தியருடன்தான் முதன் முதலில் சந்தித்தேன். என் தந்தையுடன் பல்வேறுபட்ட கருத்துக்கள் பரிமாறுவதைப் பல தடவைகள் பார்த்திருக்கிறேன். எழுத்தில் எதுவும் பதியப்பட்டு புத்தகம் என்ற ஒரு வடிவம் வராவிட்டால் வரலாறு என்பதே எம்மிடம் கிடையாமலே போய்விடும். உலக விந்தைகளை, உலக மர்மங்களை, உலகத்தின் மகத்தான விடயங்களை, பல்வேறு நினைவுகளையும், பல்வேறு அனுபவங்களையும், அன்றாட உணர்வுகளையும் மொழியும், இலக்கியங்களுமே காலங் காலமாகச் சேகரித்து வைக்கின்றன. ஆரோக்கியமான அத்தகைய செயற்பாடுகளையே இவர்களிடமும் என்னால் பார்க்க முடிந்தது. 1994 ஆம் ஆண்டில் எனது தந்தை அகஸ்தியரின் 'அகஸ்தியர் பதிவுகள்' 'நரகத்திலிருந்து' 'மகாகனம் பொருந்திய'ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா பாரீசில் மிகச்சிறப்பாக நடைபெற்றிருந்தமை மறக்கமுடியாதது. அந்த நூல் வெளியீட்டிற்குப் பத்திரிகையாளரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்களே தலைமை வகித்துச் சிறப்பித்தார். அன்றைய கால கட்டத்தில் ஒரு பத்திரிகையாளனின் அத்தனை பண்புகளோடும் செயற்பட்ட இவர், கலைஞர்களை எழுத்தாளர்களை எப்படி அணுகியிருந்தார் என்பதற்குச் சான்றாகக் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் கூறிய கருத்தை இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.




ஐரோப்பாவில் எங்கள் தமிழ் ஈழத்துக் கலைஞர்களை எந்த ஊடகங்களும் கண்டு கொள்ளாதபோதும் தமிழனில் வாராவாரம் இங்கு வாழும் கலைக் கண்மணிகளை மிகப் பெரிய அளவில் கௌரவித்தவர் காசிலிங்கம். அந்தவகையில் அன்று ஏ.ரகுநாதனின் 60 வருட கலையுலக அனுபவங்களை 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற தொடராக ஆறு மாதங்களுக்கும் மேலாக

தமிழனில் பதிவிட்டவர். ஈழத்து இலக்கிய வாழ்க்கையை மலர்விக்கத் தடையாக இருந்த சக்திகளை எதிர்த்துப் போராடியவரும், முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பிரதிநிதியுமாக இருந்தவரும், தன் இறுதி நாட்களை பாரிசில் கழித்தவருமான ஈழத்தின் மூத்த முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான அகஸ்தியர் அவர்கள் தன் வாழ்வின் நிறைவாக எழுதிய 'மானுட தரிசனங்கள்' என்ற விவரணத் தொடரையும் தன் 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரித்து அவரையும் கௌரவித்து தன்னையும் கௌரவப்படுத்திக் கொண்டவர். ஒரு பத்திரிகையாளனாகவும் ஒரு மனிதனாகவும் வாழ்கின்றவர் திரு. காசிலிங்கம் என்றால் அது மிகையாகாது என்று குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாண வாழ்வியலின் ஆவணப் பதிவாகத் திகழும் எனது தந்தையின் 'மானிட தரிசனங்கள்' என்ற தொடரை (விவரணச் சித்திரம்) கருத்தியல் சிதைந்து மாற்றங்கள் ஏற்பட்ட வேளையிலும், அநாமதேயர்களின் கண்டனங்கள் மத்தியிலும் தமிழன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள் வாஞ்சையோடு ஏற்றுப் பிரசுரித்தமையை நன்றியுடன் இங்கு நான் நினைவிருத்த விரும்புகின்றேன். இதேவேளை 'மானிட தரிசனங்கள்' என்ற அவரது அந்த நூல் குறித்து லண்டன் 'தீபம்' தொலைக்காட்சியின் 'இலக்கிய நேரம்' நிகழ்ச்சியில், விமர்சகர் மு. நித்தியானந்தன் அவர்கள் முன்வைத்துப் பேசியிருந்தார். அவரின் தெளிவான கிரகிப்புடன், கச்சிதமாகவும், நேர்த்தியாகவும் ஒரு மணி நேரம் மிகச் சுவையாக அந்நூல் குறித்துச் சிலாகித்துப்பேசிப் பதிவாக்கியமையையும் நன்றியுடன் இங்கு நினைவிருத்த விரும்புகிறேன்.




2002 ஆம் ஆண்டில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் எழுதி வெளியிட்ட 'என்னுள் என்னோடு' என்ற நூலின் வெளியீடு லண்டனில் நடைபெற்றவேளை நானும் அவ்விழாவில் கலந்துகொண்டமை பசுமையான நினைவாக என்னுள் படர்கின்றது.அவ்வேளைகளில்தான் எழுத்து, மற்றும் ஊடகத்துறையென நான் லண்டனில் கால்பதித்த காலமாகும். ஆனால் இன்றைய நவீன காலத்திலோ எல்லாமே மாறுபட்டு விட்டது. மாற்றங்களுக்கு மத்தியிலும் இலக்கியமும் எழுத்தும் மக்களிடையே வெளிச்சத்தைக் காட்டுகின்றது. மனதில் ஒரு நூலகத்தை வைத்து, அனுபவங்களைச் சேகரித்து நினைவூட்டிக் கொண்டிருப்பவர்கள் இத்தகைய எழுத்தாளர்கள்தான். உண்மைக்குப் புறம்பானவற்றை மறக்க வைக்கின்றது. அவற்றினூடாகவே வாசகனுக்குத் தெளிவு கிடைக்கின்றது. தங்களின் 80 ஆண்டுகாலப் பயணத்தில் மேடும் பள்ளமும் நிறைந்ததாக வாழ்க்கை நகர்ந்திருக்கலாம். தாங்கள் கடந்து வந்த பாதைகள் கரடு முரடானதாகவும் இருந்திருக்கலாம். இவற்றையெல்லாம் கடப்பதே வாழ்க்கையின் பெரிய வெற்றியென எண்ணத் தோன்றுகின்றது. இன்றும் தொடரும் தங்களின் நல்லதொரு அழகான வாழ்க்கையை, நிறைந்த ஆரோக்கியத்துடன் நிலைத்திருக்க எனது அன்புத் தாயார் நவமணியுடன் இணைந்து எமது தந்தை அகஸ்தியர் குடும்பம் அனைவரினதும் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.



**நவஜோதி ஜோகரட்னம்** (லண்டன்)

# அமுதவிழாக் காணும் ஊடகர் எஸ்.கே.காசிலிங்கம் – வாழ்த்துரை



இலங்கையின் முதல் பிராந்திய பத்திரிகையாக 1959இல் மலர்ந்த 'ஈழநாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகவும், இரவுப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றி அனுபவம் பெற்றவர் ஊடகவியலாளர் எஸ்.கே.காசிலிங்கம். தற்பொழுது பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் அவரது அமுதவிழாவை முன்னிட்டு இவ்வுரையினை வழங்குவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எஸ்.கே.ராஜென் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி. 1950களில் இலங்கையில் எந்த ஒரு பத்திரிகையும் தமிழின, மொழி, கலாச்சார மேம்பாட்டுக்காகக் குரல் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்துகொண்ட யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பிரபல ஆயுர்வேத வைத்தியர் கே.சி.சண்முகரத்தினம் அவர்களும், அவரது சகோதரர் கே.சி.தங்கராஜா அவர்களும் இணைந்து தங்களது சொந்த நிலத்தில் தனியான கட்டிடம் ஒன்றை நிறுவி 'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்தனர். 1959இல் வாரப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' குறுகிய காலத்திற்குள்ளேயே, தலைநகர் கொழும்புக்கு வெளியிலிருந்து, அதுவும் தமிழ்ப் பகுதியிலிருந்து வெளிவரும் ஒரேஒரு பிராந்தியத் தமிழ் தினசரி என்ற பெயரை 1961இல் பெற்றுக்கொண்டது. ஈழநாடுவின் பின்னர் பல்வேறு தமிழ்ப் பிராந்தியப் பத்திரிகைகள் வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வெளிவரத் தொடங்கினவாயினும், அவற்றின் வரவுக்கான பாதையை வகுத்துக் கொடுத்த பெருமை ஈழநாடுவுக்கும் அதனை இயக்கிய ஆசிரியர், நிர்வாகக் குழுவினருக்கும் உரியது.

ஈழநாடுவின் ஆரம்ப காலத்திலிருந்து சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக கூடவே பயணித்த ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர் தான் திரு. எஸ்.கே.காசிலிங்கம். 1983 ஆம் ஆண்டில் ஈழத்தமிழ் மக்களின் ஐரோப்பிய புலப்பெயர்வின் விரிவாக்கத்தை அடுத்து புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் வாழ்ந்த நாடுகளிலும், 'ஈழநாடு' தன் கிளைதனைப்பரப்பியது. யாழ்ப்பாண மண்ணில் வேரோடி விழுதெறிந்து ஆலமரமாகவிருந்த 'ஈழநாடு' பத்திரிகைகளின் விழுதுகள் திக்கெட்டும் சிதறி வாழத் தலைப்பட்ட வேளையில் கனடா, பிரான்ஸ் என அவ்விழுதுகள் வேரூன்றி மரமான போதில், 'பாரிஸ் ஈழநாடு' இயக்குநராக இருந்து அதனை வழி நடத்தியவரும் இவரே. பின்னாளில் 'என்னுள் என்னோடு' என்ற பெயரில் அவர் பிரான்ஸிலிருந்து முகுந்தன் வெளியீடாக மார்ச் 2002இல் வெளியிட்ட நூலின் 256 பக்கங்களில், அரிய பல புகைப்பட ஆதாரங்களுடன், தான் நடந்துவந்த பாதையில் பெற்ற அனுபவங்களை பத்திரிகை அனுபவங்கள், அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என்ற மூன்று பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தித் தந்திருந்தார். தனது 'ஈழநாடு' பத்திரிகை அனுபவங்களை முதற் பாகத்திலும், இலங்கையில் 1948ம் ஆண்டு முதல் தற்பொழுது வரை இடம்பெறும் அரசியல் நடவடிக்கைகளின் ஆய்வை இரண்டாவது பாகத்திலும், ஐரோப்பிய நாடுகளில் ஈழத்தமிழர் வாழ்வியல் முறைமைகளையும் வளர்ந்துவரும் தமிழெழுச்சியையும்

வெளிப்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகளை மூன்றாவது பாகத்திலும் தான் கண்டு கேட்ட விடயங்களையும் தொகுத்தளித்திருந்தார். இந்த நூல் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுமிருந்தது. 'என்னுள் என்னோடு' மற்றுமொரு சத்திய சோதனையாக திரு. காசிலிங்கத்தின் பார்வையில் தன் வரலாற்றை பதிவுசெய்திருந்தது.

'ஈழநாடு' ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் குழுவிடம் அடிப்படை வசதிகள் கூட இருக்கவில்லை. தொலைக்காட்சியோ, மடிக்கணனியோ, மொபைல் தொலைபேசிகளோ அற்ற காலம் அது. வெளிநாட்டுச் செய்திகளுக்கு வானொலியை மட்டுமே நம்பியிருந்த காலம் அது. 'ஈழநாடு' தமிழ் மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாக மாற்றவேண்டுமென்ற நோக்கத்தை அடிநாதமாகக் கொண்டிருந்தது. அதனை அமுலாக்கும் கடமை அப்பத்திரிகையை வரையறுக்கப்பட்ட நிதி வசதியுடன் அன்றாடம் நகர்த்திச் செல்லும் சூழ்நிலையே சகல தரத்திலும், சகல பிரிவுகளிலும் பணியாற்றிய ஊழியர்களிடம் காணப்பட்டது. எஸ்.கே.காசிலிங்கம் உள்ளிட்ட ஆசிரிய பீடத்தினரும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ் உணர்வுச் செய்திகள் மட்டுமல்ல, இந்தியா மற்றும் வெளிநாட்டுச் செய்திகளையும் 'ஈழநாடு' வழியாக இவர்கள் மக்களிடம் கொண்டுசென்றார்கள். இன்றுள்ளது போல ஊடகக்கற்கை நிலையங்களோ, பல்கலைக்கழகத்தின் ஊடாக கற்கைப்பிரிவுகளோ அன்றிருக்கவில்லை. ஊடகத்துறையின் நாயகர்களாக சுயம்புகளே ஜாம்பவான்களாக வளர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவராகவே எஸ்.கே.காசிலிங்கமும் இருந்தார். பாதைகளை தாமே உருவாக்கி அப்பாதைகளை தாமும் வெற்றிகரமாகக் கடந்து மற்றவர்களையும் கடந்து செல்ல வழியமைத்தார்கள். அக்காலத்தில், தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு இலங்கை பற்றிய ஆழ்ந்த அரசியல் அறிவு குறைவாகவே இருந்தபோதிலும், இலங்கை தமிழர்களைப் பொறுத்தவரையில், இந்திய நடப்புகளில் மிகுந்த அக்கறை உள்ளவர்களாகவே இருந்தனர். தமிழ் நாட்டில் சி.என்.அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றது முதல் அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்குச் சென்று 3.2.1969இல் உயிர் பிரியும் வரை தமிழ்நாட்டு உணர்வுகளை ஈழத்தமிழ் மக்களிடம் கொண்டுசென்றதில் காசிலிங்கம் உள்ளிட்ட ஆசிரியர் குழுவினருக்கு முக்கிய பங்குண்டு.




இவர் இரவுப் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிய வேளையில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணாவின் மரணச்செய்தியை பெற்றுக்கொள்கிறார். முதலமைச்சராகி குறுகிய காலத்தில் அறிஞர் அண்ணா ஆற்றிய சேவைகளைத் தொகுத்து மிகக்குறுகிய காலத்திலேயே ஈழநாடு பத்திரிகையில் அதனை வெளியிட்டிருந்தார். அக்காலகட்டத்தில் இன்றுள்ள மின்னியல் ஊடக வசதிகளோ, விரல்நுனியில் கிட்டும் உசாத்துணை சாதனங்களின் தகவல்களோ இருந்திருக்கவில்லை என்பதை இங்கு கவனிக்கவேண்டும். ஊடகத்துறையை தொழிலாகவன்றி வாழ்வாகக் கொண்ட ஒருவராலேயே இதனைச் செய்து

காட்டியிருக்க முடியும். திரு. எஸ்.கே.காசிலிங்கம், தனது ஊடகப்பணியின் வாயிலாக சகலமட்டங்களிலும் சுமுகமான உறவினைப் பேணிவந்துள்ளார். அரசாங்க அதிகாரிகளான கல்வித் திணைக்கள ஆணையாளர் சிவநாதன், மாணிக்கவாசகம், தணிகாசலம், மீன்பிடித் திணைக்கள அதிகாரி சத்யபாமா இராமநாதன், காணி அபிவிருத்தி அதிகாரி சம்பந்தன், யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றிய விமல் அமரசேகரா, வேர்ணன் அபயசேகரா, வடமாகாண பொலிஸ் சூப்பிரண்டண்ட் ஆர்.சுந்தரலிங்கம், உதவி அரசாங்க அதிபர் நடராஜா, தலைமைக் காரியாலய அரசாங்க அதிபர் கந்தையா ஆகியோருடன் பத்திரிகைத்துறை சம்பந்தமாக இவர் கொண்டிருந்த தொடர்புகள் இவரது பத்திரிகைப்பணியின்போது நன்கு உதவியிருந்தன. 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற தலைப்பில், ஈழத்துக் கலைவானில் ஆறு தசாப்தங்கள் பயணித்துவந்த அமரர் 'நிர்மலா' ஏ.ரகுநாதன் அவர்களின் வாழ்வும் பணிகளும் தனியொரு நூலாக 234 பக்கங்களில் தொகுக்கப்பட்டு 2022இல் வெளியிடப்பட்டிருந்தது. அந்நூலைத்தொகுத்தவரும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களாவார். கொழும்பு பூபாலசிங்கம் பதிப்பகத்தினர் அந்நூலை வெளியிட்டிருந்தார்கள்.

அமரர் ஏ.ரகுநாதன், தான் வாழும் காலத்தில் 'தமிழன்' பத்திரிகையில் தொடராக எழுதியிருந்த 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற சுயசரிதைத் தொடரை பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்நூல், அமரர் ரகுநாதன் அவர்கள் தொடர்பான மேலதிக தகவல்களும் தொகுக்கப்பெற்று அவரது வாழ்வும் கலைப் பணியும் பற்றிய ஒரு நினைவு ஆவணமாக வெளியிடப்பட்டுள்ளது. அமரர் ஏ.ரகுநாதன் அவர்களின் வாழ்வையும் அவர் ஆற்றிய பணிகளையும் தம்முடனான மனிதநேய உறவுகள் பற்றியும் சக கலைஞர்களும் ஊடகவியலாளர்களுமான ஏ.சீ.தாசீசியஸ், பி.எச்.அப்துல் ஹமீட், சி.மௌனகுரு, க.பாலேந்திரா, எஸ்.எஸ்.குகநாதன், கலைஞர் பரா, ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம், அன்ரன் பொன்ராசா, நாச்சிமார் கோவிலடி இராஜன், உடுவை தில்லை நடராஜா, கி.செ.துரை, வி.ரி.இளங்கோவன், எம்.என்.சிவராம், கலாபுவன், இரா.குணபாலன், சலனம் முகுந்தன், எம்.பி.பரமேஸ், ரதி ருத்திரா, குணபதி கந்தசாமி, கதி செல்வகுமார், விக்ரர், ஈழன் இளங்கோ, மனோ, குணா ஆறுமுகராஜா, பிரபாலினி பிரபாகரன், எம்.பாஸ்கி, முருகபூபதி, துருபன் சிவசுப்ரமணியம், தி.சாம்சன், தம்பையா தயாநிதி, எஸ்.கே.ராஜென், எஸ்.கே.காசிலிங்கம் ஆகியோர் தமது மனப்பதிவுகளாகவே இடம்பெறச் செய்துள்ளனர். நூலின் இறுதிப்பகுதியில் 157 - 235 ஆம் பக்கங்களில் 'தமிழன்' பத்திரிகையில் தொடராக எழுதியிருந்த 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' என்ற சுயசரிதை 25 அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளது. பத்திரிகைப் பணியில் நீண்டகாலம் தளராமல் ஈடுபட்டுவந்துள்ள எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள் தனது எண்பதாவது அகவையை இவ்வாண்டு வைகாசி முதலாம் திகதி எய்தியுள்ளார். ஊடகத்துறையை தன் வாழ்நாள் பணியாக நேசித்துவந்த இந்த முதிய இளைஞரின் பணியைப் போற்றி அவரது ஊடக நண்பர்கள் முன்னெடுக்கும் அமுதவிழா சிறப்புற வாழ்த்தி வணங்குகின்றேன்.



**என்.செல்வராஜா**
நூலியலாளர், லண்டன்



மகள் கலைச்செல்வி, மருமகன் டொக்ரர் குமார்



அருட்செல்வி - அம்புலி, மார்சியல்



மகன் அரவிந்தன், மருமகள் Mamson



மகன் முகுந்தன், மருமகள் தனஜா



தாஜ்மஹாலில் காசிலிங்கம் தம்பதி



தாஜ்மஹாலில் மகன்
முகுந்தனுடன்..

# யாழ்ப்பாணத்தில் உதயமான ஈழநாடு: ஊடகத்தில் பிரகாசித்த எஸ்.கே.காசிலிங்கம்!



ஈழத் தமிழரின் கலாச்சார பண்பாட்டு தலைநகரமான யாழ்ப்பாணத்திலிருந்து மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் நோக்கத்துடன் பத்திரிகைகள் எதுவும் இல்லாத பெரும் குறையைப் போக்க 1959ஆம் ஆண்டில் ஈழநாடு முதலில் வெளிவரத் தொடங்கியது. இந்த ஊடக பாரம்பரியத்தில் உருவாகிய 'எஸ்.கே.காசிலிங்கம்' ஐரோப்பிய நாடுகளிலும் பிரகாசமான ஊடகவியலாளராக மிளிர்கிறார். அவரின் வாழ்க்கையின் உன்னதத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமுத விழா நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையிலும் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையிலும் தன்னை ஊடகவியலாளராக இணைத்துக் கொண்ட எஸ்.கே.காசிலிங்கம் தனது வாழ்க்கையிலும் பத்திரிகைத் துறையிலும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையெல்லாம் தொகுத்து 'என்னுள் என்னோடு' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூல் பற்றிய சிறு பார்வையை இவ்வாக்கம் அலசுகிறது. சாம்பலிருந்து உயிர் பெறும் ஈழநாடு: நம் தமிழ் மண்ணை, நம் தமிழராலேயே, நம் தமிழர் நலன் காத்திட வேண்டுமென்ற பேரவாவின் பேறாய் உதயமானது தான் ஈழநாடு. இப்பத்திரிகை எத்தனையோ இன்னல்களுக்கும் இடர்களுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் சாம்பலிருந்து உயிர் பெற்றுப் பறக்கும் பறவை போன்று உயர உயர பறந்தது என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம். விடிந்தும் விடியாததுமாய் உள்ளூர் பத்திரிகையை வாங்கிப் படிக்குமளவுக்கு ஈழநாடு எம்மவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்றால் அது ஒரு வியத்தகு சாதனை தான். அன்று தேசியத்தில் பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்த தமிழர் விழித்துக் கொண்டனர். யாழில் நாளிதழ் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திய பெருமை ஈழநாடு பத்திரிகையையே சாரும்.




அரசியல் மற்றும் சமூக இடர்ப்பாடுகளையெல்லாம் தைரியமாக ஊடறுத்துப் பத்திரிகையின் இலட்சியத்திற்காய் உழைத்தவர் திரு. காசிலிங்கம் என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.




**தீயில் கருகிய யாழ் நூலகமும் - ஈழநாடும்:** தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகமும், ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜீன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும். சிங்கள அடக்குமுறை அரசுகளின்

தொடர்ச்சியான 1958,1977,1983களில் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சுயந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது. நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது. இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது. இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.




**தமிழரின் குரலாக ஈழநாடு:** தென் பகுதியிலிருந்து வெளிவரும் எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கத் தயங்கியதால், ஈழநாடு தமிழரின் குரலாக யாழில் இருந்து வெளிவந்தது. ஆனாலும் 1960 களில் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு தான் யாழ்ப்பாணத்திலும் மதிப்பளித்தார்கள். ஆனால் அதனை தகர்த்து, பல காலமாக நஷ்டங்களையும், கஷ்டங்களையும் அர்ப்பணித்ததின் பயனாக, வடக்கே ஒரு சூரியனாக ஈழநாடு உருப்பெற்று ஊருக்கெல்லாம் வெளிச்சம் தந்தது. ஈழத் தமிழர்கள் அவ்வெளிச்சத்தின் வழியே நடைபோட்டனர். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் இடத்தை, தனித்துவத்தை - ஈழநாடு பெற்றது என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.

**ஈழநாடும் காசிலிங்கமும்:**

இப்படியாகவே ஈழநாடு வேகமாக ஓடிக்கொண்டிருந்த காலகட்டத்தில் தான் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் ஆசிரியர் பகுதியில் நுழைந்தார். அவரும் ஒரு வேக ஓட்டக்காரர்தான். அவர் நடந்து சென்றதை நான் பார்த்ததில்லை. மிகுந்த மதிநுட்பமும் சுறுசுறுப்பும் கொண்ட திரு. காசிலிங்கம் தொடர்ச்சியாக அவர் ஆசனத்தில் இருந்ததையும் எவரும் கண்டதில்லை. ஆசிரியர் பகுதியில் ஒரு பயிற்சியாளனாகச் சேர்ந்த அவர், ஓரிரு நாட்களிலேயே பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார் என்கிறார் மறைந்த மூத்த பத்திரிகையாளர் சசிபாரதி சு.சபாரத்தினம்.

**என்னுள் என்னோடு:** மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் தனது வாழ்க்கையிலும் பத்திரிகைத் துறையிலும் பெற்றுக் கொண்ட அனுபவங்களையெல்லாம் தொகுத்து 'என்னுள் என்னோடு' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இந்நாலின் என்னுரையில், தான் கண்டுகொண்ட மானிடர்களையும்

பதிவு செய்யும் வகையில் நூலொன்றையாவது வெளியிட வேண்டுமென்று நீண்டகாலமான தனது விருப்பத்தினை இந்நூல் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ஈழநாடு காரியாலயத்தில் காசிலிங்கம் பணியாற்றிய காலத்தில் கிடைத்த அனுபவங்களை நூலாக்கும் தனது ஆசையை 'என்னுள் என்னோடு' என்ற நூல் மூலம் நிறைவேற்றிக் கொண்டுள்ளார். இலங்கை அரசியலில், சிங்கள அரசுகள் திட்டமிட்டு தமிழரை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும், தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற பார்வை காரணமாகவே, ஈழத் தமிழர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதையும் பதிவு செய்ய வேண்டுமென்ற நோக்கமும் இந்நூல் எழுதத் தன்னைத் தூண்டியது என்கிறார் எஸ்.கே.காசிலிங்கம். தன் இதயத்தில் பொதிந்துகிடந்த - மறைந்து கிடந்த - பல நிகழ்வுகளை நூல் வடிவில் கொண்டுவர வேண்டுமென்று விரும்பியதால் இதனை மூன்று பெரும் தலைப்புகளில் படைத்து, 'என்னுள் என்னோடு' என்று எஸ்.கே.காசிலிங்கம் பெயரிட்டு உருவாக்கியுள்ளார். அத்துடன் எஸ்.கே.காசிலிங்கம் சிறு வயதிலேயே பத்திரிகைத் துறையில் நாட்டம்கொண்டு, ஈர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் சேர்ந்து, அங்கு ஏற்பட்ட பலவிதமான அனுபவங்களை, 'பத்திரிகை அனுபவங்கள்' என்ற முதலாம் பாகத்தில் பதிவு செய்துள்ளார். இவற்றில் பெரும்பாலானவை 'பாரிஸ் ஈழநாடு', 'லண்டன் தமிழன்' ஆகிய பத்திரிகைகளில் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

இரண்டாம் பாகத்திற்கு 'அரசியல்' என்று தலைப்பிட்டு, இலங்கையில் 1948ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, மாறி மாறி வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, தமிழர்களை எப்படியெல்லாம் ஏமாற்றி, தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எஸ்.கே.காசிலிங்கம் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார். மூன்றாம் பாகத்திற்கு, 'புலம்பெயர் வாழ்வியல்' என்று தலைப்பிட்டு ஐரோப்பிய நாடுகளில் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், வளர்ந்து வரும் தமிழெழுச்சியையும் எஸ்.கே.காசிலிங்கம் வெளிப்படுத்தி இருக்கிறார். இதில் பெரும்பாலானவை லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்-தமிழ் (IBCதமிழ்) நிகழ்ச்சிகளில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் கலந்துகொண்டு தெரிவித்த கருத்துகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஈழநாடு ஊடகப் பாரம்பரியத்தில் செழித்து வளர்ந்த எஸ்.கே.காசிலிங்கம் ஐரோப்பிய நாடுகளிலும் பிரகாசமான ஊடகவியலாளராக என்றும் மிளிர்கிறார். அவரின் வாழ்க்கையின் உன்னதத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமுத விழாவில், கங்காருகள் தாவித் திரியும், சிங்காரத் தமிழர் வாழும் அவுஸ்திரேலிய மண்ணில் இருந்து வாழ்த்துவதில் மிக்க பெருமை அடைகிறேன்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**
அவுஸ்திரேலியா



# ஈழநாடு எஸ்.கே.காசிலிங்கம்
# தமிழ் ஊடகத்துறையின் தவிர்க்கமுடியாத பேராளுமை!



எஸ்.கே.காசிலிங்கம் என்ற பெயரில் வீரியம், புத்தாக்கம், அர்ப்பணிப்பு உள்ளிட்ட குணங்கள் தொனிக்கின்றன. இவரது பரந்த பயணத்தில் சவால்கள் என்பவை வெறும் தடைக்கற்களல்ல, இவராகவே விரும்பி ஏற்றுக் கொண்ட சாகசங்கள். இந்த ஒவ்வொரு சாகச தருணங்களையும் புத்தாக்க படைப்பு, மாற்றங்களை புகுத்துவது எனப் பயன்படுத்திக் கொண்டவர். தான் வழிநடந்த பல்வேறு துறைகளிலும், சமரசமில்லாத பொறுப்புணர்வுடன், குழுவாக செயல்படுவதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு படைப்புலகின் பல்வேறு பக்கங்களையும் ஆய்ந்தறிந்தவர்.

இவரது இடையறாத முயற்சியின் காரணமாக புலம்பெயர் தமிழ்ப் பத்திரிகை உலகம், சாமானிய மக்களுக்கு புரியும் வகையிலான மொழியாக்கத்தை கையிலெடுக்கத் தொடங்கியது. தமிழ் பேசும் மக்களுக்கு எஸ்.கே.காசிலிங்கம் என்ற பெயர் உத்வேகமூட்டக் கூடியதாக இருந்தது. இவரது தொலைநோக்குப் பார்வை இதழியல் என்பதைத் தாண்டியும் இலக்குகளைக் கொண்டது. தமிழ் மொழியின் தொன்மையை பாதுகாத்துப் பரப்ப வேண்டும் என்ற நோக்கம் இவருக்கு இருந்தது. தமிழ் ஊடகத்துறை பல்வேறு தாக்கங்களை எதிர்கொண்டு அதை உணரத் தொடங்கிய நேரத்தில் தமிழ் மொழியின் தூய்மைக்குப் பாதுகாவலராக விளங்கியவர் எஸ்.கே. காசிலிங்கம். அச்சு ஊடகம், காட்சி ஊடகம் என இரண்டிலுமே இவர் எடுத்த முன்னெடுப்புகள் மொழியின் அடையாளத்தையும் பெருமையையும் மீட்டெடுப்பதாக அமைந்தன. புலம்பெயர் தேசத்தில் இவரது பத்திரிகைப்பணி ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமானதோடு, உலகு தழுவிய தமிழ்ச் சமூகத்துக்குள் பத்திரிகைத்துறையின் தனித்துவத்தை கொண்டு போய் நிறுத்தியமை இவரின் மற்றுமொரு சாதனை. வேற்றுமையில் ஒற்றுமை என்ற எஸ். கே.காசிலிங்கத்தின் நோக்கை தெளிவுபடுத்துவதாகவும் இது அமைந்தது. இதழியல், காட்சி ஊடகம் என்பதைத் தாண்டி தொழில்துறை வல்லுநர், செய்தி ஆசிரியர், அச்சுப் பதிப்பு நிறுவனர் என பன்முகங்களைக் கொண்டவர் எஸ்.கே.காசிலிங்கம். இருப்பினும், இதழியலாளர் என்பதே இவரது பிரதான அடையாளமாக திகழ்ந்தது. பாரீஸ் நகரில் இருந்தாலும் ஐரோப்பிய தமிழ் ஊடகத்துறையின் இணைப்பாளராக செயற்பட்டபோது, இதழியல் துறையில் ஒருங்கிணைப்பு, தொழில் நேர்மை போன்றவற்றைப் பேணியதன் மூலம் சக இதழியலாளர்களால் விதந்தோதப்பட்டார். தமிழ் ஊடகத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியவர்களில் ஈழநாடு எஸ்.கே. காசிலிங்கம் ஒரு முக்கிய பங்களிப்பாளராகத் திகழ்கிறார்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்து, தமிழ் மக்களின் குரலை உலகறியச் செய்யும் பணியில் தன்னை அர்ப்பணித்த இவர், ஊடகத்துறையில் மட்டுமல்லாமல் சமூக, கலாசார மேம்பாட்டிற்கும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். இவரது பணிகள், தமிழ் பத்திரிகைத்துறையின் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக

அமைந்துள்ளன. 20ஆம் நூற்றாண்டின் மத்தியில், இலங்கையில் தமிழ் மக்கள் அரசியல், சமூக ரீதியாக பல சவால்களை எதிர்கொண்ட காலகட்டத்தில், இவர் தனது பணிகளைத் தொடங்கினார். அவரது குடும்ப பின்னணி மற்றும் கல்வி என்பவை இவர் ஊடகத்துறையில் பிரவேசிப்பதற்கு உந்துதலாக அமைந்திருந்தன. எஸ்.கே. காசிலிங்கத்தின் பெயர், ஈழநாடு என்ற தமிழ் நாளிதழுடன் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டுள்ளது. 1959ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் கே.சி. தங்கராசாவால் தொடங்கப்பட்ட இப்பத்திரிகை, கொழும்புக்கு வெளியே இலங்கையில் வெளியிடப்பட்ட முதல் தமிழ் நாளிதழாக வரலாற்றில் இடம்பெற்றது. இதன் பிரதம ஆசிரியர்களாக எஸ்.எம். கோபாலரத்தினம், கே.பி. ஹரன் ஆகியோர் பணியாற்றிய போதிலும், எஸ்.கே. காசிலிங்கத்தின் பங்களிப்பு இதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. ஈழநாடு பத்திரிகையின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சமூக நீதி, கலாசார பாதுகாப்பு ஆகியவற்றை இவர் வலியுறுத்தினார். இவரது கட்டுரைகள் மற்றும் தலையங்கங்கள், அன்றைய சிங்கள பெரும்பான்மை ஆட்சியின் அடக்குமுறைகளுக்கு எதிரான குரலாக ஒலித்தன. ஈழநாடு பத்திரிகையின் மூலம், தமிழ் மக்களுக்கு உள்நாட்டில் மற்றும் உலகளாவிய செய்திகளை துல்லியமாகவும், நம்பகத்தன்மையுடனும் இவர் வழங்கினார். இது, தமிழ் பத்திரிகைத்துறையில் ஒரு புதிய தரத்தை அமைத்தது. அவரது எழுத்துக்கள், கல்வி, சமத்துவம், பெண்களின் உரிமைகள் போன்ற தலைப்புகளை மையப்படுத்தியவை. இது, தமிழ் சமூகத்தில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை பாதுகாக்கும் முயற்சியில் தனது பத்திரிகை மூலம் பல படைப்புகளை இவர் வெளியிட்டார். ஞாயிறு வாரமலரில் வெளியான இலக்கியப் படைப்புகள் இதற்குச் சான்று. தவிர, இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை முன்னிறுத்திய இவரது தலையங்கங்கள், தமிழ் மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தன. 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்ட போது, ஈழநாடு அலுவலகமும் அழிக்கப்பட்டது. இது, இவரது பணிகளுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாக அமைந்தாலும், இவரது உறுதியை அது குலைக்கவில்லை. தாயகச் சூழல் காரணமாக பிரான்ஸ் நாட்டுக்குப் புலம்பெயர்ந்த இவர் 1991 இல் பாரிஸ் ஈழநாடு என்ற பெயரில் தனது பத்திரிகைப் பணியை ஆரம்பித்தார். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னரும், தமிழ் மக்களின் அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக போராடும் ஊடகவியலாளர்கள், இவரை ஒரு முன்னோடியாகக் கருதுகின்றனர். ஈழநாடு பத்திரிகையின் தைரியமான நிலைப்பாடு, இன்றைய தமிழ் ஊடகங்களுக்கு உதாரணமாக உள்ளது. உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் இயங்கும் சில உள்ளூர் பத்திரிகைகள், இவரது பாணியை பின்பற்றி சமூக நீதிக்காக குரல் கொடுக்கின்றன. அதேவேளை, கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் புலம்பெயர்ந்தோர் மத்தியில், இவரின் பணிகள் தமிழ் அடையாளத்தை பாதுகாக்கும் முயற்சியாக பார்க்கப்படுகின்றன. புலம்பெயர்ந்த தமிழ் ஊடகங்கள், இவரது தலையங்க பாணியையும், சமூக விழிப்புணர்வு முயற்சிகளையும் முன்மாதிரியாகக் கொண்டு செயல்படுகின்றன. உதாரணமாக, “தமிழ் வின்ஸ்டர்” போன்ற இணைய ஊடகங்கள், இவரின் பாரம்பரியத்தைத் தொடர்கின்றன.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில், இவரின் பணிகள் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு உத்வேகமாக உள்ளன. இவரது எழுத்துகள் மீதான

நம்பகத்தன்மை, சமூக அக்கறை மற்றும் தைரியமான அணுகுமுறை, சமூக ஊடகங்களிலும் இணையப் பத்திரிகைகளிலும் பிரதிபலிக்கின்றன. தமிழ் ஊடகவியலாளர்கள், இவரை ஒரு முன்னுதாரணமாகக் கருதி, சவாலான சூழல்களிலும் உண்மையை வெளிப்படுத்த முயல்கின்றனர். தொலைநோக்கு கொண்ட அச்சக பதிப்புத்துறையிலும் கோலோச்சிய எஸ்.கே.காசிலிங்கம், வழக்கமான எல்லைகளைத் தாண்டி சவால்களை வாய்ப்புகளாக மாற்றி வளர்ச்சியும் புத்தாக்கமும் படைத்தவர். இவரது அச்சகப்பணி நம்பிக்கை, வெளிப்படைத் தன்மை, இருதரப்பு பலன்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. நெறி நடத்தை மற்றும் பதிப்புத்துறையின் சமூக பொறுப்புணர்வு குறித்து இவர் கொண்டிருந்த உறுதி அனைத்து தரப்பிலிருந்தும் இவருக்கு ஆதரவைப் பெற்றுத் தந்தது. அநீதி மற்றும் கொடுங்கோன்மைக்கு எதிரான தடுப்பரணாக இருந்து சாதித்துக் காட்டிய எஸ்.கே. காசிலிங்கம், அனைத்து மக்களின் ஆதரவைப் பெற்றவராகத் திழ்ந்தார். 1984ம் ஆண்டு அரசியலில் அசாதாரண சூழல் நிலவிய போது மக்களின் நன்மைக்காக நியாயத்தின் பக்கம் நின்று போராடி, அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஒடுக்கப்பட்ட, குரலற்ற மக்களின் பக்கம் நின்று சலிப்பின்றி குரல் கொடுத்ததால், இருள் சூழ்ந்த நேரங்களில் விளக்காக அறியப்பட்டார். இன்று எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் மரபைப் பின்பற்றி சமூகம் மற்றும் கலாசாரத்தில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தை தொடர உறுதி பூண்டுள்ள தமிழ் ஊடகத்துறை அவருக்கு மதிப்பளிக்கும் நோக்கில் பாராட்டு விழா ஏற்பாடு செய்து மலர் வெளியிடுவதை அவருக்கான ஓர் அங்கீகாரமாகவே நான் உணர்கின்றேன். சம காலத்தில் வாழும் மாபெரும் ஊடக மேதை அவர்! உன்னதமான எழுத்துலகக் கருவூலம்! மனித நேயத்தை வலியுறுத்தி நின்ற மகத்தான ஊடகப் பேராளுமை! என்றென்றும் இவர் ஈழத் தமிழ் மக்கள் மனதில் நிலைத்திருப்பார்! இவரது பணிகளைப்போற்றி, வாழும் போதே வாழ்த்துதல் அவரது மக்கள் சேவைக்கான மாமகுடமாகும்! வாழ்த்துவதில் மகிழ்வுறும்



**அகதித்தமிழன்**

**கிருஸ்ணா அம்பலவாணர்**

**சுவிற்சர்லாந்து**

**காசிலிங்கத்தின் பேரக்பிள்ளைகளுடன் அவரின் தம்பி அமரர் மணியின் பேரப்பிள்ளைகள்.**



# என் எழுத்தார்வத்தை ஊக்குவித்தவர் ஊடகவியலாளர் எஸ்.கே.காசிலிங்கம்!



ஊடகவியலாளர் எஸ்.கே.காசிலிங்கத்தை என்னால் ஒருபோதுமே மறக்க முடியாது. ஒரு வகையில் என் எழுத்துலக வாழ்க்கைக்குச் சுழி போட்டது ஈழநாடு மாணவர் மலர் என்றால், அதற்குக் காரணமானவர் அப்போது மாணவர் மலருக்குப் பொறுப்பாக இருந்த 'காசி' அவர்கள். அண்மைக்காலம் வரையில் அவரைக் காசி என்னும் பெயரிலேயே அறிந்து வைத்திருந்தேன். எஸ்.கே.காசிலிங்கம்தான் அவர் என்பதை அறிந்திருக்கவில்லை. ஈழநாடு மாணவர் மலர் காசி அவர்கள் எப்போதும் என் மனத்திலிருப்பார். காரணம் - நான் வாசிக்கத்தொடங்கிய காலத்தில் பத்திரிகை, சஞ்சிகைகளில் வரும் சிறுவர் பக்கங்களை விரும்பி வாசிப்பேன். கண்ணன், அம்புலிமாமா போன்ற சஞ்சிகைகள், பொன்மலர், பால்கன் காமிக்ஸ் சஞ்சிகைகள் இவையெல்லாம் அப்பருவத்தில் என் மனங்கவர்ந்த சஞ்சிகைகள். இவற்றுடன் கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் போன்றவற்றின் தீபாவளி மலர்களின் சிறுவர் பக்கங்கள், கல்கி சஞ்சிகையில் வாரா வாரம் வெளியான 'சிறுவர் விருந்து' பக்கங்கள், ராணி வாராந்தரியில் வெளியான சிறுவர் பக்கங்கள், இவற்றுடன் ஈழநாடு பத்திரிகையின் வாரமலரில் வெளியாகும் 'மாணவர் மலர்' பக்கம் ஆகியவற்றை விரும்பி வாசிப்பேன். கல்கி சிறுவர் விருந்தில் வெளியாகும் வாண்டுமாமாவின் எழுத்துகள் எனக்கு மிகவும் பிடிக்கும். அதுபோல் ராணியின் சிறுவர் பக்கத்தில் வெளியான தொடர்கதையான 'பேசும் சிலை' இன்னும் நினைவிலுள்ளது.

அவ்விதம் நான் ஈழநாடு மாணவர் மலரை வாசிக்கத்தொடங்கியபோது அதற்குப் பொறுப்பாக இருந்தவர் காசி. காசி அண்ணா, காசி மாமா என்றெல்லாம் இல்லாமல் வெறும் காசி என்றே அவர் பெயர் பிரசுரமாகியிருக்கும். அப்போது மாணவர் மலரில் எழுத்தாளர் நெல்லை க.பேரன் 'உங்களுக்குத்தெரியுமா?' என்னும் தலைப்பில் வாராவாரம் எழுதிக்கொண்டிருந்தார். அப்போது நான் வவுனியா மகா வித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அவ்வருடத் தீபாவளியையொட்டி நவம்பர் 1 1969 வெளியான ஈழநாடு மாணவர் மலரில் காசி அவர்கள் தீபாவளி மலராக வெளிவரவிருக்கும் மாணவர் மலருக்குத் 'தித்திக்கும் தீபாவளி' என்னும் தலைப்பில் கட்டுரையெழுதி, நவம்பர் 5ற்கு முன் அனுப்பி வைக்கும்படி கோரியிருந்தார். நானும் அதற்கொரு கட்டுரையினை 'தீபாவளி இனித்தது' என்னும் தலைப்பில் எழுதி அனுப்பினேன். 16.11.1969 ஈழநாடு மாணவர் மலரில் வெளியான இது பற்றிய காசி அவர்களின் பின்வரும் அறிவிப்பை என்னால் ஒருபோதுமே மறக்க முடியாது:

மாணவ மணிகளே! உங்கள் அனைவருக்கும் 'மாணவர் மலரின்' தீபாவளி வாழ்த்துக்கள். 'தித்திக்கும் தீபாவளி' என்னும் தலைப்பில் கட்டுரைகளை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தேன். வந்து சேர்ந்த கட்டுரைகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவரான மகாலிங்கம் இளங்கோவன், கரணவாய் தெற்கு கரவெட்டி கண.மகேஸ்வரன் ஆகிய இருவரது

கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து மகேஸ்வரனின் கட்டுரையைக் கடந்த வாரம் பிரசுரித்திருந்தோம். இவ்வாரம் மறுகட்டுரை பிரசுரமாகின்றது. வவுனியா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 6-ம் வகுப்பு மாணவரான என்.கிரிதரனின் கட்டுரையும் பாராட்டுக்குரியது. கட்டுரைகளை ஆர்வத்துடன் எழுதி அனுப்பிய மற்றைய மாணவ மாணவர்களுக்கும் எமது உளம் கனிந்த பாராட்டுக்கள். மலருக்குத் தொடர்ந்து விஷ்யதானங்களை அனுப்பி வையுங்கள். அடுத்த வாரம் சந்திப்போம், - காசி - என் கட்டுரை தேர்வாகிப் பிரசுரமாகியிருக்கவில்லை., ஆனால் அது பாராட்டுக்குரியதாக, என் பெயர் குறிப்பிடப்பட்டு மாணவர்மலரில் வெளியான காசி அவர்களின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் எழுத வேண்டுமென்ற பேரார்வத்தைத் தந்தது.ஒருவேளை அவ்விதம் காசி அவர்கள் என்னை அவ்வயதில் ஊக்குவிக்காதிருந்தால் தொடர்ந்தும் எழுதியிருப்பேனோ தெரியாது. அந்த ஊக்கத்தின் விளைவாக நான் ஈழநாடு மாணவர் மலரில் தொடர்ந்தும் எழுத ஆரம்பித்தேன். என் பால்ய, பதின்மப் பருவங்களில் ஈழநாடு மாணவர் மலரில் எனது ஆக்கங்கள் பல, கவிதைகள்,கட்டுரைகளென வெளியாகியுள்ளன. எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைத்தொடர்ந்து விமலா அக்கா என்பவர் ஈழநாடு மாணவர் மலருக்குப் பொறுப்பாகவிருந்தார்.சில வருடங்களுக்கு முன்னர் முகநூலில் என் ஈழநாடு மாணவர் மலர் அனுபவங்களை எழுதியபோது காசி அவர்களைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அதனை வாசித்த எழுத்தாளர் இளவாலை எஸ்.ஜெகதீசன் அவர்கள் காசி யார் என்னும் விடயத்தைக் கூறும் தகவலொன்றினை அனுப்பியிருந்தார். அதில் அவர் “உங்கள் எழுத்துலக வாழ்விற்கு கால்கோள் இட்ட திரு எஸ்.கே.காசிலிங்கத்தின் படமும் சிறு செய்தியும் இன்றைய ஈழநாடு பத்திரிகையின் (20.03.2022) பதினாறாம் பக்கத்தில் உள்ளது.” என்று குறிப்பிட்டிருந்தார். அப்போதுதான் நான் மாணவர் மலர் காசி அவர்கள் யார் என்னும் விபரத்தை அறிந்தேன். மாணவர் மலரில் காசி அவர்கள் எஸ்.கே காசிலிங்கம் என்னும் பெயரிலும் எழுதியிருக்கின்றார். ஆனால், எங்குமே காசி யார்? என்னும் விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அக்காலகட்டத்தில் ஈழநாடு பத்திரிகையில் அவ்வப்போது அவரது கட்டுரைகள் வெளியாகிக்கொண்டிருந்தன. குருகுல வாசக் கல்வி முறை, மகாத்மா காந்தி பற்றிய அவரது கட்டுரைகள் வெளியாகியிருந்தன. அவரும் மாணவர் மலருக்கு நான் எழுதத்தொடங்கிய காலத்தில் பொறுப்பாக இருந்த காசி என்பரும் ஒருவரே என்பதை அப்போதுதான் அறிந்தேன். மகிழ்ச்சியடைந்தேன். பத்திரிகை, சஞ்சிகைகள் எப்போதுமே சிறுவர்களுக்கான பக்கங்களை ஒதுக்க வேண்டுமென்பதை எப்போதும் நான் வலியுறுத்துபவன். நாளைய உலகின் நாயக, நாயகியரை உருவாக்குவதில் ஆரோக்கியமான பங்களிப்பை நல்குபவை


மாணவர் மலர்

மாணவ மணிகளே!

உங்கள் அனைவருக்கும் 'மலரின்' தீபாவளி வாழ்த்துக்கள்! 'ஜொலிக்கும் தீபாவளி' என்னும் தலைப்பில் கட்டுரைகளை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தேன். வந்து சேர்ந்த கட்டுரைகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த மாணவரான மகாலிங்கம் இளங்கோவன், கரணவாய் தெற்கு கரவெட்டி கண.மகேஸ்வரன் ஆகிய இருவரது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து மகேஸ்வரனின் கட்டுரையைக் கடந்தவாரம் பிரசுரித்திருந்தோம். இவ்வாரம் மறுகட்டுரைபிரசுரமாகிறது. வவுனியா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 6-ம் வகுப்பு மாணவரான என். கிரிதரனின் கட்டுரையும் பாராட்டுக்குரியது. கட்டுரைகளை ஆர்வத்துடன் எழுதி அனுப்பிய மற்றைய மாணவ மாணவிகளுக்கும் எமது உளம் கனிந்தபாராட்டுக்கள். மலருக்கு தொடர்ந்து விஷயதானங்களை அனுப்பிவையுங்கள். அடுத்த வாரம் சந்திப்போமே!

— காசி

அப்பக்கங்களே. அதனால்தான் சிறுவர் இலக்கியம், இலக்கியத்தில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. குழந்தைகளுக்காக எழுதும் படைப்பாளிகள், ஊக்குவிக்கும் கலை, இலக்கிய ஆளுமைகள் போற்றுதலுக்குரியவர்கள். எஸ்.கே.காசிலிங்கம் அவர்களையும் அத்தகைய ஆளுமையாளர்களில் ஒருவராகவே நான் அடையாளம் காண்கின்றேன். என் தனிப்பட்ட இலக்கியப் பயணத்திற்குச் சுழி போட்டவர் அவர். அவருக்கு அமுதவிழா கொண்டாடப்படும் இச்சந்தர்ப்பத்தில் அவரை மனம் நிறைய வாழ்த்துகிறேன். வாழ்த்துகள்.



**வ.ந.கிரிதரன்** (கனடா)





எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் 80வது பிறந்தநாள் கொண்டாட்டம் அவர் பிரான்ஸில் வாழ்ந்து வரும் வேமா (Vémars) நகரில் நடைபெற்றவேளையில் குடும்பவைத்தியர் பகநெல்லி (Dr.Paganelli ) தம்பதி, பல் வைத்திய தம்பதி வருகை தந்து வாழ்த்தியிருந்தனர்.



# அமுதவிழா காணும் ஐயா காசிலிங்கம் அவர்களை வாழ்த்துகின்றேன்.

இலங்கையில் 1950, 1960களில் வெளிவந்த பத்திரிகைகள் மிகவும் சோதனைகளைச் சந்தித்தும், தடைகளை சந்தித்தும் தான் வெழிவந்து கொண்டிருந்தன அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையும் அந்தக் காலகட்டத்தில் பல தடைகளையும், சோதனைகளையும் சந்தித்து வெளிவந்து கொண்டிருந்தது. 1958ல் ஈழகேசரிப்பத்திரிகை நிறுத்தப்பட்டது. அதில் பணிபுரிந்த ஆசிரியர் அரியரத்தினம் ஈழநாடு பத்திரிகையில் இணைந்தார். திரு.கே.பி ஹரன் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியரானார். பல சிரமங்களுக்கு மத்தியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகையில் ஏ. எஸ் முருகானந்தன், எஸ். எம் கோபாலரத்தினம் ஈ.கே ராஜகோபால் ஆகியோரின் வரிசையில்தான் ஐயா காசிலிங்கம் அவர்களும் இணைந்து கொண்டார். இவர்களைத் தொடர்ந்து திருவாளர்கள் திருலோகமூர்த்தி. அய்யாத்துரை, திருச்செல்வம், யோகநாதன், ஜெகதீசன் என்று பலரும் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றி இருக்கிறார்கள். இவர்களில் பலர் இன்று மறைந்துவிட்டனர். சிலர் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் ஒருவர்தான் ஐயா காசிலிங்கம் அவர்கள். இவர் தற்பொழுது பிரான்ஸ் நாட்டில் வாழ்கின்றார். ஆளுமைமிக்க ஓர் எழுத்து ஊடகர் என்பது எழுத்துத் துறையில் இருக்கும் அநேகம் பேருக்கு காசிலிங்கம் ஐயா அவர்களைத் தெரியும். ஐயாஅண்மையில் அகவை எண்பதை தொட்டிருகின்றார். அதனால் இவருக்கு அமுதவிழா நடைபெறுகின்றது. அமுத விழா காணும் ஐயா காசிலிங்கம் அவர்களுக்கு நெஞ்சம் நிறைய வாழ்த்துகள் சொல்லி மகிழ்கின்றேன். காசிலிங்கம் ஐயா அவர்கள் சிறந்த எழுத்தாளுமை கொண்டவராகவும் நிர்வாகத் திறன் மிக்கவர் என்றும் ராஜகோபால் அண்ணா சொல்லுவார். ராஜகோபால் அவர்களும் காசிலிங்கம் அவர்களும் இணைந்து லண்டனில் தமிழன் என்ற இதழையும் ஒரு காலகட்டத்தில் வெளியிட்டார்கள். யாழ். ஈழநாடு பத்திரிகையில் இருந்து சென்ற எஸ்.கே.காசிலிங்கம், எஸ்.எஸ். குகநாதன், இரத்தினம் கந்தசாமி ஆகியோருடன் சிவகுரு பாலச்சந்திரன் அவர்களும் சேர்ந்து பிரான்ஸில் பாரீஸ் ஈழநாடு வார இதழை வெளியிட்டார்கள். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஆட்சி புரிந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன காலத்தில் யாழ்ப்பாணம் ஈழ நாடு பத்திரிகைக் காரியாலயம் எரியூட்டப்பட்டது (1981). வடபுலத்தில் எத்தனையோ எரியூட்டல்கள், எறி கணை வீச்சுகள், குண்டுத் தாக்குதல்கள் காலம் காலமாக நடந்தாலும், ஊடகவியலாளர்களும், பொதுமக்களும், இளைஞர்களும் அழிக்கப்பட்டாலும் வெட்ட வெட்டத் தளைக்கும் வாழையைப் போல அவற்றிலிருந்து மீண்டு, தமிழ் பத்திரிகைகள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. இன்று இணைய இதழ்கள் பெருகிவிட்டன. அறிவியல் யுகத்தில் இன்று பல புதுமைகள் நடந்தாலும் அறிவார்ந்த எம் முன்னோடிகளை நாம் நினைத்து அவர்கள் பாதையில் செல்வதே நல்லது. அந்த வகையில் மூத்த பத்திரிகை ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை வாழ்த்துவோம் வணங்குவோம். அமுதவிழா காணும் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் நூறாண்டுகாலம் வாழ பிரார்த்திப்போம்.



**கோவிலூர் செல்வராஜன்**

லண்டன்



# வாழ்த்துரை

ஊடகவியலாளரும் சமூக சேவையாளருமாகிய சபாபதி கணபதிப்பிள்ளை காசிலிங்கம் அவர்களின் எண்பதாவது அகவை நிறைவையொட்டி வெளியிடப்படும் அமுதவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் இலங்கையின் தீவுப்பகுதிகளில் ஒன்றான அனலைதீவில் பிறந்து வளர்ந்தவர். சைவத்தமிழ் மரபில் பண்பாட்டுச்செம்மையில் மேலோங்கி நின்ற ஆசிரியத் தம்பதி கணபதிப்பிள்ளை சியாமளவல்லி ஆகியோரின் சப்தசுரங்களான ஏழு ஆண்பிள்ளைகளில் நான்காவதாக, நடுநாயகமாகத் தோன்றியவர். இவருக்கு நேரே மூத்ததாகப் பெண் ஒருவர் பிறந்து சிறு வயதில் காலமாகிவிட்டார். உள்ளூர் சதாசிவ ஆங்கில மகாவித்தியாலயத்தில் பயின்றபின் உயர்கல்விவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்றுத்தேர்ந்தவர். சிறு வயதிலிருந்தே பேசுவதிலும் எழுதுவதிலும் வாசிப்பதிலும் ஆர்வங்காட்டிய இவர், 1967ஆம் ஆண்டளவில் தனது 22வது வயதில், அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'ஈழநாடு' தினசரியின் ஆசிரியகுழுவில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டார். பத்திரிகை ஜாம்பவான்களாகிய அரிய ராஜரட்ணம், கே.பி.ஹரன், எஸ்.எம். கோபாலரட்ணம் (கோபு), 'சசிபாரதி' எஸ்.சபாரத்தினம் போன்றவர்களின் வழிகாட்டுதல்களில் தன்னைச் சிறந்ததொரு பத்திரிகையாளனாகப் புடம்போட்டுக்கொண்டார். துணிவு, நேர்மை, நடுநிலை, அச்சமின்மை ஆகிய பண்புகள் சிலருடன் கூடப்பிறந்தவை. ஊடக அறம் என்பதை உயிர்போலக்கருதிச் செயற்பட்டார். ஏராளமான கட்டுரைகளையும் செய்திகளையும் தயாரித்தளித்தார். சுறுசுறுப்பும் விடா முயற்சியும், கொடுமைகண்டு பொங்கும் குணமும், பிறர் ஈன நிலை கண்டு துள்ளும் மனப்பாங்கும் சிலருக்குப் பத்திரிகையுலகில் நல்ல நண்பர்கள் பலரை ஈட்டித்தந்தது. மாறாக இவரது நெற்றிக்கண் பார்வையைத் தாங்காமல் சிலர் பகமை கொண்டும் செயற்பட்டனர்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முளைகொண்ட காலகட்டத்தில் நடுநிலையாக உண்மைச் செய்திகளை வெளியிடுவதென்பது யாழ்ப்பாணத்தமிழ்ப் பத்திரிகையொன்றுக்குத் தர்மசங்கடமாகும். தாமெழுதிய செய்தியின் உண்மையை நிரூபிக்க நீதிமன்றப்படியேறவேண்டிய தேவையும் காசிலிங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. எண்பதுகளின் முற்கூறுவரை சுமார் 15 ஆண்டுகாலம் 'ஈழநாடு' உதவி ஆசிரியர் பணி, நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டுக்குக் குடும்பத்தினருடன் சென்றதோடு முடிவுக்கு வந்தது. பேசிய வாயும் எழுதிய கையும் ஓய்ந்திருக்காது என்பது போலப் புலம்பெயர்ந்த நாட்டிலும் இவரது எழுத்தும் பேச்சும் தீவிரமாகத் தொடர்ந்தது. எஸ்.எஸ்.குகநாதன், சிவகுரு பாலச்சந்திரன் போன்றவர்களுடன் சேர்ந்து 'பரிஸ் ஈழநாடு' பத்திரிகையை நடத்தினார். சிலகாலம் அதில் நீடித்த பின்னர், லண்டனில் இவரது நண்பர் நடத்திவந்த 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுச்செயற்பட்டார். இந்த முயற்சியும் சிறிது காலமே தொடர்ந்தது. எஸ்.

கே.காசிலிங்கம் அவர்கள் ஐரோப்பிய எழுத்தாளர் வட்டத்திலும், ஊடகத்துறையிலும் பிரபல்ய முகமுடையவராக மாறினார். ஏடுகள், சிறப்பு மலர்கள் போன்றவற்றுக்கு எழுதுவதிலும், இலக்கிய வெளியீடுகள், கூட்டங்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதைக் கடமையாகக்கொண்டார். தமிழகத்துக்கு அடிக்கடி மனைவியுடன் சென்று வந்தார். அங்கு பல்துறையினருடனும் நட்பை வளர்த்துக்கொண்டார். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் தங்கியிருந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோரைச் சென்று பார்த்து உதவி வந்தார்.நான் எழுதிய 'உடுமலை தந்த கவிமலை' எனும் பழம்பெரும் திரைப்படக்கவிஞரின் கவிவரலாறு பற்றிய நூலின் வெளியீட்டுக்கான சகல முயற்சிகளையும் செய்திருந்தார். 2018ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதியன்று சென்னையில் வெளியீட்டுவிழாவைத் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். தோழமை பதிப்பீடான இந்நூலின் வெளியீட்டில் திராவிடர் கழகத்தலைவி, வழக்கறிஞர் அ.அருள்மொழி, எழுத்தாளர் பிரபஞ்சன், கவிஞர் யுகபாரதி, திரைப்பட இயக்குநர் சிதம்பரம், மக்கள் தொலைக்காட்சியைச் சேர்ந்த சுந்தரபுத்திரன் முதலிய இலக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டமை இவரது உழைப்பின் வெற்றியாகும். நூலாசிரியரான நான் உடல் நிலை காரணமாக விழா நடைபெற்ற பொழுது சென்னைக்கு செல்ல முடியாதிருந்த வேளையில் இவரே முன்னின்று இப்பணிகளை நிறைவேற்றியமை என்றும் மறக்க முடியாதது. ஊர்ப்பாடசாலையான சதாசிவம் மகாவித்தியாலயத்துக்கு வெளியிடங்களிலிருந்து வந்து கற்பிக்கும் ஆசிரியர்கள் நலனுக்காக, எனது கோரிக்கையை ஏற்று பல ஆயிரம் ரூபா பெறுமதியில் கட்டில்களையும் மெத்தைகளையும் வாங்க உதவினார். ஊரிலுள்ள பல இலட்சம் ரூபாய் செலவில் திருத்தியமைக்கப்பட்ட இவரது வீட்டினை மாணவர்கள் விடுமுறை நாட்களிலும், மாலை வேளைகளிலும் கல்வி கற்பதற்காகத் தனியார் வகுப்புகளை நடத்த இலவசமாகத் தந்துள்ளார். நல்லூர் பிரதேச கிராம அலுவலகர் ஜெகதீஸ்வரன்அவர்களது வேண்டுகோளை ஏற்று கொரோனாக் காலங்களில் மூன்று தடவைகள் வறுமைக்கோட்டின் கீழுள்ள சில குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் பொருட்டு பல ஆயிரம் ரூபாய் பணத்தினை உதவியிருந்தார். இவரொருபுறம் சமூகப்பணியிலீடுபட, குடும்பத் தலைவர் என்ற வகையில் மூன்று பெண்களும், இரண்டு ஆண்களுமான பிள்ளைகளுக்குக் கல்வி பெறச்செய்து, தொழில் தேடச் செய்து, திருமணம் முடித்து வைத்து, பேரச்செல்வங்களால் இன்புற்று, நல்ல குடும்பம், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் என்றவாறு வாழ்ந்து வரும் இவர் இன்னும் பல ஆண்டுகள் உளநலம், உடல்நலம் ஆகியவற்றுடன் வாழ்ந்து, தனது குடும்பத்துக்கும், தமிழ்ச்சமுதாயத்துக்கும், குறிப்பாக ஊடக உலகிற்கும் அரியபணியாற்ற எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுவதோடு, 'பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்னும் வள்ளுவர் வாசகத்தின்படி வாழ்ந்துவரும் இம்மனிதர் பல்வளம் பெற்று நீடூழி வாழவும் இவரது அமுதவிழாவும், சிறப்பு மலர் வெளியீடும் பெருமை பெறவும் வாழ்த்துகிறேன்.



கலாநிதி, பண்டிதர்

**செ.திருநாவுக்கரசு**

பகுதி நேர விரிவுரையாளர்

யாழ்.பல்கலைக்கழகம்.

ஓய்வுநிலைப் பிரதியதிபர்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# அனலைதீவு சொந்தம் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா நல்வாழ்த்துகள்



ஈழத்தின் வடபகுதித் தீவுகளில் அனலைதீவு சிறப்புப்பெற்றது. பல அறிஞர்களையும் கற்றறிந்த பெரியோர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது அனலைதீவின் மகத்துவத்தையும் சிறப்புக்களையும் பாதுகாக்கும் பெருந்தகைகளில் ஒருவராக 'ஈழநாடு' எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைப் பார்க்க முடிகிறது. பிரான்ஸில் தோற்றம்பெற்ற அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின் பணிகளில் முன்னின்று செயற்படுபவர். அதன் போசகராக இருந்து தனது ஆலோசனைகளை வழங்கி வருகிறார். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலம் பொன்னானது. இவர் தனது பத்திரிகை எழுத்துக்கள் மூலம் அனலைதீவுக்குப் பல நன்மைகள் கிடைக்க வழி செய்தவர் என்பதை இங்கு பதிவு செய்வதில் மகிழ்வடைகிறேன்.

எமது அடுத்த தலைமுறை எமது முன்னோடிகள் பற்றி அறிந்துகொள்வதற்கு இது போன்ற பதிவுகள் அவசியமானவை. எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் பத்திரிகையாளர் என்பதால் சகல துறைசார்ந்தவர்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தொடர்பான தங்கள் பார்வையை பதிவு செய்வார்கள். அவற்றை எதிர்கால சந்ததி அறிந்து கொள்கின்ற பொழுது அவை அவர்களுக்கு பெரும் வழி காட்டியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.அன்புக்கும் நட்புக்கும் அனலைதீவு சொந்தம் என்று சொல்வதற்கும் உரியவரான எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அமுதவிழா நல்வாழ்த்துகள்.



**மு.சிவதாஸ்**
பரிஸ் அறிவாலயம்



# பிறந்தநாள் வாழ்த்து

## 01/05/2025



அனலை மண்ணின் மைந்தனாய் பிறந்து,
பிரான்சின் தலைநகர் பாரிசில் தனது
80ஆவது அகவையை சிறப்பாகக் கொண்டாடும்
திரு. கணபதிப்பிள்ளை காசிலிங்கம் அவர்களை
அனலைதீவு கலாசார ஒன்றியம் – பிரித்தானியா
அனலை மக்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் மனம் கவர்ந்த, இலங்கையில் இருந்து வெளியான பிரபல்யமான ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராக அனலைதீவைச் சேர்ந்த இவர் கடமையாற்றியுள்ளார் என்பதை அறிந்து நாம் பெருமை கொள்கின்றோம். திரு காசிலிங்கம் அவர்கள் பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் அனலைதீவின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் குறிப்பாக சதாசிவ மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்ய தனது எழுத்தாற்றலால் அளப்பரிய தொண்டாற்றியவர். அதுமட்டுமன்றி ஆசிரியர் தங்களுக்கு. சாதிவெறித் தலைதூக்கியபோது அதனை நாசூக்காக அணைத்துக் கொடுத்தார் என்ற பதிவுகளையும் நாம் அறிகின்றோம்.

அனலைதீவு கலாசார ஒன்றியம் பிரித்தானியா அனலைதீவு மாணவர்களின் வளர்ச்சிக்காக கலைவாணி கல்வி நிலையத்தை திறந்து வைத்தபோது ஆசிரியர்களிடம் இவரது வாழ்த்துகள் வாழ்த்து கிட்ட. அவர்களது ஆதரவுத்தனமாக எங்கு இயலுமான முதல் எல்லை சேர்க்கப்படுத்தியுள்ளார். அனலைதீவு கலாசார ஒன்றியம் - பிரான்சின் இன் தலைவர் பொறுப்பில் இருந்தபோது அனலை மக்களை ஒன்றுதிரட்டி அனலைத் தென்றல் என்ற கலைநிகழ்வை நடத்திப் பெரும் பங்காற்றியவர்.

இவ்விதம் அனலை மண்ணிற்கு பெரும் தொண்டாற்றிய கணபதிப்பிள்ளை காசிலிங்கம் அவர்களை நோய்நொடியின்றி இன்பமே சூழ மேலும் பல ஆண்டுகள் வாழ இறைவன் பிரார்த்தனையோடு வாழ்த்துகின்றோம்.

கலா சோமசுந்தரம்,
தலைவர்,
அனலைதீவு கலாசார ஒன்றியம் – பிரித்தானியா

# இனிய அமுத விழா வாழ்த்துகள்

அனலையூர் தந்த பெருமகனார். அண்ணன் காசிலிங்கம் பிறந்த மண்ணுக்கும் தமிழ் மொழிக்கும் அரும்பணி ஆற்றி ஊர் போற்றும் உத்தமராய்த் திகழ்கிறார். அவருக்கு அகவை எண்பது அதனால் அமுத விழா காணும் இவ்வேளையில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம். அனலைதீவு நயினாதீவு அருகருகே அமைந்தவைஅதுவே நம்மையும் புலம் பெயர் தேசத்தில் இணையவைத்துள்ளது. பிறந்த மண் கடந்து புலம்பெயர் மண்ணிலும் மண் வாசனையுடன் தமிழ் மணம் வீசி பரிஸ் ஈழநாடு வெளியிட்டு பத்திரிகைத்துறை காத்த வித்தகன் காசிலிங்கம் என்று விடயம் தெரிந்தோரெல்லாம் பாராட்டும் செயல்வீரனாய்த் திகழ்கின்றீர். அன்பான மனைவி, பாசமிகு பிள்ளைகள், நேசமிகு பேரர்கள், பாங்குடனே நண்பர்கள் குழாம் உற்றார் உறவினர்கள் என நிறை வாழ்வு கண்ட பெருமகனே அமுத விழா அடுத்து நூறாண்டு விழா கண்டு வளமும் நலமும் பெற்று வாழ்க என அனலை ஐயனார் இன்னருள் வேண்டி வாழ்த்துவதில் நெஞ்சம் நிறைந்து மகிழ்வடைகின்றேன்.

**கோபாலபிள்ளை இரத்தினசபாபதி**
**தலைவர்,**
**நயினாதீவு அபிவிருத்தி கழகம் - பிரான்ஸ்**

# அறிவின் சுடர் எஸ்.கே.காசிலிங்கம்

ஈழநாடு தமிழன் ஆகிய ஏடுகளில்
ஆசிரியப் பணியில் இருந்தீர்கள்
அகவை எண்பதை அடைந்து
அமுதவிழாவை காண்கின்றீர்கள்
அகவை என்பது அச்சிடாத கவிதை
அதன் ஒவ்வொரு வரியும்
ஞாலத்தின் ஞானம்
வெள்ளை தலை முடியில்
வெண்ணிலாவின் வீசல்
சுருக்கங்களில்
சூரியனின் கையெழுத்து..

உங்கள் எழுத்து ஊடக உழைப்பு
உங்கள் முகத்தில் எழுத்தரங்கம்
போடுகின்றன
உங்கள் அகவை அறிவின் சுடராக
ஒளிரட்டும்
நிலத்திலும் புலத்திலும்
பத்திரிகை உலகில் பரிமளித்த
தங்களின் அகவை எண்பது
தமிழின் அங்கீகாரம் ஆகும்
ஆயிரம் பிறைகள் கண்டுவிட்டீர்கள்
நோய் நொடியின்றி
நூறாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றேன்

**கோவிலூர் செல்வராஜன்**



எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது
80வது பிறந்தநாள் கொண்டாட்டம்
01.05.2025 - France














80வது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களது உறவுகள்
01.05.2025- France



# அனலைதீவு காசிலிங்கம் நல்லூரிலும் புகழ் பெற்றார்

சகோதரர் காசிலிங்கம் அவர்கள் தமது 80 ஆவது வயதை நிறைவு செய்கின்ற நாளிலே அவரைப்பற்றிய சில நினைவுகளைப்பதிவு செய்து கொள்வது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. முதற்கண் அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அமைவதாக என வாழ்த்துகின்றேன். சும்மா சொல்லப்படாது. மனுஷன் ஒரு நாளைக்கு சென்னையில் ஓர் நூல் வெளியீட்டு விழாவில் நிற்பார் இன்னொரு நாள் லண்டனில் நம்மவர் சந்திப்புகளில் கலந்து கொள்ளுவார். பம்பரமாக சுழன்று செயல்படுகின்ற ஆரோக்கியமும் அங்கீகாரமும் நிறைய அமைந்திருக்கிறது பாராட்டத்தக்கது. 1970 களில் இதயத்துவாரத்திற்கு சிகிச்சை செய்து கொண்டவர். இவ்வாறு சுறுசுறுப்பாக இருப்பது ஆச்சரியமே. இவர் இலங்கையில் இளையவராக வாழ்ந்த காலங்களிலிருந்து அவரை அறிவேன். எம் பாடசாலைக்கு அருகாமையிலேயே தான் அவர்கள் வாழ்ந்த வீடு இருந்தது. இவர் எமது ஊரின் மூத்த ஆசான் கணபதிப்பிள்ளை வாத்தியார் தம்பதிகளின் மகனாவார். எமது வகுப்பறையிலிருந்து குறுக்காக ஒரு 100அடி தூரத்தில் அவர்கள் வீட்டு அடுக்களை அமைந்திருந்தது. கணபதிப்பிள்ளை வாத்தியாருக்கு எல்லோரும் ஆண் பிள்ளைகள். அடுக்களை அமர்க்களப்படும். கணபதிப்பிள்ளை வாத்தியார் பெஞ்சாதியும், அவரும் ஆசிரியை. அனைலைதீவின் முதலாவது ஆசிரியை என்ற பெருமைக்குரியவர். அவர், தன் கீச்சுக்குரலால் அங்கே அமைதியை நிலநாட்ட முயற்சிப்பார். எப்படியோ அவர்களை அந்த அம்மா சமாளித்தார்கள்.

இது 1960ம் ஆண்டளவிலான பதிவு. காசி அண்ணன் யாழ்ப்பாண ஈழநாடு பத்திரிகை உதவி ஆசிரியப் பணிக்காலம் மனதில் பதியத்தக்கதாக இருந்தது. பாலைதீவுக் கடல் பயணத்தில் படகு விபத்தில் இறந்தவர்கள் மற்றும் நயினை யாத்திரிகர் சம்பந்தப்பட்ட அனர்த்தங்கள் உட்பட்ட பல விடயங்கள், இவர் மனதை உருக்குகின்ற மாதிரி செய்தியாக வெளியிட்டமை ஞாபகத்தில் இருக்கின்றது. ஈழநாடு காசிலிங்கம் என்ற பெயர் அந்தக்காலத்தில் இவரைக் குறிப்பதாக இருந்தது. களையான முகம் கலகலப்பான பேச்சு எப்போதும் பேச்சில் ஏதாவது புதினம் அடிபட்டுக்கொண்டே இருக்கும். இந்தக்காலத்தில் தான் இவருக்கும் பால்கார பொன்னுத்துரையின் மகள் துவாரகா மீது காதல் ஏற்பட்டது என்று நினைக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் வீட்டுடன் இவருக்கு பெண் அமைந்தது பெரியளவில் கதைக்கப்பட்டது. பால்கார பொன்னுத்துரையின் தடை முயற்சிகள் அடிபட்டுபோயின. நான் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்த போது காசிலிங்கம் அங்கு படித்ததை நான் காணவில்லை. இவரது அண்ணன் சிவனடியான் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வட பிராந்திய விவசாய உற்பத்தி சம்மேளனத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது நல்லூர் சங்கிலியன் வீதியில் அவரது மனைவி பிள்ளையுடன் வசித்துக்கொண்டிருந்ததாகவும், காசிலிங்கம் அங்குதான் பரமேஸ்வரா கல்லூரியில் (தற்போதைய யாழ், பல்கலைக்கழகம்) படித்துக்கொண்டிருந்ததாக பின்னர்

அறிந்தேன். சங்கிலியன் வீதிக்கு அடுத்த தெருவின் பெயர் பண்டாரகுளம் வீதி. இங்கு 1967 முதல் காசிலிங்கம் வாழ்ந்து வந்திருக்கிறார். இவரது வீட்டுக்கு முன்னால் உள்ள காணியை எனது அக்கா ஞானாம்பாள் விலைக்கு வாங்கி வீடு கட்டி அங்கு வாழ்ந்து வந்தார். அப்போது காசிலிங்கத்திடம் 'மொறிஸ் மைனர் கார்' ஒன்று இருந்தது. 2001 இல் நான் சங்கிலியன் வீதிக்கு முன்னால் கோயில் வீதியில் வீடு கட்டி அங்கு வாழத் தொடங்கினேன். அதனால், பண்டாரகுளம் வீதியைச் சேர்ந்தவர்கள் என்னுடன் பழகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அப்போது ஒருவர், காசிலிங்கம் பற்றி என்னுடன் பேசும்போது, காசிலிங்கம் இப் பகுதியில் பிரபலமானவர் என்றும், எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை உடையவர். அக்காலத்தில் இதே வீதியில் இரண்டு பேரிடம்தான் கார் இருந்தது. ஒன்று இவரிடம் இருந்தது. மற்றயது கந்தையா ஓவசியரிடம் என்று சொன்னது மட்டுமல்ல, ஓவசியர் வீட்டாருடன் நெருங்கிப் பழகுவார் என்றும், தேவை ஏற்படும்போது இவரது காரை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதுண்டு என்ற தகவலையும் என்னுடன் பகிர்ந்து கொண்ட போது, அனலைதீவைச் சேர்ந்த ஒருவர் நல்லூரில் பிரபல்யமானவராக இருந்திருக்கிறார் என்று மகிழ்ச்சியடைவதுண்டு. இதுமட்டுமல்ல, திருநெல்வேலி இராஜவீதியில் அமைந்துள்ள அரசாங்க குடியேற்ற திட்டத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக காசிலிங்கம் இருந்தபோது, அந்தக் குடியிருப்பில் ஏற்படக்கூடிய சர்ச்சைகளை சுமூகமான முறையில் தீர்த்திருக்கிறார் என்ற தகவலையும் சொன்னார். ஒருநாள், சிலர் இவரது நல்லூர் வீட்டுக்கு வந்து, ராஜவீதியில் உள்ள ஒரேயொரு கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு சிறுபான்மை இனத்தவர்களை தடை செய்திருக்கிறார்கள் என்று புகாரினைத் தெரிவித்தனர். இதனைக் கேட்டதும், நேரில் அங்கு சென்று அவர்களை தண்ணீர் அள்ள வைத்த சம்பவத்தையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார் அந்த நண்பர். இதில் குறிப்பிடக் கூடிய விடயம் என்னவென்றால், அந்த கிணறு உயர் சாதி என்று கூறப்படும் ஒரு ஐயருக்கு சொந்தமானதாகும். இதன் பின், இவரது தலைமையில் இயங்கிய அபிவிருத்திச் சங்கத்திடம் அப் பகுதியில் 5கிணறுகளை அமைக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என்ற தகவலையும் அந்த நண்பர் என்னுடன் பகிர்ந்துகொண்டார். எங்கள் ஊரில் மீனவர் குடும்பத்தினர் அதிகமில்லை. 3அல்லது 4 குடும்பத்தினர்தான். சிறிய வள்ளத்தில் மீன் பிடிப்பதுண்டு. மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவர் 15 - 20மீன்பிடி வள்ளங்களுடன் சுமார் 200 தொழிலாளர்களுடன் அனலைதீவு மேற்கு ஊர் பகுதியில் வாடி அமைத்து 6 - 7மாதங்கள் தங்கியிருந்து தொழில் செய்வது வழமை. எனது தகப்பனார் 50 சதம் என்னிடம் தந்து மீன் வாங்கி வருமாறு என்னை அனுப்புவார். எனது வீட்டுக்கு அண்மையில் உள்ள அந்த வாடிக்குச் சென்று, அந்த முதலாளியிடம் 50 சதத்தைக் கொடுத்துவிட்டு, கைகளைக் கட்டியவாறு ஒரு மூலையில் நிற்பேன். அவர் “அப்பையா பொடி, அதில் கிடக்கும் வாவல் மீனில ஒன்றை எடுத்துக்கொண்டு போ” என்று சொல்வார். அந்த மீனை எடுத்துச் செல்வேன். எனது தகப்பனார் பெயர் பொன்னம்பலம். ஆனால், எல்லோரும் அவரை 'அப்பைய்யா' என்றே அழைப்பதுண்டு. இப்படியாக, அனலைதீவின் நினைவுகள் என் மனதில் ஓடிக்கொண்டிருக்கிறது. அனலைதீவு ஐயனார் கோவில்தான் முதலில் ஞாபகத்துக்கு வரும். ஐயனாரின் திருவிழா ஆரம்பித்துவிட்டால், அந்த 10 நாட்களில் அனலைதீவு கலகலப்பாக இருக்கும். வெளியூர்களில் கடமை புரியும் அரசாங்க ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள் அனலைதீவில் கூடுவது வழமை. இரவு பகலாக நடக்கும் சின்னமேளம் மற்றும்

நாதஸ்வரம் - மேளக் கச்சேரிகளை கண்டு களிப்போம். இரவிரவாக கண்விழித்த களைப்பில ஆலயவீதிகளில் மறுநாள் காலை வரை மூக்கு வழிய வழிய நித்திரை கொள்ளும் சிறுவர்களை காணமுடியும். இந்த அனுபவம் எனக்கு ஏற்படவில்லை. ஏனென்றால், ஆலயத்தின் மேற்கு வீதியில் எனது அண்ணன் செல்லத்துரை அவர்களின் வீடு இருந்தது. அந்தக் காலத்தில், போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் 'லோஞ்'என்று அழைக்கப்பட்ட படகுகள் ஓரளவு நல்லதாக இருந்தது. ஆனால் தற்போது, இந்த நவநாகரீக உலகில், தொழில்நுட்ப வசதிகளுடனும், வெளி நாடுகளில் பெரும் வசதிகளுடன் வாழ்கின்ற சந்தர்ப்பம் நமது ஊரவர்களுக்கு கிடைத்திருந்தும், இந்த படகுச் சேவை முன்னரைவிட தரம் குறைந்துள்ளது என்பது வருத்தமான செய்தியாகும். 'எழுதாரகை' என்ற பெயரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கப்பலைப் போல், குளிர்சாதன வசதியுடன் அரசாங்கம் கொடுத்திருந்த போதிலும், ஒரு சில வாரங்களில் அந்த சேவையை நிறுத்திவிட்டனர். அதற்காக செலவிடப்படும் எரிபொருளுக்கான வருமானம் கிடைப்பதில்லை என்பது அரசாங்கத்தின் பதிலாக உள்ளது. அக்காலத்தில், காசிலிங்கம் ஈழநாடு பத்திரிகையில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது, இது போன்ற செய்திகளை வெளியிட்டு அரசாங்கத்தில் பல நிவாரணங்களை பெற்றுத் தந்து கொண்டிருந்தவர் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர விரும்புகின்றேன்.

காசி அண்ணன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலங்கள் பசுமையாக எனக்கு மனதில் இருக்கின்றது. அவர்கள் பிரான்ஸ் நாட்டுக்கு சென்ற பின்னர் அவருடைய சாதனைகள் தொடர்பாக எனக்கு பெரிய அளவில் தகவல் இல்லை. என்றாலும் வெற்றி பெற்ற பத்திரிகையாளராகவும் மூத்த பத்திரிகையாளராகவும் ஐரோப்பா, கனடா, இந்தியா என பல நாடுகளிலும் சுற்றித்திரிகிறார் என்பது மகிழ்ச்சியை அளிக்கின்றது. காசி அண்ணன் நீண்ட காலம் நிலைத்து வாழ்ந்து தம் எழுத்துலகப் பணியை முன்னெடுக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



அன்பன்,

**வி.பி. பாலசிங்கம்** - நல்லூர்
இலங்கை நிர்வாக சேவை உறப்பினர்,
யாழ்ப்பாண மாநகர ஆணையாளர்,
கிழக்கு மாகாண பிரதம செயலாளர்,
கிழக்கு மாகாண நிர்வாக சேவை ஆணைக் குழுவின் தலைவர்



# தமிழ்மன்றம் பிராங்பேர்ட் (கலை கலாச்சாரம் விளையாட்டு) எஸ்.கே.காசிலிங்கம் அவர்கட்கு தமிழ்மன்றத்தின் வாழ்த்து

இப் பொன்னான நன் நாளில் அமுத அகவை காணும் திரு கணபதிப்பிள்ளை காசிலிங்கம் அவர்களை உளமார வாழ்த்தி மகிழ்வதில் தமிழ்மன்றம் பெருமைகொள்கிறது. நிலத்தில் ஈழநாடாக புலத்திலும் ஈழநாடாக பின் தழிழனாக பத்திரிகைத்துறையில் தாய்மொழிதேர்ந்த ஆசான் நீங்கள். எம் மொழி கலை கலாச்சாரத்திற்கு நீங்கள் ஆற்றிய பணிகள் அளப்பெரியது. அவையாவும் எடுத்துரைக்க இவ் வாழ்த்துப்பா போதாது... எங்கள் தமிழ்மன்றம் தளிர்விடும் காலத்தில் எம்மோடும் கரம்கோர்த்தீர். உங்கள் மொழிப்பயணமது தொடரட்டும் எங்கள் தாய்மொழி வளரட்டும் எங்கள் தலைமுறை தமிழமிழ்தை பருகட்டும். இன் நன் நாளில் அமுதவிழாக்காணும் உங்களை இன்னும் நூறாண்டுகள் நோய்நொடியின்றி நீடூழி காலம் வாழ்கவென பிராங்பேட் தமிழ்மன்றமும் பெருமையுடன் வாழ்த்தி மகிழ்கிறது.

தோன்றின் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று.

**இரவிசங்கர் இராஜரட்ணம்**
தமிழ்மன்றம் பிராங்போர்ட் - தலைவர்






# தாயகத்திலும் பிரான்ஸிலும் பத்திரிகையாளராக வாழும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்



தாயகத்தில் சிறுவனாக இருக்கும் பொழுதே ஈழநாடு பத்திரிகை கண்ணில் பட்டது. அப்பொழுது பத்திரிகை வாசிக்கும் அளவுக்கு ஆர்வம் கொண்டிருக்கவில்லை. எனது சகோதரி நடனம் பயிலச்செல்கின்ற பொழுது அவருக்குத் துணையாக எமது அத்தை வீட்டுக்குச் சென்று வந்தேன். பார்த்துப் பார்த்து ஆர்வம் கொண்டதால், நானே ஆடிட ஆரம்பித்தேன். அதுவே, என்னை பரதக்கலைஞன் ஆகுமளவுக்குக் கொண்டு சென்றுவிட்டது. இந்த நிலையை அடைய வைத்தவர், எனக்கு எல்லாமாக இருந்தவர் எனது குருவும் அத்தையுமான திருமதி லீலா ஆறுமுகையா, அன்று லீலா நாராயணன். லீலா நாராயணன் என்ற பெயர் ஈழத்துக் கலையுலகில் மிகவும் புகழ் பெற்று விளங்கிய ஒரு காலம் இருந்தது. தாயகத்தின் வட புலத்தில் ஆடற்கலையில் சாதனைகள் புரிந்தவர். நடன நிகழ்ச்சிகள் வழங்கிப் புகழீட்டியவர்.

அத்தையின் குழுவில் நானும் அங்கம் பெற்றேன். நிகழ்ச்சிகளில் அத்தையும் நடனம் புரிவார். நானும் நடனமாடுவேன். அத்தை லீலா நாராயணன் ஈழத்தில் புகழ்பெற்ற கட்டடக்கலைஞர் வி.எஸ்.துரைராஜா தயாரித்த 'குத்துவிளக்கு' திரைப்படத்தில் ஆனந்தன் இராஜமாணிக்கம் (இவரும் ஒரு நடனக்கலைஞர்) அவர்களுடன் இணைந்து கதாநாயகியாக நடித்தவர்.



'ஈழநாடு' பக்கம் பக்கமாக அத்தையின் நிழல்படங்கள், அத்தையைப்பற்றிய செய்திகள் பிரசுரிக்கும் அப்பொழுது, 'ஈழநாடு' பத்திரிகையைப் பார்த்து மகிழ்ந்தமை இப்பொழுது நினைவில் கொள்ளத்தக்கதாகவுள்ளது. அத்தையின் நடன நிகழ்ச்சி பற்றிய செய்திகள் பிரசுரமாகும் பொழுது அவரது படமும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அத்தை அவற்றைப்பார்த்து மகிழ்வார். அத்தையை ஈழநாடு பத்திரிகை சார்பில் ஈ.கே.ராஜகோபால் அவர்கள், (பின்னாளில் நடனமணி ராஹினி அவர்களின் கணவரானார். இப்பொழுது இருவரும் லண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.) அடிக்கடி வந்து பேட்டிகள் எடுப்பார் அந்நாட்களில் அத்தையின் நடன நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும்

பொழுது எனது நிழல்படம், எனது பெயர் என்பனவும் வெளியாகியுள்ளன. இப்பொழுது அதனை நினைக்கையில் மகிழ்வாக உள்ளது. அந்நாட்களில் எஸ். கே.காசிலிங்கம் அவர்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப்பணியாற்றி வந்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைக்கவில்லை. பிரான்ஸில் எங்கள் வாழ்க்கை நகர்ந்து வரும் காலத்தில் இங்கும் 'பரிஸ் ஈழநாடு' வெளிவந்தது. அதனை ஆர்வத்துடன் வாங்கி வாசித்து வந்தேன். அந்தப்பத்திரிகையை பிரான்ஸில் வெளிக்கொணர்ந்தவர்களில் ஒருவராக எஸ். கே.காசிலிங்கம் அவர்கள் திகழ்ந்துள்ளார். எனது 'நர்த்தனாலயம் நடனப்பள்ளி' பற்றியும், எனது நடனத்துறை பற்றியும் பல செய்திகளை பரிஸ் ஈழநாடு வெளியிட்டு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளது. எமது நடன நிகழ்ச்சிகளுக்கு எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் விருந்தினராக வந்து எம்மை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் எமது மூத்த பத்திரிகையாளர் எஸ். கே.காசிலிங்கம் அவர்கள் அமுதவிழா கொண்டாடுவது மகிழ்வு தருகிறது. அவருக்கு உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பரதசூடாமணி'

**ஸ்ரீ தயாளசிங்கம்**

பரதக்கலை ஆசிரியர் - பிரான்ஸ்









**பரிஸில் அன்றைய அர்ச்சனா கலையரங்கின் 2வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினர்களாக காசிலிங்கம் தம்பதி.**

ஐரோப்பியத் தமிழ் வானொலி | அகரம்

Po. Box 4153
59037 Hamm
Deutschland

Telefon: 0231 18970400
Web: www.etr.fm
e-Mail: info@etr.fm

# எழுத்தூடக நாயகன் ‘ஈழநாடு’ எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்கு அகமகிழ்வு வாழ்த்து

பத்திரிகை உலகில் பண்பாடு, உணர்வுகள் மற்றும் உண்மையை உணர்த்தும் நுட்பமான கலைக்கோலமாக திகழ்ந்துகொண்டிருக்கும் உங்கள் பயணம்,தமிழ்மக்களின் எழுச்சிக்கும், அறத்தின் ஒளியுடனான மீட்பிற்குமான இலக்கணமாகவே விளங்குகிறது. ஈழத்தின் செய்தித்துறையில் உங்களுடைய பங்களிப்பு ஒரு வரலாற்று மையக் கல்லாக திகழ்கிறது. யாழ்ப்பாணத்தில் “ஈழநாடு” பத்திரிகையின் உதவி ஆசிரியராக தங்களை அறிமுகப்படுத்திய அந்த ஆரம்ப கட்டமே,உங்கள் எழுத்து நடை, செய்திகள் கையாளும் திறமை மற்றும் மக்கள் உணர்வுகளுக்குள் நுழையும் ஆழமான பார்வையை வெளிப்படுத்திய முக்கிய கட்டமாகும். உங்கள் ஆழ்ந்த அறிதலும், ஊடகவியலின் நெறிமுறைகளுக்கும், தர்மத்திற்கும் நீங்கள் காட்டிய பற்று இன்றைய பத்திரிகையாளர்களுக்கு ஒரு வழிகாட்டி ஒளியாய் விளங்குகிறது. பரிசில் 'ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்ற நீங்கள், புலம்பெயர் தமிழரின் குரலை ஒரு புதிய அடையாளத்துடன் உலகிற்கு அறிமுகப்படுத்தினீர்கள். வெறும் செய்திகளை வெளியிடுவதைக் கடந்து, சமூகத்தின் பிரதிபலிப்பாகவும், அதன் வாழ்வியலை ஆவணப்படுத்தும் பணியையும் நீங்கள் செய்தீர்கள். அந்த உழைப்பின் மூலம், ஈழத்தமிழர் வாழ்வியல், குரல், பாசறை மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஒரு காகிதத்தில் உயிர் பெற்றன.பின்னர், லண்டன் - பரிஸ் இணைந்து வெளியிடப்பட்ட “தமிழன்” பத்திரிகையின் ஆசிரியராகவும், உலகளாவிய தமிழர்களின் சமூக, கலாசார, அரசியல் பிரச்சனைகளுக்கு நீண்ட கால தீர்வுகளைத் தேடிக்கொண்டிருக்கும் ஒரு உரையாடல் மேடையை நீங்கள் உருவாக்கினீர்கள். உங்களின் நேர்த்தியான ஆழ்ந்த கட்டுரைகள், நேர்மையுள்ள விமர்சனங்கள், சமூகத்தின் மீது கொண்ட அக்கறை, சிந்தனைகளைத் தூண்டும் ஒரு எழுத்தாளர் எனும் உங்களது உருவத்தை நிலைநாட்டியது.



பல்வேறு தலைமுறைகளுக்கிடையில் உங்கள் பணி ஒரு சீரிய தூண்டுகோலாக விளங்குகிறது. உங்கள் வார்த்தைகள் மக்கள் மனதில் நிழலல்ல, நிழற்படமாக பதிந்திருக்கின்றன. உங்கள் எழுத்துக்களில் உண்மையின் நெருப்பும், இரக்கம்

கொண்ட பார்வையும் இணைந்து விளங்குகின்றன. அதுவே உங்கள் பத்திரிகைத் துறையின் மரியாதையை இன்னும் உயர்வாக மாற்றியது. தங்களைப் போன்ற ஊடகவியலாளர்கள் நாளொன்றுக்கு பிறவிக்கொள்கிறவர்கள் அல்ல. செய்தித் துறையின் சவால்கள் மற்றும் அதில் நிலவும் அழுத்தங்களை சமாளித்து, வெற்றிகரமாக ஒரு சில தனித்துவமான வழிகளை உருவாக்கிய உங்களது முயற்சி எப்போதும் புகழ்சிக்குரியது. உங்கள் பணி வெறும் தொழில்நுட்பத்தைக் கடந்து, சமுதாயத்தின் உறவுகளையும், வேர்களையும் இணைக்கும் பாலமாகவும் திகழ்கிறது. இந்த அரிய தருணத்தில், உங்கள் பணி மற்றும் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவிக்க இவ்வாழ்த்து ஒரு சிறிய நினைவாக இருக்கட்டும். எதிர்காலம் மேலும் பல வளமான பக்கங்களை உங்களால் எழுதப்படக்காத்திருக்கிறது என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். உங்கள் எழுத்துக்கள் தொடரட்டும். உங்கள் குரல் தொடர்ந்து மக்கள் மனங்களில் ஒலிக்கட்டும். மிக்க நன்றியுடன், ஆழ்ந்த மரியாதையுடன், உங்கள் பணி என்றும் வழிகாட்டட்டும் என வாழ்த்துகின்றேன்.



**த.இரவீந்திரன்**
**நிர்வாக இயக்குநர்**
**ஐரோப்பிய தமிழ் வானொலி**






**எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் மாமா, மாமி**

# யாழ். ஈழநாடு முதல் பாரிஸ் தமிழன் வரை பத்திரிகைத் துறையில் தடம் பதித்த எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்



தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் சேவைகள் செய்வதற்கான ஆற்றலும் அறிவும், மனப் பக்குவமும் இளம் பராயத்திலேயே திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களிடம் முளைவிட்டு கிளைவிட்டது. அதுவே அவரை பல உயரம் தொட வைத்தது.

யாழ்.ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டு இன்று 66ஆண்டுகள் கடந்துள்ளன. ஈழநாடு ஆரம்பித்த சில ஆண்டுகளில் ஆசிரியர் குழுவில் அங்கம் பெற்று உதவி ஆசிரியராக எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள் 15 ஆண்டுகள் பணியாற்றிருக்கிறார். அவர் செய்திகளுக்கு இடும் தலைப்பு வாசகர்களை மிகுந்த ஆர்வத்துடன் அந்த செய்தியைப் படிக்கத்தூண்டும் என, அவருடன் தாயகத்தில் பணியாற்றிய பத்திரிகைத்துறை நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பிரான்ஸில் ஒரு தமிழ் பத்திரிகையின் தேவையறிந்து 90 களின் முற்பகுதியில்



'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்த மும்மூர்த்திகளில் ஒருவர் என்ற பெருமையும் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களுக்குண்டு. பின்னர் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களே பிரதம ஆசிரியராகத் திகழ்ந்து 'தமிழன்' என்ற பத்திரிகையை பாரிஸில் ஆரம்பித்துச் செயற்பட்டு தனது ஆளுமையை நிரூபித்து வெற்றிகண்டவர். இவ்வாண்டு நானும் பிரான்ஸில் 45 ஆண்டுகளை நிறைவு செய்கிறேன். எனது அவதானிப்பில் புகலிட வாழ்வில் தானுண்டு தனது வேலையுண்டு என்று இல்லாமல், பிரான்ஸில் மற்றவர்களுக்கு உதவும் கரமாக கைகொடுக்கும் கையாக எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் பல வழியான பொதுச்சேவைகளும் போற்றுதற்குரியவை. இப்படி திரு.காசிலிங்கம் அவர்களின் சேவைகள் பலவற்றை அவதானித்த நடிப்பிசைக் காவலர் அமரர் கிறகரி தங்கராஜா அவர்கள் தனது கலை வாழ்வின் வெள்ளி விழாவை 90 களின் முற்பகுதியில் பாரிஸில் முதல் நம்மவர் மண்டபமாக திகழ்ந்த 'கலையரசர் மண்டபத்தில்' 25 கலைஞர்களை மதிப்பளித்து கொண்டாடி மகிழ்ந்தபோது,அவ்விழாவின் தலைவராக மூத்த பத்திரிகையாளரான திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களை நியமித்து அழகுபார்த்தார் என்பது இத்தருணத்தில் நினைவுகூர்ந்து கொள்ளத்தக்கது.

அதேபோன்று அமரர் வண்ணைத்தெய்வம் அவர்களிடத்திலும் மிகுந்த அன்பு கொண்டவராக திகழ்ந்தார் திரு.காசிலிங்கம் அவர்கள். அமரர் வண்ணைத்தெய்வம் அவர்கள் தனது நூல்கள் வெளியீடுகளில் இவரை முன்னிலைப்படுத்தி மகிழ்ந்தார் என்பதும் மகிழ்வுடன் பதிசெய்யப்படவேண்டியது.



புலம்பெயர் வாழ்வும் இந்த இயந்திர சூழலும் எங்கள் மத்தியில் பல மாற்றங்களை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. வெறும் கைகளுடன் வந்த எங்களில் பலரை மேம்படுத்தியிருக்கிறது. சாதனையாளர்களாக்கியிருக்கிறது. வெற்றி உயரங்களை தொடவைத்திருக்கிறது. சிலரை நோயாளிகளாக்கியிருக்கிறது, கடனாளிளாக்கியிருக்கிறது, காணாமலாக்கியிருக்கிறது. ஆனால் நின்று! நிதானித்து! நிலைத்து! கண்டு! கவனித்து! மதிப்பார்ந்த உயரத்தை வழங்கி மதிப்பளிக்க செய்கிறது என்றால் இயற்கையையும் இறையருளும் இணைந்து வழங்கிய மகத்தான அழகிய பரிசு! அந்தவகையில் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் தனிமனித ஒழுக்கங்கள் உணவில் கட்டுப்பாடு, ஆரோக்கியமான தூக்கம், உடற்பயிற்சி என்பன அவரை இன்னும் இளமையாக இயக்கிக் கொண்டிருக்கின்றன. 80 வயதை எட்டியிருக்கும் திரு.S.K. காசிலிங்கம் அவர்கள்



இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பல சாதனைகள் நிகழ்த்தி அடுத்து வருகிற பல தலைமுறைகளையும் தனது ஆளுமைத்திறனால் வழிநடத்த வேண்டுமென்று இயற்கையையும் இறைவனையும் வேண்டி அவரது அமுத விழாவில்

வாழ்த்தி மகிழ்கிறேன்

பேரன்புடன்,

**கே.பி.லோகதாஸ்**



**திரைப்பட நடிகைகள் சுஹாசினி - ரேவதி ஆகியோர் கலந்துகொண்ட விழுதுகள் விழாவுக்கு எஸ் . கே . காசிலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்**

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL DE VELANAI (ASSECVEL)

**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்**

Patron:
Mr. Y. Balakrishnan

President:
Mr. S. Sripaskaran

Secretary:
Mr. K. Vasudevan

Treasurer:
Mr. S. Karunanithy

Vice President:
Mrs. B. Sakunthaladevy

Asst. Secretary:
Mr. A. Thevathasan

Committee Members:

Mrs. P. Thilagavathie

Mr. S. Suntharalingam

Mr. S. Kandasamy

Mr. M. Ketheeswaranathan

Mr. P. Thevathasan

Mr. K. Thavachelvam

Mr. P. Kanthappapillai

Mr. H. James

Mr. S. Thevan

Mr. A. Mahendran

Mr. M Srikanthan

Mr. R. Parthasarathathan

05.05.2025

## கத்திமுனைப்பயணி

அமுதவிழாக்காணும் மூத்த பத்திரிகையாளர் எஸ். கே. காசிலிங்கம் அவர்களை நாமும் வாழ்த்தி மகிழ்கிறோம். இளமைக்காலங்களில் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் இருந்தபோது எமது வீடுகளுக்கு ஈழநாடு பத்திரிகையே வந்து இதுவரை நாற்பதாண்டுகளில் வாசிக்கும் சந்தர்ப்பமிருந்தது . அவ்வேளையில் பத்திரிகை, வானொலி இரண்டுமே மக்களுக்கான செய்தி ஊடகங்கள்.
பத்திரிகா தர்மம் கட்டப்பட்ட வேளைகள் காலங்களவை.

அப்படி பத்திரிகை
வாசிக்கும் காலத்தில் செய்தித் தலைப்புகளின் கீழ் செய்தியாளரின் பெயர் போடுவது வழமை. பொறுப்புக்கூறல் போன்ற நிலை. அக்காலத்தில் எஸ். கே. காசிலிங்கம் என்ற பெயர் பதிவாகியிருந்ததை வாசகர்களின் இன்றும் நினைவில் நிலைத்திருக்கின்றது. அன்று அவர்பற்றி புதிய சந்தர்ப்பம், தேவை, இல்லாதிருந்தது.

பின்னாளில் பாரிஸில் ஈழநாடு பத்திரிகை வெளிவந்த நாட்களில் எஸ்.கே.கே. பற்றி அறிந்துகொண்டோம். பத்திரிகைவெளியீடும் செய்தியாசிரியர் பணி துணிச்சலுடனான பொறுப்பு மிகுந்த இருக்கை. கத்திமுனையில் பயணிப்பதான பயணம். பல்வேறு நெருக்குதல்கள், அச்சுறுத்தல்கள்,சவால்களை எதிர்கொள்ளல், போன்றவற்றுள் வாழ்தல். நடந்ததை, நடப்பதை அப்படியே எடுத்துச்சொல்வது பல இடங்களில் ஆபத்தானதிலும். இப்படியான இக்கட்டு சூழல்களில் செய்தி வழங்கல் களத்தில் சாமர்த்தியமான வகை முறைகள் கையாளப்பட வேண்டும். செய்தியில் உண்மையிருக்கும் அதே வேளை, மிகையற்றும் திரிபற்றும் அதிகார மையங்களுடன் முட்டி மோதி பகைமையுறப்படா வண்ணம் பத்திரிகைக்கும் , பத்திரிகா பீடத்திற்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தப்படாமையும் உறுதிசெய்யவேண்டும்.
இவ்வேளையில் பலராலும் மதிக்கப்படும் செய்தி ஆசிரியர் என்பது பலரும்அறிந்ததொன்று. நீண்டகாலத்தை சேர்ந்தவர் என்றாலும் பல நீண்ட பிரச்சினைகளை ஈழநாடு வாயிலாக நடாத்திச்சென்றவர். துணிச்சலான நேர்மையான செய்தி ஆசிரியர் என்ற அடையாளத்திற்குரியவர் ,
எஸ்.கே.கே.யின்
சேவையைப்
பாராட்டி, வயதை வாழ்த்தி நிற்கிறோம். வாழ்க நலமுடன் வாழ்க நீடு

Association enregistrée sous la Loi 1901 - Nouveau Numéro - W751108842

73, Rue Doudeauville - 75018 Paris, France - Tél.: 01 42 51 29 92 - Fax: 01 42 51 35 25
Association enregistrée sous la Loi 1901 - N° d'ordre: 93 / 0940



# எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் வாழ்வாங்கு வாழவேண்டும்

அமுதவிழா காணும் எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் ஒரு நேர்த்தியான பத்திரிகையாளர்.

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

வள்ளுவத்தின் இந்தக் குறள் உண்மையின் வலிமையை எடுத்தியம்பி நிற்கிறது. பொய்யென்று உள்ளம் உணர்த்துவதை சொல்ல வேண்டாம். சொன்னால், அதைப்பொய் என்று அறியும் பொழுது தன் நெஞ்சே தன்னைச் சுடும். மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டும். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் நேர்மையான ஊடகவியலாளராக இருந்துள்ளார். அவரைச் சட்டத்தரணியாக்க வேண்டும் என அவரது பெற்றோர்கள் விரும்பினர். ஆனால், தான் ஊடகவியலாளர் ஆகிவிட்டதாகத் தனது 'என்னுள் என்னோடு" நூலில் எழுதியுள்ளார். ஊடகவியலாளர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. ஓர் ஊடகவியலாளரின் எழுத்தை யாரெல்லாம் வாசிக்கின்றார்களோ, அவர்கள் அந்த விடயங்களை நம்புகிறார்கள். எனவே நம்பிக்கைக்குரியவராக ஓர் ஊடகவியலாளர் இருந்தால் அவர் மதிப்புக்குரியவர். அந்த வகையில் ஈழத்தின் மூத்தபத்திரிகையாளர் 'ஈழநாடு' தந்த எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் மிகுந்த மரியாதைக்குரியவர்.



அவருடைய அனுபவங்கள் அளப்பரியவை. அவற்றை வாசித்தாலே இலங்கை நாட்டின் மிக முக்கியமான அரசியல், சமூக விடயங்கள் தெரியவரும். இவை எமக்குச் சிந்தனைத் தெளிவூட்டும். ஒரு பத்திரிகையாளனின் அனுபவங்கள் ஏனையவர்களையும் சென்று சேர வேண்டும். 'ஈழநாடு' பத்திரிகையில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் செய்திப்பணி என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. இப்பொழுது எல்லோருமே தட்டச்சு செய்யலாம்.

ஒரு கைத்தொலைபேசியே இப்பொழுது போதுமானது. ஆனால், அன்று அச்சுக்கோர்த்துத் தான் பத்திரிகை அச்சடிக்க வேண்டும். ஒவ்வொரு எழுத்துக்களாக எடுத்துச் சேர்த்து அச்சுக்கோர்ப்பது சுலபமானது அல்ல. மிகக் கடினமான பணி. அவ்வாறு ஒவ்வொரு செய்திகளும் அச்சுக்கோர்க்கப்பட்டு அச்சடிக்கப்படும். பத்திரிகை அச்சடிக்கப்படுவதற்கு முன்னர் ஒப்பு நோக்க வேண்டும். அதன் பின்னரே பத்திரிகை அச்சாகும். அவ்வாறு அச்சு யத்திரத்தில் பத்திரிகை அச்சாகி, பக்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு விநியோகத்துக்கு

விடப்படும். இவ்வளவுக்கும் மனித வலுவே அதிகளவில் உபயோகமாகும். இதுதான் அன்றைய பத்திரிகை உலகம். ஈழநாடு இப்படித்தான் அச்சாகி மக்கள் கரங்களுக்கு வந்தது. மிகப் பெரும் பணிகளுக்கு மத்தியில் அன்றைய காலகட்டப் பத்திரிகைகள் அனைத்தும் வெளிவந்தன. இவை ஒரு பெரும் தியாகத்தின் மத்தியில் நடந்திருக்கக்கூடிய பணிகள்என்பதை நாம் உணரவேண்டும். இன்று யாவும் இயந்திரமயமாகிவிட்டன. எதிர்காலம் றொபோவிடம் சென்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! ஒவ்வொருவரும் தாம் ஈடுபடும் துறைகளில் முழுமையான ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும். எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் அவ்வாறு பணி செய்தவர். அவரது வாழ்நாளில் தனது பணியை முழுமையாகச் செய்துள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரியது. தீபம் தொலைக்காட்சியில் நான் பணியாற்றிய காலத்தில் எஸ்.கே.காசிலிங்கம் அவர்களைக் கலையகத்தில் வரவேற்று ஓர் அழகான, ஆழமான நேர்காணல் செய்தேன். பத்திரிகைத்துறை பற்றியும் அதில் அவரது அனுபவங்கள் பற்றியும் மிக விரிவாக அந்த நேர்காணலில் எடுத்துக்கூறியிருந்தமை நினைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் நீண்டகாலம் பணியாற்றிய எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் ஆரோக்கியத்துடன் நீடு வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

**எம்.என்.எம். அனஸ்**
London Tamil TV











# தீர்க்க தரிசி

அமுதவிழா நாயகனை நாம் துரை அண்ணர் என்று தான் அழைப்போம். அவர், எனது கணவரின் மூத்த சகோதரர். அப்பாவும் துரையண்ணரும் அடிக்கடி சந்திப்பார்கள். யானை வரும் பின்னே, அதன் மணியோசை வரும் முன்னே என்பது போல், அவர் வருவதற்கு முன்பே அவருடைய செருமல் சத்தம் கேட்டு விடும். உடனே அப்பா (சி. காராளபிள்ளை), 'காசிலிங்கம் வருகிறார்' என்பார். அவருடைய வெளிப்படையான பேச்சு, கோபப்படுதல், எந்த ஒரு பணியையும் துரிதமாக மேற்கொண்டு முடிப்பது, கடின உழைப்பு, எதற்கும் துணிந்து முன் செல்வது என்பவை அவரின் குறிப்பிடத்தக்க குணாம்சகளாகும்.

அப்பா இவரைக் கண்டவுடன் பழைய விடயங்களை மிக நகைச்சுவையாகப் பேசிக்கொள்வார். இருவரும் பேசிக்கொண்டிருந்தால் பல்வேறு விடயங்கள் வெளிவரும். சில விடயங்களை நகைச்சுவையாகவும் பேசிக்கொள்வார்கள். அப்பாவுடன் முக்கிய விடயங்களைக் கலந்தாலோசிக்கையில்: 'அத்தார்' என அழைத்து, பேச்சை இடை நிறுத்தி விடயத்தை நினைவுபடுத்திக்கொள்வார். அவரின் பிரயாசை, எடுத்த காரியத்தை நிறைவேற்றும் கடின உழைப்பின் தன்மையை அப்பா 'மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது'என்று, சுட்டிக்காட்டுவார். துரை அண்ணர், உறவுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போற்றுதற்குரியது. இவர் எதனையும் முன்கூட்டியே ஊகித்து அறிந்துகொள்ளும் தன்மை கொண்டவர். பத்திரிகைப்பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் குடும்பத்தினருடன் இருப்பதற்கு நேரம் இருக்காது. தாயார் மகனைப்பார்க்க ஆசைப்படுவார். நாம் தகவல் தெரிவித்து அழைப்போம். அவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் தாயாரை வந்து பார்த்துச்செல்வார். எவர் ஒருவர் சமூகத்தில் நல்ல பணிகளைச் சேவைகளைச் செய்து நன்நெறியாளனாக இருக்கின்றார்களோ அவர்கள் சமூகத்தால் பேசப்படுவார்கள், போற்றப்படுவார்கள், பாராட்டப்படுவார்கள், கௌரவிக்கப்படுவார்கள். அந்த வகையில் அமுதவிழா காணும் துரை அண்ணர், திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் கௌரவப்படுத்தப்படுவதில் நாங்களும் பெருமை கொள்கிறோம். அவர் இன்னும் பல்லாண்டு நீடூழி வாழ அனலை ஐயனின் அருள் வேண்டி வணங்குகிறோம்.



**திருமதி சுந்தரலிங்கம் மஞ்சுளா**

# Chère papa !

Je suis fière de toi et de ton parcours. Au fil des années je me suis rendue compte que ma détermination, ma force, mon courage et ma capacité à me relever à chaque fois que je tombais au plus bas me venaient de toi. Tu m'as transmis cette personnalité sans même t'en rendre compte puisque ce sont tes forces de caractère à toi. Je suis fière d'avoir hérité de ça. Enfin, j'espère que tu es fier de mon parcours et de celui de mes enfants, faisant de toi un papa et un grand-père comblé.



Kasilingam Arudchelvi (Ampuli)
Agent de maîtrise dans le domaine de la sûreté aéroportuaire (Aéroport Roissy CDG)

.......................................

# Mon cher grand-père

Je te souhaite un joyeux anniversaire à l'avance pour tes 80 ans . Tu m'as soutenu de plusieurs manières. Tu me me guides avec optimisme pour mes bonnes actions et me réprimandes pour mes erreurs. Je voudrais que mon grand-père et ma grand-mère vivent longtemps



Vaitheehan
préparateur en pharmacie

# Ma mère est arrivée en France à l'âge de 16 ans

Je n'étais pas encore né quand tout a commencé, mais cette histoire, je la connais par cœur. C'est celle de mes parents, un amour qui a défié les interdits et traversé les frontières.

Ma mère est arrivée en France à l'âge de 16 ans. Nouvelle vie, nouveau pays, tout lui était inconnu. Mais très vite, elle a rencontré mon père. Il était son voisin, et entre eux, l'évidence s'est imposée. Ils se sont aimés, sans se poser de questions.

Mais leur amour n'était pas vu d'un bon œil. Ils venaient de cultures différentes, et dans la famille de ma mère, cette relation était inacceptable. Quand mon grand-père a découvert leur histoire, il a pris une décision radicale : séparer ma mère de mon père à tout prix. Elle a été envoyée en Allemagne, où un mariage arrangé l'attendait.

Là-bas, un homme avait été choisi pour elle. Mais quand il a vu ma mère, il a compris que son cœur appartenait déjà à un autre. Plutôt que de la forcer, il a respecté son amour et refusé d'être l'obstacle à son bonheur.

Pendant ce temps, mon père ne pouvait pas rester les bras croisés. Il a pris la route et l'a rejointe en Allemagne, prêt à tout pour la retrouver. Et le destin a joué un drôle de tour : l'homme choisi pour épouser ma mère et lui ne sont pas devenus des rivaux… mais des amis. Mon père s'est également lié d'amitié avec mon oncle, le frère de ma mère.

Les épreuves n'étaient pas terminées, mais à force de persévérance et d'amour, ils ont fini par triompher. En mai 1993, ils se sont mariés, entourés de ceux qui, finalement, avaient fini par accepter leur histoire. Et ce jour-là, même si personne ne le voyait encore, j'étais déjà là… bien au chaud dans le ventre de ma mère, témoin silencieux de cet amour plus fort que tout.



Frutiraux Vincent Theepan.

administrateur IT , ASL Airlines France .

# À mon papa,

Nous te souhaitons un joyeux quatre-vingtième anniversaire et que Dieu te bénisse avec de nombreuses années encore en bonne santé.
Mon père qui agit avec une affection maternelle , a travaillé beaucoup pour notre progrès. Il se mettait très en colère si on fait une erreur et montrait une affection excessive pour nous féliciter.
Même s'il y a 1000 personnes, si tu es à côté de moi , en étant meilleure j'éprouve une force particulière .
Je n'ai pleinement pris conscience de l'affection de mon père que pendant les derniers jours de ma grand-mère maternelle .Il est devenu comme un fils pour notre grand-mère . À cette occasion, j'étais très heureuse, fière et honorée d'être sa fille. J'ai ressenti qu'il n'y avait pas d'homme meilleur au monde que lui.




j'ai toujours été fière que personne ne peut être à sa hauteur . Je n'oublierai jamais l'affection que tu m'as montrée tout au long de ma vie .
Ta fille Siva.

**Mme Sivachelvi Sivaniah**
Agent de sureté
Aéroport Roissy(CDG)

# Mon grand-père

Le parcours de mon grand-père est très inspirant pour moi. En prenant la décision difficile de quitter son pays afin de mettre sa famille à l'abri il a su offrir un bel avenir à chacun d'eux ainsi qu'à toutes les personnes qu'il a accompagné depuis des dizaines d'années. Il m'a transmis, sans même s'en rendre compte, son intérêt pour l'écriture et le droit, domaines m'animant fortement aujourd'hui. Je suis fière d'avoir ces points communs avec mon grand-père et suis tout simplement fier de lui, de sa notoriété et de l'héritage culturel qu'il me lègue.



**Senthuri**
Licence 3 Droit Privet

# தாத்தா நடமாடும் கூகிள் (Google)

அம்மாவின் அப்பாவை நாங்கள் தாத்தா என்று தான் கூப்பிடுவோம். ஆனால் அவர் இந்த வயதிலும் தோற்றத்திலும் சரி, அன்றாட வேலைகளை பார்பதிலும் சரி மிக வயது குறைந்தவராகவே தென்படுவார். என் தாத்தா ஒரு நடமாடும் (Google) கூகிளைப்போல இருப்பார். அவர் எப்பொழுதும் ஏதாவது வாசித்துக்கொண்டோ அல்லது எழுதிக்கொண்டோ தான் இருப்பார். அதனால் தான் என்னவோ எந்த விடயம்பற்றி நாம் கேள்வி கேட்டாலும் அதற்கு விளக்கமான பதில் தருவார். வீட்டுவேலைகளில் அம்மம்மாவுக்கு மிகவும் உதவியாக இருப்பார்.

எங்கள் பாட்டியையும் வயதுவந்த காலத்தில் மிக அன்பாக பராமரித்ததை நான் பார்த்தேன். பேரப்பிள்ளைகள்மீது அதிக பாசமாக இருப்பார். அதிலும் முதல் பெண் பேரப்பிள்ளை என்பதில் என்மீது விஷேட பாசம் எனலாம். தாத்தா இந்தியாவுக்கோ இலங்கைக்கோ சென்றுவரும்போதெல்லாம் எனக்கு அழகான தமிழ் கலாச்சார உடைகள், காப்பு, மாலை போன்ற பொருட்களெல்லாம் வாங்கி வர மறக்கமாட்டார். தாத்தாவுக்கு பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லாரும் தமிழ் பேசுவதுவும், தமிழ் கலாச்சாரத்தில் வளர்வதுவும் மிகவும் பிடிக்கும். நாம் எல்லோரும் தாத்தாவுடன் தமிழில் தான் பேசுவோம். நான் சுரத்தட்டில் தமிழ் பாடல்கள் வாசிப்பதை கண்டு மிகவும் மகிழ்ந்தார். நான் சில பாடல்களுக்கு (Notation) சுரக்குறிப்பு கண்டுபிடித்து எழுதிவைத்தேன், அதனைக்கண்டு என்னைப்பாராட்டியதுடன் அதனை அழகான புத்தகமாகப் பதிப்பித்தும் தந்தார். இதனை என்னால் என்றும் மறக்கவே முடியாது. எங்கள் தாத்தா என்றைக்கும் இப்படியே நலமாக பலகாலம் வாழவேண்டும் என்று நான் வணங்கும் தெய்வத்திடம் வேண்டுகிறேன்.



பேர்த்தி

Saheera Kumar - Dentist
University of Cologne Germany

# என் நினைவில்



"தோன்றின் புகளொடு தோன்றுக அதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்கிறார் திருவள்ளுவர். ஒரு துறையில் முன்னிற்கும்அளவில் தோன்றவேண்டும் அல்லது தோன்றாமை நன்று என்னும் கருத்துக்கமைய வாழ்பவரே திருவாளர். காசிலிங்கம் அவர்கள்.என் தந்தை வழியிலும் என் மனைவியின் தந்தை என்ற வழியிலும் எனக்கு கிடைத்த மாமாவைப்பற்றி சில வரிகள் எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன். மாமா ஈழநாடு பத்திரிகையில் பல ஆண்டுகள் பத்திரிகை நிருபராக வேலை செய்தார். நான் சிறு வயதாக இருக்கும்போது மாமா மாலை வேலைக்குப் போகும்போது எமது வீட்டிற்கு சிறிது நேரம் வந்து போவார். அவரது நேர்த்தியான உடையையும் மிடுக்கான நடையையும் மேலிந்து பார்ப்பேன். அவரது வாழ்க்கையின் கஷ்ட நிலையிலிருந்து ஒவ்வொரு படிக்கட்டுகளையும் அவர் எப்படி தாண்டுகிறார் என்பதை பார்த்து வளர்ந்தவன் நான். அவரிடம் எனக்குப் பிடித்த விடயமே அவரது அயராத உழைப்புத் தான். பல பிரமுகர்கள் வீட்டுக்கு வருவதையும், அவர்களுடன் மாமா சந்திப்புகளை ஏற்படுத்திக்கொள்வதையும் கண்டு நானும் பெருமைப்பட்டுள்ளேன். பல செய்திகள் மாமாவின் கவர்ச்சிகரமான தலையங்கத்துடன பத்திரிகையில் சுடசுட செய்திகளாக வெளிவரும். யாருக்கும் அஞ்சாது துனிச்சலுடன் அவர் செய்திகளைத் தரும் பாணியை ரசித்துள்ளேன். புலம் பெயர்ந்த பின்னும் அவர் அதே பத்திரிகைத் துறையில் பல சாதனைகள் படைத்தார். எமக்கெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்துகொண்டிருக்கும் மாமாவிடமிருந்து நாம் பலவற்றைக் கற்றுக்கொண்டோம். தன்னலம் கருதாத சேவை மனப்பாங்கு கொண்டவர். பெற்றோரை கடைசிவரை தெய்வங்களாய் போற்றியவர். சகோதரர்கள் முதல் தன்னுடன் பழகும் எல்லோரையும் தூக்கி முன் நிறுத்தும் பழக்கமுள்ளவர். எமது திருமணத்திற்கு பின்னரும் கேட்டும் கேட்காமலும் பல உதவிகள் செய்தார் செய்துகொண்டும் இருக்கின்றார். யார் என்றாலும் உதவி செய்வதற்க்கு பின்நிற்கமாட்டார்.

என்னை டாக்டராக்கிப் பார்க்க மிகவும் ஆசையுடன் ஊக்கம் கொடுத்தார். அகதிகளாக புலம்பெயர்ந்து வரும் எம் இன மக்களுக்கு தன்னாலான உதவிகளை செய்வதில் தன்னிறைவு கொள்பவர். சிறு வயதினராக புலம்பெயர்ந்து வந்த பல இளைஞர்கள், யுவதிகளுக்கு வஒரு தந்தையின் ஸ்தானத்தியிருந்து பல வழிகளிலும் வழிகாட்டியாக திகழ்ந்ததுடன் பல திருமணங்களையும் நடாத்தி வைத்துள்ளார். இப்போதும் மாமா மிக சுறுசுறுப்புடன் காணப்படுவார். அவரைவிட

மிக வயதில் குறைந்தவனாக இருக்கும் என்னால் அவருடைய சுறுசுறுப்புக்கு ஈடாக நிற்க முடியவில்லையே என நான் வியப்பதுண்டு. உலகத்தில் நடக்கும் எந்த விடயங்களையும் அறிந்து வைத்திருப்பதுடன் அவை பற்றி ஆராய்ச்சிபண்ணி நாம் எழுப்பும் கேள்விகளுக்கு தக்க பதிலும் தருவார். எமக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த மாமாவின் முன்மாதிரியை நாமும் பின்பற்றி வாழ்வதே நாம் அவருக்கு செய்யும் கடனாகும். மேன் மேலும் அவர் விரும்பியபடி சிறப்பாக வாழ இறைவன் ஆசிகளை வேண்டி நிற்கிறேன்.



DR. M. Kumar - M.B.B.S
University of Cologne, Germany















Notre grand-père paternel nous a accompagné, avec nos parents, à une cérémonie organisée à l'école tamoule de Louvres en 2023 où nous étudions. Remarquant sa présence, le comité du festival l'a invité sur scène et l'a honoré afin qu'il remette les prix aux étudiants ayant remportés le concours. Nous avons nous même reçu des médailles et coupes de ses mains.

## Athihan, Yalène, Ayani KASILINGAM

Jusqu'à mes 8 ans j'ai habité chez mes grands-parents et ai donc grandi avec la présence quotidienne de mon grand-père. Je me souviens qu'étant petits, avec mon grand-frère Athihan, nous aimions beaucoup copier notre grand-père en reproduisant ses faits et gestes. Nous buvions le « khool » (nourriture traditionnelle) par terre tous ensemble, nous écrivions sur l'ordinateur sur ses genoux ou encore, nous portions le « saraam » (tenue d'homme traditionnelle) comme lui.
Je suis content d'être le petit-fils d'un ancien journaliste et écrivain. Nous étudions afin d'avoir le même succès que lui.

## Yalène KASILINGAM, 14 ans, collégien en classe de 3ème

J'ai des souvenirs de ma petite enfance où je dormais avec mon grand-père, en reprenant ses mimiques. Je me souviens aussi des fois où il me préparait des frites avec du poulet et une salade, ce qui était mon repas préféré à l'époque. Nous mangions alors tous les deux car c'est aussi un repas que mon grand-père adore, aujourd'hui encore.
Enfin, mon grand-père possède une Mercedes-Benz C220 vieille de 22 ans, n'importe qui lui dirait d'en acheter une plus récente mais moi, passionné de voiture que je suis, je n'arrête pas de lui demander de me léguer sa voiture. Je serais très heureux de pouvoir posséder la voiture de mon grand-père avec laquelle j'ai grandi et qui est encore en excellent état.

## Athihan KASILINGAM, 16 ans, lycéen en classe de 1ère












Vémars
24thApril 2025



My dear Mr.Kasi,
It gives me great pleasure to wish you on the Day, 80th Birth day all the very best for heath and happiness.

I take this opportunity to go back to 1983 when you and your family became our neighbours and soon the friendship grew. My children Judette, Alexandre and Haleyou and yours Aravinthan, Muhunthan, Kalaichelvi, Arudchelvi ans Sivachelvi, almost same ages still remain closely connected ! .

My son-in-law Peter, Judette's husband was very fluent in Tamil, having learnt it at school with his companions. Peter was very proud of you and having worked as one of the Chief supervisors at the even managed to get one of your daughters to work there.

My husband Basil D'Roza had worked in India for over 40 years as a specialist in marine Insurance. At first the company was British and then became Nationalised. He, like Peter was so fluent in your language Tamil. It was always a great pleasure to have a chat with you.

My mother loved to talk to you about the beautiful places in India as she and my father travelled a lot due to my father re-joining the army for the 2nd World war. He was Dr.L.A. Jacob ( M.R.C.S.Eng.) From 1940 to 1946 they were in Simla ( Punjab) and had the pleasure of knowing Mr.Mahathma Gandi personally ! .
Thank you Mr.Kasilingam for giving us a personalised autograph of your marvellous book Titled " 50 Years Political analysis" on the issues of Sri Lanka and Tamils which is very impressive and knowledgeable. We are very proud to be a personal friend of such a wonderful author.
God bless you to see many happier fruitful years.



Mrs. Ealalie D'Roza.



En ce jour spécial, je vous souhaite un très joyeux 80ème, vous avez prouvez qu'âge ne rime pas avec vieillir, mais plutôt avec s'épanouir. Ton esprit d'aventure et ta joie sont une source d'inspiration, Que cette journée soit remplie de bonheur et de joie, entourée de vos proches et amis. Continuez cette personne incroyable qui j'ai eu le privilège de rencontrer au hasard(travaillée chez lui pour sa Belle Mère qui repose en paix) et qui devenue comme quelqu'un de ma famille, un homme de cœur en or, un homme généreux , gentil et humble . Je vous souhaite encore une longue vie avec du bonheur et santé pour profitez à chaque jour.

Leonor

**இந்த சிறப்பு நாளில், காசிலிங்கம் சபாபதிப்பிள்ளைக்கு 80வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

வயது என்பது முதுமையுடன் தொடர்புடையது அல்ல, மாறாக மலர்ச்சியுடன் தொடர்புடையது என்பதை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள். உங்கள் சாகச உணர்வும் மகிழ்ச்சியும் ஊக்கமளிக்கின்றன. இந்த நாள் உங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் நண்பர்களால் சூழப்பட்டு, மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்கட்டும். தற்செயலாக சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது (அவரது மாமியார் திருமதி. பொன்னுத்துரை புவனேஸ்வரி அவர்களைப் பராமரிக்க நான் அவரது வீட்டில் வேலை செய்தேன், அவரது ஆத்மா சாந்தியடையட்டும்) மேலும் அவர் என் குடும்பத்தில் ஒருவராக மாறினார். தங்க இதயம் கொண்ட ஒரு மனிதர், தாராள மனப்பான்மை கொண்டவர், கனிவானவர் மற்றும் பணிவான மனிதர். நீங்கள் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன்.



Leonor
















கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் 'மூன்றாம் உலகப் போர்'
நூல் வெளியீட்டு விழா 15.06.2013 அன்று
பரிஸில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்
தலைமை தாங்கியிருந்தார்.

*Association des habitants de Pungudutivu France*

புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் பிரான்ஸ்

# தீவகத்துக்குப் பெருமை சேர்த்துள்ள பெருமகன் எஸ்.கே.காசிலிங்கம்

ஈழத்தின் தலைசிறந்த பத்திரிகையாளர் தீவகத்துக்குப் பெருமை சேர்த்துள்ள பெருமகன் எஸ்.கே.காசிலிங்கம் ஐயாவுக்கு அமுதவிழா வாழ்த்துக்கூறுவதில் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ் மகிழ்வடைகிறது.

யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகத் திகழ்ந்தவர். தீவகம் தொடர்பாகவும், அப்பகுதி மக்களின் நலன் சார்ந்தும் சேவைகள் புரியும் பெருந்தகை காசிலிங்கம் ஐயா, பல்லாண்டுகள் உண்மைக்கும் நீதிக்குமாய் பத்திரிகை வாயிலாக உழைத்தவர். இந்தகைய அனுபவமும், தியாகமும் இன்றைய தலைமுறைக்கு மிகப்பெரிய உந்துசக்தியாக இருக்கிறது. எமது தேசத்திலும், புலம் பெயர்ந்து வந்து பிரான்ஸ் தேசத்திலும் பத்திரிகைத்துறையில் பணிபுரிந்து எமது மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையாற்றுவது உயர்வானது. பிரான்ஸில் அனலைதீவு மக்கள் ஒன்றியத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்து, அதன் தலைவராகவும் பணியாற்றி வந்தீர்கள். இப்பொழுது போசகராக விளங்கி வருகிறீர்கள். எண்பதாவது அகவையை தொட்டு விட்ட எஸ்.கே.காசிலிங்கம் ஐயா இன்னும் பல்லாண்டுகள் தேக சுகத்தோடு வாழ்ந்து வளம்பெற புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ் நிர்வாகிகள், உறுப்பினர்கள், புங்குடுதீவு மக்கள் அனைவரும் வாழ்த்துகிறோம்.

**புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்**



# எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் பிள்ளைகளும், மருமக்களும் பேரக்குழந்தைகளும்









தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
From the Community To the Community
Premier Canadian Tamil Journal

# பெருங்கலைஞர் ஏ. ரகுநாதன் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூல்



2022 | ஏப்ரல் | தமிழர் தகவல்






# நான் கண்ட நல்ல மனிதர் காசிலிங்கம் ஐயா



பிரான்சில் இருந்து 2009 ஜனவரி மாதம் இந்தியாவுக்கு வந்திருந்த ஈழத் தமிழர் ஒருவரை சந்திக்கச் சென்றேன். இவர் நண்பர் திலகர் மூலமாக அறிமுகமானவர். மாலை நேரம், சென்னை பள்ளிக்கரணையில் ஒரு வீட்டில் நண்பருடன் உள்ளே சென்றேன். எங்களை பார்த்ததும் வீட்டினுள் இருந்து வெளியே வந்து, என் கைகளை பிடித்தவாறு, இன் முகத்தோடு வரவேற்றார். அன்று இருந்த அதே உபசரிப்பு, புன்சிரிப்பு, இன்று வரை மாறவேயில்லை. அடுத்து, வீட்டைச் சுற்றிக் காண்பித்து விட்டு, மொட்டை மாடிக்குச் சென்று அமர்ந்தோம். பொதுவான விசாரிப்புக்குப் பின்னர், இறுதி கட்டத்தை அடைந்திருந்த ஈழப்போர் பற்றி பேச ஆரம்பித்தோம்.மிகவும் கவலையுடன் பேச ஆரம்பித்தார். போரின் முடிவு என்னவாக இருக்கும் 'அதுதான் பேச்சின் மையமாக இருந்தது'. அதற்குள் இரவாகி விடவே, எங்களுக்கு உணவு ஏற்பாடு செய்தார். அதை செய்யும் போது, அவருடைய விருந்தோம்பல் குணம் தெரிந்தது. அது அன்று முதல் இன்று வரை குறையவில்லை. பிரியம், உபசரிப்பு, விருந்தோம்பல், அரசியல் தெளிவு, நீண்டகால பத்திரிகைத்துறை அனுபவம், உடன் இருப்பவர்களின் தேவையறிந்து உதவும் உள்ளம் என அனைத்தும் கூடிய ஒரு 'நல்ல மனிதரை' அன்று சந்தித்தேன். அவர்தான் ஐயா காசிலிங்கம். அதற்கு பிறகு காசிலிங்கம் ஐயா எப்போது சென்னை வந்தாலும் சந்திப்போம். அரசியல், பொது விசயங்கள், தனிப்பட்ட விசயங்கள் என பேச்சு செல்லும். எதைப்பற்றி பேசினாலும் தெளிவாக, அவருக்கென்று தனி பார்வையுடன் விவாதம் செய்வார். அப்போது தான் தெரியவந்தது, அவருடைய நீண்ட பத்திரிகைத்துறை அனுபவம். ஈழத்தில் மட்டுமல்லாமல் பிரான்சிலும், பரிஸ் ஈழநாடு, 'தமிழன்' பத்திரிகைகள் பற்றி எடுத்துக்கூறினார். வியப்பாக இருந்தது! அவர் சந்தித்த பிரச்சனைகள், அனுபவங்கள் தான் எவ்வளவு! அவைகளை எல்லாம் தொகுத்து 'என்னுள் என்னோடு' என்ற தலைப்பில் நூல் ஒன்று வெளியிட்டதாகச் சொன்னார். அந்த நூலையும் என்னிடம் தந்தார்.




இலங்கை யாழ்ப்பாணம் நல்லூரில் வாழும் இவரது உறவினரான, கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய 'உடுமலை தந்த கவிமலை' என்ற நூலினை, தோழமை பதிப்பகத்தார் மூலம் 766 பக்கங்களில் பதிப்பித்ததுடன், இந்நூலுக்கான வாழ்த்துரையை திராவிடர் கழக வீரமணி அவர்களிடம் பெற்றார். 'ஒரு முனைவர் பட்டத்துக்குரிய

ஆய்வுத்தொகுப்புப் போன்ற இந்நூலையே வைத்து, நூலாசிரியருக்குத் தனித்துவ முனைவர் பட்டத்தைப் பல்கலைக்கழகங்கள் வழங்கிட முன்வர வேண்டும். அதற்கு முழுத்தகுதியும் படைத்தது இந்நூல்' என்று கீ.வீரமணி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இந்நூலுக்கான அணிந்துரையை காசிலிங்கம் ஐயா எழுதியுள்ளார். இவரது தலைமையிலேயே வெளியீடு நடைபெற்றது. எழுத்தாளர் பிரபஞ்சன், பாடலாசிரியர் யுகபாரதி, தி. க வை சேர்ந்த வழக்கறிஞர் அருள்மொழி என பிரபலங்களை ஒருங்கிணைத்து, வெற்றிகரமாகப் புத்தகத்தை வெளியிட்டார். அதற்காக அவர் மிகவும் பாடுபட்டார். அதை அவருடன் இருந்தே கவனித்தேன். தன்னுடைய புத்தகத்திற்கு கூட இவ்வளவு உழைத்திருக்கமாட்டார். அவருடைய இந்த பண்புதான் அவரை, எல்லோரும் விரும்பும் மனிதராக ஆக்கியுள்ளது. மேலும், காசிலிங்கம் ஐயா மூலம் எனக்கு பல அருமையான நண்பர்கள் அறிமுகம் ஆனார்கள். அவர்களில் முக்கியமானவர் ஐயா அரியநாயகம் அவர்கள். அவர் பிரான்சில் தமிழ் தியேட்டர் எனும் அமைப்பையும் உடல் எனும் சஞ்சிகையையும் நடத்தி வருபவர். அவருடைய நட்பும், அறிமுகமும் கிடைத்தது ஐயா காசிலிங்கம் மூலமாக தான். அந்த சிறந்த மனிதருக்கு 80வயது நிறைவடையும் இந்த தருணத்தில் ஐயா காசிலிங்கம் இன்னும் பல பத்தாண்டுகள் வாழ்ந்து சிறப்புற மனதார இறைவனை வேண்டுகிறேன்.



**சிதம்பரம்**
**திரைப்பட இயக்குநர்**
**சென்னை**

**எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள்**
**லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர்**
**1979ல் யாழ்ப்பாணம்**
**Gnanams studioவில்**
**எடுத்துக்கொண்ட குடும்பப்படம்.**






வார வெளியீடு
வீரகேசரி
THE ILLUSTRATED NATIONAL TAMIL WEEKLY IN SRI LANKA


வீரகேசரி வார வெளியீடு

# அனலைதீவு மக்கள் கல்வித்தரத்தை உயர்த்தும் 'அனலை கலாசார ஒன்றியம் பிரித்தானியா'

பிரித்தானியாவில் தளம் கொண்டுள்ள அனலை கலாசார ஒன்றியம் அனலைதீவு வாழ் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது. லண்டனில் வாழ்ந்துவரும் அனலைதீவைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் அனலை கலாசார ஒன்றியம் நடத்திய 'அனலை மாலை' ஒன்று கூடலில் திரண்டார்கள்.

ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சபாபதி பத்மநாதன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

ஒன்றியத்தலைவர் கலா சோமசுந்தரம், உப தலைவர் கதிரேசு வரதராஜா, திருமதி வரதராஜா ராஜேஸ்வரி, திருமதி பத்மநாதன் பேபி, பிரான்ஸிலிருந்து வருகை தந்திருந்த ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கம் ஆகியோர் மங்கல விளக்கேற்றினர். ஒன்று கூடலில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அனலை கலாசார ஒன்றியத்தில் சேவையாற்றிய உறுப்பினர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

பிரித்தானியாவில் இயங்கிவரும் அனலை கலாசார ஒன்றியத்துடன் தொடர்புபட்ட நோர்வே, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த அனலைதீவைப் பூர்விகமாகக் கொண்டவர்களும் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த ஒன்று கூடலில் பிரதானமான நிகழ்ச்சியாக அனலைதீவில் இப்பொழுது வாழ்ந்துவரும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் கலைவாணி கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமாக கல்விச்சேவை வழங்க ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அனலை கலாசார ஒன்றியத்தின் செயற்றிட்டங்கள் ஒன்று கூடலில் எடுத்துக்கூறப்பட்டன.

அனலைதீவின் நடுப்பகுதியில் சதாசிவம் மகாவித்தியாலயம், முருகன் கோயில், சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு முன்னால் காலஞ்சென்ற ஆசிரியர்களான சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை, திருமதி சாமளவல்லி கணபதிப்பிள்ளை ஆகியோர் வாழ்ந்த இல்லத்தில் அவர்களது நினைவாக கலைவாணி கல்வி நிலையத்தை நடத்த அனுமதித்த அவர்களது மகன் எஸ்.கே.காசிலிங்கத்துக்கு நன்றி தெரிவித்து அவருக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டது.

அனலைதீவு பிரசித்திபெற்ற கல்வியாளர்களைக்கொண்ட கிராமம். தீவுப்பகுதியில் சென்ற் அந்தனீஸ் கல்லூரியை அடுத்து, அனலைதீவில்தான் ஆங்கிலப்பாடசாலை இருந்தது. இங்கு கல்வி கற்றவர்கள் நாட்டிலுள்ள சகல திணைக்களங்களிலும் உயர் பதவி வகித்தார்கள்.

க.பொ.த பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றவர்களாக அனலைதீவு மாணவர்கள் திகழ்ந்தார்கள் என்பதையும், அந்த மாணவர்கள் யாழ்.இந்துக்கல்லூரியில் உயர் கல்வியைத்தொடர தன்னுடைய பத்திரிகைத்துறைத்தொடர்புகளைப் பயன்படுத்தியதையும், 1970களில் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய வேளையில் அப்பொழுது யாழ்.இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்த என்.சபாரத்தினம் அனலைதீவு மாணவர்களுக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் இடமளித்ததையும் மூத்த பத்திரிகையாளர் 'ஈழநாடு' எஸ்.கே.காசிலிங்கம் தனதுரையில் எடுத்துக்கூறினார். அத்துடன், அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் ஆசிரியப்பணியாற்றி வந்த தனது பெற்றோர் நினைவாகக் கலைவாணி கல்விக்கூடம் அமைத்து இலவச சேவையாற்ற முன்வந்துள்ள பிரித்தானியாவில் உள்ள அனலை கலாசார ஒன்றியத்துக்கு நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்தார்.

யாழ்.இந்துக்கல்லூரியின் அதிபராக விளங்கிய என்.சபாரத்தினம் பின்னாளில் ஈழநாடு ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்.

பிரான்ஸ் நாட்டில் இப்பொழுது வாழ்ந்துவரும், யாழ்ப்பாணத்திலிருந்து 1959இல் வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையின் உதவி ஆசிரியராக விளங்கிய எஸ்.கே.காசிலிங்கம் தனது தாய் தந்தையர் வழிவந்த அனலைதீவு இல்லத்தை இலவச கல்விக்கூடம் ஒன்றை நடத்துவதற்கு வழங்கி உதவியுள்ளமை மிகவும் பாராட்டுதலுக்கு உரியது.

# பத்திரிகைப்பணியைத் திரும்பிப் பார்த்தேன்..

விழா மலர் ஒன்று இரண்டாவது பதிப்பாகியுள்ளது. அகவை 80ஐக் கொண்டாடும் விழா என ஒழுங்கமைக்கப்பட்ட எனது அமுதவிழா, என்னைத் திரும்பிப்பார்க்க வைத்திருக்கிறது. இவ்வளவு ஆற்றலாளர்கள், ஊடகங்கள் என் மீது கவனம் செலுத்தியிருக்கும் அளவுக்கு எனது பத்திரிகைத்துறைப்பணி அமைந்திருக்கிறது என்பதை 25.05.2025 அன்று உலகத் தமிழ்க் கலையகம் பரிஸில் நடத்திய அமுதவிழா எடுத்துணர்த்தியுள்ளது. வாழ்நாள் சாதனையாளர் என்ற விருதினை பிரான்ஸில் பெற்ற ஒரே தமிழ்ப்பத்திரிகையாளர் என்ற பெருமையை எனக்களித்த ஐபிசி தமிழ் நிறுவனம், அதன் தலைவர், நிர்வாக இயக்குநர் ஆகியோர் மீண்டும் வாழ்த்தி மகிழ்வித்திருக்கிறார்கள். 'ஈழநாடு' மாலி, பேராசான் மு.நித்தியானந்தன், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதரசிங், கலைஞர் ஆனந்தன், ஐரோப்பியத்தமிழ் வானொலி இயக்குநர் ரவீந்திரன், ஒலிபரப்பாளர் எம்.என்.எம்.அனஸ் ஆகியோரின் வாழ்த்துரைகளை காணொலியில் பார்த்துப் பிரமித்துப்போய்விட்டேன். உலகப் புகழ்பெற்ற பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரன் கோவிலூர் செல்வராஜன் எழுதிய கவிதையை பாடி வாழ்த்தி காணொலியாகத் தந்து மகிழ்வித்தார்.

இலங்கையின் இன்றைய முன்னணிப்பத்திரிகை, மூத்த பத்திரிகை வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், ஜேர்மனி தமிழருவி வானொலி இயக்குநர் நயினை விஜயன் ஆகியோர் பதிவிட்டுள்ள வாழ்த்துகள் பிரமிக்க வைத்துள்ளன. 'வீரகேசரி' (இலங்கை), 'தமிழ் முரசு' (இலங்கை), 'காலைக்கதிர்' (இலங்கை), 'புதிய சுதந்திரன' (கனடா), ஆகிய பத்திரிகைகள், 'அக்கினிக்குஞ்சு' இணையத்தளம் (அவுஸ்திரேலியா)என்பன அமுதவிழா தொடர்பான தகவலைக் கட்டுரைகளாக வெளியிட்டிருந்தமை பெரு மகிழ்வைத்தந்துள்ளது. அமுதவிழா மலர் முதல் பதிப்பு 252 பக்கங்களில் வெளியானது. பிரெஞ்சுப்புரட்சியை அழகுதமிழில், இலகு நடையில் எழுதி வெளியிட்ட முதல் ஈழத்தமிழர், புகழ் பெற்ற இலக்கிய விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் க.வாசுதேவன், இந்த மலர் பற்றி ஆற்றிய ஆய்வுரை சிந்திக்கவைத்திருக்கிறது. இன்னும் எழுத வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியிருக்கிறது. ஒரு பத்திரிகையாளன் ஓய்திருக்க முடியாது, தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை மலரின் பக்கங்கள் உணர்த்துகின்றன. பரிஸ் மாநகரில் தமிழ்ப்பத்திரிகையாளரான 'ஈழநாடு' பத்திரிகையாளர் ஒருவருக்கு நடைபெற்றுள்ள மிக உயர்வான விழா. இது எனக்கு நடைபெற்றமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. அமுதவிழாவுக்குத் தலைமை தாங்கியவர் எனது அன்புக்குப்பாத்திரமானவர். நான் தலைமைதாங்கிய பல

விழாக்களில் அவர் பேச்சாளராகத் திகழ்ந்திருக்கிறார். எப்பொழுதும் காசி அண்ணர் என வாஞ்சையுடன் அழைத்து உறவாடும் வி.ரி.இளங்கோவன் மிகவும் ஈடுபாட்டுடன் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

'இத்தனை பத்திரிகைகளும் மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே.காசிலிங்கத்தின் அமுதவிழாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து பக்கம் பக்கமாக வாழ்த்துக் கட்டுரைகளை வெளியிட்டமை இதுவே முதல் தடவை' என விழா தலைவர் குறிப்பிட்டிருந்ததை அவதானித்ததில் மகிழ்வடைந்தேன். இந்த விழாவில் நேரடியாகப் பங்கெடுத்திருக்கக் கூடியவர். கலைஞர் ஏ.ரகுநாதன் தமிழன் பத்திரிகையில் எழுதிய 'ஓர் ஒப்பனை இல்லாத முகம்' நூலின் அறிமுகவிழாவை நானில்லாமலேயே கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரை அழைத்து நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று நடத்திய நண்பர், வவுனியா,கிளிநொச்சி முன்னாள் அரசாங்க அதிபர், இந்துக் கலாச்சாரத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர், கல்வி அமைச்சின் மேலதிக முன்னாள் செயலாளர் உடுவை தில்லை நடராஜா உடல் நலம் குற்றிய நிலையில் இருப்பதால் அவர் எதனையும் எழுதிக்கொள்ளவில்லை. எனினும் பல்துறைக்கலைஞர் கோவிலூர் செல்வராஜன் மூலம் தனது அன்பினைத் தெரிவித்திருந்தார் அவருக்கு சிறப்பாக எனது நன்றியைத் தெரிவிக்கும் அதே வேளை, நண்பர் உடுவை தில்லை நடராஜா விரைவாகக் குணமடைய எனது குலதெய்வம் அனலை ஐயனாரை வேண்டுகிறேன். அமுதவிழா எனது பத்திரிகைத்துறைப்பயணத்தைத் திரும்பிப்பார்க்க வைத்திருக்கிறது.

என் வாழ்வில் நான் கற்பனை செய்திராத விடயங்கள் இந்த 80வது வயதில் நிகழ்ந்தேறுகின்றன. எனது இளவயதில் ஒரு வேகத்தில் பத்திரிகைத்துறையில் சேர்ந்து விட்டேன். 'ஈழநாடு' எனக்கு உரிய களமாக அமைந்தது. ஊடகத்துறையில் இருக்கும் எல்லா இடர்பாடுகளையும் சந்தித்தே எனது பத்திரிகைத்துறைப் பயணம் அமைந்தது. ஆனால், எந்த ஒரு கசப்பான நினைவுகளும் உள்ளத்தில் இல்லாமல் அமுதவிழா துடைத்தெறிந்து விட்டது. 252 பக்கங்களில் வெளியான அமுதவிழா மலரின் இரண்டாம் பதிப்பு 268 பங்கங்களுடன் இப்பொழுது வெளியாகியிருப்பதும் மகிழ்ச்சியே. அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.



'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்'

இக்குறள் கூறுவதற்கமைய,அமுதவிழாவைச் சிறப்பாகத் திட்டமிட்டு நிகழ்த்திய எஸ்.கே.ராஜென் என்றென்றும் நன்றிக்குரியவர்.

**எஸ்.கே.காசிலிங்கம்**


என்னுள்...
என்னோடு...
எஸ்.கே. காசிலிங்கம்




# பத்திரிகையாளர் எஸ் கே.காசிலிங்கம் எழுதி வெளியிட்ட என்னுள் என்னோடு என்னோடு நூலில் இருந்து சில பகுதிகள் இங்கு மறு பிரசுரம் செய்யப்படுகிறது.

## என்னுள்.. என்னோடு..

### என்னுரை

ஐரோப்பிய நாடுகளுக்கு நீண்டநேரப் பயணத்தை மேற்கொண்டு, அடிக்கடி நண்பர்களுடன் காரில் போகும் வேளைகளிலெல்லாம் காரைச் செலுத்தியபடியே எனது பலவிதமான அனுபவங்களை அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருப்பேன். அப்போதெல்லாம் 'இவற்றைத் திரைப்படமாக்கலாமே!' என்பார்கள். திரைப்படம் எடுக்காதுவிட்டாலும் அந்த அனுபவங்களையும் அவர்களால் நான் கண்டுகொண்ட மானிடர்களையும் பதிவு செய்யும் வகையில் நூலொன்றையாவது வெளியிட வேண்டுமென்று நீண்டகாலமாக நிலவிய எனது விருப்பத்திற்கு ஊக்கம் தந்தவர்களுள் முக்கியமானவர்கள் திரு.சி.காராளபிள்ளை ஆசிரியரும், ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு.எம்.அரியநாயகமும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு நான் இலங்கையில் இருந்தபோது, சத்திர சிகிச்சை மூலம் திருத்தம் செய்யப்பட்ட எனது இதயத்தில், கடந்த ஒரு வருடமாக ஒரு கோளாறு ஏற்பட்டிருப்பது, கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, அனுபவங்களை நூலாக்கும் எனது ஆசை வேகமடைந்தது. தவிர, இலங்கை அரசியலில், சிங்கள அரசுகள் திட்டமிட்டு தமிழரை ஏமாற்றி வருகிறார்கள் என்பதையும், தமிழ்த் தலைவர்களின் தூரநோக்கற்ற பார்வை காரணமாகவே, ஈழத் தமிழர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கமும் இந்நூல் எழுத என்னைத் தூண்டியது. இந்நூலுக்கு அறிமுகவுரை, அணிந்துரை, முன்னீடு எழுதியுள்ள திரு.சி.காராளபிள்ளை, திரு. சக்கரவர்த்தி இராசலிங்கம், திரு. எஸ். சபாரத்தினம் (சசிபாரதி), கலைஞர் ஏ. ரகுநாதன், திரு. எம். அரியநாயகம், ஆகியோர் என்னால் மறக்கப்படமுடியாமல், என் இதயத்தில் குடிகொண்டுவிட்டனர். என்னிடம் அவர்கள் கண்ட சில சிறப்புக் குணாதிசயங்களை, எல்லோருமே ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டு பதிவு செய்திருப்பதைக் கண்டு




ஆச்சரியப்பட்டேன். என்னை இவ்வளவு தூரம் அவர்கள் மதித்து, கணித்து வைத்திருக்கிறார்கள் என்பது இவர்களின் எழுத்துக்குப் பின்னரே உணர முடிந்தது. இவர்களுக்கு நன்றி. நித்திரைகூட இல்லாமல் ஓய்வின்றி தமிழ்த் தொண்டு செய்து கொண்டிருக்கும் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் இந்த நூலுக்குத் தந்துள்ள அணிந்துரையை ஒரு பொக்கிஷ மாகக் கருதுகிறேன். அவருக்கு என் நன்றி. என் இதயத்தில் பொதிந்துகிடந்த மறைந்து கிடந்த நிகழ்வுகளை நூல் வடிவில் கொண்டுவர வேண்டுமென்று விரும்பியதால் இதனை மூன்று பெரும் தலைப்புகளில் படைத்து, 'என்னுள் என்னோடு' என்று பெயரிட்டு உருவாக்கியுள்ளேன். சிறு வயதிலேயே பத்திரிகைத் துறையில் நாட்டம்கொண்டு, ஈர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் 'ஈழநாடு'பத்திரிகையில் சேர்ந்தேன். அங்கு எனக்கு ஏற்பட்ட பலவிதமான அனுபவங்களை, 'பத்திரிகை அனுபவங்கள்' என்ற முதலாம் பாகத்தில் பதிவு செய்துள்ளேன். இவற்றில் பெரும்பாலானவற்றை 'பாரிஸ் ஈழநாடு', 'லண்டன் தமிழன' போன்ற பத்திரிகைகளில் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். இரண்டாம் பாகத்திற்கு 'அரசியல' என்று தலைப்பிட்டு, இலங்கையில் 1948ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, மாறி மாறி வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து, தமிழர்களை எப்படியெல்லாம் ஏமாற்றி, தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கைகளை சாதுர்யமாக வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல - நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று பதிவு செய்திருக்கிறேன். மூன்றாம் பாகத்திற்கு, 'புலம்பெயர் வாழ்வியல்'என்று தலைப்பிட்டு ஐரோப்பிய நாடுகளில் ஈழத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், வளர்ந்து வரும் தமிழெழுச்சியையும் வெளிப்படுத்தியிருக்கிறேன். இதில் பெரும்பாலானவை லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் அனைத்துலகத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் - ஐபிசி தமிழ் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நான் தெரிவித்த கருத்துகளாகும். இந்நூலை ஒளிஅச்சுக் கோப்பு செய்த சென்னை, விஜி கிரா.ஃ. பிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு - திருமதி நீ. இராசேந்திரன் பற்றியும் இதில் குறிப்பிட வேண்டும்.

பத்தே நாட்களில் இரவு பகலாக என்னையும் அருகிலேயே வைத்திருந்து, ஆர்வத்துடன் செய்துமுடித்த பெருமை அவர்களுடையதே - எனக்கு இவர்களை அறிமுகம் செய்து வைத்த 'தமிழ்முழக்கம்' பதிப்பகத்தை சேர்ந்த சோழநம்பியார் அவர்களுக்கும் நன்றி.அட்டைப்படத்தை திறம்படச் செய்துகொடுத்த ஓவியர் ஸ்யாம் அவர்களுக்கும் - இவரை அறிமுகம் செய்து தந்த சுபவீ அவர்களுக்கும் என் நன்றி. நூலை மிக அழகாக அச்சிட்டுத் தந்த சென்னை, கற்பக விநாயக ஆப்செட் அச்சகத்தாருக்கு என் நன்றி. சென்னையில் அச்சுவேலையிலிருந்துவிட்டு, நடுநிசி வேளையில் வீடு திரும்பும்போது எனக்காகக் காத்திருந்து, உணவு பரிமாறி அன்பு பாராட்டப்பட்டது குறிப்பாக,




இருதய வருத்தத்திற்கு நாள், நேரம் தவறாமல் நான் எடுக்க வேண்டிய குளிகைகளை, அவ்வப்போது நினைவூட்டி என்னை எடுக்கச்செய்த அருண்குமார் லதா குடும்பத்தை என்னால் மறக்க முடியாது. அவர்களுக்கு என் நன்றி. எத்தனையோ சோதனைகள் வந்தபோதெல்லாம் எனக்கு ஒத்தாசை செய்து, ஐரோப்பாவில் பத்திரிகைத் தொழில்புரிய அனுமதி தந்து, எனது உடல் நிலையில் மிகவும் அக்கறை காட்டித் தேற்றும் என் மனைவி துவாரகையையும், இந்தப் பணிக்குத் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்துகொண்டிருந்த என் மக்கள் கலைச்செல்வி, அருட்செல்வி, அரவிந்தன், முகுந்தன், சிவச்செல்வி ஆகியோரையும் என் மருமக்களையும் இத்தருணத்தில் நினைவுகூர்கிறேன். புலம்பெயர் வாழ்வில் ஈழத்தமிழர்கள் செய்துகொண்டிருக்கும் அனைத்துத் தமிழ்ப் பணிகளையும் பதிவு செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பல நிறுவனங்கள் மற்றும் பலரது பெயர்கள் இதில் பதிவாகியுள்ளன. இதில் யார் பெயராவது விடுபட்டிருந்தால் அது என்னையறியாமல் செய்தது என்று எண்ணி பொறுத்தருள வேண்டுகின்றேன். இந்நூலைப் படித்து உங்கள் விமர்சனங்களை எழுதுங்கள். நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்புடன்.

**எஸ்.கே. காசிலிங்கம்**

**26-02-2002**

# ஈழநாடு

'ஈழநாடு' ஸ்தாபனத்திற்கென்றே நிறுவப்பட்ட அழகிய கட்டிடம் - விநியோகத்திற்கென வாங்கப்பட்ட வாகனங்கள் - அன்பும் அமைதியும் தேஜசும் நிறையப் பெற்ற கடவுளின் குழந்தையான தோற்றத்தில் பிரதம ஆசிரியர் அருள்திரு கே.பி. ஹரன் அவர்கள் - இன, மொழி, தேசியம் பற்றிய உச்சங்களான அதிசய சகோதரர்கள் கே.சி. தங்கராசா, கே.சி. சண்முகரத்தினம் அவர்கள் கல்கி அவர்களால் 'அரிய இராஜரத்தினம்' எனப் புகழாரம் சூட்டப்பெற்ற ஆசிரியர் இராஜரத்தினம் அவர்கள் சிறந்த அரசியல் விமர்சகரும் ஹரன் ஐயா அவர்களின் அடிச்சுவட்டில் பன்னூற்றுக்கணக்கான ஆசிரியர் தலையங்கங்களைத் தீட்டியவரும், சிறந்த சிறுகதை எழுத்தாளரும், "கோப" என்ற டாக்டர் சண்முகரத்தினம் அவர்களால் செல்லமாக அழைக்கப்பட்டவருமான பத்திரிகை ஜாம்பவான் 'கோபு' என்ற திரு. முத்துக்குமார் கோபாலரத்தினம் அவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக 'ஈழநாடு' ஆரம்ப காலம் முதல் சில காலம் வரை நிர்வாகம், காசாளர் பதவிகள் தவிர மற்றெல்லா லாபங்களையும் (ஆளணி விநியோகம், விற்பனை மற்றும் விளம்பரம்) தன் உள்ளங்கை பம்பரமாக வைத்துக் கொண்டிருந்த செல்வி சோமசுந்தரம் பராசக்தி




அவர்கள் சூடும், காரமும், களேபரங்களும் மிக்க செய்திகளை உடனுக்குடன் சேகரித்து 'ஈழநாடு' வாசகர்களுக்கு விழிப்புத் தந்த நிருபர்கள், ஆர்.எஸ்.சர்மா, கிருஷ்ணராஜா ஆகியோர் பின்னாளில் துடுக்கும் மிடுக்கும் நிறைந்த இளைஞனாகப் பிரவேசித்து 'ஈழநாடு' வுக்கு புது உத்வேகம் தந்த நிருபர் எஸ். திருச்செல்வம் மற்றும் கா. யோகநாதன் ஆகியோர் 'ஈழநாடு' ஆரம்பம் முதலாய் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய திரு. க. கணேசலிங்கம் அவர்கள் இப்படி இன்னும் இன்று...

யாழ்ப்பாணத்திற்கு செய்தி பத்திரிகை, அதுவும் காலைத் தினசரி என்பது புதிதான ஒரு சங்கதி. மிகப் பெரிய திட்டத்துடனும், மிகப் பரந்த எண்ணத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட ஈழநாடு பத்திரிகையின் ஆரம்ப காலங்களில், யாழ்குடாவாழ் மக்கள் மதிக்கத் தவறிவிட்டார்கள். சுதேசியத்தில் நமது மக்களுக்கு ஆர்வமும் ஆதரவும் அப்போதெல்லாம் இருக்கவில்லை. கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு மதிப்பளித்தார்கள். அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நெகிழும் என்பது போல் எமது அபூர்வ சகோதரர்களும் மற்றும் அதிகாரிகள், ஊழியர்களும் சேர்ந்து, விடாமல், கொள்கைத் திடத்துடன் பத்திரிகையை தோல்வியின்றி நடத்திவந்தனர். பல காலமாக நஷ்டங்களையும், கஷ்டங்களையும் துச்சமாக மதித்து, மதிப்புமிக்க சகோதரர் இருவரும் தம்மை பத்திரிகையின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்ததன் பயனாக, வடக்கே ஒரு சூரியனாக ஈழநாடு உருப்பெற்று ஊருக்கெல்லாம் வெளிச்சம் தந்தது. ஈழத் தமிழர்கள் அவ்வெளிச்சத்தின் வழியே நடைபோட்டனர். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் இடத்தை, தனித்துவத்தை ஈழநாடு பெற்றது. இப்படியாகவே ஈழநாடு வேகமாக ஓடிக்கொண்டிருந்தபோது நண்பர் காசிலிங்கம் அவர்கள் ஆசிரியர் பகுதியில் நுழைந்தார். அவரும் ஒரு வேக ஓட்டக்காரர்தான். அவர் நடந்து சென்றதை நான் பார்த்ததில்லை. தொடர்ச்சியாக அவர் ஆசனத்தில் இருந்ததையும் நான் கண்டதில்லை. ஆசிரியர் பகுதியில் ஒரு பயிற்சியாளனாகச் சேர்ந்த அவர், ஓரிரு நாட்களிலேயே 'பறக்கத் தொடங்கிவிட்டார்'. மிகுந்த மதிநுட்பமும் சுறுசுறுப்பும் கொண்ட திரு. காசிலிங்கம் அவர்களைப் போலவே என் அன்புக்குரிய தம்பியர் திரு. இ.கே. இராஜகோபால், இ.கந்தசாமி, எஸ்.எஸ்.குகநாதன் ஆகியோரும் திறமைசாலிகள்தான். ஈழநாடு காரியாலயத்தில் காசிலிங்கம் பணியாற்றிய காலத்தில் இரு வேறு திகளில் அவர் எழுதி வெளியான இரு செய்திகள் என்னை வெகுவாக பாதித்தது. நினைவுகூர்கிறேன். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டரின் கவனிப்பாரற்று ரத்த வெள்ளத்தில் கிடந்த ஒரு நோயாளி சம்பந்தமாக இவர் எழுதிய செய்தியும், அதன் மூலம் டாக்டர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் இவரின் மனிதநேயத்தை எடுத்தியம்புகிறது. பாலைத் தீவு ஸ்தல யாத்திரை சென்றவர்கள் படகு விபத்தில் சிக்கி 40 பேர் பலியான செய்தி! சடலங்கள் கரையொதுங்கிய கடற்கரைக்குச் சென்று அந்த




துயர நிகழ்வை குடும்பத்தினரின் கூக்குரல்களை அவர் எழுதி வெளியிட்ட செய்தியும் என் பாதிப்புகளிலொன்று. ஈழநாடு, தென்னகத்திலிருந்து வெளிவரும் எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கத் தயங்கியதாலும் மற்றும் தெற்கத்தைச் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சிங்கள மக்களிடையே தமிழர் விரோதத்தைத் தூண்டுவதிலேயே கருத்தாயிருந்தாலும், நம் தமிழ் மண்ணை, நம் தமிழராலேயே, நம் தமிழர் நலன் காத்திட வேண்டுமென்ற பேரவாவின் பேறாய் உதயமானதுதான் ஈழநாடு. இப்பத்திரிகை எத்தனையோ இன்னல்களுக்கும் இடர்களுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் சாம்பரில் இருந்து உயிர் பெற்றுப் பறக்கும் பறவை போன்று உயர உயர வளர்ந்து பலன் கொடுத்து வந்தது. (உண்மையாகவே ஈழநாடு சாம்பரிலிருந்து மீண்டும் உயிர்த்தது. பின்னரும்.. பின்னரும்..)

சுதேசியத்தில் பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்த நம்மவர் இப்போதெல்லாம் விழித்துக் கொண்டார்கள். விடிந்தும் விடியாததுமாய் உள்ளூர் பத்திரிகையை வாங்கிப் படிக்குமளவுக்கு ஈழநாடு எம்மவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது அது ஒரு வியத்தகு சாதனை! அதனை ஐரோப்பிய நாட்டிலும் நிலைநிறுத்திய பெருமை காசிலிங்கம் அவர்களுக்கும் உண்டு என்கின்றபோது ஆனந்தமே.

வாசகர்களின் இத்தகைய வளர்ச்சியை அவதானித்த ஒரு சில வான்கோழிகள், வணிக நோக்கில் பத்திரிகைகளைத் தொடங்கினர்.

எத்தனை பத்திரிகைகள் உள்நாட்டிலிருந்து வெளிவந்தாலும், அத்தனையையும் விலைகொடுத்து வாங்கிப் படித்தனர் நம்மவர். இப்பழக்கத்தை ஏற்படுத்திய பெருமை ஈழநாடு பத்திரிகையையே சாரும். ஈழநாடு பத்திரிகையை கட்டியெழுப்பிய பெருமையில் பெரும்பகுதி நண்பன் கோபுவையே சாரும். கோபு உணவை மறந்து, பத்திரிகைக்காக உழைத்தவர். உறக்கத்தைத் துறந்து உழைத்தவர். சில சமயங்களில் வீட்டையே மறந்து விடுவார். அரசியல் மற்றும் சமூக இடர்ப்பாடுகளையெல்லாம் தைரியமாக ஊடறுத்துப் பத்திரிகையின் இலட்சியத்திற்காய் உழைத்தவர் கோபு. திரு. காசிலிங்கம் உட்பட இங்கு மேலே குறிப்பிட்ட பத்திரிகையாளர்களும் இன்று ஐரோப்பிய நாடுகளில் ''கொடி' கட்டிப் பறக்கிறார்கள் என அறிந்து மகிழ்கிறேன். மேலை நாடுகளில் மட்டுமின்றி, நமது நாட்டிலும் பத்திரிகைத் துறையில் துலங்கிக் கொண்டிருக்கிறார்கள் கோபுவின் சிஷ்யர்கள்.

**அன்புடன்**
**சசிபாரதி சு.சபாரத்தினம்**




# அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ நாடுகளில் எழுச்சி, வீழ்ச்சி, தேசய விடுதலை வேட்கை, சுய நிர்ணய உரிமைப் போராட்டங்கள், இன,மத, மொழி வேறுபாடுகளை ஒட்டிய போர்கள் போன்ற பல நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்துச் சென்றுள்ளது. இத்தகைய நிகழ்வுகளைப் பதிவு செய்யும் முகமாக பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய தேசிய உணர்வுகள் உரிமைப் போராட்டங்களுக்கு மேல்வாரியான, தத்துவரீதியான விளக்கங்கள் அளிக்கின்ற நூல்களும் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய நூல்களிலெல்லாம் வேறுபட்டதாக ஒரு விடுதலை வேள்வியில் குளித்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டின் இளைய தலைமுறை அறிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, உணர்ந்து செயற்படவேண்டிய முறையில் ஒரு நூல் அமைந்திருக்குமென்றால், ஐரோப்பியாவில் மூத்த பத்திரிகையாளராக விளங்கும் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் யாத்த நூல் என்றே கூறலாம்.

இந்நூலில் காணப்படுகின்ற சிறப்பு அம்சங்களை, ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்ற அதன் தனித்துவமான தன்மையை விளக்குவதற்கு முன்பு, இதை யாத்த ஆசிரியர் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறுவது பொருத்தமானதாக இருக்கும். அரசியல் சமூக தத்துவத் துறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்கள் தங்கள் கைவண்ணத்தைக் காட்டி, வெளியிட்டிருக்கின்ற நூல்களிலிருந்து, இத்தகைய வேறுபாடான நூலை இவர் யாத்திருக்கிறார் என்றால், இவரின் பின்புலம் என்ன என்பதை ஆராய வேண்டியது அவசியமாகும்.

ஒரு நூலைப் பற்றி, நாம் விமர்சிப்பதற்கு முன்பு, நூலின் ஆசிரியரைப் பற்றி அறிவது முக்கியமாகும். (The man behind the book) திரு. காசிலிங்கம் அவர்களை, இளமைப் பிராயத்திலிருந்தே அறிவேன். தந்தையையும், தாயையும் ஆசிரியர்களாகப் பெற்ற இவர், சிறு பிராயத்திலிருந்தே ஒரு துடிப்பான இளைஞராகவும், அதே நேரம் அவர் காலத்தில் ஒட்டிய ஏனைய இளைஞர்களைவிட ஒரு மாறுபட்ட சிந்தனையாளராகவும் இருந்தார்.

எனது கிராமத்தின் (அனலைதீவு) சமூக முன்னேற்றத்தின் நடவடிக்கைகளில் வயதுக்கு மீறியுள்ள வளர்ச்சியோடும் அவர் செயல்பட்டதை நான் அறிவேன். அவருடைய கல்விப் பிராயத்தில், அவருடைய வாதப் பிரதிவாதங்களை அவதானித்த என் போன்ற ஆசிரியர்கள், கணபதிப்பிள்ளை வாத்தியார் வீட்டில் ஒரு வழக்கறிஞர் உருவாகிறார் என்று பேசிக் கொள்வதுண்டு. ஆனால், அவர் உள்ளதை உள்ளபடி கூறுவது, நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரனின் கொள்கையில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்ததனாலும்,




சட்டக் கல்லூரியில் மேற்படிப்பு தொடர வேண்டும் என்ற தன் தந்தையாரின் விருப்பத்தை நிராகரித்து நின்ற போது, ஒருமுறை நான் அவரைச் சந்தித்து, இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ நாடுகளில் எழுச்சி, வீழ்ச்சி, தேசய விடுதலை வேட்கை, சுய நிர்ணய உரிமைப் போராட்டங்கள், இன,மத, மொழி வேறுபாடுகளை ஒட்டிய போர்கள் போன்ற பல நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்துச் சென்றுள்ளது. இத்தகைய நிகழ்வுகளைப் பதிவு செய்யும் முகமாக பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய தேசிய உணர்வுகள் உரிமைப் போராட்டங்களுக்கு மேல்வாரியான, தத்துவரீதியான விளக்கங்கள் அளிக்கின்ற நூல்களும் வெளிவந்திருக்கின்றன.

இத்தகைய நூல்களிலெல்லாம் வேறுபட்டதாக ஒரு விடுதலை வேள்வியில் குளித்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டின் இளைய தலைமுறை அறிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, உணர்ந்து செயற்படவேண்டிய முறையில் ஒரு நூல் அமைந்திருக்குமென்றால், ஐரோப்பியாவில் மூத்த பத்திரிகையாளராக விளங்கும் திரு.எஸ்.கே.காசிலிங்கம் அவர்கள் யாத்த நூல் என்றே கூறலாம்.தம்பி ஏன் உனக்கு ஒரு கைவந்த கலையாக இருக்கும் வாதத் திறமையை வெளிப்படுத்தும் ஒரு துறையைக் கற்பதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடுகிறீர் என்று கேட்ட பொழுது, வழக்கறிஞர் என்று சொன்னால், அவர்களது கட்சிக்காரரின் நலன் பேணுவதுதான் முக்கிய நோக்கமாகும். அந்த இடத்தில், உண்மைக்குப் புறம்பாக, பொய்யைக் கூறி, கட்சிக்காரனைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு ஏற்படும் என முற்றாக மறுக்கின்றேன் என்று கூறியபொழுது, எனது உள்ளத்தில், ஏதோ தாக்கியது போன்ற உணர்வு. இதன் பிற்பாடு இரண்டு, மூன்று ஆண்டுகள் கழித்து, அவரை யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராக சந்தித்தேன். எனக்கு மிக வியப்பாக இருந்தது.

புலம்பெயர்ந்து 1985 ஆம் ஆண்டு, நான் ஐரோப்பா வந்தபின்னர், முதல் தடவையாக பிரான்ஸ் வந்தபோது, அவரது இல்லத்தில் தங்கியிருந்தேன். பழைய விடயங்கள் எல்லாவாற்றையும் நினைவு கூர்ந்து, உரையாடிக் கொண்டிருந்தபொழுது, “அத்தார் நான் ஈழநாடு என்ற பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?” என்று கேட்டார். அந்தக் காலகட்டத்தில், ஐரோப்பாவில் தமிழ்ச் செய்தி பத்திரிகைகளும் இருக்கவில்லை. தமிழ் மக்களுக்கு ஏதோ ஒன்று, தான் செய்ய வேண்டும் என்ற வேட்கை அவர் உள்ளத்திலே எரிந்து கொண்டிருந்ததை நான் உணர முடிந்தது. ஆனால் அப்போது சாத்வீகமாகவில்லையென்றாலும், 1987ல் லண்டனில் சில நண்பர்களுடன் சேர்ந்து, மாதம் ஒருமுறை தமிழன் பத்திரிகையும், பிரான்ஸ் பிரதிநிதியாக இருந்து வெளியிட்ட போதும், ஒரே ஒரு இதழுடன் நின்று விட்டது. 1990ல் அவர்




ஐரோப்பாவின் முதல் பத்திரிகை என்ற ஸ்தானத்தை உடைய பாரிஸ் ஈழநாட்டினுடைய ஸ்தாபக நிர்வாகியாக இருப்பது கண்டு மகிழ்ந்தேன்.

பத்திரிகை ஒரு ஜனநாயக நாட்டின் நான்கு தூண்களின் ஒன்றாகும். காய்தல், உவத்தல் இன்றி உண்மைச் சம்பவங்களை வெளிக்கொணரும் சுதந்திர உலகம். ஆகவே, இவருடைய கொள்கைக்கும், குணாதிசயத்திற்கும் உரிய ஊடகமாக பத்திரிகைத் துறை விளங்கியதால், அதனோடு இவர் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். கொள்கையின் குன்றாய் விளங்கியதால் இளம் வயதிலேயே, அவர் சார்ந்திருந்த 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கக் கூடிய அளவு, மக்கள் மத்தியிலே பரவலாக ஒரு நேர்மையான, உள்ளத் தூய்மையான பத்திரிகையாளர் என்ற நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

இவர சூட்டில் கட்டிய மாடு, வைக்கோல் உண்பதைத் தவிர்க்க முடியாது என்பதைப்போல, தான் சார்ந்திருந்த பத்திரிகை மூலமாக, ஒரு குடத்துள் விளக்காக இருந்த குக் கிராமம் அனலைதீவை, குன்றின் மேல் இட்ட விளக்காக அனைவரும் அறியக்கூடிய விதத்தில், அவ்வப்போது ஏதாவதொரு செய்தி வெளியிட்டுக் கொண்டேயிருப்பார். ஒரு பத்திரிகையாளரின் தொண்டினால், ஐந்து பேராக இருந்த பாடசாலையின் ஆசிரியர்கள், 14 பேராக ஒரு குறிப்பிட்ட காலத்தில் உயர்த்தப்பட்டதென்றால், இன்றும் அந்தக் காசிலிங்கத்தின் சேவையை அனலைதீவு மகா வித்தியாலயம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. 1973ஆம் ஆண்டளவில் அனலைதீவில் செயலாற்றும் வெளியூர் ஆசிரியர்கள் பலர், தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மாற்றம் பெற்றுச் சென்று விட்டனர். இதில் 23 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய பாடசாலையில், 10 ஆசிரியர்களே கடமையில் இருந்தனர். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை கூட இல்லாமல், ஒரு புகழ் பெற்ற மகா வித்தியாலயம் இயங்கியது கண்டு, தனது ஊர் பாடசாலை என்ற உணர்ச்சி உத்வேகம் பெற, கொட்டை எழுத்தில் ஒரு தலையங்கம் தீட்டினார். இந்தப் பத்திரிகை செய்தியுடன் பாராளுமன்றம் சென்ற, தீவுப்பகுதி எம்.பி. திரு. கா.பொ. இரத்தினம் அவர்கள், கல்வி மந்திரியைக் காணவே, ஒரே நாளில் எட்டு ஆசிரியர்கள் ஒரு பாடசாலைக்கு மாற்றுதலில் அனுப்பப்பட்டார்கள். இப்படி, தான் சார்ந்த ஊரின் கல்வித்துறை வளர்ச்சிக்கு இவர் அளித்தது பெரும் சேவையாகும்.

எந்த ஒரு சிக்கலான விடயத்தையும் வாசித்த மாத்திரத்திலோ, அல்லது செவிமடுத்த மாத்திரத்திலோ புரிந்து செயல்படக்கூடிய திறன் வாய்ந்த காசிலிங்கம் அவர்கள், அவருடைய பத்திரிகைத் துறையில் இருந்த காலத்தில், பல கல்விமான்களையும், அரசியல் புள்ளிகளையும், நிர்வாகத் துறையில் மேல்மட்டத்திலிருந்தவர்களையும், மிகத் துணிச்சலோடு அணுகி, பல பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டதை நான் அறிவேன். இந்த அடிப்படையில்,




அவர் காலத்தில் இலங்கையில் இந்த வகையில் அரசியல் கல்வித் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும், அதனால் தமிழீழத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், தமிழ்த் தலைவர்களின் கையாலாகாத் தன்மையையும் நன்கு அறிந்து உணர்ந்து, அனுபவித்திருந்ததனால், அவர் வருங்கால இளைஞர்கள் உணர்வுபூர்வமாக, தங்கள் தாயகத் தமிழர்களுக்கு, இத்தகைய அவல நிலை ஏற்படுவதற்குக் காரணியாக இருந்தவர்கள் பற்றி சிந்திக்குமளவுக்கு இந்த நூலை யாத்திருக்கிறார் என்றே சொல்லலாம்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் வரலாற்றிற்குட்பட்ட காலத்திலிருந்தே வாழ்ந்து வருகிறார்கள். தங்களுக்கென தனியாக ராஜ்யத்தை அமைத்து, தங்கள் கலாச்சார பண்பாடு, மொழி போன்றவற்றை பேணிப் பாதுகாத்து வந்தவர்கள். ஐரோப்பியர் வருகைக்கு முன் இலங்கையில் தமிழர்கள், தனித்தமிழ் ராஜ்யத்தை பரிபாலித்து வந்தனர். போர்த்துக்கேயர்களோ அல்லது அவர்களுக்குப் பின்வந்த ஒல்லாந்தர்களோ இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி இருந்தாலும், அவற்றை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவில்லை. ஆகவே, தமிழ்ப் பிரதேசங்கள், தமிழ் ஆட்சியின் கீழ் இருந்தாலும், தனிக் கூறுகளாக இருந்தன. ஆனால், ஆங்கிலேயர்கள் கண்டி ராஜ்யத்தையும் கைப்பற்றி, தங்களுடைய நிர்வாக சுலபத்துக்காக, இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தில் கொண்டு வந்தனர்.

பிரித்தாலும் கொள்கையுடைய (Divide & Rule) ஆங்கிலேயர்கள், தாங்கள் கைப்பற்றிய குடியேற்ற நாடுகளில், பெரும்பான்மையினரை அடக்குவதற்கு, சிறுபான்மையினருடைய உதவியை நாடி நிற்பது வழக்கம். இலங்கையில் யாழ்ப்பாண குடா நாடு ஒரு வறண்ட பிரதேசமாகும். இருபது ஆண்டுகளில் யாழ்ப்பாணம் ஒரு பாலைவனம் ஆகிவிடுமென்று, இஸ்ரவேல் நாட்டு நில ஆராய்ச்சி நிபுணர்கள் கூறி இருந்தனர். (அதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல், பல ஆண்டுகள் கழிந்து விட்டன.) ஆனால், யாழ்ப்பாண விவசாயி, தங்களுடைய பிள்ளை அரசாங்க ஊழியனாக வரவேண்டிய அளவில், கல்விக்கு முக்கியத்துவம், முன்னுரிமை கொடுத்தனர். 1954ல் பிரதம மந்திரி கொத்தளாவலை யாழ்ப்பாணம் வந்தபோது, தடுக்கி விழும் இடமெல்லாம் பாடசாலையைக் காண்கிறேன் என்று கூறியளவுக்கு, யாழ்ப்பாணத்தின் பாடசாலைகள் அமைந்திருந்தன. ஆகவே, யாழ்ப்பாணத்தவர்கள் கல்வி வளர்ச்சி பெறவே, ஆங்கிலேயர்கள் தமிழர்களை பெரும்பெரும் பதவிகளில் அமர்த்தினர். சேர் பொன். இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் சிங்களவர் மத்தியில் செல்வாக்குடன் இருந்தனர். அந்தக் காலகட்டத்தில், இலங்கையினுடைய பெரும்பெரும் நிர்வாகப் பொறுப்புக்களில், தமிழர்கள் அமர்த்தப்பட்டிருந்ததனால், அவர்கள் மத்தியில் தமிழ் சிங்கள இன வேறுபாட்டைச் சிந்திக்க முடியவில்லை.




ஒரு காலத்தில, இலங்கையின் சுதந்திரம், சிங்களப் பெரும்பான்மையினத்திடம் கையளிக்கப்படும் என்பதை அன்றிருந்த தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்க்கவும் இல்லை. இந்த நிலையில், இலங்கை சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகளாக, தமிழனம் ஓர் இரண்டாந்தரப் பிரஜைகளாக நாடு அற்றவர்களாக கணிக்கப்படுகின்ற ஒரு நிலைப்பாடு இருந்து வருகிறது.

இந்த நிலை நீடிப்பதற்குக் காரணமாக, தங்களுடைய கடந்தகால தமிழ்த் தலைவர்களின் தூர நோக்கற்ற பார்வை எத்துனை தூரம் உதவி செய்தது என்பதை இந்நூலில் காசிலிங்கம் அவர்கள் மிகத் துலாம்பரமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். தொடர்ச்சியாக, சிங்களத் தலைமைகள், தமிழ் தலைமைகளை எவ்வாறு ஏமாற்றினார்கள் தமிழ் தலைமைகள் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள் இதே நேரத்தில், சாதாரணத் தமிழ் மக்களுடைய வறட்டு உணர்வுகளைத் தூ ண்டி, இதன் மூலம் வாக்குகளைப் பெற்று, பாராளுமன்றம் செல்வதிலேயே எவ்வாறு குறியாக இருந்தார்கள் என்பதை, மிக விளக்கமாகக் குறிப்பிட்டிருப்பது, இன்றைய இளைஞர்கள் இதனைக் கற்பதின் மூலம், இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் இடம் பெற்ற தமிழ்த் துரோக நடவடிக்கைகளை அறிந்து கொள்வதற்கும், இன்றைய தமிழர் விடுதலைப் போராட்டம் ஆரம்பமாவதற்கும் பின்புலமாக அமைந்த காரணிகளையும் அறிவதற்கு ஏதுவாக இருக்கிறது.

இன்று புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் இளைஞர்கள், நம் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் எவ்வாறு பங்கு கொண்டுள்ளார்கள் என்று சிந்திப்போமேயானால், உண்மையாகவே தமிழ் ஈழத்தில் நடக்கின்ற பிரச்சினைகளை, சரியான முறையில் உணராமல், ஏதோ உதவுவது என்ற அடிப்படையில் உணர்ச்சி குன்றி செயல்படுவது கண்கூடு. இந்நூலை அத்தகைய இளைஞர்கள் படிப்பதன் மூலம், அவ்வப்போது தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள், தமிழ் மிதவாதத் தலைவர்கள் எவ்வாறு தங்கள் கையாலாகாதத் தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள் இன்றைய போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு தவிர்க்க முடியாத காரணிகள் எவை என்பதை அறிந்து கொள்வதோடு, அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் உணர்வோடு பங்கு கொள்ளக்கூடிய ஒரு நிலைப்பாட்டை இந்நூல் ஏற்படுத்தும் என்பது என் திடமான நம்பிக்கை. இலங்கையில், சுதந்திரத்தின் பின் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களை, ஒரு புதுக் கோணத்தில் பார்வையிட்ட நூலாசிரியர், அங்கு நிலவிய கல்வி, பொருளாதார, சமூக மாற்றங்களை கூறத் தவறவில்லை. ஒரு நாட்டின் விடுதலை வேட்கை கொண்ட இளைஞர்கள், பெருகுகின்றார்களேயானால், அவர்களை மட்டம் தட்ட, ஏனோதானாக்களாய் ஆக்க, ஏகாதிபத்திய அரசுகள் கைகொண்டுள்ள ஒரு ஆயுதம், கல்வி உரிமையைப் பறிப்பதாகும். சுதந்திரம் பெற்ற 25 வருடங்களுக்கு




மேலாக, சிங்கள இனவாத அரசுகள், தொடர்ந்து தமிழர்களை ஏமாற்றவே, போராட்டங்கள் வெடிக்கத் தலைப்பட்டன. தமிழ் இளைஞர்கள், பல்கலைக்கழகம் செல்கின்ற வாய்ப்பினைக் குறைத்தால், அவர்கள் அரசியல் சித்தாந்தகளையும், தத்துவங்களையும் அறிகின்ற வாய்ப்பு இன்றி ஏன், எதற்கு, எப்படி என்று கேள்விகளை எழுப்புகின்ற மனநிலையின்றி, சொன்னதைச் செய்யும் சுப்பர்களாகவும், எடுபிடிகளாகவும், செயல்பட வைக்க முடியும் என்ற தோரணையில் தரப்படுத்தல், மாவட்ட ரீதியில் மாணவர் தெரிவு ஆகிய கொள்கைகளைக் கடைபிடித்து, யாழ்ப்பாண இளைஞர்களின் ஒரே நம்பிக்கையும், மூலதனமுமாக இருந்த கல்வியையும் முடக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளை மிகவும் தெளிவாக ஆசிரியர் கூறியிருக்கிறார். "நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாவிட்டால், தீமையாவது செய்யாது இரு" என்று கூறப்படுகிறது. ஆனால், இதற்கு முற்றும் முழுதிலும் முரணாக, தமிழர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அதனைச் சீர்குலைப்பதற்கும், குறைப்பதற்குமாக தரம் குறைந்த ஆசிரியர்கள் தமிழ்ப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட தன்மையையும், விளக்கமாக, சரிவரக் கூறியுள்ளார். இதை வாசிக்கும் இன்றைய இளைஞர்கள், தமிழ் மாணவர் சமுதாயம் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதையும், அதன் காரணமாக எழுந்த இந்தப் போராட்டத்தினுடைய புனிதத் தன்மையையும் உணர்ந்து கொள்வதற்கு இந்நூல் உதவியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இலங்கையின் சுதந்திரத்தின்கீழ் வழிவழியாக வந்த, சிங்கள ஏகாதிபத்திய அரசுகள், தமிழினத்தின் இருத்தலை முற்றும்முழுதாக அழிக்கின்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருந்தன என்பதற்கு உதாரணமாக, 'சிங்களம் மட்டும்' சட்டம், பௌத்தமத 'முன்னிலை' போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஓர் இனம் அடையாளம் அற்றதாக ஆக்கப்பட வேண்டுமாயின், அந்த இனத்தினுடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு போன்றவை ஒழிக்கப்பட வேண்டும். இன்று உலகிலே, பல தீவுகளில் தமிழ் தெரியாத தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். அவர்கள், தங்கள் இனத்தை வெளிப்படுத்தக் கூடிய சின்னங்கள் எதுவும் இல்லாமல் இருப்பதைக் காணலாம். இலங்கையிலும் அப்படியான ஒரு நிலையை உருவாக்கி, தமிழர்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள இனத்தோடு இரண்டறக் கலந்து கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். இதன் அடிப்படையிலேயே, 1956ல் தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை ஒட்டி எழுந்த பிரச்சினைகள், சாத்வீகப் போராட்டங்கள், சிங்கள அரசு அவற்றை எதிர்கொண்ட முறைகள், அந்தக் காலகட்டத்தில், தமிழ் தலைவர்கள் கடைபிடித்த மிதவாதக் கோட்பாடுகள் பற்றி ஆசிரியர் இந்நூலில் மிகத் துல்லியமாக கூறியிருக்கிறார். அவ்வப்போது நடந்த நிகழ்வுகளை, ஒரு பத்திரிகை ஆசிரியருக்குரிய முத்திரையோடு வெளிப்படுத்தி யிருப்பது, வாசகர்கள்




விடயங்களை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. எந்த ஒரு விடயத்தையும் கூறுகின்ற பொழுது, அனுபவரீதியாக கூறப்படுபவை தாக்கம் கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, ஆசிரியரும், அவருடைய பத்திரிகை மொழியில் இவற்றை வெளிப்படுத்தியிருப்பது, உள்ளத்தில் மிக ஆழமாக பதிவதற்கு ஏதுவாக இருக்கிறது.

தமிழருடைய பண்பாட்டுக் கலாச்சார சின்னங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதில், சிங்கள இனவாத அரசுகள் மிகத் தீவிரமாக செயல்பட்டதை இந்நூலில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும், முத்தாய்ப்பு வைத்ததுபோல, யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்ட சம்பவம், தமிழர்களுடைய நெஞ்சில் காலாதிகாலமாக ஒரு ரணகளமாய், நீறுபூத்த நெருப்பாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் நூலகம் எரியூட்டப்பட்ட சம்பவத்தை இங்கு குறிப்பிட்டு, எரியூட்டப்பட்ட நோக்கத்தையும் கூறியிருக்கிறார். அதே நேரம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு குழப்பப்பட்டது, இந்தத் தமிழ் மொழி ஆராய்ச்சி என்பவற்றிற்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்பதற்காக, செய்யப்பட்ட ஒன்றாகும் என்பதை விளக்கியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம், கரந்தடித் தாக்குதலிருந்து மரபு வழிப் போராட்டமாக, பரிணாம வளர்ச்சியடைந்த காலகட்டத்தில், சிங்கள ஏகாதிபத்திய அரசின் தொடை நடுங்கத் தொடங்கியது. அந்தக் காலத்திலிருந்தே, தமிழர் வரலாற்றை ஆராயும்போது, ஒரு அரசன், ஒரு நாட்டின் மீது படையெடுத்தால், படையெடுக்கப்பட்ட நாடு, அவர்களுடைய படையெடுப்பை எதிர்நோக்க முடியாமல், கோட்டையைப் பூட்டி விடுவார்கள். படையெடுத்த அரசன் கோட்டையை முற்றுகையிட்டு, எந்த ஒரு உணவுப் பொருட்களும், கோட்டைக்குள் செல்ல விடாது தடுத்து, கோட்டைக்குள்ளிருக்கும் அரசனை, அடிபணிய வைப்பது வரலாற்று உண்மையாகும். இந்த அடிப்படையில், இலங்கை அரசும், தமிழ் மக்களைப் புலிகளிடமிருந்து அன்னியப்படுத்த வேண்டுமென்பதற்காகவும், இப்போராட்டம் ஒரு வெகுஜனப் போராட்டமாவதைத் தடுப்பதற்காகவும், புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வந்தது. இந்தப் பொருளாதாரத் தடை பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும், ஆசிரியர் நூலில் மிகச் சிறப்பாக, பல நாடுகளின் நிகழ்வுகளை உதாரணம் காட்டிக் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

உள்ளதை உள்ளவாறு ஒளிமறைவின்றி எழுதும் எழுத்தாளர்கள் (Literal Statements Flourishes on the background of Overstatements and Understatements) அநேகமாக இல்லை என்றே கூறலாம். கற்பனைவாதத்தை மையமாக வைத்து, எழுத்தாளர்கள் கதைகளும், கவிதைகளும் புனைவதைக் காண்கின்றோம். உண்மைச் சம்பவங்களைக் கதையாகவோ அல்லது நாவலாகவோ ஒரு




எழுத்தாளன் வெளிப்படுத்தினால், அவைகள் மக்கள் மத்தியில் மிக நெருக்கமாகப் பதிந்து விடுவதைக் காணலாம். இந்த வகையில், ஒரு சிறு துளியைப் பெருவெள்ளமாகவோ, ஒரு பொறியை பெரும் நெருப்பாகவோ ஆக்கிவிடுகின்ற பத்திரிகையாளர்கள்தான் இன்று மலிந்து காணப்படுகிறார்கள். காரணத்தைக் கேட்டால், மக்களுடைய பசி அப்படியாக இருக்கிறது அதற்கு நாம் தீனி போடுகிறோம் என்கிறார்கள். ஆனால், காசிலிங்கம் அவர்கள், உண்மையைத் தவிர, உண்மைக்குப் புறம்பாக எந்தவொரு செய்தியையோ, விடயத்தையோ அல்லது யாரையும் தாஜா பண்ணுவதற்காகவோ எழுதுபவர் இல்லை. ஒரு பத்திரிகையாளன் எழுத்தாளனாகலாம் ஆனால் ஒரு எழுத்தாளன் பத்திரிகையாளனாவது ஒரு துர்லபம்.

"கண்டவர்களெல்லாம் குடியிருக்க பேனா என்ன வாடகை வீடா?" என்பது ஒரு புதுக்கவிதை. இதில் மிக ஆழமான கருத்துக்கள் பொதிந்திருப்பதைக் கண்டு வியக்கின்றேன். இன்று பல எழுத்தாளர்கள் பேனாவை வாடகைக்கு அமர்த்திக் கொண்டிருப்பதைத்தான் காணக் கூடியதாக இருக்கிறது. அத்தகைய எழுத்தாளர்கள் மத்தியில் குறிப்பாக, புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் - காசிலிங்கம் அவர்கள், ஜி.சி. மொன்டேனா கூறியதுபோல, வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறார். ஒரு தரமான பத்திரிகையாளராக இருக்கும் காசிலிங்கம் அவர்கள், தன்னுடைய பத்திரிகை தமிழ் நடையை, ஒரு விறுவிறுப்பான ஓட்டத்தை இந்நூலிலே காட்டியிருப்பதை, நூலை எடுத்தவர் படித்து முடிக்காமல் வைக்கின்ற நிலையை தடை செய்து நிற்கிறது.

ஆகவே, புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்கள், எங்கள் நாட்டினுடைய அரசியல் வரலாற்றைக் குறிப்பாக, சுதந்திரம் அடைந்த பின் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களை அறிந்திருக்க வேண்டும். உணர்வுபூர்வமாக அவற்றை அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அவற்றின் அடிப்படையில் தற்போதைய போராட்டத்தை நோக்க வேண்டும். நோக்குவதோடு மாத்திரமின்றி, அதன் உண்மையான பங்காளர்களாக ஆக வேண்டும் அதற்கு ஒரு களத்தை அமைக்க வேண்டும் என்று அவர் அடிக்கடி என்னிடத்தில் கூறுவதுண்டு. அவர் கூறியது எல்லாவற்றிற்கும் உருவகம் கொடுப்பதுபோல, இந்நூலை ஆக்கியிருக்கிறார். எனவே, அவருடைய கனவுகள் நனவாகும் விதத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்நூலைப் பெற்றுப் படித்து, பலன் பெற வேண்டும் என்று வேண்டி நிற்கின்றேன்.

**அன்புடன்**

**சி. காராளபிள்ளை**

**18-02-2002**

# என்னைப் பற்றி..




எனது சிறு பிராயத்தை நினைத்துப் பார்க்கிறேன். அந்தச் சிறு வயதிலேயே மனித சமுதாயத்தில் நடக்கக் கூடிய நல்லவை, கெட்டவை, நீதி, அநீதி போன்றவற்றை உணரத் தொடங்கிவிட்டேன் என்றே சொல்லலாம். இதற்கு ஒரு உதாரணத்தைக் கூறுகிறேன்:

எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு வாசக சாலை ஒரு பாடசாலை, இதன் நடுவே ஒரு ஆலயம். ஆலயத்தைக் கடந்துதான் பாடசாலைக்குப் போக வேண்டும். அவ்வழியாய் செல்லும் போதெல்லாம் முருகா எனக்குக் கல்வியைத் தா, என் வீட்டில் எவருமே சாகக் கூடாது. அப்படிச் சாகடிப்பதானால் என்னையே முதலில் சாகடிக்க வேண்டும். ஏனெனில், இவர்களுக்கு உலகம் பற்றி எதுவுமே தெரியாது. மேலுலகுக்கு நான் முதலில் சென்றால், அவர்களுக்கான சகல தேவைகளையும் தேடி வைக்க முடியும் என்று நான் பிரார்த்திப்பது உண்டு. இது கடவுள் மீது வைத்திருந்த நம்பிக்கையைவிட, இப்பூவுலகில் நடக்கும் பலதரப்பட்ட அட்டுழியங்கள், அந்தச் சிறு வயதிலேயே என் மனதில் பதியத் தொடங்கிவிட்டன என்றே சொல்லலாம். எனது இந்த வேண்டுதலுக்குக் காரணங்கள் உண்டு. பெற்றோருக்கு கடவுள் மீது நம்பிக்கை இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. (சொந்தமாகக் கோயில் அமைத்த உடையார் பரம்பரையில் உதித்தவர்கள் இவர்கள்.) ஆனால், ஆடம்பரமாகக் கடவுளைத் துதித்ததாக நான் கண்டதில்லை. சுவாமி கும்பிடுவதற்காக அடிக்கடி கோயிலுக்குப் போனதுமில்லை, திருவிழாக் காலங்களில் மட்டும் இவர்களைக் கோயிலில் காணலாம். பிரமுகர்கள் என்ற நாமத்தை தங்களுக்குத் தாங்களே இயற்றிக் கொண்டு, சமூக சேவையாளர் என்று தங்களைத் தாங்களே அடையாளம் காட்டிக் கொண்டு, பொதுச் சொத்துகளைச் சூறையாடுவதும், அநீதியான செயல்களில் ஈடுபடுவதுமான எத்தனையோ பேரை என் சிறு வயதிலேயே அடையாளம் கண்டுகொண்டுள்ளேன். அதாவது, அரசியல் என்பது ஏமாற்றுக்காரர்களின் ஏகபோக சொத்து என்பதை சிறுவயதிலேயே என் மனதில் பதிந்து விட்டேன். இதன் விளைவுதான் பத்தொன்பது வயது இருக்கும்போதே, இலங்கை வானொலிக்கும், பத்திரிகைகளுக்கும் எழுதத் தொடங்கினேன். யாழ்ப்பாணம் 'ஈழநாடு' என் விசயதானங்களை அடிக்கடி பிரசுரித்து வந்தது. (என் தகப்பனார் இறைவனடி சேர்ந்தபோது, வெளியிடப்பட்ட அனுதாப அஞ்சலிகளில் நீர்வேலியைச் சேர்ந்த ந. பஞ்சாட்சரம் அவர்கள், என் தகப்பனார் பற்றி எழுதும்போது, “கணபதிப்பிள்ளை வாத்தியாரை ஒரு ஞானியாகக் கண்டேன் அனலைதீவுக் கிராமத்தில் சோலி சுரட்டு இல்லாத பெரிய மகான்” என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவர் அமைதியாக இருப்பதைக் கண்டு உலகம்




தெரியாதவர் இவர் என்று, என் எட்டு, பத்து வயதில் கணித்தது எவ்வளவு தவறு?எனது கிராமம், (அனலைதீவு) பற்றிச் சொல்வதானால், பஸ், கார் போன்ற போக்குவரத்து எதுவுமே இல்லாத கிராமம். யாழ்ப்பாணத்தின் தலைப் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்று. ஊர்காவற்றுறைதான் எமது பிரதான நகரம். தினமும் காலை மாலை வேளைகளில் மட்டும் படகுச் சேவை. அங்கு சென்று அன்றாடத் தேவைகளை கவனிப்போம்.

போக்குவரத்துக்கு குறைந்த கிராமம் என்றாலும், அனலைதீவுக்குத் தனிப் பெருமை ஒன்று உண்டு. பல கல்விமான்களைத் தன்னகத்தே கொண்ட ஊர். கிறிஸ்தவ தேவாலயம், மசூதி போன்றவை இல்லாத தனிச் சைவ மக்களை மட்டும் கொண்ட கிராமம். இலங்கையைப் பொறுத்தமட்டில், இந்தப் பெருமை அனலைதீவுக்கு மட்டுமே உண்டு. இலங்கையின் மிகப் பெரும் தேரை (அனலைதீவு அய்யனார் கோயில்) தன்னகத்தே கொண்டள்ள கிராமம். அக்காலத்திலிருந்து, குறிப்பாக தீவுப் பகுதியில் ஊர்காவல்துறை செயின்ட் அந்தோனியார் கல்லூரிக்கு அடுத்ததாக, ஆங்கிலப் பாடசாலை (சதாசிவ ஆங்கில பாடசாலை) கொண்டிருந்த ஊர். பசுமையான நெல் மற்றும் புகையிலைத் தோட்டங்களுடன் நல்ல நீர் வளம் பெற்ற ஒரே ஒரு தீவு, அனலைதீவு.

பத்திரிகை என்பது குறைகளை மட்டும் அம்பலப்படுத்தும் சாதனமில்லை. சமுதாயத்திற்கு நன்மை தரும் நல்லனவற்றையும் பத்திரிகை வாயிலாகச் செய்ய முடியும் என்பதே என் சிறுவயது கருத்தாக இருந்ததால், பத்திரிகைத் துறையை தேர்ந்தெடுத்தேன் என்றே சொல்லலாம். என் நேர்மையையும் அறிவையும் பாராட்டி என்னைத் துரை என்றும், நீதிபதியென்றும், நியாயவாதியென்றும் வாஞ்சையுடன் அழைக்கும் என் பெற்றோர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், நான் ஒரு சட்ட வல்லுநராகத் திகழ வேண்டுமென்று விரும்பினர். அவர்களின் ஆசையை நிறைவேற்ற முடியாமல், என் சிறு வயதுக் காதலும், கல்யாணமும் குறுக்கே நிற்கவே, 'ஈழநாடு' பத்திரிகையில் ஓர் உதவி ஆசிரியர் பதவிக்கு வெற்றிடம் இருப்பதாகத் தெரிந்து, 1967இல் அங்கு சேர்ந்தேன். அப்போது 'ஈழநாடு' வார மலர் ஆசிரியராக இருந்த எனது உறவினரும், புங்குடுதீவைச் சேர்ந்தவருமான சசிபாரதி என்கின்ற எஸ். சபாரத்தினம் அவர்கள் என்னைப் பதவியில் சேரவைக்கத் தந்த சிபாரிசும் ஊக்கமும் என்னால் மறக்க முடியாது. 'ஈழநாடு' வில் நான் சேர்ந்தபோது, பிரதம ஆசிரியராக இருந்தவர், இந்தியரான கே.பி. ஹரன் ஐயா அவர்கள். 'ஈழநாடு' ஆசிரியர் பீடத்தில் இருந்த, வயதில் குறைந்த பையன் நான்தான். துணை ஆசிரியராக இருந்தவர், 'கோபு' என்று அன்புடன் அழைக்கப்படும் எஸ். எம். கோபாலரத்தினம் அவர்கள். 'ஈழநாடு' என்றால் 'கோபு', 'கோபு' என்றால் 'ஈழநாடு' என்ற பெருமைக்குரியவர். இன்று ஐரோப்பிய மற்றும் கனடா நாடுகளில்




பிரபல்யமாகப் பேசப்படும் மூத்த பத்திரிகையாளர் என்ற சிறப்பினையுடைய என்னைப் போன்ற பலருக்கு ஆசானாக இருந்தவர் கோபு என்றால் மிகையாகாது. செய்திகளை எப்படி எழுதுவது, செய்திகளின் முக்கியத்துவம், அதற்குரிய தலைப்பு போன்ற பல விடயங்களை இவரிடம்தான் கற்றுக்கொண்டேன். கடமை நேரங்களில் அவனுடைய வீட்டுக்கு விறகு வாங்கி, சைக்கிளில் போய்க் கொடுக்கும் நிகழ்வுகளையும் என்னால் மறக்க முடியாது.

கோபு அண்ணனின் மனைவியின் பெயர் குயின்சி. மிக அழகானவர். இவருக்கு ஐந்து பிள்ளைகள். வாசுகி, தமயந்தி, கபிலன், பார்த்திபன், யாதவன். தமயந்தியும், பார்த்திபனும் திருமணமாகி குழந்தைகளுடன் ஜெர்மனியில் இருக்கிறார்கள். 'ஈழநாடு' பத்திரிகையில் பணிபுரிந்த அத்தனை பேருமே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல்தான் பழகுவோம். திருமதி. கோபாலரத்தினம் குயின்சி அவர்கள் தென்னிந்திய திருச்செந்தூரில் இறந்துவிட்ட செய்தியை ஐரோப்பிய வானொலி பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். 1997ல் ஒருமுறை இந்தியா சென்றிருந்தபோது திருச்செந்தூரிலிருந்து கோபு அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூற விரும்பியவேளை, அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வந்திருந்த இலங்கை டாக்டர் ஒருவர் சில முக்கியஸ்தர்களுடன் கைது செய்யப்பட்டதாக ஒரு அமளி, துமளி நடந்து கொண்டிருந்தது. இதனால் கோபு அவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டேன். இது எனக்குப் பெரும் மனவருத்தம். பின்னர் கோபுக்கு இது பற்றிக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினேன். இந்தியப் படை ஒரு முறை இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. அப்போது குயின்சி அவர்கள் பட்ட துன்பங்கள், கோபுவை வெளியே எடுப்பதில் எடுத்துக்கொண்ட கரிசனங்கள், சிறைச்சாலையும் வீடும் என்று அவர் கூறினார். அலைந்து திரிந்த நிகழ்வுகள் அனைத்தையும், கோபு எழுதிய 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலில் படித்தபோது கண் கலங்கினேன். ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு நிருபர் காமினி நவரத்தினா, இந்திய ஆங்கிலப் பத்திரிகையொன்றில் (தி ஹிந்து), 'யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர் ஒருவர் தேவையற்றவர். சிறைபிடிக்கப் பட்டிருக்கிறார்' என்று எழுதிய செய்தியைப் பார்வையிட்ட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, யாழ்ப்பாணத்திலிருந்து ராணுவக் கமாண்டோவைத் தொடர்பு கொண்டு இவரை விடுவிக்க உதவியதாக, காமினியின் நட்பை வியந்து பாராட்டியிருந்தார் கோபு. லண்டனிலிருந்து வெளியான 'தமிழன' வாரப் பத்திரிகையின் ஆசிரியராக நான் பொறுப்பேற்றதும், நான் எழுதிய முதல் ஆசிரியர் தலையங்கம் கோபுவின் கைது பற்றியதுதான். அச்சந்தர்ப்பத்தில் கொழும்பில் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார். பத்திரிகையாளர்களை இலங்கை அரசாங்கம் எப்படியெப்படியெல்லாம் துன்புறுத்துகிறது என்பதை சுட்டிக்காட்டி, ஜனநாயக நாடு என்று பேச்சளவில்

மட்டுமே நின்றுவிடாமல், ஜனநாயக நாட்டின் முதுகெலும்பான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணும் பண்புகளை ஓரளவாவது சிறீலங்கா அரசு கடைப்பிடிக்க வேண்டும் என அதில் வலியுறுத்தியிருந்தேன்.

காமினியின் நட்பு பற்றி கோபு புகழ்ந்து எழுதியதை நினைவுகூரும் இந்த தருணத்தில், ஈழநாடு பத்திரிகையில் என்னுடன் கடமையாற்றிய எனது 'நெருங்கிய' நண்பர் ஒருவரின் 'நட்பு' பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும்.




## எனது உயிர் நண்பர் பற்றி..

எனது உயிர் நண்பர் ஒருவரைப் பற்றிச் சொல்லப் போகிறேன் என்றதும், என்னைத் தெரிந்த எனது வாசகர்கள் - ஏன் உலகம் முழுவதும் வாழ்கின்ற ஈழத்துப் பத்திரிகைத் தொடர்புடைய அனைவருமே இவர் யார் என்று அறிந்து கொள்வர். நான் புலம்பெயர்வதற்கு முன்னரும் பின்னரும் சுமார் 35 வருட கால நண்பர் அவர். நாங்கள் ஒருவருக்கொருவர் சகல இன்ப துன்பங்களிலும் கலந்துகொள்ளும் அளவுக்கு எமது நட்பு நீடித்தது. எனது இருபத்தொன்பதாவது வயதில் - 1973ல் - நான் மூன்று பிள்ளைகளின் தந்தை. எனது நெஞ்சைப் பிளந்து இருதயத்தில் உடனடியாகத் திருத்தம் செய்யாவிட்டால் தொடர்ந்து உயிர்வாழ முடியாது என்று டாக்டர்கள் சொல்லக் கேட்டதும் துடித்துப் போனவர்களில் இவரும் ஒருவர். அப்போதிருந்தே பக்கத்திலிருந்து சகலவிதத்திலும் உதவிய நண்பர் இவர்தான். சுருங்கச்சொன்னால், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதி, எனக்கு ரத்ததானம் செய்யுமாறு அறிவிப்பு பலகையில் பகிரங்க வேண்டுகோள் ஆஸ்பத்திரி நிர்வாகம் செய்திருந்தபோது, தனக்குத் தெரிந்த கொழும்பு ஆஸ்பத்திரியில் மருந்தாளராக பணிபுரிந்துகொண்டிருந்த நமசிவாயம் என்ற தன் நண்பருடன் தொடர்புகொண்டு, அந்தப் பகிரங்க வேண்டுகோளை அகற்றச் செய்து ரத்தம் தர உதவியவர் இவர்தான். அது மட்டுமல்ல, நான் நல்லூரில் வாடகைக்கு இருந்துவந்த வீட்டை காணி சொந்தக்காரர் விற்க இருப்பதை அறிந்தபோது, நான் அதை உடனடியாக வாங்க முடியாதிருக்கவே, அதனை விலைக்கு வாங்கி, வாடகை எதுவுமின்றி என்னை அந்த வீட்டிலேயே தொடர்ந்து வசிக்கச் செய்தவர். (1972ல் 18 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட அந்தக் காணியின் மதிப்பு 5 வருடங்களில் - 1977 இனக்கலவரத்தின் போது - ஒரு லட்சம் ரூபாயாக உயர்ந்தது.) அவ்வருடமே இந்தக் காணிக்குப் பின்னால் இருந்த வீட்டை அதே காணியின் சொந்தக்காரர் விற்ற போது நான் அதை வாங்கினேன். ஆனால், எனது காரை காணிக்குள் கொண்டு செல்ல வழி போதாததால் தெருவிலேயே அதனை நிறுத்த வேண்டிய நிலை இருந்தது. காணிக்குள் செல்லும் பாதையை சிறிது விரிவுபடுத்தினால்தான்




கார் உள்ளே செல்ல முடியும். மாதக் கணக்கில் தெருவிலேயே காரை விட்டிருந்த நான், திடீரென ஒருநாள், நண்பரின் காணி எல்லையை சிறிது தள்ளி வைத்தால் காரை என் காணிக்குள் கொண்டுசெல்லலாம் என்று யோசித்தேன். நினைப்பதை உடனே செய்துமுடிக்கும் குணமுடையவன் நான். அது, பிறருக்கு உதவும் செயலாக இருந்தாலும் சரி, கோபப்பட்டு ஒருவரைத் தள்ளி வைப்பதாக இருந்தாலும் சரி முன்பின் ஆலோசிக்கப்பட்ட காரியமாக இராது. இந்த வகையில் ஒரு நாள் காலை எழுந்து, நண்பரின் காணி எல்லைகளை அகற்றி, கார் போகும் அளவுக்கு சுமார் கால் அடி தூரம் தள்ளி வைத்தேன். என் நண்பர், இது பற்றி என்னிடத்தில் எதுவுமே தவறாக நினைக்க மாட்டார், கோபிக்க மாட்டார், அவர் சொத்தை நான் திருட்டுத் தனமாக அபகரித்துவிட்டேன் என்று நினைக்க மாட்டார் என்பது எனக்கு நன்கு தெரியும். நட்பு என்றால் இந்த வகையில்தான் இருக்க வேண்டும் என்பதில் எம் இருவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. காணிச் சொந்தக்காரரின் முன் அனுமதியில்லாமல் காணி எல்லையை நான் தள்ளிப்போடுவதைக் கண்டு என் வீட்டுக்கு வலதுபக்கம் உள்ள அயல்வீட்டுக்காரன், நித்திரையில் இருந்து விழித்ததும், 30 கிலோமீட்டர் அப்பாலுள்ள என் நண்பருடைய கவனத்துக்கு காவிச் சென்றார்.

இந்த தகவல் கிடைத்தபோதிலும் என் நண்பர் வீட்டார் அங்கு வந்துவிடவில்லை. அடுத்த வாரம் நண்பரின் தாயார் வந்தார் எல்லையைத் தள்ளி வைத்துள்ளதைப் பார்த்த அவர், அதை ஒரு பெரிய விடயமாக எண்ணவில்லை. என்னிடம் எதுவும் கேட்கவில்லை. (காணி எல்லைத் தகராறில் அண்ணன் - தம்பிக்குள்ளேயே வெட்டு, குத்து வரும் காலத்தில், எனது அத்துமீறிய செயலைப் பெரிதுபடுத்தாத நண்பரையும், அவர் தாயாரின் பெருந்தன்மையையும் நான் இன்றைக்கும் நினைப்பதுண்டு. நண்பரின் தாயாரை நான் “அம்மா” என்றும், எனது தாயாரை நண்பர் “அம்மா” என்றும் அழைப்போம். இவ்விரு தாய்மாரும் லண்டனிலிருந்தபோதும், பிரான்சிலிருந்த போதும் இறைவனடி சேர்ந்தபோது இருவரும் பங்குகொள்ள முடியாமல் போனது இன்றுதான் எனக்கு மனவருத்தம்.) அதனை அடுத்தடுத்த பக்கங்களில் சொல்லியிருக்கிறேன். நான் 'ஈழநாடு' பத்திரிகையில் சேர்ந்தபோது மாதச் சம்பளம் 60 ரூபாய் மட்டுமே. ஆனால் அதே நேரத்தில் இந்தத் தொகைக்கு கிட்டத்தட்ட ஒரு பவுன் தங்கம் வாங்க முடியும் இப்போது 3000 ரூபாய் சம்பளம் பெற்று தங்கத்தை 5000 ரூபாய்க்கு வாங்குவது 60 ரூபாய் சம்பளம் பெற்று அதே ஒரு பவுன் தங்கத்தை வாங்குவதும் ஒன்றுதான். ஆனால் ஒரு வித்தியாசம் வாழ்க்கைச் செலவு தற்போது அதிகம். 60 ரூபாய் சம்பளத்துடனேயே ஒருவர் சிறப்பாக வாழ்க்கையை நடத்த முடியும். எனக்குப் பற்றாக்குறை ஏற்படும்போது- பணம் தேவைப்படும் போது என் தகப்பனாரிடம் பணம் வாங்குவேன். அதுவும் அவரின் சம்பளத் தினம் பார்த்துப் போவேன்.




5 அல்லது 10 ரூபாய் மட்டுமே அப்போது தேவைப்படும். ஒரு நாள் எனது பற்றாக்குறையை நிரப்புவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு 777ஆம் இலக்கப் பேருந்தில் போய்க்கொண்டிருந்தபோது என் ஆசனத்திற்கு முன்னால் ஒரு பணப் பை கிடக்கக் கண்டேன். அதற்குள் இருக்கும் ரூபாய் நோட்டுகள் வெளியே தெரிகின்றன. 1000 2000 ரூபாய் வரை உள்ளது போல் தெரிகிறது. அருகில் இருந்தவர், மது போதையில், பெரும் சப்தத்துடன் மூச்சுவிட்டபடி நல்ல தூக்கம். எனக்கு முன்னால் இருந்தவரைத் தட்டி இவரைப் பற்றி அவரிடம் கூறிவிட்டு அந்தப் பணப் பையை எடுத்து வைத்திருந்தேன், நான் இறங்குமிடம் வரும்போது பணத்துக்குரிய, எனக்குப் பக்கத்தில் தூக்கத்திலிருந்து வந்தவரிடம் (அவர் ஒரு வியாபாரி. ஊர்காவற்றுறைச் சந்தையில் வியாபாரம் செய்பவர்.) அந்தக் காசுப் பையைக் கொடுத்துவிட்டு, என் தகப்பனாரிடம் சென்று, 25 ரூபாய் வாங்கி வந்தேன். இதனை இங்கு சொல்வதற்குக் காரணம், சிறு வயதிலிருந்து நான் ஒரு வித்தியாசமானவனாகக் காணப்பட்டேன். பிறரது சொத்துக்களுக்கு நான் ஆசைப்பட்டதேயில்லை. இதனால்தான் போலும், எனக்கு என் பெற்றோர் துரை என்று பெயர் வைத்து, வாஞ்சையோடு அழைத்தது மட்டுமல்ல, வீட்டின் நீதிபதி என்று என் அம்மா அடிக்கடி சொல்லிக்கொள்வார்.

பேருந்தில் கிடக்கக் காணப்பட்ட பணப் பை போன்ற மற்றொரு சம்பவமும் 'ஈழநாடு' காரியாலயத்தில் எனக்கு ஏற்பட்டது. அப்போது காரியாலயம் நிருபராக இருந்தவர் எஸ். திருச்செல்வம். அவர் இடையிடையே என் மேசையைப் பயன்படுத்துவார். ஒரு நாள் காலை 6 மணிக்கு நான் வேலைக்குச் சென்றபொழுது என் மேசை லாச்சிக்குள் சுமார் 300 ரூபாய் இருந்தது. யாருடைய பணம் என்று தெரியாது. இப்பணம் திருச்செல்வத்தினுடையதுதான் என்பதை யூகித்தேன். அப்போது அவருக்கு தாதி ஒருவர் காதலியாக இறந்தார் (அவரைத்தான் பிறகு அவர் திருமணம் செய்து கொண்டார்.) மூன்று நாட்கள் வரை அப்பணத்தை வைத்திருந்து, 'உம்முடையதா?' என்று கேட்டு அவரிடம் கையளித்தேன். பணத்தை என் மேசை லாச்சிக்குள் வைத்த ஞாபகம்கூட அவருக்கு இல்லை. 'ஈழநாடு' வில் பிரதான காரியாலய நிருபராகச் சேர்ந்த இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் 'தினகரன' பத்திரிகையிலும் பணியாற்றிவிட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து 80களில் வெளிவந்த 'ஈழமுரசு' பத்திரிகையில் ஆசிரியராகப் பதவி பெற்று தன் ஒரே ஒரு மகன் அகிலனை 20 வயதில் அரசியல் படுகொலைக்குப் பலியாகக் கொடுத்துவிட்டு, தற்போது மனைவியுடன் கனடாவில் வசிக்கிறார். கனடாவிலிருந்து வெளிவரும் 'தமிழர் தகவல' என்ற இதழின் ஆசிரியராகவும் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பவராகவும் அவர் திகழ்வது 'ஈழநாடு' பத்திரிகைக்குப் பெருமையே.

# நீதிபதி என்னிடம் மன்னிப்புக் கேட்டார்!




'ஈழநாடு' வில் நான் உதவியாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். வட பகுதியில் கடமைக்கு வரக்கூடிய உயர் பதவி வகிக்கும் அரசாங்க அதிபர்கள், பொலிஸ் சுப்பிரண்டண்ட்கள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகள், காணி அபிவிருத்தி அதிகாரிகள், மீன்பிடித் துறை அதிகாரிகள், சுகாதார இலாகா அதிகாரிகள் என்று சகல தரப்பினருடனும் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஒரு முறை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலக் கல்லூரி ஒன்றில் (இந்துக் கல்லூரி என் உறவினரான மாணவர் ஒருவருக்கு என் செல்வாக்கைப் பெற்று அனுமதி பெறச் சென்றிருந்தபோது, அனலைதீவு மாணவர்கள் திறமையானவர்கள், அவர்களுக்கு எவருடைய சிபாரிசும் தேவையில்லை, மாணவன் நேரே வரலாம் என்று அதிபர் என். சபாரத்தினம் அவர்கள் (பின்னாளில் இவர் 'ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவருடன் நான் சேவையாற்றிய காலத்தில் ஏற்பட்ட பல ருசிகரமான சம்பவங்களைப் பிறிதொரு பக்கத்தில் பதிவு செய்கிறேன்) கூறியதை என் கிராமத்துக்குத் தரப்பட்ட கௌரவமாக நினைக்கிறேன். 1975ஆம் ஆண்டு ஒரு நாள் காலை 9.30. தொலைபேசி அழைப்பு வருகிறது. “ஈழநாடா?”'ஆமாம். சொல்லுங்கோ' 'ஆசிரியருடன் பேச வேண்டும்' - மறுபக்கத்திலிருந்து பேசியவரின் குரலில் கண்டிப்பு தெரிகிறது. “ஆசிரியர் தற்போது அலுவலகத்தில் இல்லை நீங்கள் யார் பேசுகிறீர்கள்?” - இது எனது குரல். “டி.ஜே. முல்லைதீவு (முல்லைதீவு மாவட்ட நீதிபதி). நாளைக்கு காலை 10 மணிக்கு முல்லைதீவு நீதிமன்றத்தில் ஆசிரியர் ஆஜராக வேண்டும். இது நீதிமன்ற உத்தரவு” என்று ஆத்திரம்மிக்க தொனியுடன் மளமளவென்று பேசி முடித்தார் அவர். “நீதிபதி ஒருவர் நிச்சயமாக இவ்வாறு பேசியிருக்க முடியாது. அப்படிப் பேசியிருந்தாலும் நீதிபதி, இப்படித் தொலைபேசியில் உத்தரவிடுவது நீதிபரிபாலனத்திற்கு எதுவிதத்திலும் அமைவாக இருக்க முடியாது” என்றவாறு அப்போது என் மனதில்பட்டது. “பதட்டப்படாமல் அமைதியாகப் பேசுங்கள். முதலில் நீங்கள் யாரென்று விளக்கம் தர முடியுமா?” என்றேன் அமைதியாக. முல்லைதீவு மாவட்ட நீதிபதி பாலசிங்கம் பேசுகிறேன்” என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார் அவர். “நிச்சயமாக நீங்கள் ஒரு நீதிபதியாக இருக்க முடியாது. நீதிபதி எப்போதும் நீதிபரிபாலன வரைவிலக்கணங்களுக்குக் கட்டுப்பட்டவர். பொறுப்புள்ள பதவியில் இருக்கும் ஒரு நீதிபதி பத்திரிகையுடன் இவ்வாறு நிச்சயமாகப் பேசமாட்டார். உண்மையில் நீங்கள் யார்? எங்கிருந்து பேசுகிறீர்கள்? ஆசிரியர் ஏன் நீதிமன்றம் வரவேண்டும்?” இப்படி நான் கேட்டதும் அவரது கோபம் மேலும் அதிகரித்தது.




“நான் மாவட்ட நீதிபதி என்று சொன்ன பின்னரும் என்னுடன் சட்டம் பேசிக் கொண்டிருக்கும் நீர் யார்? உம்முடைய பெயரென்ன?” என்று ஆத்திரமிகுதியில் சற்று உரத்த தொனியில் கேட்டார் அவர். காலையில் வேலைக்கு வந்ததும் நான் பதிலளித்த முதலாவது தொலைபேசி அழைப்பு இதுதான். ஏன் தான் இந்த அழைப்புக்குப் பதிலளித்தேன் என்றாகிவிட்டது. என்றாலும் பத்திரிகையாளனின் துணிச்சலான மனப்போக்கிலிருந்து என்னால் விடுபடமுடியவில்லை. ஒரு பத்திரிகை அலுவலகத்துடன் பேசும்போது சட்டத்தை நிலைநாட்டும் பணியில் உள்ள பொறுப்பான நீதிபதி தொலைபேசியில் இவ்விதமாக உத்தரவிடுவது நியாயமற்றதாக எனக்குப்பட்டது. வேண்டுமானால் கட்டளை அனுப்பட்டும் என்று ஆசிரிய பகுதியில் உடனிருந்த சக உதவி ஆசிரியர்களும் கருத்துத் தெரிவித்தனர்.

சில நிமிடங்கள்தான் சென்றிருக்கும். ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் அலுவலகத்தினுள் நுழைந்தனர். 'முல்லைதீவு நீதிபதியின் சமன்ஸ்' என்று கையிலிருந்த பேப்பர் ஒன்றைக் கையளித்தனர். 'இன்றைய' ஈழநாடு பத்திரிகையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது சம்பந்தமாக ஆசிரியர் 'நாளை காலை 10 மணிக்கு முல்லைதீவு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. முல்லைதீவு பதில் நீதிபதி திரு. பாலசிங்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் ஊடாக இந்தக் கட்டளையை அனுப்பியிருந்தார். துணை ஆசிரியர் திரு. கோபாலரத்தினம் தனது வழமையான உத்தியோகப்பூர்வ தோரணையில் பேச்சைத் தொடங்கினார். 'பிரச்சனையான செய்திகளைப் போட வேண்டாம் என்று பல தடவை சொல்லியும் எப்போது பார்த்தாலும் பிரச்சனையான செய்திகளைத்தான் போடுகிறீர். ஆசிரியரிடம் சொல்லி உம்மையே அவர் சார்பாக நீதிமன்றம் அனுப்புகிறேன்' என்று கோபத்துடன் கூறிவிட்டுக் கிளம்பிவிட்டார். மறுநிமிடம் பிரதம ஆசிரியரிடமிருந்து அழைப்பு வந்தது. “நீங்கள் பிரசுரித்த செய்தி எப்படி வந்தது என்று நீதிமன்றத்திலும் நீங்களே போய்ச் சொல்லுங்கள்“ என்று கூறிவிட்டார் அவர். கேள்விப்படும் வதந்திகளை செய்திகளாக 'ஈழநாடு' எப்போதுமே பிரசுரிக்காது. அதேவேளை பிரச்சனைக்குரிய செய்திகள் வரும்போது அவற்றை 'ஈழநாடு' தவிர்த்துக் கொள்வது வழமை. சட்டத்தரணி ஆர்.பி. சபாரத்தினம் முல்லைதீவு நீதிமன்றத்தில் தான் ஆஜராகிய வழக்கு ஒன்றில் நீதிபதியின் தீர்ப்புக்கு மாறாக, நீதிமன்ற ஊழியர்கள் நடந்து கொண்டதாக ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். அச்செய்தியைப் பிரசுரிக்க 'ஈழநாடு' விரும்பவில்லை. அதனை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டார்கள்.

'ஈழநாடு' வில் வெளியூர் பதிப்புகள் (கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை) முதல் நாள் மலை 6 மணிக்கே தயாராகி தபால் ரயிலில்




அனுப்பப்பட்டு விடும். ஆனால் யாழ்ப்பாணத்துக்கான உள்ளூர் பதிப்பு இரவிலேயே தயாரிக்கப்படும். இப்பதிப்பில் முதலாம் பக்கமும் கடைசிப் பக்கமும் முக்கிய செய்திகளைத் தாங்கி வரும். இப்பக்கங்களை இரவு வேலைக்கு வரும் உதவி ஆசிரியர் தயாரிப்பார். ஒரு நாள் இரவு வேலைக்குப் போயிருந்த போது சட்டத்தரணி ஆர்.பி. சபாரத்தினம் அனுப்பிய அச்செய்தி என் கண்ணில் பட்டுவிட்டது. உடனே சட்டத்தரணி சபாரத்தினத்தைத் தாலைபேசியில் தொடர்பு கொண்டேன். செய்தி குறித்த ஆதாரங்களை நீதிமன்றப் பதிவேட்டிலிருந்து எடுத்ததாகக் கூறினார். தன்னிடம் அதன் பிரதிகள் இல்லை என்றும், ஆனால் எடுக்க முடியும் என்றும் கூறினார். அச்செய்தி சம்பந்தப்பட்ட வழக்கில், வழக்காளியான மாவிட்டபுரம் டாலர் அலுமினியக் கம்பெனியின் உரிமையாளரான திரு. இரத்தினசபாபதியின் சார்பில் சட்டத்தரணி சபாரத்தினம் ஆஜராகியிருந்தார். தனது கட்சிக்காரரர் என்பதால் மறுநாளே முல்லைதீவு நீதிமன்றம் சென்று அதன் பிரதியை எடுத்து வந்து என்னிடம் முழு விவரங்களையும் காட்டினார். ஆதாரம் கிடைத்ததும் இச்செய்தியைப் பிரசுரிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். இரவு வேளை கடமையிலிருக்கும் உதவி ஆசிரியர் தாம் விரும்பிய செய்திக்கு அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுத்துப் பிரசுரிக்க கொடுப்பது வழக்கம். பிரசுரத்துக்குத் தயாராக இருக்கும் செய்திகளைப் பார்வையிட ஆசிரியரோ அல்லது துணையாசிரியரோ இரவு 11 - 12 மணியளவில் காரியாலயம் வருவார்கள். பிரச்சினைக்குரிய செய்திகளைப் பிரசுரிக்க ஆசிரியர் அனுமதிக்க மாட்டார். இதனால் அவர் வந்து போன பின்னர் இச்செய்தியை பிரசுரத்துக்கு அனுப்ப முடிவு செய்தேன். அன்றிரவு மறவன்புலோ பாலசிங்கம் அச்சுக்கோப்புப் பிரிவில்'

ஃபோர்மேனாக' கடமையாற்றிக் கொண்டிருந்தார். 'ஈழநாடு' வைப் பொறுத்தமட்டில் ஆசிரியப் பகுதியில் கடமையாற்றுபவர்களைப் போலவே அச்சுக்கோக்கும் பிரிவில் உள்ளவர்களும் அனுபவசாலிகள. எச்செய்தி முக்கியமானது, சர்ச்சைக்குரியது என்ற கணிப்புடையவர்கள். பாலசிங்கத்திடம் அச்செய்தியைக் கொடுத்து முன்பக்கத்தில் பிரசுரிக்குமாறு கொடுத்தேன். வாங்கிப் படித்துப் பார்த்தவர், "இது பிரச்சனையான செய்தியல்லவா? இதனை ஏன் இரவில் அவசரமாக பிரசுரிக்க வேண்டும். அதுவும் நீதிமன்றம் விடயம்.." என்றார். "நிச்சயமாக இது நாளைய பத்திரிகையில் வரவேண்டும். உடனே அச்சுக்கோப்புக்குக் கொடும்" என்றேன். 'முல்லைதீவு நீதிபதியின் உத்தரவு ஊழியர்களால் புறக்கணிப்பு' என்ற தலைப்பில் அச்செய்தி முன்பக்கச் செய்தியாக மறுநாள் வெளியானது. ஆசிரியர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரானேன்.

நீதிமன்றத்தில் எனக்கு ஏதும் விபரீதம் நடந்துவிடுமோ என்று என் வீட்டார்க்கு ஏற்பட்ட பயம் காரணமாக என் மனைவியும் அவரது




தமையன் தனபாலசிங்கமும் என் கூடவே முல்லைதீவு வந்திருந்தனர். மாஜிஸ்திரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், சுப்ரீம் கோர்ட் என்று பலவிதமான நீதிமன்ற விசாரணைகளை நான் பார்த்திருக்கிறேன். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சிறு குற்றங்களுக்கான விசாரணை நடைபெறும். மாவட்ட நீதிமன்றத்தில், சொத்துகள் சம்பந்தமானதும், கடும் குற்ற விசாரணைகளும் இடம்பெறும். சுப்ரீம் கோர்ட்டில் கொலைக் குற்றவாளிகள் விசாரிக்கப்படுவர். அக்காலத்தில் சுப்ரீம் கோர்ட் நிரந்தரமாக ஓரிடத்தில் இயங்குவதில்லை. வருடத்திற்கொரு முறை யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் சுப்ரீம் கோர்ட் கூடுவது வழமை. மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியின் அப்பீல் விசாரணை உட்பட சுப்ரீம் கோர்ட் விசாரிக்கும். இதனால் சம்பந்தப்பட்ட குற்றவாளியின் உறவினர்கள் மட்டுமல்ல, வழக்கைப் பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் சுப்ரீம் கோர்ட்டிற்கு வருவார்கள். அத்துடன் ஜூரர்கள். வழக்காளிகள் சார்பில் 3 - 4 சட்டத்தரணிகள் என்று சுப்ரீம் கோர்ட் அன்றைய தினம் ஆரவாரமாகக் காணப்படும். முல்லைதீவு மாவட்ட நீதிமன்றத்திக்கு நான் போய்ச் சேர்ந்ததும் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்துவிட்டது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. நீதிமன்ற ஊழியர்கள் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்ததையும் அவதானித்தேன். இலங்கை நீதிமன்ற வரலாற்றில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செய்தி வெளியிட்டது சம்பந்தமாக ஒரு பத்திரிகை ஆசிரியர் விசாரணைக்கு அழைக்கப் பட்டிருப்பது ஒரு புதினமாக இருந்தமை தான் அவர்களின் சுறுசுறுப்புக்குக் காரணம் என்று பின்னர் தெரிந்து கொண்டேன். சரியாக 10 மணிக்கு நீதிமன்றம் கூடியது. பணியைத் தொடங்கி, மதலியார்: 'ஆசிரியர் ஈழநாடு.. ஆசிரியர் ஈழநாடு..' என்று அழைத்தார். 'உமது பெயரென்ன?' என்று நீதிபதி வினவவே, எனது பெயரை நான் சொல்லி முடிப்பதற்குள் 'ஏற்றுங்கள் இவரைக் கூண்டுக்குள்!' என்று உரத்த குரலில் நீதிபதி உத்தரவிட்டார். நீதிபதியுடன் தொலைபேசியில் காரசாரமாகப் பேசியது நான்தான் என்று அறிந்தபின் நீதிபதி கடுமையாக நடந்து கொள்கிறார் என்று திணறியபடி அசையாது நின்றேன்.

நீதிமன்றத்தில் மேலும் ஒரு அமைதி. செய்வதறியாது பொலிஸார் திணறினர். 'இவரைக் கூண்டுக்கள் ஏற்றுங்கள்! என்று உத்தரவிடுவது பொலிஸ ாருக்குக் கேட்கவில்லையா?' என்று மீண்டும் உரத்த குரலில் நீதிபதி கூறினார். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்னை அணுகி சைகை மூலம் கூண்டைக் காட்டினார். இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி சபாரத்தினம் எழுந்து பத்திரிகை ஆசிரியர் விசாரிக்கப்படும் விதத்தைத் தாம் ஆட்சேபிப்பதாகவும் செய்தியைக் கொடுத்தவர் தாம் என்பதால் தன்னை விசாரிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.
'செய்தியில் தவறு ஏதுமில்லை. நீதிமன்றப் பதிவேடுகளில் காணப்படும் வாசகங்கள் வசனத்துக்கு வசனம், வரிக்கு வரி அப்படியே ஈழநாட்டில் பிரசுரமாகியுள்ளது'




என்று திரு. சபாரத்தினம் கூறிவிட்டு, நீதிமன்றப் பதிவேடுகளை ஆராய்ந்து நீதிபதிமுன் சமர்ப்பிப்பதற்கு அனுமதி கோரினார். நீதிபதியும் அதற்கு இசைய, பதிவேடுகள் அனைத்தும் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டன.

மாவிட்டபுரம் 'டாலர்' அலுமினியக் கம்பெனி உரிமையாளருக்குச் சொந்தமான ட்ராக்டர் ஒன்றை, ஒருவர் மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கு ஆரம்பம் முதல் செய்தி வெளியாகும் வரை நடைபெற்ற விசாரணைகளின் நீதிமன்றப் பதிவேடுகள் ஆராயப்பட்டன. ஒரு விசாரணையின்போது, நீதிபதி அளித்த தீர்ப்பில் நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ட்ராக்டர் சம்பந்தமான தஸ்தாவேஜுக்களை யார் சமர்ப்பிக்கிறார்களோ அவரிடம் ட்ராக்டரை ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டு வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்தார். பதிவேட்டிலிருந்த இவ்விவரம் நீதிபதிக்குக் காண்பிக்கப்பட்டது. மறுவிசாரணையொன்றின்போது எதிர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சபாரத்தினம் நீதிமன்றத்தில் கூறிய விவரங்கள் பதிவேட்டிலிருந்தன. அதாவது தன் கட்சிக்காரரிடம் சகல தஸ்தாவேஜுகளும் இருக்கும்போது எப்படி எதிரியிடம் ட்ராக்டர் கொடுக்கப்பட்டது என்பது ஆச்சரியமாகவுள்ளது. நீதிபதியின் தீர்ப்புக்கு மாறாக, ஊழியர்கள் நடந்துள்ளார்களா? என்பது பற்றி நீதிபதி ஆராய வேண்டும். என்று சபாரத்தினம் கேட்டுக் கொண்டதாக நீதிமன்றப் பதிவேட்டில் காணப்பட்டது. இந்தப் பதிவேடும் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் எழுந்து தன் கட்சிக்காரரிடம் அதற்கான தஸ்தாவேஜுகள் இருந்ததினால்தான் ட்ராக்டர் அவரிடம் கொடுக்கப்பட்டது. ஊழியர்கள் சரியாகவே நடந்து கொண்டுள்ளார்கள் என்று ஆவேசத்துடன் கூறினார். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதி, 'பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தி உண்மையானது என்பதை இப்போது உணர்கிறேன். பத்திரிகையிடமும், ஆசிரியரிடமும் நீதிமன்றம் மனிப்புக் கேட்கிறது' என்று கூறிவிட்டு, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களைக் கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதனைக் கேட்ட ஊழியர்கள் நீதிமன்றப் பதிவேடுகளைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓட ஆரம்பித்தனர். எதுவுமே செய்வதறியாது ஏனைய சட்டத்தரணிகளும், பார்வையாளர்களும், பொலிஸாரும் நின்றனர். பொலிஸாரை நீதிபதி அழைத்து நீதிமன்ற தஸ்தாவேஜுகளுடன் வெளிநடப்புச் செய்த ஊழியர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் ஆஜராக்குமாறு பணித்தார். இச்சந்தர்ப்பத்தில், நீதிமன்றத்தில் ஏற்பட்ட குழப்பநிலை குறித்து ஆராய்ந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை ஒத்திவைக்குமாறும், நீதிபதியை அவரது அறைக்குச் சென்று சில




நிமிடங்கள் ஓய்வெடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர். நீதிபதி அதற்குச் சம்மதிக்க மறுத்ததுடன் சுமார் 15 நிமிடங்கள் தனது ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார். ஊழியர்களைக் கைது செய்யச் சென்றிருந்த பொலிசார் 15 நிமிடங்களின்பின் ஊழியர்களை நீதிபதிமுன் ஆஜர் செய்வதற்குப் பதிலாக சில வழக்குக் கோர்வைகளுடன் அங்கு வந்து, நீதிபதிக்கு ஆசனத்திலிருந்தபடியே பைத்தியம் பிடித்துவிட்டதாக, ஊழியர்கள், தொலைபேசியில் நீதியமைச்சுக்கு தகவல் கொடுத்துக்கொண்டிருக்கும் விடயத்தைத் தெரியப்படுத்தினார்கள். இப்போது, வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைச் சில நிமிட நேரம் ஒத்திவைக்குமாறும், நீதிபதி தன் ஓய்வறைக்குச் சென்று ஓய்வெடுக்குமாறும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டனர். ஆனாலும் நீதிபதி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்றும், வழக்கு நடத்த சுருக்கெழுத்துத் தெரிந்த யாராவது நீதிமன்றத்திலிருந்தால் தமக்கு உதவுமாறும் கேட்டுக்கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி செல்வரத்தினம் எழுந்து இந்தவிடயத்தில் பத்திரிகையாசிரியர் நீதிமன்றத்துக்கு உதவ முடியும் என்று தான் நம்புவதாகக் கூறினார். நீதிபதியின் வேண்டுகோளை நான் ஏற்றுக்கொண்டதும், நீதிபதியின் ஆசனத்திற்கு அருகே அமர்த்தப்பட்டேன். சுருக்கெழுத்து எனக்குத் தெரியாது. ஆனால், வார்த்தைக்கு வார்த்தை தவறில்லாமல் வேகமாகக் குறிப்பெடுத்துக்கொள்வேன் என்பது என் நம்பிக்கை. என் போன்ற பத்திரிகையாளர்களுக்குத்தான் இது கைவந்த கலையாயிற்றே.

காணி வழக்கு ஒன்று அடுத்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. அதற்கு முன்னராக நீதிபதி சில வார்த்தைகள் கூறுவது நீதிமன்றப் பதிவேட்டிற்கு அவசியமானதென்று பின்வருமாறு சொன்னார்: "..இங்கு நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். 'ஈழநாடு' பத்திரிகையில் தவறான செய்தி வெளிவந்துள்ளதென்று புகாரைக்கூட ஊழியர்கள் தான் என்னிடம் தெரிவித்தனர். என் கண்களுக்குள் மண்ணைத் தூவ ஊழியர்கள் முயன்றிருக்கிறார்கள். 'ஈழநாடு' வில் வெளிவந்த செய்தி தவறில்லை என்பதை அறிந்ததும் நீதிமன்றம் பத்திரிகையிடம் மன்னிப்பு கேட்டுவிட்டது. அடுத்த நடவடிக்கையாக நீதிமன்றம் சம்பந்தப்பட்ட ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கும். ஊழியர்கள் வெளிநடப்புச் செய்ததால் பத்திரிகையாசிரியரை முதலியார் பணியில் அமர்த்தி நீதிமன்றக் கருமங்களைத் தொடருகிறேன்" என்று நீதிபதி கூறிய வார்த்தைகள் அனைத்தும் என்னால் குறிப்பெடுக்கப்பட்டன. காணி வழக்கு ஆரம்பமானது. வழக்காளியையும், எதிரியையும் முதலியார் தோரணையில் நானே அழைத்தேன். அவர்கள் இருவரும் நீதிபதிமுன் ஆஜரானார்கள். மறு நிமிடம் நீதிமன்றம் போர்க்களமாகியது.




சுமார் 100 இராணுவத்தினரும், 25 பொலிசாரும் நீதிமன்றத்திற்குள் நுழைந்தனர். சில இராணுவ வீரர்கள் நீதிபதியின் ஆசனத்தைச் சுற்றி நிற்க, ஏனையோர் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். பெரும் கலவரத்தை அடக்க வந்தவர்கள் பாணியில் அவர்கள் நடமாட்டமிருந்தது. அக்காலத்தில் இராணுவம் வருவதென்பது சாதாரண விடயமல்ல. பொலிசாரால் அடக்க முடியாத கலவரங்களின்போது மட்டுமே இராணுவம் அழைக்கப்படுவது வழமை. முல்லைதீவிலிருந்து சுமார் 20 மைல் தூரத்தில் மாங்குளம் இராணுவ முகாம் இருந்ததால் சிறிது நேரத்திலேயே இராணுவம் அங்கு வர முடிந்தது. இக்களேபரத்தை அடுத்து நீதிமன்றத்தை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார் நீதிபதி. அப்போது நேரம் காலை 10.45 இருக்கும். மீண்டும் 11.00 மணிக்கு நீதிமன்றம் கூடும் என்று அறிவித்துவிட்டு தமது ஓய்வறைக்குச் சென்ற நீதிபதியுடன் நானும் சென்றேன். தொடர்ந்து சட்டத்தரணிகளும் அங்கு வந்து நீதிபதிக்கு ஆறுதல் கூறினர். இராணுவத்தினரும், பொலிசாரும்கூட உள்ளே வந்தனர். பெருமளவில் இராணுவமும் பொலிசாரும் நீதிமன்றத்தை எதற்காக முற்றுகையிட்டனர் என்பது பற்றி நீதிபதி எதுவுமே விசாரிக்கவில்லை. பதிலாக, நடந்து முடிந்த விவகாரங்களுக்கு இராணுவம் மூலமும் மேலதிகப் பொலிசார் மூலமும் முடிவு காணலாம் என்று நீதிபதி கருதினார்போலும். நீதிமன்றப் பதிவேடுகளுடன் ஓட்டம்பிடித்த ஊழியர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிபதி அவர்களிடம் பணித்தார். இச்செய்தி மறுநாள் சகல பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துச் செய்தியாக வெளிவந்தது.

**1975ம் ஆண்டு இலங்கை வட புலத்தில் நிகழ்ந்த மிகவும் பரபரப்பான விடயம். பத்திரிகை உதவி ஆசிரியர் ஒருவர் நீதிமன்றத்தில் முதலியார் பணிக்கு அமர்த்தப்பட்டார். நீதிமன்றத்தில் நடந்த விவகாரம் பத்திரிகைச் செய்தியாக வெளிவந்தது.**

**தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரும் 'வீரகேசரி' பத்திரிகை பத்திரிகையாளர் ஒருவர் பற்றிய செய்திக்கு முன்னுரிமை கொடுத்து முன்பக்கத்திலேயே செய்தி வெளியிட்டது. 01.11.1975.அன்று அந்தச் செய்தி வெளியாகிய 'வீரகேசரி' பத்திரிகையின் முன்பக்கத்தை உங்கள் பார்வைக்காக இங்கு பிரசுரித்துள்ளோம்.**


VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
மற்றொரு கிளர்ச்சிக்கு தயாராம்!
பிரதமர் எச்சரிக்கிறார்

## நான் வெளியிட்ட செய்தி ஏற்படுத்திய குழப்பம்




1975 இறுதிப் பகுதி - யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியப் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது உருத்திரபுரம் நிருபர் திரு. வே. அருளானந்தத்திடம் இருந்து நள்ளிரவில் கிடைக்கப் பெற்ற செய்தியொன்று எனது 'ஈழநாடு' பத்திரிகை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்குமளவுக்குப் பெரும் பூகம்பம் ஒன்றை ஏற்படுத்தி விட்டதென்றே கூறலாம். தீவிரவாத இளைஞர் குழுக்களின் நெரிசல்களில் விரிவடைந்து கொண்டிருந்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளேயே 'நடவடிக்கைக் குழு' என்று ஒரு பிரிவை அமைத்து - தமிழர் பிரச்சனை குறித்துத் தீர்க்கமான முடிவெடுப்பதில் தமிழர் கூட்டணி வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் உருத்திரபுரம் நிருபரிடமிருந்து வந்த அந்தச் செய்தியில்.. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு. மு. திருச்செல்வமும், அப்போதைய தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரும் சந்தித்துப் பேசியிருப்பதாகவும், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த அச்சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தியைப் பிரசுரிப்பதா? தவிர்ப்பதா? என்பதில் சஞ்சலப்பட்டேன். தமிழர் பிரச்சினை குறித்து அவ்வப்போது ஆட்சிக்கு வரும் சிங்களத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும், ஒப்பந்தங்கள் நிறைவேறாமல் போகும்பொருட்டுச் சிங்கள இனவாதிகள் தூண்டப்பட்டுக் கிளர்ச்சிகள் தோன்றுவதும் தமிழர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்படுவதும் இலங்கை அரசியலில் உண்மை வரலாறுகள். 1948 ஆகஸ்டில் பிரஜாஉரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அதற்கு ஆதரவளித்து அமைச்சரான சம்பவம் தொடக்கம், தமிழர்களுக்கு உரிமை வழங்குவதில் யு.என். பி.யின் வேகம் போதாதெனக் கூறிக்கொண்டு அரசிலிருந்து விலகிய அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிறீலங்கா சதந்திரக் கட்சியை அமைத்துக் கொண்டு 1956 தேர்தலில், “24 மணி நேரத்துக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருவேன்.” என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவம். நியாயமான தமிழ் மொழிப் பிரயோகத்துக்குச் சட்டத்தில் இடம் கேட்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சமஷ்டிக் கட்சியினர் (தமிழரசுக் கட்சி) நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்கள், இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் வெடித்த இனக்கலவரத்தில் தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவம், சமஷ்டிக் கட்சியுடனான பண்டா - செல்வா ஒப்பந்தம், இதனை எதிர்த்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிக்குகளின் ஆதரவுடன் நடத்திய கண்டி பாதயாத்திரை, பௌத்த பிக்கு ஒருவரினால் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா கொலையுண்ட




சம்பவம், 1958 மே இனக்கலவரம்.. இப்படிப் பல சம்பவங்கள் என் மனத்திரையில் ஓடின.

இப்படியிருக்கும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றைய சூழ்நிலையில் எதற்காக சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச வேண்டும் என்பது போல எனக்குத் தோன்றியது. அத்துடன் பண்டா - செல்வா ஒப்பந்தம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமானால் நிச்சயமாக அவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிகள் அமுல்படுத்தப்படுமானால் - வடக்கு கிழக்கில் நிர்வாக மொழி தமிழாகவும், அமைக்கப்படக் கூடிய பிரதேச சபை கல்வி மற்றும் குடியேற்றத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யும் தகைமையும் பெற்றிருக்கும் என்பதால் அவ்வித உடன்பாட்டை வரவேற்கலாம் என்றும் எனக்குப்பட்டது. செய்தியைத் தந்த உருத்திரபுரம் நிருபரும் அரசியலில் ஈடுபாடுள்ளவர். சிறுவயதிலிருந்தே தமிழரசுக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர். பின்னாளில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர். இதனால் அவரால் தரப்பட்ட அந்தச் செய்தியை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதினேன். இச்செய்தி ஏனைய பத்திரிகைகளில் வெளிவருமுன்னர் 'ஈழநாடு' வில் பிரசுரிக்க வேண்டும் என்று விரும்பினேன். முக்கிய அரசியல் நிகழ்வுகள் பற்றிய செய்திகளை பிரதம ஆசிரியருடன் கலந்தாலோசிக்காமல் பிரசுரிக்கக் கூடாதென்ற கட்டுப்பாடு எமது ஆசிரிய பீடத்தில் இருந்தபோதிலும் அன்றைய இரவு உடனடியாக பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ள முடியாமல் போகவே, மறுநாள் பத்திரிகையில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து அந்தச் செய்தியைப் பிரசுரித்தேன். 'தமிழ் அரசியலில் புதிய திருப்பம்! சூரியர் - திரு சந்திப்பு! பண்டா செல்வா ஒப்பந்தம் மறு ஆய்வு!' என்ற தலைப்புடன் வெளிவந்த இச்செய்தி சம்பந்தமாக மறுநாள் காலை தமிழர் கூட்டணி வட்டாரங்களிலிருந்து பல ஆட்சேபங்கள் வந்தன. அன்றைய தினம் 'ஈழநாடு' வில் ஆசிரிய பீடத்திற்கு வந்த தொலைபேசி அழைப்புகள் அனைத்துமே இச்செய்தி தொடர்பானவை என்றே கூறலாம். 'ஈழநாடு' நிர்வாகத்தினருக்கு இது தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது. கொழும்பிலிருக்கும் ஈழநாட்டின் நிர்வாகி கே.ஸி. தங்கராஜா, திரு. திருச்செல்வத்துடன் தொடர்புகொண்டு இச்செய்தி பற்றிக் கேட்டபோது, திருச்செல்வம் அப்படி எதுவும் நடக்கவில்லை என்று கூறிவிட்டார். இதனை அறிந்ததும் 'ஈழநாடு' வுக்கு இச்செய்தியைத் தந்த உருத்திரபுரம் நிருபருடன் தொடர்பு கொண்டேன். அவரோ, “இச்செய்தியில் எதுவித தவறும் இல்லை. தபால் அமைச்சர் குமாரசூரியரும் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வமும் சந்தித்துப் பேசியது உண்மை. இத்தகவலை தபால் அமைச்சர் குமாரசூரியரே என்னிடம் சொன்னார்” என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பிலிருந்த எமது நிர்வாகத்திடமிருந்து பொதுமுகாமையாளருக்கு உத்தரவு வந்தது. என்னிடம்




விளக்கம் கேட்டு முகாமையாளர் து. சீனிவாசகம் கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. 'முக்கியமான, அரசியல் வட்டாரங்களில் சர்ச்சைக்குரிய செய்திகளைப் பிரசுரிக்கும் முன் பிரதம ஆசிரியருடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியாததொன்றல்ல. அப்படியிருந்தும் சர்ச்சைக்குரிய இச்செய்தியைப் பிரசுரித்துள்ளீர்கள். இதனால் அரசியல் வட்டாரங்களில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இச்செய்தியை எங்கிருந்து பெற்றீர்கள் என்பதை 24 மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், ஒரு சாராரைப் புண்படுத்தும் வகையில், திட்டமிட்டு இச்செய்தியைப் பிரசுரித்ததாகக் கருதி தங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' இந்த வாசகங்களைப் படித்ததும் நான் செய்துகொண்ட காரியம் நியாயமானதுதானா என்று என்னையே நான் கேட்டேன். பத்திரிகா தர்மத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு பத்திரிகையாளனது கையிலுமுள்ளது. இதிலிருந்து எள்ளளவேனும் நாம் நழுவிக்கொள்ளாத வகையில் செய்திகள் அமைய வேண்டும். ஒரு செய்தியைப் பிரசுரிக்குமுன் பல தடவை யோசிக்க வேண்டும். அதன் பின்னரே அச்சேற்ற வேண்டும். மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லாத வகையில் பத்திரிகை சேவை செய்ய வேண்டும் என்று அடிக்கடி எமது பிரதம ஆசிரியர் திரு. கே.பி. ஹரன் ஐயா அவர்கள் ஆசிரியர் குழுவினருக்கு அறிவுரை வழங்குவது வழமை.

முக்கியமான செய்திகள் என்றாலும்கூட அதனைப் பிரசுரிக்கத் தவறுவதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தைவிட, தவறான செய்திகளைப் பிரசுரிப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானவை என்பதால் சர்ச்சைக்குரிய செய்திகளைத் தவிர்த்துக் கொள்வது அவசியம் என்று அப்போதைய எமது செய்தி ஆசிரியர் திரு. எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள் வழமையாகச் சொல்லிக் கொள்ளும் மூலமந்திரம். (பின்னாளில் இவர் 'ஈழநாட்டின்' ஆசிரியரானார்.)

கொழும்பிலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அமைவதில்லை. அரசியலைப் பொறுத்தவரையில் அவர்களை நல்வழியில் இட்டுச் செல்ல யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பத்திரிகை வெளிவர வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையே யாழ்ப்பாணத்து 'ஈழநாடு' என்பதே அதன் ஸ்தாபகர் அமரர் கே.சி. தங்கராசா அவர்களின் கருத்து. இப்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக நடந்துகொண்ட 'ஈழநாடு' பத்திரிகையில், அரசியல் ஞானமும் நீண்ட கால அரசியல் முதிர்ச்சியும் பெற்றிருந்த திரு. திருச்செல்வத்தை அவமதிக்கும் வகையில் இச்செய்தி அமைந்துவிட்டதென்பதை உணர்ந்தபோது மிகவும் வேதனைப்பட்டேன். பத்திரிகையில் சர்ச்சைக்குரிய செய்திகள் வெளிவராமல்




பார்த்துக் கொள்ளும்பொருட்டு தினமும் நள்ளிரவு 12 மணியளவில் செய்தி ஆசிரியர் திரு. கோபாலரத்தினம் பத்திரிகை அலுவலகத்துக்கு வந்துபோவது வழமை. ஆனால் உருத்திரபுரம் நிருபரிடமிருந்து அந்தச்செய்தி கிடைக்கப்பெற்ற அன்றைய இரவு அவர் அலுவலகத்துக்கு வரவில்லை. குறிப்பிட்ட செய்தியில் நான் கண்ட முக்கியத்துவம் பற்றி செய்தி ஆசிரியரைச் சந்தித்து விளக்கம் கொடுத்தால் அவரூடாக 'ஈழநாடு' நிர்வாகத்தை என் மீதான நடவடிக்கையிலிருந்து சமாதானப்படுத்தி விடலாம் என்ற யோசனையில் அவரைத் தனிமையில் சந்தித்தேன். ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் வால் பிடித்துக் குடும்ப அரசியல் நடத்திக் கொண்டிருந்த ஒரு சில தமிழ் பிரமுகர்களுக்கு தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் என்று முத்திரை குத்தி அவர்களைக் களை எடுக்க வேண்டும் என்று தமிழர் கூட்டணியில் அங்கம் வகித்த இளைஞர் குழுக்கள் கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் வேளையில், நடவடிக்கைக் குழுவின் அங்கீகாரம் இன்றி கொழும்பில் வாசம் செய்த திருச்செல்வம் குமாரசூரியரைச் சந்தித்துப் பேசியிருப்பது அன்றைய அரசியல் சூழ்நிலையில் தேவையற்ற விடயமாக எனக்குப் பட்டதென்றும் அது மட்டுமல்லாமல் அவர்கள் சந்திப்பில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளபடியால், அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சரத்துக்கள் அமுலுக்கு வருமானால் தமிழ் மக்களுக்கு ஓரளவு விமோசனம் (வடக்குக் கிழக்கில் நிர்வாக மொழி தமிழ் குடியேற்றம், கல்வி போன்ற அதிகாரங்களைக் கொண்ட பிரதேச சபை அமைத்தல்) கிடைத்து விட வாய்ப்பு ஏற்படும் என்றும் கருதியதால் அச்செய்தியை இரவோடிரவாகப் பிரசுரித்துவிட்டேன் என்றும் செய்தி ஆசிரியரிடம் விளக்கமளித்தேன்.

"திருச்செல்வம் - குமாரசூரியர் சந்திப்பு உண்மையானால் அச்செய்தி உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்ததுதான். இருவரும் சந்தித்தார்கள் என்பதற்கான ஆதாரங்களை உடனடியாகச் சமர்ப்பித்தால்தான், அலுவலக நடவடிக்கையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்" என்று செய்தி ஆசிரியர் கூறிவிட்டார். ஒரு பத்திரிகையில் அதுவும் ஆசிரியபீடத்தில் பணிபுரியும் பாக்கியம் சகலருக்கும் கிடைத்துவிடாது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்றவற்றில் நியமனம் கிடைப்பதென்பது அரசாங்க, அரசியல் செல்வாக்குகளைப் பொறுத்திருக்கும். இந்நிலையில் இச்சேவையிலிருந்து நான் நீக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்னைப் பொறுத்தவரையில் மிகுந்த வேதனையைத் தந்தது. செய்தியைத் தந்த நிருபர் அருளானந்தம் அப்போது உருத்திரபுரம் உபதபால் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர். தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொண்டு எனக்கு ஏற்பட்டிருந்த நிர்வாக நெருக்கடிகள் பற்றிச் சொன்னேன். செய்தியில் தவறில்லை. வேண்டுமானால் தபால் அமைச்சரையே




நேரில் சந்தித்து அவரிடம் அறிக்கை ஒன்றையே பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார். அன்றிரவு தபால் ரயிலில் இருவரும் கொழும்பு புறப்படுவதாக ஏற்பாடாயிற்று. யாழ்ப்பாணத்திலிருந்து என்னை ரயில் ஏறுமாறும், தான் கிளிநொச்சியில் ஏறிக்கொள்வதாகவும் சொன்னார். நான் ஏறிய ரயிலில் அவர் வரவில்லை. ரயில் கொழும்பு சேரும்வரை சகல பெட்டிகளிலும் அவரைத் தேடிவிட்டேன். மறுநாள் காலை தனியாக தபால் அமைச்சு அலுவலகம் சென்றேன். நேரம் காலை 9.30 அமைச்சரைச் சந்திக்க வந்திருந்த சுமார் 100 பேர் அவருக்காகக் காத்து நின்றனர். அங்கு தரப்பட்ட படிவத்தில் பெயர், தொழில், அமைச்சரைச் சந்திக்க வந்துள்ள காரணம் என்பன போன்ற விவரங்களை எழுதிக்கொடுத்துவிட்டு கால்கடுக்க நின்று கொண்டிருந்தேன் (100 பேர் வந்திருந்ததினால் போதிய ஆசனங்கள் அங்கு இருக்கவில்லை.) சுமார் 10 மணியளவில் தபால் அமைச்சர் காரியாலயத்தினுள் நுழைவதைக் கண்டேன். இரண்டு நிமிடம் கூட ஆகியிருக்காது. நான் எழுதிக் கொடுத்த அந்தப் படிவத்துடன் பார்வையாளர் அறைக்குள் வந்த அமைச்சர் எனது பெயரை அழைத்ததும் நான் அவரை நோக்கி நடந்தேன். நான் அவரை அணுக வேண்டும் என்பதைக்கூட அவர் பொருட்படுத்தாமல் என்னிடம் நேரே வந்து முதுகில் கைபோட்டபடி, “தோழர் எதற்கும் பயப்பட வேண்டாம். ஈழ நாட்டில் உமக்குப் பிரச்சினை ஏதும் நடந்தால் மறுநாளே “தினகரனில்” நியமிப்பேன்“ என்று கூறியபடி என்னை தனது அறைக்குள் கூட்டிச் சென்றார்.

முன்பின் அறிமுகமில்லாத அமைச்சர் என்னுடன் திடீரென இப்படிப் பேசியதிலிருந்து உருத்திரபுரம் நிருபர் எனக்கேற்பட்டுள்ள நெருக்கடியான நிலைகுறித்து ஏற்கனவே விளக்கமளித்துவிட்டதை உணர்ந்தேன். ரயிலைத் தவறவிட்டுவிட்டதால் என்னுடன் பிரயாணஞ் செய்ய முடியவில்லை என்று கூறி அருளானந்தம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சகல விவரங்களையும் சொன்னார் என்று ஆரம்பித்த அமைச்சர், “செய்தியில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் திருச்செல்வம் என்னுடன் உத்தியோகப்பூர்வமாகப் பேசவில்லை. யாழ்ப்பாணம் செல்வதற்காக நான் இரத்மலானை விமான நிலையம் சென்றிருந்தபோது திருச்செல்வமும் அங்கிருந்தார். சுமார் ஒன்றரை மணி நேரம் விமானம் தாமதமானதால் இருவரும் பேசிக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தமிழர் பிரச்னையை எப்படித் தீர்த்துக்கொள்ளலாம் என்றும், பண்டா செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் போதிய விமோசனத்துடன் தமிழர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும் என்றும் நாம் கருத்துப் பரிமாறிக் கொண்டோம். அவரைச் சந்திக்க நேர்ந்ததும், நீண்ட நேரம் பேசிக்கொள்ள முடிந்த சந்தர்ப்பமும் எனக்குப் பெரும் சந்தோஷத்தைத் தந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் என்னைப் போன்றவர்களைத் துரோகிகள் என்று




கூறிக்கொள்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை அந்தப் பெரியவரை சந்தித்துப் பேசக்கிடைத்ததை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறேன்" என்று அமைச்சர் சொல்லி முடித்தார். செய்தியைப் பிரசுரிக்க முன் சம்பந்தப்பட்டவர்களுடன் ஊர்ஜிதம் செய்யத் தவறியதால் ஏற்பட்ட விபரீதங்களை எண்ணி வருந்தினேன். உண்மையான செய்திகளைப் பிரசுரிக்கத் தவறினால் ஏற்படக்கூடிய நட்டத்தைவிட, தறவான செய்திகளைப் பிரசுரிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள், மிகப் பாரதூரமானது என்ற பத்திரிகைச் சித்தாந்தத்தை இரைமீட்டேன். உடனடியாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் 'ஈழநாடு'டன் தொடர்பு கொண்டு அமைச்சர் கூறிய விவரங்களைச் சொன்னேன். எழுத்து மூலமான எனது விளக்கத்துடன் உடனடியாக காரியாலயம் வருமாறு 'ஈழநாடு' நிர்வாகம் பணித்தது. மறுநாள் யாழ்ப்பாணம் சென்றடைந்தேன். அதிகாலை யாழ் ரயில் நிலையத்தில் 'ஈழநாடு' பத்திரிகையை வாங்கிப் பார்த்ததும் அதிர்ந்து போனேன். முன்னாள் அமைச்சர் திருச்செல்வம் திடீர் மரணம்! என்ற செய்தி வெளியாகியிருந்தது. நான் ஒரு பத்திரிகையாளன் என்ற நிலையிலிருந்து மாறி எனது நெருங்கிய உறவினர் ஒருவரை இழந்துவிட்டது போன்ற உணர்வில் கண்ணீர்விட்டு அழுதேன். திருச்செல்வம் அவர்கள் மாரடைப்பினால் மரணமானார் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எனது செய்திதான் அவரது மறைவுக்குக் காரணமாக அமைந்துவிட்டதோ என்ற பயம் இன்னும்தான் என் மனதிலிருந்து மறையவில்லை.

## மக்களைக் கவர தமிழ்த் தலைவர்களின் நாடகம்!

தமிழ் அரசியல் தலைவர்கள் தத்தமது தொகுதி மக்களைக் கவருவதற்கு எவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதற்கு உதாரணமாக அக்காலத்தில் பத்திரிகைகளில் வெளியான செய்தி ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுக்கு வடபகுதி மண்ணில் வைத்து எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் முதன்முதலில் மாலை போட்டு வரவேற்பது என்பது குறித்து தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குமிடையில் நடந்த சுவாரஸ்யமான சம்பவம் அது. 1968ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாண நகர் மத்தியில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த நவீன சந்தைக்கான அடிக்கல்லை நாட்டுவதற்காக பிரதமர் டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாணம் வரவிருந்த வேளை. அப்போது யாழ்ப்பாணம் எம்.பி.யாக இருந்தவர் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தமது தொகுதிக்கு வருகை தர இருக்கும் பிரதமரை வடபகுதி மண்ணில் காலடி எடுத்து வைக்கும்போது மாலை போட்டுக் கௌரவிக்கும்




பொறுப்பைத் தம்மிடமே தரப்பட வேண்டும் என்பது திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் வாதம். அதே வேளையில் காங்கேசன் துறை எம்.பி.யாகவிருந்த திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதிக்குள் அடங்கும் பலாலி விமான நிலையத்தில்தான் பிரதமர் டட்லி முதன்முதலில் காலடி வைக்கவிருப்பதால் எஸ்.ஜே.வி. செல்வநாயகமே பிரதமரை வரவேற்க வேண்டும் என்பது தமிழரசுக் கட்சியின் வாதம். யாழ்ப்பாணத்தில் இவ்விரு கட்சிகளுக்குள் மட்டும் இந்த சர்ச்சை நின்றுவிடவில்லை. பிரதமர் கொழும்பிலிருந்து புறப்படுவதற்குமுன் தமக்கு யார் மாலை போட வேண்டும் என்பதை முன்கூட்டியே அறிவிக்கவேண்டும் என்று இவ்விரு கட்சிகளும் அரசாங்கத்திடம் கேட்டிருந்தன. இவ்விவகாரத்துக்கு எப்படித் தீர்பு காண்பதென்பதில் டட்லிக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. தமிழரசுக் கட்சி அப்போது யூ.என்.பி. அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலம். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. மு. திருச்செல்வம் அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்தவர். இதனால் தமிழரசுக் கட்சியைப் பகைத்துக் கொள்ள முடியாது. அதேவேளை திரு. ஜி.ஜி. பொன்னம்பலம். யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலம் வாய்ந்த அரசியல்வாதி. இவரையும் தூக்கி எறிந்துவிட முடியாது. அதே வேளையில் காங்கேசன் துறைத் தொகுதிக்குள்ளிருக்கும் பலாலியில் வந்திறங்கவிருக்கும் தம்மை அதே பகுதிக்குள் வைத்து வரவேற்க வேண்டும் என்று காங்கேசன் துறை எம்.பி. கேட்டுக்கொள்வதிலும் தவறில்லை. அத்துடன் யாழ்ப்பாணம் தொகுதிக்குள் நடக்கவிருக்கும் அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே பிரதமர் வடபகுதிக்கு வருவதால் அவரை யாழ்ப்பாணம் எம்.பி. தான் வரவேற்கவேண்டுமென்று திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் கேட்டுக் கொண்டிருப்பதிலும் தவறில்லை. இவ்விரு கட்சித் தலைவர்களுக்குள் எழுந்துள்ள இச்சர்ச்சையை எப்படிச் சமாளிப்பது என்று அறியாமல் டட்லி சேனநாயக்கா குழம்பிக் கொண்டிருக்கிறார் என்றும், அவர் புறப்படுமுன் தமக்கு விமான நிலையத்தில் வைத்து யார் முதன் முதலில் மாலை போட வேண்டும் என்று அறிவிப்பார் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

பலாலி விமான நிலையம் மயிலிட்டி கிராமசபை எல்லைக்குள் அடங்குவதால் மயிலிட்டி கிராமசபைத் தலைவர் முதன் முதலில் தமக்கு மாலை போடலாம் என்று பிரதமரிடமிருந்து அறிவிப்பு வந்தது. மயிலிட்டி கிராம சபை தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்ததால் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தமட்டில் அவர்களின் சர்ச்சை இத்துடன் தணிந்துவிட்டது. ஆனால் ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கு இது ஒரு பெரும் கெளரவப் பிரச்சனையாகிவிட்டது. டட்லி சேனநாயக்கா இவ்விதமான தீர்ப்பை அறிவிப்பார் என்று அவர் எதிர்பார்த்திருந்தாரோ என்னவோ அவரிலும் பார்க்க அதிக புத்திசாலித்தனமான நடவடிக்கையொன்றை




திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் சாதுர்யமாக மேற்கொண்டார். வடபகுதி எங்கும் மகரதோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் வரை மக்கள் வீதிகளில் கூடிநின்று பிரதமருக்கு வரவேற்பளிக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தது. கொழும்பிலிருந்து பிரதமர் டட்லி சேனநாயக்காவும் அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வமும் அப்போது உள்ளூராட்சி உதவியமைச்சராக விருந்த தற்போதைய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் மட்டுமே விசேட விமானத்தில் வருவதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் நேரத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் கட்டுநாயக்கா வந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த விமானத்தில் தானும் வருவதாகக் கூறி அதில் ஏறிக்கொண்டார். அதாவது பிரதமரைத் தாம் தான் அழைத்து வந்தவர் என்று கூறிக் கொள்வதற்காக மட்டுமல்ல, பிரதமரை வரவேற்கக் காத்து நிற்கும் தமிழரசுக் கட்சியினர் தம்மையும் வரவேற்றனர் என்று சொல்ல இப்படியான சாதுர்யத்தை மேற்கொண்டார் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம். பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த அப்போதைய யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சந்திரசேகரா, காங்கேசன் துறை பொலிஸ் பொறுப்பதிகாரி நாணயக்காரா ஆகியோரின் திட்டத்தின் பிரகாரம் பிரதமரும், அமைச்சர் திரு. திருச்செல்வமும், திரு. பிரேமதாசாவும் ஒரு காரில் ஏறிக்கொண்டதும் பவனி ஆரம்பமானது. பிரதமரின் காரைச் சுற்றிப் பொலிசார் மோட்டார் சைக்கிள்களில் பாதுகாத்துச் செல்ல, ஜீப் வண்டியில் பொலிசார் முன்னே சென்று கொண்டிருந்தனர். பிரதமரின் காரைச் சுற்றி பொலிசார் மோட்டார் சைக்கிள்களில் பாதுகாத்துச் செல்ல, ஜீப் வண்டியில் பொலிசார் முன்னே சென்று கொண்டிருந்தனர். பிரதமரின் காருக்குள் தாமும் ஏறிக்கொள்ள பொலிசார் தனக்கு அனுமதி தரவில்லை என்பதை உணர்ந்த திரு.ஜி.ஜி. யாழ்ப்பாண நுழைவாயிலில் பிரதமரைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். யாழ்ப்பாண மாநகர சபை நுழைவாயிலை பிரதமர் சென்றடைந்தபோது அங்கே தமது ஆதரவாளர்களுடன் காத்து நின்றார் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம். தம்மை பிரதமரின் காரில் ஏற்றிக்கொள்ளுமாறு பிரதமர் டட்லி பொலிசாருக்கு உத்தரவிடவில்லை என்பதை மனதில் வைத்திருந்த திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் பிரதமரின் பவனி யாழ்ப்பாணம் எல்லையை வந்தடைந்ததும் தமது பலத்தைக் காட்டத் தொடங்கினார். நுழைவாயிலில் வீதியின் கரையோரமாக ஒரு மரத்தின் கீழிருந்த சிறு வைரவர் கோயிலுக்கு வணக்கம் செலுத்திவிட்டு தமது எல்லைக்குள் நுழையவேண்டுமென்று சொல்லுவது போல பிரதமரைக் காரிலிருந்து இறக்கினார். சப்பாத்துக் காலுடன் ஆலயம் அமைந்திருக்கும் வீதியில் நடக்கக் கூடாது என்று கூறி சப்பாத்தைக் கழற்ற வைத்தார். அங்கே பிரமாண்டமான மாலை ஒன்றையும் பிரதமருக்கு அணிவித்தார் ஜி.ஜி. தமது பிராந்தியத்தக்குள் வந்துவிட்ட




பிரதமரின் காரின் முன்னே தமது கார் செல்ல வேண்டும் என்றும் அதற்கு முன்னே பொலிசார் காவல்காத்துச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனராயினும், பாதுகாப்பு நலன் கருதி அவ்விதம் அனுமதிக்க முடியாதென்று பொலிசார் கூறிவிட்டனர். கோபமடைந்த திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் பொலிசாருக்கு முன்னே தமது காரை மெதுவாகச் செலுத்திக் கொண்டு பிரதமரைத் தாம்தான் யாழ்ப்பாணம் அழைத்தேன் என்று வரவேற்கக் காத்து நின்ற மக்களை நம்ப வைத்தார். அரசியல் தலைவர்களை வடபகுதிக்கு அழைப்பதும், அவர்களுக்கு மாலை போடுவதும், அற்ப சலுகைகளைப் பெறுவதும் ஏதேதோ செய்கின்றோம் என்று மக்களை நம்ப வைப்பதும் அக்காலத்து அரசியல். ஆனால் இப்போது மாலை போடுகிறோம் என்றால் வேண்டாம் வேண்டாம் என்று ஓடுகின்ற நிலையிலேயே அரசியல் உயர்மட்டங்கள் இருக்கின்றன.

## யாழ் நூலகம் எரிப்பு

யோகேஸ்வரன் எம்.பி. வீடு அழிக்கப்பட்ட சம்பவம் பற்றியும் மறுநாள் அவரைக் கைது செய்யும் பொருட்டு இராணுவம் எனது அயல் வீட்டுக்காரரான நல்லூரில் உள்ள திருமதி யோகேஸ்வரன் வீட்டை முற்றுகையிட்டது பற்றியும் 'தமிழன்' பத்திரிகையில் எழுதியிருந்தேன். யோகேஸ்வரனைத் தேடி வந்த இராணுவக் குழுவுக்குத் தலைமை தாங்கி வந்தவர் ஒரு தமிழர். வயது 30 கூட இருக்காது. கப்டன் ஸ்தானத்திலிருந்த அவரது பெயர் மகேந்திரன் என்று நினைக்கிறேன். யோகேஸ்வரனைக் கைது செய்ய வரவில்லை. அவரைக் கூட்டிச் சென்று பாதுகாப்பளிப்பதே எமது நோக்கம் என்ற தொனியில் அந்த இராணுவ அதிகாரி எம்முடன் பேச்சுக் கொடுத்தது பற்றி யோகேஸ்வரனின் தகப்பனார் டாக்டர் வெற்றிவேலு அவர்களுக்குத் தகவல் சொல்லும் பொருட்டு நானும் அயல்வீட்டுக்காரரான சோமசுந்தரமும் புறப்பட்டுச் சென்றபோது அவரும், அவரது சில நெருங்கிய உறவினர்களும் திருமதி. யோகேஸ்வரன் வீடு நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டோம். அந்த இராணுவ அதிகாரி யோகேஸ்வரனின் தந்தை டாக்டர் வெற்றிவேலுவை அணுகி இராணுவம் வந்திருக்கும் நோக்கம் பற்றி விளக்கினார். அவரை நம்ப எவரும் தயாரில்லை. இதற்கு முதல் நாள் இரவு யோகேஸ்வரனின் வீட்டுக்குக் குண்டு, பொதுஜன நூலகம் எரிப்பு ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தீ வைப்பு, நல்லூர் எம்பி. சிவசிதம்பரம் வீட்டில் ஒரு பலி.. இப்படியாக யாழ்ப்பாணம் எரிந்து கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அரச தரப்பினரை நம்பி எப்படி யோகேஸ்வரனை அவர்களிடம் ஒப்படைப்பதென்ற சர்ச்சையில் யோகேஸ்வரனின் குடும்பத்தினர் குழப்பமடைந்தனர். இராணுவ




அதிகாரி ஒருபுறமிருக்க அங்கு வந்திருந்தவர்கள் அனைவரும் தனித்தனியே சென்று 'மந்திராலோசனை' செய்தனர். எல்லோரது முடிவும் யோகேஸ்வரனைக் கையளிப்பதில்லை என்பதுதான். ஒரு மரண வீட்டில் எப்படி நிசப்தம் நிலவுமோ அதே நிலைதான் அன்று அவர்கள் வீட்டில் இருந்தது.

தமிழரான அந்த இளம் இராணுவ அதிகாரி தனது சொல்லை யோகேஸ்வரன் குடும்பத்தினர் நம்புமளவுக்குத் தன் பேச்சால் அவர்களைக் கவரத் தொடங்கினார். யோகேஸ்வரனின் உயிருக்குத் தாம் உத்தரவாதம் என்று கூறுமளவுக்கு அவர் யோகேஸ்வரனைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கெஞ்சிக் கேட்டார். தமிழன் என்ற உணர்வுடன் தாம் தற்போது பேசுவதாகவும் அவர் சொன்னார். அதற்கும் எவரும் சம்மதிக்கவில்லை. இறுதியில் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்த தகவல் எல்லோர் மத்தியிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் நாச்சிமார் கோவிலடியில் நடந்த 2 பொலிஸ்காரரர் கொலையும் அதனைத் தொடர்ந்து அரச தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளும் வடக்கில் அராஜக நிலையை அதிகரிக்கச் செய்யப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்ட அரசு, அப்போது பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. ஆர். சுந்தரலிங்கத்தை யாழ்ப்பாணம் அனுப்பியிருப்பது பற்றியும், அவரது உத்தரவின் பேரிலேயே சகல எம்.பி.க்களும் பாதுகாப்பளிப்பதற்காக இந்த நடவடிக்கை என்றும் அந்த இராணுவ அதிகாரி விளக்கம் கொடுத்தார். இவரது கதை ஒரு 'கயிறு திரிப்பாக'இருக்குமோ என்று கருதிய யோகேஸ்வரன் வீட்டார் உதவிப் பொலிஸ் மா அதிபர் சுந்தரலிங்கத்துடன் தொடர்பு கொண்டபோது நிலைமை புரிந்தது. அமைச்சர் சிறில் மத்தியூ, அமைச்சர் காமினி திசநாயக்கா, ஜெயவிக்கிரம பெரேரா என்ற ஒரு எம்.பி. ஆகியோரின் திட்டமிட்ட செயலே யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்துள்ள பயங்கரம் என்பதை அரச தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில்தான் இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்பொருட்டு திரு. சுந்தரலிங்கம் விசேடமாக அனுப்பி வைக்கப்பட்ட 'சங்கதி' ஓரளவு புரிந்தபின்னர் திரு. யோகேஸ்வரன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார். அதே போல ஏனைய தமிழ் எம்.பி.க்கள் அனைவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

மறுநாள் உதவிப் பொலிஸ் மாஅதிபர் சுந்தரலிங்கத்தைச் சந்தித்தேன். நாச்சிமார் கோவிலடி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டத்தில் நடந்த சம்பவத்திலும், அடுத்த நாள் நடந்த யாழ் நகர் எரிப்பிலும் தொடர்புடைய பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக சுந்தரலிங்கம் சொன்னார். அவர் கூறியபடி செயற்பட்டதைப் பின்னர் உணர்ந்தேன். 22 பொலிசாருக்கு எதிராக சுந்தரலிங்கம் மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்தார். எங்கெங்கு சாட்சியங்களைப் பதிவு செய்ய வேண்டுமோ அங்கங்கெல்லாம்




சாட்சியங்களைப் பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். ஒரு கண் துடைப்பு வேலையாக சுந்தரலிங்கத்தை யாழ்ப்பாணத்துக்கு இலங்கை அரசு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அனுப்பியிருப்பார். ஆனால் திரு. சுந்தரலிங்கம் தமது கடமையிலிருந்து அகலவில்லை. குற்றஞ்செய்தவர்கள் என்று சாட்சியம் மூலம் தெரிந்த அனைத்துப் பொலிஸ்காரரரையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார். யாழ் மாவட்டத்தில் பொறுப்பு வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு எதிராகவும் அவர் குற்றஞ்சாட்டத் தவறவில்லை. சிறில் மத்தியூவும், காமினி திசநாயக்காவும் உதவிநாடிய பொலிஸ்காரரைக் கூட திரு. சுந்தரலிங்கம் அடையாளம் காணத் தவறவில்லை. கடைசியில் நடந்தது என்ன? மல்லாகம் நீதிமன்றம் அந்த 22 பொலிஸ்காரரையும் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. நிலைமை மோசமாகுமோ என்று உணர்ந்த அட்டோர்னி ஜெனரல் இந்த வழக்கு விசாரணையைக் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றினார். சாட்சிகள் கொழும்புக்குப் போகப் பயந்தனர். இதனால் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை. சாட்சிகள் நீதிமன்றத்தில் முன் தோன்றாத நிலையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இது நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் அவர்களது நீதி பரிபாலனத்துக்கு உட்பட்ட சட்ட விவகாரம். இது பற்றி நான் எதுவுமே சொல்ல முடியாது. யாழ்ப்பாணத்தை அழிப்பதற்காகவே திட்டமிட்டு இந்த அமைச்சர்கள் சிங்களக் காடையர்களைக் கொண்டுவந்தார்கள் என்பதைத் தமிழுலகம் அறிந்தது.

ஆனால் சட்டமா அதிபர் இந்த வழக்கை மல்லாகம் நீதிமன்றத்தில் ஏன் நடத்தியிருக்கக் கூடாது? அரசாங்க சாட்சிகள் அரசாங்க செலவில் பாதுகாப்புடன் மல்லாகம் நீதிமன்றத்துக்கு வந்துபோவதில் என்ன சிரமம் இருந்தது? பொலிஸ்காரருக்கு எதிராகச் சாட்சி சொல்வதற்கு கொழும்புக்கு அதுவும் சிங்களவர் ஆட்சி செய்யும் கொழும்பு நகருக்கு - தமிழரான அப்பாவிப் பொதுமக்களை நீதிமன்றம் செல்ல வேண்டும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும். அட்டோர்னி ஜெனரலின் 'சாதுர்யம' வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதின் மூலம் வெற்றியைக் கொடுத்தது. விடுதலையான 22 பொலிஸ்காரரும் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கே கடமையாற்ற அனுப்பப்பட்டனர். சில வாரங்களில் அவர்கள் அனைவரும் தெற்கே மாற்றப்பட்டனர் - பதவி உயர்வுகளுடன் என்று அறிந்தேன்.

# இளைஞர்களின் ஊர்வலமும் பொலிஸ் தடையும்




தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் அரசாங்க உத்தியோகங்களில் தமிழர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில் பாகுபாடு உத்தியோக நியமனங்களில் சிங்களவர்களுக்கு முன்னுரிமை அரசாங்கப் பதவிகளில் உள்ள தமிழர்களுக்கு கட்டாய சிங்கள அறிவு. இப்படிப் பலவிதமான நெருக்கடிகளை தமிழர் மீது அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்த வேளையில் 1972ம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சி முதற்தடவையாக கல்வித் திட்டத்தில் பாரிய மாற்றம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்தது. 'தரப்படுத்துதல்' என்ற இத்திட்டத்தின் மூலம் தகுதியுள்ள தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. பல்கலைக் கழகத்துக்குப் பிரவேசம் பெறும் தகுதியை சிங்களவரிலும் பார்க்க தமிழ் மாணவர்களே விகிதாச்சார அடிப்படையில் கூடுதலாகப் பெற்று வருவதால் அதனைத் தடுக்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தினால் தமிழ் மாணவர்கள் அவர்களது சந்ததி சந்ததியாக பாதிப்படையப் போவதைத் தமிழ் மாணவர் சமுதாயம் உணர்ந்து கொண்ட வேளையது. சிறீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராயிருந்த காலத்தில் நிதி அமைச்சராயிருந்தவர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயக்கா அவர் நிதி அமைச்சுக் கடமைகளில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் அவர் கையில்தான் இருந்ததென்று சொல்லலாம். தமிழருக்கு எப்படி எப்படி தீங்குகளைச் செய்யலாம் என்று திட்டம் வகுத்துக் கொடுக்க அதனைச் செயற்படுத்தும் அதிகாரம் மட்டுமே அரசாங்கத்திடமிருந்த காலமது. பதியுதின் மஹ்மத் கல்வி அமைச்சராக அப்போது பதவி வகித்தவர். தரப்படுத்தல் திட்டத்தை ஆட்சேபித்து தமிழர் கூட்டணி பாராளுமன்றம் வரை போர்க்குரல் எழுப்பியது. பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகம் என்ற பாகுபாடின்றி சகல தரத்திலுள்ள மாணவர்கள் ஒரு கொடியின் கீழ் ஒன்று திரண்டு மாணவர் பேரவை உதயமாகி தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர். இலங்கை சரித்திரத்தில் இவ்விதமாக மாணவர்கள் ஒன்று திரண்டு அரசுக்கு எதிராக போர்க்கொடி ஏற்றிய சம்பவம் யாழ்ப்பாணத்தில் தான் முதற்தடவையாக நடந்ததென்று சொல்லுமளவுக்கு மாணவர்கள் அணி திரண்டிருந்த வேளையது.

யாழ்ப்பாணம் திறந்தவெளியிலிருந்து ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்து, யாழ் நகர் பிரதான வீதி ஊடாக அரசாங்க செயலகத்தைச் சென்றடைந்து அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதென மாணவர் பேரவை முடிவு செய்தது. அமைதி ஊர்வலம் என்று அறிவிக்கப்பட்டாலும்கூட,




மாணவர்கள் கொதிப்படைந்திருக்கும் இவ்வேளையில் அவர்கள் முறைகேடாக நடந்து வன்செயல்களைத் தூ ண்டிவிடலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருந்தது. இதனால் ஊர்வலத்துக்கு அனுமதி கோரி பொலிசாருக்கு தமிழ் மாணவர் பேரவை விண்ணப்பித்திருந்த போதிலும் அனுமதி வழங்கப்படவில்லை. அதாவது கடைசி நாள் வரை அனுமதி வழங்கப்பட்டதா அல்லது அனுமதி நிராகரிக்கப்பட்டதா என்பது குறித்து மாணவர் பேரவைக்கு அறிவிக்கப்படாமலிருந்தது. ஆனாலும் மாணவர் பேரவை திட்டமிட்டபடி ஊர்வலத்தை நடத்தத் தீர்மானித்துவிட்டது. நான்தான் அன்று ஈழநாடு இரவு பொறுப்பாசிரியராக கடமையிலிருந்தேன். இரவு பத்து மணிக்கு தமிழ் மாணவர் பேரவைக்குப் பொறுப்பான இளைஞர்கள் சிலர் 'ஈழநாடு' காரியாலத்துக்கு வந்து ஊர்வலம் சம்பந்தமான அறிக்கையைத் தந்துவிட்டுச் சென்றனர். அதற்குரிய முக்கியத்துவம் கொடுத்து முதற்பக்கத்தில் திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்கும் மாணவர் பேரவை அறிவிப்பு என்ற தலைப்புக் கொடுத்து செய்தி தயாராகிவிட்டது. இரவு பன்னிரண்டு மணியளவில் பக்கம் தயாரிப்புக்கான சகல வேலைகளும் முடிந்தது. மெஷினுக்குப் பக்கத்தைக் கொடுத்துவிட்டு அச்சுக்கோப்பாளர்கள் வீடு திரும்பிவிட்டனர். அன்றிரவு அச்சுவேலி தோப்பு ஆறுமுகசாமி அச்சுக்கோர்ப்புப் பிரிவில் ஃபோர்மனாக கடமையிலிருந்தவர். போக்குவரத்துச் சிக்கல் காரணமாக அவர் அன்றிரவு ஈழநாட்டிலேயே என்னுடன் தங்கியிருந்தார். இருவரும் நித்திரைக்குத் தயாராகிக் கொண்டிருந்தோம்.

சுமார் 12.45 அளவில் யாழ் மாவட்ட பொலிஸ் சுப்பிரண்டண்ட் ஈழநாட்டுக்கு வந்தார். திரு.சுந்தரலிங்கத்தைப் பொறுத்தமட்டில் இதுவரை கடமையிலிருந்த பொலிஸ் சுப்பிரண்டண்ட்களிலிருந்து வேறுபட்டவர். வடபகுதிக்கு அவர் பொலிஸ் அதிபராக நியமிக்கப்பட்டபின் அவர் அங்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. தமது திறமையான சேவையினால் வடபகுதிகளில் நிகழ்ந்து வந்த குற்றச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் என்று அக்காலத்தில் பலராலும் புகழப்பட்டவர். நகர் சுறுசுறுப்பாக இருக்கும் வேளைகளில் - குறிப்பாக மாலை வேளைகளில் - குதிரை மீது பவனி வந்து கண்காணிக்கும் வழமையைத் தன் கடமையாக்கிக் கொண்டிருந்தவர். இதனால் எங்கெங்கே எப்படி எப்படியான மனிதர்கள் நடமாடுகிறார்கள். அவர்களது நாளாந்த நடவடிக்கை என்ன என்பவற்றைத் தெரிந்து கொண்டிருந்தவர். ஆங்காங்கே பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்களை அமைத்து பொலிசார் பொதுமக்களின் எதிரிகளல்ல என்பதை மக்கள் மத்தியில் வலியுறுத்தப் பாடுபட்டவர். அது மட்டுமல்ல நயினாதீவைச் சேர்ந்த இவரது தந்தையாரான சைவப் பெரியார் திரு. இராமச்சந்திரா போலவே இவரும் சைவ சிந்தனையும் கடவுள் பக்தியும் மிளிர்ந்தவராகத் திகழ்ந்தார். தமது பாரியாருடன் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலுக்கு ஆலய




வழிபாட்டு வரும்போது இவரைக் காண முடிவதனால் அவர் ஒரு பொலிஸ் அதிகாரி என்ற மனப்பாங்கிலிருந்து மக்கள் விலகியிருந்தனர். இதனால் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' அவருக்கு நல்ல மதிப்புக் கொடுத்தது. 'ஈழநாட்டி'ன் நண்பனாகவே அவர் விளங்கினார் என்று கூறினாலும் அது மிகையாகாது.

திரு. சுந்தரலிங்கம் 'ஈழநாடு' காரியாலயம் வந்திருந்த நோக்கம் பற்றி என்னுடன் பேசத் தொடங்குகிறார். மாணவர் பேரவை ஊர்வலத்தைப் பொறுத்தமட்டில் மேலிட உத்தரவின் பேரில் அரசின் அனுமதியைப் பெறுவதற்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று என்று கூறி தனக்கேற்பட்டுள்ள நெருக்கடி பற்றி திரு. சுந்தரலிங்கம் கருத்துப் பரிமாறிக் கொண்டார். இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது தயாரித்துக் கொண்டிருந்த நாளைய பத்திரிகையை அவரிடம் காட்டினேன். திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்கும் என்பதைத் தவிர்த்து ஊர்வலத்துக்குத் தடை என்பது போல செய்தியை பிரசுரிப்பதால் நாளை நடக்கக் கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று பொலிஸ் அதிபர் அபிப்பிராயம் கூறினார். அனுமதி மறுக்கப்பட்ட ஊர்வலத்தை நடாத்துவதற்கு அனுமதிப்பது எவ்வகையிலும் சட்டத்தின் கீழ் அமையாது. ஆதலால் பெருந்தொகையான மாணவர்கள் ஒன்றுதிரளக்கூடிய இச்சந்தர்ப்பத்தில் கலம்பகம் ஏற்படாதவகையில் 'ஈழநாடு' ஒத்துழைக்க வேண்டும் என்ற அவரது கருத்துக்கு இசைந்தவராக ஒப்புக்கொண்டு அப்படியே செய்தியை வெளியிடுவதாகக் கூறி அவரை அனுப்பிவிட்டேன். செய்தியைத் தணிக்கை செய்யும் அதிகாரம் நாட்டில் அவசரகால நிலைப் பிரகடனம் செய்திருக்கும்போதுதான் அமுலிலிருக்கும். அதாவது அவசர காலகட்டம் எதிரில் இல்லாதபோது சபைக்கு செய்திகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் இருக்காது. அது மட்டுமல்ல, யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாவட்ட அரசாங்க அதிபருக்கே தணிக்கைச் சபையின் அதிகாரம் உண்டு. ஆனாலும் 'ஈழநாட்டை'ப் பொறுத்தமட்டில் மாவட்ட பொலிஸ் அதிபரும் குறிப்பிட்ட ஒரு செய்தியை வெளியிடுவதானால் தமது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் கலகம் ஏற்படலாம் என்று கருதி அதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டால் அதற்கும் செவிமடுக்க வேண்டும் என்பது ஒழுங்குநிலை. இந்நிலையில் ஊர்வலத்துக்குத் தடை விதிப்பதென்பது அதுவும் ஒரு ஜனநாயக நாட்டில் நியாயமற்றது. இதனால் மாணவர்களின் ஊர்வலம் சம்பந்தமான செய்திக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து, வழமைக்கு மாறாக இரண்டு பெரிய தலைப்புகளுடன் செய்திகளை வெளியிட்டேன். முன்பக்கத்தில் மேலே, 'திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்கும் - மாணவர் பேரவை அறிவிப்பு' என்ற தலைப்பில் ஒரு செய்தியையும் அதன் கீழே அதே அளவான எழுத்தில் 'ஊர்வலத்துக்குத் தடை'என்ற செய்தியையும் பிரசுரித்தேன். மீறி ஊர்வலம் நடத்தப்பட்டால் அதனைத் தடுப்பதற்கு தயார் நிலையில் பொலிசார் நிறுத்தப்பட்டார்கள். மாணவர்களோ




தடையை மீறி ஊர்வலம் நடத்த கங்கணம் கட்டி நின்றார்கள். எப்படியோ கலகம் எதுவுமின்றி ஊர்வலம் நடந்தது. உரிய முக்கியத்துவம் கொடுத்துச் செய்தியைப் பிரசுரித்தமைக்காக மாணவர் பேரவையினர் அன்று மாலை நன்றி சொன்னார்கள்.

## எழுபதுகளில் காணாமற்போன சிறுவர்கள்

இளைஞர்கள் காணாமல் போகிறார்கள் என்பது இக்காலத்துச் செய்தி. தமிழீழம் கோரி நடத்தப்படும் போராட்டத்திற்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதற்கு இளைஞர்கள் தேவைப்படுவது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வு. அப்படியானால், 1971 ஆண்டுப் பகுதியில் சிறுவர்கள் எதற்காகக் கடத்தப்பட்டார்கள்? பிள்ளைபிடிகாரர் வடபகுதியில் அட்டகாசம் பாடசாலைக்குச் சென்ற மாணவன் வீடு திரும்பவில்லை. கடத்தல் கும்பலைப் பிடிப்பதில் பொலிஸ ார் தீவிரம். ஆலய தரிசனத்தில் பெற்றோர் மூழ்கியிருக்க, மகன் காணாமல் போன மர்மம்! வயோதிகர் சிறுவனுக்குக் கொடுத்த 'சொக்கலட்டில்' மயக்க மருந்து? தினந்தோறும் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்த செய்தித் தலைப்புக்கள் இவை. காலையில் பத்திரிகைகளைப் புரட்டினால் இலங்கையிலிருந்து வெளிவரும் சகல பத்திரிகைகளிலும் யாழ். மாவட்டத்தில் பிள்ளைபிடிகாரரின் தொல்லைகள் பற்றிய செய்தியும் அவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார்
உஷார் அடைந்திருப்பது பற்றியும் செய்திகள் இல்லாமல் இருக்காது. யாழ்ப்பாணம் கல்வியில் மட்டுமல்ல பொருளாதாரத்திலும் மேம்பட்டு விளங்கிய காலம் அது. பெருமளவில் தோட்ட வேலைகளில் ஈடுபடும் கமக்காரர் மட்டுமல்ல, சாதாரண ஊதியம் பெறும் அரசாங்க ஊழியர்களும் கூட தத்தமது வீடுகளில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி தங்கள் தொட்டாட்ட வேலைகளைச் செய்து வந்த. மலையகத்தில் வறுமையில் வாடிய இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளை அப்பகுதிகளில் வியாபாரம் நடத்தி வந்த 'யாழ்ப்பாண முதலாளிகள'ஊடாக வடபகுதிக்கு அனுப்பி வந்தனர். மாதம் ஐந்து ரூபா சம்பளம் இந்தியத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, சிங்களவர்கள்கூடத் தங்கள் பிள்ளைகளைத் தமிழர்களிடம் வேலைக்கமர்த்திக் கொண்டிருந்த வேளை. அப்படியிருக்க, தமிழ்ச் சிறுவர்கள் எதற்காகக் கடத்தப்படுகிறார்கள்? 1971-ம் ஆண்டு ஏப்ரலில் சிறீமாவோ அரசுக்கு எதிராக 'சேகு வேரா இயக்கம்' ஆரம்பிக்கப்பட்டபோது இந்தத் தமிழ்ச் சிறுவர்களின் கடத்தலுக்கும் அந்த இயக்கத்திற்கும் தொடர்பு இருக்கலாமா என்றுகூடப் பொலிஸார் சந்தேகித்தனர். ஆனால், பொலிஸாரின் துப்புத்துலக்கலில் அவ்வித தொடர்பு இருக்கவில்லை என்பது ஊர்ஜிதமாயிற்று.

ஒருநாள் கொழும்பிலிருந்து வெளிவந்த பத்திரிகையொன்றில் நல்லூர் பகுதியிலிருந்து காணாமற்போன சிறுவன் பிள்ளை பிடிகாரரின்




கையிலிருந்து உயிருடன் தப்பிவந்திருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருந்தது. விசாரித்ததில் நல்லூர் கோவில் வீதியில் வாடகைக் கார் வைத்திருக்கும் ஒருவரின் மகன் தப்பி வந்திருப்பதாக அறிந்தேன். எனது வீட்டுக்கு அருகில் நடந்துள்ள இச்சம்பவம் என்பதால், அச்சிறுவனைச் சந்தித்து பத்திரிகையில் எழுதினேன். கண்களைக் கட்டியபடி தன்னைச் சிலர் காரில் ஏற்றியதாகவும், பூநகரியிலிருந்து சிறுபடகு ஒன்றில் தம்மைக் கொண்டு சென்றதாகவும், அங்கே சுமார் 50 சிறுவர்கள் அடிமைகளாக்கப்பட்டு, மீன் காயவிடும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், 8ஆம் நாள் அப்படகு அத்தீவிலிருந்து பூநகரிக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த போது ஏற்கனவே வள்ளத்தில் ஏறி மறைந்திருந்ததினால் தாம் தப்பிவிட்டதாகவும் அச்சிறுவன் சொன்னான். அவன் கூறிய கதைகள், மிதப்படுத்தப்பட்டுத் திரிக்கப்பட்டதாக நினைக்கத் தோன்றவில்லை. மறுநாள், அவனது கதை பெயர், ஊர் போன்ற சகல விபரங்களுடனும் 'ஈழநாட்டி'ல் வெளிவந்தது. இச்சிறுவனிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பிள்ளைபிடிகாரரைப் பிடிப்பதில் பொலிஸார் தீவிரமாகினர். ஆனாலும், எவரையும் பொலிசாரால் பிடித்துக்கொள்ள முடியவில்லை. இச்சம்பவம் நடந்து முடிந்த ஒரு வாரத்தில் கொழும்பிலிருந்து வந்த பிரபல பத்திரிகையொன்றில் காங்கேசன் துறையில் ஒருவர் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டதாகவும், அவர் பொது மக்களால் தாக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி வெளியாகியிருந்தது. இச்செய்தியை நமது காங்கேசன்துறை நிருபர் 'கோட்டை' விட்டு விட்டதனால் 'ஈழநாட்டி'ல் பிரசுரமாக வில்லை. அவரை நேரே போய்ப் பார்த்து எமது வாசகர்களுக்கு மேலதிக விபரங்களைக் கொடுக்குமாறு செய்தி ஆசிரியர் பணித்தார். நானும் உதவி ஆசிரியர் திரு. ஈ.கே. ராஜகோபாலும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அன்று திங்கட்கிழமை மாலை 5.30 அளவில் பார்வையாளர் கள் 14ஆம் வார்ட்டில் நிரம்பி வழிந்தனர். புதிய சினிமாப்படத்துக்கு ஏற்படும் நெரிசல் எப்படியோ அதே ஜனத்திரளை அங்கு கண்டேன். பிள்ளைபிடிகாரனைப் பார்ப்பதற்காக அவ்வளவு கூட்டம்! கியூவில் காத்திராது பத்திரிகையாளர்கள் என்ற விசேட அனுமதியுடன் உள்ளே சென்றோம். 'சேலைன்' ஏற்றப்பட்ட நிலையில் ஒருவர் படுக்கையிலிருக்கிறார். அவரது கால்மாட்டில் சிறைச்சாலை ஊழியர் கதிரையில் அமர்ந்திருக்கிறார். கட்டிலின் இருபக்கங்களிலும் இரு பொலிசார் காவல். கிட்டே அணுகி அவரைப் பார்க்க முடியாதவாறு பொலிஸ் பந்தோபஸ்து. அவரைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேசுவதற்குக்கூட இயக்கமில்லாதவாறு மெதுவான குரலில் “தம்பி காசிலிங்கம் பார்த்தாயா நடந்ததை” என்றார். அவர் ஒரு சாதாரண மனிதரல்ல மன்னார் மாவட்ட மேலதிக பதிவாளர் திரு.ஆ.பரஞ்சோதி (A.D.R.- Additional District Registrar) அவர்களையே நான்




அங்கு கண்டேன். அவர் சொல்லப்போவதை சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற நிலை எனக்கிருக்கவில்லை. அரசாங்கத்தில் பெரும் பதவி வகிக்கும் ஒருவருக்கு இப்படியானதொரு நிலையை ஏற்படுத்திவிட்டார்களே என்று மனம் வருந்தினேன். "நீங்கள் யாரென்று பொலிசாருக்குச் சொல்லவில்லையா?" என்று நான் கேட்டேன். அவர் தொடர்ந்தார். "வெள்ளிக்கிழமை இரவு தபால் ரயிலில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரப் புறப்பட்டேன். நித்திரை கொண்டுவிட்டதால் யாழ்ப்பாணத்தில் இறங்க முடியவில்லை. சனிக்கிழமை காலை 8 மணியளவில் காங்கேசன்துறையில்தான் கண் விழித்தேன். என் பிள்ளைகளுக்கு வாங்கிவந்த சொக்கலேட்டுக்களைபள்ளிக்கூடம் வந்துகொண்டிருந்த குழந்தைகளிடம் கொடுத்தேன். அதனை வாங்க மறுத்த சிறுவர்கள் பிள்ளைபிடிகாரன் என்று கத்தியபடி ஓட்டம் பிடித்தனர்.

இதனைக்கண்ட அவ்வழியால் போய்க் கொண்டிருந்த பொதுமக்கள் என்னை எதுவுமே கேட்காமல் தாக்கத் தொடங்கினர். நான் அறிவிழந்ததால் பொலிசாருக்கு வாக்குமூலம் அளிக்க முடியவில்லை. சனிக்கிழமை இரவு 6 மணியளவில் நீதிபதியின் வாசஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டேன். தொடர்ந்து விசாரணை நடத்தி, ஏனைய பிள்ளைபிடிகாரக் கும்பலைக் கைது செய்யும்வரை என்னை றிமாண்டில் வைக்க வேண்டும் என்று பொலிசார் நீதிபதியிடம் கேட்டுக் கொண்டனர். நீதிபதி இரண்டு வாரங்கள் என்னை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். ஞாயிறு காலை எனது உடலில் நடுக்கம் ஏற்பட்டதனால் ஆஸ்பத்தியில் அனுமதித்தனர்" என்று அவர் கூறினார். அங்கு கடமையிலிருந்த பொலிசாரிடம் சம்பந்தப்பட்டவர் மன்னார் மேலதிக பதிவாளர் என்று அறிமுகப்படுத்தி வெட்கத்தில் எவருக்கும் சொல்லாமலிருந்ததாக திரு. பரஞ்சோதி அவர்கள் கூறியதையும் சொன்னேன். காங்கேசன்துறைப் பொலிசாரிடம் தொடர்பு கொண்டு றிமாண்டிலிருந்த அதிகாரியை விடுதலை செய்ய உதவினேன்.

## கனடாவைப் போல் இலங்கையிலும் இலவசத் தொலைபேசி

பொதுவாக அனைத்து நாடுகளிலும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்புக்கும் கட்டணம் உண்டு. ஆனால் கனடாவில் உள்ளூர் அழைப்புகள் இலவசம். எவ்வளவு நேரமும் பேசலாம். இதனால் நம்மவர்கள் ஒரே வீட்டில் 2-3 'லைன்' களை வைத்திருக்கிறார்கள். அங்கு தொலைபேசி அழைப்புகள் இலவசம் என்று கேள்விப்படும் போது ஐரோப்பாவில் வாழ்பவர்களுக்கு




ஆச்சரியமாகத்தானிருக்கிறது. அந்நாட்டு அரசாங்கத்துக்கு இப்படி இலவசமாக அனுமதிப்பது கட்டுபடியாகுமா என்று நாம் எல்லாம் அங்கலாய்க்கிறோம்! ஆனால், இப்படி இலவச தொலைபேசி வசதி ஒரு காலத்தில் எமது நாட்டில் - இலங்கையில் இருந்தது என்றால் நம்பமுடியாததுதான். 30 வருடங்களுக்கு முன் நம் நாட்டில் உள்ளூர் தொலைபேசி அழைப்புகள் அனைத்தும் இலவசமே! வசதிபடைத்தவர்கள் மட்டுமே அக்காலத்தில் தொலைபேசி வைத்திருப்பார்கள். அவர்களது வருடாந்தர சந்தாவாக 250 ரூபா தபால் தந்தி இலாகாவுக்குச் செலுத்தவேண்டும்.

ஆனால் வெளியூருக்கு உதாரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்குப் பேசவேண்டுமானால் 30சதம் செலுத்தவேண்டும். ஆனால் இந்த இணைப்பைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் மத்திய தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்பு கொண்டு 'புக்' பண்ணவேண்டும். யாழ் பரிவர்த்தனை நிலையத்தில் ஒரு சில இணைப்புக்களே இருந்ததால் 6 மைல் தொலைவில் உள்ள சுன்னாகத்துக்கு ஒரு முறை தொடர்பு பெற 3 மணித்தியாலம் 'டிலே' (தாமதம்) என்று பரிவர்த்தனை நிலையம் சொல்லும்! உதாரணமாக காலை 9 மணிக்கு ஒரு நம்பரை “புக்“ செய்திருந்தால் - 12 மணிவரை காத்திருக்கவேண்டும். இணைப்பு இதுவரை கிடைக்கவில்லையென்று மீண்டும் ஒருமுறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்பு கொண்டு ஏற்கனவே 'புக்' செய்த நம்பரைத் தர முடியுமா என்று கேட்கவேண்டும். அப்போது மேலும் 2 மணித்தியாலம் (further delay 2 hours) டிலே என்று டெலிபோன் எக்சேன்ஸ் பதில் தரும். மாலை 3 மணியாகியும் தொலைபேசி கிடைக்காவிட்டால் மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்தவேண்டும். அப்போது “லைன்ஸ் அவுட் ஒப் ஓடர் “தொலைபேசி இணைப்புகள் பழுதாகிவிட்டன) என்று பதில் தருவதுடன் நாம் பதிவு செய்த நம்பரை ரத்துச் செய்கிறோம் என்று 'எக்சேஞ்' கூறிமுடிக்கும். 6 மைல் தொலைவில் உள்ள சுன்னாகத்துக்கு இக்கதியானால் சுமார் 256 மைல் தொலைவில் உள்ள தலைநகர் கொழும்புவின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா? அரசாங்க அதிபர். பொலிஸ் நிலையம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை வசதி உண்டு. அதாவது ஒன்று அல்லது இரண்டு 'லைன்'கள் அவற்றுக்கென (சழைசவைல டுைநௌ) எந்நேரமும் ஒதுக்கப்பட்டிருக்கும். இதனால் தொலைபேசி அழைப்புகளை விரைவாகப் பெற்றுக் கொள்ள அவ்வப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்துகொண்டு 'புக'செய்வது அரசியல் செல்வாக்குள்ள சிலரின் வழமையான காரியமாயிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பரிலிருந்து எங்கு வேண்டுமானாலும் பேசுவதற்கு இலவசமும்கூட! ஆனால் வர்த்தக ஸ்தாபனங்களின் 'முதலாளிமார்' டெலிபோன் 'எக்சேஞ்சை' தங்கள் கைகளுக்குள் வைத்திருந்தனர். தங்கள் தொழில்




சம்பந்தமாக கொழும்புடன் தொடர்பு கொள்ளவேண்டுமானால் நினைத்த நேரத்தில் 'முன்னுரிமை' பெறுமளவுக்கு தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் அவர்களுக்கு செல்வாக்கிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பேச 3 நிமிடத்துக்கு 3 ரூபா 25 சதம் மட்டுமே. இந்த முதலாளிமார் 10 நிமிடங்கள் பேசினால் அரசாங்கத்துக்கு 32ரூபா 50 சதம் போகும். ஆனால் இந்த தொலைபேசி இணைப்பை வழங்கியவருக்கு முதலாளிமார் வாரந்தோறும் ரூபா 200 சன்மானம் கொடுப்பர். 1969 ஆண்டளவில் அரசாங்க ஊழியரின் சம்பளம் 255 ரூபா மட்டுமே. ஆனால் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் கடமையாற்றும் சில ஊழியர்கள் மாதம் மேலதிகமாக 800 உழைத்துவிடுவர்!

யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையைப் பொறுத்தமட்டில் இவ்விதமாக 'லைன்களைப்' பெறவேண்டிய நிலையிருக்கவில்லை. பேனாவைக் கையில் எடுத்து வெள்ளைப் பேப்பரில் வைத்தால் போதும்! பின்கதவால் பணம் சம்பாதித்தோர் தங்கள் வீட்டிற்குத் திரும்பவேண்டியதுதான் ஆனால் அதனை 'ஈழநாடு' செய்யவில்லை! பணம் சம்பாதிப்பதன் மூலம் செல்வாக்கை உயர்த்துபவர்கள் நம் மத்தியில் பெரும்பான்மையானவர்கள் இருந்தாலும் வேறு வழிகளில் செல்வாக்கைத் தேடுபவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். அரசியலில் ஈடுபடுபவர்களை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். தங்கள் பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவரவேண்டும் என்பதற்காக பத்திரிகையாளனுடன் நெருங்கிய தொடர்புகளை வலிந்து ஏற்படுத்திக் கொண்டிருப்பர். அதே போல கிராம முன்னேற்றச்சங்கம், வாசகசாலைகள் போன்ற பொது ஸ்தாபனங்களில் ஈடுபாடுடைய அங்கத்தவர்களும் பத்திரிகையாளர் களுடன் சினேகிதத்தை வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டுவது வழமை. சில எழுத்தாளர்களும் தங்கள் சிறுகதை, கவி, கட்டுரைகள், பத்திரிகைகளில் வெளிவரச் செய்வதில் தங்களுக்குத் தெரிந்த பத்திரிகையாளர்களுக்கு முன்னும் பின்னும் திரிவது சாதாரண காரியம்!

## தொலைபேசி ஒட்டுக்கேட்பவரின் மரணத் தகவலை ஒட்டுக்கேட்டுத் தெரிந்த கதை

1971 ஆண்டுப் பகுதிகளில் எழுத்தில் ஆர்வமும் சிறுவயதிலிருந்தே அரசியலில் முற்போக்குக் கொள்கையுமுடைய சில அன்பர்கள் யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் கடமையாற்றியதால் தொலைபேசி அழைப்புக்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 'ஈழநாடு' மேலதிகாரிகளின் உதவியை நாடவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவ்விதமானவர்களில் ஒருவர் என்நெஞ்சிலிருந்து நீங்காத நண்பர் குணரத்தினம்!




பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிடும் போது அக்குழந்தைகளின் குணாதிசயங்கள் இப்படித்தான் இருக்கும் என்று எப்படி படித்தான் கணிக்கிறார்களோ தெரியவில்லை. உண்மையில் குணத்தில் அவர் ஒரு இரத்தினம்தான்! 'ஈழநாடு' அருகிலுள்ள வைத்தீஸ்வர வித்தியாலத்துக்கு முன் செல்லும் அபூபக்கர் வீதியில் அமைந்திருந்த கணித கல்லூரியில் 1963ம் ஆண்டளவில் இவர் சிறிது காலம் சேவையாற்றியவர் என்பதால் அவருடன் எனக்கு நெருங்கிய நட்பிருந்தது. யாழ்ப்பாணத்திலேயே நீண்ட காலமாக வசித்து வந்த தன் தந்தை புங்குடுதீவில் பிறந்தவர் என்பதற்காக மட்டும் - புங்குடுதீவு என்ன நிறம் என்றுகூடத் தெரியாவிட்டாலும் தன்னை ஒரு 'தீவான' என்று பெருமையுடன் கூறிக் கொள்ளும் தன்மையுடையவர். சிறு வயதிலிருந்தே முற்போக்குச் சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த குணரத்தினம் பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராயிருந்தார். ஒரு முறை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்தபோது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்னால் அமைந்திருந்த அமெரிக்கத் தகவல் நிலையத்திலிருந்து காரில் புறப்பட்டு ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்து கொண்டிருந்தபோது அமெரிக்கத் தூதுவருக்கு 'முட்டை' வீசிய குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட துணிச்சலுள்ள இளைஞர் அவர். எந்தவொரு அரசியல் நிறுவனத்தின் பின்னணியிலும் இந்த முட்டை வீச்சு நிகழவில்லை என்றும், அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகநாடுகளில் தலைவிரித்தாட அனுமதிக்கமுடியாது என்றும் இவர் பொலிசாரிடம் கூறியதை பத்திரிகைகள் பெரிதுபடுத்தி செய்தி வெளியிட்டிருந்தன. அரசியலில் மட்டுமல்ல கலைத் துறையிலும் ஆர்வமுடைய அவர் பல நாடகங்களில் மேடையேறி அமோக வரவேற்பைப் பெற்ற கலைஞரும் கூட! இவ்விதமான பல்கலைச் சிந்தனையுடைய குணரத்தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திற்கு மாற்றலாகி வந்ததிலிருந்து தொலைபேசி இணைப்புக்கு நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை 'ஈழநாடு' வுக்கு இருக்கவில்லை. இரவு வேளைகளில் நான் கடமையிலிருக்கும்போது நள்ளிரவுக்குப் பின் என்னுடன் தொடர்பு கொள்ளத் தவறமாட்டார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பொலிசுக்கு வந்து கொண்டிருக்கும் சில முக்கிய தகவல்களைக் கூட ஒட்டுக் கேட்கக் கூடியவாறு 'ஈழநாடு' தொலைபேசியுடன் பொலிஸ் நிலைய இணைப்பை இணைத்துத் தருவது அவரது நாளாந்த வழமையாகயிருந்தது.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு நள்ளிரவுக்குப் பின் யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து குணரத்தினத்துடன் வேலைபார்ப்பவர் என்று தன்னை அறிமுகம் செய்த ஒருவர். காரைநகர் கடற்படையிடமிருந்து யாழ்ப்பாணம் பொலிசாருக்கு வந்து கொண்டிருந்த தொலைபேசிச் சம்பாஷனையை ஒட்டுக் கேட்குமாறு சொல்லி இணைப்பை




ஏற்படுத்தித் தந்தார். இந்தியக்கரையான இராமேஸ்வரத்துக்கு அண்மையிலிருந்து இலங்கைக் கடற்படையினர் யாழ்ப்பாணம் பொலிசாருடன் பேசிக் கொண்டிருந்த சம்பாஷனை அது. அதிவேக படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த மூவர் கடும் புயலில் அகப்பட்டு விபத்துக்குள்ளாகியிருப்பதாகவும் இருவரை உயிருடன் மீட்டுள்ளதாகவும், காணாமற் போன மூன்றாவது நபர் யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் கடமையாற்றும் 'குணம்' என்றழைக்கப்படுபவர் என்றும் கடற்படைத் தகவல் கூறியது. இச்செய்தியை என்னால் நம்பமுடியவில்லை. சனிக்கிழமை இரவு அதாவது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணியளவில் குணரத்தினம் யாழ்ப்பாணம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்தபடி என்னுடன் பேசியவர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதி ஒருவர் இணுவில் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தனது காதலுடன் பேசிக்கொண்டிருந்த காதல் குசுகுசுப்புக்களை ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அந்த இணைப்பை எனக்கும் தந்தவர். அப்படியானால் குணரத்தினம் எப்போது இந்தப் படகில் சென்றார்? இதற்கான விடையை என்னால் பெறமுடியவில்லை. கடற்படை - பொலிஸ் தொலைபேசி சம்பாஷனையை ஒட்டுக் கேட்கச் செய்த அன்பர் இது சம்பந்தமாக மேலும் சில தகவல்களைக் கூறியதும் அதிர்ந்து போனேன். அடிக்கடி மீன் வாங்குவதற்காக வல்வெட்டித்துறைக்குப் போய் வரும் வழக்கமுடையவர் குணரத்தினம் என்று அந்த நண்பர் சொன்னார். அச்சேறும் நிலையில் மெஷினில் தயாராகவிருந்த அடுத்த நாளைய பத்திரிகையை அச்சிடுவதை நிறுத்துமாறு (stop order) உத்தரவிட்டு நாச்சிமார் கோவிலடியில் உள்ள குணரத்தினத்தின் வீட்டிற்கு விரைந்தேன். அந்த நள்ளிரவு வேளையிலும் குப்பி விளக்கின் முன்னால் குணரத்தினத்தின் தகப்பனார் சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டிருக்கிறார். குணரத்தினத்தின் மனைவி ஒரு வயது மட்டும் நிரம்பிய தனது ஐந்தாவது பிள்ளையைத் தாலாட்டிக் கொண்டிருக்கிறார். விஷயத்தைச் சொல்லாமல் “குணரத்தினம் நிற்கிறாரா” என்று விசாரித்தேன். “வல்வெட்டித் துறையில் அவருக்குத் தெரிந்த ஒரு முதலாளி இருக்கிறார். மீன்வாங்கி வருவதாய் போனவரை இதுவரை காணவில்லை. அவரது வரவை எதிர்பார்த்து கண்விழித்தபடி இருக்கிறோம்” என்று தகப்பனார் சொன்னார்.

நான் ஒட்டுக் கேட்ட தகவல் ஊர்ஜிதமாயிற்று. ஆனாலும் இதை எப்படி அவர்களுக்கு சொல்ல முடியும்? எனக்கு எப்படி இத்தகவல் கிடைத்தது என்று என்னை பொலிசில்கூட மாட்டி விடலாம் அல்லவா? எதுவுமே சொல்லாமல் பத்திரிகாலயம் திரும்பி 'மீன் வாங்கச் சென்ற இளைஞர் கடலுக்குப் பலி' என்ற தலைப்பில் செய்தி யொன்றைப் பிரசுரித்து விட்டு - மறுநாட் காலை 10 மணியளவில் மீண்டும் அவரது வீட்டுக்குச் சென்றேன். அங்கே 'செத்த வீடு' நடந்து கொண்டிருந்தது. எனக்கு எப்படிச் செய்தி கிடைத்ததென்ற வியாக்கியானம்

அந்நேரத்தில் அங்கு எழவில்லை. மறு நாளிரவு ஒட்டுக் கேட்க உதவியவர் தன் பெயரை எச்சந்தர்ப்பத்திலும் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.




## பத்திரிகையாளர் பாஸ்போட் தந்த அனுபவம்

தொலைபேசிச் செய்திகளை ஒட்டுக்கேட்டது சம்பந்தமாக மற்றொரு அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளுகின்றேன். ஒரு நாளிரவு கடமையிலிருந்தபோது கிரேக்க நாட்டுக்குச் சொந்தமான கப்பலொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனது சகோதரன் கண்ணனிடமிருந்து ஒரு தந்தி வந்தது பம்பாய்த் துறைமுகத்திற்கு தான் வேலை செய்யும் கப்பல் வந்துசேர இருப்பதாகவும். பம்பாயில் தன்னை சந்திக்குமாறும் தந்தி கூறியது. தந்தி கிடைக்கப்பெற்ற மறுநாள் தந்திப் பரிவர்த்தனை நிலையத்தில் தலைமை ஊழியராகக் கடமையாற்றுபவரெனத் தம்மை அறிமுகம் செய்து கொண்ட ஒரு பெண்மணி தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு அந்தத் தந்தி பற்றி விசாரித்தார். முதல் நாள் பட்டு வாடா செய்யப்பட்ட தந்திகளைப் பதிவு செய்து கொள்ளும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது 'மரியா.எம்' என்ற கப்பலிலிருந்து கொழும்பு ரேடியோ ஊடாக எனக்கு ஒரு தந்தி வந்திருப்பதை அவதானித்ததாகவும் அதே கப்பலில் தமது கணவர் திரு. புவனேந்திரன் வானொலி உத்தியோகத்தராக (Radio officer) கடமையாற்றுவதாகவும். நான் பம்பாய் செல்லும்போது தானும் கூடவே என்னுடன் பம்பாய் வர ஏற்பாடு செய்யமுடியுமா என்றும் கேட்டுக்கொண்டார். என் மனைவியும் நானும் திருமதி புவனேந்திரனும் இந்தியப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டு பிரயாண ஒழுங்குகளை கவனிக்கத் தொடங்கினோம். எடுத்த எடுப்பிலேயே திருமதி புவனேந்திரனுக்கு இந்தியத் தூ தரகம் விசா வழங்கிவிட்டது. எனக்கு விசா உடனடியாகத் தரமுடியாதென்றும், டில்லியுடன் தொடர்பு கொண்ட பின்னரே விசா வழங்கமுடியுமென்றும், இதற்கு இரண்டுவாரங்கள் தாமதமாகும் என்றும் தூதரகம் சொல்லிவிட்டது. காரணம் விசாரித்ததில் முதல் நாள் இரவிலிருந்து இந்தியாவில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருப்பதாகவும் பத்திரிகைத் தணிக்கை அமுல் செய்யப் பட்டிருப்பதால் குறிப்பாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்படவேண்டும் என்றும் இந்திய தூதரகம் சொன்னது. நினைத்த நேரத்தில் எப்படி எப்படி எல்லாம் இந்தியாவுக்கு அடிக்கடி நம்மவர் போய் வருவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்கு ஏற்பட்ட இந்தத் தடை என்னை மிகவும் வாட்டியது. பத்திரிகையாளன் என்றில்லாமல் வேறெந்தத் தொழிலையும் பாஸ்போட்டில் பதிவு செய்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது என்பதை




உணர்ந்தேன். பத்திரிகையாளர்களுக்கு எங்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு சகல இடங்களிலும் காரியத்தை கச்சிதமாக முடித்துவிட 'பத்திரிகையாளன' பதவி உதவுவதுதான் வழமை. ஆனால் அவசரகாலச்சட்டம் அமுலில் உள்ள எந்தவொரு நாட்டிலும் பத்திரிகையாளர்கள் கண்காணிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. எனது பொல்லாத நேரம் முதல் நாளிலிருந்து இந்தியாவில் அவசரகாலச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

ஒரு நாட்டில் குழப்பம் ஏற்படும்போது சண்டையை அடக்க அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்படுவது வழமை. இராணுவத்தை சேவைக்கு அழைப்பதற்கு மட்டுமல்ல பத்திரிகைத் தணிக்கை செய்யப்படவேண்டுமென்றாலும் முதலில் அவசரகாலச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டியது விதி. இந்தியாவில் அப்போது இந்திரா காந்தி பிரதமராக விருந்த காலம். அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி பத்திரிகைத் தணிக்கையை அமுல் நடத்தியிருந்த நேரமது. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை உள்ளே அனுமதிப்பதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்ததினால் நானும் அதற்குள் அடங்கினேன். 'ஈழநாடு' ஆசிரியராக இருந்த திரு. ஹே.பி.ஹரன் அவர்கள் இந்தியப்பிரஜை. அவரது செல்வாக்கின் மூலம் இந்தியத் தூதுவராக அப்போது கடமையாற்றிய திரு.இ.ராமநாதன் ஐயர் அவர்களுடன் தொடர்பு கொண்டு எனது நிலைமையை நேரில் விளங்கப்படுத்தினேன். இதனால் டில்லியிலிருந்து பெறப்படவேண்டிய பதிலுக்கு இரண்டு வாரங்கள் பொறுத்திருக்காமல் மூன்றே நாட்களில் 'டெலக்ஸ்' மூலம் அனுமதி கிடைத்தது. 'எந்தவொரு அரசியல் தலைவர்களையும் சந்திக்கக்கூடாது. இந்தியாவில் தங்கக்கூடிய விலாசங்களின் விபரம் முன்கூட்டியே தரப்படவேண்டும்' என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டு விசா கிடைத்தது. இந்திய விசா பெறுவதிலிருந்த கஷ்டத்தைவிட சென்னை செல்வதற்கான விமானத்துக்கு ஆசனம் 'றிசேவ' செய்வதில் நான் பட்ட துன்பம் ஏன்தான் இந்தப் பயணம் என்றாகிவிட்டது. யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகத்துக்கு முன்னால் இருந்த 'எயர் சிலோன்' கந்தோருக்கு தினமும் ஆகக்குறைந்தது நான்கு தடவைகள் அலைந்து திரிந்து கடைசியில் அடிக்கடி இந்தியா சென்று திரும்பும் ஒரு வியாபாரி ஊடாக இரண்டு ஆசனங்கள் கிடைத்தன.

விமானத்தில் ஏறி ஆசனத்தில் அமர்ந்து விட்டோம். எனக்கும் மனைவிக்கும் விமானத்தில் ஏறுவது இதுதான் முதல் தடவை. (திருமதி புவனேந்திரன் ஏலவே சென்னை புறப்பட்டு விட்டார்) எங்கள் பிள்ளைகளைக் கூட்டிவரவில்லையே என்று ஒரு பக்கம் கவலை. அதே வேளை பிறநாடொன்றுக்கு முதற்தடவையாகப் போகின்றோம் என்று மறுபக்கம் எம்மை அறியாத சந்தோஷம்.




விமானம் புறப்படுவதற்கு இன்னும் சிலநிமிட நேரங்கள்தான் இருக்கிறது. ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் குடிவரவு (Immigration) உத்தியோகத்தர்கள் சிலரும் நான் அமர்ந்திருந்த ஆசனம் நோக்கி வந்து “காசிலிங்கமா?” என்று வினாவினர். “ஆம்” என்று நான் கூறப்போகும் பதிலுக்கு காத்திருக்கவில்லை. என்னை கீழே இறங்கிவருமாறு உத்தரவிட்டனர். எனது மனைவியும் கூடவே என்னுடன் தொடர்ந்தார். நம் நாட்டு விமான நிலையங்களில் நடக்கும் “இமிகிரேசன்” விதிமுறைகள் நம்மில் பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை. அண்டை நாடான இந்தியாவிலும் கூட இலங்கை மாதிரியான முறைதானிருக்கிறது. உதாரணமாக ஒரு பயணி வெளிநாடு புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். விமான நிலையத்தில் 'இமிகிரேசன்' சோதனையெல்லாம் முடிந்து அவர் விமானம் ஏறுவதற்கு அனுமதிக்கப்பட்டுவிட்டார். இப்படி சகல பயணிகளும் சோதனை முடிந்து ஏறிவிட்டனர். விமானம் புறப்படுவதற்கு முன் அனுமதிக்கப்பட்ட சகல பயணிகளினதும் விபரங்களை 'இமிகிரேசன்' தலைமை அதிகாரி பார்வையிட்ட பின்னரே விமானம் புறப்படும். இவ்விதமாக தலைமை அதிகாரி அன்றைய பயணிகளின் விபரங்களைப் பார்வையிட்டபோது தேடப்பட்டுவரும் காசிலிங்கம் என்பவர் ஒரு பத்திரிகையாளர் என்ற போர்வையில் தப்பியோட முயல்கிறார் என்று 'கண்டுபிடித்திருக்கிறார்' இதனால்தான் விமானத்திலிருந்து நான் இறக்கப்பட்டேன். தேடப்பட்டுவரும் காசிலிங்கம் நானில்லை என்றறிந்தபின் - எனது பிரயாணம் தொடர அனுமதிக்கப்பட்டேன். சென்னை விமானநிலையம் சென்றடைந்து விட்டோமென்றால் அங்கும் நான் வெளியே செல்ல உடனடியாக அனுமதிக்கப்படவில்லை. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயம் விதித்த அதே கட்டுப்பாடுகளுடன் நாம் தங்கக் கூடிய விலாசவிபரங்களை பதிவு செய்தபின் வெளியே செல்ல அனுமதித்தனர். மாலை 6 மணியளவில் சென்னை 'கல்பனா ஹோட்டல்' சென்றடைந்தோம். அக்காலத்தில் தமிழ்நாட்டில் எமக்குத் தெரிந்த எவருமிருக்கவில்லை. நாம் இந்தியா வரும் தகவலை அறிவதற்கு ஆர்வம் கொள்வதற்கு அங்கு யாருமில்லை. ஆனால் சுமார் ஏழு மணியளவில் ஹோட்டல்காரரிடமிருந்து வந்த தகவலில் யாரோ எம்மைத் தொலைபேசியில் விசாரித்ததாகச் சொன்னார்கள். பத்திரிகைத் தணிக்கைச் சட்டத்தை எவ்வாறு தீவிரமாக அமுல் நடத்த இந்திய அரசு விரும்பியது என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா? நாம் இந்தியா வந்ததே பம்பாய் வரவிருக்கும் சகோதரனைப் பார்ப்பதற்கு! பம்பாயிலுள்ள 'மரியா எம்' கப்பல் ஏஜென்சியுடன் தொடர்பு கொண்டு கப்பல் எப்போது துறைமுகம் வந்துசேரும் என்று விசாரித்தோம். ஓடிக்கொண்டிருக்கும் ஒரு கப்பல் அருகில் உள்ள நாட்டின் வானொலித் தொடர்பைப் பெற்றுக்கொள்ள முப்பது மைல் தொலைவுக்குள் வந்து சேர்ந்த பின்னரே அது சாத்தியமாகும். ஆனால் இது வரை தகவல் கிடைக்கவில்லை




என்றும் இதனால் எப்போது வந்து சேரும் என்பது குறித்து திட்டவட்டமாகச் சொல்ல முடியாதென்றும் கப்பல் ஏஜெண்ட் கூறிவிட்டார். கொழும்பு வானொலி ஊடாக எமக்கு அனுப்பப்பட்ட தகவல் கிடைத்து பத்துநாளுக்கு மேலாகி விட்டதே. பம்பாய் துறைமுகத்தைச் சென்றடைய இவ்வளவு நாட்களா? மேலும் சென்னையில் தங்கிநிற்க எமது உடல்நிலை இடம்தரவில்லை. இலங்கை திரும்பினோம். 'இந்திய யாத்திரை, எப்படி எப்படியோ செல்கிறார்கள் நான் இப்படித்தான் சென்றேன்' என்று ஈழநாட்டில் தொடர் கட்டுரை ஒன்றை எழுதினேன். கட்டுரை எழுதி முடிந்த மறுவாரம் திருமதி புவனேந்திரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு திடுக்கிடும் தகவல் ஒன்றைத் தெரிவித்தார்.

எங்கோ ஒரு நாடொன்றுக்குச் சென்றுகொண்டிருந்த கப்பலில் தீ பரவிக்கொண்டதாகவும் அருகில் வந்து கொண்டிருந்த கப்பலின் உதவியுடன் ஊழியர்கள் கரை சேர்ந்ததாகவும் திடீரென ஏற்பட்ட பயத்தினால் கடலில் குதித்த ஒரு ஊழியரை பிரமாண்டமான மீன் ஒன்று இழுத்தச் சென்றது ஊழியர்கள் பார்த்ததாகவும் தமது கணவர் கரை சேர்ந்த பின் இத்தகவலை வானொலியில் சொன்னார் என்றும் கூறினார். தமது வீட்டுக்குக் கொண்டு வருவதற்காக எங்கெங்கு கப்பல் சென்றதோ அங்கெல்லாம் வாங்கப்பட்டு கப்பலில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த சகல பொருட்களும் நாசமாகிவிட்டதென்று அவர் தனது வயிற்றெரிச்சலை என்னுடன் பகிர்ந்து கொண்டார். இனிமேல் சேவையில் ஈடுபடமுடியாத பழைய கப்பல்களை, கப்பல் சொந்தக்காரர் திட்டமிட்டு, இவ்விதமான தீ விபத்துக்களை ஏதாவதொரு நாட்டுக்கு அண்மையில் உயிரைப் பாதுகாக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கும் வேளையில், 'தீவிபத்துக்களை' ஏற்படுத்தச் செய்வதும், இதன் விளைவாக காப்புறுதி மூலம் பெருந் தொகையான நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்றும் பின்னர் அறிந்தேன்.

## சிறில் மத்தியூவின் கொள்கையில் நாட்டமுள்ள பிக்குகள் கோஷ்டி!

சிறில் மத்தியூவின் கொள்கையில் நாட்டமுள்ள "சிங்களம் மட்டும் சட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டபோது 1956ல் முதல் தடவையாக வெடித்த இனக்கலவரம் முதல் இன்று வரை நமது தாயகத்தில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களுக்கு மறைமுகமான 'தீவிரவாதிகளாக' பௌத்த பிக்குகள் இருந்து வந்துள்ளனர் என்பது வரலாற்று உண்மை. தமிழரின் நியாயமான




உரிமைகளை வழங்க வேண்டும் என்று அவ்வப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் தீர்மானிக்கும்போது அவற்றுக்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தி இனக்கலவரத்தை கட்டவிழ்த்து விடுவது இவர்களுக்குக் கைவந்த கலை. தமிழை தேசிய சிறுபான்மை இனத்தவரின் மொழியாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகவும் ஏற்றுக்கொண்டு கல்வி குடியேற்றத் திட்டங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் அதிகாரங்களைக் கொண்ட பிரதேச சபைகளை அமைப்பதற்கான யோசனைகளையும் 1957ல் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் மூலம் வழங்குவதற்கு அப்போதைய அரசு முன்வந்தபோது அதனை எதிர்த்து ஜே.ஆர். தலைமையில் நடந்த கண்டி பாதயாத்திரையில் பௌத்த பிக்குகளின் பங்களிப்பை நாம் மறந்து விட முடியாது. வாகனங்களின் இலக்கத் தகட்டில் உள்ள சிங்கள சிறீ எழுத்தைத் தார்பூசி அழிக்க வேண்டும் என்று சிறீ எதிர்ப்பு இயக்கம் யாழ்ப்பாணத்தில் தலைதூக்கியபோது பண்டார நாயக்காவின் வீட்டைச் சுற்றி வளைத்த பிக்குகள் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அமுல் நடத்த விடாது தடுத்து நிறுத்தியவர்களும் பௌத்த பிக்குகளே!

23 மே, 1958 இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு கொழும்பு, மட்டக்களப்பு, பொலநறுவை, பதுளை, குருநாகல், காலி, மாத்துறை போன்ற பகுதிகளில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்கள் கொல்லப்பட்டு அகதிகளாக்கப்பட்டதற்கும் பிக்குகளே முன்னணி வகித்தனர். இவ்விதமாக காலத்துக்குக் காலம் நமது நாட்டு கலகங்களுக்கு காரண கர்த்தாக்களாயிருக்கும் பிக்குகளை, இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ஒருமுறை புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்த அனுப்பியதிலும் பின்னணி இல்லாமலில்லை. புலிகளுடன் இணைந்து அவர்கள் விரும்பும் சில முக்கிய விடயங்களுடன் ஒத்துப்போக பிரேமதாசா விரும்பினாலும், இதனை எதிர்த்து நிலைமையை மோசமடையச் செய்யும் 'வல்லமையுடைய' பிக்குகளை சமாதானத் தூதுக்குழுவாக பிரேமதாசா பயன்படுத்தியதும் ஒரு ராஜதந்திரம் என்று சொல்ல வேண்டும்.

பாரிஸ் மாநகரில் அகதிகளுக்காக விசாரணை நடத்தும் அமைச்சு அலுவலகத்திலும் அப்பீல் நீதிமன்றங்களிலும் பிக்கு உடையில் அடிக்கடி ஒருவரை நான் சந்திப்பதுண்டு. சிங்கள அகதிகளுக்கு மொழிபெயர்ப்பாளராக உதவும் வழக்கமுடையவர் இவர். யாழ்ப்பாணத்துக்கு பிக்குகள் குழுவொன்று சமாதானப் பேச்சுக்குப் போக இருக்கும் அச்சந்தர்ப்பத்தில் அவரது கருத்துக்களை அறிவது பொருத்தமானது என்பதால், அவரை அணுகினேன். 1985ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6ஆம் திகதி வெளியான 'சற்றேடேறிவியூ' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான முன் பக்கத் தலைப்புச் செய்தி ஒன்றை என்னிடம்




காட்டி தமிழ் மக்களிடம் தனக்குள்ள பற்றை எடுத்துக்கூறினார். 'சற்றேடே றிவீயூ' பத்திரிகையின் ஆசிரியரான எஸ். சிவநாயகத்துக்கு இந்தப் பிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அமைச்சர் சிறில் மத்தியூவும் சில பௌத்த பிக்குகளும் தமிழ் மக்களை சிங்களவரின் எதிரிகளாகக் கணிக்கிறார்கள். இந்நிலைமையை மாற்றுவதற்கு தமது தலைமையின் கீழ் பௌத்த பிக்குகள் குழுவொன்றை யாழ்ப்பாணத்துக்கு வர ஏற்பாடு செய்து தருமாறு கேட்டிருக்கிறார். ஆசிரியர் சிவநாயகம் இக்கடிதம் உண்மையிலேயே ஒரு பிக்குவிடமிருந்துதான் வந்திருக்கிறதா என்பதை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு கடிதம் ஒன்றை இவருக்கு அனுப்பினார். சிவநாயகத்துக்கு பௌத்த பிக்குகளுக்குள்ளும் இப்படியான நல்லெண்ணமுள்ள ஒருவர் இருக்கிறாரா என்ற ஆச்சரியம் எழுந்ததில் வியப்பில்லை. அதற்குக் கிடைக்கப் பெற்ற பதிலில் உண்மையிலேயே பௌத்த பிக்குவிடமிருந்து தான் அந்த அழைப்பு வந்தது என்பதனை ஊர்ஜிதம் செய்த சிவநாயகம் அக்கடிதத்தை 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியில் பிரசுரிக்காமல் வழமைக்கு மாறாக, அக்கடிதத்தை முன்பக்கத் தலைப்புச் செய்தியில் பிரசுரித்து, சமாதானத் தூதர்களை யாழ்ப்பாணம் எப்போதும் வரவேற்கும் என்று குறிப்பும் போட்டிருக்கிறார். அப்போது இருந்த நிலைமையில் பாதுகாப்புக் கருதி இந்தப் பயணத்தை மேற்கொள்ளவில்லை என்று கூறும் இந்த தேரோவிடம் பிக்குகளின் சமாதானத் தூது எந்தளவில் வெற்றியளிக்கும் என்று கேட்டேன்.

சிறில் மத்தியூவின் கோஷ்டியாக இவர்கள் ஏன் இருக்கக் கூடாது என்று மட்டும் அவர் பதிலளித்தார். அவர் கூறியபடியே புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத, திட்டங்களுடன் யாழ் சென்ற பிக்குகள் முதலைக் கண்ணீருடன் கொழும்பு திரும்பியிருக்கிறார்கள். சர்வதேச சமாதான ஆய்வு நிலைய ஆதரவில் ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கிலும் இவர் கலந்து கொண்டு தமிழரின் நலனுக்காகக் குரல் கொடுத்ததாகத் கூறினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் கலந்து கொண்ட ஒஸ்லோ மாநாட்டில், 1983 இனக்கலவரம் ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தங்கள் நிறுவனம் பல வகையில் உதவியதையும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் எதிரிகள் அல்ல என்பதையும் நிலைநிறுத்த பல கருத்தரங்குகளை நடத்தியது பற்றியும் இவர் சொன்னார். சிறில் மத்தியூவை குறை கூறிய அதே பிக்குகள் கோஷ்டி, இப்போது சந்திரிகாவுடன் சேர்ந்திருக்கும்போது, சிறில் மத்தியூ எதைச் செய்தாரோ அதே கொள்கை உடையவர்களாக இருக்கிறார்கள். இது புதிய தகவல். யாழ்ப்பாணம் நூலகத்தை எரிப்பதற்கு சிங்களக் காடையர்களை யாழ்ப்பாணம் கொண்டுசென்றவர்களில் அப்போதைய அமைச்சர் சிறீ மத்தியூவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சபாரத்தினம் சாகடித்த ஜேம்ஸ்




பெரியவர்களுடன் ஏற்பட்ட சந்திப்புக்களையும், அனுபவங்களை யும் இரை மீட்கும்போது மனதுக்கு ஓர் ஆத்ம திருப்தி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரியிலிருந்து ஓய்வு பெற்றதும் யாழ்ப்பாண 'ஈழநாட்டு' க்கு பிரதம ஆசிரியராகப் பணி செய்யும் பாக்கியம் திரு என். சபாரத்தினம் அவர்களுக்குக் கிடைத்தது. கல்வித் துறையில் நிபுணரான இவர், பத்திரிகைத் துறைக்கு எப்படி சேவை செய்யப் போகிறார் என்று ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சிலர் பேசிக் கொண்டார்கள். அவர்களது கணிப்பு ஒரு நாளிலேயே மறைந்தது. எடுத்த எடுப்பிலேயே அவர் எழுதிய தலையங்கம் காரசாரமாக அமைந்தது. செய்திகளுக்கு என்று ஈழநாடு வாங்கப்பட்ட நிலைமை மாறி தலையங்கங்களுக்காக ஈழநாடு வாங்க மக்கள் விழுந்தடித்தனர். இன்னுமொரு உண்மையையும் இச்சந்தர்ப்பத்தில் எழுதுவது பொருந்தும். தமிழ்ப் பத்திரிகையில் அவர் பணி புரிந்தாலும் தமிழில் அவருக்கு எழுதவராது. ஆங்கிலத்தில்தான் அவர் எழுதுவார். சிந்தனைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் அவருக்கு உதிக்கும். ஆங்கிலத்தில் எழுதப்பட்டதைப் பின்னர் அவரே தமிழில் மொழி பெயர்ப்பார். இதற்கு அவருக்கு சிறிது நேரம் எடுக்கும். தாம் எழுதிய தமிழாக்கத்தை உதவி ஆசிரியர்களிடம் கொடுத்து கருத்து மாறாமல் 'பத்திரிகைத் தமிழைப்' புகுத்தி அழகுபடுத்துமாறு கேட்டுக் கொள்வது அவரது வழமை. செய்தி ஆசிரியர் திரு. எஸ்.எம். கோபாலரத்தினம், உதவி ஆசிரியர் திரு. எஸ். சபாரத்தினம் (சசிபாரதி), உதவி ஆசிரியர் எஸ். பெருமாள், உதவி ஆசிரியர் செல்வி கதிரவேலு குணமணி ஆகியோர் அவரது எழுத்துக்களில் கைபோடாமலேயே அச்சுக்கு அனுப்பிவிடுவார்கள். என்னிடம் தரப்படும் வேளையில் மட்டும் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கைவைக்கப்பட்டிருந்ததை அவதானிக்கத் தொடங்கினார். இதனால் அவருக்கு என்னில் மதிப்பு உயர்ந்தது. தாம் எழுதியவற்றில் கைபோடக் கூடாது என்ற அச்சத்தில் - திருத்தஞ் செய்யாமல் அப்படியே சக உதவி ஆசிரியர்கள், அச்சுக்கு அனுப்புவது பற்றி என்னிடம் அவர் பல தடவை குறைப்பட்டதுண்டு. அவர்கள் அவ்விதம் நடந்து கொண்டமைக்குக் காரணமில்லாமலில்லை. அவருக்கு திடீர் திடீரென கோபம் வரும் - இதனை அவர்கள் தவிர்க்க விரும்பினர். 1972ம் ஆண்டு மார்ச் மாதம் - அப்போது என் இதயத்தில் பாரிய சத்திரசிகிச்சை நடந்தது. பிறப்பிலிருந்தே என்னுடன் வளர்ந்து கொண்டிருந்த இதயத்துவாரமொன்றை மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான பின் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் டாக்டர் ஸ்ரீபன், டாக்டர் வாலுப்பிள்ளை ஆகியோரின் திறமையினால் மீண்டும் உயிர் பெற்று 'ஈழநாடு' திரும்பியிருந்த




சந்தர்ப்பம் என்னைத் தனியாக அழைத்து “நீ உயிருடன் தப்பிவர வேண்டும் என்று ஆண்டவனிடம் மன்றாடினேன்”என்றார். “நீ மட்டும் துணிந்து என் எழுத்துக்களில் கை வைத்திருக்கிறாய். உன் திறமையைப் பாராட்டுகிறேன். வருங்காலத்தில் தனியாகவே ஒரு பத்திரிகையை நிர்வகிக்கும் தகுதி உன்னிடம் உண்டு”, என்று என்னை அவர் ஆசிர்வதித்தார். ஐரோப்பாவில் நான் பத்திரிகைப் பணிபுரிய அவர் தந்த ஆசியும் காரணமாக இல்லாமலில்லை. அவரிடமிருந்து கிடைத்த ஆசி எனக்கு அபரிமித துணிச்சலைத் தந்தது என்று கூறினாலும் மிகையாகாது. திரு. சபாரத்தினத்துடன் சேவையாற்றிய காலத்தில் பல ருசிகரமான சம்பவங்கள் நடந்தன. குறிப்பாக, 1971 சேகுவரா கிளர்ச்சியும் அரச வானொலியும் பத்திரிகைகளும் ஆற்றிய பங்குகள். இது பற்றி ஏற்கனவே பாரிஸ் 'ஈழநாடு' பத்திரிகையில் எழுதியுள்ளேன்.

வணக்கத்துக்குரிய ஜேம்ஸ் மேதரின் 60வது பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்ச்சியை அவர் இறந்து விட்டதாக தவறுதலாக யாழ் 'ஈழநாடு' பிரசுரித்த சம்பவமும், 'ஈழநாடு' பத்திரிகையை பார்வையிட்ட ஏனைய கொழும்பு பத்திரிகைகள் ஜேம்ஸ் மேதர் இறந்துவிட்டதாக Condolence கட்டுரைகள் எழுதிய சம்பவமும் என் மனதிலிருந்து நீங்காதவை. இறந்தபின் தனக்கு என்னென்ன நடக்கும் என்பதை உயிருடனிருக்கும் போதே அனுபவிக்கும் பாக்கியம் பெற்றேன் என்று ஈழநாடுவுக்கு ஜேம்ஸ் மேதர் மறுநாள் தோலைபேசியில் தொடர்பு கொண்டபோது தான் செய்தியில் ஏற்பட்ட தவறைத் தெரிந்து கொண்டோம். 'ஈழநாடுவை' 'காப்பி' அடித்த ஏனைய பத்திரிகைகளும் மேதரிடம் பின்னர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டன. தவறு எப்படி நேர்ந்தது என்பது பற்றி அடுத்தவாரம் எழுதுகிறேன். இச்செய்தியில் நேரடியாக சம்பந்தப்பட்ட உதவி ஆசிரியர்களில் ஒருவரான திரு. இ.கந்தசாமி தற்போது பாரிசிலும் மற்றொரு உதவி ஆசிரியரான திரு. எஸ். ஜெகதீசன் கனடாவிலும் இருக்கிறார்கள்.

## யாழ் சிறையில் றோகண விஜேவீரா

நானும் என் மனைவியும் மூத்த மகள் கலைச் செல்வியும் சென்னையிலிருந்து புதுடில்லி செல்லும் ரயிலில் பிரயாணம் செய்தபோது தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் இளம்பெண் - அவருக்கு என் மகளின் வயதிருக்கும் டில்லி வந்துகொண்டிருந்தார். 36 மணித்திலாய பிரயாணம் அது. அவர் ஒரு டாக்டர். பெயர் நளினி. பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது கணவர் டில்லியில் இராணுவ உயர் அதிகாரி. நாம் தங்கவிருக்கும் ஹோட்டல் விலாசத்தைக் கொடுத்தோம். மறுநாள் அவரது கணவருடன் எம்மைத்

தேடிவந்தபோது அவர்களுடன் டில்லியைச் சுற்றிப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது பிரதமர் இந்திராகாந்தியைச் சுட்டுக் கொன்ற சந்தேக நபர் டில்லிச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார். டில்லிச் சிறைச் சாலையை பாதுகாக்க தமிழ்நாடு பொலிசார் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

சிறைச்சாலையை தமிழ்நாடு பொலிசார் காவல் காக்கின்றனர் என்றறிந்ததும் அதனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அந்த இராணுவ அதிகாரியுடன் சிறைச்சாலை சென்றபோது சுமார் 2000 தமிழ் பொலிசார் சிறைச்சாலையில் சுற்றி முகாமிட்டிருந்ததைக் கண்டேன். பிரதான வாயிலில் மட்டுமல்ல, சிறைச்சாலை சுற்று வட்டாரம் அனைத்திற்கும் தமிழ்நாடு பொலிசார் காவலில் அமர்த்தப் பட்டிருந்தனர். ஹிந்தி மொழி பேசும் டில்லியில் தமிழ் பொலிசாரைக் கண்டதும் சந்தோஷமாயிருந்தது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டுப் பொலிசார்தான் திறமைசாலிகள் என்றும், கொடுக்கப்பட்ட கருமத்தைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமை அவர்களிடம்தான் இருக்கிறது என்றும் இதனால்தான் ஏனைய மாநிலங்களிலிருந்து பொலிசாரை அழைக்காமல் இந்திராகாந்தியைக் கொன்றவன் தப்பித்துப் போகாதவாறு தமிழ்நாட்டுப் பொலிசார் அழைக்கப்பட்டனர் என்றும் அறிந்தேன். தமிழர் மீது இந்திய அரசுக்கிருந்த நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாயிருந்த இச்சம்பவம் என்னை இலங்கை நினைவுகளுக்கு அழைத்துச் சென்றது. இலங்கையில் சிறீமாவோ அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்த றோகண விஜேவீராவை 1972ல் பொலிசார் கைது செய்த பின்னர் அவரை எங்கே காவலில் வைப்பது என்ற பிரச்சனை அரச மட்டத்தில் எழுந்தது. அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ தனது உத்தியோக வாசஸ்தலத்துக்கு முப்படைத் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தி, அப்போது யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிபராகவிருந்த திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் நேரடிக் கண்காணிப்பிலேயே விஜேவீராவை வைத்திருக்க விரும்புவதாகக் கூறியிருந்தார். டில்லியிலும் இந்திராகாந்தியின் கொலைஞனுக்குத் தமிழ்நாடு பொலிசார் காவலில் இருந்ததைக் கண்டதும் எனக்கு இச்சம்பவம்தான் ஞாபகத்திற்கு வந்தது. றோகணவிஜேவீரா 1972 பெப்ரவரியில் கைது செய்யப்பட்டதும் அவரை சிங்களப் பகுதியில் வைத்தால் சிறையிலிருந்து தப்பிச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம் என்று அரசு நம்பியது. அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணப் பகுதிதான் அப்போது பாதுகாப்பான பகுதியாகவும் இருந்து வந்தது. இதனால் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அதுவும் தமிழரான திரு. சுந்தரலிங்கத்தின் நேரடி கண்காணிப்பில் றோகணவிஜேவீரா வைக்கப்பட்டார்.

விஜேவீரா யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருந்தவேளை தமிழில் சரளமாகப் பேசப் பழகிக் கொண்டார் என்றும் திருக்குறளைக் கூட மனனம் செய்துள்ளார் என்றும் பின்னர் கேள்விப்பட்டோம். அப்போது 'ஈழநாடுவில்' செய்தி ஆசிரியராயிருந்தவர் கோபு என்ற திரு. எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள். 'ஈழநாடு' யாழ்ப்பாணத்தில் வளர்ந்துவர முக்கிய காரணமாகவிருந்தவரும் அவரே.

எந்தச் செய்தியை எப்படி, வெளியிட வேண்டும் என்ற 'வித்தை' வரப் பெற்றவர். மக்களுக்கு எப்படியான செய்தியை எவ்வெப்போது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கொடுக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். அவருடன் வேலை செய்து பல விடயங்களைப் படித்து ஒரு பத்திரிகையை பாரிசில் இன்று நண்பர்களுடன் சேர்ந்து நடத்தக்கூடிய திறமையை அவரிடம்தான் பெற்றுக் கொண்டேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

இவரின் ஏற்பாட்டின்பேரில் வேறு சில நிருபர்களுடன் றோகண விஜேவீராவை சிறைச்சாலையில் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது.

றோகண விஜேவீராவைக் காணப் போவதற்கு முன் ஒரு தடவை யாழ் கோட்டைக்குள் உள்ள அரசு விருந்தினர் தங்கும் கிங்ஸ் ஹவுசில் பிரதமர் சிறீமாவோவின் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் தற்போது அதே சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்த குற்றச்சாட்டின் பேரில் சிறை வைக்கப்பட்டிருக்கும் றோகண விஜேவீராவை அதே கோட்டைக்குள் பார்க்கக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தையும் நினைத்துப் பார்த்தேன்.

பிரதமர் சிறீமாவோ 1971ல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நேரம். கோட்டையில் பிரமுகர்களுக்கு இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். அந்த விருந்துபசாரத்துக்கு 'ஈழநாடு'வுக்கு அழைப்பு வந்தது. அப்போது, 'மக்கள் பிரதமர் சிறீமாவோ' என்ற நூலைத் தமிழில் எழுதி வெளியிட்டிருந்தவர் எம்மோடு 'ஈழநாடு'வில் உதவி ஆசிரியராக பணியாற்றிய திரு. ஈ.கே. ராஜகோபால். இதனால் 'ஈழநாடு' வுக்கு விசேடமான அழைப்பை பிரதமர் சிறீமாவோ அனுப்பியிருந்தார். அந்த விருந்துபசாரத்தில் சிறீமாவோவின் மூத்த மகள் சுனித்திரா, அவர் கணவர் ரூபசிங்கா (இப்போது பிரிந்திருக்கிறார்) ஆகியோரும் வந்திருந்தனர். திரு. ராஜகோபாலுடன் இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டேன். சிறீமாவோவின் ஆஜானுபாகுவான தோற்றம் இப்போதும் கண்முன் நிற்கின்றது. யாழ் கோட்டைக்குள் உள்ள கிங்ஸ் ஹவுசில் சிறீமாவோவைச் சந்திக்கச் சென்ற பின்னர் இரண்டாவது தடவையாக சிறீமாவோவின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற றோகண விஜேவீராவை சந்திக்க கோட்டைக்குச் சென்றோம்.

நாம் பத்திரிகையாளன் என்பதை அறிந்ததும் றோகண விஜேவீரா எம்முடன் பேசக்கூடிய சில நிமிடங்களுக்குள் தாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்லத் துடித்ததை உணர்ந்தேன். தமிழர்களை சிங்களவர்களின் எதிரிகளாக சிங்களவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. ஆனால் இங்கு என்னை பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம் மிக அன்பாகக் கவனிக்கின்றார். நான் செய்த புண்ணியம்தான் தமிழ்ப் பகுதிச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன் என்று ஆரம்பித்த றோகண விஜேவீரா 20,000 சிங்கள இளைஞர்களை அநியாயமாக சிறீமாவோ பண்டாரநாயக்கா கொன்று குவித்துவிட்டார். அவர்

இந்த இருபதினாயிரம் பேரையும் தனது எதிரிகள் என்று கூறிக் கொலை செய்தார். ஆனால் அவர்கள் வருங்கால சிங்களத் தலைவர்கள் என்பதை மறந்து விட்டார் என்று கூறினார். இதே கருத்தைத் தாம் சொன்னதாக பிரதமரிடம் நேரடியாக சொல்லி வைக்குமாறும் பொலிஸ் அதிபரிடம் தாம் கேட்டுள்ளதாக றோகண விஜேவீரா கூறினார். (அதே சிறீமாவோவின் மகள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் தற்போது ஜே.வி.பி. கூட்டுச் சேர்ந்துள்ளது மட்டுமல்ல, தமிழரின் பிரச்சனை தீர்வதற்கும் முட்டுக்கட்டை போடுகின்றது. 2002 பிப்ரவரி 22ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவும் நிரந்தரப் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டதை இந்த ஜே.வி.பி. எதிர்த்துப் பேசி வருகிறது.)

இவரைச் சந்தித்த அடுத்தடுத்த நாட்களில் பிரதமரின் வாசஸ்தலத்தில் கூட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் மாநாட்டில் சுந்தரலிங்கம் விஜேவீரா கூறிவிட்ட தகவலைத் தெரிவித்ததாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. அடுத்த சில தினங்களுக்குள் றோகண விஜேவீராவை நீதிமன்றம் முன் ஆஜர் செய்ய பிரதமர் சிறீமாவோ உத்தரவிட்டார். பிரதம நீதியரசர் திரு. எச்.என்.ஜி. பெர்னாண்டோ தலைமையில் கொழும்பு உயர்நீதிமன்றத்தின் முன் றோகண விஜேவீரா ஆஜர் செய்யப்பட்டபோது றோகண விஜேவீரா சார்பில் சட்டத்தரணி பாலாதம்பு ஆஜராகியிருந்தார். திரு. பாலாதம்பு நீதிமன்றத்தில் பேசிக் கொண்டிருந்தபோது குறுக்கிட்ட றோகண விஜேவீரா ஒரு சில நிமிட நேரம் நீதிமன்றத்தில் தனது கருத்துக்களை வெளியிட அனுமதி தருமாறு கோரினார். நீதியரசரும் அனுமதித்தார்.

எடுத்த எடுப்பிலேயே, “பொலிசார் அனைவரும் நாய்கள்” என்று உரத்த குரலில் கத்திய றோகண விஜேவீரா, “ஒருவரைத் தவிர” என்றார். அப்போது, “யார் அந்த ஒருவர்?” என்று நீதியரசர் கேட்கவே, அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கம்” என்று விளக்கமளித்தார் றோகண விஜேவீரா. “நான் யாழ்ப்பாணம் தவிர வேறெந்தப் பகுதிக்காவது சிறைவைக்க அனுப்பி வைக்கப்பட்டிருந்தால் நிச்சயமாகத் துன்புறுத்தப்பட்டிருப்பேன். ஆனால் தமிழரான சுந்தரலிங்கம் என்னை மிகவும் அன்புடன் கவனித்தார்” என்று அவர் சொன்னார். இவர் கூறியதை அப்போது சகல பத்திரிகைகளும் பிரமாதமாகப் பிரசுரித்தன.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியைச் சுட்டுக்கொன்றவரைச் சிறை வைத்த சிறைச்சாலையை காவல்காக்க தமிழ்நாடு பொலிசார் அழைக்கப்பட்டது போல இலங்கை அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்ற சிங்களவரைக் காவல்காக்கும் பொறுப்பு தமிழரிடம் கையளிக்கப்பட்ட சம்பவம் மறக்க முடியாததல்லவா?

# அனுரா பண்டாரநாயக்கா கூட்டத்தில் நுழைந்த தமிழ் இளைஞனின் ஆவேசம்

1972 இறுதியில் டாக்டர் அன்ரன் ஜெயசூரியா என்பவர் வடபகுதி சுகாதார அத்தியட்சகராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்தபோது அக்கட்சியில் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த டாக்டர் ஜெயசூரியா, தன் அரசியல் செல்வாக்கு மூலம் தன்னாலியன்ற சேவைகளை வடபகுதி மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று செயற்பட்டார். பொதுப்பணிகளில் அக்கறையுள்ள பல பொது ஸ்தாபனங்களை ஒன்றுதிரட்டி அவர்களின் ஒத்துழைப்புடன் வேகமாகப் பணியாற்றியவர். அப்போது ஆயுர்வேத வைத்தியத் துறைக்குப் பொறுப்பாகவிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த டாக்டர் க. மருதையனார் இவரது நெருங்கிய நண்பராகி, ஒத்துழைப்பு வழங்கினார். இவர் மூலமாக டாக்டர் ஜெயசூரியாவுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது.

தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பு, நாகரிகம் என்பனவற்றால் கவரப்பட்ட டாக்டர் ஜெயசூரியா அமைச்சு அதிகாரிகளை மட்டுமின்றி செல்வாக்குள்ள சிங்கள அரசியல் பிரமுகர்களையும் வட பகுதிக்கு அழைத்து, தமிழ் மக்கள் சிங்கள மக்களின் விரோதிகள் அல்ல என்பதை அவர்களுக்கு எடுத்தியம்புவதில் அக்கறைகாட்டி வந்தார்.

1972 தேர்தலில், பாராளுமன்ற வரலாற்றிலேயே 22 வயதில் பாராளுமன்றத்துக்குத் தெரிவானவர் என்ற பெருமையைப் பெற்றிருந்த திரு. மகிந்த ராஜபக்ஷாவுக்கு நாடு முழுவதிலும் பாராட்டு விழாக்கள் நடந்தன. டாக்டர் ஜெயசூரியாவின் நெருங்கிய நண்பரான இவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்திருந்தார். அவருடன் அனுரா பண்டார நாயக்கவும் வந்திருந்தார்.

அனுரா பண்டாரநாயக்கா, மகிந்த ராஜபக்ஷா ஆகியோரது விஜயம் அப்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபகுதி அமைப்பாளரான யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவுக்கு தெரியப்படுத்தப்படாததால் அது ஒரு அரசியல் பிரச்சனையாகக் கிளப்பப்பட்டது. இப்படியான பிரச்சனைகளைப் பெரிதாக்கி அரசியல் நடத்திய காலம் அது என்பதால் உடனடியாக அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்ட துரையப்பாவுக்கு, அவர்களது விஜயம் தனிப்பட்ட விஜயம் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் இருவருக்கும் விருந்தொன்றை அளிக்க டாக்டர் ஜெயசூரியாவிடம் அனுமதி கோரினார் துரையப்பா.

திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தில் சுமார் 25 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். நானும் கலந்து கொண்டேன். வைபவம் ஆரம்பமாவதற்கு முன்னர், துரையப்பா பிரமுகர்களை அறிமுகம் செய்து விட்டு அமர்ந்ததும் திடீரென அங்கு நுழைந்த இளைஞன் ஒருவன் துரையப்பாவின் ஆசனத்துக்கு

அருகில் அமர்ந்து அவருடன் ஏதோ இரகசியமாகப் பேசினான். சகலருடனும் அந்நியோன்னியமாகப் பழகும் சுபாவமுடையவரான திரு. துரையப்பாவுடன் தனிப்பட்ட முறையில் ஏதோ பேச அந்த இளைஞன் வந்திருப்பதாகவே அங்கிருந்தவர்கள் கருதிய போதிலும் அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக, திடீரென அந்த இளைஞனின் குரல் மாறியது.

"உங்கள் விருந்தைக் குழப்ப நான் இங்கு வரவில்லை" என்று தன் பேச்சை ஆரம்பித்து, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், முத்துக்குமாரசாமி, கலாயோகி ஆனந்தக் குமாரசாமி.. என்று பலரின் பெயர்களைக் குறிப்பிட்டு சிறு பிரசங்கமொன்றையே நடத்திவிட்டு அந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞன் வெளியேறிவிட்டான்.

ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கப்பட்ட காலமது. அழையா விருந்தாளியாக அங்கு நுழைந்த அந்த இளைஞனின் பேச்சுச் சுதந்திரத்துக்கு அப்போது இடமளிக்கப்பட்டது. பிரதமரின் மகனான திரு. அனுரா பண்டாரநாயக்கா அந்த வைபவத்தில் கலந்து கொண்டதால் பாதுகாப்புக்காக பொலிசார் கடமையில் இருந்த போதிலும் அவர்கள் விருந்து நடைபெற்ற மண்டபத்தில் இருக்கவில்லை. அந்த இளைஞரின் பேச்சு பற்றி பின்னர்கூட பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

ஆனாலும், அந்த இளைஞர் யாராக இருக்கலாம் என்பது பற்றி மட்டும் ஆராய்ந்தனர். அக்காலத்தில் அரசியலில் மட்டுமின்றி, மாணவர் அமைப்புகள், சமூக சேவை அமைப்புகளில் தொடர்புள்ளவர்களைக்கூட அனைவரும் அறிந்து வைத்திருந்தனர். ஆனால் சம்பந்தப்பட்ட இளைஞர் எவருக்கும் அறிமுகமில்லாதவராதலால் அவருக்கு 'பைத்தியம்' பட்டம் சூட்டப்பட்டு அந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இதில் மற்றுமோர் வியப்பு என்னவெனில், அந்த இளைஞரின் பேச்சு சிங்களவரான திரு. அனுரா பண்டாரநாயக்கா, திரு. மகிந்த ராஜபக்ஷா ஆகியோருக்கு மட்டுமன்றி அங்கு இருந்த தமிழர்களுக்குக்கூட புரியாததுதான். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் படித்தவர்கள், நிலப்பிரபுத்துக்கள் மட்டுமே வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்த காலத்தில் தமிழரான சேர் பொன். இராமநாதன் இலங்கையின் முதல் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். சிங்களவருக்கும் சிறுபான்மை இனத்தவர்களான முஸ்லிம்களுக்கும் இடையில் பிரச்சினை எழுந்தபோது அப்பிரச்சினை குறித்துத் தீர்வு காணும் பொருட்டு பிரித்தானியப் பாராளுமன்றம் வரை சென்ற சேர் பொன். இராமநாதன், தாமும் ஒரு சிறுபான்மையினத்தவர் என்பதை மறந்து பெரும்பான்மை இனத்தவரான சிங்களவருக்காகப் பேசினார். அவர் நாடு திரும்பிய போது சிங்களத் தலைவர்கள் அவரைத் தேரில் வைத்து இழுத்து கொழும்பு வீதிகளில் பவனி வந்தனர். அது போலவே தமிழர்கள் தெரிவு செய்து அனுப்பும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்களவருக்கு ஆதரவாக நடந்து அவர்களது செல்வாக்கைப் பெற்று ராஜபோக

வாழ்க்கை நடத்துகிறார்கள். இதற்கெல்லாம் முடிவு இல்லையா? என்றவாறு அந்த இளைஞனின் பேச்சு அமைந்திருந்தது.

1972-ல் அந்த இளைஞன் விடுத்த எச்சரிக்கை போலவே தமிழ்த் தலைவர்கள், அதாவது அரசுக்கு விசுவாசமாக நடந்து வந்தவர்களிற் பெரும்பாலானோர் காலத்துக்குக் காலம் மறைய வேண்டியதாயிற்று. 1972ம் ஆண்டிலேயே இளைஞர்கள் மத்தியில் தமிழ் மக்களின் நிலைகுறித்து தீவிரவாத சிந்தனைகள் தலைதூக்கிவிட்டதென்பதற்கு இச்சம்பவம் ஒரு சிறு துளி.

# சிங்கள இனவாதியை பத்திரிகையில் சாகடித்தேன்

உலகமே தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் விழித்தெழப் போகும் மக்களுக்குச் சமர்ப்பணமாக, பத்திரிகையாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்கள். அப்படி எத்தனை இரவுகள்! தூ ங்காத அந்த இரவுகளில் ஏற்பட்ட அனுபவங்கள் எத்தனை வேண்டுமானாலும் எழுதலாம். அந்த நாள் ஞாபகங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ளும்போது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

முப்பதாண்டுகளாகின்றன! 1971ல் ஒரு நாள் மாலை 6மணிக்கு வேலை தொடங்க வேண்டிய நான் வழமைக்கு மாறாக, சுமார் 45 நிமிடங்கள் முன்னதாக ஈழநாடு காரியாலயம் சென்றுவிட்டேன். கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மலைநாடுகளுக்கான வெளியூர் பதிப்புகளைச் செய்து முடித்த உதவி ஆசிரியர்கள் நாளைய பத்திரிகையை மெஷினுக்குக் கொடுத்துவிட்டு என்னைக் கண்டதும் கிளம்பி விட்டனர்.

அன்றைய தினம் திரு. நாகராஜன் அவர்கள் எனக்கு உதவியாக ஆசிரியப் பகுதியில் கடமையாற்றுகிறார். ஏதோ அலுவலாக வெளியில் சென்றவர், “காசி கே.எம்.பி. அவுட்! எப்படிச் செய்தி!” என்று கூறியபடி ஓடோடிவந்தார். இவர் இப்படிச் சொன்னதும் பால் வார்த்தது போலிருந்தது. ஒருவரது மரணத்தில் இவ்வளவு இன்பமா? என்று நீங்கள் நினைக்கலாம். ஒரு சாதாரண மனிதனுக்கும் பத்திரிகையாளனுக்கும் இதுதான் வித்தியாசம். ஒருவருடைய மரணத்தில் இன்பம் காண்கிறோம் என்பது அர்த்தமில்லை. அதனைச் செய்தியாக்கி மக்களுக்கு உடனுக்குடன் கொடுத்துவிட வேண்டுமென்ற துடிப்புத்தான் உண்மையான பத்திரிகையாளனுக்கு ஏற்படும்.

திரு.நாகராஜன் கூறிய இத்தகவல் என்னை உற்சாகப்படுத்தியது.

திரு.இ.நாகராஜன் அவர்கள் தமிழுலகம் மறக்க முடியாத கவிஞர்!

தமிழர்களின் பெருமைக்குரிய மாபெரும் மனிதர். மளமளவென்று கவிதைகளை எழுதித்தள்ளும் திறமை மிக்கவர். தமிழராக மட்டும் பிறக்காமல் ஐரோப்பிய நாடொன்றில் அவர் பிறந்திருந்தால் அவர் தன் எழுத்தால் லட்சம் லட்சமாக சம்பாதித்திருப்பார். தன் குடும்பத்துக்கு அவர் லட்சம் லட்சமாக விட்டுச் சென்றிருப்பார். "மதுரகவி" என்று பட்டமளித்து கௌரவித்தார்களே ஒழிய அவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அவருக்கு யாருமே அள்ளிக்கொடுக்கவில்லை. ஏன் கிள்ளியாவது கொடுத்திருக்கலாம். 'ஈழநாடு' அவரது கடைசிக் காலத்தில் தன்னோடு அணைத்துக் கொண்டு உதவி ஆசிரியராக்கியது. அந்தக் கவிஞரோடு பணியாற்றுகிற காலத்தில் எனக்கு நேரம் போவதே தெரிவதில்லை. அவ்வப்போது களைப்படைந்த நேரத்தில், கவிஞரின் அன்பான பேச்சு என்னை இதமாக்கி மீண்டும் ஒரு சுறுசுறுப்பைத் தரும்.

கே.எம்.பி மரணம் பற்றிய செய்தியை வானொலியில் கேட்டதாக நாகராஜன் கூறியதால் அதனை ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என்ற அவசியமிருக்கவில்லை. அதுமட்டுமல்ல, செய்தியை ஊர்ஜிதம் செய்யுமளவுக்கு நேரமிருக்கவில்லை. மாலை 5.30 க்கு பத்திரிகை அச்சேற்றப்பட வேண்டும். 6.15க்கு முன் அச்சாகிவிட வேண்டும். இரவு 7 மணி தபால் ரயிலில் கொழும்புக்கு அனுப்பப்பட வேண்டும். இதுதான் வழமையான வேலை திட்டம் செய்தியை அறிந்ததும் ஏனைய உதவி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு அச்சாகிக் கொண்டிருக்கும் பத்திரிகையை நிறுத்துமாறு (Stop Press) இயந்திர இயக்குநர்களிடம் உத்தரவிட்டேன். அன்றைய தினம் மறவன்புலவு சோதிலிங்கமும், கல்வியங்காடு செல்வரத்தினமும் அச்சுக்கோப்பாளர் பிரிவில் போர்மனாக இருந்தார்கள். யாழ்ப்பாணப் பதிப்புக்கு இச்செய்தியைப் போடலாம் இப்போது மெஷினை நிறுத்துவது அவசியமில்லை என்று இவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

கே.எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி ஒரு சாதாரண விடயமில்லை. யார் இந்த கே.எம்.பி.? எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் அரசியல் லாபம் தேடும் பொருட்டு தமிழர்களுக்கு எதிராக சிங்களவர் மத்தியில் இனவெறியைத் தூண்டிவிட்ட குறுகிய நோக்கமுடைய அரசியல்வாதி இவர். தனது பாரியார் குசுமா ராஜரத்தினாவுடன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தபோது தமிழர்களின் இரத்தத்தில் குளித்தால்தான் தனக்கு நிம்மதி என்று அரசியல் மேடைகளில் இவர் பிதற்றிய பேச்சுக்கள் இன்னமும்தான் பேசப்படுகின்றன. அது ஒரு வரலாற்று நிகழ்வாகிவிட்டது. தமிழரின் துரோகி என்று வர்ணிக்கப்பட்ட கே.எம்.பி. ராஜரத்னா சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி ஒரு சாதாரண விடயமில்லை. ஏற்கெனவே வெளியூர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த முன்பக்கத் தலைப்புச் செய்தியை அகற்றிவிட்டு கே.எம்.பி. ராஜரத்தினா சுட்டுக்கொலை என்ற தலைப்புடன் செய்தியை பிரசுரித்து கொழும்பு தபால் ரயிலில் பத்திரிகை அனுப்பப் பட்டாயிற்று.

கடைசி நேரத்தில் கிடைக்கப் பெற்ற முக்கியச் செய்தி

ஒன்றை பதினைந்தே நிமிடங்களுக்குள் பிரசுரித்துவிட்டேன் என்ற சந்தோஷத்தில் கவிஞருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு நல்லூர் கந்தனுக்கு ஒரு கவிதை எழுதச் சொன்னேன். சில நிமிடங்களுக்குள் படைத்துத் தந்த கவிதையை மறுநாள் உள்ளூர் பதிப்பில் பிரசுரித்தேன். நல்லூர்க் கந்தன் உற்சவம் அப்போது நடந்து கொண்டிருந்தது. இரவு 9 மணிக்கு கொழும்பு வானொலிச் செய்தியைக் கேட்ட எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. கே.எம்.பி. ராஜரத்னா சென்றுகொண்டிருந்த கார் மீது சிலர் சுட்டதாகவும், மயிரிழையில் அவர் உயிர் தப்பினார் என்றும் செய்தி கூறியது. தலையில் கைவைத்தபடி கவிஞர் மீது ஆத்திரப்பட்டேன். கே.எம்.பி. ராஜரத்னாவின் மரணச் செய்தியுடன் நாளைய பத்திரிகை இப்போது கொழும்பு ரயிலில் போய்க்கொண்டிருக்கிறது. அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எது என்பது தெரியாமல் தடுமாறினேன்.

அக்காலத்தில் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை செய்தி ஒலிபரப்பப்படுவது வழமை. மாலை 6 மணிக்கு ஒலிபரப்பான செய்தி அறிக்கையில் கே.எம்.பி. ராஜரத்னா இறந்து விட்டதாகவே தனக்குக் கேட்டது மாதிரி இருந்தது என்றார் கவிஞர்.

வானொலிச் செய்திகளில்தான் தவறு நடந்துவிட்டதோ என்ற அச்சம் எனக்கு எழுந்தது. இப்படி நினைப்பதற்குக் காரணமில்லாமலில்லை. பொதுவாக வானொலிச் செய்தியில் தவறு ஏற்படுவது குறைவு. ஆனால் ஒரு நாள் வேலை செய்து கொண்டிருந்தபோது நமது பாராளுமன்ற நிருபர் திரு. காமினி நவரத்தினா தொலைபேசியில் தந்த தகவல் ஒன்றுக்கும் அதே நள்ளிரவு வானொலியில் ஒலிபரப்பான செய்திக்கும் நேர் முரண்பாடாக இருந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

சிங்களவரான திரு. காமினி நவரத்தினா நாடறிந்த பத்திரிகையாளர், உள்நாட்டில் தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளுக்கு மட்டுமல்ல, பல வெளிநாட்டுப் பத்திரிகை நிறுவனங்களிலும் பணியாற்றியவர். காமினி தரும் செய்திகள் ஆணித்தரமானவை. தமிழர் - சிங்களவர் பிரச்சனைகள் எழும் போதெல்லாம் தமிழரின் நிலைப்பாடுதான் சரி என்ற வலுவான கருத்துடையவர். காமினி நவரத்தினா ஆங்கிலத்தில் செய்திகளைத் தருவது வழமை. அதனைப் புரிந்துகொள்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக செய்தி நேர் முரண்பாடாக இருக்கிறதோ என்றுகூட நான் நினைத்ததுண்டு. ஆனால் அவர் ஆங்கிலத்தில் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் என் மனதில் அப்படியே நின்றன. அவரிடமிருந்து கிடைக்கப் பெற்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தேன். அதேவேளையில், “வானொலிச் செய்தி இது” என்று தலைப்பிட்டு வானொலியில் கேட்டதையும் எழுதினேன். மறுநாள் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அன்றைய 'ஈழநாட்டு'ப் பத்திரிகையுடன் பாராளுமன்றம் சென்று 'ஈழநாடு' வெளியிட்ட செய்தியையும், இலங்கை வானொலி ஒலிபரப்பிய செய்தியையும் சுட்டிக்காட்டிப் பேசினார். பாராளுமன்றம் சம்பந்தப்பட்ட

செய்தியை ஈழநாடு சுட்டிக்காட்டியது குறித்துப் பண்டிதர் கா.பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் பாராட்டினார்.

இவ்வகையில், கே.எம்.பி. ராஜரத்தினா சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியிலும் முரண்பாடு காணப்பட்டதால் செய்தியை ஊர்ஜிதம் செய்யும்பொருட்டு கொழும்பு நிருபருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றபோது கொழும்பு தொலைபேசி இணைப்பு வேலை செய்யவில்லை என்று பரிவர்த்தனை நிலையம் சொல்லிவிட்டது. அப்போது தபாலமைச்சராக இருந்தவர் செல்லையா குமாரசூரியர்.

அமைச்சருடன் பேச வேண்டும் என்றால் முன்னுரிமை லைனில் அவருக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தருவார்கள். இதனால் அமைச்சர் குமாரசூரியருடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது கே.எம்.பி. ராஜரத்தினா காயங்களுடன் உயிர்தப்பிவிட்டார் என்று சொன்னார். உடனே கொழும்பிலுள்ள ஈழநாடு ஸ்தாபகரும், நிர்வாகியுமான திரு.கே.ஸி. தங்கராசா அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்து முடிந்துள்ள விஷயங்களைச் சொன்னேன். அவர் பத்திரிகையாளரின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். தினமும் பிரசவ வேதனையில் துன்பப்படும் நிலையில்தான் பத்திரிகையாளர்கள் சேவை செய்வதை அவர் நன்றாக உணர்ந்தவர். 'டைம்ஸ் ஒவ் சிலோன' பத்திரிகையின் ஸ்தாபகர்களில் ஒருவர். யாழ்ப்பாணத்துக்கென ஒரு தமிழ்ப் பத்திரிகை வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து ஈழநாட்டை ஸ்தாபித்த பெருமைக்குரியவர். வெளியூர் பதிப்புகள் அனைத்தையும் வெளியில் விடவில்லை என்று மட்டும் கூறிய அவர், அதிகம் 'றிஸ்க' எடுக்க வேண்டாம் என்றார். வெளியூர் பதிப்புகள் அன்றைய தினம் விநியோகம் செய்யப்படவில்லை. ஒன்றா - இரண்டா அனைத்துப் பத்திரிகைகளும் தீயிலிடப்பட்டதாக பின்னர் அறிந்தேன்.

தவறான செய்தியை என்னிடம் கூறிய கவிஞர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பதிலாக பொறுப்பாசிரியராக இருந்த என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டதாயினும் ஒழுங்கு நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக் கொண்டேன்.

# ஐ.நா.வில்
# தமிழீழப் பிரகடனம்

யாழ்ப்பாணத்திலிருந்து மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்ற மக்கள் நாளிதழாக வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம்!

பதினைந்து ஆண்டு காலம் இரவுப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியிருக்கிறேன். இப்போது நினைத்தாலும் “கனவாக இருக்கிறது.

நன்றாக இன்னமும் ஞாபகமாக இருக்கிறது.. அந்த நாள்.. 5-10-1978 ஒரு வியாழக்கிழமை! இரவு ஒரு மணி!

வவுனியாவுக்கு அப்பால், கொழும்பு, கண்டி, கிழக்கு மாகாணம் போன்ற பகுதிகளுக்கு அச்சான பத்திரிகைகளை தபால் ரயிலில் அனுப்பிய பின் மறுநாளுக்கான உள்ளூர் பதிப்புக்குக் கிடைக்கும் புதிய செய்திகளைப் பிரசுரித்து பத்திரிகையை வெளியிடுவது இரவுப் பொறுப்பு ஆசிரியரான என்னுடைய வேலை!

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை! வெள்ளியென்றால், வீடு முழுவதும் கூட்டிக் கழுவிப் பெருக்கி, நல்லூர் கந்தனிடம் சென்று திரும்பிய பின்னரே என் இல்லாள் துவாரகையின் சமையல் தயாராகும்! எனக்கும் இதனால் ஒரு பழக்கம் - வியாழக்கிழமை இரவு பத்திரிகையை நேரத்துக்கு முடித்துவிட்டு வீடு திரும்புவது வழக்கம்!

இரவு பன்னிரண்டு மணிக்கு மறுநாள் பத்திரிகை மெஷினுக்குப் போய்விட்டது. “மெஷின் புரூவ்“ வர ஒரு மணி நேரம் எடுக்கும். மெஷினில் அச்சான முதல் பிரதியே மெஷின் புரூவ்! அந்தப் பிரதியைச் சரிபிழை பார்த்து 'ஓகே' என்று இரவுப் பொறுப்பாசிரியர் கையொப்பமிட்ட பின்னரே, தொடர்ந்து அச்சுயந்திரம் வேலை செய்யும். அந்த முதலாவது பிரதிக்காகக் காத்திருந்தேன்! நள்ளிரவு கடந்து ஒரு மணியாகிவிட்டது. பி.பி.ஸி. உலக சேவையை வானொலியில் திருப்பியபோது 'செய்தியின் பின்னணி' ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

இலங்கைத் தமிழர் ஒருவர் ஐ.நா. சபையில் நடத்திய அமர்க்களம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார் ஒலிபரப்பாளர்!

பரபரப்பான அந்த விஷயம் பரபரப்பையே தேடித் திரியும் எனக்கு உற்சாகத்தைத் தந்தது. வீட்டுக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் மறந்துவிட்டது!

ஐ.நா. பொதுச் சபைத் தலைவர் இலங்கை வெளிவிவகார அமைச்சரைப் பேச அழைத்ததும் சம்பந்தமில்லாத ஒருவர் எழுந்து சென்று வேகமாகப் பேசத் தொடங்கிவிட்டார்! தமிழீழம் என்று கூறியதும் சபையில்

பரபரப்பு! ஒலிபெருக்கியைத் துண்டித்தனர்! ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் - பாதுகாப்பு அதிகாரிகள் மேடைக்குப் பாய்ந்தனர். அவரை அப்புறப்படுத்தினர். அதற்குள் அவர் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார்!

சில நிமிட நேரம் சபை அல்லோலகல்லோலப்பட்டதாகவும், அந்நபரை பாதுகாப்பு அலுவலர்கள் வெளியேற்றியபின் ஐ.நா. சபை மீண்டும் கூடியதாகவும் செய்தி கூறியது. அடுத்து ஒரு மணி நேரத்தில் ஒலிபரப்பாகும் பி.பி.ஸி. உலக சேவையில் நியூயார்க்கிலிருந்து பி.பி.ஸி. நிருபர் இச்செய்தி சம்பந்தமான மேலும் விவரங்களை நேரடியாகத் தருவார் என்றும் வானொலி சொன்னது.

ஐ.நா. சபையில் தமிழீழ பிரகடணமா? நம்பவே முடியவில்லை. 1978 தற்போதுள்ளதுபோல வேகமாக செயற்பட்ட காலமில்லை. அரசாங்கத்துடன் சேர்ந்து 'தலையாட்டும்' தமிழ்ப் பிரமுகர்களுக்கு “துரோகிகள்“ என்று பட்டஞ்சூட்டி, அவர்களையும், அரசுடன் வேலைசெய்யும் உயர் பொலிஸ் அதிகாரிகளையும் 'முடித்துக் கட்டும்' படலம் மட்டுமே இடையிடையே நடந்து கொண்டிருந்த காலமது! ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் உலக நாடுகளின் தலைவர்கள் அல்லது அவர்களது அமைச்சர்கள் மட்டுமே கலந்து கொள்வது வழமை. ஒரு முறை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் ஐ.நா. சபையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது தெரியும். அதுவும் நீண்ட காலமாக மத்திய கிழக்கு முஸ்லீம் நாடுகள் அரபாத்தை ஐ.நா. சபையில் பேச அனுமதிப்பதன் மூலம் அவரது கருத்துக்களை உலக மக்கள் அறிந்து பிரச்னையை எப்படித் தீர்க்கலாம் என்று உலக நாடுகளின் அபிப்பிராயத்தைப் பெற முடியும் என்று 30க்கு மேற்பட்ட நாடுகள் ஐ.நா. சபையில் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்ததின் எதிரொலியாகவே பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் பேசுவதற்கு அனுமதி கிடைத்தது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதுவும் தமிழரைப் பொறுத்தமட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டுமே தமிழரின் ஏகப் பிரதிநிதிகளாகயிருந்த காலமது. இவர்களை ஐ.நா. சபையில் பேச அனுமதிக்குமாறு குரல் எழுப்பப்பட்டதாகவும் செய்திகளில்லை. அப்படியிருக்க ஐ.நா. சபையில் பரபரப்பை ஏற்படுத்திய இந்தத் தமிழன் யார்?

அச்சாகிக் கொண்டிருக்கும் நாளைய பத்திரிகையை Stop Press செய்தேன். அச்சுக்கோப்பாளர்களின் போர்மனாக அன்றைய தினம் கடமையாற்றிய மறவன்புலவு பாலசிங்கத்தையும் ஆறுமுகசாமியையும் அழைத்து முன்பக்கச் செய்தியில் மேற்கொள்ளப்படவிருக்கும் செய்தி மாற்றம் பற்றிக் கூறினேன்.

அன்றைய தினம் ஐ.நா. நிகழ்ச்சிகளுக்கு கொலம்பியா நாட்டு பிரதிநிதி தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 150 உலக நாடுகளின் தலைவர்கள் இதில் கலந்து

கொண்டிருந்தனர். சுமார் 2000 பேர் பார்வையாளர் பகுதியில் இருந்தனர். காலை நிகழ்ச்சியில் சைப்பிரஸ் நாட்டுத் தலைவர் ஒரு மணி நேரமும், சூரினம் நாட்டுப் பிரதம மந்திரி ஒரு மணி நேரமும் பேசியதால் நண்பகல் இடைவெளிக்குப் பின்னர் இன்னுமொரு நாட்டுப் பிரதிநிதி மட்டுமே பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அது இலங்கைப் பிரதிநிதி - வெளியுறவு அமைச்சர் ஹமீட். இக்கூட்டத் தொடரில் கலந்து கொண்டிருந்தார். “இப்போது இலங்கைப் பிரதிநிதி பேசுவார்“ என்று ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டதும், ஒருவர் சபையிலிருந்து எழுந்து மேடை நோக்கிச் சென்றார். முறைப்படி சகலருக்கும் வணக்கம் தெரிவித்த அந்தப் பிரமுகர் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்கள் மீது நடத்திக் கொண்டிருக்கும் அட்டூழியங்கள் பற்றிப் பேசியது மட்டுமல்ல தமிழீழப் பிரகடனத்தைச் செய்து கொள்வதாகவும் அறிவித்தார்.

சிறீலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதி சிறீலங்கா அரசுக்கு எதிராகப் பேசுகிறாரே என்று அங்கு குழுமியிருந்த உலக நாட்டுத் தலைவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். அப்போதுதான் தானொரு தமிழன் என்றும், பெயர் கிருஷ்ணா வைகுந்தவாசன் என்றும், சிங்கள அரசாங்கத்தினால் நசுக்கி ஒடுக்கப்படும் ஓர் இனத்தைச் சேர்ந்தவன் என்பதால் தமது மக்கள் சார்பில் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை உலக நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக ஐ.நா. மண்டபத்துக்குள் அனுமதியின்றி நுழைந்ததாகவும் அவர் சொன்னார்.

நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் லண்டனில் வழக்கறிஞராகச் சேவை செய்து கொண்டிருந்த வைகுந்தவாசன் அமெரிக்க நியுயோர்க் நகரில் நடந்த வழக்கறிஞர்கள் சங்க மாநாடு ஒன்றில்கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த வேளை, ஐ.நா. சபை கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. பார்வையாளர்கள் கலரியில் இருந்து நிகழ்ச்சிகளை சில நாட்கள் அவதானித்திருக்கிறார். இவ்விதம் சில நாட்கள் அங்கு சென்றதால் பல நாடுகளின் தலைவர்களுடன் இவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. இதனால் கலரியில் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தவிர்த்து உலக நாட்டுத் தலைவர்கள் அமருகின்ற மண்டபத்துக்குள்ளேயே அவர் அமரத் தொடங்கினார். அப்போது ஐ.நா.வின் துணைச் செயலாளராகயிருந்தவர் இந்தியரான சி.வி. நரசிம்மன். இவர் ஒரு தமிழர். ஐ.நா.வின் பொதுச் செயலாளராகயிருந்த யூதான்ட் இறந்த போது அப்பதவிக்கு நியமனம் பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தவர் இத்தமிழரான நரசிம்மன். அவ்வளவு தூரம் ஐ.நா. சபையில் அதிக மதிப்புப் பெற்றிருந்தவர் அவர்.

இவருடன் வைகுந்தவாசன் சினேகிதமாகி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தை ஐ.நா. சபையில் பேசவைப்பதனால் சிறீலங்காவில் நசுக்கி ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் இன்னல்களை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தலாம் என்று கேட்டிருக்கிறார். இதற்கு நரசிம்மன், “நாட்டின் தலைவர் அல்லது அந்நாட்டின் பிரதிநிதிகள்

மட்டுமேதான் ஐ.நா. சபையில் பேச அனுமதி கிடைக்கும் - அமிர்தலிங்கம் பேசுவதற்கு அனுமதி கிடைப்பது கடினம். விரும்பினால் உலக நாடுகள் அமிர்தலிங்கத்தைப் பேசுவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று குரல் எழுப்ப வேண்டும். இவ்வித சந்தர்ப்பங்களை ஏற்படுத்தினால் மட்டுமே பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவருக்கு அனுமதி கிடைத்தது போல அமிர்தலிங்கத்துக்கும் ஐ.நா. சபையில் பேச அனுமதி கிடைக்கும்“ என்று நரசிம்மன் கூறிவிட்டாராம். அப்போது அமிர்தலிங்கம் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தவர். அரசாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் ஒருவரை ஐ.நா. சபையில் பேச வைப்பதென்பது இப்போதைக்கு நடக்கக்கூடிய காரியமில்லை என்பதை உணர்ந்துகொண்ட வைகுந்தவாசன் தாமே அழையாவிருந்தாளியாக நுழைந்து ஐ.நா. சபையில் இலங்கைத் தமிழ் மக்கள், சிங்கள அரசாங்கத்தால் அனுபவித்துவரும் தொல்லைகளை வெளிப்படுத்த விரும்பியதன் எதிரொலியே இந்தப் பேச்சு என்று இவரைப் பேட்டிகண்ட பி.பி.ஸி. நிருபர் செய்தியின் பின்னணியில் குறிப்பிட்டார்.

இந்த விவரங்களையெல்லாம் மறுநாள் பத்திரிகையில், ஐ.நா. சபையில் தமிழீழப் பிரகடனம், கூட்டத் தொடரில் அல்லோலகல்லோலம். யார் இந்த வைகுந்தவாசன்? என்று தலைப்பிட்டு முற்பக்கத்தில் கொட்டை எழுத்தில் செய்தியைப் பிரசுரித்தேன். மறுநாள் இலங்கைப் பத்திரிகைகள் மட்டுமல்ல இந்தியப் பத்திரிகைகளும், ஏனைய உலக நாடுகளின் பத்திரிகைகளும் வானொலிகளும், தொலைக்காட்சிகளும் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

# எனக்கு உயிர்தந்த ஐயனாருக்கு என் பணி

கொழும்பு பெரியாஸ்பத்திரி இருதய சத்திர சிகிச்சை வார்டில் நான் இருந்த காலத்தில், இருதய சத்திர சிகிச்சை செய்யப்பட்ட எட்டு பேரில் இருவர் மட்டுமே உயிர்தப்பினர். அதில் நானும் ஒருவன். எனது குலதெய்வம் ஐயனார் என்னைக் காப்பாற்றிவிட்டார். நான் செய்ய வேண்டிய மேலும் சில கடமைகள் இருக்கின்றன என்பதனால்தான் என்னை உயிர்தப்ப வைத்தார் என்று எப்போதும் நினைப்பேன்.

இலங்கையின் மிகப் பெரிய தேர் அனலைதீவு ஐயனார் கோயிலில்தான் இருக்கிறது. இந்தியச் சிற்பாசிரியர்களைக் கொண்டு சித்திரத் தேரை நிர்மாணிப்பதென முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்போது விசா பெற்றுக்கொள்வதிலிருந்த தடங்கலினால், விடயம் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சத்திர சிகிச்சை நடந்த சில வருடங்களுக்குப் பின், ஒரு நாள் மாவட்ட அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா அவர்கள், அப்போதைய மீன்பிடி

இலாகா டைரக்டர் செல்வி சத்தியபாமா இராமநாதன் அவர்களை அரசாங்க ஜீப் வண்டியில் என் வீட்டுக்கு அனுப்பி அனலைதீவுக்கு அருகில் உள்ள பருத்தித்தீவுக்குப் போக இருப்பதாகவும் (அப்போது பறவைகளின் சரணாலயமாக பருத்தித்தீவு பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது), என்னையும் தங்களுடன் வருமாறும் கேட்டிருந்தார். ஊர்காவற்றுறையிலிருந்து கடற்படையின் கப்பலில் பருத்தித்தீவு போனோம். பருத்தித்தீவுக் கரையை அந்தப் பெரிய கப்பல் சென்றடைய முடியாது. அதிலிருந்து சிறு படகுக்கு மாறிப் பயணம் செய்தே கரைக்குப் போக முடியும். நாங்கள் சென்ற தோணி நடுக்கடலில் விபத்துக்குள்ளாகிவிட்டது. தீவுப் பகுதி மக்கள் பிரயாணத்தில் அனுபவிக்கும் தொல்லைகளை அரசாங்க அதிகாரிகளும் நேரில் அனுபவித்தது மட்டுமல்ல, இந்த விபத்து எம்மை அனலைதீவுக்குப் போக வைத்தது. அப்போது அனலை தீவு ஐயனார் தேர்த் திருப்பணிச் சபையினர் (அந்த சபையில் நானும் ஓர் உறுப்பினர்) அரசாங்க அதிபர் குழுவினரைச் சந்தித்து இந்தியச் சிற்பாசிரியர்களை வருவிப்பதில் உள்ள விசா சிக்கல்களைப் பற்றி விளக்கினர். தற்போது கனடாவிலிருக்கும் கிராமசேவையாளர் சு. இரத்தினசபாபதி, சு. விசுவலிங்கம், மு.வே. மயில்வாகனம், சு. தயாபரராசா, அமரர் சு. நாகலிங்கம், அமரர் வைத்தியலிங்கம் ஆசிரியர், மு. சீவரத்தினம் ஆசிரியர், பிரான்சில் தற்போது இருக்கும் சி. காராளபிள்ளை ஆகியோர் அரசாங்க அதிபர் குழுவைச் சந்தித்தவர்களில் சிலர்.

அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் திரும்பியதும் விசாவுக்கான அனுமதி கிடைத்தது. திருத்தேரும் ஓடியது. இதில் மிகவும் துக்ககரமான விடயம் என்னவெனில், அல்லும் பகலும் பாடுபட்டு, சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கெல்லாம் சென்று பெருந்தொகை பணம் சேகரித்து இதற்காக உழைத்த சு. சிவபாதசுந்தரம் அவர்கள் தேர் வெள்ளோட்ட நிகழ்வின்போது உயிருடன் இல்லை. வெள்ளோட்ட விழா மலருக்கான ஆசிரியராகவும் நான் இருந்து பத்தே நாட்களில் அதனை வெளியிட்டேன். இதன்பின், புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் பத்திரிகைத் தொண்டு புரியவும் என்னால் முடிந்ததென்றால் இது ஐயனாரின் கிருபையே என்பது என் நம்பிக்கை.

எனக்கு உயிர்தந்த ஐயனாரது கோயில் சித்திரத் தேரை நிர்மாணிக்கும் வேலைகளில் மறைமுகமாக எனது பணியும் இருந்திருக்கிறது என்பதை நினைக்கையில், ஐயனார் இதற்காகத்தான் என்னை உயிர்தப்ப வைத்தாரோ என்று இன்றைக்கும் நான் நினைப்பதுண்டு.

# இவர்களை நினைவுகூர்கிறேன்




1969ல் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் 146ஆசிரியர் குழுவினருடன் நிர்வாக ஊழியர்கள 'ஈழநாடு' வில் நான் கடமையாற்றியபோது, பணியாற்றிய அண்ணன் கே. கணேசலிங்கம், மனோகரன் மயில்வாகனன், கே.ஜி. மகாதேவா, எஸ். சபாரத்தினம், எஸ். பெருமாள், ஈ.கே. இராஜகோபால், செல்வி குணமணி, புலவர் பூரணம், கா.யோகநாதன், எஸ். திருச்செல்வம், எஸ். மகாலிங்கசிவம், எஸ். ஜெகதீசன், கவிஞர் இ.நாகராஜன், நிர்மலா நாகநாதன், (ஆசிரியர் பீடம்), காலஞ்சென்ற இன்னாசி முத்து, கா.மாணிக்கம் (பின்னாளில் இவர் காரியாலய நிருபரானார்), காலஞ்சென்ற புலவர் கனகரத்தினம், (ஒப்பீட்டாளர் பகுதி). நாராயணசாமி, மு. ஆறுமுகசாமி, எம். பாலசிங்கம், சி. பாலசிங்கம், கிருஷ்ணமூர்த்தி, சோதிலிங்கம், வேலுப்பிள்ளை, சின்னய்யா, பாக்கியநாதன், சச்சிதானந்தம், தங்கவேலு, சற்குரு, துரைசாமி, கதிரவேலு, சிவநேசன், பத்மநாபன், தேவராஜா, சிவரத்தினம் (அச்சகப் பகுதி), கந்தசாமி, இம்மானுவேல், பாலசுப்பிரமணியம், குமாரசாமி, நடராஜா, (இயந்திரப் பகுதி), செல்வி பராசக்தி, மீனாட்சிசுந்தரம், கனகசபாபதி, ஈஸ்வரி, சீதாதேவி, திருமதி நாகராஜா, விதானையர் சிவசிதம்பரம், ராசலிங்கம் (நிருவாகப் பகுதி) ஆகியோரை நினைவு கூர்கிறேன். திரு. கே.பி. ஹரன் அய்யா அவர்கள், எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள், கல்விமான். ஏ.ஈ. தம்பர் அவர்கள்(யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூ ரி), மு. வைரமுத்து, (மகாதேசாதிபதி வில்லியம் கோபெல்லாவின் முன்னாள் நிரந்தரச் செயலாளர்), திரு. என். சபாரத்தினம் (இந்துக்கல்லூரி அதிபர்), திரு.து. சீனிவாசகம் அவர்கள் (முகாமையாளர்), மு.சிவானந்தன் அவர்கள் (அச்சகப் பகுதி இயக்குநர்) ஆகியோருடன் சேவையாற்றக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நினைத்து இவர்களை கௌரவிக்கிறேன். ஐரோப்பாவில் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட வேளைகளில் சகலவிதத்திலும் உதவிய அரியாலையைச் சேர்ந்த சண்முகலிங்கம் பாலசந்திரன், இணுவிலைச் சேர்ந்த 'வாப்பா', வைகுந்தவாசன், ஜெர்மனியில், அனலைதீவைச் சேர்ந்த நமசிவாயம், எனது சகலன் தெய்வேந்திரம் மார்க்கண்டு, எனது மைத்துனர் பொன்னுத்துரை தனபாலசிங்கம், லண்டனில் குமாரசாமி அழகன், குமாரசாமி மகேஸ்வரன் (இராசு), சட்டத்தரணி செல்லப்பா யோகராசா, சமுத்திர ரத்தினம், சுவிட்சர்லாந்தில் வசீகரன், எஸ்.கே. டிரேடிங் உரிமையாளர் எஸ். கே.ரி. நாதன், கனடாவில் நாகலிங்கம் சிவகுருநாதன், இத்தாலியில் சிவலிங்கம் ஆகியோருக்கும் தமிழ்நாட்டிலிருந்து கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதிவந்த பழ. நெடுமாறன் ஐயா அவர்களுக்கும், லண்டனிலிருந்து டாக்டர் இந்திரகுமார், த.சம்பந்தர், மற்றும் ஈழநாடு ஸ்தாபகர் கே.சி. தங்கராசா, பிரதம ஆசிரியர் கே.பி.

ஹரன், முகாமையாளர் து. சீனிவாசன் எழுத்தாளர் அகஸ்தியர், கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். குறிப்பாக, 'தமிழன' பத்திரிகைக்கு பல புனைப்பெயர்களில் அதிக விஷயதானங்களைத் தந்து, என் வேலைப் பளுவைக் குறைத்து, 'தமிழனை' ஒரு தரம்மிக்க பத்திரிகையாக வெளியிடுவதற்கு உதவிய சுவிட்சர்லாந்தில் வாழும் சக்கரவர்த்தி இராசலிங்கம் அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன்.

மருத்துவம் என்ற பக்கத்தை நிரப்பி, ஐரோப்பியவாழ் தமிழ் மக்களின் வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்த என் மருமகன் டாக்டர் குமார் தனபாலசிங்கம் அவர்களுக்கும் என் நன்றி. தமிழனில் சில காலம் இணை ஆசிரியராகவும் பணியாற்றி, அகதி வாழ்வின் அவலங்கள் மற்றும் காரசாரமான அரசியல் கட்டுரைகளை, எழுதி வந்த சிவாசின்னப்பொடி அவர்களுக்கும், ஜோதிடம் பக்கத்தை நிரப்பியது மட்டுமல்லாது, சமய சிந்தனை ஆக்கங்களையும் லண்டனில் இருந்து தந்து கொண்டிருந்த வி.எஸ். சுப்பிரமணியம் குருக்கள் அவர்களுக்கும் சிரி சிந்தி என்று எழுதிவந்த பேராசிரியர் சக்திப்புயல், கொழும்பிலிருந்து வேலிக்குப்பின்னால் என்ற அரசியல் விவரணங்களை எழுதிவந்த கந்தையா அண்ணரையும் அவுஸ்திரேலியாவிலிருந்து 'பாட்டி சொன்ன கதைகள்' என்ற தொடரை எழுதி அதற்கு நூலுருவம் கொடுத்தபோது, அந்நூலுக்கு என் அணிந்துரையைப் பெற்று மகிழ்ந்த எழுத்தாளர் லெ. முருகபூபதி அவர்களுக்கும் மானுட தரிசனங்கள் என்ற தொடரை எழுதிய மறைந்த மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்களையும், சிறிது காலம் 'தமிழன்' பத்திரிகையின் நிர்வாகியாக இருந்த பாக்கியராசாவையும் நினைவுகூர்கிறேன். ஐரோப்பாவில் எக்காலத்திலும் இனத்துவேசம் ஏற்பட்டு வெளிநாட்டவர்களையெல்லாம் நாட்டைவிட்டு வெளியேற்றும் சூழ்நிலை உருவாகும் என்பதை 'தமிழன்' பத்திரிகையூடாக மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு எனக்குக் கடிதம் எழுதிவிட்டு லண்டனிலிருந்து நாடு திரும்பிய, காலஞ்சென்ற கல்விமான் சி. சுப்பிரமணியம் அவர்களையும் நினைவுகூர்கிறேன்.

ஐரோப்பாவில் எனக்குக் கிடைத்த சிநேகிதங்கள் மறக்க முடியாதவை. 'தமிழன்' பத்திரிகையைக் குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட நேரம் வெளிக்கொணர என்னுடன் அல்லும் பகலும் உழைத்தவர்கள் பாரிசில் பாரதி அச்சக உரிமையாளர் இரா. சிறீதரன், தற்போது லண்டன் ஐ.பி.சி. வானொலியில் ஒலிப்பரப்பாளராக இருக்கும் எஸ்.கே. ராஜென், யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தட்டச்சராக கடமையாற்றிய திருமதி கணேசநாதன் குணவதியம்மாள், லண்டனில் ஜெயந்தி ஆகியோரையும் நினைத்துப் பார்க்கிறேன்.

**'ஈழம் முடிவில்லாப் பயணத்தில் முடியாத வரலாறு' நூலில், நூலின் ஆசிரியரும் ஈழநாடு முன்னாள் ஆசிரியருமான எஸ்.எம்.கோபாலரட்ணம் எழுதியது, இங்கு மறு பிரசுரமாகிறது.**



# ஈழநாடு

தமிழ் அரசுக் கட்சி காந்திய வழியில் அரசின் செயல்களை எதிர்த்து சாத்வீகப் போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்தின் முதல் தமிழ் தினசரி பத்திரிகையாக 'ஈழநாடு' வெளிவருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஈழநாடு பத்திரிகையை தினசரி பத்திரிகையாகக் கொண்டு வரவேண்டுமென்பதில் நான் மிக ஆர்வமாக இருந்ததுடன் மிக அவசரமாகவுமிருந்தேன். ஈழநாடு பத்திரிகையின் செய்தி ஆசிரியராக 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் என்னை அதிபர் கேசி.தங்கராஜா அவர்கள் நியமித்த சமயத்தில் விரைவில் ஈழநாடு தினப்பத்திரிகையாக வெளிவரவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். தங்கராஜா அவர்களின் தம்பியாரும் ஈழநாடு நிறுவனத்தின் முக்கிய நிர்வாக இயக்குநராகவுமிருந்த டாக்டர் கே.சி.சண்முகரத்தினம் அவர்களும் ஈழநாடு, தினசரிப் பத்திரிகையாக விரைவில் வெளிவர வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். ஈழநாடு விரைவில் தினசரியாக வரவேண்டு மென்பதே எனது விருப்பம் என்பதை நானும் தெரிவித்திருந்தேன்.




வாரம் இருமுறையாக ஈழநாடு வெளிவந்து கொண்டிருந்த போதுதான் நான் அதில் சேர்ந்தேன். வீரகேசரி ஊழியர் வேலை நிறுத்தம், தொடர்ந்து நிர்வாகத்தின் கதவடைப்பு என்பவற்றால், முதல் குழந்தை பிறந்த மூன்று மாதங்களிலேயே வேலை இழந்து நின்றேன். ஜாதி, மதம், சீதனம் என்ற வேலிகளையெல்லாம் தாண்டி கொள்கை வீரன் என்று நானே பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தேன். வேலை இழந்து நின்றபோது எந்த உதவியும் இல்லாத நிலையில் தான் கொள்கைக்கும் வாழ்க்கைக்குமுள்ள நிர்வாகத்தைப் வேறுபாடுகளை உணர்ந்தேன். வீரகேசரி நிர்வாகத்தை பழிவாங்குவதற்கு ஈழநாடு யாழ்ப்பாணத்தில் தினசரிப் பத்திரிகையாக வரவேண்டுமென்று தீர்மானித்து கடும் முயற்சி செய்தேன். பெருவிருட்சம் போல் பலரது உண்மை உழைப்பில் வளர்ந்துநின்ற வீரகேசரிக்கு அப்பொழுதுதான் முளைத்த ஈழநாடு எப்படி ஈடுகொடுக்க முடியும் என்றாலும்




நான் முயற்ச்சிகலை கைவிடவில்லை.

நிருபர் செல்லத்துரை எனது நல்ல நண்பர். வீரகேசரியில் நான் இருந்தபோது யாழ்ப்பாணச் செய்திகளை செல்லத்துரை தொலைபேசியில் தரும்போது வேகமாக எடுத்து வெளியிட்டு நான் ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறேன். இதனால் சக உதவி ஆசிரியர் சிலரின் பகைமை யையும் தேடியிருக்கிறேன். ஈழநாடு வாரமிருமுறை பத்திரிகையாக வெளிவந்த சமயத்தில் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவரும்போதும், அரசின் வருடாந்தர வரவு செலவுத் திட்ட வரிவிதிப்புகள் வெளிவரும்போதும், வீரகேசரி செல்லத்துரையின் யோசனையின் பேரில் சிறுபிரசுரமொன்று யாழ்ப்பாணத்தில் அச்சடித்து, மறுநாள் கொழும்பிலிருந்து வரும் வீரகேசரி இதழுடன் சேர்த்து விநியோகித்து மற்றப் பத்திரிகைகளுக்கு முன்பாக மக்களுக்குச் செய்தி கிடைக்கச் செய்வது வீரகேசரியின் வழக்கமாக இருந்தது.

நான் இதை முறியடிக்க நினைத்தேன். மாநகர சபைத் தேர்தல் முடிவுகள், வரவு செலவுத் திட்ட புதிய வரிவிதிப்புகள் ஆகியவைகளை அன்றிரவே யாழ் நாகர வாசிகளுக்குக் கிடைக்கக் கூடியதாக நள்ளிரவிலேயே மறுநாள் பத்திரிகையை விநியோகித்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்தேன். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நகரில் திரைப்பட மாளிகைகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வேன். குறிப்பாக ராஜா தியேட்டர் திரையில் நள்ளிரவு ஈழநாடு பதிப்பு வெளிவரும் என்று சிலைட் போட ஒழுங்கு செய்தேன். வாசலிலேயே நள்ளிரவில் பத்திரிகைகளுடன் சில ஊழியர்களையும் அழைத்துச் சென்று தலைப்புச் செய்தியை உரக்கக் கூவி விற்பனை செய்திருக்கிறேன். இதேபோல் 1960 ஆம் ஆண்டின் இறுதியில் சிறிமா அரசாங்கத்தின் மூத்த முக்கிய அமைச்சர்களான ரி.பி.இலங்கரத்தினாவும், அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தும் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக ரீதியில் வருகை தந்தார்கள். அமைச்சர்களின் வருகையை எதிர்த்து அவர்களுக்கெதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தமிழரசுக் கட்சியினர் ஏற்பாடு செய்திருப்பதையும் அறிந்து கொண்டேன். அமைச்சர்கள் இருவரின் பயணத்திட்டத்தின்படி, காலையில் பருத்தித்துறையில் மக்கள் வங்கிக் கிளையொன்றைத் திறந்து வைப்பதற்கும் மாலையில் யாழ்நகரில் கூட்டுறவு மொத்த விற்பனைக் கடையொன்றை காங்கேசன்துறை வீதியில் திறந்து வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிர்வாக இயக்குநர் டாக்டர் சண்முக ரத்தினத்திடம் இவை பற்றித் தெரிவித்து அன்று பிற்பகலில் யாழ் நகரில் ஈழநாடு பிந்திய பதிப்பு வெளியிட வேண்டுமென்ற எனது விருப்பத்தைச் சொன்னேன். எனது விருப்பம் போல் செய்யும்படி கூறிய டாக்டர் சண்முகரத்தினம் இ.என்.9151 இலக்கம் கொண்ட தமது பச்சை நிற காரையும் உபயோகிக்கும்படி தந்தார். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் கார் சாரதி வரவில்லை. பதிலாக டாக்டரின் உதவியாளராக




இருந்தவரும் ஒரு மருத்துவருமான குப்புசாமியே காரைச் செலுத்திக் கொண்டு என்னைப் பருத்தித்துறைக்குக் கூட்டிச் சென்றார்.

பருத்தித்துறைநகரில் வங்கி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளைகள் திறக்கப்படவிருந்த கட்டடங்கள் அலங்கரிக்கப் பட்டிருந்தன. பொதுமக்களும் ஓரளவு திரண்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சி தளபதி அ.அமிர்தலிங்கம் மற்றும் சில எம்.பிக்களும் தொண்டர்களும் அங்கு நின்றனர். எல்லோரும் சாதாரணமாகவே நின்றனர். சிறிது நேரத்தில் பொலிஸ்காரர்கள் சிலவாகனங்களில் முன்னேவர மோட்டார்கார்கள் இரண்டில் ஆளும்கட்சி ஆதரவாளர்கள் சிலருடன் அமைச்சர்கள் வந்திறங்கினர். அவர்கள் இறங்கியது தான் தாமதம் அமிர்தலிங்கமும் மற்றும் தொண்டர்களும் மறைத்து வைத்திருந்த கறுப்புக் கொடிகளை வீசி ஆட்டியபடி "அமைச்சர்களே திரும்பிப்போங்கள்" என்று கூச்சலிட்டு முன்னேறிச் செல்ல முயன்றனர். பொலிஸ்காரர்கள் ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தி முன்னேற முடியாதபடி தடுத்தனர். அமிர்தலிங்கத்துக்கும் அடிவிழுந்தது. காவலர்கள் ஆர்ப்பாட்டக் காரர்களை கட்டடத்துக்குக் கிட்ட நெருங்க முடியாதபடி தடுத்துக் கலைத்து விட்டனர். பின்னர் கட்டிடங்களை திறந்து வைத்த அமைச்சர்கள் இருவரும் உரை நிகழ்த்திவிட்டுச் சென்றனர். அக்காலத்தில் புகைப்படம் எடுக்கும் வசதி ஈழநாடு நாளிதழில் இருக்கவில்லை. புகைப்படம் எடுத்தாலும் புளாக் செய்து பத்திரிகையில் அச்சடிக்கும் வசதியும் இருந்ததில்லை. காலையில் பருத்தித்துறையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து அலுவலகம் திரும்பிய நான், அவற்றைச் செய்தியாக எழுதிக் கொடுத்துத் தலைப்பும் எழுதிக்கொடுத்து பிந்திய பதிப்பில் வெளியிடலாமென்று சொல்லிவிட்டு மாலையில் யாழ்நகரில் நடந்த நிகழ்ச்சிகளைச் சேகரிக்கச் சென்று விட்டேன்.

அப்போது ஈழநாடு ஆசிரியராக இருந்த இராஜஅரியரத்தினம் அவர்கள் மிக நல்லவர், பண்பாளர், பெரும் இலக்கியவாதி. 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றியவர். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பல இலக்கிய நண்பர்களைக் கொண்டிருந்தவர். கி.வா.ஜ, கல்கி ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவர். சோலி சுறட்டுக்குப் போகாதவர், தினசரி பத்திரிகையில் அனுபவம் பெறாதவர்.

அமைச்சர்களின் வருகையை எதிர்த்து நடந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் ஆசிரியருக்கு நாட்டில் ஏதோ குழப்பத்தைத் தூண்டிவிடுவதுபோல் தோன்றியிருக்க வேண்டும். அவர் அந்தச் செய்தியை அப்படியே வைத்துவிட்டு வீட்டுக்குப்போய்விட்டார். மாலையில் யாழ்நகரில் அமைச்சர்களை எதிர்பார்த்து அமிர்தலிங்கம், வி.ஏ. கந்தையா, செனட்டர் நடராசா மற்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் கறுப்புக் கொடிகளை மறைத்தபடி காங்கேசன்




துறை வீதியில் காத்து நின்றனர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் பெண்களும் திரண்டு நின்றனர். உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் ஏ.எஸ்.மரியநாயகம் தலைமையில் காவல்துறையினரும் அங்கு பெருமளவில் திரண்டு நின்றனர். வீரகேசரி செல்லத்துரை, ரைம்ஸ் நிருபர் நடராஜா மாஸ்ரர், சொலமன்மாஸ்ரர் மற்றும் சில நிருபர்களும் நானும் அங்கு நின்றோம். தலைவர்களும் தொண்டர்களும் வீதியோரங்களில் இருந்த கட்டடங்கள், கடைகளின் படிகளில் சாதாரணமாக நின்றனர். பொலிசார் தாக்குதலுக்குத் தயாராக நிற்பதுபோல எனக்குத் தோன்றியது. நாங்கள் நடுவீதியில் நின்றால்தான் தாக்குதலுக்குள்ளாக மாட்டோம் என்று சொல்லி செல்லத்துரையுடன் நடுவீதிக்கு வந்து நின்றேன். அமைச்சர்கள் வந்த மோட்டார்கார்கள் வந்து நின்ற உடனே தலைவர்களும் தொண்டர்களும் கறுப்புக் கொடிகளை காட்டியபடி அமைச்சர்களே திரும்பிப் போங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் பாய்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். தீவுப்பகுதி பிரதிநிதி வி.ஏ.கந்தையா மீது ஒரு பொலிஸ்காரர் தாக்கியதில் அவர் கீழே விழுந்துவிட்டார். அவரது மூக்குக் கண்ணாடியும் கழன்று விழுந்து விட்டது. இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த பெண்கள் பக்கம் காவலர்கள் தடிகளை ஓங்கியபடி பாய்ந்து வரவும், இல்லை அங்கே போக வேண்டாம், தாக்க வேண்டாம் என்று ஏ.எஸ்.பி. மரியநாயகம் தடுத்துவிட்டார். வி.ஏ.கந்தையா அவர்கள் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நடராஜா மாஸ்ரரும் நானும் மருத்துவமனைக்கு இரவில் சென்று கந்தையா அவர்களைச் சந்தித்து உடல் நிலைபற்றி விசாரித்தோம். ஏற்கெனவே 1958ஆம் ஆண்டில் மூன்று மாதங்கள் தடுப்புக்காவலில் இருந்த கந்தையா போராட்டங்களில் ஈடுபட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். சாத்வீகப் போராட்டங்களி னாலேயே அவர் தனது மரணத்தைத் தேடிக் கொண்டார். வன்னியசிங்கம், என்.ஆர்.இராஜவரோதயம், கந்தையா எனப் பலர் சாத்வீகப் போராட்டங்களில் காந்திய வழியைப்பின்பற்றி உயிர் நீத்தனர்!

1960ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து வாரம் இருமுறை யாக ஈழநாடு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தபோதிலும் 1960ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து முக்கியமான சமயங்களில் பிந்திய பதிப்பு, விசேஷபதிப்பு என வாரத்துக்கு மூன்று நான்கு தினங்களிலும் வெளிவந்து கொண்டிருந்தது. இதனால் வாசகர்களும் ஈழநாடு தினப்பதிப்பாக வெளிவருவதை எதிர்பார்த்தனர். ஈழநாடு இதழை தினப்பதிப்பாக வெளியிட முடியுமா என்று யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. தங்கராஜா, டாக்டர் கே.சி.சண்முக ரத்தினம், சரவணமுத்து மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் என்னையும் கூப்பிட்டு நிர்வாக ஆசிரியர் கே.பி.ஹரன், ஆசிரியர் இராஜஅரியரத்தினம் ஆகியோர் முன்னிலையில் கேட்டனர். நான் தினப்பதிப்பாக வெளிவருவதற்கு எந்தத் தடையுமில்லையென்றும்,




அனுபவமுள்ள இரண்டொரு உதவி ஆசிரியர்கள் இருந்தால் நல்ல உதவியாக இருக்குமென்றும் சொன்னேன். இரண்டு அனுபவமுள்ள உதவி ஆசிரியர்களை எடுக்கலாமென்று தங்கராஜா அவர்கள் சொன்னார். மறுநாள் நிர்வாக ஆசிரியர் ஹரன் கொழும்புக்கு புறப்பட்டு நின்றார். தங்கராஜா அவர்களும் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றார். திட்டமிட்டபடி ஈழநாடு பத்திரிகையை தினப்பத்திரிகையாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி சொன்ன நிர்வாக ஆசிரியர் ஹரன் தாம் கொழும்புக்குப்போய் விட்டு இரண்டு தினங்களில் திரும்பி வந்துவிடுவதாகவும், தினப்பதிப்புக்குரிய ஆசிரிய தலையங்கத்தை எழுதிக் கொடுத்துவிட்டுப் போவதாகவும் சொல்லிச் சென்றார். கொழும்பிலிருந்து திரும்பி வரும்போது டி.எம்.முருகையாவையும் சி.பெருமாளையும் கூட்டிக்கொண்டு வருவதாகவும் அவர்களிருவரும் வந்தால் உங்களுக்கு உதவியாக இருக்குமென்றும் ஹரன் ஐயா சொன்னார். இருவரும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதற்கு ஏற்பாடு செய்யமுடியுமா என்றும் அவர் என்னைக் கேட்டார். இருவரும் வீரகேசரியில் என்னுடன் வேலை செய்தவர்கள். இருவருக்குமே யாழ்ப்பாணம் புதிது. இருவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். பெருமாளுக்கு நான் எனது வீட்டிலேயே இடம் கொடுக்கலாமென்றும், முருகையாவுக்கு வேறு இடம்தான் பார்க்க வேண்டுமென்றும் சொன்னேன். கொழும்புக்குச் சென்ற ஹரன் ஐயா திரும்பி வருவதற்கு முன்பாகவே திட்டமிட்டபடி ஈழநாடு தினப்பதிப்பாக வெளி வருவதற்குரிய பெப்ரவரி 11-ஆம் தேதி வந்துவிட்டது. இப்படித் தினப்பதிப்பை அவசரப்பட்டு வெளியிடக்கூடாது என்பதை பலவருடங்களுக்குப் பின்னர் கொழும்பில், சுடர் ஒளி பத்திரிகையை நாளிதழாக்குவதற்கு நண்பர் கே.கே.இரத்தினசிங்கம் நீண்டநாள் யோசித்து பலரையும் கலந்தாலோசித்து, என்னையும் கூப்பிட்டு சுடர் ஒளியில் சேர்ந்து உழைத்து உதவும்படி கேட்டு, ஆசிரியர் என்ற பதவியையும் எனக்குத் தந்து தொடங்கிய போதுதான் நான் உணர்ந்து கொண்டேன். சுடர் ஒளி நாளிதழாக வெளிவருவதற்கு முன்னர் எத்தனை இதழ்கள் உரிய நேரத்தில் வெளியிடப்பட்டுப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன என்பதை அப்போது தான் தெரிந்து கொண்டேன். ஈழநாடு வாரமிரு முறை வெளிவந்த போதிலும் பிந்திய பதிப்பு, விசேஷ பதிப்பு என பல பதிப்புக்களை நான் தனியாகவே வெளியிட்டு வந்ததால் தினப்பதிப்பையும் சிரமமில்லாமல் வெளியிட்டுவிடலாம் என்று தவறாகக் கணித்து விட்டேன். பெப்ரவரி 11-ஆம் தேதி தினப்பதிப்பு வெளிவருமென்றும் அறிவித்து விட்டேன். "என்னடாப்பா இப்படி அறிவித்துவிட்டாய் எப்படி சமாளிக்கப்போகிறாய்" என்று ஆசிரியர் இராஜஅரியரத்தினம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார். என்னுடன் படித்த நண்பர் க.கணேசலிங்கம் எனக்கு முதலே ஈழநாடுவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். விதானையார் என்றழைக்கப்படும் சிவசிதம்பரம் என்ற இளைஞரும் கணேசலிங்கத்துக்கு உதவியாக இருந்தார். கணேசலிங்கம் எதற்கும்




உணர்ச்சிவசப்படும் இளகிய மனம் கொண்டவர். ஆங்கிலத்தில் புலமையுடையவர். இராசநாயகம் என்றொரு இளைஞனும் மற்றொரு இளைஞனும் புதிதாகச் சேர்ந்திருந்ததாக நினைவு.

பெப்ரவரி 10ஆம் தேதி காலை ஏழு மணிக்கு வானொலி செய்திகள் கேட்டு செய்தியாக்குவதற்காக காலையிலேயே அலுவலகம் சென்றிருந்தேன். வானொலியில் இந்தியா, இலங்கை, பி.பி.சி., செய்திகளைக் கேட்டு, அவை பற்றி முன்பே அறிந்திருக்கும் பின்புலச் செய்திகளையும் சேர்த்து வாசகர்கள் வானொலிச் செய்தியென்று அறியாத வகையில் செய்தியாக்கி எழுதவேண்டும். இது பத்திரிகையில் புதிதாகச் சேர்ந்த அனுபவமில்லாதவர்களுக்கு சுலபமல்ல. பெரிய பத்திரிகை நிறுவனங்களில் ரெலிபிறின்ரர் யந்திரத்தில் செய்திகள் வருவதுடன் அவற்றின் பின்புல வரலாறுகளும் கூடவே கொடுத்து விடுவார்கள். அவற்றை மொழிபெயர்த்துச் செய்தியாக்கிக் கொடுத்தால் போதும். ஈழநாடு நாளிதழில் இந்த வசதியில்லை. டாக்டர் சண்முகரெத்தினம் குடும்பத்துக்குச் சொந்தமான பழைய வானொலிப் பெட்டி ஒன்று ஈழநாடு உபயோகத்துக்குக் கொடுக்கப் பட்டிருந்தது. சில சமயங்களில் கொழும்பு வானொலி நிலையத்தைத் தேடிப்பிடித்து எடுத்து செய்தி கேட்டுக் கொண்டிருந்தால், சிறிது நேரத்தில் அது தானாகவே அசைந்தாடி மலையாளம் அல்லது கன்னடத்தில் எதையாவது ஒலிபரப்பத் தொடங்கிவிடும். மீண்டும் அதை இழுத்துச் சரியான இடத்தில் நிறுத்தி தொடர்ந்து செய்தியைக் கேட்க வேண்டும். செய்திகள் ஒலிப்பதிவு செய்யும் வசதி இருக்கவில்லை. இந்த வசதிகள் வந்த பின்னர் கூட நான் ஈழநாடு பத்திரிகையிலிருந்து வெளியேறும் வரை அந்தப் பழைய ஓட்டை வானொலிப் பெட்டியே என் பாவனைக்கு இருந்தது.

ஈழநாடு அச்சகப் பகுதியில் சித்திரவேல் என்பவர்தான் பக்கம் போடுபவராக இருந்தார். வீரகேசரி அச்சகப் பகுதியில் வேலை செய்த வேலுப்பிள்ளை என்பவர் அச்சகப் பகுதியில் கடமையாற்றி வந்தாலும், பக்கம் போடுவது போன்ற பொறுப்பான வேலைகளை மேற்கொள்வதைத் தட்டிக்கழித்தே வந்தார். இந்த வேலைகளை யெல்லாம் பொறுப்பெடுத்துச் செய்தாலும் நாளை என்னைத் தலையில் தூக்கி வைக்கமாட்டார்கள் எனது வேலை முடிந்ததும் என்னைத் தரையில் போட்டு மிதிக்கத்தான் செய்வார்கள் என்று சொல்லிவிடுவார். அவர் சொன்னது நூற்றுக்கு நூறு சரி என்பதை பின்னர் நான் என் அனுபவத்தில் உணர்ந்தேன். காலை ஏழுமணிக்கு வேலைக்குச் சென்ற நான் செய்திகள் கொடுத்துக் கொண்டே இருந்தேன். இன்னும் செய்திகள் தேவை என்று கேட்டபடியே இருந்தார்கள். பக்கம் போட்டு முடிந்ததாகவும் காணோம். நான் சாப்பிடுவதற்குக் கூட போக முடியவில்லை. மறுநாள் விடிகாலை மூன்று மணியளவில் சாப்பிடப்போவதாகச் சொல்லி வீட்டுக்குப்போய் சாப்பிடுவதற்குச் சோற்றில் கைவைத்த நேரம் பார்த்து "சேர் பக்கம் முடிப்பதற்கு செய்திகள் இல்லையாம் உங்களை




அவசரமாய் வரட்டுமாம்" என்று வாசலில் நின்றபடியே இருவர் கூப்பிட்டார்கள். உடனேயே கையைக் கழுவிவிட்டு புறப்பட்டுப் போனேன். ஆசிரியர் இராஜ அரியரத்தினம் செய்வதறியாது திகைத்து நின்றதுடன் அவசரப்பட்டு தினப்பதிப்பைத் தொடங்கிவிட்டீரென நினைக்கிறேன் என்றார். பெப்ரவரி 11ஆம் தேதி மதியம் ஈழநாடு நாளிதழின் முதல் இதழ் விற்பனைக்கு வந்தது. யாழ்ப்பாணத்தின் முதல் தமிழ்த் தினசரிப் பத்திரிகையை வாங்கிப் படிக்கும் மக்களின் ஆர்வத்தை நான் நகர வீதிகளில் சைக்கிளில் சென்று பார்த்தபோது கிடைத்த இன்பமும் மகிழ்ச்சியும் முதல்நாள்பட்ட கஷ்டங்களை எல்லாம் கரைந்து போகச் செய்துவிட்டன. மறுநாள் பத்திரிகையும் கஷ்டப்பட்டு மதியத்துக்கு முன்னரே வெளிவந்தது. அதிகாலையில் மூன்று நான்கு மணிக்கெல்லாம் இவ்விரு நாள்களிலும் டாக்டர் சன்முகரத்தினம் சுடச்சுடச் கோப்பி கொண்டுவந்து கொடுத்தார். எனக்கும் வேலைசெய்யும் ஊழியர்களுக்கும். உற்சாகமாய் சிலவார்த்தைகள் பேசுவார். இரவு படுக்கைக்குப் போகும் முன்னரும் கூட அவர் தொலைபேசியில் விசாரித்து ஆறுதல் சொல்லி உற்சாகப்படுத்துவார். இரண்டு தினங்களின் பின் ஆசிரியர் ஹரன் பெருமாளுடனும் முருகையாவுடனும் வந்து சேர்ந்தார். பெருமாள் என்னுடனே தங்கினார். இருவருக்கும் யாழ்ப்பாணச் சூழ்நிலையும், அந்த நேரமிருந்த அரசியல் நிலையும் வியப்பாகத்தானிருந்தது. இதன்பின் "புளுறிபன் ஹொட்டல்" உரிமையாளரும் சட்டத்தரணியுமான பாலசிங்கம் என்பவரின் சிபாரிசில் பாமா இராஜகோபால் என்ற ஓர் இளைஞன் வந்து சேர்ந்தார். விவேகி சஞ்சிகையில் வேலை பார்ப்பதாக அவரை சசிபாரதி சபாரெத்தினம் அறிமுகப்படுத்தினார். இதன்பின் வீரகேசரியில் வேலை செய்த கொடிகாமம் புறக்டர் கார்த்திகேசுவின் மகன் யோகநாதன் வந்து சேர்ந்தார். யோகநாதன் வீரகேசரியில் வேலைசெய்த காலத்திலேயே அச்சகப் பகுதியில் வேலைசெய்த பொன்னுத்துரை என்பவருடன் சேர்ந்து பொன் யோகி என்ற பெயரை ஆசிரியராகக் கொண்டு 'விமோசனம்' என்ற சஞ்சிகையை நடத்தியிருந்தார். இந்த விமோசனம் பத்திரிகையில் இளநீர் குடித்தவன் என்ற எனது சிறுகதையொன்றும் வெளிவந்திருந்தது. யோகநாதனைத் தொடர்ந்து மகாதேவா என்பவரும் ஏ.வி. மாணிக்கம் என்பவரும் வந்தார்கள். இந்த இருவரும் பத்திரிகைத் தொழிலுக்குப் புதிது. "எப்படிப் பயன்படுத்தலாமோ அப்படிப் பயன்படுத்தப் பாருங்கள்" என்று ஹரன் சொன்னார். இருவரையும் வெளியே கூட்டங்களுக்குப் போய் செய்தி எடுத்து வரும்படி சொன்னேன். அலுவலகத்தினுள்ளிருந்து படிதிருத்துவதில் பழகும்படியும் சொன்னேன். வானொலியிலும் செய்தி கேட்டு எழுதும் படியும் சொன்னேன். எழுதும் தாள்கள் சிலவற்றை மடித்து குறிப்பெழுதும் புத்தகமாக பாவிக்கக் கொடுத்தேன். மாணிக்கம் அலுவலகத்தினுள்ளேயே படிதிருத்துவதில் தான் அதிக நாட்டம் செலுத்தினார்.




மகாதேவன் குறிப்பெழுதும் புத்தகம் போல தாள்களை இணைத்துக் கட்டி மேலாக ஒரு அட்டையையும் சேர்த்துக் கட்டி அதில் ஈழநாடு என்று பெரிய எழுத்தில் எழுதி அதன் கீழ் மகாதேவனென்றும் எழுதி வைத்துக் கொள்வார். கூட்டங்களுக்கோ அல்லது வெளியிலேயே போய்ச் செய்தி எடுக்கிறாரோ இல்லையோ, எங்கேபோனாலும் அவர் கையில் ஈழநாடு மகாதேவா என்று அட்டையில் எழுதிய குறிப்புப் புத்தகம் எந்நேரமும் இருக்கும். இதைப் பார்த்ததும் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இதை மற்றவர்களிடமும் சொல்லி "இப்படிப் பத்திரிகையில் வேலை செய்வதை பெருமையாக நினைக்கிறவர்கள் தான் பத்திரிகைக்கு தேவை" என்று சொன்னேன். வானொலியிலும் மற்றும் கூட்டங்களிலும் எப்படிக் குறிப்பெடுத்துச் செய்தியாக்க வேண்டு மென்பது பற்றியும் மகாதேவனுக்குச் சொல்லிக் கொடுத்தேன். பிற்காலத்தில் தலைப்புச் செய்திக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் உரைகள் பத்திரிகைகளில் வரும்போது எப்படி அதிலிருந்து தலைப்புச் செய்திகளைத் தயாரிக்கலாம் என்றும் சொல்லிக் கொடுத்தேன். மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததைவிட மகாதேவனுக்கே செய்தி எழுதுவது, செய்தி எடுப்பது பற்றிய நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தேன். பத்திரிகை நண்பர்களுடன் தொடர்புகளும் ஏற்படுத்திக் கொடுத்தேன். கொழும்பு 'ரைம்ஸ் ஓப் சிலோன்' பத்திரிகையில் எனது அருமை நண்பன் சத்தியதாசனுக்கு அறிமுகம் செய்து கொடுத்து திருகோணமலையில் நடந்த தமிழ் அரசுக்கட்சி மாநாட்டுச் செய்தி எடுக்கவும் மகாதேவனை அனுப்பி வைத்தேன். சத்தியதாசன் என்ற பெயரையே மறந்து, மகாதேவன் ரைம்ஸ் நிர்வாகம் பகுதியில் பணியாற்றிய எனது மற்றொரு நண்பன் பாலச்சந்திரன் பெயரை எங்கோ எழுதியிருந்தார். ஈழநாடு அலுவலகத்திலும், அந்தந்தப் பகுதிகளிலும் நிருபர்களாகப் பணியாற்றுவதற்கு சிலர் நியமிக்கப்பட்டனர். மாவிட்டபுரம் எஸ். ஆர்.ஞானசுந்தரம், நாதஸ்வர வித்துவான். கொழும்பிலிருந்து பலாலி விமான நிலையம் வந்திறங்கும் அமைச்சர்கள், அரசியல் தலைவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புகள் மற்றும் சந்திப்புகள் பற்றிய செய்திகளை ஞான சுந்தரம் கொண்டு வருவார். இவர் மாவிட்டபுர நிருபராக நியமிக்கப்பட்டார். சுந்தரராஜசர்மா என்ற இளம்பையனும் செய்தி சேகரிக்கும் நிருபராகப் பணியாற்றினார். கிருஷ்ணசாமி என்ற இளைஞன் நண்பர் செல்லத்துரையுடன் நட்புடையவர். செல்லத்துரையின் சிபாரிசிலேயே கிருஷ்ணசாமி நிருபரானார். காங்கேசன்துறை ராஜநாயகி தியேட்டரில் உதவி மானேஜராக இருந்த க.அரசரத்தினத்தை, காங்கேசன் துறை வழக்குரைஞர் குமரகுரு எனக்கு அறிகமுகப்படுத்தி பத்திரிகைத் துறையில் பயிற்சி அளிக்கச் சொன்னார். அரசரத்தினம் ஈழநாடுவில் பயிற்சி பெற்று பின்னர் கொழும்புப் பத்திரிகைகளுக்கும் நிருபராகப் பணியாற்றினார்.

பெருமாளும் முருகையாவும் ஈழநாடுவில் வந்து சேர்ந்தபின்




அலுவலகத்திலிருந்தபடியே வானொலியில் செய்தி எடுப்பதும் மொழிபெயர்த்துச் செய்திகள் எழுதுவதும் பிரச்சினையில்லாமல் போய்விட்டது. இதே சமயம் எஸ்.கே. காசிலிங்கம் என்ற இளைஞனும் சபாரெத்தினம் மூலம் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டு ஆசிரியர் பகுதியில் சேர்க்கப்பட்டார். சுறுசுறுப்பான பையன். அதிகம் சொல்லிக் கொடுக்காமலே பத்திரிகைத் தொழிலை விரைவாகக் கற்றுக் கொண்டான். வெளியாரின் தொடர்புகளையும் பெருக்கிக் கொண்டான். எங்கே என்ன சம்பவம் நடந்தாலும் அந்த இடத்துக்கு உடனடியாகவே சென்று செய்தி எடுத்து வருவதுடன், அச்செய்திகள் சம்பந்தமாக உரியவர்களுடன் உறுதிப்படுத்தியும் கொள்வான். ஈழநாடு பத்திரிகையிலிருந்து வெளியேறிய பின் பிரான்ஸ் சென்ற காசிலிங்கம், வெளிஉலகத்தில் ஈழநாடு பத்திரிகையின் பெயரை நிலைநாட்டுவதில் வெற்றியும் பெற்றான். பாரிசிலிருந்து ஈழநாடு- என்றபெயரில் ஒருவாரப் பத்திரிகையை வெளிக் கொணர்ந்த பெருமை காசிலிங்கத்தையே சாரும். இதன் பின் எஸ்.எஸ்.குகநாதன் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையை மட்டுமல்ல, வானொலி, தொலைக்காட்சி சேவைகளையும் தொடங்கி ஊடகத்துறையில் வெற்றிக் கொடி நாட்டினார். சில்லையூர் செல்வராசன் கொடுத்துவிட்ட ஒரு கடிதத்துடன் குகநாதன் என்னை வந்து சந்தித்ததும், மறு பேச்சில்லாமல் குகநாதனை ஈழநாடு ஆசிரியர் குழுவில் சேர்த்துக் கொண்டேன். குகநாதனால் ஈழநாடு பெருமைபெற்றது. காசிலிங்கத்தினால் ஈழநாடு ஊழியர்கள் பெருமை பெற்றனர். 'என்னுள் என்னோடு' என்ற அனுபவ நூல் ஒன்றை காசிலிங்கம் தமிழில் எழுதி வெளியிட்டதுடன் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் அதன் மொழிபெயர்ப்பையும் வெளியிட்டிருக்கிறார். பத்திரிகைத் துறை அனுபவம் பற்றிய இந்நூலின் முதல் பாகத்தை காசிலிங்கம் எனக்கே அர்ப்பணித்துத் தமது விசுவாசத்தைக் காண்பித்திருக்கிறார். இப்பொழுது கணேசலிங்கம் போன்ற பழைய ஈழநாடு நண்பர்களுடன் காசிலிங்கம் தொடர்புகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கிறார். யோகநாதன் நீதிமன்றச் செய்திகளை அப்படியே எழுதிக் கொடுப்பார். கோகிலாம்பாள் புகழ் யோகநாதன் என்றே நாங்கள் யோகநாதனை சொல்லுவோம். லண்டனில் இப்போதிருக்கும் தம்பி பற்றிமாகரன் ஈழநாடுவில் தனது பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்து பெருமை சேர்த்தவர். இதுபோல இப்பொழுது கொழும்பு டெய்லி நியூஸ் ஆங்கிலத் தினசரியின் பிரதி ஆசிரியராக இருக்கும் அனந்தபாலகிட்ணரும் ஈழநாடுவில் தமது பத்திரிகை வாழ்க்கையைத் தொடங்கி பெருமை சேர்த்தார். அவர் ஈழநாடுவில் சேர்ந்த சிறிது காலத்திலேயே நான் ஈழநாடுவிலிருந்து வெளியேறி விட்டேன். எவருக்கும் தலை வணங்காமல் ஈழநாடு விலிருந்து வெளியேறியதை கிளிநொச்சியில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் அனந்தபாலகிட்ணர் தமிழ்ச் செல்வனிடம் பெருமையாகச் சொன்னார்.

பெருமாளும் டி.எம். முருகையாவும் ஈழநாடு வந்து சேர்ந்ததும்




எனக்கு அலுவலகத்தில் பணிசற்றுக் குறைந்தது. ஈழநாடு தினப்பதிப்பாக வெளிவந்த சமயத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்குவதற்கான வேலைகளில் தமிழரசுக் கட்சி தீவிரமாக ஈடுபட்டிருந்தது. பெப்ரவரி மாதம் 19ஆம் தேதி தலைவர் செல்வநாயகம் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளும் தொண்டர்கள் கட்டுப்பாடு ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை விரிவாக எடுத்துக் கூறியிருந்தார். இந்த அறிக்கையை ஈழநாடு விரிவாக வெளியிட்டிருந்ததுடன் மறுநாள் காலை யாழ் கச்சேரி வாசல்முன் நடைபெறும் சத்தியாக்கிரக மறியல் போராட்டம் பற்றிய செய்தி வெளியிட நண்பகலில் பிந்திய பதிப்பு ஒன்று வேண்டுமென்றும் நான் தெரிவித்திருந்தேன். இதற்காக காலையில் அலுவலகம் வந்து வெளிநாட்டுச் செய்திகளைக் கவனித்துக் கொண்டு அவர்களின் மோட்டார் காரில் டாக்டர் சண்முகரத்தினம் சகிதம் கச்சேரியடிக்குச் சென்றேன். "நாங்கள் தொடங்கப்போகும் போராட்டம் இலங்கைக்குப் புதியது" என்று செல்வநாயகம் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தபடி, யாழ்ப்பாணம் கச்சேரி (செயலகம்)யின் பிரதான வாசலில் தொண்டர்கள் சூழ அமைதியாக அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே வி.என்.நவரத்தினம், அமிர்தலிங்கம் மற்றும் தொண்டர்கள் குழுமி உட்கார்ந்தும் படுத்தும் கிடந்தனர். பொலிஸ்காரர்கள் சூழநின்று தொண்டர்களை கைகளிலும் கால்களிலும் பிடித்து இழுத்தெறிவார்கள். மீண்டும் மீண்டும் அதே இடத்தில் திரும்பிப் போய் தொண்டர்கள் படுத்து விடுவார்கள். வி.என்.நவரத்தினமும் மற்றையோர்களும் கூட இழுத்தெறியப் பட்டதும் திரும்பத் திரும்பச் சென்று படுத்துக் கொண்டனர். பொலிஸ்காரர்கள் தொண்டர்களை கால்களால் உதைத்து தள்ளியும் பார்த்தனர். இதேசமயம் கச்சேரியின் உள்ளே உள்ள அரசாங்க அதிபரின் வசிப்பிடமான பழைய பூங்காவுக்குச் செல்லும் பெரிய வாசலில் எவரும் உள்ளே செல்லமுடியாமலும், எவரும் உள்ளேயிருந்து வெளியே வரமுடியாமலும் டாக்டர் நாகநாதன், பின்னர் சிவசுந்தரம், அமிர்தலிங்கம் போன்ற மக்கள் பிரதிநிதிகளும் பொட்டர் நடராஜா செனட்டர் நல்லையா ஆகியோரும் தொண்டர்களும் நிலத்தில் படுத்துக் கிடந்தும் அமர்ந்திருந்தும் மறியல் செய்து கொண்டிருந்தனர். பொலிஸ்காரர்கள் மறியல் செய்வோரை கால்களிலும் கைகளிலும் பிடித்து இழுத்தெறிவதும், அவர்கள் மீண்டும் அதே இடங்களில் போய்ப்படுத்துக் கொள்வதும் தொடர்ந்திருந்தது. போலிஸ்காரர் சிலர் தொண்டர்கள் மீது அவர்கள் வைத்திருந்த பட்டன் பொல்லுகளால் தாக்கவும் செய்தார்கள். சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளாமல் நடைபெறும் சம்பவங்களை வேடிக்கை பார்ப்பதற்கு மக்கள் பெருமளவில் திரண்டு நின்றார்கள்.

கச்சேரி அலுவலகங்களில் வேலை பார்க்கும் அரச ஊழியர்கள் அலுவலங்களுக்குள் செல்லமுடியவில்லை, ஊழியர்கள் அனைவரும் கச்சேரி வாசல்களிலும் வீதிகளிலும் திரண்டு நின்றனர். காவலர்கள் எந்த




நேரம் என்னசெய்வார்கள் என்று தெரியவில்லை. காலையில் கச்சேரியடிக்கு முதலில் வந்த நான், சிறிது நேரத்தில் அலுவலகம் திரும்பி நான் கச்சேரி வாசல்களில் பார்த்த காட்சிகளை விபரமாக எழுதிக் கொடுத்து அச்சுக் கோர்த்து ஆயத்தமாக வைக்கும்படி சொல்லிவிட்டுங மதியம் பிந்திய பதிப்புவெளிவர வேண்டு மென்பதையும் நினைவூட்டிவிட்டு மீண்டும் கச்சேரியடிக்குச் சென்றேன். இப்பொழுது கச்சேரி வாசல்களில் தொண்டர்களின் தொகை அதிகரித்திருந்தது. அதேபோல் பொலிஸ்காரர்களின் தொகையும் மிகவும் அதிகமாகக் காணப்பட்டதுடன் அவர்களது கைகளில் பொல்லுகளும் காணப்பட்டன, சில பொலிஸ் அதிகாரிகளின் கைகளில் துப்பாக்கிகளும் இருந்தன. பழைய பூங்கா வாசலுக்கு வந்த வடக்கு மாகாணப் பொலிஸ் அதிபர் சி.ஆர்.ஆர்ன்ட் தொண்டர்களும் தலைவர்களும் வாசலை மறித்துப் படுத்தும் அமர்ந்தும் இருப்பதைப் பார்த்தும், தமக்கு வழிவிட மறுத்துமிருப்பதைப் பார்த்தும் ஆத்திரமடைந்தார். எல்லோரையும் இழுத்தெறியும்படி பொலிஸ்காரர்களுக்கு உத்தரவிட்டார். இந்த முயற்சி வெற்றி பெறாததைப் பார்த்த பொலிஸ் அதிபர் அரசாங்க ஊழியர் அலுவலங்களுக்கு செல்வதற்காக வழிகளை ஏற்படுத்தும்படி உத்தரவிட்டார். இதுவும் காவலர்களால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. தொண்டர்களை ஓரிடத்திலிருந்து இழுத்தெறிந்து அப்புறப்படுத்தியதும் வேறு புதிய தொண்டர்கள் அந்த இடங்களில் போய்ப்படுத்துக் கொண்டார்கள். வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்த பொதுமக்களும்கூட, அப்புறப் படுத்தப்பட்ட தொண்டர்களின் இடத்தில் போய்ப்படுத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

நான் மீண்டும் அலுவலகம் திரும்பி, பின்னர் பார்த்த காட்சிகளையும் எழுதிக் கொடுத்து முதல் பக்கத்துக்குத் தலைப்புச் செய்தியும் எழுதி தலைப்பும் எழுதிக் கொடுத்துவிட்டு, நண்பர் செல்லத்துரையிடமும் சொலமன் மாஸ்ரரிடமும் சொல்லிவந்தபடி கச்சேரியில் மேற்கொண்டு நடக்கும் சம்பவங்கள் பற்றிய செய்திகளை எதிர்பார்த்துக் காத்துநின்றேன். நகரமண்டபத்தில் அன்று ஆரம்பமாக விருந்த அசைஸ் நீதிமன்றத்தின் (உயர்நீதிமன்றம் மாதிரியானது) தொடக்கத்துக்கான கட்டளையை அரசாங்க அதிபர் என்ற முறையில் திரு. எம்.ஸ்ரீகாந்தா நகரமண்டபம் சென்று நீதியரசரிடம் கொடுக்க வேண்டும். அரசாங்க அதிபர் கச்சேரி வளவிலிருந்து வெளியே வரமுடியாதபடி கச்சேரி வாசல்களை தலைவர்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் செய்து மறித்துத் தடை செய்து கொண்டிருந்தனர். பொலிஸ் அதிபரின் ஆணைப்படி, பழைய பூங்கா வாசலில் நாகநாதன் மீதும் தொண்டர்கள் மீதும் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதில் நாகநாதன் மீது அடித்த பேட்டன் பொல்லு இரண்டாக உடைந்துவிட்டது. உடைந்த ஒரு பகுதிப் பொல்லை நாகநாதன் நினைவுச் சின்னமாக எடுத்து வைத்திருந்தார். நீண்டநேரம் நடந்த இழுபறிப் போராட்டத்தின் பின், பொலிஸ்

அதிபரின் ஆணைப்படி பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி வெடிக்கச் செய்தனர். ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். திரண்டிருந்த கூட்டமும் கலைக்கப்பட்டது.




இச்செய்திகளை செல்லத்துரையும் சாலமன் மாஸ்ரரும் எனக்கு உடனடியாகவே தொலைபேசியில் சொன்னார்கள். முதல் பக்கத் தலைப்புச் செய்தியில் தலைப்புப் பத்தியில் பெரிய எழுத்தில் எழுதிக் கொடுத்துத், தலைப்பையும் மாற்றிக் கொடுத்து அவசர அவசரமாகப் பக்கத்தை முடித்து பத்திரிகைகளை அச்சடிக்க ஏற்பாடு செய்தேன். பத்திரிகை அச்சாகிக் கொண்டிருந்த போதே, முதலில் பத்திரிகைகளை யாழ் நகரில் பஸ்நிலையத்துக்கு அனுப்பும்படி சொன்னேன். கச்சேரியடியில் கண்ணீர்ப்புகை பிரயோகம், பொலிசாரின் தடியடி காரணமாகவும், சத்தியாக்கிரகத்தின் முதல் நாள் நடவடிக்கை மதியத்துடன் ஒத்திவைக்கப்படுவதாக தலைவர் செல்வநாயகம் அறிவித்ததைத் தொடர்ந்தும் கலைந்து செல்லும் மக்கள் பஸ்நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கச்சேரியடியிலிருந்து வந்து கொண்டிருந்த மக்கள், சத்தியாக்கிரகச் செய்திகளுடன் ஈழநாடு பத்திரிகை விற்பனையாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தனர். யாழ்ப்பாணத்தில் காலையில் நடந்த நிகழ்வுகள் மதியமே செய்தியாக பத்திரிகையில் வெளிவந்ததைக் கண்டு மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தனர். புகைப்படம் எடுத்து வெளியிடும் வசதி அன்றிருக்கவில்லை. நடந்த சம்பவங்கள் விபரமாக வர்ணித்து எழுதப்பட்டிருந்தது வாசகர்களுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியது. கோகிலாம்பாள் கொலை வழக்கிலும் பின்னர் இதே உத்தியையே கையாண்டு வாசகர் கவனத்தை ஈர்த்தோம், வெற்றிபெற்றோம். முதல்நாள் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்ட பின், 'ஈழநாடு' பிந்திய பதிப்பும் நண்பகலில் வெளிவந்து யாழ்ப்பாண நகரில் மட்டுமல்ல, புறநகர்ப் பகுதிகளிலும் ஈழநாடு பத்திரிகை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மாலையில் நடராஜா மாஸ்டரும் நானும் தலைவர் செல்வநாயகம் அவர்களைச் சந்திக்கலாம் என்று புறப்பட்டு யாழ் நகரில் வாடிவீட்டுக்குச் (Resthouse) சென்றோம். நண்பகலில் வெளிவந்த ஈழநாடு பிந்திய பதிப்பின் ஓர் இதழை மேசையில் வைத்து, அதில் வெளிவந்திருந்த தலைப்புச் செய்தியையும் அவரது சுருக்கமான அறிக்கையையும் தனது சுட்டுவிரலால் வரிக்கு வரி படித்த படி ரசித்துக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்துப் பேசிய பின் நாங்கள் அலுவலகம் திரும்பினோம். மறுநாள் சத்தியாக்கிரகம் விட்ட இடத்திலிருந்து தொடரும் என்று தலைவர் கூறியதை மறுநாள் ஈழநாடுவில் வெளியிட்டேன். ஈழநாடு தினப்பதிப்பு மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதில் எனக்கு மட்டுமல்ல் டாக்டர் சண்முகரத்தினம், அவர்களுக்கும் ஈழநாடு மீது அபிமானம் கொண்டவர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கொழும்பிலிருந்து நண்பன் சத்தியதாசன்

'ரைம்ஸ் ஓப் சிலோன்' பத்திரிகையிலிருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்தான். ஜெயவிக்கிரமா, எம்.டி.எச்.ஜெயவர்த்தனா போன்ற அமைச்சர்களின் பிளாக்குகளை சத்தியதாசன் அக்காலத்தில் எனக்கு அனுப்பி ஈழநாடுவுக்கு உதவி செய்தான். நல்ல செய்திகள் கிடைத்தவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு செய்தி தருவதும் சத்தியதாசன்தான். சத்தியதாசன் மூலமாகவே பிரபல பத்திரிகையாளர் காமினிநவரத்தினா எனக்கு முதலில் அறிமுகமானார். காமினி பின்னர் யாழ்ப்பாணத்தில் 'சாட்டர்டே றிவியூ' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.




ஈழநாடு தினப்பதிப்பு வெளிவரத் தொடங்கியதும் வாசகர்கள் பலருக்குச் சந்தேகம் எழுந்தது. வீரகேசரியில் வரும் செய்தி ஒருவிதமாகவும், ஈழநாடு செய்தி வேறாகவும் இருப்பதாக வாசகர்கள் கேள்விகேட்கத் தொடங்கினர். அவர்களுக்கு விளக்கம் கூறினாலும் எங்கள் மீது நம்பிக்கை யேற்படுவதில்லை. வீரகேசரியில் வெளிவரும் செய்தி முதல்நாள் மாலை ஐந்து அல்லது ஆறு மணிக்குக் கிடைத்த செய்தியாகத்தானிருக்கமுடியும். அதே செய்தி நள்ளிரவு 12 அல்லது ஒரு மணிக்குப் பின்னர் கிடைத்த முடிவான செய்தியுடன் காலையில் ஈழநாடுவில் வெளிவரும். இந்தச் செய்தி இனி மறுநாள்தான் வீரகேசரியில் வரமுடியும் என்று விளங்கப்படுத்தினாலும் நாளை பார்ப்போம் என்று அதிருப்தியுடன் சொல்லிவிடுவார்கள். சிலவாரங்கள் அல்லது சில மாதங்களின் பின்னரே ஈழநாடுவில் வெளிவரும் செய்திதான் கடைசியாகக் கிடைத்த உண்மைச் செய்தி என்பதை வாசகநேயர்கள் உணர்ந்து கொண்டனர். இதே போல் சில அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் என்னை 'பெடரல் பார்ட்டிக் காரன்' (சமஷ்டிக் கட்சி) என்று பட்டம் கட்டி வம்புக்கிழுத்துச் சண்டை போடுவார்கள். நானும் பதிலுக்குச் சண்டை போட்டிருக்கிறேன். செய்திப் பத்திரிகைகள் வாசக நேயர்களின் நம்பகத் தன்மையைப் பெறுவது சுலபமல்லவென்பதும், இதை வெகு சிரமப்பட்டே பெறமுடியுமென்பதும் ஈழநாடு கற்றுத்தந்த பாடம். கஷ்டப்பட்டு ஈழநாடு பெற்ற நம்பகத்தன்மையை எவராலும் முறியடிப்பது சுலபமல்லவென்பதையும் ஈழநாடு எனக்குச் சொல்லித் தந்தது. இருபத்தியொரு வருடங்கள் ஈழநாடு பத்திரிகையை கட்டிவளர்த்து 'ஈழநாடுதான் கோபு கோபுதான் ஈழநாடு' என்று சொல்லுமளவுக்கு ஈழநாடு எனக்குப் பெயர் பெற்றுத் தந்தது. நான் ஈழநாடுவிலிருந்து 1981ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியுடன் வெளியேறினேன். இரண்டு மாதங்களில் ஈழநாடு தீப்பிடித்தது. சிலவருடங்களிலேயே அது நின்றுவிட்டது.

**எஸ்.எம்.கோபாலரட்ணம்**
**முன்னாள் ஆசிரியர்**

# காசிலிங்கம் சந்ததியின் நூறு வருட வரலாறு

எனது தந்தை கணபதிப்பிள்ளை அவர்களின் தந்தை சபாபதிப்பிள்ளை (எனது பேரன்), எனது தந்தையின் தாயார் வள்ளியம்மை சந்ததியினர் அனலைதீவில் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாக வாழ்ந்தனர் என்பதை பதிவு செய்வதற்காக, நூறு ஆண்டுகளுக்கு முன் 1929 இல் அனலைதீவு சதாசிவ வித்தியாசாலைக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட காணி சம்பந்தமான உறுதி ஒன்றில், எனது தந்தை வழிப் பேரன் சபாபதிப்பிள்ளை அவர்களும், தாய்வழி மாமன் சின்னப்பா வாத்தியாரும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ள பத்திரத்தை இங்கு பதிவு செய்கிறேன்.

1894 இல், சதாசிவ வித்தியாசாலை என்ற பெயரில் நிறுவப்பட்ட பாடசாலையை விரிவாக்குவதற்காகவும், புதிய கட்டிடம் அமைப்பதற்காகவும், இப் பாடசாலையின் அருகிலிருந்த சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு (தற்போது ஊடு முருகன் கோவில் என்று அறியப்படுகிறது) சொந்தமான காணியை அப்போது இக் கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்த ஆறுமுகம் சுப்பிரமணியபிள்ளையும், ஐயம்பிள்ளை சோமசுந்தரமும் கையொப்பமிட்டு எழுதப்பட்ட 6139ம் இலக்கத்தைக் கொண்ட சாட்சிகளாக எனது பேரன் குமாரசாமி சபாபதிப்பிள்ளையும், சபாபதிப்பிள்ளையின் மாமன் அருணாசலம் சின்னப்பா வாத்தியாரும் கையொப்பமிட்டுள்ளனர். இவர்களுடன், வேலாயுதம் ஐயம்பிள்ளையும் ஒப்பமிட்டுள்ளார். இந்த உறுதி 15.05.1929 இல் 6139 இலக்கத்தின்கீழ் சி. ஆறுமுகம், பிரசித்த நொத்தார் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டு, யாழ்ப்பாணம் காணிப்பதிவு அலுவலகத்தில் 17.05.1929 அன்று 7987ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனது பேரன் குமாரசாமி சபாபதிப்பிள்ளை அவர்கள் பற்றிய விபரங்களையும் இதில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இவர், நெடுந்தீவு உடையார் குமாரசாமியின் மகனாவார். இவர், அனலைதீவு வைத்தியநாத உடையாரின் மகள் வாள்ளியம்மையைத் திருமணம் செய்து, அனலைதீவில் வசிக்கத் தொடங்கினார். அவரை அனலைதீவில் மக்கள் “நெடுந்தீவு உடையார் பேரன்“ என்றே அழைப்பார்கள். அனலைதீவில் நிலப் பிரபுத்தர்களாகவிருந்த வைத்தியநாதன் தமது சொத்தின் பெரும்பகுதி காணிகளை சபாபதிப்பிள்ளைக்கு சீதனமாக கொடுத்திருக்கிறார். சபாபதிப்பிள்ளை அவர்களுக்கு தெய்வானை, தையலம்மை, முத்துச்சாமி (செல்லப்பா), சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை, நாகமுத்து, பத்தினிப்பிள்ளை ஆகிய ஏழு பிள்ளைகள் இருந்தனர். முதலாவது மகள் தெய்வானை, வைத்தியநாதனை திருமணம் செய்து, கந்தையா (கொண்டக்ரர்), சுப்பிரமணியம் ஆகிய இரண்டு பிள்ளைகளைப் பெற்றனர். இரண்டாவது மகள் தையலம்மையை செல்லப்பா திருமணம் செய்து சீவரத்தினம், சொர்ணாம்பாள், சபாபதி ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்றனர். மூன்றாவது பிள்ளை முத்துச்சாமி (செல்லப்பா), செல்லம்மாவை திருமணம் செய்து குமாரசாமி, சபாபதி, அன்னலட்சுமி, சேதுப்பிள்ளை, சொர்ணாம்பாள், கனகம்மா,

மனோன்மணி, நடராசா ஆகிய எட்டுப் பிள்ளைகளைப் பெற்றனர்.

நான்காவது பிள்ளை சுப்பிரமணியம், மீனாட்சியை திருமணம் செய்து மார்க்கண்டு, கந்தசாமி, யோகம்மா, விஜயலட்சுமி ஆகிய நான்கு பிள்ளைகளைப் பெற்றனர். எனது தந்தை - ஐந்தாவது பிள்ளை கணபதிப்பிள்ளை, சியாமளவல்லியை திருமணம் செய்து சிவனடியான், சிவயோகீஸ்வரன், தங்கராசா, கோகிலாம்பாள், காசிலிங்கம், சண்முகலிங்கம், தனபாலசிங்கம், சுந்தரலிங்கம் ஆகிய எட்டுப் பிள்ளைகளைப் பெற்றனர் நாகம்மா, தம்பிப்பிள்ளையைத் திருமணம் செய்து, சிவசம்பு, மாணிக்கவாசகர், யோகன் என மூன்று குழந்தைகளைப் பெற்றனர். பத்தினிப்பிள்ளை, வேலுப்பிள்ளையைத் திருமணம் செய்து, யோகம்மா, சின்னராசா, இரத்தினம்(சின்னக்கிளி), சிவக்கொழுந்து, யோகன் என ஐந்து பிள்ளைகளைப் பெற்றனர்.

எனது தந்தைவழி பேரன் சபாபதிப்பிள்ளை சந்ததியினர் பட்டியலில் வேலுப்பிள்ளை குமாரசாமி வாத்தியார், அனலை தீவு தெற்கில் ஐயாத்தை (சு.தயாபரராசாவின் தாயார்), முருகப்பர் சபாபதி (பத்மநாதன் தந்தை- லண்டன்), அனலைதீவு வடக்கில் சின்னப்பு கனகசபை (திருமதி நித்தியானந்தனின் மனைவி தவமலரின் தந்தை), நாகநாதி (பெரியப்பு செல்லப்பா அவர்களின் சம்மந்தி) தில்லைநாயகம்,சிவஞானம், பூமாதேவி, சோதிநாதன் ஆகியோரின் தாயார் திருமதி கணபதிப்பிள்ளை சுந்தரம்,

செல்லப்பா கணபதிப்பிள்ளை (கனகசபை, பரஞ்சோதி இராசரத்தினம் ஆகியோரின் தந்தை).

எனது பேர்த்தி சபாபதிப்பிள்ளை வள்ளியம்மை சந்ததியினரின் பட்டியலில் மீனாட்சிப்பிள்ளை குழந்தையர் தம்பதி, சூரர் கணபதிப்பிள்ளை, ஐயம்பெருமாள் (ஓய்வுபெற்ற சிங்கப்பூர் பென்சனியர்), திருமதி வள்ளியம்மை, திருமதி தெய்வானை, மற்றும் சுப்பிரமணியம் (காய்கட்டியர்), முத்துக்குமாரன், கணபதிப்பிள்ளை (பணியாரம்), சின்னத்தங்கச்சி, புளியந்தீவு பழனி, புளியந்தீவு சுப்பிரமணியம், திருமதி தில்லையம்மா (மு,நடராசா தாயார் பிரான்ஸ்), திருமதி பொன்னம்மா, ஐயாத்தப்பிள்ளை (மு.பழனி), கணபதிப்பிள்ளை ஆகியோரின் தாயார்) மருதையனார் விதானையார், சபாரத்தினம், கனகம்மா, தனலட்சுமி வைத்தியநாதன், தங்கராசா ஆகியோரின் தந்தையார்.

நெடுந்தீவு குமாரசாமி உடையார் பரம்பரையில் உதித்த எனது தந்தை வழிப் பேரன் சபாபதிப்பிள்ளையின் சந்ததியினர் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப் பிள்ளைகள் என்று நீண்டு கொண்டு சென்றது. அவர்கள் அனைவரும் நெடுந்தீவு உடையார் சந்ததியினர் என்றே இன்றுவரை கூறப்படுகின்றது. சபாபதிப்பிள்ளை (எனது பேரன்) அனலைதீவில் கணபதிப் பிள்ளையார் என்ற ஆலயத்தைக் கட்டி, தனக்கு பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பே, அந்தக் கோவிலை தனக்குப் பின் யார் நிர்வகிக்க வேண்டும் என்பதையும் பதிவு செய்து யாழ்ப்பாணம் காணிக் கந்தோரில் பதிவு செய்திருக்கிறார். அதில், தனக்குப் பிறக்கும் முதல் ஆண்பிள்ளை, அல்லது முதல் பிறக்கும் பெண் பிள்ளையின் மூத்த

மகன் இக் கோவிலை பராமரிக்க வேண்டும் என்பதையும் பதிவு செய்திருக்கிறார்.

இதன்படி, இதில் ஆண் மகன் முத்துச்சாமி (செல்லப்பா), அல்லது முதல் பெண் பிள்ளை தெய்வானையின் மூத்த மகன் கந்தையா (கொண்டக்ரர் கந்தையா) இக் கோவிலை பராமரிக்க உருத்துடையவர்களானார்கள். ஆனால், சில ஆண்டுகளின் பின்னர், மாமன் சின்னப்பா வாத்தியார் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் இக் கோவிலை பொதுக் கொவிலாக பிரகடனம் செய்து அதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பொழுதுதான் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. எனது தகப்பனார் சபாபதிப்பிள்ளை நான் பிறப்பதற்கு முன்னரே எழுதிவைத்த உறுதியை சின்னப்பா வாத்தியார் தலைமையில் கூடியவர்கள் எப்படி இதனை பொதுக் கோவில் ஆக்கலாம் என்ற கேள்வியை எழுப்பி, எனது பெரியதந்தை முத்துச்சாமி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இப்படியிருக்கையில், ஒருநாள் என்னை தனது வீட்டுக்கு அழைத்த எனது பெரியதந்தை செல்லப்பா, தன்வசமிருந்த பிள்ளையார் கோவில் சம்பந்தமான தனது உரிமை பற்றிய உறுதியை காண்பித்து, அப்போது பிள்ளையார் கோவில் முகாமையாளராக பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த எனது அண்ணன் சிவனடியான் தன்வசமுள்ள கோவில் காணிகளுக்கான குத்தகை பணத்தை செலுத்தும்படி தனக்கு எழுதிய கடிதத்தை காட்டி, இதற்கு முன்பிருந்த முகாமையாளர்கள் இப்படியான கடிதத்தை அனுப்பினாலும், அது அவர்களது அறியாமை என்று பொறுத்திருந்தேன். இவனுக்குமா (எனது அண்ணன் சிவனடியான்) இக் கோவில் வரலாறு தெரியாதா? என்று ஆதங்கப்பட்டு, இது விடயம் சம்பந்தமாக என்னால் செய்யக்கூடிய உதவிகளை செய்யுமாறு சொன்னார். ஏற்கனவே, இதே 'கோவில் தகராறு, செருப்படி வரை" என்று பத்திரிகையில் நான் செய்தி வெளியிட்டதும், இதனால் கோபமடைந்த செருப்படி வாங்கியவரின் மருமகன், நான் இரவு வேலை முடிந்து ஈழநாட்டிலிருந்து நடுநிசியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, என்னை வழிமறித்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில்,

(இவருக்கு எனது 'ஆட்களை' வைத்துப் பதிலடி கொடுத்தது பற்றி நான் எழுதிய என்னுள் என்னோடு நூலில் விபரமாக எழுதியுள்ளேன்)
இப்போது இக் கோவில் சம்மந்தமான உறுதியை வைத்து என்னால் செய்யக்கூடியதை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இந்த விடயம் நடந்துகொண்டிருந்தபோது, இலங்கை அரசாங்கம் நிர்வாக சர்ச்சைகளுக்குள்ளாகியிருக்கும் வட பகுதி ஆலயங்களை இனம்கண்டு, அவற்றை நிர்வகிக்க ஆணையாளர்களை நியமிக்கும் திட்டம் ஒன்றை கொண்டு வந்திருந்தது. அப்போது, இந்து கலாச்சார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லையா இராசதுரை அவர்கள். எனது பெரிய தகப்பனார் தந்த அந்த உறுதியுடன் மறுநாளே கொழும்பு சென்று அமைச்சர் இராசதுரையை சந்தித்து, நிலமையை விளங்கப்படுத்தி, என்னை இக் கோவிலின் ஆணையாளராக நியமிக்க முடியுமா?

என்று கேட்டேன். “உடனடியாகவே செய்யலாம்“ என்று பச்சைக் கொடி காட்டிவிட்டார். எனது பெரியதந்தையை திருப்தியடையச் செய்துவிட்டேன் என்ற மகிழ்ச்சியுடன் யாழ்ப்பாணம் திரும்பி, இது பற்றி பெரிய தகப்பனாருக்கு இந்த மகிழ்ச்சியை தெரிவிப்பதற்காக அனலைதீவுக்குப் போக ஆயத்தமாகியபோது, என் மனைவி பெரியதொரு குண்டை தூக்கிப் போட்டு, 'தர்ம சொத்துக்களில் ஈடுபடுவது சந்ததி சந்ததியாக துன்பத்தை அனுபவிக்க நேரிடும். இதில், தலையிட வேண்டாம்' என்று கூறிவிட்டார். அவரது இந்த விருப்பத்தை ஏற்றுக்கொண்டு, அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதிலிருந்து விலகுவதாகச் சொல்லிவிட்டேன்.

இதற்கிடையில், எனது பெரிய தகப்பனார் என்னிடம் தந்த உறுதியை, அப்போது புங்குடுதீவு - ஊரதீவு ஈழநாடு நிருபராகவிருந்த, பின்னாளில் நொத்தாரிசாகப் பணியாற்றிய எஸ்.கே. மகேந்திரனிடம் கொடுத்து, அதன் தொடர்ச்சியான ஏனைய உறுதிப் பிரதிகளை எடுத்துத் தருமாறு கொடுத்தேன். இது இப்படியிருக்க, எனக்கு லண்டனுக்கு செல்வதற்கு திடீரென விசா கிடைத்ததினால், அடுத்த வாரமே நான் லண்டன் சென்றுவிட்டேன். எனது பெரிய தந்தை என்னிடம் தந்திருந்த உறுதியை கேட்டபடியே இருந்தார். நான் லண்டன் புறப்பட்ட காலத்தில் எஸ்.கே. மகேந்திரனும் கனடா சென்றுவிட்டார். இதனால், அதனை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் எஸ்.கே. மகேந்திரனும் கனடாவில் காலமானார்.

எனது பெரியதந்தை சாகும்போது கூட பிள்ளையார் கோவில் உறுதியை துரையிடம் (என்னை வீட்டில் துரை என்றுதான் அழைப்பார்கள்) கொடுத்திருக்கிறேன் வாங்குங்கள் என்று சொல்லியிருந்தாராம். இன்றுவரை, அதைப் பெற்றுக்கொள்ள முடியாததையிட்டு நான் வருந்துவதுண்டு.

அக்காலத்தில் இந்தப் பிள்ளையார் கோவில் எமது பரம்பரைச் சொத்து. எங்களது என்று 2000ம் ஆண்டு எனது தாயார் நினைவாக வெளியிடப்பட்ட “கல்வெட்டு“ நூலில் பதிவு செய்திருக்கிறேன். நான் மேலே குறிப்பிட்ட அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை சம்மந்தமான உறுதியை எனக்கு தந்துதவியவர் எனது பெரியதந்தை செல்லப்பரின் மகன், எனது தம்பி முத்துச்சாமி நடராசா என்பதையும் மகிழ்ச்சியுடன் பதிவு செய்கின்றேன். எனது பெரியதந்தை அக்காலத்து காணி உறுதிகளை பேணிப் பாதுகாத்து வைத்திருந்திருக்கிறார் என்பதற்கு இது நல்ல சாட்சியம். “மகிழ்ச்சி பெரியப்பு“ என்னை ஆசிர்வதியுங்கள்.

**எஸ்.கே. காசிலிங்கம்**
24.04.2025

குறிப்பு:
மேலே உள்ள பதிவில் தவறேதும் காணும் பட்சத்தில், உங்கள் ஆதங்கங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


6139

இதற்குச் சாட்சியாக இவ்வுறுதி [illegible]

[illegible] மாதம் [illegible]

[illegible]

குறித்த சாட்சிகளை [illegible]

[illegible]

சாட்சி. [illegible]

சாட்சி. [illegible]

[illegible]

பிரசித்தநொத்தாரிஸ்

யாழ்ப்பாணம் தீவுப்பகுதிப் பிரசித்தநொத்தாரிஸ் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் ஆகிய நான் மேலேகண்டிருக்கிற சாதனத்தை [illegible]

இதற் சாட்சிகளாக [illegible]

ஆகிய இவர்கள் முன்பாகவாசித்து விளங்கப்படுத்தினேனென்றும் [illegible]

சாட்சிகளும் என்முன்பாகவும் அவர்கள் ஒருவருக்கொருவர் முன்பாகவும் எல்லாரும் ஒரே சமயத்தில் [illegible]

1929 ம் ஆ [illegible] 5 ந்திகதி ஒப்பமிட்டார்களென்றும் சாதனத்தி [illegible]

கொண்டிருக்கிற [illegible]

இதைக்கொண்டு சரிப்பண்ணி அத்தாட்சிப்படுத்துகிறேன் S. Arumugam

அத்தாட்சிப்படுத்திய திகதி

1929 ம் ஆ [illegible] 5 ந்

S. ARUMUGAM
NOTARY PUBLIC
JAFFNA

பிரசித்தநொத்தாரிஸ்

# நினைவலைகள்

## எங்கள் அப்பு அம்மாவை நினைவு கூறும் வகையில் அவர்களின் நினைவாக..

**எனது பெற்றோர் திரு. கணபதிப்பிள்ளை திருமதி. சியாமளவல்லி 01-11-1980, 28-02-2000 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்ட நினைவு மலர்களில் வெளியான அஞ்சலி செய்திகளை இனிவரும் பக்கங்களில் மறுபிரசுரம் செய்கிறோம்.**

வாத்தியம்மா "அழகினியாளே! அன்புடைய மாதே! படிசொற் தவறாத பாவாய் அடிவருடி பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ என் தூங்கும் என்கண் இரா" வாசுகி இறந்தபொழுது வள்ளுவர் புலம்பியதாக அமைந்த இந்த வெண்பாவில் கூறப்பட்டிருக்கின்ற அத்தனை கருத்துக்களுக்கும் இலக்கணமாக வாழ்ந்தவர் இன்று அமரராகிவிட்ட 'வாத்தியம்மா' என்கின்ற திருமதி. சியாமளவல்லி கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் என்றால் ஆறுமுகநாவலரைக் குறிப்பதுபோல், அறிஞர் என்றால் அண்ணாத்துரையைக் குறிப்பதுபோல், கலைஞர் என்றால் கருணாநிதியைக் குறிப்பது போல் எங்களூரில் 'வாத்தியம்மா' என்றால்



சியாமளவல்லி கணபதிப்பிள்ளை அவர்களையே குறிப்பதாகும். இவருக்குப் பின் எத்தனையோ ஆசிரியர்கள் இருந்தாலும் வாத்தியம்மா என்று இவரையே குறிப்பதென்றால் அந்தச் சேவைக்கு ஒரு அணிகலனாக வாழ்ந்தவர். சுருங்கச் சொன்னால் இந்த ஆசிரியர் பணிக்கு பெருமை சேர்த்தவர். இவர்களால் ஆசிரியர் பணி மெருகுற்றது. பூணுக்கு அழகு அளிக்கும் போற்றொடி என தமயந்தியை புகழேந்தி வர்ணித்தான். தமயந்தியின் கழுத்தில் அந்த நகைகள் கிடந்ததால் அந்த நகைகள் அழகுபெற்றமை போல் வாத்தியம்மாவினால் ஆசிரியர் பணி மெருகு பெற்றது என மனம் திறந்து சொல்கிறேன்.



அந்த காலத்தில் மேட்டுக்குடி மக்கள் மாத்திரமே பணம் செலுத்தி படிக்கக் கூடியதாய் அமைந்த உடுவில் மகளீர் கல்லூரியில் கல்வி கற்கக்கூடிய பெரும் பேற்றினைப் பெற்ற எங்கள் வாத்தியம்மா அனலைதீவில் சதாசிவ துவிபாஷா பாடசாலையில் 'சதாசிவா இருமொழிப் பள்ளி' ஆசிரியராக கடமையேற்றபோது அங்கிருந்த என்னைப்போன்ற மாணவர்கள் எல்லோருக்கும் ஒரு தேவதை எங்கள் முன் காட்சியளிப்பது போல் இருந்த அந்தக் காட்சி இன்று என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகிறது. அக்காலத்தில் தடித்த மூக்குக் கண்ணாடியும், கழுகுப் பார்வையும், கையில் பெரும் தடியும் வைத்துக்கொண்டு மாணவர்கள் சிறுநீர் கழிக்கும் அளவிற்கு அடி போட்டுக்கொண்டிருந்த ஐயம்பிள்ளை வாத்தியார் அரக்கப் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆண்டவனால் அனுப்பப்பட்ட தேவதை என்றே அவரை நாம் கருதினோம். கனிந்த பார்வையும், அன்பொழுகும் பேச்சுக்களாலும் மாணவர்களின் மருட்சியைப் போக்கி பெற்ற தாயின் மேலான வாஞ்சையோடு மாணவர்களை இதமாக அழைத்து வருடி பாடம் சொல்லித்தந்த பாங்கு இன்றும் என் நெஞ்சை நெகிழச் செய்கிறது. அக்காலத்தில்

செல்வாக்கும் மலேசியாத் தொடர்புமுடைய அம்பலவாணர் அவர்களுக்கு மூன்றாவது பிள்ளையாக அவதரித்த இந்த வாத்தியம்மாவிற்கு உரிய வரன் தேடப்பட்ட வேளை, இவருக்கு நிகராக நெடுந்தீவு உடையார் மகனும் அனலைதீவில் பெரும் நிலபுலனுக்கு அதிபதியுமாய் இருந்த சபாபதிப்பிள்ளையின் மகனும் பயிற்றப்பட்ட ஆசிரியருமான கணபதிப்பிள்ளை ஆசிரியரைக் கரம் பிடித்தார். கரம்பிடித்த நாளிலிருந்து இறுதிவரை கணபதிப்பிள்ளை வாத்தியார் இறைவனடி எய்தும்வரை அவரது குறிப்பறிந்து செயற்படும் - அவரது கௌரவத்தைக் காப்பாற்றும் ஒருவராக விளங்கினார். தர்மபத்தினியாக கணபதிப்பிள்ளை வாத்தியார் அனலைதீவு சதாசிவ துவிபாஷா பாடசாலை, சதாசிவ ஆங்கில பாடசாலை, சதாசிவ மகாவித்தியாலயம் ஆகிய இம்மூன்று தரங்களில் 1944 முதல் 1969 வரை அதனுடைய உபஅதிபராக இருந்து அப்பாடசாலையின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தவர், சுருங்கச் சொன்னால், அப்பாடசாலையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு வாழ்ந்தவர்.

எங்களூர், போக்குவரத்து குறைந்த நாற்புறமும் கடலால் சூழப்பட்ட பகுதியாக இருந்ததால் வெளியூரிலிருந்து ஆசிரியர்கள் வந்து கற்பிப்பது சிரமமாக இருந்தது. சூழ்நிலையில், இன்று இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆங்கில ஆசிரியர்களில் ஒருவரான நீர்வேலியைச் சேர்ந்த ரீ.என். பஞ்சாட்சரம் அவர்கள் பத்துவருட காலம் எங்களூர் பாடசாலையில் சேவையாற்றி அப்பாடசாலையின் ஆங்கில தரத்தை உயர்த்துவதற்கு வழி கோலினார் அதற்கு முற்று முழுதாக காரணமாக இருந்தவர் கணபதிப்பிள்ளை வாத்தியார் என்பதை மறுக்கலாகாது. பஞ்சாட்சரம் அவர்களோடு அரியநாயகம், ஜெயவீரசிங்கம், சங்கீத வாத்தியார் இரத்தினசிங்கம். போன்றவர்கள் தங்கள் சொந்த பாடசாலைபோன்ற உணர்வோடு பாடசாலைக்கு சேவை செய்வதற்கு அவர்களுக்கு வேண்டிய

அத்தனை வசதிகளையும் செய்துகொடுத்தவர் கணபதிப்பிள்ளை வாத்தியார். உள்ளூர் ஆசிரியர் கிராம அரசியலில் ஈடுபடுவதிலும், கோயில் கட்டுவதிலும், கும்பாபிஷேகம் செய்வதிலும் தீவிர அக்கறை காட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் கணபதிப்பிள்ளை வாத்தியார் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளை கோயிலுக்குச் சொந்தக்காரராக இருந்தால் போதும் (கணபதிப்பிள்ளை வாத்தியாரின் தகப்பனார் குமாரசாமிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை அவர்களால் கட்டப்பட்டு அதன் பின் உரிமைகள் மூத்த மகன் செல்லப்பா என்ற முத்துச்சாமிக்கும், மகள் மூத்த திருமதி. வைத்தியநாதன் அவர்களின் மூத்த மகன் 'கொண்டக்ரர்' கந்தையா அவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.) இக்கோவிலைக் கட்டிக்காப்பாற்றும் நிர்வாகப் பொறுப்பில் இருந்து அதனைப் பொருட்படுத்தாமல் ஊர்ப்பிரமுகர்களாகக் கணிக்கப்படவேண்டும் என்ற வகையில் இந்தப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஏனையவர்களிடம் அப்பொறுப்பை விட்டுவிட்டு பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தங்களையும் பள்ளியுடன் ஐக்கியப்படுத்திக்கொண்டு வெளியூர் ஆசிரியர்கள் அங்கு தங்கி சேவையாற்ற உணவு, உறைவிடம் கொடுத்து கல்விப் பணி செய்த பெருமைக்குரியவர்கள் இவர்கள். ஊர் நடுவே பெருமைதரும் ஒரு பெரிய ஆலமரம் போல் கணபதிப்பிள்ளை வாத்தியாரின் வீடும் எங்களூரின் மத்தியில் அமைந்திருந்த ஒரு அன்னசத்திரமாக விளங்கியது. “சொல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு”என்று வள்ளுவர் கூறியதுபோல் விருந்தை எதிர்பார்த்து வழங்குபவர்களுக்கு வறுமை தட்டவதில்லை. பசித்தவர்கள் யாரும் வாத்தியார் வீட்டுக்குப் போனால் சாப்பிடலாம் என்ற நம்பிக்கையோடு செல்லும் வழக்கம் எங்கள் மத்தியில் இருந்தது. வாத்தியம்மாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு உரையாற்றிய அவரது அயல்வீட்டுக்காரரான நமசிவாயம் சண்முகராஜா அவர்களும் இக்கருத்தை வலியுறுத்திப் பேசினார். நான் காணக்கூடியதாக இருந்தது.

அன்னசத்திரமாக மட்டுமன்றி இது தண்ணீர்ப்பந்தலாக இருந்தது என்று குறிப்பிடுவதும் பொருத்தமென்று நினைக்கின்றேன். ஊரின் மத்தியில் பாடசாலைக்கு முன்னால் வீடு அமைந்திருப்பதால் பாடசாலைப் பிள்ளைகள் மட்டுமன்றி கடைத்தெருவுக்கு வருபவர்களும் தண்ணீர் குடிப்பதற்கு இங்கேதான் போவார்கள். தண்ணீர் முடிந்ததும் அப்பாடசாலைப் பிள்ளைகளைக் கொண்டே அவர்களுக்கு அன்புக் கட்டளையிட்டு தண்ணீர் குடத்தை மீண்டும் நிரப்பி வைக்கின்ற அந்தப் பாரிய பொறுப்பை வாத்தியம்மா மிகச் சீரிய முறையில் செய்துகொண்டிருந்தார். இதனாலேதான் அவரை வாத்தியம்மா என்று அழைக்கின்ற பொழுது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவரும் வாஞ்சையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. “ஈன்றபொழுதிற் பெருதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்” என்ற குறளுக்கமைய அவர் பெற்ற 7 பிள்ளைகளையும் மணியாகவே பெற்றார். அவர்கள் அத்தனை பேரும் தங்கள் வகையில் சாதனை புரிந்தவர்களாகவே திகழ்ந்தனர். இவரது மூத்தமகன் சிவனடியான்

பிறந்தபோது இவரது குறிப்பை எழுதிய சாஸ்திரியார் அம்பலவாணர் இவர் ஒரு நீதவானாய் வருவார் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த சாஸ்திரத்தை மெய்ப்பிக்க வேண்டுமென்றிருந்த வாத்தியாரும், வாத்தியம்மாவும் அவரை 4ம் வகுப்பிலேயே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சேர்த்தனர். தொடர்ந்து உயர்கல்விக்காக இந்தியாவிற்கு அனுப்பி காரைக்கால் அழகப்பர் கல்லூரியில் படித்த அவர், இடையிலேற்பட்ட சுகவீனம் காரணமாக அவர் செயல்பட்ட யாழ்ப்பாணம் என்.டீ.ஏ.பி.சீ. என்ற வடமாகாண விவசாய உற்பத்தியாளர் சம்மேளனத்தின் தலைமை லிகிதர் பதவியையும் இராஜிநாமா செய்து சாஸ்திரம் மெய்யாகும் வகையில் அனலைதீவின் முதலாவது சமாதான நீதவானாகவும், மரணவிசாரணை அதிகாரியாகவும் பதவி வகித்தார். நாரந்தனை, சரவனை, வேலனை, சுருவில், கரம்பொன், அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு உள்ளிட்ட தீவுப் பகுதியில் அனலைதீவில் மட்டும் தான். ஆங்கிலப்பாடம் படிக்கக்கூடியதாக சதாசிவ துவிபாஷா பாடசாலை இருந்தது. 1945ம் ஆண்டுக்குப் பிறகு சீ.டபிள்யூ. சி.கன்னங்கர கல்வியமைச்சராக இருந்தபோது இலவசப் பாடத்திட்டத்தை அமுல்படுத்தி வேலனை மத்திய வித்தியாலயத்தில் ஆங்கில போதனை ஆரம்பிக்கப்பட்டதற்கு அதாவது, 1931லேயே அனலைதீவு சதாசிவ துவிபாஷா பாடசாலையில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டது. அங்கு பல கல்விமான்களை அது உருவாக்கி இருந்தாலும் இவ்வளவு சிறப்பும் தனித்துவமும் உள்ள ஊரை நாட்டுக்கு ஏன் உலகத்திற்கே அறிமுகம் கூடிய வாய்ப்பையும் வழியையும் பெற்றிருக்கவில்லை. இக்கைங்கரியத்தை வாத்தியாரும் வாத்தியம்மாவும் மிக வாஞ்சையோடு துரை என்று அழைக்கப்படுகின்ற காசிலிங்கம் அவர்களாலேயே முடிந்தது. அனலைதீவின் முதல் பத்திரிகையாளரும் அனலைதீவு மக்களால் 'ஈழநாடு' காசிலிங்கம் என்று அழைக்கப்பட்ட காசிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பதவி ஏற்றது முதல் தன் ஊரின் புகழை நாடறியச் செய்தார். அனலைதீவு என்பது இலங்கையில் சைவசமயம் தவிர்ந்த வேறு சமயத்தவர் இல்லாத கிராமம், அத்தோடு குலதெய்வம் ஐயனாருக்கு ஊரைக் கூட்டி தேரை இழுத்தது சொல்லுக்கிணங்க இலங்கையிலே மிகப்பெரிய தேரையும் கொண்டுள்ள கிராமம். இந்தச் சிறப்புக்களையெல்லாம் நாடறியச் செய்த பெருமை காசிலிங்கம் அவர்களுக்கு உண்டு.

காசிலிங்கம் அவர்கள் தனது 22வது வயதில் என்று நினைக்கின்றேன். கிராமத்தின் துடிப்பான தூய்மையான தூய சிந்தனையுள்ள வாலிபர்களை உள்ளடக்கிய விழிப்புணர்வுக் குழுவை ஏற்படுத்தியது அவர்கள் மூலமாக எங்கள் கிராமத்தில் இடம்பெற்றிருந்த தில்லுமுல்லுகளை 1969ல் வெளிக்கொணர்ந்து இளைஞர்களை கிராமசபைத் தேர்தலில் போட்டியிட வைத்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். புலம்பெயர் மண்ணிலும் ஈழநாடு காசிலிங்கம் என்று அழைக்கப்பட்டு ஐரோப்பாவின் முதல் தமிழ்ப்பத்திரிகையான 'பாரிஸ் ஈழநாடு' வின் ஸ்தாபக நிர்வாகியாகி அதன்பின் 'தமிழன்' ஆசிரியர் என்று தலைநிமிந்து

நிற்கின்ற காட்சியைக் கண்டு பூரித்தவர் இந்த வாத்தியம்மா. வாத்தியம்மா எப்பொழுதும் தன் மூத்த மகனையும் கடைசி மகன் காந்தியையும் வாத்திமாரின் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்ததில் தங்களுக்கு மகிழ்ச்சி என்று அடிக்கடி கூறுவது நினைவிற்கு வருகிறது. ஆசிரியர் பணிமீது எவ்வளவு ஈடுபாடு உடையவராக இருந்தார் என்பதை தெளிவாக்குகிறது. அவரது கடைசி மகன் காந்தி வீட்டிலிருந்தபோது அவரது இறுதிக்காலத்தில் 2 வாரங்களுக்கு முன்னர் சுமார் மூன்று மணிநேரம் 1933 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அனலைதீவின் வரலாற்றை அக்குவேறு சுக்குவேறாக அலசினார். எனக்குப் புரியாத பல புதிர்களெல்லாம் புரிந்தன. இறுதிவரைக்கும் எழுதுவதிலும் வாசிப்பதிலும் என்னமும் ஏதாவது வாசித்துக்கொண்டே இருப்பதிலும் விருப்பமாக இருந்தவர். இவ்வயதிலும் கண்ணாடி இல்லாமல் மங்கல் ஒளியிலும் வாசிக்கக்கூடிய கூர்மையான கண்பார்வையும் அச்சரம் பறக்கும் வார்த்தைகளும் அவருக்கே உரித்தான தனிச் சொத்து உடைமையாகும். தலைநகர் பாரிசிலிருந்து பிரான்ஸ் புறநகர்ப் பகுதியில் நடந்தேறிய இவரது இறுதிக்கிரியையின்போது கூடிய பிரமாண்டமான மக்கள் தொகையும் அத்தோடு அத்தனையும் பேரப்பிள்ளைகளும் நெய்ப்பந்தங்களோடு கூடி நின்ற காட்சியும் அவர் எவ்வளவு தூரம் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளோடு வாஞ்சையோடு இறந்தார் என்பதாகும். வெளிக்காட்டியது. இவர் செய்த தர்ம கைக்கரியங்கள் மூலம் தர்மத்தின் ஏகப்புதல்வியானார். நிச்சயம் அவரது ஆன்மா ஆண்டவன் சந்நிதிக்குச் செல்வதில் ஐயமில்லை.

**சி. காராளபிள்ளை**
**ஓய்வுபெற்ற அதிபர்**
**பாரிஸ் கல்விநிலைய**
**ஸ்தாபக காப்பாளர்**
**பிரான்ஸ் - 25.02.2000**

## தீவுப்பகுதி மக்களின் உபசரிப்பின் மகிமை

தீவுப்பகுதி என்றதும் அது பின்தங்கிய பிரதேசம் என்று யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள 'நாட்டுப்புறமக்கள்' கருதிவந்த காலம் ஒன்று இருந்தது. இந்த நினைப்புக்குக் காரணம் இந்த நாட்டுப்புற மக்கள் வெளியுலகத் தொடர்புகளின் தாங்களும் தங்கள் தோட்டச் செய்கைகளுமாக இருந்ததால் தீவுப்பகுதியின் செழிப்பையும் அங்கு வாழும் மக்களின் கல்வி உயர்ச்சியையும் தெரியாதவர்களாகவே இருந்துவிட்டனர். நானும், நான் குறிப்பிடுகின்ற நாட்டுப்புறவாசிதான். அதாவது கோயிலாக்கண்டியில் பிறந்து வளர்ந்து அச்சுவேலியை ஆண்டியுள்ள ஆவரங்கால் தோப்புக்கிராமத்தில் திருமணம் செய்தவன். யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் வேலைபார்த்ததன் மூலம்

இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் வாழக்கூடிய மக்களின் நிஜவாழ்க்கை முறைமை, அரசியல் போன்ற விடயங்களை நான் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் இருந்தன. நயினாதீவு சகல சமயத்தவர்களையும் (இந்துக்கள், முஸ்லீம்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் என்று அனைத்து மக்களையும் தன்னகத்தே கொண்ட கிராமம். அனலைதீவு தனிச் சைவமக்களை மட்டுமே கொண்ட பகுதி. புங்குடுதீவு வர்த்தகத் துறையினரை அதிகமாகக் கொண்ட ஊர் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மேலும் தீவுப்பகுதியில் நெடுந்தீவு, புங்குடுதீவு, அனலைதீவு மக்கள் விருந்தோம்பலில் முதன்மையானவர்கள் என்று கேட்டிருக்கிறேன். தீவுப்பகுதி மக்கள் கல்வியில் உயர்ந்தவர்கள் என்பது உயர்மட்டக் கருத்து. இவ்விதம் தீவுப்பகுதியின் சிறப்புகளைக் கேட்டிருந்தாலும் அவ்விடங்களுக்குப் போகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்படவில்லை. ஈழநாட்டில் 1959முதல் என்னுடன் கடமையாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த 'சசிபாரதி' என்ற எஸ். சபாரத்தினம் அவர் புங்குடுதீவைச் சேர்ந்தவரானாலும் யாழ்ப்பாணத்து வாசி. புங்குடுதீவு போய்வருவது குறைவு. அனலைதீவைச் சேர்ந்த திரு. காசிலிங்கம் அவர்கள் 1963ல் ஈழநாடு பத்திரிகையில் இணைந்தபின்னர் தீவுப்பகுதிக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. 'காசி' எங்களுடன் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் 1972ல் அவரது இதயத்தில் பெரியதொரு சத்திரசிகிச்சை நடந்தது. இவர்கள் குலதெய்வம் அனலைதீவு ஐயனார். நேர்த்திக்கடன் பொருட்டு இவர்களது 1ம் திருவிழாவன்று வருடாவருடம் அன்னதானம் செய்வார்கள்.

ஒருமுறை விடுமுறையில் நானும் ஈழநாடு சக ஊழியர்கள் பலரும் அனலைதீவு சென்றிருந்தோம். செழிப்பான தீவு, புகையிலை விளையும் பூமி, நெற்கதிர்கள் ஒரு ஆளின் உயரத்திற்கு வளரும், வீதிகள் நெடுகிலும் கதியால் வேலிகள், பச்சைப் பசேல் என்ற காட்சி இன்றும் என் கண்முன்னே நிற்கிறது. ஊரின் மத்தியில் காசியின் வீடு அவரது தாயாரை, தகப்பனாரை அன்றுதான் முதலில் முதலாகக் காண்கின்றோம். உபசரிப்பில் தீவுப்பகுதி மக்களுக்கு நிகர் இல்லையென்று கேள்விப்பட்டிருந்த விருந்தோம்பல் பண்பினை நேரில் அனுபவித்தோம். இவர்களின் வேலைக்காரப் பையன் முருகையா இவர்களது பிள்ளைபோல் நடத்தப்பட்டதைக் கண்டோம். இவர்களிடம் தினமும் மீன்பிடித்து வருவதற்கென்றே மாதச்சம்பளத்தில் ஒருவர் உயிரிழந்தார். 'கட்டுமீன்காரன' என்று சொல்லுவார்கள். காசியின் தகப்பனார் கணபதிப்பிள்ளை வாத்தியாரும் நானும் ஈழநாடு நண்பர்களும் இவர்களது கட்டுமீன்காரனுடன் கடற்கரைக்குச் சென்றோம். மீனுடன் திரும்பி வந்ததும் அவசரமாக 'நோண்டி' 'கழுவ' உருசியாக சமைத்த வேகம், அன்புடன் பரிமாறிய மாண்பு இன்று நான் அஞ்சலி செலுத்தும் வாத்தியம்மாவை என்னால் மறக்கமுடியவில்லை. வழமையாக ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய இறுமாப்பை நான் இவரிடம் காணவில்லை. எங்களுடன் கடமையாற்றிய பாமா ராஜகோபால் காசியின் தகப்பனாரை 'அப்பு' என்றுதான் அன்புடன் அழைப்பார். அப்பு என்றுதான் இவர்களின் பிள்ளைகள் தகப்பனாரை

அழைப்பதால் ராஜகோபாலும் அப்படியே அழைப்பார். ஈழநாட்டில் கடமை புரிந்த அத்தனை பேரும் ஒரு குடும்பமாகவே வாழ்ந்தோம் என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணமும் கூட. பாமா ராஜகோபால் ஈழநாட்டில் கடமையாற்றிய போதும் அங்கிருந்து 'தினகரன்' பத்திரிகைக்குச் சென்றபோதும் இரண்டு பத்திரிகைகளிலும் பல வாரங்கள் தொடர்ச்சியாக இந்த அப்பு குடும்பத்தினர் விருந்தோம்பல் பற்றி படங்களுடன் பல தொடர் கட்டுரைகள் எழுதிப் புகழாரம் செய்தார். இன்றும் அதன் பிரதிகள் என்னிடம் உள்ளன. அடிக்கடி எடுத்துப் படிப்பதுண்டு. காசியின் தொடர்பு மூலம் இவர்களது அண்ணன் செல்வம், தம்பிமார் மணி, கண்ணன், காந்தி ஆகியோரின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. செல்வமும் மணியும் எனது ஊருக்கு அண்மையில் இடைக்காடு என்னும் இடத்தில் ஏராளமான விவசாய நிலங்களுக்குச் சொந்தமானவர்கள். வெங்காயம், மிளகாய் பெருமளவில் செய்கை பண்ணுவார்கள். நாமும் விவசாயி என்பதால் அடிக்கடி சந்தித்துக்கொள்வோம். தம்பி கண்ணனுடன் தான் நான் முதன்முதலில் வெளிநாடு புறப்பட்டேன். அக்காலத்தில் இப்போது வந்துகொண்டிருப்பது போல சகல 'தரத்தினரும்' வெளிநாடு வருவதில்லை. வெளிநாடு என்று படித்தவர்கள் மட்டுமே போகக் கூடிய இடம் என்றிருந்த காலம் அது. கண்ணன் பல வருடங்களுக்கு முன்னரே வெளிநாடு வந்து தாய்நாடு திரும்பியிருந்தார். அவர் திரும்பிப் புறப்பட்டபொழுது நானும் காசியின் சகலன் மார்க்கண்டு தெய்வேந்திரம், காசியின் யாழ் மத்திய கல்லூரி காசியின் நண்பன் வேலணையைச் சேர்ந்த மகேஸ்வரன்(தவம்), காசியின் பெரியதாயாரின் மகன் சமுத்திரரெத்தினம் ஆகியோர் ஒன்றாகவே வெளிநாடு சென்று இன்று அத்தனை பேரும் சகல வசதிகளுடனும் நாம் வாழுகின்ற நாடுகளின் பிரிஜாவுரிமைகளையும் பெற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தக்கவர்களுக்கு உதவுவதும், விருந்தோம்பலும், சொன்ன சொற்தவறாமையும் நான் இவர்களிடம் கண்ட நற்பண்புகள். இவ்விதம் தன் பிள்ளைகளின் சிறப்புகளையும், சௌபாக்கியங்களையும் கண்டுகளித்து இன்று அமரராகிவிட்ட வாத்தியம்மா சியாமளவல்லி அவர்களுக்கு நிச்சயம் இறைவனடி சேர்வார் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**மு. ஆறுமுகசாமி**
**யாழ்-ஈழநாடு**
**தோப்பு - ஆவரங்கால்**
**(ஜேர்மனி)**

# நெஞ்சில் நிறைந்தவர்

அனலையூரினை அணி செய்யும் வரிசையில் பலதினைக் கூறலாம். மறைந்த ஏன் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற பண்பாளர்கள் இனியவர்கள் அவர்களில் ஒருவரே நான் இங்கு அன்புடன் அஞ்சலி செலுத்துகின்றேன் உத்தமன் உயர்திரு.சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை. ஆசிரியனாக இருந்த எனக்கு அன்னாரைப் பற்றிப் பல கோணத்தில் தெரியுமென்ற துணிவும் தைரியமும் உண்டு. என்னையும் என்போன்ற உடனாசிரியர்களையும் உரிமையுடன் நேசித்தவர். அனைவரும் எம் அனைவராலும் இதயத்துடன் தூய்மையுடன் நேசிக்கப்பட்டவர். அமைதியான போக்கு, அடக்கமான தன்மை, காட்சிக்கு எளிய தோற்றம், இன்முகம் காட்டி இன்சொல் பேசுபவர், ஏழைபங்களான், எவரினதும் அன்பாளன், தர்மப்பிரியர், பேராசை அற்றவர், போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்தென திருப்தி கண்டவர். பேர் ஆராவாரமாகப் பேசாது வீண் ஆரவாரம் புரியாது, புகழ் மொழிகள் விரும்பாது, தம் மதிப்புக் குன்றாது வாழ்ந்தவர். மாணவர்கள், ஆசிரியர்கள், உற்றார், ஊரார் அன்பையும் பெற்றவர். இத்துணைச் சிறப்புக்கள் சூழ அவர் பெற்றதெல்லாம் ஆண்மகவுகளே. வாழ்ந்ததோ நிறைவாழ்க்கை! மேலும் விரிப்பின் இவரோ முற்றிலும் எம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒருவகை ஞானியும் கூட! நான் அனலைதீவில் சேவையாற்றிய காலத்தில் மூன்று ஆண்டுகள் எனக்கும், என்னுடன் சேவையாற்றிய வெளியூர் ஆசிரியர்களுக்கும் அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலமாக" அமைந்தவர். எதைத்தான் மறந்தாலும் இதனை மறக்கலாமா? எம் வாய் வாழ்த்தத் தவறினாலும் வயிறு வாழ்த்துகின்றதே! நாம் அன்புடன் செல்லமாக உள்ள உவகையுடன் அறிந்திருந்த "கணபதியானை" ஈஸ்வரி பாலன் ஏகம்பனை, ஆசான் கணபதிப்பிள்ளையை, எம் நெஞ்சிருக்கும் வரை மறக்கமாட்டோம்! ஆசையிலும் மாயையிலும் சிக்குண்டு சீர்தேடும் எம்போன்றோர்க்கு அமரர் ஆசான் கணபதிப்பிள்ளை பிரிவு துயர் தருவதாக இருந்தாலும், அவர் பெற்ற பேறு என்றோ நாள் சகல ஜீவன்களுக்கும் கிடைக்கக் காத்திருக்கும் நிச்சயமான பரிசன்றோ! இதற்கு எவர்தான் விதிவிலக்கோ? எனவே துயர் களைவோமாக! "பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானின்" திருவடியில் திருப்தியுடன் பூரிப்படையும் அமரரின் ஆத்ம சாந்திக்கும் பிறவாத பெருவாழ்விற்கும் திரிகரண சுத்தியுடன் அன்னாரின் மனைவி மக்களுடன் சேர்ந்து பிரார்த்திப்போமாக! ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆசிரியர் த.ந. பஞ்சாட்சரம்**

**நீர்வேலி**

(எங்கள் தகப்பனார் 02.10.1980ல் காலம் சென்றபோது வெளியிடப்பட்ட இரங்கல் நினைவு வெளியீட்டு நூலில் திரு.பஞ்சாட்சரம் அவர்கள் எழுதிய அஞ்சலி இங்கு மறுபிரசுரம் செய்துள்ளோம்)

# மறக்கமுடியாத குடும்பம்

என் மனைவியைத் திருமணம் செய்ய நான் பட்ட பாடு, 1940 ஆம் ஆண்டு இன்றுபோல் இருக்கிறது. நான் கண்ட உடையார் வீட்டுக் கல்யாணம் எனக்கு திருமணம் செய்துதர மறுத்து விட்டார்கள். பத்துத் தடவை குறிப்புப் பார்த்தார்கள், கடைசியில் ஒரு தடவை அனலைதீவில் கல்யாணம் செய்யப் போவதில்லை, மலேசியாவில் பெண் பார்க்கப் போகிறோம் என்றார்கள். எங்கள் குடும்பமும் அதே அந்தஸ்துதான், அவர்களுக்கு நாங்கள் குறைவானவர்கள் இல்லை. நான் விட்டபாடில்லை தொடர்ந்தேன். நான் 'Matirculatiod' படித்துக்கொண்டிருக்கும்போது சொர்ணத்துக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. 22.10.1919 பிறந்த எனக்கு 15.01.1924 பிறந்த சொர்ணாம்பாளுக்கும் சொர்ணாம்பாளின் பதினாறாவது வயதில் திருமணம் நடந்தது. இப்படியொரு கல்யாணம் அக்காலத்தில் விமரிசையாக அக்காலத்தில் வேறொருவருக்கும் நடந்ததாக நான் அறியவில்லை. அக்காலத்து உடையார் பரம்பரைக்காரரைப்பற்றி சந்தர்ப்பத்தில் சொல்வது முக்கியம். 'நாட்டாண்மைக்காரர்'. பெருந்தொகை நிலத்துக்குச் சொந்தக்காரர், எடுபிடி வேலைகளுக்கு எண்ணுக்கணக்கற்ற வேலையாட்கள்.. இப்படிப் பழக்கப்பட்ட இவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது நீண்ட ஆலோசனையின் பின் நிச்சயிப்பது நியாயமே. சொர்ணாம்பாளை துணைவியாகப் பெற்றுக்கொண்டதால் இன்றும் நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்தப் பரம்பரையின் ஆணவம் இவரிடம் சிறிது குறைவு. குறிப்பாக என் மனைவியின் தாய்மாமன் செல்லப்பரைப் பற்றி நிச்சயம் எல்லோருக்கும் அதாவது இன்று நான் அஞ்சலி செலுத்தும் அன்னை சியாமளவல்லியின் கணவர் கணபதிப்பிள்ளை வாத்தியாரின் அண்ணர் பற்றித் தெரியும். இவர் அனலைதீவுப் பிள்ளையார் கோயிலின் உரிமை வாரிசு நிர்வாகி. இதன்பின் கணபதிப்பிள்ளை அம்மானின் மூத்த மகன் சிவனடியான் பிள்ளையார் கோயில் தர்மகத்தா சபைத் தலைவராக இருந்தபோது பிள்ளையாருக்கு தேர் கிடைத்தது. ஐயனாருக்கு, சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்ட பின் ஐயனாரின் பழைய தேர் இவரின் முயற்சியால் பிள்ளையாருக்கு கைமாறியது. இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். சிந்தனையும், கல்விச் சிந்தனையும், தர்ம சிந்தனையும் மிகுந்தவர்களாக சியாமளவல்லி அவர்கள் இறந்தார். அன்னை சியாமளவல்லி அவர்கள் தன் கணவருடன் சேர்ந்து கல்விச்சேவை மட்டுமல்ல தர்மசிந்தனைக்கு ஒரு உதாரணமாக வாழ்ந்த ஒரு அம்மையார். என் மனைவியின் மாமன்-மாமி என்பதற்காக இவைகளைச் சொல்லவில்லை. அக்காலத்து வம்சாவழி நெறிமுறைகளை இக்காலத்து இளம் சந்ததியினரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக என் மனம் திறந்து இதைச் சொன்னேன். அன்னை சியாமளவல்லி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**வை. சாம்பசிவம்**
**ஓய்வுபெற்ற ரெயில்வே சுப்பிரின்டன்**
**மருதானை கொழும்பு (கனடா)**

# உடையார்..?

உடையார் என்பது அக்காலத்து கிராமங்களை நிர்வகிக்கும் அதிகாரி - அதிக நில புலன்களை உடைய, அக்கிராமத்தில் கௌரவத்துடன் வாழ்பவர்களை வெள்ளைக்கார அரசுகள் உடையார் என்ற பதவியைக் கொடுத்து கிராமங்களை நிர்வகிக்க வைத்தனர். அரசாங்கத்தின் வெள்ளைக்கார பிரதிநிதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அவ்வூர் மக்களின் நேரடி வாக்குகளைப் பெற்று - கை உயர்த்துதல் மூலம் இந்த உடையாரைத் தெரிவு செய்வார்கள். கிராமத்தில் நடக்கக்கூடிய சகலவிதமான சர்ச்சைகளும் இந்த உடையார் என்பவரே தீர்த்து வைக்கும் அதிகாரம் உடையவர். இந்த உடையார் குடும்பங்களிலிருந்து கிராமத் தலைமைக்காரர் என்ற பதவி உருவானது. தங்கள் மகனுக்கோ அல்லது மகளின் கணவனுக்கோ சந்ததி சந்ததியாக இப்பதவியை வழங்குவார்கள். ஒரு கிராமத்தினுள் போலீஸ் செல்ல நேரிட்டாலும் முதலில் இந்த தலைமைக்காரரின் அனுமதி பெற்ற பிறகுதான் அங்கு போகமுடியும். கிராமத் தலைவர் என்ற பதவி “ராஜா” க்களுக்கு சமமானது போன்ற உணர்வை குறிப்பாக சிங்கள கிராமங்களில் அவர்களின் ஆளுமை அதிகரித்து வந்ததை உணர்ந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அரசு அப்பதவியை 1970ல் இல்லாமல் செய்து கிராமசேவையாளர் என்ற பதவியை அமுலுக்கு கொண்டு வந்தது. அரசாங்க சம்பளம் பெறும் அரச ஊழியர் என்ற நிலைக்கு மாறியது, அனலைதீவில் முருக உடையார், ஆறுமுக உடையார், வேலுப்பிள்ளை உடையார், வைத்தியநாத உடையார் என்று தொடர்ந்து வைத்தியநாத உடையார் காலத்தில் சபாபதிப்பிள்ளை அவர்கள் சில காலம் தலைக்காரனாகி பின் வைத்தியநாத உடையாரின் மகன் மருதையனாரிடம் கிராமத் தலைமைக்காரர் பதவி வந்தது. இவரது மூத்த மகள் கனகம்மாவை நான் திருமணம் செய்ததன் மூலம் - மருதையனார் ஓய்வுபெற்ற பின்னர் அப்பதவி மகளின் கணவன் என்ற வகையில் என்னிடம் வந்தது. கிராமத் தலைமைக்காரன் பதவியின் பெயர் மாற்றப்பட்ட பின் கிராம சேவையாளர் பதவியில் நான் நியமிக்கப்பட்டேன். இன்று அமராகிவிட்ட வாத்தியம்மா சியாமளவல்லி கணபதிப்பிள்ளை வாத்தியாரின் மகன் காசிலிங்கம் அவர்களும் லண்டன் புறப்பட முன் சிறிதுகாலம் யாழ்ப்பாணம் நல்லூர், கோண்டாவில் கிழக்கு பகுதிகளில் கிராமசேவையாளராகப் பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சு. இரத்தினசபாபதி**
**ஓய்வு பெற்ற கிராமத்தலைமைக்காரர்**
**அனலைதீவு (கனடா)**

# அனலைதீவு பிள்ளையார்

அனலைதீவு பெரியபுலம் சங்கரநாத பிள்ளையார் கோவில் மிகப்பழமை வாய்ந்தது. முதிர்ந்த அரச மரங்களும் கோயிலுக்கேற்ற சூழலும் இதன் தனித்துவம். இவ்வாலயத்தை அனலைதீவில் உடையார் பரம்பரையிலுதித்த குமாரசாமி சபாபதிப்பிள்ளை அவர்கள் கி.பி.1887இல் பிரம்மாண்டமான கட்டிடங்களுடன் நிர்மாணித்து தனக்குச் சொந்தமான பெருந்தொகை நிலங்களை (படலைத்துறை, குழந்தை வளவு, பெரியபுலம், நாச்சிமார் கோவிலடி பிள்ளையார் வளவு) இக் கோவிலுக்கு எழுதி வைத்தார்கள். வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இக் கோவிலின் உறுதியில் (உறுதி இல.412) தனக்குப் பின் இக் கோயிலை தன் மூத்த மகனும், தன் மூத்த மகனும் மகளின் மூத்த மகனும் நிர்வகிக்க வேண்டும். சபாபதிப்பிள்ளை அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கமுன்னரே இப்படிப்பட்டாலும் சபாபதிப்பிள்ளை அவர்களின் மூத்த செல்லப்பா என்கின்ற முத்துச்சாமி தெய்வானை (திருமதி.வைத்தியநாதன் மகன் அவர்களும், மூத்த மகள் தெய்வானை) அவர்களின் மூத்த மகன் கந்தையா அவர்கள் இக்கோவிலை நிர்வகிக்கும் பொறுப்புடையவர்கள் ஆனார்கள். இவ்வாலயம் அமைக்கப்பட்ட சில வருடங்களின் பின் இவர்களது தாய்மாமன் சின்னப்பா உபாத்தியாயர் தலைமையில் கூட்டப்பட்ட பொதுமக்களடங்கிய கூட்டமொன்றில் இவ்வாலயத்தைப் பொதுக்கோவிலாக்குவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு உறுதியும் அரசாங்கப் பதிவு கந்தோரில் பதிவாகியுள்ளது. தொடர்ந்து கோயிலின் வாரிசு உரிமையாளர்கள் நிர்வகித்து பின்னர் வருடாவருடம் தர்மகர்த்தா சபையின் தலைவர்கள் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட தினப் பூஜைகளும் வருடாந்த உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. (இன்று அஞ்சலி செலுத்தும் வாத்தியம்மா அவர்களின் கணவர் கணபதிப்பிள்ளை வாத்தியாரின் தந்தை சைவப்பெரியார் குமாரசாமி சபாபதிப்பிள்ளை அவர்களால் இக்கோயில் நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.)
















பெரியதம்பி துரைராஜா எழுதிய அனலைதீவு வாழ்வும் வளமும் நூல் வெளியீடு கனடாவில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக எஸ். கே.காசிலிங்கம் கலந்துகொண்டார்.



## 2007 ஆம் ஆண்டு பதிவானது..

எஸ்.கே.காசிலிங்கம் என்ற இளைஞனும்
சபாரெத்தினம் மூலம் எனக்கு அறிமுகம் செய்து
வைக்கப்பட்டு ஆசிரியர் பகுதியில் சேர்க்கப்பட்டார்.
சுறு சுறுப்பான பையன். அதிகம்
சொல்லிக்கொடுக்காமலேயே பத்திரிகைத்தொழிலை
விரைவாகக் கற்றுக்கொண்டான். வெளியாரின்
தொடர்புளையும் பெருக்கிக்கொண்டான்.
எங்கே என்ன சம்பவம் நடந்தாலும் அந்த இடத்துக்கு
உடனடியாகவே சென்று செய்தி எடுத்து வருவதுடன்.
அச்செய்திகள் சம்பந்தமாக உரியவர்களுடன்
உறுதிப்படுத்தியும் கொள்வான்.
ஈழநாடு பத்திரிகையிலிருந்து வெளியேறிய பின்
பிரான்ஸ் சென்ற காசிலிங்கம்
வெளி உலகத்தில் ஈழநாடு பத்திரிகையின் பெயரை
நிலை நாட்டுவதில் வெற்றியும் பெற்றான்.
பாரிஸிலிருந்து ஈழநாடு என்ற பெயரில் ஒரு
வாரப்பத்திரிகையை வெளிக்கொணர்ந்த பெருமை
காசிலிங்கத்தையே சாரும்.

'ஈழம் முடிவில்லாப் பயணத்தில்
முடியாத வரலாறு' நூலில்
எஸ்.எம். கோபாலரட்ணம்
முன்னாள் ஆசிரியர்
ஈழநாடு

எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின்
பத்திரிகை அனுபவம் என்றால்.
அது யாழ்ப்பாணத்தில் தான்
தொடங்குகிறது.
அவரது அனுபவங்களின்
களமாக அமைந்தது.
'ஈழநாடு' பத்திரிகை.

சசிபாரதி சு.சபாரத்தினம்
முன்னாள் ஆசிரியர்
'ஈழநாடு' வாரமலர்.
'என்னுள் என்னோடு'



UNIVERSAL TAMIL ART CENTRE - FRANCE